திருஞானசம்பந்தர் சுவாமிகள்
திருக்கடைக் காப்பு



உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் சுவாமிகள்

அருளிய

திருக்கடைக்காப்பு

1,2,3- திருமுறைகள் - தலமுறை வரிசை



வெளியிட்டோர் :

சைவ நூல் அறக்கட்டளை

32, பங்காரு நாயக்கன் தெரு,

மவுண்ட் ரோடு, சென்னை - 600 002.

நூல் குறிப்பு

தலைப்பு	:	**திருஞானசம்பந்தர் சுவாமிகள் அருளிய திருக்கடைக்காப்பு**
ஆசிரியர்	:	**திருஞானசம்பந்தர் சுவாமிகள்**
முதற்பதிப்பு	:	செப்டம்பர் 2007
படிகள்	:	2500
அளவு	:	Crown 1/8 (5”x71/2”)
தாள்	:	11.6 Kg (60 GSM)
பக்கங்கள்	:	1060 (80+917+63)
சலுகை விலை	:	**140/–**
அச்சிட்டோர்	:	**கயிலை சிவ. வி.ஆர். மயூரப்பிரியா** **ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ்,** 32, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை–600 002. போன் : 9444089506 / 28611506.
நூல். கிடைக்குமிடம்	:	**சைவ நூல் அறக்கட்டளை** 32, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை–600 002. **பன்னிரு திருமுறை மன்றம்** 42/29, ஜவஹர்லால் நேரு தெரு, ஆழ்வார்திருநகர், சென்னை–87. போன் : 24860865 / 9444202055.
அச்சுக்கோர்வை	:	**ஓம் சக்தி லேசர்** 76/2, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை–600 002. சென்னை – 5, போன் : 9841937490.

பொருளடக்கம்

திருமுறைகள் 1,2,3

குரு வணக்கம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.



ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஞானதேசிய மஹாஸ்வாமிகள்

பெங்களூர் ஸ்ரீ கைலாச ஆசிரம மஹாஸமஸ்தான பீடாதிபதி
அவர்களுக்கு இந்நூலினை காணிக்கை ஆக்குகின்றோம்

கயிலை மயூரப்பிரியா குடும்பத்தினர்.

முன்னுரை

சித்தாந்த சரபம்

பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்று மனித குலத்துக்கு வாழ்வியல் குறிக்கோள் நெறியை வகுத்துக் கொடுத்து, வாழ்வியல் உறுதிப் பாட்டை வழங்கிய பெருமை **திருமுறைகளுக்கு** உண்டு.

மனிதன் தனித்து வாழ்ந்தாலும் சமுதாயத்தோடு இணைந்து வாழ்ந்தாலும்; இல்லறத்தானாக வாழ்ந்தாலும் துறவியாக வாழ்ந்தாலும்; முதலாளியாக வாழ்ந்தாலும் தொழிலாளியாக வாழ்ந்தாலும்; ஆள்வோனாக வாழ்ந்தாலும் ஆளப் படுபவனாக வாழ்ந்தாலும் அவன் மனிதனாக வாழ வேண்டும்.

மனித வாழ்வுக்குத் தேவையானவை வாழ்வியல் தெளிவு என்னும் ஞானமும், சமுதாய முன்னேற்றம் தழுவிய தொண்டுள்ளமும், ஆன்ம நேய ஒருமைப் பாட்டினை மெல்ல, மெல்ல வளர்த்து அரவணைக்கும் நட்பியல் முறையும் என்ற மூன்றுமே. இம்மூன்றையும் வரையறை செய்து தெளிவுறுத்தும் வாழ்வியல் நெறி முறைகளை உணர்த்துவனவே திருமுறைகள். அவ்வகையில் மூவர் தேவாரங்களும் திருமுறைகளில் முதன்மை பெற்று, ஏழு திருமுறைகளாக இடம் பெற்றுள்ளன.

வரலாற்று முறைப்படி நோக்கினால், **'பதிகப் பெருவழி'** எனப் பெறும் திருமுறை மரபினை முதன் முதலில் அமைத்துப் பாடி வழிகாட்டிய பெருமை **காரைக்கால் அம்மையாருக்கே** உரியதாயினும் திருப்பதிகப் பெருவழியைத் தலைமை தாங்கி நடத்தி அமைத்தவர் **திருஞானசம்பந்தப் பெருமானே** என்பது அருளாளர்களின் முடிந்த முடிவு.

ஞானவாரமுதமுண்ட பிள்ளையார் எனவும் தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் எனவும் சேக்கிழார் அடிகளால் போற்றப்பெற்ற திருஞானசம்பந்தரின் அருள் வாக்கினை முதலாகக் கொண்டே இன்று திருமுறைகள் எண்ணப் பெறுகின்றன.

திருஞானசம்பந்தப் பெருமானார் தாம் அருளிய திருப்பதிகங்களைத் திருமுறைகள் என்ற பெயராற் குறிப்பிடவில்லை. **"திருநெறிய தமிழ்"** என்பதே திருஞானசம்பந்தப் பெருமானார் தம்முடைய அருளிப் பாடுகளுக்கு அமைத்துக் கொடுத்த அருமைப் பெயர்.

சுந்தரமூர்த்திப் பெருமானார் அருளிய பதிகங்களைத் **திருப்பாட்டு** என்றும் திருநாவுக்கரசர் அருளிய பதிகங்களைத் தேவாரம் என்றும் சிறப்புப் பெயர் கொடுத்து வழங்குதல் போலவே திருஞானசம்பந்தரின் அருளிப் பாடுகளைத் '**திருக்கடைக்காப்பு**' என வழங்குவதே மரபு.

மக்கட் சமுதாயத்தின் வாழ்வியல் நெறிகளையெல்லாம் வகுத்துக் காட்டியது மட்டுமல்லாமல், மக்கட் சமுதாயத்தின் வாழ்வியற் கொள்கை எனப்பெறும் மெய்ப் பொருளுணர்வுக் கொள்கைகளைத் திறம்பட நேர் நிறுத்திக் காட்டியதோடு புறச் சமயவாதிகளின் கொள்கைகளைத் தகர்த்தெறிந்த பெருமையும் **திருஞானசம்பந்தப் பெருமானார்க்கு** உண்டு.

கடவுளைக் காண முடியாது என்றும் கடவுளின் உண்மை அனுபவங்களைச் சொல்ல முடியாது என்றும் பேசித் திரிந்து கொண்டிருந்த தமிழக மக்கட் சமுதாயத்தில் கடவுளை நேர் நிறுத்திக் கண்டும் பிறருக்குக் காட்டியும் அவன் பெருமைகளை – குணங்களை நேர் நிறுத்திச் சொல்லியும் வரலாறு படைத்தவர் திருஞானசம்பந்தப் பெருமானார்.

திருநீற்றின் பெருமையையும் திருவைந்தெழுத்தின் பெருமையையும் தாம் செயற்படுத்திய பல்வேறு அற்புதங்களின் மூலமாகச் செயற்படுத்தியும் நிரூபணப் படுத்தியும் காட்டிய பெருமை திருஞானசம்பந்தப் பெருமானார்க்கு உண்டு.

திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருப்பதிகங்கள் மூன்று திருமுறைகளாகத் தொகுத்தும் வகுத்தும் நிலை நாட்டியுள்ளார்கள்.

முதல் திருமுறையில் 136 திருப்பதிகங்களும் 1469 பாடல்களும் உள்ளன.

இரண்டாவது திருமுறையில் 122 திருப்பதிகங்களும் 1331 பாடல்களும் உள்ளன.

மூன்றாம் திருமுறையில் 127 திருப்பதிகங்களும் 1369 பாடல்களும் உள்ளன.

மூன்று திருமுறைகளிலும் 385 திருப்பதிகங்களும் 4169 பாடல்களும் உள்ளன.

மூன்றாம் திருமுறையில் திருவிடைவாய்க் கல்வெட்டுப் பதிகமும் திருக்கிளியனூர்த் தலப்பதிகமும் அடங்கும்.

கயிலைப் புனிதர் சிவத்திரு. மயூரப்பிரியா அவர்கள் மக்கட் சமுதாயத்துக்கு எந்தெந்த வகையில் வாழ்வியல் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று சிந்தித்து அயராது உழைக்கும் அருமைத் திறம் உடையவர்.

சிவத்திரு மயூரப்பிரியாவை நினைத்தால் அவரது அச்சகத்தை விட, திருவேட்டீசுரம் பேட்டைத் தெப்பத் திருக்குளத் திருப்பணிதான் என் கண்முன் நிற்கும். எடுத்த காரியத்தைச் செம்மைப் படுத்தியும் சீர்மைப் படுத்தியும் வரலாறாக்கும் வாய்மை படைத்தவர்.

'பன்னிரு திருமுறை மன்றம்' என்ற பெயரில் தொடங்கப் பெற்ற கற்கோயில் சொற் கோயில் திருப்பணிகள் ஆலமரத்தின்

ஆயிரமாயிரம் விழுதுகள் போன்றவை. அந்த ஆலமரத்தின் மற்றொரு கிளையாக இன்று தோற்றம் பெற்று விளங்குவது **'சைவ நூல் அறக்கட்டளை'** என்ற நிறுவனம்.

திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருப்பதிகங்கள் சைவ நூல் அறக்கட்டளையின் மூலம் செம்பதிப்பாக முழுமையும் நிறைவும் பொதுளும் முத்தாய்ப்புப் பதிப்பாக வெளிவருவது போற்றத் தகுந்தது.

அப்பரடிகள் திருமுறை முதலாக ஒன்பதாந் திருமுறை வரையில் சிவத்திரு மயூரப்பிரியாவின் உழைப்பினால் செம்பதிப்பாக வெளிவந்துள்ளன. அகத்தியர் தேவாரத் திரட்டு, ஏழுநாள் திருமுறை வழிபாட்டுப் பாடல்கள் திரட்டு 1008 தமிழ்வேதப் போற்றித் திரட்டு எனப் பல்வேறு திருமுறைப் பதிப்புகளை வெளியிட்ட பெருமை அவருக்கு உண்டு.

தொண்டில் தூய்மை; செயற்பாட்டில் உறுதி; உள்ளத்தில் திண்மை; திருமுறைகளில் பக்தி என்ற நான்கையும் இணைத்தால் வரும் திருவுருவமே கயிலைப் புனிதர் சிவத்திரு மயூரப்பிரியா.

மந்திரப் பேராற்றல் வாய்ந்த மறைமொழி எனத் திகழும் **திருஞான சம்பந்தப் பெருமானார் திருப்பதிகங்களை** திரு. மயூரப்பிரியா அவர்கள் **சைவ நூல் அறக்கட்டளையின்** மூலம் அமைத்துத் தந்த நூலின் வழியில் நின்று படித்துப் பயன்பெற வேண்டியது, வாழ்வியல் நெறியை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு கொண்டவர்களின் கடமையாகும்.

திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருப்பதிகங்களை அழகுற அச்சிட்டு, கண் கவர் முறையில் வெளிப்படுத்திய 'ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ்' உரிமையாளர், தொழின்மைப் பேறாளர்கள் ஆகிய அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

திருமுறைச் செந்நெறி வளர்க!
மனித்த வாழ்வியல் மாண்புறுக!

பேராசிரியர். கு.வைத்திய நாதன்
திருவிடைமருதூர் 7.8.2007

அணிந்துரை

"**திருமுறை**" என்னும் சொல்லுக்குச் சிவபெருமானை அடைவதற்கு எளிதான வழியைக் காட்டும் நூல் என்பது பொருள் ஆகும். (திரு – சிவம், முறை – நூல்)

திருமுறைகள் பன்னிரண்டு, அதவற்றுள் முதல் மூன்றும் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்தவை ஆகும். சம்பந்தப் பெருமானின் திருமுறைக்குத் "**திருக்கடைக்காப்பு**" என்று ஒரு பெயர் உண்டு. அஃதாவது, அவர் அருளிச் செய்த பதிகத்தின் கடைசிப் பாட்டு, அப்பதிகத்தைப் படிப்பதால் ஏற்படும் பயனைக் கூறுவதால், அப்பெயர் ஏற்பட்டது.

கடைக் காப்பு ஆன்மாக்களைக் காப்பது ஆகும். காப்பது என்றால், ஊழ்வினைத் துன்பத்திலிருந்து காக்கும் திறன் உடையது. உலக வாழ்வில் நிம்மதியாக வாழச் செய்வது. மீண்டும் பிறவிக்கு வராத நிலையில் நம்மை உயர்த்திக் காப்பது போன்ற பல நூறு வழிகளில், நம்மைப் பாதுகாப்பது ஆகும்.

சென்னை, ஸ்ரீ கயிலாஸ் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. மயூரப்பிரியா அவர்கள், திருமுறைகளில் பெரிதும் ஈடுபாடு உடையவர்கள். சிவநேயச் செல்வர்கள் வாழ்வில் முன்னேறும் – பொருட்டுச், சம்பந்தப் பெருமான் அருளிச் செய்த முதன் மூன்று திருமுறைகள் அடங்கிய அரிய தொரு நூல் ஒன்றை அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

சைவ அன்பர்கள் அனைவரும் இந்நூலை வாங்கிப் பயன் பெறுமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இது போன்ற பயனுள்ள நூல்கள் மேலும் வெளிவர, எல்லா வல்ல அருள்மிகு மகாலிங்கப் பெருமான் திருவடிகளை வழுத்தி வாழ்த்துகிறேன்

உ

திருச்சிற்றம்பலம்

தருமை ஆதீனப் புலவர் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி

சிறப்புரை

சென்றடையாத திருவுடையான் சிவபெருமான் ஆவர். பிறவா யாக்கைப் பெரியோனாகிய அப்பெ பருமானை வாழ்த்தி வணங்குதற்குரிய பாங்குடையது நம் பன்னிரு திருமுறைகளாகும். இத்திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக அமைக்கப் பெற்றுள்ளது திருஞானசம்பந்தர் அருளிய திருமுறைகளாகும்.

இவ்வரிய திருமுறைகளைப் பண்முறை, தலமுறை, வரலாற்றுமுறை எனமூவகைகளாக பகுத்து கொண்டுள்ளனர் நம் முன்னோர்கள். இம்மூவகை அமைவில் இவ்வரிய பதிப்புத் தலமுறையாக அமைந்துள்ளது. இதனைப் பதிப்பித்து உதவும் அன்பர் சிவநேயச் செல்வர் சென்னை.திருமிகு. கயிலை.சிவ.மயூரப்பிரியா அவர்களாவர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினோர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்பர். தாயுமானார், இவ்வரிய புண்ணியச் செயலை தாம் ஆற்றுவதோடு, பிறரும் ஆற்ற வேண்டும் என்றும் பேரன்பால் இதனைப் பதிப்பித்துள்ளார். இவ்வரிய பணியை தமிழ் உலகம் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளது.

வாழ்க அன்பர்கள்! இவர் தொண்டு வளர இறைவனை இறைஞ்சுகின்றேன்.

டாக்டர். அரங்க இராமலிங்கம்
தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

மதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கிபி. ஆறாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தைத் தமிழ் பக்தி இயக்கத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில் தான் பக்தி இயக்கம் தமிழகத்தில் தோன்றி மெல்ல மெல்ல வடபுலம் நோக்கிப் பெயர்ந்து உலகளாவிய இயக்கமாகப் பரவியது. பக்தி இயக்கத்திற்கு வித்திட்ட பெருமை தமிழகத்திற்கு உரியது. அதற்கு உயிரூட்டியவர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். நாயன்மார்களில் முன்னின்றவர்கள் இருவர். ஒருவர் திருநாவுக்கரசர். மற்றவர் திருஞானசம்பந்தர். இவ்விருவரின் அடியொட்டி ஏனைய நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி இயக்கத்திற்கு உரம் ஊட்டினார்கள். கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய தெய்வச் சேக்கிழார் பக்தி இயக்கத்தின் விழுதுகளாக விளங்கிய திருத்தொண்டர்களின் வாழ்க்கையைக் காப்பியமாகப் புனைந்து வரலாற்றில் நிலைக்கச் செய்து விட்டார்.

பக்தி இயக்கத்தை முன்னின்று நடத்திய இருவரில் ஒருவராகிய திருஞானசம்பந்தர் தலைமைத்துவ நெறியில் தம் ஆளுமையைப் புலப்படுத்தியவர். திருநாவுக்கரசர் தொண்டு

நெறியில் தம் ஆளுமையைத் தொடர்ந்தவர். தலைவராகத் திருவவதாரம் செய்த திருஞானசம்பந்தரின் பெருவாழ்வு இறைவனது திரு உள்ளக் குறிப்பின் வழி அமைந்தது என்பதை,

> அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
> பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்லூழிதொறும்
> தவம்பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்களெல்லாம்
> சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்.
>
> (பெரியபுராணம் : 1929)

எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். தாம் பாடிய திருப்பாடல்களும் தம்முடைய செயல்களும் இறைவனின் விருப்பத்திற்கேற்பவே செய்யப் பெற்றதாக (எனது உரை தனது உரையாக – 1:76.5) திருஞானசம்பந்தரே கூறுவது உணர்ந்து அறியத்தக்கது.

காபாலிகம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், பைரவம் ஆகிய நிலைகளில் முரட்டுச் சைவமாகவும்; சுத்த சைவம் அசுத்த சைவம், மார்க்க சைவம், கடும் சுத்த சைவம் என்ற நிலைகளில் சிக்குண்டு சடங்குச் சைவமாகவும், பிற்காலத்தில் வீரசைவம், காஷ்மீரசைவம் எனப் பல நிலைகளில் சைவம் பிளவுபட்டுப் பிரிந்து கிடந்தது. வெற்று ஆரவாரச் சடங்குகள், அன்பு நெறிக்கு ஒவ்வாத வழிபாட்டு முறைகள் மற்றும் மது மாமிசம் அருந்துதல், புலித்தோல் ஆடை புனைதல், மண்டை ஓடு அணிதல் இன்னபிற நடைமுறைகளோடு இருந்த வந்த – சைவத்தை அன்பு நெறிச் சைவமாக (கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாச் சைவமாக – சேக்கிழார்; அன்பே சிவம் – திருமூலர்) மாற்றிய பெருமை திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் உரியது.

இப்பெருமக்கள் தமிழகத்தின் ஊர்கள்தோறும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களை ஒருங்கிணைத்து மக்கள் சைவமாகச் சைவத்தை மாற்றினர். மக்கள் இயக்கமாகச் சைவ சமய இயக்கம் உருவாயிற்று. மக்கள் சக்தியைத் திரட்டி அவர்களை ஓர் இயக்கமாக்கி அவர்கள் மூலம் பழைய திருக்கோயில்களைப் புதுப்பித்தும் – பல புதிய திருக்கோயில்களை உருவாக்கியும் இசைத்தமிழால் இறைவனைப் போற்றித் துதித்தனர். இசையும் நாடகமும் மீண்டும் தமிழகத்தில் புத்தெழுச்சி பெற்றன. தமிழ்ப் பண்பாடும் தமிழ் உணர்வும் இவர்தம் பாடல்களில் வெளிப்பட்டன. காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்க இறைவனை வழிபடும் தூய பக்திநெறி உரம் பெற்றது – வளம் பெற்றது – வளர்ந்தது. பண்டைத் தமிழரின் அகத்திணை மரபு ஆன்மீக அடித்தளத்தில் மீண்டும் தளிர்த்துத் தழைத்தது.

மக்கள் தங்களுக்குள்ள வேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைகின்ற இடமாகத் திருக்கோயில்கள் மடை மாற்றம் செய்யப்பெற்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால் திருக்கோயில்கள் சமுதாயக் கூடங்களாக மாறின. மக்கள் தொடர்பு சாதனமாக அதாவது வெகுஜன ஊடகமாக (Mass Media) திருக்கோயில்கள் உருப்பெறலாயின. திருக்கோயில்களை மையப்படுத்தி இசை, நாட்டியம், கூத்து, நாடகம் என அனைத்துக் கலைகளும், சிறப்பு விழாக்களும் பூசனைகளும் நடைபெற்றன. அரசன் முதல் ஆண்டிவரை ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்ற சமுதாயப் புரட்சியைத் திருக்கோயில்கள் நிகழ்த்தின.

மக்களுக்கும் மகேசனுக்கும் இடையே இருக்கும் இடைவெளியைக் குறைத்து அம்மை,அப்பன்,ஐயன் என

உரிமையோடு உறவுகொண்டாடுகின்ற நிலையைப் பக்தி இயக்கம் உருவாக்கியது. இக்கட்டத்திலிருந்து இன்னும் ஒருபடி மேலே சென்று நாயக நாயகி பாவத்தில் இறைவனோடு தங்களுக்குள்ள உறவை உறுதிசெய்து மீளா அடிமை என்ற நிலையில் ஒரு பிணைப்பை – நெருக்கத்தை உருவாக்கியது. பக்தி இயக்கம். தமிழ் இலக்கியத்தின் உயிர் நாடியாக இருக்கக்கூடிய அகத்திணை மரபைப் பக்தி இயக்கம் போற்றி வளர்த்தது. "சிறையாரும் மடக்கிளியே இங்கே வா, தேனொடு பால் முறையாலே உணத்தருவன்" (1:60:10) எனத் திருஞானசம்பந்தரும் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' (6:25:7) எனத் திருநாவுக்கரசரும் காதலியாகக் கசிந்து உருகுகின்றனர்.

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே
(3:24:1)


என வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் நம்பிக்கைய்யயும் ஊட்டுகிறார் சம்பந்தர். இல்லாளோடு இனிதே இருக்கும் ஆதியாம் எம் ஈசனைக் காட்டி இல்வாழ்வின்சிறப்பைப் போற்றியுரைக்கின்றார். இவ்வாறு பக்தி இயக்கம் செய்த சமுதாயப் புரட்சிகளை விரிவாக எடுத்துரைக்கலாம். இப்பக்தி இயக்கத்தினைத் தலைமேயேற்று நடத்திய திருஞானசம்பந்தரின் ஆளுமைத் திறத்தினை அறிவதற்கு அவரின் தேவாரப் பாடல்களே சான்று. முதல் மூன்று திருமுறைகள் ஞானசம்பந்தரின் திருப்பாடல்களைத் தாங்கி உள்ளன.

ஓர் இயக்கத் தலைவருக்குரிய வீரமும் தன்னம்பிக்கையும் – மக்கள் கூட்டத்தைக் கவர்ந்திழுக்கும் அழகும், ஆளுமையும் – பேச்சு வல்லபமும் கவிபுனை ஆற்றலும் – அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கும் – தாம் சென்ற இடங்களிலெல்லாம் அந்த இடத்தின் அழகை – இயற்கையை அழகுறப்பாடி அம்மக்களின் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் உளவியல் திறமும் வாய்க்கப் பெற்றவர் திருஞானசம்பந்தர். சம்பந்தர் பாடியருளியதாக இன்று நமக்குக் கிடைக்கும் 385 பதிகங்களையும் 4,169 தேவாரப் பாடல்களையும் தொகுத்துப் பதிப்பித்திருக்கும் சைவநூல் அறக்கட்டளையினரைப் பாராட்டுகிறேன்.

1060 பக்கங்களில் திரு ஞானசம்பந்தரின் 4,169 தேவாரப் பாடல்களையும், திருஞானசம்பந்தரின் வரலாற்றினையும், தேவாரப்பாடல்களின் சொல்லகராதியினையும், தலமுறை வரிசையினையும், பாடல்களின் அகரவரிசையினையும் அரிதின் முயன்று தொகுத்துள்ள திறத்தைப் பாராட்டுகிறேன்.

சைவநூல் அறக்கட்டளையினர் தொடர்ந்து இதுபோன்ற சைவத்தொண்டினை இடையறாது செய்து இறையின் இன்னருள் பெற்று இன்புற்றிட வாழ்த்துகிறேன்.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை



உ

திருச்சிற்றம்பலம்

பேராசிரியர் மு.பெ. சத்தியவேல் முருகனார்

முருகா ஃப்ளாட்ஸ், 12/3, 11வது தெரு, நியூகாலனி, ஆதம்பக்கம், சென்னை -88.

பாராட்டுரை

அவதாரங்கள் இருவகைப்படும். 1) இறைவனால் ஒரு காரணம் பற்றி அனுப்பி வைக்கப்படுவது. 2) சமூகத்திற்கு நெறியளிக்க இறைவனிடம் விண்ணப்பிக்க அருளாளர் இறைவனால் அனுப்பிவைக்கப்படுவது. இதில் திருஞான சம்பந்தரது அவதார்ரம் முதல் வகை.

"திருந்தடி மறக்குமாறிலாத என்னை மையல் செய்து இம்மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினாய்" என்ற சம்பந்தர் திருவாக்கே இதற்குச் சான்று.

இறைவன் சம்பந்தரைப் பிறக்குமாறு செய்ததற்கு அதாவது அவரது அவதாரத்திற்கு வேண்டிய காரணம் என்ன? இதை சேக்கிழார் ஆராய்ந்து மொத்தம் 26 காரணங்கள் சம்பந்தரின் அவதாரத்திற்கு அடிப்படை ஆயின என்று ஆய்ந்து பட்டியலிட்டுக் காட்டினார்.

அந்த 26 காரணங்களையும் ஆய்ந்து படித்து ஆழ்ந்தோபானால் அதுவே ஒரு பேரின்பம். கடல் போல விரியும் அவற்றில் ஒரு சிறுதுளிகளைக் காட்டி உரை நிகழ்த்துமாறு திருவருள் பணித்து ஆட்படுத்தியதை எனது பேறாகக் கருதுகிறேன். அந்தக் காரணங்களில் தலையாயது 'அசைவில் செழுந்தமிழ் வடிக்கே அயல் வழக்கின் துறை வெல்ல' என்பது

தமிழ் தலை தூக்க திருஞான சம்பந்தக் குழந்தை தலைதூக்கி அசைத்தது என்று பாடுகிறார் சேக்கிழார். அடுத்த காரணம் சைவத்துறை விளங்க வந்தவர் சம்பந்தர் என்பது. சைவத்துறையில் நான்கு படித்துறைகள் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை. அவற்றில் கிரியை என்ற படித்துறையை விளக்க வந்தவர் சம்பந்தர் என்று அவர்தம் திருமுறைகள் மூன்றனையும் படித்துத் தோய்ந்த பெரியவர்கள் கூறுகின்றனர்.

கிரியை என்பது மூன்று பகுப்புக்கள் உடையது. கிரியை, பாவனை, மந்திரம் என்பன அவை. கிரியை, பாவனை என்ற இரண்டிற்கும் மொழி தேவை இல்லை. ஆனால் மந்திரம் மொழியின் அடிப்படையில் அமைவது. சம்பந்தர் மந்திரம் வேண்டுமானால் வேறு எங்கும் அலைய வேண்டாம் என்றும், தமது திருமுறைகளே மந்திரம் ஆகும் என்றும், அதன் வடிவில் ஆண்டவன் இருக்கின்றான் என்றும் ஒரு பாடல் பாடி இருக்கிறார். அத்துடன் வழிபாடு எதுவானாலும் தமது திருமுறைகளை ஓதிச் செய்யலாம் என்றும் பாடி இருக்கிறார். பாடல்கள் வருமாறு :

அந்தன் சோற்றுத்துறை எம் ஆதியை
சிந்தை செய்ம்மின் அடிய ராயினீர்
சந்தம் பரவு ஞானசம் பந்தன்
வந்தவாறே புனைதல் வழிபாடே

கழியார் பதி காவலனைப் புகலிப்
பழியா மறை ஞானசம் பந்தனசொல்
வழிபாடு இவைகொண்டு அடி வாழ்த்தவல்லார்
கெழியார் இளம யாரோடு கேடிலரே

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் வேண்டில் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன் குடி தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர் தொழும் அடிகள்வே டங்களே!

தமிழர்கள் தலை தடுமாறிப் போகிவிடக் கூடாது என்று எவ்வளவு அக்கறையோடு திருஞானசம்பந்தர் தமது திருமுறைகளைக் கிரியைக்குப் பயனுற அடையாளம் காட்டுகிறார்! தமிழ் மீதும், தமிழ் இனத்தின் மீதும் இவர்வைத்துள்ள தலையாய அன்பிற்கு தமிழர்கள் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்!

சேக்கிழார் கூறியபடி பூதபரம்பரை பொலிய புனித வாய் மலர்த்தழுத சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தரின் பாதமலர்களைத் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவது தானே நாம் அவர்க்குச் செய்யும் ஒரே கைம்மாறு!

அந்தக் கடப்பாட்டினைத் தலைமேற்கொண்டு நமது ஆருயிர் அன்பர் திரு. மயூரப்பிரியா அவர்கள் வணிக நோக்கில் அல்லாமல் சம்பந்தர் செந்தமிழ்த் திருமுறைகளை அழகிய அச்சில் வெளிப்படுத்தி வான் புகழ் ஈட்டியுள்ளார். இவரது திருமுறை அன்பிற்கு இந்நூல் மற்றுமோர் எடுத்துக்காட்டு. இந்நூல் கொண்டு தமிழ் மொண்டு தலைவன் தாள் பூண்டு திருத்தொண்டர்கள் தனிப் பேரின்பம் எய்துவார்களாக!

சாற்றுதவி

அழியா அருளின்பம் ஆராரும் கொள்ளச்
சுழியா தளித்தான்சம் பந்தன் – தெழித்தனை
நூலாக்கித் தந்தான் நுவல்மயூ ரப்பிரியன்
தோலாது வாழியவன் தொண்டு

சிவநேயச்செல்வர்.R. சிவாகுமார்
(இந்தியன் எக்ஸ்பிரஸ்)

வாழ்த்துரை

உச்சி வெயில் ! மாலை மதியம் !

புறச்சமய இருள் கவிந்திருந்த நேரமது ! அப்போது சீகாழியில் உதித்த ஞான சம்பந்தர் என்ற ஞான சூரியன், வேத நெறிக்குப் புறம்பானவர்களுக்கு உச்சி வெயிலாக எழுந்தார். சைவ நெறிச் செல்வர்களுக்கு 'மாலை மதியம்' போல் திகழ்ந்தார். அவருடைய சம காலத்தவரான அப்பர் பெருமானும், ஆளுடைய பிள்ளையாரும் இணைந்து திராவிட தேசத்தில் சைவக் கொடியை வானளாவப் பறக்க விட்டனர்.

அதற்குப் பின் பற்பல நூற்றாண்டுகள் பறந்தோடி விட்டன. இன்னமும் தமிழகத்தில் சைவக் கொடியின் ஒளி மங்காதிருப்பதற்குத் திருமுறைகளே காரணம். அவற்றைப் பரப்பும் முயற்சி யாவும் மாபெரும் சிவத் தொண்டே என்பதில் ஐயம் இல்லை. அந்தத் தொண்டிற்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள திரு. மயூரப்ரியா அடியார் உலகம் நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறது.

திருஞான சம்பந்தர் அவதரித்ததற்கான காரணத்தை பெரிய புராணம் தெளிவாகவே கூறுகின்றது. 'வேதநெறி தழைத்தோங்க' மிகு சைவத் துறை விளங்க...' என்று பாடி அருளியுள்ளார் சேக்கிழார். இதை சம்பந்தரின் பாடல்கள் மூலமாகவும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

'ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா அந்தகர்களுக்கு எளியேன் அல்லேன்' என்று ஆளுடைய பிள்ளையாரே பாடி அருளியுள்ளார். ஆரியமும், செந்தமிழும் சைவத்தின் இரு கண்கள் என்பதற்கு திருமுறையில் பற்பல சான்றுகள் காணக் கிடைக்கின்றன.

இத்தனைப் பிரமாணங்கள் இருந்தும் இவ்விரண்டில் ஒரு கண்ணை அகற்றிவிட வேண்டும் என்று சிலர் முயற்சிப்பது, திருமுறை ஆசிரியர்களின் கருத்துகளுக்கு விரோதமானது என்பதில் ஐயம் இல்லை. இத்தகையோரை சைவ சமயக் குரவர்களும், சிவபெருமானும் திருத்தியருள வேண்டும்.

'சாகை ஆயிரம் உடையார் ! சாமமும் ஓதுவது உடையார்' என்று திருஞான சம்பந்தரே குறிப்பிட்டு விட்ட பிறகு, வேதங்களை மதிக்க வேண்டியது சைவர்களின் தலையாய கடமையாகிறது. 'வட மொழியும், தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்' என்றும் தேவாரம் சிவபெருமானை புகழ்கிறது. எனவே திராவிட வேதமான திருமுறைகளையும் யாரும் புறக்கணித்தல் ஆகாது.

சிவபெருமானின் அடியார்கள் அனைவருமே பரஸ்பரம் துவேஷம் பாராட்டாமல், மரபுகளை தன்னிச்சையான வழிகளைக் கற்பித்துக் கொண்டு மீறாமல் பக்தி நெறி நின்று, சிவபெருமானின் திருவருளையும் அடியார்களின் திருவருளையும் பெற்றுய்ய வேண்டும். எல்லாம் வல்ல சிவமும், இந்நூலில் உள்ள ஆணித்தரமான ஆதாரங்களும் அனைவர்க்கும் தெளிவை ஏற்படுத்துமென நம்புகிறோம்.

உ

திருச்சிற்றம்பலம்

சிவ. ஆ. பக்தவச்சலம் M.A.,M.Ed.,(P.G.).,D.H.E.
குடியாத்தம் - 632602. (வே.மா)

வாழ்த்துரை

தலமுறைப் பதிப்பாக திருஞானசம்பந்த சுவாமிகளின் மூன்று திருமுறைகளும் திரு. கைலாஸ் அச்சகத்தினர் திரு. V..R. மயூரப்பிரியா அவர்கள் வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சிகுரியதாகும். நல்ல நூல்களை வெளியிடுவது பூர்வ புண்ணியம்.

கடவுளைக்கண்டு அம்மயமான திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருமுறைப் பாடல்களைப் பாராயணம் செய்வது முத்திக்கு வழியாகும்.

"சம்பந்தன் உரை செய்த சீர்மிகுத்த தமிழ் வல்லார்
சிவலோகம் சேர்வாரே" ... தமிழ்வேதம் – 1.

"சிந்தை செய்து பாடவல்லார் சிவகதி சேர்வரே .. தமிழ்வேதம் – 1

திருமுறைப்பாடல்களைப் பாராயணம் செய்வதே தவம் ஆகும் என்கிறார் திருஞானசம்பந்த சுவாமிகள்.

"ஞானசம்பந்தன் சொல்லியவை
பத்தும் பாடத் தவமாமே" – தமிழ்வேதம்–2

அன்பர்கள் இந்நூலை வாங்கிப்படித்து பிறவா நெறி அடைவார்களாக. இந்நூலை இந்த அளவில் வெளியிட்டு வழங்கிய திரு.கைலாஸ் அச்சக உரிமையாளர் நலம் பல பெற்று நீடூழி வாழ்வாராக.

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் திருஞானசம்பந்தர்க்கு அடியேன்.

உ

திருச்சிற்றம்பலம்

செந்தமிழரசு கி. சிவகுமார் M.E.,
ஊரப்பாக்கம், 603 202.

வாழ்த்துரை

"திருஞானசம்பந்தர்" ஒரு மந்திரச் சொல். இச்சொல் சொல்லக்கேட்டு மயங்காத சைவர் இல்லை; மயங்காதவர் சைவர் இல்லை. இப்பெருமான் இங்கு வரவில்லை என்றால் சைவம் இல்லை; திருக்கோயில் இல்லை; திருநீறும் இல்லை; இவையெல்லாம் அவர்தம் புகழ் எல்லையோ, இல்லை. நம் உணர்வு கடந்த நிலை அல்லவா அந்த எல்லை.

சேக்கிழார் கூறும் அவர் வரலாற்றில் நாம் உணரக்கூட முடியாத நுட்பங்கள் உள்ள இடங்கள் பல உள. காட்டுவித்தால் காணலாம். அவர் தமக்கே திருத்தாளம் தந்தார். திருச்சிவிகை வழங்கினார். திருச்சின்னங்கள் அருளினார். முத்துப்பந்தல் விரித்தார். சிவிகை முதலாயினவற்றை முத்தில் தந்தது ஏனாம்? இரண்டு நுட்பங்கள். நவரத்தினங்களில் எல்லா மணிகளும் முத்தைத்தவிர உடனே ஒளி தருவதில்லை. பட்டை தீட்டியோ, சாணை பிடித்தோ பின்னர் தான் ஒளி வீசும். முத்து மட்டுமே பிறந்த உடனே ஒளி வீசும் தன்மையாம். கையால் துடைத்தாலே போதுமாம். இம்மண்ணில் எத்தனையோ அருளாளர்கள். அவர்கள் இறைவனால் உலக அனுபவங்கள் தாம் பெற்று பட்டை தீட்டப் பெற்று, சாணை பிடிக்கப்பெற்று ஒளி வீசினர். இப்பெருமானோ உலகம் என்ன என்று உணரும் முன்பேயே ஒளி வீசுமாறு அருள் பெற்றார், முத்தைப்போல.

நுட்பம் இரண்டு: கடுமையான வெட்டத்துடன் கூடிய ஒளி ஏற்று முத்து அவ்வெட்டத்தை நீக்கி குளுமையான ஒளியாக தருவ்து. இதுவே முத்துப் பந்தராய் விரிந்தது என்க. அவர்தம்

திருவடி நம்வினை வெட்டமகற்றி தண்ணிய திருவருளாய் மாற்றித்தரும் என்பதே அவர்க்கு அடையாளமாய் இறைவன் எல்லாம் முத்தியே வழங்கியது என்க.

வினை நீக்கமே இறைவனிடம் நாம் வேண்டத்தக்க பொருள் என்று காட்டியவர் திருஞானசம்பந்தர். அவ்வினை நீக்கமே நம் துன்பமகற்றும்; மற்ற எவையும் அல்ல என்று தெளிவாக்கியவர் திருஞானசம்பந்தர். அவ்வினை நீக்கம் ஆற்றவல்ல கடவுள் சிவன் ஒருவனே என்றவர் அவர். மற்ற தெய்வங்கள் சில பல நன்மைகளை அருளலாம்; ஆனால் வினை நீக்கம் சிவன் ஒருவனே காட்ட முடியும்; மற்ற தெய்வங்களால் அல்ல. காரணம், அத்தெய்வங்களின் வினைக் கணக்கே சிவனிடம் தான் உள்ளது என்பார்.

'பரவக் கெடும் வல்வினை'என்றும்,'திருநெறிய தமிழ்
வல்லவர் தொல்வினைதீர்தல் எளிதாகும்' என்றும்
'செய்வினை வந்தெம்மைத் தீண்டா பெறா திருநீலகண்டம்'
என்றும், கூறிக்கொண்டே போகலாம்,அவர் தம் திருக்கடைப் காப்புகளை இதற்குச் சான்றாக!

நம் வினை நீக்கம் இறைவன் நிகழ்த்துவதற்கு எளிய வழி திருஞானசம்பந்தர் தேவாரம். இத்திருமுறையை ஓதுதலும்; ஓதக்கேட்டாலும் ஞான வேள்வியாகும். இவ்வேள்விக்குப் பெருந்துணை புரிய இன்று உங்களுக்கு கைலாஷ் பிரிண்டர்ஸ் சிவ. மயூரப்பிரியா அவர்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தை, மூன்று திருமுறைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர் தம் தவ ஆற்றல் எம்மால் கூறுதல் எளிதோ? முன்னரே அவர்க்கு சூட்டப்பெற்ற மணிமகுடத்தில் மேலும் மணிகள் பொதிக்கப் பெற்றன. தொடரும் அவர் தம் தொண்டு எம்போன்ற எளியோரால் உச்சியிற் கூப்பிய கரங்களால் தொழச் செய்கின்ற ஒன்றாம். சிவம் மேன்மேலும் அவர்க்கு எல்லாம் சிறப்புகளையும் வழங்க யாம் வேண்டி நிற்கின்றோம்.

'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

திருச்சிற்றம்பலம்

சைவ நூல் அறக்கட்டளை

ஏற்புரை

கயிலை.சிவ. மயூரப்பிரியா

அடியேன் , குருவருளும் திருவருளும், துணை கொண்டு முதன் முதலாக திருக்கயிலாயம் பயணத்தை செல்வனே முடித்து திரும்பியதும், இறைவன் கட்டளையாக திருமுறைப் பதிகங்களை முழுமையாக பதிப்பித்து மக்களுக்கு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் தோற்றுவித்தார். இதன் அடித்தளமே சைவ நூல் அறக்கட்டளையின் துவக்கம் 2003.

அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாவது; திருமுறை நூல்களும், அதைச் சார்ந்த நூல்களையும் எளியவர்களுக்கு ஏற்றவாறு, அவர்களுக்கு உதவும் வகையில் நேர்த்தியான முறையில் பதிப்பிப்பது.

திருமுறை பாடல்கள் தினசரி வழிபாட்டிற்கு இருக்க வேண்டும் என்று கருதி பதம் பிரித்து எளிய நடையில், பெரிய எழுத்துக்களில் நல்ல தாளில் அச்சிட்டு அதற்கு அழகிய வண்ண அட்டையில் நோர்த்தியான புத்தகம் கட்டுமானம் செய்து மேலும் ஓர் உறை அணிவித்து அழகு செய்து, இதனை அனைத்து சிவநேயச் செல்வர்கள் கைகளில் தவழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு சம்பந்தப் பெருமான் அருளிய மூன்று திருமுறைகைளையும் பெறும் முயற்சியில் வெளியிட முன் வந்துள்ளோம்.


சைவ நூல் அறக்கட்டளையின் பதிப்புகள்:

1. திருஞானசம்பந்தர் தேவாரம் 1,2,3 திருமுறைகள்	–	ரூ. 140.00
2. திருநாவுக்கரசர் தேவாரம் 4,5,6 திருமுறைகள்	–	ரூ. 100.00
3. சுந்தரர் தேவாரம் 7 ஆம் திருமுறை	–	ரூ. 50.00
4. மாணிக்கவாசகர் திருவாசகம் 8 ஆம் திருமுறை	–	ரூ. 40.00
5. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு 9ம் திருமுறை	–	ரூ. 20.00
6. அகத்தியர் தேவாரத் திரட்டு	–	ரூ. 20.00
7. அபிராமி அந்தாதி/வடிவுடை மாணிக்கமாலை	–	ரூ. 20.00
8. திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை	–	ரூ. 20.00
9. திருமுறை சிறப்பு மலர்	–	ரூ. 60.00
10. தமிழ்வேத போற்றித் திரட்டு 1008	–	ரூ. 10.00
11. 7 – நாள் வழிபாட்டு மலர்	–	ரூ. 10.00
12.மழைவேட்டல் பதிகங்கள்	–	ரூ. 5.00


குருவருளும் திருவருளும் துணை கொண்டு அடுத்த பதிப்பாக 10,11,மற்றும் 12ம் திருமுறைகள் வெளிவர உள்ளன.

திருமுறை நூல்கள் எப்பொழுதும் மக்களுக்கு கிடைத்திட சைவ நூல் அறக்கட்டளை அனைத்து முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. திருமணங்கள், காதணி விழா, புதுமனை புகுவிழா, மணநாள் விழா, பிறந்த நாள் விழா, பெற்றோர்கள் 60,70,80 வயது விழா மற்றும் எல்லா சுபநிகழ்ச்சிகளுக்கும் இப்புத்தகத்தை உற்றார் உறவினர்களுக்கு ஞான தானமாகக் கொடுத்து அருள் செல்வத்தை பெறலாம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.


இத்திருமுறைகளை **"செந்தமிழ் மந்திரத்தை"** நாள்தோறும் காலையும் மாலையும் பக்தியுடன் திருநீறு அணிந்து பொருள் உணர்ந்து பாராயணம் செய்து வழிபட, சிவனருள் பெற்று இவ்வுலகில் விரும்பும் பேரின்பங்களை எல்லாம் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து இறையருளில் கலப்பார்கள் என்பது திண்ணம்.




ஞானப்பால் உண்ணல்




பொற்றாளம் பெற்றது



முயலகனோய் நீக்கியது



வணிகனுக்கு விடந் தீர்த்து



எலும்பு பெண்ணுருவாகியது



பாண்டியனது வெப்பு நோய் நீக்கியது



உலவாக் கிழி பெற்றது



சமணரைக் கழுவிலேற்றியது



ஏடு நெருப்பில் பச்சையாய் விளங்கியது



திருச் சோதியிற் கலந்தது

திருஞானசம்பந்தர் சுவாமிகள் குறிப்பு

பிற திருப்பெயர்கள்	:	ஆளுடைய பிள்ளையார், காழி வேந்தர், கவுணியர் கோன், சண்பையர் காவலன், முத்தமிழ் விரகர், பரசமய கோளரி, பாலறாவாயர், சிவஞானக் கன்று, சைவ சிகாமணி, ஞானத்தின் திருஉரு, நான் மறையின் தனித்துணை, மண்ணில் வளர் மதிக் கொழுந்து, கானத்தின் எழு பிறப்பு.
தோன்றிய நாடு	:	சோழ நாடு
தோன்றிய ஊர்	:	சீர்காழி
தோன்றிய குலம்	:	அந்தணர்
தந்தையார்	:	சிவபாத விருதயர்
தாயார்	:	பகவதியார்
முதல் பாடிய பதிகம்	:	"தோடுடைய செவியன்..."
பாடிய பாடல்	:	திருக்கடைக்காப்பு
பதிகம் – பாடல்கள்	:	385 – 4169 பாடல்கள்
மார்க்கம்	:	சத்புத்திர மார்க்கம்
முத்தி பெற்ற திருத்தலம்	:	திருப்பெருமண நல்லூர்
முத்தி அடைந்த வயது	:	16 வயது வைகாசி – மூலம்
காலம்	:	கி.பி. 7–ஆம் நூற்றாண்டு

திருஞான சம்பந்தர் வரலாறு

தோற்றம் :

சோழவள நாட்டில் பிரமபுரம் வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு திருப்பெயர்களை உடைய சீகாழிப் பதியில் கவுணியர் கோத்திரத்தில் அந்தணர் குலத்தில் சிவபாத இருதயர் என்னும் வேதியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர்தம் அருமைத் துணைவியாராக அமைந்தவர் பகவதியார் எனப் பெறுவார். இருவரும் இணைந்து சிவநெறி போற்றி வாழ்ந்து வருங் காலத்தில் தமிழகத்தில் சமண புத்த சமயங்கள் தலைதூக்கி நின்றன. வேத நெறி வளர்ச்சி குன்றியிருந்தது. மக்கள் பூதி சாதனங்களைப் போற்றாது வாழத் தொடங்கினர். அவற்றைக் கண்ட சிவபாத இருதயர் பரசமயம் நிராகரித்து நீறாக்கும் மைந்தர் ஒருவரைத் தமக்குத் தந்தருளுமாறு திருத்தோணிபுரத்து இறைவனை வேண்டி வந்தார்.

திருத்தோணிபுரத்து இறைவன் திருவருளால் அன்னை பகவதியார் மணிவயிறு வாய்த்தார்கள். ஞாயிறு முதலிய கோள்கள் உச்ச நிலையில் அமைந்த நற்பொழுதில், ஒரு திருவாதிரைத் திருநாளில், சிவநெறி சிறந்து விளங்கவும், தமிழ் மக்கள் செய்த தவம் நிரம்பவும், தவநெறி தழைக்கவும், திசைகளில் தென் திசையே சிறப்பெய்தவும், செழுந்தமிழ் வழக்கு ஏனைய மொழிகளின் வழக்கை வென்று மேம்படவும். இசைத்திறன் யாண்டும் நிலை பெறவும், இறையருள் விளக்கம் எங்கும் உண்டாகவும், (புறச் சமயங்கள் பொலி விழக்கவும்) சீகாழிப் பதியில், எவ்வுயிர்க்கும் சிவமாந்தன்மையை வழங்கும் ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தருளினார். அவரது தோற்றத்தால் அனைத்துயிர்களும் மகிழ்வுற்றன. வேத விதிப்படி பெயரிடுதல், தொட்டிலிற் கிடத்தல் முதலிய சடங்குகள் உரிய காலங்களில் நிகழ்ந்தன. பகவதி அம்மையார் இறைவன் திருவடி பரவும் பேரன்பைத் தம் திருமுலைப் பாலுடன் கூட்டி ஊட்டி அன்பான அரவணைப்பில் ஆளுடைய பிள்ளையாரை வளர்த்து வந்தார்.

முன்னைப் பிறப்பில் சிவபிரானை வழிபட்டுச் சிவானந்தம் நுகர்ந்து வந்த பிள்ளையார்க்கு அவனிடமிருந்து வந்த பிரிவுணர்வு அவ்வப்போது வர வெருக்கொண்டு அழும் நிலை அவர்பால் இருந்தது. இந்நிலையில் பிள்ளையாருக்கு வயது இரண்டாண்டுகள் நிரம்பின. மூன்றாவது வயதில் தளர் நடைப்பருவத்தில் பிள்ளையார் ஏனைய குழந்தைகளோடு வீதியில் விளையாடும் நிலையை எய்தினார்.

ஞானப்பால் உண்டது :

ஒரு நாள் காலையில் சிவபாத இருதயர் வேத விதிப்படி நீராடுதற்குத் திருக்கோயிலுள்ளிருக்கும் பிரமதீர்த்தத்திற்குப் புறப்பட்டார். தந்தையார் வெளியில் செல்வதைக் கண்ட பிள்ளையார் தானும் உடன் வரவேண்டுமென்ற குறிப்போடு கால்களைக் கட்டிக் கொண்டு அழுதார். தந்தையார் தன் மைந்தரைப் பார்த்து 'உன் செய்கை இதுவாயின் உடன் வருக' எனக் கூறி அவரையும் உடனழைத்துக் கொண்டு சென்று பிரம தீர்த்தக் கரையில் பிள்ளையாரை இருத்திவிட்டு விரைந்து நீராடித் திரும்பும் எண்ணத்தோடு நீர் நிலையில் இறங்கினார். சில நிமிடங்கள் முழ்கியிருந்து செபித்தற்குரிய அகமர்ஷண மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு நீரில் மூழ்கினார்.

இந்நிலையில் கரையில் அமர்ந்திருந்த பிள்ளையார் தந்தை யாரைக் காணாமல் முற்பிறப்பின் நினைவு மேலிட்டவராய் திருத்தோணி மலைச் சிகரத்தைப் பார்த்துக் கண்மலர்கள் நீர் ததும்பக் கைமலர்களால் பிசைந்து வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடை துடிப்ப 'அம்மே அப்பா' என அழைத்து அழுதருளினார். பிள்ளையின் அழுகுரல் கேட்ட நிலையில் தோணிபுரத்து இறைவர் இறைவியாருடன் விடை மீது அமர்ந்து குளக்கரைக்கு எழுந்தருளினார். பெருமான் உமையம்மையை நோக்கி 'அழுகின்ற இப்பிள்ளைக்கு உன் முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து ஊட்டுக' எனப் பணித்தார். அம்மையாரும் அவ்வாறே தன் திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானமாகிய அமுதைக் குழைத்து அழுகின்ற குழந்தை கையில் கொடுத்து உண்ணச் செய்து

அழுகை தீர்த்தருளினார். தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைக்காத பேரின்பம் பெற்ற நிலையில் பிள்ளையார் திருஞான சம்பந்தராய் அபரஞானம் பரஞானம் அனைத்தும் கைவரப் பெற்றார்.

எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையில்பொற் கிண்ணம் அளித்(து)
அண்ணலை அங்கு அழுகைதீர்த்து அங்கணனார் அருள் புரிந்தார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

எனச் சேக்கிழார் இதனைப் போற்றி உரைத்தலைக் காணலாம்.

அப்பொழுது நீரில் மூழ்கி நியமங்களை முடித்துக் கரையேறிய சிவபாத இருதயர் சிவஞானத் திருவுருவாய்க் கரையில் நிற்கும் தம்மைந்தரைக் கண்டார். கடைவாய் வழியாகப் பால் வழிந்திருப்பதைக் கண்ட அவர், தன் மகனார்க்கு யாரோ பால் அளித்துச் சென்றுள்ளார்கள் என்று எண்ணியவராய் ஞான போனகரை நோக்கிப் 'பிள்ளாய் நீ யார் அளித்த பால் அடிசிலை உண்டாய்? எச்சில் கலக்குமாறு உனக்கு இதனை அளித்தவர் யார்? காட்டுக' என்று வெகுண்டு தரையில் கிடந்த கோல் ஒன்றைக் கையில் எடுத்து ஓச்சியவராய் வினவினார்.

சிறிய பெருந்தகையார் தம் உள்ளத்துள் எழுந்த உயர் ஞானத் திருமொழியால் தமிழ் என்னும் மொழியின் முதல் எழுத்தாகிய தகர மெய்யில் பிரணவத்தை உயிராய் இணைத்துத் தனக்குப் பாலளித்த உமை அம்மையின் தோடணிந்த திருச் செவியைச் சிறப்பிக்கும் முறையில் 'தோடுடைய செவியன்' என்ற முதற்பெரும் பாடலால் தனக்குப் பாலளித்த கடவுளின் அடையாளங்களைச் சுட்டித் திருப்பதிகம் அருளிச் செய்தார். அதனைக் கேட்ட சிவபாத இருதயர் அடித்தற்கு என ஓங்கிய கோல் நெகிழ்ந்து வீழ வியப்பும் வெருட்சியும் மேலிட்டவராய் நின்றார். ஞானசம்பந்தர் தந்தையார் உடன் வர ஆலயம் சென்று பிரமபுரத்துப் பெருமானை வணங்கிப் போற்றி மீண்டார்.

இச்செய்தி நகர் முழுவதும் பரவிய நிலையில் அன்பர்கள் ஞானசம்பந்தரைப் போற்றி வரவேற்க, சிவபாத இருதயர் பிள்ளையாரைத் தம் தோள்மேல் அமர்த்திக் கொண்டு தம் இல்லம் சென்றடைந்தார்.

பொற்றாளம் பெற்றது :

உமையம்மையார் அளித்த ஞானவாரமுதம் உண்டு திருநெறிய தமிழ் பாடிய திருஞானசம்பந்தர் தம் திருமாளிகையில் இறையருளையே எண்ணியிருந்து மறுநாட் காலையில் துயிலுணர்ந் தெழுந்து நீராடி திருக்கழுமலத்தீசனை வணங்கிப் போற்றி, சீகாழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்காவைத் தரிசிக்கும் வேட்கை உடையவராய் அத்தலத்தை அடைந்து ஆலயத்தை வலம் வந்து இறைவன் திருமுன் நின்று 'மடையில் வாளை' எனத் தொடங்கும் இசைத் தமிழ்ப் பதிகத்தைத் தம் கைமலர்களால் தாளம் இட்டுப் பாடினார். கோலக்கா இறைவன் பிள்ளையார் கைகள் சிவப்பதைக் கண்டு மனம் பொறாது திருவைந்தெழுத்து எழுதப் பெற்ற பொற்றாளத்தைத் திருஞானசம்பந்தருக்கு அளித்தருளினார். ஞானசம்பந்தர் அத்தாளத்தைத் தலை மேல் கொண்டு போற்றி, தாளமிட்டு அத்திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

திருஞானசம்பந்தர் மேற்கொண்ட முதல் தலயாத்திரையாக இது அமைந்தது.

திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றுச் சீகாழி திரும்பிய ஞானசம்பந்தர் நேரே ஆலயம் சென்று 'பூவார் கொன்றை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தாளமிட்டுப் பாடிப் போற்றித் தம் மாளிகையை அடைந்தார்.

திருநனிபள்ளி யாத்திரை :

ஞானசம்பந்தரின் தாயார் பகவதி அம்மையார் பிறந்த நனிபள்ளியிலுள்ள அந்தணர்கள், அவர் மூவாண்டில் சிவஞானம் பெற்றதையும் சிவபிரானால் பொற்றாளம் அருளப் பெற்றதையும் கேள்வியுற்றுத் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டுமென

ஞானசம்பந்தரை வேண்டினர். அதற்கு இசைந்த ஞானசம்பந்தர் தோணிபுரத்து இறைவரை வணங்கி விடை பெற்றுத் தாமரை மலர் போன்ற தம் திருவடி நோக நனிபள்ளி நோக்கி நடந்தருளினார். ஆளுடைய பிள்ளையார் அடிமலர் வருந்தக் கண்ட சிவபாத இருதயர் ஞானசம்பந்தரைப் பிறர் தூக்கிச் செல்வதை விரும்பாது தாமே தன் திருத்தோளில் அமர்த்திக் கொண்டு செல்வாராயினார். நனிபள்ளியை அணுகிய நிலையில் ஞானசம்பந்தர் 'எதிரே தோன்றும் இப்பதியாது' எனக் கேட்கத் தந்தையார் 'அது தான் நனிபள்ளி' எனச் சொல்லக் கேட்டுக் 'காரைகள் கூகைமுல்லை' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிக் கொண்டே நனிபள்ளி ஆலயத்தை அடைந்து வணங்கிப் போற்றி அவ்வூரின் அருகிலுள்ள தலைச்சங்காடு, சாய்க்காடு, வெண்காடு முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு மீண்டும் சீகாழிப் பதிக்குத் திரும்பினார். வளர் குன்றிப் பாலையாயிருந்த நனிபள்ளி, ஞானசம்பந்தர் வரவால் நெய்தலாய்ப் பின் மருதமாயிற்று.

இது ஞானசம்பந்தர் வரலாற்றில் அமைந்த இரண்டாவது தல யாத்திரையாகும்.

சில நாட்கள் கழித்து ஞானசம்பந்தர் மயேந்திரப்பள்ளி, குருகாவூர், முல்லை வாயில் முதலிய தலங்களைச் சென்று வணங்கி மீண்டார். இது மூன்றாவது தலயாத்திரை.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தொடர்பு :

திருஞானசம்பந்தர் மிக இளைய பருவத்திலேயே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற அற்புத நிகழ்ச்சியைக் கேள்வியுற்று அவரை வணங்குதற் பொருட்டு, திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரும் சீகாழிப் பதியை அடைந்தனர். அவ்விருவரின் வரவறிந்த ஞானசம்பந்தர் அவர்களை எதிர்சென்று அழைத்து வந்து திருத்தோணிபுரத் திருக்கோயிலில் இருத்தி யாழிசையில் இறைவரைப் போற்றுமாறு செய்து அவர்கள் தங்குதற்குத் தனி இல்லம் அமைத்துக் கொடுத்தருளினார். திருநீலகண்டர் ஞானசம்பந்தர் பாடும் பாடல்களை யாழிசையில் வாசித்து இன்புறுத்தும் பணியை மேற்கொண்டார்.

திருஞானசம்பந்தர் அடியவர் புடைசூழ யாழ்ப்பாணருடன் கொள்ளிட நதியைக் கடந்து தில்லை சென்றார். தென் திசைவாயில் வழியே ஆலயத்தினுட் சென்று பேரம்பலத்தை வணங்கிக் 'கற்றாங்கு எரியோம்பி' 'ஆடினாய் நறுநெய்' என்பனவாகிய திருப்பதிகங்களால் போற்றி வழிபட்டார். அத்தலத்தில் தங்குதற்கு மனமின்றி திருவேட்களத்தில் தங்கியிருந்து நாள்தோறும் தில்லைக் கூத்தனை வழிபட்டார். அங்குத் தங்கியிருக்கும் நாட்களில் திருக்கழிப்பாலை, திருநெல் வாயில் முதலிய தலங்களை வழிபட்டார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தில்லையின் மேற்றிசையில் வெள்ளாற்றின் கரையிலுள்ள தலங்களை வழிபட வேண்டுமென வேண்ட ஞானசம்பந்தரும் அதற்கிசைந்து புறப்பட்டார். எருக்கத்தம் புலியூரை அடைந்தவுடன் 'இத்தலம் அடியேன் பிறந்த தலம்' என யாழ்ப்பாணர் கூறக் கேட்டு மகிழ்ந்து திருக்கோயிலுக்குச் சென்று பதிகம் பாடிப் பரவினார்.

முத்துச் சிவிகை, குடை, சின்னம் பெறல் :

ஞானசம்பந்தர் எருக்கத்தம் புலியூரிலிருந்து திருமுது குன்றம், திருப்பெண்ணாகடம் ஆகிய தலங்களை வணங்கிக் கொண்டு திருநெல்வாயில் அரத்துறை செல்லப் புறப்பட்டார். தந்தையார் தோள்மேல் அமர்ந்து செல்ல மனம் இன்றித் திருவடி நோக நடந்தே வருவதைக் கண்ட தந்தையாரும் அடியவர்களும் மிகவும் பரிவுற்றனர். திருநெல் வாயில் அரத்துறையை அணுகிய போது மாலை நேரம் வந்தது. வழி நடந்த இளைப்பு வர ஞானசம்பந்தர் அடியவர்களோடு மாறன்பாடி என்ற ஊரில் தங்கினார்.

அரத்துறை இறைவன் ஞானசம்பந்தரின் வழி நடை வருத்தத்தை அறிந்து அரத்துறை அந்தணர்கள் கனவில் தோன்றி 'ஞானசம்பந்தன் நம்மைக் காண வருகின்றான். அவனுக்கென ஆலயத்துள் முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் ஆகியன வைத்துள்ளோம் எடுத்துச் சென்று கொடுத்து அழைத்து வருக' எனப் பணித்தருளினான். அவ்வாறே இறைவன் ஞானசம்பந்தர் கனவிலும் தோன்றி 'யாம் அளிக்கும் பொருள்களை ஏற்று வருக' எனக் கூறியருளினான். அரத்துறை அந்தணர்கள் வியந்து எழுந்து

இறைவனளித்த அப்பொருள்களைக் கொண்டு சென்று ஞானசம்பந்தரிடம் நடந்ததைக் கூறிச் சிவிகையில் ஆரோகணித்து அரத்துறை வரவேண்டுமென வேண்டினர். ஞானசம்பந்தர் இறைவன் திருவருளை எண்ணி வியந்து அச்சிவிகையை மும்முறை வலம் வந்து பணிந்து ஐந்தெழுத்தோதி அச்சிவிகையில் அமர்ந்து "எந்தை ஈசன் எம்பெருமான்" என்ற திருப்பதிகத்தால், இறையருளை வியந்து புறப்பட்டுச் சென்று அரத்துறை ஈசனை வணங்கிப் போற்றினார். திருநெல்வாயில் அரத்துறையில் சில நாள் தங்கியிருந்து புறப்பட்டுச் சிவிகையில் விசையமங்கை, திருவைகா, புறம்பயம், சேய்ஞ்ஞலூர், திருப்பனந்தாள், பந்தணைநல்லூர், ஓமாம் புலியூர், வாழ்கொளிப்புத்தூர், கடம்பூர், நாரையூர், கருப்பறியலூர், முதலிய தலங்களைப் பணிந்து திருப்பிரமபுரம் மீண்டருளினார். இது நான்காவது தலயாத்திரையாகும்.

உபநயனம் :

திருஞானசம்பந்தருக்கு ஏழாவது வயது தொடங்கியது. வேதியர்கள் தங்கள் குலமரபை எடுத்துக்கூறி இருபிறப்பாளர் நிலையை விளக்கி அவருக்கு முப்புரிநூல் அணிவிக்கும் உபநயனச் சடங்கினைச் செய்து 'மறை நான்கும் தந்தோம்' என்றனர். பிள்ளையார் இறையருளால் எல்லாக் கலையுணர்வுகளையும் ஓதாது உணர்ந்தவர் ஆதலின் வேதங்களின் பல பதிகளையும் அவற்றின் பொருளோடு ஓதக் கேட்ட அந்தணர்கள் வேதங்களில் தங்கட்கிருந்த ஐயங்களை ஞானசம்பந்தரிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

ஞானசம்பந்தர் அவர்களை நோக்கி வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாய் விளங்கும் திருவைந்தெழுத்தின் சிறப்பை, 'துஞ்சலும் துஞ்சல்' என்று தொடங்கிப் பாடி அனைவர்க்கும் உணர்த்தியருளினார்.

அப்பர், சம்பந்தர் சந்திப்பு :

உபநயனச் சடங்கு முடிந்து ஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருக்கும் பொழுது, தில்லை வந்தருளிய திருநாவுக்கரசர் ஞானசம்பந்தரை இறைவன் ஆட்கொண்டருளிய அற்புத நிகழ்ச்சியைக் கேள்வியுற்று அவரைக் காணும் பெருவேட்கையோடு சீகாழிப்பதிக்கு எழுந்தருளினார். கல்லைப் புணையாகக் கொண்டு கடலிடைக் கரையேறிய நாவுக்கரசர் பெருமைகளைக் கேட்டறிந்திருந்த

ஞானசம்பந்தர் அவர் தன்னைக் காண வருகின்றார் என்பதை அறிந்து அன்பர்களோடு சென்று அவரை எதிர் கொண்டு அழைத்தனர். தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் நாயகன் சேவடி தைவரும் நெஞ்சும் அன்பு பாய்வது போல் கண்ணீரும் கொண்டு முதியராய் வந்த திருநாவுக்கரசரை ஞானசம்பந்தர் வணங்கினார். நாவுக்கரசர் அவரை வணங்கித் தன்னை வணங்கிய ஞானசம்பந்தரைத் தம் எழுதரிய மலர்க்கையால் எடுத்து 'அப்பரே' என அழைக்க அவரும் அடியேன் என மகிழ்ந்துரைத்தார். இருவரும் அளவளாவி மகிழ்ந்து திருத்தோணி புரத் திருக்கோயிலுக்கு வந்து வழிபட்டனர். ஞானசம்பந்தர் அப்பரைத் தம் திருமாளிகைக்கு அழைத்துச் சென்றார். இருவரும் திருவமுது கொண்டு அளவளாவி மகிழ்ந்தனர். சில நாள்கள் சீகாழிப் பதியில் தங்கிப் போற்றிய அப்பர் பிரியாவிடை பெற்றுச் சோழ நாட்டுத் திருத் தலங்களை வணங்கப் புறப்பட்டார்.

ஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருக்கும் நாள்களில் மொழி மாற்று மாலைமாற்று முதலிய பல திருப்பதிகங்களைச் சித்திர கவிகளுக்குரிய இலக்கியங்களாகப் படைத்துக் காழி இறைவனைப் பாடிக் களிப்புற்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியார் மதங்கசூளாமணியாரும் அப்பதிகங்களை யாழில் இணைத்து இசைத்து வாழ்ந்து வந்தனர்.

முயலகன் நோய் தீர்த்தல் :

திருஞானசம்பந்தர் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களையும் தரிசித்து வழிபடவும் ஆங்காங்குள்ள மக்கட்கு அவற்றின் பெருமைகளை அறிவுறுத்தவும் விரும்பி மிகப்பெரிய தமது ஐந்தாவது தல யாத்திரையை மேற்கொள்ள எண்ணினார். தன் தந்தையாரிடம் அவ்விருப்பத்தைத் தெரிவித்தார். சிவபாத இருதயர் தமது அருமருந்தன்ன பிள்ளையைப் பிரிய மனமின்றி 'யான் உம்மைப் பிரிந்து ஒருகணமும் தரியேன் ஆயினும் இருமையின்பம் அளிக்கும் யாகம் ஒன்றையும் செய்ய எண்ணுகிறேன். எனவே, சில தலங்கட்கு உம்மோடு வருகிறேன்'. என்று கூறி விடையளித்துத் தானும் அவரோடு உடன் சென்றார்.

திருஞானசம்பந்தர் திருத்தோணிபுரப் பெருமானை வணங்கி விடைபெற்றுப் பயணம் மேற்கொண்டார். திருக்கண்ணார் கோயில் புள்ளிருக்கு வேளூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு காவிரி வடகரை மழவர் நாட்டுத் திருப்பாச்சிலாச்சிராமம் சென்றடைந்தார். அந்நகரில் வாழும் குறுநில மன்னனாகிய கொல்லி மழவன் என்பான் முயலகன் என்ற நோயினால் வருந்தி வந்த தன் மகளைப் பல்வகை மருத்துவம் செய்தும் குணப்படுத்த இயலாத நிலையில் பாச்சிலாச் சிராமத்து ஆலயத்தில் இறைவர் திருமுன் கிடத்தியிருந்தான்.

திருஞானசம்பந்தர் வருகையை அறிந்த அம்மன்னன் நகரை அலங்கரித்து நன்முறையில் அவரை வரவேற்று ஆலயத்துக்கு அழைத்துச் சென்றான். ஆலயத்தில் இளம்பெண் ஒருத்தி உணர்வற்ற நிலையில் நிலத்திற் கிடத்தலைக் கண்டு அம்மழவனை வினவியறிந்து அப்பெண்ணுக்கு ஏற்பட்ட முயலகன் என்னும் நோயைப் போக்கி யருளுமாறு இறைவனை வேண்டி, 'துணிவளர் திங்கள்' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினார். அந்நிலையில் அப்பெண், நோய் நீங்கி நல் உணர்வு பெற்று எழுந்து ஞானசம்பந்தரை வணங்கிப் போற்றினாள். மழவன் மகிழ்ந்து அவர் திருவடிகளை வணங்கித் தன் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொண்டான்.

குளிர் நோய் தீர்த்தல் :

பாச்சிலாச் சிராமத்துப் பரமனைப் பணிந்து போற்றிய ஞானசம்பந்தர் அவ்வூரினின்றும் புறப்பட்டுப் பைஞ்ஞீலி, ஈங்கோய்மலை முதலான தலங்களை வணங்கிக் கொண்டு கொங்கு நாட்டிலுள்ள கொடிமாடச் செங்குன்றூரைச் சென்றடைந்தார். அங்கு விளங்கும் மாதொரு பாகரைப் போற்றி அருகிலுள்ள திருநணாவை வழிபட்டு, திருச்செங்குன்றூர் வந்து திருமடம் ஒன்றில் தங்கியிருந்தார். அக்காலம் பனிக்காலம் ஆனதால் அந்நிலத்தின் இயல்புப்படி பனி நோய் என்னும் குளிர் காய்ச்சல் அவருடன் வந்த அடியார்களைப் பற்றி வருத்தியது. அதனை அறிந்த ஞானசம்பந்தர் அடியவர்களைப் பற்றியிருந்த அந்நோய் தீருமாறு நஞ்சுண்டு அமரர்களைக் காத்த திருநீலக்கண்டப் பெருமானைப் போற்றி 'அவ்வினைக்கு இவ்வினை' என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தார். அக்கணமே அடியவர்கட்கே யன்றி கொங்கு நாடெங்கிலும் அந்நோய் வாராது நீங்கியது.

முத்துப் பந்தர் பெற்றது :

திருஞானசம்பந்தர், திருச்செங்குன்றூரிலிருந்து புறப்பட்டுப் பாண்டிக் கொடுமுடி, வெஞ்சமாக் கூடல், கருவூர் ஆனிலை முதலிய தலங்களைப் பணிந்து சோழ நாடு மீண்டு திருச்சிராப்பள்ளி முதலிய காவிரித் தென்கரைத் தலங்களை வணங்கிக் கொண்டு திருவலஞ்சுழி வந்தடைந்தார். அப்போது இளவேனிற் பருவம் தொடங்கியது. திருவலஞ்சுழி இறைவனை வணங்கிப் பழையாறை மேற்றளியையும் திருச்சத்தி முற்றத்தையும் பணிந்து நண்பகற் போதில் பட்டீச்சுரம் வந்தடைந்தார். சிவபூதங்கள் வானத்தில் மறைந்து நின்று பட்டீசுரர் அளித்த முத்துப் பந்தரை ஏந்தியவாறு 'இது சிவபெருமான் அளித்தது' எனக் கூறி ஞானசம்பந்தரின் சிவிகையின் மேல் ஏந்தி நிழல் செய்தன. அடியவர் வானினின்று இழியும் அப்பந்தரை ஏந்தியவர்களாய்த் தண்ணிழலில் ஞானசம்பந்தரை ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். ஞானசம்பந்தர் இறைவனது தடங் கருணையை வியந்தவாறு'பாடல் மறை' பதிகம் பாடிப் பட்டீச்சுரரை வழிபட்டு மகிழ்ந்தார்.

உலவாக் கிழி பெறுதல் :

ஞானசம்பந்தர் பட்டீச்சுரத்திலிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கியவராய்த் திருவாவடுதுறை வந்தடைந்தார். அதுபோது சிவபாத இருதயர், தான் வேள்வி செய்தற்கு ஏற்ற காலம் இதுவாகும். அதற்குப் பொருள் வேண்டுமென ஞானசம்பந்தரிடம் தெரிவித்தார். ஞானசம்பந்தர் தந்தையாருக்கு அளிக்கப் பொருள் இல்லையே என வருந்தியவராய் 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தால் இறைவனிடம் விண்ணப்பித்தார். சிவபூதம் ஒன்று ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி ஒன்றை ஆலயத்தில் மாசிலாமணியீசர் சந்நிதியில் உள்ள பீடத்தில் வைத்து 'இப்பொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கிழி, இறைவர் இக்கிழியை உமக்கு வழங்குமாறு அளித்துள்ளார்' எனக் கூறி மறைந்தது. ஆளுடைய பிள்ளையார் உலவாக்கிழியைத் தலைமேற் கொண்டு போற்றி அதனைத் தந்தையார் கையில் கொடுத்து, இக்கிழியின் பொன்னைக் கொண்டு தந்தையாரையும் கழுமலத்திலுள்ள ஏனைய அந்தணர்களையும் நல் வேள்விகள் பலவும், செய்யுமாறு கூறி வழியனுப்பி வைத்தார்.

யாழ்முரி பாடியது :

பின்னர் ஞானசம்பந்தர் திருக்கோழம்பம் வைகல் முதலான தலங்களை வணங்கிக் கொண்டு திருத்தருமபுரம் சென்றடைந்தார். தருமபுரம் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயார் பிறந்த ஊர், ஆதலின் அங்கு வாழும் அவரது சுற்றத்தார் ஞானசம்பந்தரையும், யாழ்ப்பாணரையும் அன்புடன் வரவேற்றுப் போற்றினர். பாணர், தம் உறவினர்களோடு உரையாடுகையில், அவர்கள் ஞானசம்பந்தரின் திருப்பதிக இசையைப் பாணர் உடனிருந்து யாழில் வாசித்து வருதலினாலேயே திருப்பதிக இசை சிறப்படைகிறது என முகமன் உரை கூறினர். அதைக் கேட்டு மனம் பொறாது ஞானசம்பந்தரை வணங்கித் திருப்பதிக இசை யாழில் அடங்காதது என்பதனை உறவினர்கள் உணருமாறு செய்தருள வேண்டுமெனப் பணிந்தார். ஞானசம்பந்தர் கண்டத்திலும் கருவியிலும் அடங்காத இசைக் கூறுடைய 'மாதர் மடப்பிடி' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். யாழ்ப்பாணர் அப்பதிக இசை தம் கருவியில் அடங்காததை உணர்ந்து இக்கருவியினாலன்றோ உறவினர் ஞானசம்பந்தரையும் தன்னையும் ஏற்றத் கற்பிக்க முற்பட்டனர் என, அதனை உடைத்தற்கு ஓங்கினார். ஞானசம்பந்தர் அதனைத் தடுத்து, இறைவன் பெருமை இக்கருவியில் அடங்குமெனக் கருதல் கூடாது. ஆயினும் இயன்றவாறு வாசிப்பீர் எனத் திரும்பக் கொடுத்து, இசைத் தொண்டு செய்யப் பணித்து, சிலநாள் அப்பதியில் தங்கி, திருநள்ளாறு அடைந்து 'போகமார்த்த பூண் முலையாள்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடி நள்ளாற்றிறை வரை வணங்கித் திருச்சாத்த மங்கைக்கு எழுந்தருளினார்.

நீலநக்கர் சிறுத் தொண்டர் உபசரிப்பு :

நீலநக்கநாயனார் ஞானசம்பந்தரை எதிர்கொண்டழைத்துத் தம் திருமனையில் திருவமுதளித்து உபசரித்தார். திருச்சாத்த மங்கையில் அயவந்தி என்னும் ஆலயத்திலுள்ள இறைவனை வழிபட்டார். அத்தலத் திருப்பதிகத்தில் நீலநக்கரின் அன்பின் திறத்தைப் பாராட்டினார். பின்னர்ப் பல பதிகளையும் வழிபட்டுத் திருச்செங்காட்டங் குடியை அடைந்தார்.

திருச்செங்காட்டங் குடியில் கணபதீச்சுரம் சென்று 'பைங்கோட்டு மலர்ப் புன்னை' எனத் தொடங்கிப் பதிகம் பாடிப் பரவினார். அத்திருப்பதிகத்தில் சிறுத்தொண்டர் பக்திச் சிறப்பைப் பாராட்டித் திருமருகல் சென்றடைந்தார்.

விடந் தீர்த்தல் :

திருஞானசம்பந்தர் மருகற் பெருமானை வழிபட்டுச் சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். அப்பொழுது ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது.

வணிக ஒருவன் தனக்கு முறைப் பெண்ணான கன்னி ஒருத்தியை உடன் அழைத்துக் கொண்டு தன்னூர் செல்பவன், மாலை நேரம் வந்ததால் தன் பயணத்தைத் தொடர முடியாமல் திருமருகல் கோயில் அயலிலுள்ள ஒரு திருமடத்தில் தங்கினான். இரவில் வணிகனை அரவு தீண்டி விட்டது. விடந் தலைக்கேறி மயங்கிச் சோர்ந்தான். அந்நிலையில் அவனுடன் வந்த பெண்மணமாகாத நிலையில் அவனைத் தொட இயலாதவளாய்ப் பெற்றோர்க்குத் தெரியாமல் உன் போக்காக வந்தவளாதலின் செய்வதறியாது திகைப்புற்று அழுது அரற்றினாள். ஊர்மக்கள் மந்திரம் வல்லாரைக் கொண்டு மந்திரித்தும் பயனின்றிக் கிடந்த வணிகனின் உடல் அருகே இருந்து கதறி அழும் பெண் 'நஞ்சுண்டு தேவர்களைக் காத்த பெருமானே, மன்மதன் உயிரை அவன் மனைவி வேண்ட அளித்தருளிய க்ருணையாளனே மார்க்கண்டேயர்க்காக காலனை உயிர் துறக்கச் செய்தருளியவனே என் நாயகனைப் பற்றிய விடவேகம் தணியுமாறும், துன்பக் குழியிலிருந்து நான் கரையேறுமாறும் அருள் புரிய வேண்டும்' என இறைவனை நினைந்து அழுதரற்றினாள். அவ்வழியில் காலை இளம் போதில் மருகற் பெருமானை வழிபடவந்த திருஞான சம்பந்தப் பெருமானின் திருச்செவிகளுக்கு இவ்அவலக் குரல் எட்டியது. உடன் ஞானசம்பந்தர் அத்திருமடத்தை அடைந்து அவளுக்கு ஆறுதல் கூறி நடந்ததை வினவினார். அப்பெண் ஞானசம்பந்தரை வீழ்ந்து வணங்கித் தன் வரலாற்றைச் சொல்லலானாள்.

'வைப்பூரிலுள்ள தாமன் என்போன் என் தந்தை. அவனுக்கு மகளிர் எழுவர். அரவு தீண்டப்பட்டவன் என் தாய்மாமன். என் தந்தை

தன் மகளிருள் மூத்தவளை மாமனுக்குத் தருவதாகக் கூறிப் பொருளாசையால் பிறன் ஒருவனுக்கு மணம் செய்வித்தார், அடுத்த பெண்ணை உனக்குத் தருகிறேன் என்று ஆறுதல் கூறிக்கொண்டே ஆறு பெண்களையும் இவ்வாறே பிறருக்கு மணம் முடித்து வந்தார். ஏழாவது பெண்ணாகிய நான் என்னையும் இவ்வாறே வேறு ஒருவருக்கு மணம் செய்வித்துத் தன் மருகனைத் தந்தை தளர்வுறச் செய்வார் என்ற எண்ணத்தால் உறவினர்க்கும் தெரியாமல் இவரோடு போந்து மணம் முடித்து வாழ எண்ணினேன். வழியிடையே இவ்வூரில் அரவு தீண்டி இவரும் இறந்தார். கடல் நடுவே கலம் கவிழ்ந்த நாயகன் போலத் துன்பத்துக்கு ஆளானேன். இந்நிலையில் என் சுற்றத்தார் போல என்பால் பரிவு காட்டி அருள் செய்கின்றீர்கள் ! என்று கூறிய பெண்ணின் ஆற்றாமையைக் கேட்டுத் திருவுளம் இரங்கிய ஞானசம்பந்தர் மருகற் பெருமான் ஆலயம் சென்று பணிந்து 'உன் பெயர் கூறி ஒள்ளிழையாள் உளம் மெலிந்து வருந்துதல் அருட்கடலாகிய உனக்கு அழகோ' என முறையிடும் நிலையில் 'சடையாயெனுமால்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிப் போற்றினார். அந்நிலையில் வணிகனும் உயிர் பெற்று எழுந்தான். இருவரும் தங்கட்கு வாழ்வளித்த ஞானசம்பந்தர் திருவடிகளைப் பணிந்தனர். ஞானசம்பந்தர் அவ்விருவருக்கும் இறைவன் திருமுன்னிலையில் மணம் புணரும் பெருவாழ்வு வழங்கி வாழ்த்தினார்.

திருஞானசம்பந்தர் திருமருகலில் தங்கியிருந்த போது, சிறுத்தொண்ட நாயனார் அவரை வணங்கி மீண்டும் திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். மருகற் பெருமானை வணங்கி விடைபெறச் சென்ற ஞானசம்பந்தருக்கு இறைவன் செங்காட்டங்குடிக் காட்சியைக் காட்ட இரு தலங்களையும் இணைத்து 'அங்கமும் வேதமும்' என்ற திருப்பதிகம் பாடிப் போற்றிச் சிறுத் தொண்டருடன் செங்காட்டங்குடி சென்று கணபதீச் சரத்தை வழிபட்டுக் கொண்டு சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். பின்னர் சிறுத்தொண்டருக்கு விடையருளித் திருப்புகலூர் தொழச் சென்றார்.

முருக நாயனார் உபசரிப்பு :

முருக நாயனார் எதிர் கொண்டழைக்கத் திருப்புகலூர் சென்ற ஆளுடைய பிள்ளையார் ஆலயம் சென்று பெருமானை வணங்கி திருப்பதிகம் போற்றி முருக நாயனார் திருமடத்தில் தங்கியிருந்தார்.

திருநாவுக்கரசர் திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெருமானை வழிபாடாற்றித் திருப்புகலூரை வழிபட எழுந்தளினார். அப்பர் வருகையை அறிந்த ஞானசம்பந்தர் அவரை எதிர்கொண்டழைத்து அளவளாவி மகிழ்ந்தார். அப்பர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை நாளின் சிறப்பை விரித்துரைக்கக் கேட்ட ஞானசம்பந்தர் அப்பரைத் திருப்புகலூரில் இருக்கச் செய்து விற்குடி வீரட்டத்தைப் பணிந்து திருவாரூருக்கு எழுந்தருளினார். ஞானசம்பந்தரின் வருகையை அறிந்த நகர மக்கள் எதிர்கொண்டு போற்றினர். ஞானசம்பந்தர் திருவாரூர்ப் பூங்கோயிலை அடைந்து 'சித்தம் தெளிவீர்காள்' என்பது முதலிய பல திருப்பதிகங்களை அருளிப் பரவி வழிபட்டார். அரனெறியைத் தரிசித்தார். பின்னர் வலிவலம் கோளிலி முதலான தலங்களை அடைந்து வழிபட்டு மீண்டும் திருவாரூரை அடைந்து தங்கியிருந்து வழிபட்டு அத்தலத்தைப் பிரிய மனம் இன்றி அப்பர் நினைவால் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். வழியிடையே பனையூரைத் தொழுது திருப்புகலூர் வந்தடைந்தார். ஊர் எல்லையில் முருக நாயனார் முதலிய அடியவர்கள் வரவேற்கத் திருப்புகலூரை அடைந்து இறைவனை வழிபட்டு முருக நாயனார் திருமடத்தில் திருநாவுக்கரசர், நீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய அடியவர்களோடு உரையாடிக் கலந்து மகிழ்ந்து உடனுறைந்தார்.

திருநாவுக்கரசருடன் தலயாத்திரை :

ஞானசம்பந்தரும் அப்பரும் நீலநக்கர் சிறுத்தொண்டர் முதலானோர்க்கு விடையளித்து இறைவன் வீற்றிருக்கும் பல திருத்தலங்களையும் வழிபட விரும்பிப் புறப்பட்டனர். ஞானசம்பந்தர் அப்பர் உடன்வருவதால், முத்துச்சிவிகை பின்வர, தானும் அவருடன் நடந்து சென்றார். அதைக்கண்ட அப்பர் பெருமான் தாங்கள் சிவிகையில் எழுந்தருள்வீராக எனக் கேட்டுக் கொள்ள ஞானசம்பந்தர் அப்பரை முன்னே விடுத்து அவர் செல்லும் திருத்தலங்களைத் தொடர்ந்து சென்று வழிபட்டார். இருவரும் அம்பர் மாகாளத்தை வணங்கித் திருக்கடவூர் சென்றனர். குங்குலியக்கலயர் வரவேற்க இருவரும் கடவூர் வீரட்டத்தைத் தொழுது போற்றி அந்நாயனார் திருமனையில் அமுது கொண்டு திருக்கடவூர் மயானம் ஆக்கூர் மீயச்சூர் பாம்புரம் முதலிய

தலங்களை வணங்கிக் கொண்டு திருவீழிமிழலை வந்தடைந்தனர். அத்தலத்தில் விண்ணிழி விமானத்தில் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கி இருவரும் மகிழ்ந்து ஆலயத்தின் அருகே விளங்கிய இரண்டு திருமடங்களில் தனித்தனியே அடியார்களுடன் தங்கினர்.

கோயிலின் வடபால் உள்ள திருமடத்தில் ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்தார். அங்கிருக்கும் நாள்களில் திலதைப்பதி, பேணு பெருந்துறை என்ற தலங்களை ஞானசம்பந்தர் வழிபட்டுப் போற்றினார்.

ஞானசம்பந்தர் வீழியில் இருந்தபோது காழிமக்கள் அவர் பிரிவாற்றாது எங்களோடு சீகாழிக்கு வந்தருள வேண்டுமென வேண்டினர். ஞானசம்பந்தர் வீழிநாதனின் அருள் பெற்று இன்று கழித்து நாளை செல்வோம் எனக் கூறி அன்றிரவு துயில் கொண்டார். பெருமான் அவர் தம் கனவில் தோன்றி 'யாம் தோணியிலமர்ந்த வண்ணத்தை நாளை நீ வீழிமிழலையிலேயே காணலாம்' எனக் கூறக்கேட்டு விழித்தெழுந்து நீராடி ஆலயம் சென்றபோது இறைவன் காழிக்காட்சியை அவ்வாலயத்திலேயே காட்டக் கண்டு 'மைம் மருபூங்குழல்' எனத் திருப்பதிகம் பாடிப் பரவினார், காழிமக்கட்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு வீழிமிழலையிலேயே தங்கியிருந்தார்.

வாசி தீரக் காசு பெறுதல் :

ஞானசம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்து மழையின்மையால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. உயிர்களெல்லாம் பசியால் வருத்தமுற்றன. அடியார்களும் துயருற்றனர். அதனை அறிந்த பிள்ளையார் 'கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலை வருமோ? என்று கருதியவராய் இரவில் துயிலலுற்றார். பெருமான் அவர் கனவில் தோன்றிப் பஞ்சம் நீங்கும் கால எல்லை வரை ஆலயத்தின் கிழக்குப் பலி பீடத்திலும் மேற்குப் பலி பீடத்திலும் இருவருக்கும் பொற்காசு அளிக்கின்றோம் ! எனக் கூறி மறைந்தார். விழித் தெழுந்த ஞானசம்பந்தர் அப்ப மூர்த்திகளுடன் ஆலயம் சென்றார். கிழக்குப் பலிபீடத்தில் ஞானசம்பந்தர் காசு பெற்றார். மேற்குப் பலி பீடத்தில் அப்பர் காசு பெற்றார். இருவரும் அக்காசுகளைப் பெற்றுத் தத்தம் திருமடங்களில் அடியவர்களுக்கு அமுதளிக்கச் செய்தருளினர்.

இங்ஙனம் நிகழும் நாள்களில் நாவுக்கரசர் திருமடத்தில் உரிய காலத்திலும், ஞானசம்பந்தர் திருமடத்தில் சிறிது காலம் தாழ்த்தும் அமுதளிக்கப் பெறுவதை அறிந்த ஞானசம்பந்தர், உரியவர்களை அழைத்துத் தாமதத்திற்குரிய காரணம் வினவினார்.

இறைவன் தனக்கு அளிக்கும் காசுகள் வாசியுள்ளதாக இருத்தலையும் அதனால் அக்காசினை மாற்றிப் பொருள்கள் பெற்று வருதலினால் காலத் தாழ்ச்சி ஏற்படுதலையும் அறிந்த ஞானசம்பந்தர், அப்பர் கைத் தொண்டும் செய்தலால் அவருக்கு வாசியில்லாத காசு வழங்குதலை அறிந்து மறுநாள் ஆலயம் சென்று 'வாசிதீரவே காசு நல்குவீர்' எனத் திருப்பதிகம் பாடி நல்ல காசினைப் பெற்று உரியன செய்து மகிழ்ந்திருந்தார். சில திங்களில் மழை பெய்து நாடு செழித்தது பஞ்சம் நீங்கி மக்கள் இனிது வாழத் தொடங்கினர்.

மறைக்கதவம் அடைத்தல் :

ஞானசம்பந்தரும் அப்பரும் அடியவர்களுடன் திருவீழி மிழலையிலிருந்து புறப்பட்டுத் திருவாஞ்சியம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு அடியவர் எதிர்கொண்டு போற்றத் திருமறைக்காடு அடைந்தனர். ஆலயத்தை வலம் வந்து வாயிலை அணுகினார்கள். வேதங்களால் பூசிக்கப் பெற்றுத் திருக்காப்பிடப் பெற்ற அத்திருக்கதவுகள் திறக்கப்படாதிருத்தலையும் மக்கள் வேறோர் பக்கத்தில் வாயில் அமைத்துச் சென்று வழிபட்டு வருதலையும் கண்ட ஞான சம்பந்தர் வேதவனப் பெருமானை உரிய வாயில் வழியே சென்று வழிபட வேண்டுமெனத் திருவுளத் தெண்ணி அப்பரைப் பார்த்து 'இக்கதவுகள் திறக்கத் தாங்கள் திருப்பதிகம் பாடியருளுக' என வேண்டினார். அப்பர் 'பண்ணினேர் மொழியாள்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாட அப்பதிகப் பொருட் சுவையில் ஈடுபட்ட இறைவன் பதிகத்தின் நிறைவில் திருக்கதவுகள் திறக்குமாறு செய்தருளினார். இருவரும் ஆலயம் சென்று மறைக்காட்டுறையும் மணாளனைப் போற்றிப் பரவித் திரும்பினர். அப்பர் இக்கதவுகள் இனி திறக்கவும் அடைக்கவும் உரியனவாக இருத்தல் வேண்டுமென எண்ணி ஞானசம்பந்தரை நோக்கி இப்போது தாங்கள் திருக்கதவுகள் அடைக்கப் பாட

வேண்டுமென வேண்டினார். ஞானசம்பந்தர் 'சதுரம் மறை' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடினார். முதற்பாடலிலேயே கதவு அடைத்துக் கொண்டது. ஏனைய பாடல்களையும் பாடிப் போற்றினார் ஞானசம்பந்தர். பின்னர் இருவரும் சென்று தத்தம் திருமடங்களில் இனிதுறைந்தனர்.

வாய்மூரில் இறைவன் ஆடல் காட்டி அருளல் :

அப்பர் அரிய வேதங்களால் திருக்காப்பிடப் பெற்ற கதவுகள் தாம் பாடிய திருப்பதிகத்தால் அரிதில் திறக்கப் பெற்றதையும் ஞானசம்பந்தரின் பாடலுக்கு எளிதில் அடைத்துக் கொண்டதையும் எண்ணியவராய்த் துயில் கொண்டார். அவர் தம் மனக்கருத்தை அறிந்த இறைவன் அவர் எதிரே சைவ வேடத்துடன் காட்சி நல்கி 'நாம் வாய்மூரில் இருக்கின்றோம். நம்மைத் தொடர்ந்து வருக' என அழைத்து முன்னே செல்ல அவரைப் பின் தொடர்ந்து சென்றார் அப்பர். நெடுந்தூரம் சென்ற நிலையில் பெருமான் மறைந்தார். அப்பர் வாய்மூரை அடைந்து வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார். இந்நிலையில் அப்பரை அவர்தம் திருமடத்தில் காணாத ஞானசம்பந்தர் அவர் சென்ற வழி கேட்டறிந்து அவரைத் தேடித் திருவாய்மூர் வந்தடைந்தார்.

ஞானசம்பந்தரின் வருகையை அறிந்த அப்பர் அவரைக் கண்டு மகிழ்ந்து தாம் அருளிய திருப்பதிகத்தில் திறக்கப் பாடிய என்னினும் சிறப்புடைய செந்தமிழ் பாடித் திருக்கதவம் அடைப்பித்த ஞானசம்பந்தர் வந்துள்ளார் திருக்காட்சி நல்குக, என வேண்டினார். வாய்மூரில் உறையும் இறைவர் ஞானசம்பந்தருக்கு மட்டும் தமது ஆடல் காட்சியைக் காட்ட பிள்ளையார் 'தளிரிள வளரொளி' எனத் திருப்பதிகம் பாடிப் போற்றி அக்காட்சியை அப்பருக்கும் காட்டியருளினார். பின்னர் அப்பரும் அவ்வருட் காட்சியைக் கண்டு பதிகம் பாடிப் போற்றினார். இருவரும் வாய்மூரில் சில நாள் தங்கி மகிழ்ந்து மீண்டும் திருமறைக்காடு சென்று தத்தம் திருமடங்களில் இனிதுறைவாராயினார்.

மதுரைப் பயணம் :

அக்காலத்தில் பாண்டிநாடு சமண சமய இருளில் மூழ்கியிருந்தது. ஆனைமலை முதலிய மலைகளைத் தம் இருப்பிடங்களாகக் கொண்ட சமண சமயிகள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுடன் சைவ சமயத்தை இகழ்ந்தும் பழித்தும் வந்தனர்.

அக்காலத்தில் அரசு புரிந்த கூன்பாண்டியன் சமண சமயத்தைச் சார்ந்து ஒழுகிய காரணத்தால் மக்களும் அச்சமயம் சார்ந்து ஒழுகத் தலைப்பட்டனர். சிவாலயங்கள் சமண் பாழிகளாகவும் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டும் வழிபாடு இன்றியும் இருந்தன. மன்னனின் மாதேவியார் மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் உறுதியாய்ச் சிவநெறி கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இறையருள் பெற்ற ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்ற அரசியாரும் அமைச்சரும் அவர் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளியிருப்பதை அறிந்து தம் பரிசனங்களை அனுப்பி வணங்கி தம் நாட்டு நிலையைத் தெரிவித்து வருமாறு செய்தனர்.

பாண்டி நாட்டிலிருந்து திருமறைக்காடு வந்த பரிசனங்கள் ஞானசம்பந்தரை வணங்கித் தங்கள் நாட்டின் நிலையை எடுத்துரைத்தனர். உடன் இருந்த அடியவர்கள் ஞானசம்பந்தரிடம் பாண்டி நாட்டுக்கு எழுந்தருள வேண்டுமெனத் தெரிவித்துக் கொண்டார்கள். ஞானசம்பந்தரும் அப்பரும் மறைக்காட்டீசன் திருக்கோயில் சென்று வணங்கினர். ஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்லும் தம் வேட்கையை அப்பரிடம் தெரிவித்தார். அதனை அறிந்த அப்பர் ஞானசம்பந்தரை நோக்கிப் 'பிள்ளாய் அமணர் செய்யும் வஞ்சனைக் கோர் அளவில்லை என்பதை நான் உணர்ந்தவன். மேலும் இன்று நாளும் கோளும் நன்றாக இல்லை. இதுபோது பாண்டிநாடு செல்வது கூடாது?' எனத் தடுத்தார். ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி 'நாம் போற்றுவது நம் பெருமானுடைய திருவடிகளை, ஆதலால் நம்பால் எத்தகைய தீங்கும் வாராது' எனக் கூறியதோடு, நாள் கோள்களின் குற்றங்கள் நீங்க 'வேயுறு தோளிபங்கன்' என்னும் திருப்பதிகம் பாடி, மதுரைப் பயணத்தை மேற்கொண்டார். தம்மோடு உடன் வரமுற்பட்ட அப்பரடிகளைத் தடுத்து நிறுத்திச் சோழ நாட்டில் இறைவனைத் தொழுது இருப்பீர்களாக எனக் கூறித் தமது மதுரைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அமைச்சர் வரவேற்பு :

திருஞானசம்பந்தர் திருமறைக் காட்டிலிருந்து அடியவர் புடைசூழச் சிவிகையில் ஏறிப் புறப்பட்டு அகத்தியான்பள்ளி, கோடிக் குழகர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு தென் மேற்றிசை நோக்கிச் சென்று திருக் கொடுங்குன்றம் பணிந்து மதுரையின்

எல்லையை அடைந்தார். மங்கையர்க் கரசியார் ஞானசம்பந்தர் வருகையை அறிந்து ஊர் எல்லையில் வரவேற்குமாறு குலச்சிறையாரை அனுப்பியிருந்தார். மதுரை எல்லையை அடைந்த ஞானசம்பந்தரைக் குலச்சிறையார் வணங்கி வரவேற்றார். பிள்ளையார் சிவிகையிலிருந்து இறங்கி 'அரசியார்க்கும் அமைச்சர்க்கும் திருவருளால் நன்மைகள் விளைக' என வாழ்த்தினார். குலச்சிறையார் 'இன்று தாங்கள் எழுந்தருளப் பெற்ற பேற்றினால் என்றைக்கும் திருவருள் உடையோம். இனி எங்கள் நாட்டில் திருநீற்றொளி விளங்குவது உறுதி' என முகமனுரை கூறி, மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை வரவேற்கத் தன்னை அனுப்பியுள்ளதைத் தெரிவித்தார். மேலும் மதுரை மிக அண்மையிலுள்ளது என்றும் கூறினார்.

ஞானசம்பந்தர் மதுரையை நெருங்கிய நிலையில் 'மதுரை இன்னும் எவ்வளவு தூரம் உள்ளது' எனக் கேட்க அடியவர்கள் கோபுரத்துடன் திருக்கோயிலைச் சுட்டிக்காட்டி 'அதுவே திருவாலவாய்' எனக் கூறக்கேட்டு 'மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் ஆகியோரின் பக்தி நலத்தைப் புகழ்ந்து திருப்பதிகம் அருளிச் செய்து கொண்டே ஆலவாய்த் திருக்கோயிலை அடைந்து குலச்சிறையாருடன் வலங்கொண்டு பணிந்து 'நீலமாமிடற்று' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

மங்கையர்க்கரசியார் சந்திப்பு :

ஆலவாய் இறைவர் திருக்கோயிலை வழிபட வந்த மங்கையர்க்கரசியார் வழிபாடு முடித்துக் கோயில் முன்றிலில் திருஞான சம்பந்தரைக் கண்டு அவர் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து பணிந்தார். பிள்ளையார் எழுதரிய மலர்க்கரங்களால் அவரை எடுத்தார். 'யானும் என் நாயகனும் செய்த தவப்பயனால் தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்றேன்' எனக் கூற ஞானசம்பந்தர் 'புறச் சமயச் சூழலுள்ளும் சிவனடித் தொண்டினை மறவாது போற்றும் உம்மைக் காணும் பொருட்டே இங்கு வந்தோம்' எனக் கூறி அவருக்கு விடை கொடுத்து அனுப்பித் திருக்கோயில் புறத்தணைந்து குலச்சிறையார் காட்டிய திருமடம்

ஒன்றில் அடியவர்களோடு எழுந்தருளியிருந்தார். அரசி மாதேவியாரின் கட்டளைப்படி குலச்சிறையார் அடியார்களுக்கு நல்விருந்தளித்து உப்சரித்தார்.

திருமடத்திற்குத் தீ வைத்தல் :

பகற்பொழுது கழிந்து இரவு வந்தது. ஞானசம்பந்தரோடு உடன் வந்த அடியவர் அந்தணர் முதலானோர் வருகையை அறிந்த சமணர் கண்டு முட்டு ஆயினர். மன்னனிடம் சென்று முறையிட்டனர். தாங்கள் அறிந்த மந்திரத்தால் ஞானசம்பந்தர் தூங்குகின்ற மடத்திற்குத் தீவைக்க அநுமதி பெற்றனர்.

சமணர் அனலை ஏவிய மந்திரம் ஞானசம்பந்தரின் அடியவர் ஒதும் ஐந்தெழுத்துக்கு முன்னால் பலிதம் ஆகவில்லை. அதை அறிந்த சமணர்கள் ஞானசம்பந்தர் திருமடத்திற்குத் தீ வைத்தனர். ஒருபகுதி தீப்பற்றி எரிந்தது. அடியவர்கள் சமணர்களின் வஞ்சனையை அறிந்து ஞானசம்பந்தரிடம் தெரிவித்தனர். 'இத்தீ அரசன் முறை செய்யாமையால் நேர்ந்ததாகும், ஆதலால் இத்தீ அவனைச் சென்று பற்றுதலே முறையாயினும் மங்கையர்க் கரசியாரின் மங்கல நாணுக்கு ஊறு நேராதவாறு பையச் சென்று பாண்டியனைப் பற்றுவதாகுக' என்று கூறி 'செய்யனே திரு' என்று பதிகம் ஒதி தீயை ஏவினார்.

பொழுது விடிந்தது. ஞானசம்பந்தர் திருமடத்தில் சமணர்கள் தீவைத்த செய்தி மதுரை மாநகர் முழுதும் பரவியது. அதனைக் கேள்வியுற்ற மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மிகவும் மன நடுக்கம் உற்றனர். இக்கொடியோர் வாழும் நாட்டில் ஞானசம்பந்தரை வரவழைத்த குற்றத்துக்கு நாம் இறப்பதே சரியான தண்டனை என்று எண்ணினர். திருமடத்திலிடப்பட்ட தீயால் யாருக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாமை கருதி ஆறுதல் உற்றனர். இந்நிலையில் பாண்டி மன்னனை வெப்பு நோய் பற்றி வருத்தியதறிந்து உளம் நடுங்கி மன்னனை அடைந்தார்கள். மருத்துவர்களாலும் சமண முனிவர்களாலும் நோயைக் குணப்படுத்த இயலவில்லை. இந்நிலையில் குலச்சிறையார் அரசனை அணுகி 'ஞானசம்பந்தர் திருமடத்துக்குச் சமணர்கள் இட்டதீயே நோயாகி வந்துள்ளது. அவர் வந்தால் நோய் தீரலாம்' என்றார். மன்னன்

ஞானசம்பந்தர் என்ற நாம மந்திரத்தைக் கேட்ட அளவில் அயர்வு நீங்கியதை உணர்ந்து 'அவரை அழைப்பீராக' என்று கூறினான். சமணர்கள் அரசனிடம் இந்நோய் ஞானசம்பந்தரால் தீர்க்கப் பெற்றாலும் தங்களாலேயே தணிந்தது எனப் பொய்யுரைக்க வேண்டியனர். மன்னன் நடுநிலை பிறழேன் என மறுத்தான். குலச்சிறையாரும் அரசியாரும் ஞானசம்பந்தரைச் சென்று தரிசித்துத் திருமடத்திற்குத் தீயிட்ட செயலுக்கு மிகவருந்தியவர்களாய் மன்னன் வெப்பு நோயால் வாடுவதை விண்ணப்பித்துத் 'தாங்கள் எழுந்தருளி நோயைக் குணப்படுத்தினால் உய்வோம்' எனக் கூறி நின்றனர். ஞானசம்பந்தர் சமணர்களோடு செய்யும் வாதில் வென்று 'தென்னர் கோனுக்குத் திருநீறு அணிவிப்போம்' எனக் கூறிப் புறப்பட்டுத் திருக்கோயிலை அடைந்து 'காட்டு மாவது உரித்து' என்ற திருப்பதிகத்தால் போற்றி இறைவன் திருவுளக் குறிப்பை அறிந்தார். மேலும் சமணர் மேற்கொள்ளும் வாதங்களிலும் வெற்றி நல்க 'வேத வேள்வியை' என்ற திருப்பதிகம் பாடி இறைவனிடம் விடை பெற்று வெளிவந்து சிவிகையில் ஏறி மன்னனின் மாளிகையை அடைந்தார்.

வெப்பு நோய் தவிர்த்தல் :

ஞானசம்பந்தர் பாண்டியன் அரண்மனையை அடைந்து மன்னன் அருகில் இடப்பெற்ற பொற்றவிசில் எழுந்தருளினார். மன்னன் ஞானசம்பந்தரைத் தரிசித்த அளவில் நோய் சிறிது தணியப் பெற்றவனாய் அவரோடு உரையாடும் முறையில் 'நுமது ஊர் எது' எனக் கேட்கப் 'பிரமனூர்' என்ற திருப்பதிகத்தால் விடையளித்தார்.

சமணர்கள் அச்சமுற்றார்கள். ஆயினும் அதனை மறைத்துக் கொண்டு சம்பந்தரை நோக்கி 'உங்கள் சமயக் கொள்கைகளைக் கூறுங்கள்' எனக்கூறினர். அரசியார் கொடிய சமணர்கள் நடுவில் இப்பாலகரை நாம் அழைத்தது தவறோ என வருந்திச் சமணர்களை நோக்கி 'மன்னனின் நோயை முதலில் தணிக்க முயலுங்கள். நோய் தணிந்த பிறகு வாது செய்யலாம்' என்றார். ஞானசம்பந்தர் அரசமா தேவியாரைப் பார்த்து 'அஞ்சற்க; என்னைப் பாலகன் எனக் கருத வேண்டா; ஆலவாயான் துணை நிற்க வாதில் வெல்வோம்' என்றார். சமணர்கள் மன்னன் உடலில் இடப்பாகம் பற்றிய நோயை நாங்கள் குணப்படுத்துகிறோம் என்று பீலி கொண்டு உடலைத் தடவிய அளவில்

நோய் மேலும் கூடியது. ஞானசம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்ற திருப்பதிகம் பாடி, தம் திருக்கரத்தால் வலப்பாகத்தில் திருநீற்றைத் தடவிய அளவில் நோய் தணிந்து இடப்பாகத்தே மூண்டெழக் கண்ட மன்னன் அப் பாகத்தையும் தாங்களே தீர்த்தருள வேண்டுமென வேண்டினான். ஞானசம்பந்தர் இடப்பாகத்திலும் திருநீறு பூசிய அளவில் நோய் தணிந்தது. மன்னன் எழுந்து ஞானசம்பந்தரைப் பணிந்து 'யான் உய்ந்தேன்' என்று போற்றினான்.

அனல் வாதம் :

பாண்டியனது வெப்பு நோயைக் போக்க இயலாத சமணர்கள் தருக்க வாதம் புரிவதை விடுத்துத் தீயிலும் நீரிலும் அவரை வெல்லலாம் என்று எண்ணினார்கள். திருஞானசம்பந்தர் 'இனி உங்கள் வாய்மையைக் கூறுங்கள்' என்றார். சமணர்கள் 'இருதிறத்தாரும் தாங்கள் கண்ட பேருண்மையை ஏட்டில் எழுதி நெருப்பில் இட்டால் வேகாத ஏடு எவருடையதோ அவர்கள் சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்வோம்' என்றனர். ஞானசம்பந்தரும் அதற்கிசைந்தார். பாண்டியன் தீக்குண்டம் அமைக்கக் கட்டளையிட்டான்.

ஞானசம்பந்தர் தாம் அருளிய திருப்பதிகச் சுவடியைக் கொணரச் செய்து வழிபட்டு அதனை விரித்தருளினார். 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற திருநள்ளாற்றுத் திருப்பதிகம் உதயமாயிற்று. ஞானசம்பந்தர் நள்ளாற்றிறைவனைப் போற்றி அவ் ஏட்டினை எடுத்து அத்திருப்பதிகம் அனலிடை வேகாதிருக்க வேண்டி 'தளிரிள வளரொளி' என்றதொரு திருப்பதிகம் அருளி எடுத்த ஏட்டினைத் தீயில் இட்டார். அவ்வேடு தீயில் எரியாது பச்சென்றிருந்தது. சமணர்கள் தங்கள் நூற் பொருள் எழுதப் பெற்றதொரு ஏட்டினைத் தீயில் இட்டனர். அது எரிந்து கரிந்து சாம்பலாயிற்று. ஞானசம்பந்தர் குறித்த நேரம் வரை காத்திருந்து தான் இட்ட ஏட்டை யாவரும் காண எடுத்தருளினார். அது முன்னையினும் பச்சென்றிருந்த காரணத்தால் பச்சைத் திருப்பதிகம் எனப் போற்றப்பெறுவதாயிற்று.

புனல்வாதம் :

சமணர்கள் தங்கள் ஏடு எரிந்து சாம்பலானதைக் கண்டு மன்னனை நோக்கி 'ஓர் வாதினை மும்முறை செய்து உண்மை காணுதலே மறையாகும். ஆதலால் இருதிறத்தாரும் தத்தம் சமய

உண்மைகள் எழுதிய ஏட்டினை ஆற்றில் இடும்போது எவருடைய ஏடு எதிரேறிச் செல்கின்றதோ அவர்கள் சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்ளலாம்' என்றனர். அப்பொழுது அமைச்சர் குலச்சிறையார் இதிலும் தோற்றவர்களுக்கு ஏற்படும் இழப்பு யாது எனக் கேட்டார். சமணர்கள் இவ்வாதில் தோல்வியுற்றோமானால் எங்களை இவ்வேந்தன் கழுவேற்றி முறை செய்யலாம் என்றனர். மன்னனும் உடன்பட்டான்.

ஞானசம்பந்தரும் சமண முனிவர்களும் வைகையாற்றின் கரையை அடைந்தனர் முதலில் சமணர்கள் தங்கள் சமய உண்மையாகக் கூறும் 'அஸ்தி நாஸ்தி' என்ற வசனத்தை எழுதி ஆற்றிலிட்டனர். அம்மொழி ஆற்று நீரோட்டத்தை எதிர்க்கும் ஆற்றலின்றி நீர் ஒடும் நெறியிலேயே விரைந்தோடிற்று. அதனைக் கண்ட சமணர்கள் நீவிரும் உமது சமய உண்மையை எழுதி நீரில் இடுக எனக்கூறினர். ஞானசம்பந்தர், திருப்பாசுரம் எனப்படும் 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அதனை ஏட்டில் எழுதச் செய்து அவ் ஏட்டை ஆற்றில் இட்டருளினார். ஏடு வைகை ஆற்று வெள்ளத்தைக் கிழித்து எதிர் சென்றது.

அத்திருப்பதிகப் பாடலில் 'வேந்தனும் ஓங்குக' என ஞானசம்பந்தர் அருளிச் செய்ததால் பாண்டியன் கூன் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் ஆயினான். குலச்சிறையார் குதிரையின் மீது ஏறி ஏட்டினைத் தொடர்ந்து சென்றார். ஏடு எதிரேறிச் செல்வதைக் கண்ட பிள்ளையார் 'வன்னியும் மத்தமும்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். அவ்வேடு வைகையின் வடகரையிலமைந்த ஒரு கோயிலுக்கு அருகே சென்று நின்றது. ஏடு நின்ற கோயில் ஏடகம் எனப் பெற்றது. குலச்சிறையார் அதனை எடுத்து வந்து ஞானசம்பந்தரிடம் சேர்ப்பித்தார். அனைவரும் கண்டு அதிசயித்து மகிழ்ந்தனர்.

சமணர்கள் தாங்கள் செய்த சபதத்தின்படிக் கழுவேறினர். ஞானசம்பந்தர் பாண்டியமன்னனுடன் ஆலவாய் இறைவர் திருக்கோயில் சென்று 'வீடலால வாயிலாய்' என்ற திருப்பதிகம் பாடி வழிபட்டுத் தம் திருமடத்துக்கு எழுந்தருளினார்.

பாண்டித் தலங்களைத் தரிசித்தல் :

"ஞானசம்பந்தர் மதுரையில் தங்கியிருக்கும் நாளில் அவரைக்காண விரும்பிய சிவபாத இருதயர் மதுரை வந்தார்.

அப்பொழுது ஞானசம்பந்தர் அவரைப் பார்த்து அருந்தவத்தீர் குழந்தைப் பருவத்தில் எனக்குப் பொற்கிண்ணத்தில் பாலளித்து அருள் புரிந்த தோணிபுரப்பெருந்தகை எம்பெருமாட்டியோடு இனிதாக இருந்ததே? என நலம் உசாவும் முறையில் 'மண்ணில் நல்ல வண்ணம்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். பாண்டியனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் உடன் வர திருப்புத்தூர், கானப்பேர், சுழியல், குற்றாலம், நெல்வேலி முதலிய தலங்களை வழிபட்டு இராமேச்சுரம் சென்றடைந்தார். திருமால் இராமாவதாரத்தில் தாபித்து வழிபட்ட இராமநாதரைத் தரிசித்து அங்கிருந்தபடியே ஈழத்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய தலங்களை நினைந்து போற்றினார்.

சோழ நாடு மீளல் :

இராமேச்சுரத்திலிருந்து ஆடானை, புனல்வாயில், மணமேற்குடி ஆகியவற்றை வழிபட்டுப் பாண்டிய மன்னன் அரசியார் அமைச்சர் முதலானோர்க்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுச் சோழநாடு புகுந்து பாதாளீச்சரம், திருக்களர் முதலான தலங்களை வழிபட்டுக் கொண்டு திருக்கொள்ளம்பூதூர் வந்தடைந்தார்.

ஒடம் உய்த்தது :

கொள்ளம்பூதூர் எல்லையில் முள்ளியாறு வெள்ளத்தால் நிறைந்து காணப்பட்டது. மறுகரைக்கு ஏற்றிச் செல்லும் ஒடம் செலுத்துவோர் வெள்ளமிகுதி கண்டு ஒடத்தைக் கரையில் கட்டி விட்டுப் போயிருந்தனர். ஞானசம்பந்தர் ஓர் ஒடத்தை அவிழ்க்கச் செய்து அடியவர்களுடன் தானும் ஏறிக் கொள்ளம்பூதூர் இறைவனைப் போற்றிக் 'கொட்டமே கமழும்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். ஒடம் தானே மறுகரைக்கு ஞானசம்பந்தரை அழைத்துச் சென்றது. ஞானசம்பந்தர் கொள்ளம்பூதூர் ஆலயத்தை அடைந்து எடுத்த திருப்பதிகத்தின் எஞ்சிய பாடல்களால் இறைவனைப் பரவினார். திருநள்ளாறு அடைந்து மதுரை மாநகருக்கு வந்து அனல் வாதத்தில் வெற்றியருளிய நள்ளாற்றிறைவன் மீது 'பாடகமெல்லடி' என்ற பதிகத்தால் போற்றித்தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

புத்தரை வாதில் வென்றது :

திருத்தெளிச்சேரியை அடைந்து வழிபட்டுப் போதி மங்கை அருகே ஞானசம்பந்தர் வரும்போது, அவரது முத்துச் சின்னம், காளம், 'பரசமயகோளரி வந்தான் பாலறாவாயன் வந்தான்' என முழங்கிய ஒசை கேட்ட புத்த நந்தி, தேரர் குழாத்துடன் வந்து தங்களோடு வாதிட அழைத்தான். ஞானசம்பந்தருடன் வந்த அடியவர் ஒருவர் அவர் அருளிய தேவாரங்களில் 'புத்தர் சமண்கழுக் கையர்' என்ற பாடலைப் பாடி 'புத்தன் தலை இடி வீழ்ந்து உருளுக' என உரைத்த அளவில் புத்த நந்தியின் மேல் இடி வீழ்ந்தது. உடன் தேரர்கள் அஞ்சி அகன்றனர். சாரி புத்தன் என்பான் தர்க்க வாதம்புரியுமாறு ஞானசம்பந்தரை அழைத்த போது அந்த அடியவரைக் கொண்டே வாதிடச் செய்து வெற்றி கண்டார். புத்தர்கள் தங்கள் பிழை உணர்ந்து ஞானசம்பந்தரை வணங்கிச் சைவரானார்கள். பின்னர்த் திருக்கடவூர் சென்று வழிபட்டு அப்பர் எங்குள்ளார் எனக் கேட்டு அவர் திருப்பூந்துருத்தியில் இருக்கும் செய்தி அறிந்து அவரைக் காணத் திருப்பூந்துருத்தி வந்து அடைந்தார்.

அப்பரைக் கண்டு மகிழ்தல் :

ஞானசம்பந்தர் வருகையை அறிந்த அப்பர், திருப்பூந்துருத்தி எல்லைக்குமுன் சென்று அடியவர் கூட்டத்தினரோடு அவர் ஏறி வரும் சிவிகையைத் தானும் ஒருவராய்ச் சுமந்து வருவாராயினார்.

திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தி எல்லையை அடைந்த போது அப்பர் வரவைக் காணாது 'அப்பர் எங்குற்றார்?' என அடியவர்களை வினவினார். அவ்வுரை கேட்ட அப்பர் 'உம் அடியேன் உம் அடிகள் தாங்கி வரும் பெரு வாழ்வு வந்து எய்தப் பெற்று இங்குற்றேன்' என்றார். ஞானசம்பந்தர் விரைந்து சிவிகையினின்றிறங்கி 'இவ்வாறு செய்தருள்வது தகுமா?' எனக் கூறி அப்பரை வணங்கினார். அப்பரும் உடன் வணங்கினார். பின்னர் இருவரும் ஆலயம் சென்று இறைவனை வணங்கினர். ஞானசம்பந்தர் அப்பர் திருமடத்தில் அவரோடு உடன் உறைந்து பாண்டி நாட்டில் நடந்தவைகளை விவரித்தார். அப்பர் 'திருநெறித் தொண்டெனும் வான்பயிர் தழைக்கச்சூழும் பெருவேலி ஆயினீர்' எனப் போற்றினார். பாண்டி நாட்டில் சைவம் தழைக்கத் தொடங்கியதை அறிந்த அப்பர் அந்நாடு செல்லும் விருப்புடையவரானார். அப்பர் தொண்டை நாட்டின் சிறப்பைக்

கூறக்கேட்ட ஞானசம்பந்தர் தொண்டை நாடு செல்லும் விருப்புடையரானார். இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து யாத்திரை மேற்கொண்டனர்.

ஞானசம்பந்தர் காவிரி வடகரையை அடைந்து நெய்த்தானம் ஐயாறு பழனம் முதலிய தலங்களை வணங்கி, சீகாழிப் பதியை அடைந்து தோணிபுரப் பெருமானைப் போற்றித் தம் திருமாளிகையை அடைந்தார்.

தொண்டைநாட்டுத் தல யாத்திரை :

ஞானசம்பந்தர் கச்சித்திருஏகம்பப் பெருமானை வழிபடும் கருத்தினராய்ச் சீகாழியிலிருந்து புறப்பட்டுத் தில்லை சென்று ஆனந்தக் கூத்தனைப் பணிந்து மாணிகுழி, பாதிரிப் புலியூர், வுடுகூர், வக்கரை இரும்பை மாகாளம் முதலிய தலங்களை வணங்கித் திருவதிகை வீரட்டம் தொழுது போற்றிக் கோவலூர் அறையணி நல்லூர் ஆகிய தலங்களை வணங்கி அண்ணாமலை சென்றடைந்தார். உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனை வணங்கிப் பதிகங்கள் பாடி திருஒத்தூர் அடைந்து இறைவனைப் போற்றினார். சிவனடியார் ஒருவர் அடியவர்க்கெனத் தான் வளர்த்த பனைகள் அனைத்தும் ஆண்பனைகளாக இருத்தலையும் சமணர்கள் சிலர் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா? என ஏளனமாகக் கேட்டதையும் ஞான சம்பந்தரிடம் கூற அவர் ஆலயம் சென்று வணங்கி, 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம் பாடிய அளவில் ஆண்பனைகளனைத்தும் பெண் பனைகளாய்க் குலையீன்றன. அடியவர் அதிசயித்தனர். சமணர்கள் பிழைபொறுக்க வேண்டியதோடு சைவ சமயத்தின் சிறப்பினை அறிந்து சைவ சமயத்திற்கு மதம் மாறி ஞானசம்பந்தரைப் போற்றினர்.

திருவோத்தூரிலிருந்து புறப்பட்டு ஞானசம்பந்தர் திருமாகறல் குரங்கணில் முட்டம் ஆகிய தலங்களை வணங்கிக் காஞ்சிபுரம் சென்றடைந்தார். க்ச்சி ஏகம்பம், காம கோட்டம் ஆகிய ஆலயங்களை வணங்கிக் கொண்டு அத்தலத்தின் அருகில் விளங்கும், ஆலயங்களைப் போற்றிக் காரைக்காலம்மையார் முத்திப் பேறு பெற்றருளிய திருவாலங்காட்டை வணங்கிப் போற்ற எண்ணினார். அம்மையார் தலையால் நடந்து வந்த அத்தலத்தை மிதித்தற்கு அஞ்சி அத்தலத்தின் மிதித்தற்கு அஞ்சி அத்தலத்தின் அருகில் உள்ளதொரு ஊரில் அன்றிரவு துயில் கொண்டார். ஆலங்காட்டு இறைவர் அவர் கனவில்

தோன்றி நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என்ன? உடனெழுந்து 'துஞ்சவருவாரும்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிப் போற்றினார். பின்னர் அவ்வூரை விட்டகன்று பாசூர் வெண்பாக்கம் காரிகரை ஆகிய தலங்களை வணங்கிக் கொண்டு காளத்தியை அடைந்தார். கண்ணப்பரின் பக்தித்திறம் போற்றிக் காளத்தி இறைவரைப் பணிந்து அங்குள்ள திருமடம் ஒன்றில் பலநாள் தங்கிப் பரவினார். அங்கிருந்தே வடதிசையிலுள்ள கயிலாயம், கேதாரம், திருப்பருப்பதம் முதலிய தலங்களைப் போற்றிப் பதிகங்கள் அருளினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருவேற்காடு பணிந்து திருவொற்றியூரை வந்தடைந்தார்.

எலும்பைப் பெண்ணாக்கியது :

மயிலாப்பூரில் வணிகர் குலத்தில் எல்லையில் செல்வம் உடையவராய் செம்மையே புரிமனத்தினராய் வணிகர் குலத்தில் சிவநேசன் என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சைவ சமயமே மெய்மைச் சமயம் என்பதை, அறிந்த பெரியவர். அவர் ஞானசம்பந்தரது பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பால் எல்லையில்லாத பேரன்புடையராயினார். அவருக்கு ஒரு பெண் மகவு இருந்தாள். அழகிற் சிறந்த அப்பெண்ணுக்குப் பூம்பாவை எனப் பெயரிட்டார். அப்பெண்ணும் மணப்பருவம் எய்திய நிலையில் இருந்தாள்.

ஞானசம்பந்தர் மதுரை சென்று பரசமயம் நிராகரித்துப் பாண்டி நாட்டில் சைவ சமயத்தை நிலைநிறுத்தி வந்த செய்தி கேட்டு 'என்னையும், என்மகளையும் என் செல்வத்தையும் அவருக்கே உடைமையாக்கினேன்?' என மொழிந்தார். இந்நிலையில் ஞானசம்பந்தருக்கு உரியள் என, சிவநேசர் மொழிந்திருந்த பூம்பாவை பூஞ்சோலையில் மலர் பறிக்கச் சென்றபோது அரவு தீண்டி இறந்தாள். சிவநேசர் மிக்வும் வருந்தியவராய் அப்பெண்ணை உயிருடன் ஒப்புவிக்கும் புண்ணியம் அமையவில்லை. ஆயினும் அவள் உடலைத் தகனம் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு மட்குடத்திலிட்டு, அதையேனும் ஒப்புவிப்போம் என்று பேணிவந்தார்.

ஞானசம்பந்தர் திருவொற்றியூர் வழிபாடு முடித்து மயிலாப்பூருக்கு எழுந்தருளும் செய்தி கேட்டு வரவேற்க எதிரே வந்தார். ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கிய அளவில் உடன் வந்த அடியார்கள் அவரை அறிமுகம் செய்ததோடு அவள் மகள் இறந்த செய்தியையும் அவரிடம் கூறினர்.

ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளி வழிபாடாற்றிப் புறத்தே போந்தவர் சிவநேசரை அழைத்து அவர் மகளின் என்பு நிறைந்த குடத்தினை எடுத்து வரச் செய்து அக்குடத்தை இறைவன் திருமுன்னே வைக்கச் செய்து 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் எய்பது உண்மையாயின் உலகவர் முன் இப்பூம்பாவை உயிர் பெற்று எழுந்து வருவாளாக' எனக்கூறி இறைவனை வேண்டிப் பூம்பாவைத் திருப்பதிகமாகிய 'மட்டிட்ட புன்னை' எனத் திருப்பதிகம் தொடங்கிப் பத்தாவது பாடல் பாடிய அளவில் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போல அப்பெண் உலகவர் வியக்க உயிர் பெற்றுக் குடம் உடைய வெளிப்பட்டு ஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். ஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் பதினொன்றாவது பாடலைப் பாடி நிறைவு செய்தார். சிவநேசர் ஞானசம்பந்தரை வணங்கித் திருவருளைப் போற்றினார். தன் திருமகளைத் திருமணம் புரிந்து ஏற்றருள வேண்டுமென வேண்டினார். ஞானசம்பந்தர் மறை நெறிமரபை அவருக்கு உணர்த்தியதோடு பூம்பாவையை யாம் மீண்டும் உயிர்ப்பித்தோம் ஆதலின் அவள் எமக்கு மகளாவாள் எனக்கூறிய அளவில் சிவநேசர் மனத் தெளிவுற்று அப்பெண்ணை வேறொருவர்க்கு மணம் முடிக்க மனமின்றிக் கன்னிமாடத்தே இருக்கச்செய்தார். பின்னர் பூம்பாவையும் சிவன் அருளையே சிந்தித்துச் சிவனடி கூடினார்.

பின்னர் ஞானசம்பந்தர் மயிலாப்பூரினின்றும் புறப்பட்டுத் திருவான்மியூர், இடைச்சுரம், திருக்கழுக்குன்றம் முதலான தலங்களை வணங்கிக் கொண்டு தில்லையை அடைந்து திருச்சிற்றம்பலம் உடையானைப் போற்றிச் சீகாழிக்கு எழுந்தருளிப் பிரமபுரத்துப் பெருமானைப் போற்றித் தம் திருமாளிகையை அடைந்தார். இது ஞானசம்பந்தரின் ஆறாவது தல யாத்திரையாகும்.

திருமணம் :

ஞானசம்பந்தரைக் காணும் பெருவேட்கையில் முருக நாயனாரும் நீலநக்க நாயனாரும் சீகாழி வந்தனர். சிவபாத இருதயரும் சுற்றத்தாரும் ஞானசம்பந்தர் புண்ணியப் பதினாறு ஆண்டு எய்திய நிலையினராய் இருத்தலை எண்ணி அவரை அணுகி மறை நெறிப்படி வேள்வி செய்ய ஒருகன்னியைத் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என வேண்டினர். ஞானசம்பந்தர் முதலில் மறுத்தார். ஆயினும் திருவருளை

நினைந்து மறைவாழவும் அந்நெறியின் துறைவாழவும் திருமணத்திற்கு இசைவு தெரிவித்தார்.

சிவபாத இருதயர் திருநல்லூரில் வாழும் நம்பாண்டார் என்பாரின் மகளை மணம் பேசி நிச்சயித்தார். நல்லூர் மணவிழா வினால் பொலிவு பெற்றது. ஞானசம்பந்தர் உரிய நாளில் தோணிபுரத்தில் பெரிய நாயகியாருடன் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கிச் சிவிகைமீது அமர்ந்து அடியவர்கள் உறவினர்கள் உடன் வரத் திருநல்லூரை அடைந்தார். அங்கு விளங்கும் பெருமணம் என்னும் கோயிலை அடைந்து சிவபிரானைப் பணிந்து போற்றினார். உறவினர்கள் வேண்டக் கோயிலின் பக்கத்தே அமைந்த திருமடத்தில் திரு மஞ்சனமாடித் திருமணக் கோலம் பூண்டு திருமணச் சாலைக்கு எழுந்தருளினார். நம்பாண்டார் நம்பியும் அவரது துணைவியாரும் அவரைப் பொற்பீடத்தில் இருத்தித் திருவடிகளைத் தூய நீரால் விளக்கி அந்நன்னீரை உட்கொண்டு அனைவர் மேலும் தெளித்து, ஞான சம்பந்தரை நோக்கி 'யான் பெற்ற அருநிதிப் பாவையை ஆளுடைய பிள்ளையார்க்கு அளித்தேன்' என உரைத்தார். மங்கல மகளிர் மணப் பெண்ணை அழைத்து வந்து ஞானசம்பந்தரின் வலப்பால் அமரச் செய்தனர். திருநீலநக்க நாயனார் வேத விதிப்படி திருமணச் சடங்குகளை நிகழ்த்தினார். ஞானசம்பந்தர் காதலியாரைக் கைப்பற்றித் தீவலம் வரும்போது 'விருப்புறும் அங்கியாவார் விடை உயர்த்தவரே' என்னும் நினைவினராய் 'இருவினைக்கு வித்தாகிய இந்த இல்லறம் நம்மைச் சூழ்ந்து கொண்டதே இனி இவளோடும் அந்தமில் சிவன் தாளை அடைவோம்' என உறுதி கொண்டு திருப்பெருமணக் கோயிலை அடைந்தார். இறைவன் திருமுன் நின்று 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' எனத் தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்தார். அப்போது சிவபெருமான் தூய சோதிப் பிழம்பாய்த் தோன்றி நின்று 'ஞானசம்பந்தனே நீயும் நின் மனைவியும் திருமணம் காணவந் தோரும் இச்சோதியினுள்ளே வந்து சேர்மின்' எனக் கூறி அதனுள்ளே புகுதற்கு வாயிலையும் காட்டி நின்றார். ஞானசம்பந்தர் 'இம்மண விழாக் காண வந்தோர் அனைவரும் இச்சோதியுட் புகுமின்' எனக் கூறி 'காதலாகி' எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் அருளி நின்றார். திருநீல நக்கர் முருக நாயனார் சிவபாத இருதயர் நம்பாண்டார் நம்பி திருநீலகண்டப் பெரும்பாணர் முதலானோர் தத்தம் துணைவியாருடன் சிவசோதியுட் புகுந்தார்கள். ஆளுடைய பிள்ளையாரைத் தொடர்ந்து வந்த அடியவர் பரிசனங்கள், அருந்தவ முனிவர்கள் முதலிய

அனைவரும் சிவசோதியுட் புகுந்த பின் திருஞானசம்பந்தர் தம் காதலியாரைக் கைப்பிடித்து இறைவனது எழில்வளர் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து பெருமானோடு ஒன்றி உடனானார்.

"காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலம் செய்தருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்".

அச்சோதி மறைய பெருமணக் கோயில் முன்போல அமைந்தது. அனைவர்க்கும் சிவலோகம் வழங்கிய பெருமானை அன்பர்கள் சிவலோகத்தியாகர் எனப் போற்றினர்.

காலம் :

திருஞானசம்பந்தர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழகத்தே வாழ்ந்த திருவருட் செல்வராவார் என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஒப்ப முடிந்த உண்மையாகும்.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சம காலத்தவர் என்பது அவர் தம் வரலாறுகளால் நன்கினிது விளங்கும். திருநாவுக்கரசர் காலத்தில் குணபரன் என்ற சிறப்புப் பெயரோடு வாழ்ந்த பல்லவன் மகேந்திர வர்மன் ஆவான். இவன் காலம் கி.பி. 600 முதல் 630 வரை ஆகும். திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களில் சிறுத் தொண்டர் என்னும் பரஞ்சோதியார் மகேந்திரவர்மனின் புதல்வனான நரசிம்மவர்மப் பல்லவன் காலத்தில் படைத் தளபதியாயிருந்து சாளுக்கியரோடு வாதாபியில் நிகழ்த்திய போரில் வெற்றி கண்டவர். அதன் பின்னரே அவர் திருச்செங்காட்டங்குடி சென்று சிவனடித் தொண்டு பூண்டு அடியவராக விளங்கினார். நரசிம்மவர்மன் வாதாபிப் போர் நிகழ்த்திய காலம் கி.பி. 642 ஆகும்.

திருஞானசம்பந்தரால் வெப்பு நோய் தவிர்த்தருளப் பெற்ற பாண்டிய மன்னன் நெடுமாறன் மாறவர்மன் அரிகேசரி என்ற பெயருடையவன். மங்கையர்க்கரசியாரின் மணாளனாக விளங்கிய இம்மன்னன் காலம் கி.பி. 640–670. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு எண்ணுங் கால் திருஞானசம்பந்தரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியேயாகும் என்பதை ஐயம் இன்றித் துணியலாம்.

திருத்தலங்கள் – திருப்பதிகங்கள்

(தலமுறை வரிசையில்)

உ

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிய

திருக்கடைக்காப்பு திருப்பதிகங்கள்

1. திருத்தில்லை

திருமுறை 1/80 இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி பண் : குறிஞ்சி

இறைவன் : கூத்தப்பிரான், சபாநாயகர் இறைவி : சிவகாமியம்மை

கற்றாங்கு எரிஓம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரிஓம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே 2

மையார் ஒண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையால் பந்தோச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம்பலம்தானே 3

நிறைவெண் கொடிமாடம் நெற்றி நேர்தீண்டப்
பிறைவந்து இறைதாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறைவண்டு அறைஓவாச் சிற்றம்பலம் மேய
இறைவன் கழல்ஏத்தும் இன்பம் இன்பமே. 4

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாம்
திருமாந் திலலையுள் சிற்றம்பலம் மேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்துஎம்
பெருமான் கழல்அல்லால் பேணாது உள்ளமே. 6

அலையார் புனல்சூடி ஆகத்து ஒருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயிலெய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலை ஆனார்களே. 7

கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே. 8

கோணா கணையானும் குளிர் தாமரையானும்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம்பலம் ஏத்த
மாணா நோய்எல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம்பலம் மேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே. 10

ஞாலத்து உயர்காழி ஞான சம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தால் பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (கற்றாங்கெரியோம்)

முத்தமிழ் விரகராய பிள்ளையார் தெய்வ நாயகரது திருத்தில்லை எல்லையை அடைந்து, திருவுடையந்தணர் மூவாயிரவரும் அன்பர்களுடன் ஈண்டி எங்கு மங்கலஅணி மிக அலங்கரித்து எதிர்கொளச் சென்று, திருவீதியைத் தொழுது, எழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந்து, திருமுன்றில் திருமாளிகையை வலங்கொண்டு, மறை தொடர்வரும் மன்றினைச் சேர்ந்து திருவணுக்கன் றிருவாயிலி னெய்தி உள்புக்குத் தம்முண்ணிறைந்த ஞானத்தெழும் ஆனந்த வொரு பெருந் தனிக் கூத்தரைக் கண்டு கும்பிட்டெழுங் களிப்போடு ஊழிமுதல்வர்க்கு உரிமைத் தொழிற் சிறப்பால் வாழி திருத்தில்லைவாழ் அழந்தணரை முன்வைத்து ஏழிசையும் ஓங்குமாறு ‘கற்றாங் கெரியோம்பி’ என எடுத்துப் பாடிப் போற்றினார்.

2. திருத்தில்லை

திருமுறை 3/1 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்
இறைவன் : கூத்தப்பிரான், சபாநாயகர் இறைவி : சிவகாமியம்மை

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடு பல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம் தொல்வினையே 1

கொட்டமே கமழும் குழலாளொடு
கூடினாய் எருது ஏறினாய் நுதல்
பட்டமே புனைவாய் இசை பாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை
நல்லவர் பிரியாத சிற்றம்பலம்
இட்டமா உறைவாய் இவை மேவியது என்னைகொலோ. 2

நீலத்தார் கரியமிடற்றார் நல்ல
நெற்றி மேல்உற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறு அணிவார் சடையார்
சீலத்தார் தொழுது ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழல் சேவடி கைதொழக்
கோலத்தாய் அருளாய் உனகாரணம் கூறுதுமே 3

கொம்பலைத்து அழகு எய்திய நுண்ணிடைக்
கோலவாள்மதி போல முகத்து இரண்டு
அம்பலைத்த கண்ணாள் முலை மேவிய வார்சடையான்
கம்பலைத்து எழு காமுறு காளையர்
காதலால் கழல் சேவடி கைதொழ
அம்பலத்து உறைவான் அடியார்க்கு அடையாவினையே 4

தொல்லையார் அமுது உண்ண நஞ்சு உண்டது ஓர்
தூமணி மிடறா பகுவாயது ஓர்
பல்லையார் தலையில் பலியேற்று உழல் பண்டரங்கா
தில்லையார் தொழுது ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழல்சேவடி கைதொழ
இல்லையாம் வினைதான் எரிய மதில் எய்தவனே 5

ஆகம்தோய்அணி கொன்றையாய் அனல்
அங்கையாய் அமரர்க்கு அமரா உமை
பாகம்தோய் பகவா பலியேற்று உழல் பண்டரங்கா
மாகம்தோய் பொழில் மல்குசிற்றம்பலம்
மன்னினாய் மழுவாளினாய் அழல்
நாகம் தோய் அரையாய் அடியாரை நண்ணா வினையே 6

சாதியார் பளிங்கினொடு வெள்ளிய
சங்கவார் குழையாய் திகழப்படும்
வேதியா விகிர்தா விழவார் அணி தில்லைதன்னுள்
ஆதியாய்க்கு இடம் ஆய சிற்றம்பலம்
அம்கையால் தொழ வல் அடியார்களை
வாதியாது அகலும் நலியாமலி தீவினையே 7

வேயினார் பணைத் தோளியொடு ஆடலை
வேண்டினாய் விகிர்தா உயிர்கட்கு அமுது
ஆயினாய் இடுகாட்டு எரிஆடல் அமர்ந்தவனே
தீயினார் கணையால் புரம் மூன்று எய்த
செம்மையாய் திகழ்கின்ற சிற்றம்பலம்
மேவினாய் கழலே தொழுது எய்துதும் மேல்உலகே 8

தாரினார் விரி கொன்றையாய் மதி
தாங்கு நீள் சடையாய் தலைவா நல்ல
தேரினார் மறுகின் திருஆர் அணி தில்லைதன்னுள்
சீரினால் வழிபாடு ஒழியாதது ஓர்
செம்மையால் அழகாய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உன் சீர் அடி ஏத்துதுமே 9

வெற்று அரை உழல்வார் துவர் ஆடைய
வேடத்தார் அவர்கள் உரை கொள்ளன்மின்
மற்றவர் உலகின் அவலம் அவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுது ஏத்து சிற்றம்பலம்
காதலால் கழல்சேவடி கைதொழ
உற்றவர் உலகின் உறுதிகொள வல்லவரே 10

நாறுபூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து
ஈசனை இசையால் சொன்ன பத்து இவை
கூறும் ஆறு வல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே 11

பதிக வரலாறு : (ஆடினாய்நறு நெய்யொடுபாற)

திருவளர் திருச்சிற்றம்பலம் தொழுது வணங்கிப் பாடிய பிள்ளையார் இரவிலே அத்தலத்தில் தங்கியிருத்தற்கஞ்சித் திருவேட்களத்தில் எழுந்தருளியிருந்து, அதனையும், திருநெல்வாயில் திருக்கழிப்பாலை என்னுந் தலங்களையும் வழிபட்டு, திருவுடை அந்தணர் மூவாயிரவர் இறைவரது திருவடிக்கு மிகஅணுக்கராயிருக்கும் பேற்றினை எண்ணி அதிசயித்து மீண்டும் எழுந்தருள்வாராயினார். அதனையறிந்த தில்லைவாழந்தணரும் எதிரேவந்து அவர் வணங்குமுன் அவரைத் தாம் வணங்கினார். இறைவனது திருவருளால் அவர் யாவரும் சிவகணநாதராய்த் தோன்றப் பிள்ளையார் அதனைக் கண்டு வணங்கி அதனைத் தம்முடன் வரும் திருப்பெரும்பாணருக்குங் காட்டியருளினார். பிறகு மன்று நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தர் எதிர் சென்றணைந்து வணங்கிப் பாடுவார் 'ஆடினாய் நறுநெய்' என்றெடுத்து அதன் மூன்றாந் திருப்பாட்டில் "நீலத்தார் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேலுற்ற கண்ணினார் பற்றுசூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார் சீலத்தார்" என்று தாம் கண்டருளிய திருஅடையாளங்களால் அலவரைச் சிறப்பித்து அவர் தொழுதேத்து சிற்றம்பலமென வைத்து வணங்கினார்.

திருச்சிற்றம்பலம்



3. திருவேட்களம்

திருமுறை 1/39 இராகம் : காம்போதி பண் : தக்கராகம்
இறைவன் : பாசுபதேசுவரர் இறைவி : நல்லநாயகி

அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
ஆரழல் அங்கை அமர்ந்துஇலங்க
மந்த முழவம் இயம்ப
மலைமகள் காண நின்று ஆடிச்
சந்தம் இலங்கு நகுதலை கங்கை
தண்மதியம் அயலே ததும்ப
வெந்தவெண் நீறு மெய் பூசும்
வேட்கள நன் நகராரே 1

சடைதனைத் தாழ்தலும் ஏற முடித்துச்
சங்கவெண் தோடு சரிந்துஇலங்கப்
புடைதனில் பாரிடம் சூழப்
போதரு மாறுஇவர் போல்வார்
உடைதனில் நால்விரல் கோவண ஆடை
உண்பதும் ஊரிடு பிச்சைவெள்ளை
விடைதனை ஊர்தி நயந்தார்
வேட்கள நன் நகராரே 2

பூதமும் பல்கணமும் புடைசூழப்
பூமியும் விண்ணும் உடன்பொருந்தச்
சீதமும் வெம்மையும் ஆகிச்
சீரொடு நின்றஎம் செல்வர்
ஓதமும் கானலும் சூழ்தரு வேலை
உள்ளம் கலந்து இசையால் எழுந்த
வேதமும் வேள்வியும் ஓவா
வேட்கள நன் நகராரே 3

அரைபுல்கும் ஐந்தலை ஆடல் அரவம்
அமையவெண் கோவணத்தோடு அசைத்து
வரைபுல்கு மார்பில் ஓர்ஆமை
வாங்கி அணிந்தவர் தாம்
திரைபுல்கு தெண்கடல் தண்கழி ஓதம்
தேன் நல் அம் கானலில் வண்டுபண்செய்ய
விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன் நகராரே 4

பண்உறு வண்டுஅறை கொன்றை அலங்கல்
பால்புரை நீறு வெண்ணூல் கிடந்த
பெண்ணுறு மார்பினர் பேணார்
மும்மதில் எய்த பெருமான்
கண்ணுறு நெற்றி கலந்தவெண் திங்கள்
கண்ணியர் விண்ணவர் கைதொழுது ஏத்தும்
வெண்ணிற மால்விடை அண்ணல்
வேட்கள நன் நகராரே 5

கறிவளர் குன்றம் எடுத்தவன் காதல்
கண்கவர் ஐங்கணையோன் உடலம்
பொறிவளர் ஆரழல் உண்ணப்
பொங்கிய பூத புராணர்
மறிவளர் அங்கையர் மங்கையொர் பங்கர்
மைஞ்ஞிற மான்உரி தோல்உடை ஆடை
வெறிவளர் கொன்றையம் தாரார்
வேட்கள நன் நகராரே 6

மண்பொடிக்கொண்டு எரித்து ஓர் சுடலை
மாமலை வேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச் சேரநின்று ஆடி
நொய்யன செய்யல் உகந்தார்
கண்பொடி வெண்தலை ஓடுகை ஏந்திக்
காலனைக் காலால் கடிந்துஉகந்தார்
வெண்பொடிச் சேர் திருமார்பர்
வேட்கள நன் நகராரே 7

ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்
அமுதம் அமரர்க்கு அருளிச்
சூழ்தரு பாம்புஅரை ஆர்த்துச்
சூலமோடு ஒண்மழு ஏந்தித்
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தண்மதியம் அயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்
வேட்கள நன் நகராரே 8

திருஒளி காணிய பேதுறுகின்ற
திசை முகனும் திசை மேல்அளந்த
கருவரை ஏந்திய மாலும்
கைதொழ நின்றதும் அல்லால்
அருவரை ஒல்க எடுத்த அரக்கன்
ஆடுஎழில் தோள்கள் ஆழத்துஅழுந்த
வெருவுற ஊன்றிய பெம்மான்
வேட்கள நன் நகராரே 9

அத்தம் மண் தோய் துவரார் அமண் குண்டர்
யாதும் அல்லா உரையே உரைத்துப்
பொய்த்தவம் பேசுவது அல்லால்
புறனுரை யாதுஒன்றும் கொள்ளேல்
முத்தன வெண்முறுவல் உமை அஞ்ச
மூரிவல் ஆனையின் ஈருரிபோர்த்த
வித்தகர் வேத முதல்வர்
வேட்கள நன் நகராரே 10

விண்ணியல் மாடம் விளங்கொளி வீதி
வெண்கொடி எங்கும் விரிந்துஇலங்க
நண்ணிய சீர்வளர் காழி
நல்தமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணின் நல்லாள் ஒரு பாகம்அமர்ந்து
பேணிய வேட்களம் மேல்மொழிந்த
பண்ணியல் பாடல் வல்லார்கள்
பழியொடு பாவம் இலாரே 11

4. திருநெல்வாயில்

(திருவுச்சி)

திருமுறை 2/26 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்
இறைவன் : உச்சி நாதேசுவரர் இறைவி : கனகாம்பிகை

புடையினார் புள்ளி கால் பொருந்திய
மடையினார் மணிநீர் நெல்வாயிலார்
நடையின் நால்விரல் கோவணம் நயந்த
உடையினார் எமது உச்சியாரே 1

வாங்கினார் மதில் மேல்கணை வெள்ளம்
தாங்கினார் தலையாய தன்மையர்
நீங்கு நீர நெல்வாயிலார் தொழ
ஓங்கினார் எமது உச்சியாரே 2

நிச்சல் ஏத்தும் நெல்வாயிலார் தொழ
இச்சையால் உறைவார் எம் ஈசனார்
கச்சை ஆவது ஓர் பாம்பினார் கவின்
இச்சையார் எமது உச்சியாரே 3

மறையினார் மழுவாளினார் மல்கு
பிறையினார் பிறையோடு இலங்கிய
நிறையினார் நெல்வாயிலார் தொழும்
இறைவனார் எமது உச்சியாரே 4

விருத்தன் ஆகி வெண்நீறு பூசிய
கருத்தனார் கனல் ஆட்டு உகந்தவர்
நிருத்தனார் நெல்வாயில் மேவிய
ஒருத்தனார் எமது உச்சியாரே 5

காரினார் கொன்றைக் கண்ணியார் மல்கு
பேரினார் பிறையோடு இலங்கிய
நீரினார் நெல்வாயிலார் தொழும்
ஏரினார் எமது உச்சி யாரே 6

ஆதியார் அந்தம் ஆயினார் வினை
கோதியார் மதில் கூட்டு அழித்தவர்
நீதியார் நெல்வாயிலார் மறை
ஓதியார் எமது உச்சியாரே 7

பற்றினான் அரக்கன் கயிலையை
ஒற்றினார் ஒருகால் விரல் உற
நெற்றியார் நெல்வாயிலார் தொழும்
பெற்றியார் எமது உச்சியாரே 8

நாடினார் மணிவண்ணன் நான்முகன்
கூடினார் குறுகாத கொள்கையர்
நீடினார் நெல்வாயிலார் தலை
ஓடினார் எமது உச்சியாரே 9

குண்டுஅமண் துவர்க்கூறை மூடர்சொல்
பண்டம் ஆக வையாத பண்பினர்
விண் தயங்கு நெல்வாயிலார் நஞ்சை
உண்ட கண்டர் எம் உச்சியாரே 10

நெண்பு அயங்கு நெல்வாயில் ஈசனைச்
சண்பை ஞானசம்பந்தன் சொல்இவை
பண் பயன்கொளப் பாட வல்லவர்
விண் பயன்கொளும் வேட்கை ஆளரே 11

5. திருக்கழிப்பாலை

திருமுறை 2/21 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்
இறைவன் : பால்வண்ணநாதர் இறைவி : வேத நாயகி

புனல் ஆடியபுன் சடையாய் அரணம்
அனல் ஆக விழித்தவனே அழகார்
கனல் ஆடலினாய் கழிப்பாலை உளாய்
உனவார் கழல் கைதொழுது உள்குதுமே. 1

துணையாக ஓர் தூ வள மாதினையும்
இணையாக உகந்தவனை இறைவா
கணையால் எயில்எய் கழிப்பாலை உளாய்
இணையார் கழலேத்த இடர் கெடுமே. 2

நெடியாய் குறியாய் நிமிர்புன் சடையின்
முடியாய் சுடுவெண் பொடிமுற்று அணிவாய்
கடியார் பொழில்சூழ் கழிப்பாலை உளாய்
அடியார்க்கு அடையா அவலம் அவையே. 3

எளியாய் அரியாய் நிலம் நீரொடு தீ
வளி காயம் என வெளி மன்னிய தூ
ஒளியாய் உனையே தொழுது உள்ளுமவர்க்கு
அளியாய் கழிப்பாலை அமர்ந்தவனே 4

நடம் நண்ணி ஓர் நாகம் அசைத்தவனே
விடம் நண்ணிய தூ மிடறா விகிர்தா
கடல் நண்ணு கழிப்பதி காவலனை
உடல் நண்ணி வணங்குவன் உன் அடியே. 5

பிறையாய் சடையாய் பெரியாய் பெரிய
மறையாய் தரு வாய்மையினாய் உலகில்
கறையாய் பொழில்சூழ் கழிப்பாலை உளாய்
இறையார் கழலேத்த இடர் கெடுமே. 6

முதிரும் சடையின் முடிமெல் விளங்கும்
கதிர்வெண் பிறையாய் கழிப்பாலை உளாய்
எதிர்கொள் மொழியால் இரந்தேத்தும் அவர்க்கு
அதிரும் வினையாயின ஆசறுமே. 7

எரியாய் கணையால் எயில் எய்தவனே
விரியார் தருவீழ் சடையாய் இரவில்
கரி காடலினாய் கழிப்பாலை உளாய்
உரிது ஆகி வணங்குவன் உன் அடியே. 8

நல நாரணன் நான்முகன் நண்ணல் உற
கனல் ஆனவனே கழிப்பாலை உளாய்
உன வார் கழலே தொழுது உன்னுமவர்க்கு
இலதுஆம் வினைதான் எயில் எய்தவனே. 9

தவர் கொண்ட தொழில் சமண் வேடரொடும்
துவர் கொண்டன நுண்துகில் ஆடையரும்
அவர் கொண்டன விட்டு அடிகள் உறையும்
உவர்கொண்ட கழிப்பதி உள்குதுமே. 10

கழியார் பதி காவலனைப் புகலிப்
பழியா மறை ஞானசம்பந்தன சொல்
வழிகாடு இவைகொண்டு அடிவாழ்த்த வல்லார்
கெழியார் இமையோரொடு கேடுஇலரே. 11

6. திருக்கழிப்பாலை

திருமுறை 3/44 இராகம் : பைரவி பண் : கௌசிகம்
இறைவன் : பால்வண்ணநாதர் இறைவி : வேதநாயகி

வெந்த குங்குலியப் புகை விம்மவே
கந்தம் நின்று உலவும் கழிப் பாலையார்
அந்தமும் அளவும் அறியாதது ஓர்
சந்தமால் அவர் மேவிய சந்தமே. 1

வான் இலங்க விளங்கும் இளம்பிறை
தான் அலங்கல் உகந்த தலைவனார்
கான் அலங்க வரும்கழிப் பாலையார்
மான் நலம் மடநோக்கு உடையாளொடே. 2

கொடிகொள் ஏற்றினர் கூற்றை உதைத்தனர்
பொடிகொள் மார்பினில் பூண்டதோர் ஆமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன ஆர்க்கு அறிவு ஒண்ணுமே. 3

பண் நலம்பட வண்டறை கொன்றையின்
தண் அலங்கல் உகந்த தலைவனார்
கண் நலம் கவரும் கழிப்பாலையுள்
அண்ணல் எம்கடவுள் அவன் அல்லனே. 4

ஏரினார் உலகத்து இமையோரொடும்
பாரினார் உடனே பரவப்படும்
காரினர் பொழில் சூழ் கழிப்பாலை எம்
சீரினார் கழலே சிந்தை செய்ம்மினே. 5

துள்ளும் மான்மறி அங்கையில் ஏந்திஊர்
கொள்வனார் இடு வெண்தலையில் பலி
கள்வனார் உறையும் கழிப்பாலையை
உள்ளுவார் வினையாயின ஓயுமே. 6

மண்ணினார் மலி செல்வமும் வானமும்
எண்ணி நீர்இனிது ஏத்துமின் பாகமும்
பெண்ணினார் பிறை நெற்றியொடு உற்ற முக்
கண்ணினார் உறையும் கழிப்பாலையே. 7

இலங்கை மன்னனை ஈரைந்து இரட்டிதோள்
துலங்க ஊன்றிய தூமழு வாளினார்
கலங்கள் வந்து உலவும் கழிப்பாலையை
வலம் கொள்வார் வினை ஆயின மாயுமே. 8

ஆட்சியால் அலரானொடு மாலுமாய்த்
தாட்சியால் அறியாது தளர்ந்தனர்
காட்சியால் அறியான் கழிப்பாலையை
மாட்சியால் தொழுவார் வினை மாயுமே 9

செய்ய நுண் துவர் ஆடையினாரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறுஇலாக்
கையர் கேண்மை எனோ கழிப்பாலை எம்
ஐயன் சேவடியே அடைந்து உய்ம்மினே 10

அந்தண் காழி அருமறை ஞானசம்
பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தையால் சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வான்உலகு ஆடல் முறைமையே. 11

7. திருநல்லூர்ப் பெருமணம்

திருமுறை 3/49 இராகம் : பைரவி பண் : கௌசிகம்
இறைவன் : சிவலோகத்தியாகர் இறைவி : உமையம்மை

காதல் ஆகிக் கசிந்துகண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம்உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே 2

நெக்கு உள்ஆர்வம் மிகப்பெருகிந் நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமம்தான் நினைவார்க்கு இனியான்நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே 4

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே 5

மந்தரம்மன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலம்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலம்கொள் நாமம் நமச்சிவாயவே 8

போதன் போதுஅன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே 9

கஞ்சி மண்டையர் கையில்உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சு உண் கண்டன் நமச்சிவாயவே 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன்சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
ப்ந்த பாசம் அறுக்க வல்லார்களே 11

பதிக வரலாறு : (காதலாகிக் கசிந்து)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநல்லூர்ப் பெருமணத்தை அடைந்து திருமணச்சடங்குகளைச் செய்தருளும்போது பொரியிட்டு எரிவலம் செய்யவேண்டிய சமையம் வர, அவர், எரியாவார் இறைவரன்றோ என்று தம்மனைவியைப் பற்றிக்கொண்டு சுற்றத்தோடும் திருக்கூட்டத்தோடும் திருக்கோயிலை அடைந்து இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே, இவ்வென் மனைவியோடும் அந்தமில் சிவன்றாள் சேர்வன் என்றெண்ணி இறைவனை நோக்கிப் பவமற முன்னாள் என்னையாண்ட பண்பினுக்கேற்ப இந்நாள் உமது நவமலர்ப் பாதங்கூட்டி அருளுமென்று விண்ணப்பித்துக் 'கல்லூர்ப் பெருமணம்' என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். இதனைக் கேட்ட இறைவர் திருவருள் புரிந்து நீயும் உன் மனைவியும் உனது புண்ணிய மணத்தில் வந்தவர்களோடும் எமது சோதியினண்ணுவீராக என்று தாம் மூவுலகும் தமது ஞானவொளிப்பிழம்பால் விளங்குமாறு திப்பிய சோதியி லிங்காமாய்த் தோன்றித் திருக்கேயிலுந் தமதொளியி லடங்குமாறு மேலோங்கித் தம்முள் ஒரு வாயிலை வகுத்துக் காட்டி அருளினார். அதனைக் கண்ட பிள்ளையார் அருளிச்செய்வாராய் இந்நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடி இம்மணத்தில் வந்தவர் யாவருந் தமது இழிந்த பிறவி தீரும்படி இதனுட்புகக் கடவீர் என்று அருளிச் செய்தார். அப்போது திருமணத்தைச் சேவிக்க வந்தவரும், திருநீலநக்க நாயனார், முருக நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய திருத் தொண்டர்களும், சிவபாதவிருதயர், நம்பியாண்டார் நம்பி முதலிய சுற்றத்தவர்களும், மற்றும் பிறரும் தத்தம் பன்னியர்களோடும் அச்சோதியிற் புகுந்தார்கள். எல்லாரும் புகுந்ததற்பின் பிள்ளையார் தம்முடைய பன்னியைக் கைப் பற்றிக் கொண்டு அச்சோதியை வலம்வந்து அதனுள்ளே புகுந்து சிவபிரானோடு கலந்து ஒன்றானார்.

8. திருநல்லூரர்ப் பெருமணம்

திருமுறை 3/125 இராகம் : சாமாராகம் பண் : அந்தாளிக்குறிஞ்சி
இறைவன் : சிவலோகத்தியாகர் இறைவி : உமையம்மை

கல் ஊர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்ஊர்ப் பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில
சொல் ஊர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே 1

தரு மணல் ஓதம் சேர் தண்கடல் நித்திலம்
பரு மணலாக் கொண்டு பாவைநல்லார்கள்
வரும் மணம் கூட்டி மணம் செயும் நல்லூர்ப்
பெருமணத்தான் பெண் ஓர்பாகம் கொண்டானே. 2

அன்புஉறு சிந்தையராகி அடியவர்
நன்புஉறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று
இன்புஉறும் எந்தை இணைஅடி ஏத்துவார்
துன்புஉறுவார் அல்லர் தொண்டு செய்வாரே. 3
வல்லியந்தோல் உடை ஆர்ப்பது போர்ப்பது
கொல் இயல் வேழத்து உரி விரி கோவணம்
நல் இயலார் தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கை எம் புண்ணியனார்க்கே. 4

ஏறு உகந்தீர் இடுகாட்டு எரிஆடி வெண்
நீறு உகந்தீர் நிரை ஆர் விரி தேன்கொன்றை
நாறு உகந்தீர் திரு நல்லூர்ப் பெருமணம்
வேறு உகந்தீர் உமை கூறு உகந்தீரே 5

சிட்டப்பட்டார்க்கு எளியான் செங்கண் வேட்டுவப்
பட்டம் கட்டும் சென்னியான் பதியாவது
நட்டக்கொட்டு ஆட்டுஅறா நல்லூர்ப் பெருமணத்து
இட்டப்பட்டால் ஒத்திரால் எம்பிரானிரே 6

மேகத்த கண்டன் எண்தோளன் வெண்நீற்று உமை
பாகத்தன் பாய் புலித்தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல
போகத்தன் யோகத்தையே புரிந்தானே 7

தக்கு இருந்தீர் அன்று தாளால் அரக்கனை
உக்கு இருந்து ஒல்க உயர்வரைக்கீழ் இட்டு
நக்கு இருந்தீர் இன்று நல்லூர்ப் பெருமணம்
புக்கு இருந்தீர் எமைப்போக்கு அருளீரே. 8

ஏலும் தண்தாமரையானும் இயல்பு உடை
மாலும் தம் மாண்பு அறிகின்றிலர் மாமறை
நாலும் தம் பாட்டு என்பர் நல்லூர்ப்பெருமணம்
போலும் தம் கோயில் புரிசடையார்க்கே. 9

ஆதர்அமணொடு சாக்கியர் தாம் சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குஉறுவீர் வம்மின்
நாதனை நல்லூர்ப்பெருமணம் மேவிய
வேதன தாள் தொழ வீடு எளிது ஆமே 10

நறும்பொழில் காழியுள் ஞானசம்பந்தன்
பெறும் பத நல்லூர்ப் பெருமணத்தானை
உறும் பொருளால் சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும் பழி பாவம் அவலம் இலரே. 11

9. திருமயேந்திர பள்ளி

திருமுறை 3/31 இராகம் : நவரோசு பண் : கொல்லி

இறைவன் : திருமேனியழகர் இறைவி : வடிவாம்பிகை

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயில்எய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை அழகனை அடிஇணை பணிமினே. 1

கொண்டல்சேர் கோபுரம் கோலமார் மாளிகை
கண்டலும் கைதையும் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
செண்டுசேர் விடையினான் திருந்தடி பணிமினே 2

கோங்கிள வேங்கையும் கொழுமலர்ப் புன்னையும்
தாங்குதேன் கொன்றையும் தகுமலர்க் குரவமும்
மாங் கரும்பும் வயல் மயேந்திரப் பள்ளியுள்
ஆங்கு இருந்தவன் கழல் அடியிணை பணிமினே 3

வங்கமார் சேணுயர் வரு குறியால் மிகு
சங்கமார் ஒலிஅகில் தருபுகை கமழ்தரும்
மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்
எங்கள் நாயகன் தனது இணையடி பணிமினே. 4

நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடடத்திகழ்ந்து இருந்தவன்
மைத்திகழ் கண்டன்நன் மயேந்திரப் பள்ளியுள்
கைத்தல மழுவனைக் கண்டுஅடி பணிமினே. 5

சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திரம் மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந்து உய்ம்மினே 6

சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடம்நவில் புரிவினன் நறவணி மலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப் பள்ளியுள்
அடல்விடை உடையவன் அடிபணிந்து உய்ம்மினே. 7

சிரம் ஒருபதும் உடைச் செருவலி அரக்கனை
கரம் இருபதும் இற கனவரை அடர்த்தவன்
மரவமர் பூம்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
அரவமர் சடையனை அடிபணிந்து உய்ம்மினே 8

நாகணைத் துயில்பவன் நலமிகு மலரவன்
ஆக அணைந்தவர் கழல் அணையவும் பெறுகிலர்
மாகு அணைந்து அலர்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
யோகுஅணைந்து அவன்கழல் உணர்ந்திருந்து உய்ம்மினே 9

உடை துறந்தவர்களும் உடைதுவர் உடையரும்
படுபழி உடையவர் பகர்வன விடுமின்நீர்
மடைவளர் வயல்அணி மயேந்திரப் பள்ளியுள்
இடம்உடை ஈசனை இணைஅடி பணிமினே. 10

வம்புலாம் பொழில்அணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழல்அடி ஞானசம்பந்தன் சொல்
நம்பரம் இது என நாவினால் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே. 11

10. தென்திருமுல்லைவாயில்

திருமுறை 2/88 இராகம் : நவரோசு பண் : பியந்தைக் காந்தாரம்
இறைவன் : முல்லைவனநாதர் இறைவி : கோதையம்மை

துளிமண்டி உண்டு நிறம்வந்த கண்டன்
நடம்மன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி உம்பர் உலகம் கடந்த
உமைபங்கன் எங்கள் அரன் ஊர்
களிமண்டு சோலை கழனிக் கலந்த
கமலங்கள் தங்கு மதுவில்
தெளிமண்டி உண்டு சிறைவண்டு பாடு
திருமுல்லை வாயில் இதுவே. 1

பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்
அயனைப் படைத்த பரமன்
அரவத் தொடுஅங்கம் அவைகட்டி எங்கும்
அரவிக்க நின்ற அரன் ஊர்
உருவத்தின் மிக்க ஒளிர்சங்கொடு இப்பி
அவைஓதம் மோத வெருவித்
தெருவத்தில் வந்து செழு முத்தலைக்கொள்
திருமுல்லை வாயில் இதுவே. 2

வாராத நாடன் வருவார்தம் வில்லின்
உருமெல்கி நாளும் உருகில்
ஆராத இன்பம் அகலாத அன்பன்
அருள்மேவி நின்ற அரன் ஊர்
பேராத சோதி பிரியாத மார்பின்
அலர்மேவு பேதை பிரியாள்
தீராத காதல் நெதிநேர நீடு
திருமுல்லை வாயில் இதுவே. 3

ஒன்று ஒன்றொடு ஒன்றும் ஒருநான்கொடு ஐந்தும்
இரு மூன்றோடு ஏழும் உடனாய்
அன்று இன்றொடு என்றும் அறிவானவர்க்கும்
அறியாமை நின்ற அரன் ஊர்
குன்று ஒன்றொடு ஒன்று குலை ஒன்றொடு ஒன்று
கொடி ஒன்றொடு ஒன்று குழுமிச்
சென்று ஒன்றொடு ஒன்று செறிவால் நிறைந்த
திருமுல்லை வாயில் இதுவே. 4

கொம்பன்ன மின்னின் இடையாள்ஓர் கூறன்
விடைநாளும் ஏறு குழகன்
நன்பன்எம் அன்பன் மறைநாவன் வானின்
மதிஏறு சென்னி அரன் ஊர்
அம்பன்ன ஒண் கணவர் ஆடு அரங்கின்
அணி கோபுரங்கள் அழகார்
செம்பொன்ன செவ்வி தருமாடம் நீடு
திருமுல்லை வாயில் இதுவே. 5

ஊன்ஏறு வேலின் உருவேறு கண்ணி
ஒளி ஏறு கொண்ட ஒருவன்
ஆன் ஏறு அது ஏறி அழகு ஏறும் நீறன்
அரவு ஏறு பூணும் அரன் ஊர்
மான்ஏறு கொல்லை மயில்ஏறி வந்து
குயில்ஏறு சோலை மருவித்
தேன்ஏறு மாவின் வளம் ஏறி ஆடு
திருமுல்லை வாயில் இதுவே. 6

நெஞ்சார நீடு நினைவாரை மூடு
வினைதேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன்
அனலாடு மேனி அரன் ஊர்
மஞ்சாரு மாட மனைதோறும் ஐயம்
உளதென்று வைகி வரினும்
செஞ்சாலி நெல்லின் வளர்சோறு அளிக்கொள்
திருமுல்லை வாயில் இதுவே. 7

வரைவந்து எடுத்த வலிவாள் அரக்கன்
முடிபத்தும் இற்று நெரிய
உரைவந்த பொன்னின் உருவந்த மேனி
உமைபங்கன் எங்கள் அரன் ஓர்
வரைவந்த சந்தொடு அகில்உந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரைவந்து வந்து செறிதேறல் ஆடு
திருமுல்லை வாயில் இதுவே. 8

மேலோடி நீடு விளையாடல் மேவு
விரிநூலன் வேத முதல்வன்
பாலாடு மேனி கரியானு முன்னி
அவர்தேட நின்ற பரன் ஊர்
காலாடு நீல மலர்துன்றி நின்ற
கதிரேறு செந்நெல் வயலில்
சேலோடு வாளை குதிகொள்ள மல்கு
திருமுல்லை வாயில் இதுவே 9

பனைமல்கு திண்கை மதமா உரித்த
பரமன்ன நம்பன் அடியே
நினைவு அன்ன சிந்தை அடையாத தேரர்
அமண்மாய நின்ற அரன் ஊர்
வனமல்கு கைதை வகுளங்கள் எங்கும்
முகுளங்கள் எங்கு நெரியச்
சினைமல்கு புன்னை திகழ்வாச நாறு
திருமுல்லை வாயில் இதுவே 10

அணிகொண்ட கோதை அவள்நன்றும் ஏத்த
அருள்செய்த எந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி
திருமுல்லை வாயில் இதன்மேல்
தணிகொண்ட சிந்தை அவர்காழி ஞான
மிகுபந்தன் ஒண் தமிழ்களின்
அணிகொண்ட பத்தும் இசைபாடு பத்தர்
அகல்வானம் ஆள்வர் மிகவே. 11

11. திருக்கலிக்காமூர்

திருமுறை 3/105 இராகம் : பைரவி பண் : பழம்பஞ்சுரம்
இறைவன் : சுந்தரேசர் இறைவி : அழகம்மை

மடல்வரை இல் மது விம்முசோலை வயல்சூழ்ந்து அழகாரும்
கடல்வரை ஓதம் கலந்து முத்தம் சொரியும் கலிக்காமூர்
உடல் வரையின் உயிர் வாழ்க்கைஆய ஒருவன் கழல் ஏத்த
இடர் தொடரா வினை ஆனசிந்தும் இறைவன் அருளாமே 1

மைவரைபோல் திரையோடு கூடிப் புடையே மலிந்து ஓதம்
கை வரையால் வளர்சங்கம் எங்கும் மிகுக்குங் கலிக்காமூர்
மெய்வரையான் மகள் பாகன்தன்னை விரும்ப உடல்வாழும்
ஐவரை ஆசறுத் தாளும்என்பர் அதுவும் சரதமே 2

தூவிய நீர்மலர் ஏந்திவையத்து அவர்கள் தொழுதேத்தக்
காவியின் நேர்விழி மாதர்என்றும் கவினார் கலிக்காமூர்
மேவிய ஈசனை எம்பிரானை விரும்பி வழிபட்டால்
ஆவியுள் நீங்கலன் ஆதிமூர்த்தி அமரர் பெருமானே. 3

குன்றுகள் போல்திரை உந்திஅந்தண் மணியார் தரமேதி
கன்று உடன் புல்கி ஆயம் மனைசூழ் கவினார் கலிக்காமூர்
என்றுஉணர் ஊழியும் வாழும்எந்தை பெருமான் அடிஏத்தி
நின்று உணர்வாரை நினையகில்லார் நீசர் நமன்தமரே. 4

வான்இடை வாண்மதி மாடம்தீண்ட மருங்கே கடல் ஓதம்
கான்இடை நீழலில் கண்டல்வாழும் கழிசூழ் கலிக்காமூர்
ஆன்இடை ஐந்து உகந்து ஆடினானை அமரர் தொழுது ஏத்த
நான் அடைவாம் வணம் அன்பு தந்த நலமே நினைவோமே 5

துறைவளர் கேதகை மீதுவாசம் சூழ்வான் மலிதென்றல்
கறை வளரும் கடல் ஓதம் என்றும் கலிக்கும் கலிக்காமூர்
மறை வளரும் பொருள் ஆயினானை மனத்தால் நினைந்துஏத்த
நிறை வளரும் புகழ் எய்தும்வாதை நினையா வினைபோமே 6

கோல நல்மேனியின் மாதர்மைந்தர் கொணர் மங்கலியத்தில்
காலமும் பொய்க்கினும் தாம் வழுவாது இயற்றுங் கலிக்காமூர்
ஞாலமும் தீவளி ஞாயிறு ஆய நம்பன் கழல்ஏத்தி
ஓலம் இடாதவர் ஊழியென்றும் உணர்வைத் துறந்தாரே 7

ஊர் அரவம் தலை நீள்முடியான் ஒலிநீர் உலகுஆண்டு
கார் அரவக்கடல் சூழவாழும் பதியாம் கலிக்காமூர்
தேர்அரவு அல்குல்அம் பேதைஅஞ்சத் திருந்து வரைபேர்த்தான்
ஆர் அரவம்பட வைத்தபாதம் உடையான் இடமாமே 8

அருவரை ஏந்திய மாலும்மற்றை அலர்மேல் உறைவானும்
இருவரும் அஞ்ச எரிஉருவாய் எழுந்தான் கலிக்காமூர்
ஒருவரையான்மகள் பாகன் தன்னை உணர்வால் தொழுதுஏத்தத்
திருமருவும் சிதைவு இல்லைச் செம்மைத் தேசு உண்டு அவர்பாலே. 9

மாசு பிறக்கிய மேனியாரும் மருவும் துவராடை
மீசு பிறக்கிய மெய்யினாரும் அறியார் அவர்தோற்றம்
காசினி நீர்த்திரள் மண்டிஎங்கும் வளமார் கலிக்காமூர்
ஈசனை எந்தைபிரானை ஏத்தி நினைவார் வினைபோமே 10

ஆழியுள் நஞ்சமுது ஆரவுண்டு அன்று அமரர்க்கு அமுதுண்ண
ஊழிதொறும் உளரா அளித்தான் உலகத்து உயர்கின்ற
காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன தமிழால் கலிக்காமூர்
வாழி எம்மானை வணங்கிஏத்த மருவா பிணிதானே 11

12. திருச்சாய்க்காடு

திருமுறை 2/38 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்
இறைவன் : சாயாவனேசுவரர் இறைவி : குயிலினும் நன்மொழியாள்

நித்தலும் நியமம் செய்துநீர் மலர்தூவிச்
சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன்கோயில்
மத்த யானையின் கோடும் வண்பீலியும் வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரம்மேவு சாய்க்காடே. 1

பண்தலைக் கொண்டு பூதங்கள் பாட நின்று ஆடும்
வெண்தலைக் கருங்காடு உறை வேதியன் கோயில்
கொண்டலைத் திகழ்பேரி முழங்கக் குலாவித்
தண்டலைத் தடம் மாமயில் ஆடு சாய்க்காடே 2

நாறு கூவிளம் நாகுஇளவெண்மதியத்தோடு
ஆறு சூடும் அமரர் பிரான் உறைகோயில்
ஊறு தேங்கனி மாங்கனி ஓங்கிய சோலைத்
தாறு தன் கதலிப் புதல்மேவு சாய்க்காடே 3

வரங்கள் வண்புகழ் மன்னிய எந்தை மருவார்
புரங்கள் மூன்றும் பொடிபட எய்தவன்கோயில்
இரங்கல் ஓசையும் ஈட்டிய சாத்தொடும் ஈண்டித்
தரங்கம்நீள் கழித் தண்கரை வைகு சாய்க்காடே 4

ஏழைமார் கடை தோறும் இடு பலிக்கென்று
கூழைவாள் அரவு ஆட்டும் பிரான் உறை கோயில்
மாழைஒண் கண்வளைக்கை நுளைச்சியர் வண்பூம்
தாழைவெண் மடல்கொய்து கொண்டாடு சாய்க்காடே 5

துங்கவானவர் சூழ் கடல் தாம் கடைபோதில்
அங்கொர் நீழல்அளித்த எம்மான் உறைகோயில்
வங்கம்அங்கு ஒளிர் இப்பியும் முத்தும் மணியும்
சங்கும் வாரித்தடம் கடல்உந்து சாய்க்காடே 6

வேத நாவினர் வெண்பளிங்கின் குழைக்காதர்
ஓதநஞ்சு அணி கண்டர் உகந்து உறைகோயில்
மாதர் வண்டு தன்காதல் வண்டுஆடிய புன்னைத்
தாதுகண்டு பொழில் மறைந்து ஊடு சாய்க்காடே 7

இருக்கும் நீள்வரை பற்றி அடர்த்து அன்றுஎடுத்த
அரக்கன் ஆகம்நெரித்து அருள்செய்தவன் கோயில்
மருக் குலாவிய மல்லிகை சண்பகம் வண்பூந்
தரு குலாவிய தண் பொழில்நீடு சாய்க்காடே. 8

மாலினோடு அயன் காண்டற்கு அரியவர் வாய்ந்த
வேலையார் விடம் உண்டவர் மேவிய கோயில்
சேலின்நேர் விழியார் மயில் ஆலச் செருந்தி
காலையே கனகம் மலர்கின்ற சாய்க்காடே 9

ஊத்தைவாய்ச் சமண் கையர்கள் சாக்கியர்க்கு என்றும்
ஆத்தம் ஆக அறிவு அரிது ஆயவன் கோயில்
வாய்த்த மாளிகை சூழ்தரு வண்புகார் மாடே
பூத்தவாவிகள் சூழ்ந்து பொலிந்த சாய்க்காடே 10

ஏனையோர் புகழ்ந்து ஏத்திய எந்தை சாய்க்காட்டை
ஞானசம்பந்தன் காழியர் கோன் நவில் பத்தும்
ஊனம் இன்றி உரைசெய வல்லவர்தாம் போய்
வானநாடு இனிதுஆள்வர் இம் மாநிலத்தோரே 11

13. திருச்சாய்க்காடு

திருமுறை 2/41 இராகம் : நாதநாமக்கிரியா பண் : சீகாமரம்

இறைவன் : சாயாவனேசுவரர் இறைவி : குயிலினும் நன்மொழியாள்

மண்புகார் வான்புகுவார் மனம்இளையார் பசியாலும்
கண்புகார் பிணிஅறியார் கற்றாரும் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டுஎம் தலைவன்தாள் சார்ந்தாரே 1

போய்க்காடே மறைந்துஉறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
சாய்க்காடே பதியாக உடையானும் விடையானும்
வாய்க்காடு முதுமரமே இடமாக வந்தடைந்த
பேய்க்குஆடல் புரிந்தானும் பெரியோர்கள் பெருமானே 2

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் ஆர்அறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டுஎம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றுஏத்தப் பெறலாமே நல்வினையே 3

கட்டு அலர்த்த மலர்தூவிக் கைதொழுமின் பொன்இயன்ற
தட்டு அலர்தத பூஞ்செருந்தி கோங்குஅமரும் தாழ்பொழில்வாய்
மொட்டு அலர்த்த தடம்தாழை முருகுஉயிர்க்கும் காவிரிப்பூம்
பட்டினத்துச் சாய்க்காட்டுஎம் பரமேட்டி பாதமே 4

கோங்குஅன்ன குவிமுலையாள் கொழும்பணைத்தோள் கொடியிடையைப்
பாங்குஎன்ன வைத்துஉகந்தான் படர்சடைமேல் பால்மதியம்
தாங்கினான் பூம்புகார்ச் சாய்க்காட்டான் தாள்நிழல்கீழ்
ஓங்கினார் ஓங்கினார் என உரைக்கும் உலகமே 5

சாந்தாக நீறுஅணிந்தான் சாய்க்காட்டான் காமனைமுன்
தீந்து ஆகம் எரிகொளுவச் செற்று உகந்தான் திருமுடிமேல்
ஒய்ந்து ஆர மதிசூடி ஒளிதிகழும் மலைமகள்தோள்
தோய்ந்து ஆகம் பாகமா உடையானும் விடையானே 6

மங்குல்தோய் மணிமாடம் மதிதவழும் நெடுவீதிச்
சங்கு எலாம் கரைபொருது திரைபுலம்பும் சாய்க்காட்டான்
கொங்கு உலா வரிவண்டின் இசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலான் அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருள்அலவே.7

தொடல்அரியது ஒருகணையால் புரம்மூன்றும் எரி உண்ணப்
படஅரவத்து எழில்ஆரம் பூண்டான் பண்டு அரக்கனையும்
தடவரையால் தடவரைந்தோள் ஊன்றினான் சாய்க்காட்டை
இடவகையால் அடைவோம் என்று எண்ணுவார்க்கு இடர்இலையே8

வைய நீர் ஏற்றானும் மலர்உறையும் நான்முகனும்
ஐயன்மார் இருவர்க்கும் அளப்பரிதால் அவன்பெருமை
தையலார் பாட்டு ஓவாச் சாய்க்காட்டுஎம் பெருமானைத்
தெய்வமாப் பேணாதார் தெளிவு உடைமை தேறோமே9

குறங்குஆட்டும் நால்விரல் கோவணத்துக் கொலோவிப்போய்
அறம்காட்டும் சமணரும் சாக்கியரும் அலர் தூற்றும்
திறம்காட்டல் கேளாதே தெளிவு உடையீர் சென்றுஅடைமின்
புறங்காட்டில் ஆடலான் பூம்புகார்ச் சாய்க்காடே 10

நொம்பைந்து புடைத்து ஒல்கு நூபுரம் சேர் மெல் அடியார்
அம்பந்தும் வரிக்கழலும் அரவம்செய் பூங்காழிச்
சம்பந்தன் தமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்தம் எனக்கருதி ஏத்துவார்க்கு இடர்கெடுமே 11

14. திருப்பல்லவனீச்சரம்

திருமுறை 1/65 இராகம் : காம்போதி பண் : தக்கேசி
இறைவன் : பல்லவனேசுரர் இறைவி : சௌந்தரநாயகி

அடையார் தம்புரங்கள் மூன்றும் ஆரழலில் அழுந்த
விடையார் மேனியராய்ச் சீறும் வித்தகர் மேய இடம்
கடையார் மாடம் நீடியெங்கும் கங்குல் புறம் தடவப்
படையார் புரிசைப் பட்டினம்சேர் பல்லவனீச்சரமே 1

எண்ணார் எயில்கள் மூன்றும்சீறும் எந்தைபிரான் இமையோர்
கண்ணாய் உலகம் காக்கநின்ற கண்ணுதல் நண்ணும்இடம்
மண்ணார் சோலைக் கோலவண்டு வைகலும்தேன் அருந்திப்
பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே 2

மங்கை அங்கோர் பாகமாக வாள்நிலவு ஆர் சடைமேல்
கங்கை அங்கே வாழவைத்த கள்வன் இருந்த இடம்
பொங்கு அயம்சேர் புணரிஓதம் மீதுஉயர் பொய்கையின்மேல்
பங்கயம் சேர் பட்டினத்துப் பல்லவனீச்சரமே 3

தாரார் கொன்றை பொன்தயங்கச் சாத்திய மார்பு அகலம்
நீரார் நீறு சாந்தம்வைத்த நின்மலன் மன்னும்இடம்
போரார் வேல்கண் மாதர்மைந்தர் புக்கு இசைபாடலினால்
பார் ஆர்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே 4

மைசேர் கண்டர் அண்டவாணர் வானவரும் துதிப்ப
மெய்சேர் பொடியர் அடியார்ஏத்த மேவி இருந்தஇடம்
கைசேர் வளையார் விழைவினோடு காதன்மையால் கழலே
பைசேர் அரவார் அல்குலார் சேர் பல்லவனீச்சரமே 5

குழலில் ஓசை வீணைமொந்தை கொட்ட முழவுஅதிரக்
கழலின் ஓசை ஆர்க்கஆடும் கடவுள் இருந்தஇடம்
சுழியில் ஆரும் கடலில்ஓதம் தெண்திரை மொண்டுஎறியப்
பழியிலார்கள் பயில்புகாரில் பல்லவனீச்சரமே 6

வெந்தல் ஆய வேந்தன் வேள்வி வேர்அறச் சாடி விண்ணோர்
வந்து எலாம் முன் பேணநின்ற மைந்தன் மகிழ்ந்தஇடம்
மந்தல் ஆய மல்லிகையும் புன்னை வளர்குரவின்
பந்தல்ஆரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே 7

தேர் அரக்கன் மால்வரையைத் தெற்றி எடுக்கஅவன்
தார் அரக்கும் திண்முடிகள் ஊன்றிய சங்கரன் ஊர்
கார் அரக்கும் கடல்கிளர்ந்த காலம் எலாம் உணரப்
பார் அரக்கம் பயில்புகாரில் பல்லவனீச்சரமே 8

அங்கம் ஆறும் வேதம்நான்கும் ஓதும் அயன்நெடுமால்
தம் கண்ணாலும் நேடநின்ற சங்கரன் தங்கும்இடம்
வங்கம் ஆரும் முத்தம்இப்பி வார்கடல் ஊடுஅலைப்பப்
பங்கம்இல்லார் பயில்புகாரில் பல்லவனீச்சரமே 9

உண்டுஉடுக்கை இன்றியே நின்று ஊர்நகவே திரிவார்
கண்டுஉடுக்கை மெய்யில் போர்த்தார் கண்டு அறியாத இடம்
தண்டுஉடுக்கை தாளம்தக்கை சார நடம்பயில்வார்
பண்டுஇடுக்கண் தீரநல்கும் பல்லவனீச்சரமே 10

பத்தர் ஏத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்து எம்
அத்தன் தன்னை அணிகொள்காழி ஞானசம்பந்தன்சொல்
சித்தம் சேரச் செப்பும்மாந்தர் தீவினை நோய்இலராய்
ஒத்து அமைந்த உம்பர்வானில் உயர்வினொடு ஓங்குவரே.11

15. திருப்பல்லவனீச்சரம்

திருமுறை 3/112 இராகம் : பைரவி பண் : பழம்பஞ்சுரம்

இறைவன் : பல்லவனேசுரர் இறைவி : சௌந்தரநாயகி

பரசுபாணியர் பாடல்வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
அரசுபேணி நின்றார் இவர் தன்மை அறிவார்ஆர் 1

பட்டம் நெற்றியர் நட்டம்ஆடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
இட்டமாய் இருப்பார் இவர்தன்மை அறிவார்ஆர் 2

பவளமேனியர் திகழும்நீற்றினர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
அழகராய் இருப்பார் இவர் தன்மை அறிவார்ஆர் 3

பண்ணில் யாழினர் பயிலும் மொந்தையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
அண்ணலாய் இருப்பார் இவர்தன்மை அறிவார்ஆர் 4

பல்லில்ஓட்டினர் பலிகொண்டு உண்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
எல்லி ஆட்டுஉகந்தார் இவர்தன்மை அறிவார்ஆர் 5

பச்சைமேனியர் பிச்சை கொள்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
இச்சையாய் இருப்பார் இவர் தன்மை அறிவார்ஆர். 6

பைங்கண் ஏற்றினர் திங்கள்சூடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
எங்குமாய் இருப்பார் இவர் தன்மை அறிவார்ஆர் 7

பாதம் கைதொழ வேதம்ஓதுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
ஆதியாய் இருப்பார் இவர் தன்மை அறிவார்ஆர் 8

படிகொள்மேனியர் கடிகொள் கொன்றையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
அடிகளாய் இருப்பார் இவர்தன்மை அறிவார்ஆர் 9

பறைகொள்பாணியர் பிறைகொள் சென்னியர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்து
இறைவராய் இருப்பார் இவர் தன்மை அறிவார்ஆர். 10

வானம்ஆள்வதற்கு ஊனம் ஒன்றிலை
மாதர் பல்லவனீச்சரத்தானை
ஞான சம்பந்தன் நற்றமிழ் சொல்லவல்லவர் நல்லவரே 11

16. திருவெண்காடு

திருமுறை 2/48 இராகம் : நாதநாமக்கிரியா பண் : சீகாமரம்
இறைவன் : சுசேதாரணியேசுவரர் இறைவி : பிரமவித்தியாநாயகி

கண்காட்டும் நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே. 1

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே. 2

மண்ணொடுநீர் அனல்காலோடு ஆகாயம் மதிஇரவி
எண்ணில்வரும் இயமானனன் இகபரமும் எண்திசையும்
பெண்ணினொடுஆண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்றுஅண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகுஎன்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைக்காட்டும் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்தன்
மேல்அடர் வெங்காலன்உயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்றுஅடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெய்அரவும் தாங்கினான் சடையின்உடன்
ஒண்மதிய நுதல்உமையோர் கூறு உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன்நாமம் பலஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம்மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்த அயிராவதம்பணிய
மிக்கதனுக்கு அருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண்உடை இறைவனே. 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயம்எய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்து அன்று அருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண்டு இசைமுரலும் வெண்காடே. 8

கள்ளார் செங்கமலத்தான் கடல்கிடந்தான் என இவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வுஅரியான்
வெள்ளானை தவம்செய்யும் மேதகு வெண்காட்டான் என்று
உள் ஆடி உருகாதார் உணர்வு உடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருள்என்னும்
பேதையர்கள் அவர்பிரிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும்ஒரு தீதிலர்என்று உணருமினே. 10

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞானசம்பந்தன்
விண்பொழி வெண்பிறைச்சென்னி விகிர்தன்உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை பாடியபத்து இவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய் வான்பொலியப் புகுவாரே. 11

பதிக வரலாறு : (கண்காட்டு)

முத்தமிழ் விரகர் திருத்தொண்டர் எதிர்கொள்ளத் திருவெண்காட்டை அடைந்து தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி உள்புக்கு வலம் வந்து திருவெண்காட்டீசரது முன்னின்று 'கண்காட்டு நுதலானும்' என்னும் இப்பதிகத்தை எடுத்து அதில் மூழ்கினவரை இறைவனது திருவடியைச் சேரச்செய்யும் முக்குளத்தைச் சிறப்பித்துப் பாடிஉயுள மகிழ்ந்தார். இத்திருப்பதிகத்தின் இரண்டாவதாகிய பேயடையா பிரிவெய்தும்' என்னுந் திருப்பாட்டுத்தானே திருப்பெண்ணாகடத்தில் உறையும் புத்திரப்பேற்றை விரும்பிய அச்சுதகளப்பாளர் தமது குலகுருவாகிய அருணந்திசிவாசாரியரது ஆணையின்படி திருமுறையிற் கயிறு சாத்தியபோது உதயமாய், அத் திருவுள்ளக் கிடையின்படி அவர் திருவெண்காட்டை அடைந்து இறைவனை வணங்கி முக்குளத்தில் தம் மனைவியாரோடு விதிப்படி மூழ்கித் திருக்கைலாயப் புறச்சந்தானத்து முதற்பெருங் குரவராகிய **மெய்கண்ட தேவநாயனாரைத்** தம் மகவாகப் பெற்றருளினார்.

17. திருவெண்காடு

திருமுறை 2/61 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்

இறைவன் : சுசேதாரணியேசுவரர் இறைவி : பிரமவித்தியாநாயகி

உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுஉள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்தாமரை மேல் கருவண்டு யாழ்செய் வெண்காடே 1

நாதன் நம்மை ஆள்வான் என்று நவின்றுஏத்திப்
பாதம் பன்னாள் பணியும் அடியார் தங்கள்மேல்
ஏதம் தீர இருந்தான் வாழும் ஊர்போலும்
வேதத்து ஒலியால் கிளிசொல் பயிலும் வெண்காடே. 2

தண்முத்து அரும்பத் தடமூன்று உடையான் தனைஉன்னிக்
கண்முத்து அரும்பக் கழல் சேவடி கைதொழுவார்கள்
உணமுத்து அரும்ப உவகை தருவான் ஊர்போலும்
வெண்முத்து அருவிப் புனல்வந்து அலைக்கும் வெண்காடே3

நரையார் வந்து நாளும் குறுகி நணுகாமுன்
உரையால் வேறா உள்குவார்கள் உள்ளத்தே
கரையா வண்ணம் கண்டான் மேவும் ஊர்போலும்
விரையார் கமலத்து அன்னம் மருவும் வெண்காடே. 4

பிள்ளைப் பிறையும் புனலும் சூடும் பெம்மான்என்று
உள்ளத்து உள்ளித் தொழுவார் தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளும் தலைவன் ஊர்போலும்
வெள்ளைச் சுரிசங்கு உலவித் திரியும் வெண்காடே 5

ஒளிகொள் மேனி உடையார் உம்பர் ஆளீஎன்று
அளியர் ஆகி அழுது ஊற்று ஊறும் அடியார்கட்கு
எளியான் அமரர்க்கு அரியான் வாழும் ஊர்போலும்
வெளிய உருவத்தானை வணங்கும் வெண்காடே. 6

கோள்வித்து அனைய கூற்றும் தன்னைக் குறிப்பினால்
மாள்வித்து அவனை மகிழ்ந்தங்கு ஏத்த மாணிக்காய்
ஆள்வித்து அமரர் உலகம் அளிப்பான் ஊர்போலும்
வேள்விப் புகையால் வானம் இருள்கூர் வெண்காடே 7

வளையார் முன்கை மலையாள் வெருவ வரைஊன்றி
முளையார் மதியம் சூடி என்று முப்போதும்
இளையாது ஏத்த இருந்தான் எந்தை ஊர்போலும்
விளையார் கழனிப் பழனம் சூழ்ந்த வெண்காடே 8

கரியானோடு கமல மலரான் காணாமை
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான் என்பார்கட்கு
உரியான் அமரர்க்கு அரியான் வாழும் ஊர்போலும்
விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே 9

பாடும் அடியார் பலரும் கூடிப் பரிந்துஏத்த
ஆடும் அரவம் அசைத்த பெருமான் அறிவுஇன்றி
மூடம் உடைய சமண் சாக்கியர்கள் உணராத
வேடம் உடைய பெருமான் பதியாம் வெண்காடே 10

விடையார் கொடியான் மேவி உறையும் வெண்காட்டைக்
கடையார் மாடம் கலந்து தோன்றும் காழியான்
நடையார் இன்சொல் ஞானசம்பந்தன் தமிழ்வல்லார்க்கு
அடையாவினைகள் அமரலோகம் ஆள்வாரே 11

18. திருவெண்காடு

திருமுறை 3/15 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்

இறைவன் : சுவேதாரணியேசுவரர் இறைவி : பிரமவித்தியாநாயகி

மந்திரம் மறைஅவை வானவரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்இறை
வெந்த வெண் நீற்றர் வெண்காடு மேவிய
அந்தமும் முதல்உடை அடிகள் அல்லரே. 1

படைஉடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவணம் உகந்த கொள்கையர்
விடைஉடைக் கொடியர் வெண்காடு மேவிய
சடைஇடைப் புனல்வைத்த சதுரர் அல்லரே. 2

பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவர்
தோலொடு நூல்இழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண்காடு மேவிய
ஆலமது அமர்ந்த எம்அடிகள் அல்லரே 3

ஞாழலும் செருந்தியும் நறுமலர்ப் புன்னையும்
தாழைவெண் குருகுஅயல் தயங்கு கானலில்
வேழமது உரித்த வெண்காடு மேவிய
யாழினது இசைஉடை இறைவர் அல்லரே 4

பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலஇடர் தீர்க்கும் எம்இறை
வேதங்கள் முதல்வர் வெண்காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரமர் அல்லரே 5

மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்இறை
விண்ணமர் பொழில்கொள் வெண்காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே 6

நயந்தவர்க்கு அருள்பல நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவு வெண்காடு மேவிய
பயம்தரு மழுஉடைப் பரமர் அல்லரே 7

மலையுடன் எடுத்தவல் அரக்கன் நீள்முடி
தலையுடன் நெரித்துஅருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர் வெண்காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிகள் அல்லரே 8

ஏடுஅவிழ் நறுமலர் அயனும் மாலுமாய்த்
தேடவும் தெரிந்து அவர் தேரகிற்கிலார்
வேடம் அது உடை வெண்காடு மேவிய
ஆடலை அமர்ந்த எம் அடிகள் அல்லரே 9

போதியர் பிண்டியர் பொருத்தம் இல்லிகள்
நீதிகள் சொல்லியும் நினையகிற்கிலார்
வேதியர் பரவு வெண்காடு மேவிய
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே 10

நல்லவர் புகலியுள் ஞானசம்பந்தன்
செவ்வன்எம் சிவன் உறை திருவெண்காட்டின் மேல்
சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவின் அறுதல் ஆணையே 11

19. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

திருமுறை 1/5 இராகம் : நாட்டை பண் : நட்டபாடை

இறைவன் : ஆரணியசுந்தரேசுரர் இறைவி : அகிலாண்ட நாயகி

செய் அருகே புனல் பாய ஓங்கிச்
செங்கயல் பாயச் சில மலர்த்தேன்
கை அருகே கனி வாழை ஈன்று
கானல் எல்லாம் கமழ் காட்டுப்பள்ளிப்
பை அருகே அழல்வாய் அவைவாய்ப்
பாம்பு அணையான் பணைத்தோளி பாகம்
மெய் அருகே உடையானை உள்கி
விண்டவர் ஏறுவர் மேல்உலகே 1

திரைகள் எல்லா மலரும் சுமந்து
செழுமணி முத்தொடு பொன் வரன்றிக்
கரைகள் எல்லாம் அணி சேர்ந்து உரிஞ்சிக்
காவிரி கால் பொரு காட்டுப்பள்ளி
உரைகள்எல்லாம்உணர்வு எய்திநல்ல
உத்தமராய் உயர்ந்தார் உலகில்
அரவமெல்லாம் அரை ஆர்த்த செல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கல் ஆமே 2–3

தோல்உடையான் வண்ணப் போர்வையினான்
சுண்ணவெண்நீறு துதைந்து இலங்கு
நூல் உடையான் இமையோர் பெருமான்
நுண்ணறிவால் வழிபாடு செய்யும்

கால் உடையான் கரிதாய கண்டன்
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி
மேல்உடையான் இமையாத முக்கண்
மின் இடையாளொடும் வேண்டினானே 4

சலசல சந்து அகிலோடும்உந்திச்
சந்தனமே கரை சார்த்தி எங்கும்
பலபல வாய்த்தலை ஆர்த்துமண்டிப்
பாய்ந்து இழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்று அதிரும் கழலான்
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்கள் ஏத்தநின்ற
சூலம் வல்லான்கழல் சொல்லுவோமே 5

தளை அவிழ் தண் நிற நீலம் நெய்தல்
தாமரை செங்கழுநீரும் எல்லாம்
களை அவிழும் குழலார் கடியக்
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளித்
துளைபயிலும் குழல் யாழ் முரலத்
துன்னிய இன்னிசையால் துதைந்த
அளை பயில் பாம்பு அரை ஆர்த்த செல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே. 6

முடி கையினால் தொடு மோட்டு உழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டிக்
கடிகையினால் எறி காட்டுப்பள்ளி
காதலித்தான் கரிதாய கண்டன்

பொடி அணி மேனியினானை உள்கிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திமுன்னின்று
அடி கையினால் தொழ வல்ல தொண்டர்
அருவினையைத் துரந்து ஆட்செய்வாரே 7

பிறை உடையான் பெரியோர்கள் பெம்மான்
பெய் கழல் நாள்தொறும் பேணி ஏத்த
மறை உடையான் மழுவாள் உடையான்
வார்தரு மால்கடல் நஞ்சம்உண்ட
கறை உடையான் கனல் ஆடுகண்ணால்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறை உடையான் குறள் பூதச்செல்வன்
குரைகழலே கைகள் கூப்பினோமே 8

செற்றவர்தம் அரணம் அவற்றைச்
செவ்அழல்வாய் எரியூட்டி நன்றும்
கற்றவர் தாம் தொழுது ஏத்த நின்றான்
காதலிக்கப்படும் காட்டுப்பள்ளி
உற்றவர்தாம்உணர்வு எய்தி நல்ல
உம்பர் உள்ளார் தொழுது ஏத்த நின்ற
பெற்றமரும் பெருமானே அல்லால்
பேசுவதும் மற்றோர் பேச்சு இலோமே 9

ஒண் துவர் ஆர் துகில் ஆடை மெய் போர்த்து
உச்சி கொள்ளாமை உண்டே உரைக்கும்
குண்டர்களோடு அரைக் கூறைஇல்லார்
கூறுவதாம் குணம் அல்லகண்டீர்

அண்ட மறையவன் மாலும்காணா
ஆதியினான் உறை காட்டுப்பள்ளி
வண்டு அமரும்மலர்க் கொன்றைமாலை
வார்சடையான் கழல் வாழ்த்துவோமே 10

பொன்னியல் தாமரை நீலம் நெய்தல்
போதுகளால் பொலிவெய்து பொய்கைக்
கன்னியர் தாம்குடை காட்டுப்பள்ளிக்
காதலனைக்கடல் காழியர்கோன்
துன்னிய இன்னிசையால் துதைந்து
சொல்லிய ஞானசம்பந்தன் நல்ல
தன்னிசையால் சொன்ன மாலைபத்தும்
தாங்க வல்லார் புகழ் தாங்குவாரே. 11

திருச்சிற்றம்பலம்

20. திருக்குருகாவூர் வெள்ளடை

திருமுறை 3/124 இராகம் : சாமாராகம் பண் : அந்தாளிக்குறிஞ்சி
இறைவன் : வெள்ளடையீசுவரர் இறைவி : காவியங்கண்ணி

சுண்ணவெண் நீறுஅணி மார்பில் தோல்புனைந்து
எண்ணரும் பல்கணம் ஏத்த நின்று ஆடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளைடை மேவிய
பெண்ணமர் மேனிஎம் பிஞ்ஞகனாரே. 1

திரைபுல்கு கங்கை திகழ்சடை வைத்து
வரை மகளோடு உடன் ஆடுதிர் மல்கு
விரைகமழ் தண்பொழில் வெள்ளடை மேவிய
அரைமல்கு வாளரவு ஆட்டு உகந்தீரே. 2

அடையலர் தொல்நகர் மூன்றெரித்து அன்ன
நடைமட மங்கையொர் பாகம் நயந்து
விடையுகந்து ஏறுதிர் வெள்ளடை மேவிய
சடைஅமர் வெண்பிறைச் சங்கரன் நீரே 3

வளம்கிளர் கங்கை மடவர லோடு
களம்பட ஆடுதிர் காடு அரங்கு ஆக
விளங்கிய தண்பொழில் வெள்ளடை மேவிய
இளம்பிறை சேர்சடை எம்பெருமானே. 4

சுரிகுழல் நல்ல துடியிடையோடு
பொரிபுல்கு காட்டிடை ஆடுதிர் பொங்க
விரிதரு பைம்பொழில் வெள்ளடை மேவிய
எரிமழு வாள்படை எந்தை பிரானே 5

காவி அம் கண்மடவாளொடும் காட்டிடைத்
தீ அகல் ஏந்திநின்று ஆடுதிர் தேன்மலர்
மேவிய தண்பொழில் வெள்ளடை மேவிய
ஆவினில் ஐந்துகொண்டு ஆட்டு உகந்தீரே. 6–11

21. திருப்பிரமபுரம்

திருமுறை 1/1 இராகம் : நாட்டை பண் : நட்டபாடை

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே! 1

முற்றல் ஆமை இள நாகமொடு ஏனமுளைக்கொம்பு அவைபூண்டு
வற்றல்ஓடு கலனாப் பலிதேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்த
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 2

நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர் நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது என்னப்
பேர்பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே 3

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலை ஓட்டில்
உள் மகிழ்ந்து பலி தேரிய வந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 4

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன் என்ன
அருமை ஆக உரைசெய்ய அமர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர் காலம் இது என்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 5

மறை கலந்த ஒலிபாட ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறைகலந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
கறைகலந்த கடி ஆர் பொழில் நீடு உயர் சோலை கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுரம்மேவிய பெம்மான் இவன் அன்றே. 6

சடை முயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வு எய்த
உடை முயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழிசூழ் குளிர்கானல் அம் பொன்அம் சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 7

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம்விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பலஊழிகள் தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 8

தாள் நுதல் செய்து இறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது உள்ளம் கவர் கள்வன்
வாள்நுதல் செய் மகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்த
பேணுதல்செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 9

புத்தரோடு பொறி இல் சமணும் புறம் கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக உரி போர்த்தது ஓர்மாயம் இது என்ன
பித்தர்போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 10

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

பதிக வரலாறு : (தோடுடைய செவியன்)

சோழ நாட்டிலே, பிரமபுரம் முதலிய பன்னிரு திருப்பெயருடைய சீகாழியிலே, பார்ப்பன குலத்திலே, கவுணியர் வகுப்பிலே சிவபாத விருதயர் என்பார் ஒருவர் சைவப்பற்று மிக்குடையராயிருந்தார். அவர், அந்நாளில் சமணம், புத்தம் முதலிய புறப்புறச் சமயக் களை மிகுந்து சைவ வான்பயிர் குன்றுதலை நோக்கி உளம் வருந்திச் சைவத்தை நிலை நாட்டுதற்குரிய மகப்பேறு கருதி, பெரியநாயகி யாரோடு ஆண்டெழுந்தருளிய திருத்தோணியப்பரைக் குறித்து நோற்பாராயினர். அந்நோன்பு வழியாக அவ்வம்மையப்பருடைய திருவருட்பெருக்கினாலே, அவர்தம் மனைவியார் பகவதியம்மை யாருடைய மணிவயிற்றிலே சித்திரைத் திங்களிலே திருவாதிரை நாளிலே திருமகனார் ஒருவர் தோன்றியருளினார். அவர் தமது மூன்றாம் ஆண்டிலே ஒருநாள் திருக்கோயிலிலுள்ள திருக்குளத்திலே நீராடச் சென்ற தந்தையோடு அழுதுகொண்டு பின் செல்ல, சிவபாதவிருதயர் அவரை அக்குளக் கரையிலே இருத்தி நீரின் மூழ்கி, மறமகற்றும் மந்திர சிந்தனையிலிருந்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிக் கோபுரத்தைப் பார்த்து, 'அம்மே, அப்பா' என்று அழைத்து அழத் திருத்தோணியப்பர் அவருக்கு அருள்புரியுமாறு அம்மையாரோடு விடையூர்ந்து எழுந்தருளி வந்தார். அம்மையார் தம்முடைய ஞானத் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து, கண்ணீர் துடைத்துப் பிள்ளையாருடைய கையிலே கொடுத்து ஊட்டத், தோணியப்பர் அவரது அழுகை தீர்த்து ஆண்டருளினார்.

பிள்ளையார் எல்லா உலகங்கட்கும் இருமுதுகுரவராகிய இறைவன் இறைவி இருவராலும் ஆட்கொள்ளப் பெற்றமையால் 'ஆளுடைய பிள்ளையார்' எனவும், சிவஞானசம்பந்தம் பெற்றமையால் 'திருஞானசம்பந்தப் பெருமான்' எனவும் திருப்பெயர் உடையவராயினார்.

சிறிது நேரத்திலே சிவபாதவிருதயர் செய்கடன் முடித்துக் கரையேறி ஆளுடைய பிள்ளையரைப் பார்த்து, 'நீ யார் தந்த பாலை உண்டாய் ?' என முனிவுற்று, 'எச்சில் மயங்க உனக்கு இப்பாலை இட்டாரைக் காட்டு' என ஒரு மாறுகொண்டு ஒச்சிக் கேட்பப் பிள்ளையார் இன்ப வெள்ளத் தாழ்ந்து, உச்சி மேல் எடுத்த தந்திருக்கை விரலினாலே சுட்டி வானிலே உமையம்மையாரோடு விடையூர்ந்து நின்றருளிய பெருமானைக் காட்டி, உலகம் உய்யப் பாடுந் தமது திருப்பாடல் சிவபெருமானது திருச்செவியில் ஏறும் பொருட்டு முதலில் அத்திருச் செவியைச் சிறப்பித்துத் திருஅடையாளங்களைச் சாற்றி, மறை முதலாகிய ஓங்காரத் திருவெழுத்தைத் தகரமெய்யொடு புணர்த்தித் 'தோடுடைய செவியன்' என்னும் இம் மெய்ம்மொழித் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

22. திருப்பிரமபுரம்

திருமுறை 2/40 இராகம் : நாதநாமக்கிரியா பண் : சீகாமரம்

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

எம்பிரான் எனக்கு அமுதம் ஆவானும் தன் அடைந்தார்
தம்பிரான் ஆவானும் தழல் ஏந்து கையானும்
கம்ப மா கரி உரித்த காபாலி கறைக்கண்டன்
வம்பு உலாம் பொழில் பிரமபுரத்து உறையும் வானவனே. 1

தாம் என்றும் மனம் தளராத் தகுதியராய் உலகத்துக்கு
ஆம் என்று சரண் புகுந்தார் தமைக் காக்குங் கருணையினான்
ஓம் என்று மறை பயில்வார் பிரமபுரத்து உறைகின்ற
காமன்தன் உடல் எரியக் கனல் சேர்ந்த கண்ணானே. 2

நன் நெஞ்சே உனை இரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னம் செய்து இருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னம் சேர் பிரமபுரத்து ஆரமுதை எப்போதும்
பன் அம் சீர் வாய் அதுவே பார் கண்ணே பரிந்திடவே 3

சாம் நாள் இன்றி மனமே சங்கைதனைத் தவிர்ப்பிக்கும்
கோன் ஆளும் திருவடிக்கே கொழு மலர் தூவு எத்தனையும்
தேன் ஆளும் பொழிற் பிரமபுரத்து உறையும் தீவணனை
நா நாளும் நன்நியமம் செய்து சீர் நவின்று ஏத்தே. 4

கண்ணுதலான் வெண்ணீற்றான் கமழ்சடையான் விடைஏறி
பெண் இதம் ஆம் உருவத்தான் பிஞ்ஞகன் பேர் பலவுடையான்
விண்நுதலாத் தோன்றிய சீர்ப் பிரமபுரம் தொழ விரும்பி
எண்ணுதல் ஆம் செல்வத்தை இயல்பாக அறிந்தோமே. 5

எங்கேனும் யாது ஆகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கே என்று அருள்புரியும் எம்பெருமான் எருது ஏறிக்
கொங்கு ஏயும் மலர்ச்சோலைக் குளிர் பிரமபுரத்து உறையும்
சங்கே ஒத்து ஒளிர் மேனிச் சங்கரன் தன் தன்மைகளே. 6

சிலை அதுவே சிலையாகத் திரிபுரம் மூன்று எரிசெய்த
இலை நுனை வேல் தடக்கையன் ஏந்திழையாள் ஒருகூறன்
அலைபுனல் சூழ் பிரமபுரத்து அருமணியை அடிபணிந்தால்
நிலை உடைய பெருஞ்செல்வம் நீடு உலகில் பெறலாமே. 7

எரித்த மயிர் வாள் அரக்கன் வெற்பு எடுக்கத் தோளொடு தாள்
நெரித்து அருளும் சிவமூர்த்தி நீறு அணிந்த மேனியினான்
உரித்த வரித்தோல் உடையான் உறைபிரமபுரம் தன்னைத்
தரித்தமனம் எப்போதும் பொறுவார்தாம் தக்காரே. 8

கரியானும் நான்முகனும் காணாமைக் கனல்உரு ஆய்
அரியானாம் பரமேட்டி அரவம்சேர் அகலத்தான்
தெரியாதான் இருந்து உரையும் திகழ் பிரமபுரம்சேர
உரியார்தாம் ஏழ் உலகும் உடன்ஆள உரியாரே. 9

உடையிலார் சீவரத்தார் தன்பெருமை உணர்வு அரியான்
முடையில் ஆர் வெண்தலைக் கை மூர்த்தி ஆம் திருஉருவன்
பெடையில் ஆர் வண்டு ஆடும் பொழில் பிரமபுரத்து உறையும்
சடையில் ஆர் வெண்பிறையான் தாள்பணிவார் தக்காரே. 10

தன் அடைந்தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன் அடைந்த மதில் பிரமபுரத்து உறையும் காவலனை
முன் அடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவை வல்லார்
பொன் அடைந்தார் போகங்கள்பல அடைந்தார் புண்ணியரே.11

23. திருப்பிரமபுரம்

திருமுறை 2/65 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாய

கறை அணி வேலிலர் போலும் கபாலம் தரித்திலர் போலும்
மறையும் நவின்றிலர் போலும் மாசுணம் ஆர்த்திலர் போலும்
பறையும் கரத்திலர் போலும் பாசம் பிடித்திலர் போலும்
பிறையும் சடைக்கிலர் போலும் பிரமபுரம் அமர்ந்தாரே. 1

கூர் அம்பு அதுஇலர் போலும் கொக்கின் இறகுஇலர் போலும்
ஆரமும் பூண்டுஇலர் போலும் ஆமை அணிந்திலர் போலும்
தாரும் சடைக்கு இலர் போலும் சண்டிக்கு அருள் இலர் போலும்
பேரும் பலஇலர் போலும் பிரமபுரம் அமர்ந்தாரே 2

சித்த வடிவு இலர் போலும் தேசம் திரிந்திலர் போலும்
கத்தி வரும்கடும் காளிகதங்கள் தவிர்த்திலர் போலும்
மெய்த்தநயனம் இடந்தார்க்கு ஆழி அளித்திலர் போலும்
பித்த வடிவிலர் போலும் பிரமபுரம் அமர்ந்தாரே. 3

நச்சரவு ஆட்டிலர் போலும் நஞ்சம் இடந்து இவன் போலும்
கச்சு தரித்திலர் போலும் கங்கை தரித்திலர் போலும்
மொய்ச்சவன் பேய் இலர் போலும் முப்புரம் எய்திலர் போலும்
பிச்சை இரந்திலர் போலும் பிரமபுரம் அமர்ந்தாரே. 4

தோடு செவிக்குஇலர் போலும் சூலம் பிடித்திலர் போலும்
ஆடு தடக்கை வலிய ஆனை உரித்திலர் போலும்
ஓடு கரத்திலர் போலும் ஒள்அழல் கைஇலர் போலும்
பீடு மிகுத்துஎழு செல்வப் பிரமபுரம் அமர்ந்தாரே. 5

விண்ணவர் கண்டிலர் போலும் வேள்வி அழித்திலர் போலும்
அண்ணல் அயன் தலைவீழ அன்றும் அறுத்திலர் போலும்
வண்ண எலும்பினொடு அக்குவடங்கள் தரித்திலர் போலும்
பெண்இனம் மொய்த்துஎழு செல்வப் பிரமபுரம் அமர்ந்தாரே. 6

பன்றியின் கொம்பிலர் போலும் பார்த்தற்கு அருள் இலர் போலும்
கன்றிய காலனை வீழக் கால் கொடு பாய்ந்திலர் போலும்
துன்று பிணம்சுடு காட்டில் ஆடித் துதைந்திலர் போலும்
பின்றியும் பீடும் பெருகும் பிரமபுரம் அமர்ந்தாரே. 7

பரசு தரித்திலர் போலும் படுதலை பூண்டிலர் போலும்
அரசன் இலங்கையர் கோனை அன்றும் அடர்த்திலர் போலும்
புரைசெய் புனத்து இளமானும் புலியின் அதள் இலர் போலும்
பிரச மலர்ப்பொழில் சூழ்ந்த பிரமபுரம் அமர்ந்தாரே. 8

அடி முடிமால் அயன் தேட அன்றும் அளப்புஇலர் போலும்
கடிமலர் ஐங்கணை வேளைக் கனல விழித்திலர் போலும்
படிமலர்ப் பாலனுக்காகப் பாற்கடல் ஈந்திலர் போலும்
பிடிநடை மாதர் பெருகும் பிரமபுரம் அமர்ந்தாரே 9

வெற்று அரைச் சீவரத்தார்க்கு வெளிப்பட நின்றுஇலர் போலும்
அற்றவர் ஆல்நிழல் நால்வர்க்கு அறங்கள் உரைத்து இலர் போலும்
உற்றலர் ஒன்றிலர் போலும் ஓடு முடிக்கு இலர் போலும்
பெற்றமும் ஊர்ந்திலர் போலும் பிரமபுரம் அமர்ந்தாரே. 10

பெண்உரு ஆண்உரு அல்லாப் பிரமபுரநகர் மேய
அண்ணல்செய்யாதன எல்லாம் அறிந்து வகைவகையாலே
நண்ணிய ஞானசம்பந்தன் நவின்றன பத்தும் வல்லார்கள்
விண்ணவரோடு இனிதாக வீற்றிருப்பார் அவர் தாமே. 11

24. திருப்பிரமபுரம்

திருமுறை 3/37 இராகம் : நவரோசு பண் : கொல்லி

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

கரம்முனம்மலரால் புனல்மலர் தூவியேகலந்து ஏத்துமின்
பரமன்ஊர்பல பேரினால்பொலி பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வரம்முன்னவருள் செய்யவல்லஎம் ஐயன்நாள்தொறும் மேயசீர்ப்
பிரமன் ஊர் பிரமாபுரத்து உறை பிஞ்ஞகன்அருள் பேணியே. 1

விண்ணிலார்மதி சூடினான் விரும்பும்மறையவன் தன்தலை
உண்ணநன்பலி பேணினான் உலகத்துஊன் உயிரான் மலைப்
பெண்ணினார் திருமேனியான் பிரமாபுரத்து உறை கோயிலுள்
அண்ணலார் அருளாளனாய் அமர்கின்ற எம்முடை ஆதியே. 2

எல்லையில் புகழாளனும் இமையோர் கணத்துடன் கூடியும்
பல்லையார் தலையில் பலியது கொண்டுஉகந்த படிறனும்
தொல்லைவையகத்து ஏறுதொண்டர்கள் தூமலர்சொரிந்து ஏத்தவே
மல்லை அம்பொழில் தேன்பில்கும் பிரமாபுரத்துஉறை மைந்தனே. 3

அடையலார் புரம் சீறிஅந்தணர் ஏத்தமா மட மாதொடும்
பெடையெலாம்கடல் கானல்புல்கும் பிரமாபுரத்துஉறை கோயிலான்
தொடையலார் நுறும்கொன்றையான் தொழிலே பரவி நின்று ஏத்தினால்
இடையிலார் சிவலோகம் எய்துதற்கு ஈதுகாரணம் காண்மினே. 4

வாய்இடைமறை ஓதிமங்கையர் வந்திடப்பலி கொண்டுபோய்ப்
போய்இடம் எரி கான்இடைப்புரி நாடகம் இனிது ஆடினான்
பேயொடும்குடி வாழ்வினான் பிரமாபுரத்துஉறை பிஞ்ஞகன்
தாய்இடைப்பொருள் தந்தையாகும் என்று ஓதுவார்க்கு அருள் தன்மையே 5

ஊடினால் இனியாவதுஎன்னுயர் நெஞ்சமேஉறு வல்வினைக்
கோடிநீ உழல்கின்ற தென்அழல் அன்று தன் கையில் ஏந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான் பிரமாபுரத்து உறை வேதியன்
ஏடு நேர்மதியோடு அராஅணி எந்தை என்று நின்று ஏத்திடே. 6

செய்யன்வெள்ளியன் ஒள்ளியார்சிலர் என்றும்ஏத்தி நினைந்திட
ஐயன்ஆண்டகை அந்தணன் அரு மாமறைப் பொருள் ஆயினான்
பெய்யும்மாமழை ஆனவன்பிரமாபுரம்இம் பேணிய
வெய்யவெண்மழு ஏந்தியைந்நினைந்து ஏத்துமின்வினை வீடவே. 7

கன்றுஒருக்கையில் ஏந்திநல்விளவின்கனிபட நூறியும்
சென்றுஒருக்கிய மாமறைப்பொருள் தேர்ந்த செம் மலரோனுமாய்
அன்று அரக்கனைச் செற்றவன் அடியும் முடி அவை காண்கிலார்
பின்தருக்கிய தண்பொழில் பிரமாபுரத்து அரன் பெற்றியே. 8

உண்டு உடுக்கை விட்டார்களும் உயர் கஞ்சிமண்டைகொள் தேரரும்
பண்டுஅடக்கு சொல்பேசும் அப்பரிவு ஒன்று இலார்கள் சொல்கொள்ளன்மின்
தண்டொடு அக்கு வன் சூலமும்தழல் மாமழுப்படை தன்கையில்
கொண்டு ஒடுக்கிய மைந்தன் எம்பிரமாபுரத்துஉறை கூத்தனே. 9

பித்தனைப் பிரமாபுரத்துஉறை பிஞ்ஞகன்கழல் பேணியே
மெய்த்தவத்து நின்றோர்களுக்கு உரை செய்து நன்பொருள் மேவிட
வைத்தசிந்தையுள் ஞானசம்பந்தன் வாய்நவின்று எழு மாலைகள்
பொய்த்தவம்பொறி நீங்க இன்னிசை போற்றிசெய்யும் மெய்ம்மாந்தரே. 10

திருச்சிற்றம்பலம்

25. திருப்பிரமபுரம்

திருமுறை 3/56 இராகம் : ஆகிரி பண் : பஞ்சமம்
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

இறையவன் ஈசன் எந்தை இமையோர் தொழுது ஏத்த நின்ற
கறை அணி கண்டன் வெண்தோடு அணி காதினன் காலத்து அன்று
மறைமொழி வாய்மையினான் மலையாளொடும் மன்னு சென்னிப்
பிறை அணி செஞ்சடையான் பிரமாபுரம் பேணுமினே. 1

சடையினன் சாமவேதன் சரி கோவணவன் மழுவாள்
படையினன் பாய் புலித்தோல் உடையான் மறை பல்கலைநூல்
உடையவன் ஊனம்இல்லி உடனாய் உமைநங்கை என்னும்
பெடையொடும் பேணும்இடம் பிரமாபுரம் பேணுமினே. 2

மாணியை நாடு காலன் உயிர் மாய்தரச் செற்று காளி
காணிய ஆடல் கொண்டான் கலந்து ஊர்வழி சென்று பிச்சை
ஊண் இயல்பாகக் கொண்டு அங்கு உடனே உமைநங்கையொடும்
பேணிய கோயில் மன்னும் பிரமாபுரம் பேணுமினே. 3

பார்இடம் விண்ணும் எங்கும் பயில் நஞ்சு பரந்து மிண்டப்
பேர்இடர்த் தேவர்கணம் பெருமான் இது கா எனலும்
ஓர் இடத்தே கரந்து அங்கு உமை நங்கையொடும் உடனே
பேர் இடம் ஆகக் கொண்ட பிரமாபுரம் பேணுமினே 4

நச்சுஅரவச் சடைமேல் நளிர்திங்களும் ஒன்ற வைத்து அங்கு
அச்சம் எழ விடைமேல் அழகு ஆர் மழு ஏந்தி நல்ல
இச்சை பகர்ந்து மிக இடுமின் பலி என்று நாளும்
பிச்சை கொள் அண்ணல் நண்ணும் பிரமாபுரம் பேணுமினே. 5

பெற்றவன் முப்புரங்கள் பிழையா வண்ணம் வாளியினால்
செற்றவன் செஞ்சடையில் திகழ் கங்கைதனைத் தரித்திட்டு
ஒற்றை விடையினாய் உமைநங்கையொடும் உடனே
பெற்றிமையால் இருந்தான் பிரமாபுரம் பேணுமினே. 6

வேதம் மலிந்த ஒலி விழவின் ஒலி வீணை ஒலி
கீதம் மலிந்து உடனே கிளரத் திகழ் பௌவம் அறை
ஓதம் மலிந்து உயர் வான் முகடு ஏற ஒண் மால்வரையான்
பேதையொடும் இருந்தான் பிரமாபுரம் பேணுமினே. 7

இமையவர் அஞ்சி ஓட எதிர்வார் அவர்தம்மை இன்றி
அமைதரு வல்அரக்கன் அடர்த்தும் மலை அன்று எடுப்பக்
குமைஅதுசெய்து பாடக் கொற்றவாளொடு நாள் கொடுத்திட்டு
உமையொடு இருந்த பிரான் பிரமாபுரம் உன்னுமினே. 8

ஞாலம் அளித்தவனும் அரியும் அடியோடு முடி
காலம்பல செலவும் கண்டிலாமையினால் கதறி
ஓலம் இட அருளி உமைநங்கையொடும் உடனாய்
ஏல இருந்த பிரான் பிரமாபுரம் ஏத்துமினே. 9

துவர் உறும் ஆடையினார் தொக்க பீலியர் நக்கஅரையர்
அவர்அவர் தன்மைகள் கண்டு அணுகேன்மின் அருள் பெறுவீர்
கவர்உறு சிந்தை ஒன்றிக் கழிகாலம்எல்லாம் படைத்த
இவர் அவர் என்று இறைஞ்சிப் பிரமாபுரம் ஏத்துமினே. 10

உரைதரு நால்மறையோர் புகழ்ந்து ஏத்த ஒண் மாதினொடும்
வரை என வீற்றிருந்தான் மலிகின்ற பிரமபுரத்து
அரசினை ஏத்த வல்ல அணி சம்பந்தன் பத்தும் வல்லார்
விரைதரு விண்ணுலகம் எதிர் கொள்ள விரும்புவரே. 11

26. திருப்பிரமபுரம்

(திருஎழுகூற்றிருக்கை)

திருமுறை 1/128 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

ஓர்உரு ஆயினை மான் ஆங்காரத்து
ஈர் இயல்புஆய் ஒரு விண் முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் அயினை
இருவரோடு ஒருவன்ஆகி நின்றனை

ஓர் ஆல்நீழல் ஒண்கழல்இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈர்அயில் மூஇலைச் சூலம்

நால்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருக்கோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துஉற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நால் ஆம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருப்பிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நால்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறுஅங்கம் முதல்எழுத்து ஓதி
வரன் முறை பயின்று எழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலி அமைந்து உணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ உலகும் புதைய மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்து அமர் கல்வியும்
மறை முதல் நான்கும்

மூன்றுகாலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே

27. திருப்பிரமபுரம்

(திருப்பல்பெயர்ப்பத்து)

திருமுறை 1/63 இராகம் : காம்போதி பண் : தக்கேசி

எரியார் மழுஒன்று ஏந்தி அங்கை இடுதலையே கலனா
வரியார் வளையார் ஐயம் வவ்வாய் மா நலம் வவ்வுதியே
சரியா நாவின் வேதகீதன் தாமரை நான்முகத்தன்
பெரியான் பிரமன் பேணி ஆண்ட பிரமபுரத்தானே 1

பெயலார் சடைக்கோர் திங்கள் சூடிப் பெய்பலிக்கு என்றுஅயலே
கயலார் தடங்கண் அம் சொல் நல்லார் கண்துயில் வவ்வுதியே
இயலால் நடாவி இன்பம் எய்தி இந்திரன் ஆள் மண்மேல்
வியலார் முரசம் ஓங்கு செம்மை வேணு புரத்தானே 2

நகலார் தலையும் வெண்பிறையும் நளிர்சடை மாட்டுஅயலே
பகலாப் பலி தேர்ந்து ஐயம் வவ்வாய் பாய்கலை வவ்வுதியே
அகலாது உறையும் மா நிலத்தில் அயல் இன்மையால்அமரர்
புகலால் மலிந்த பூம் புகலி மேவிய புண்ணியனே 3

சங்கோடு இலங்கத் தோடு பெய்து காதில்ஓர் தாழ்குழையன்
அம் கோல்வளையார் ஐயம் வவ்வாய் ஆல்நலம் வவ்வுதியே
செங்கோல் நடாவிப் பல்உயிர்க்கும் செய்வினை மெய்தெரிய
வெங் கோத் தருமன் மேவி ஆண்ட வெங்குரு மேயவனே. 4

தணி நீர் மதியம் சூடி நீடு தாங்கிய தாழ்சடையன்
பிணி நீர் மடவார் ஐயம் வவ்வாய் பெய் கலை வவ்வுதியே
அணி நீர் உலகம் ஆகி எங்கும் ஆழ்கடலால்அழுங்கத்
துணி நீர் பணிய தான் மிதந்த தோணிபுரத்தானே 5

கவர் பூம்புனலும் தண்மதியும் கமழ் சடைமாட்டு அயலே
அவர் பூம்பலியோடு ஐயம் வவ்வாய் ஆல்நலம் வவ்வுதியே
அவர் பூண்அரையர்க்கு ஆதிஆய அடல் மன்னன் ஆள்மண்மேல்
தவர் பூம் பதிகள் எங்கும் ஓங்கும் தங்கு தராயவனே 6

முலையாள் கெழும மொந்தை கொட்ட முன்கடைமாட்டு அயலே
நிலையாய்ப் பலி தேர்ந்து ஐயம் வவ்வாய் நீ நலம் வவ்வுதியே
தலைஆய்க் கிடந்து இவ் வையம்எல்லாம் தனது ஓர் ஆணை நடாய்ச்
சிலையால் மலிந்த சீர்ச் சிலம்பன் சிரபுரம் மேயவனே 7

எருதே கொணர்க என்று ஏறி அங்கை இடு தலையே கலனா
கருது ஏர் மடவார் ஐயம் வவ்வாய் கண் துயில் வவ்வுதியே
ஒரு தேர் கடாவி ஆர் அமருள் ஒருபதுதேர் தொலையப்
பொரு தேர் வலவன் மேவி ஆண்ட் புறவு அமர் புண்ணியனே 8

துவர்சேர் கலிங்கப் போர்வையாரும் தூய்மை இலாச் சமணும்
கவர்செய்து உழலக் கண்ட வண்ணம் காரிகை வார்குழலார்
அவர் பூம்பலியோடு ஐயம் வவ்வாய் ஆல்நலம் வவ்வுதியே
தவர்செய் நெடுவேல் சண்டன் ஆளச் சண்பை அமர்ந்தவனே 9

நிழலால் மலிந்த கொன்றை சூடி நீறு மெய் பூசி நல்ல
குழலார் மடவார் ஐயம் வவ்வாய் கோல்வளை வவ்வுதியே
அழலாய் உலகம் கவ்வை தீர ஐந்தலை நீள்முடிய
கழல் நாகஅரையன் காவலாகக் காழி அமர்ந்தவனே 10

கட்டார் துழாயன் தாமரையான் என்று இவர் காண்பு அரிய
சிட்டார் பலிதேர்ந்து ஐயம் வவ்வாய் செய் கலை வவ்வுதியே
நட்டார் நடுவே நந்தன் ஆள நல்வினையால் உயர்ந்த
கொட்டாறு உடுத்த தண்வயல் சூழ் கொச்சை அமர்ந்தவனே 11

கடையார் கொடி நல் மாட வீதிக் கழுமலஊர்க் கவுணி
நடையார் பனுவல் மாலையாக ஞானசப்பந்தன் நல்ல
படையார் மழுவன் மேல் மொழிந்த பல்பெயர்ப்பத்தும் வல்லார்க்கு
அடையா வினைகள் உலகில் நாளும் அமருலகு ஆள்பவரே 12

28. திருப்பிரமபுரம்

திருஇருக்குக்குறள்

திருமுறை 1/90 இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி பண் : குறிஞ்சி

அரனை உள்குவீர், பிரமன் ஊருள் எம்
பரனையே மனம், பரவி உய்ம்மினே 1

காண உள்குவீர், வேணு நல்புரத்
தாணுவின் கழல், பேணி உய்ம்மினே 2

நாதன் என்பிர்காள், காதல் ஒண் புகல்
ஆதிபாதமே, ஓதி உய்ம்மினே 3

அங்கம் மாது சேர், பங்கம்ஆயவன்
வெங்குரு மன்னும், எங்கள் ஈசனே 4

வாள்நிலாச் சடைத், தோணிவண்புரத்து
ஆணிநன்பொனைக், காணுமின்களே 5

பாந்தள் ஆர் சடைப், பூந்தராய் மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்தன் என்பரே 6

கரிய கண்டனைச், சிரபுரத்துள் எம்
அரசை நாள்தொறும், பரவி உய்ம்மினே 7

நறவம் ஆர் பொழில், புறவம் நல் பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே 8

தென்றில் அரக்கனைக், குன்றில் சண்பை மன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே 9

அயனும் மாலும்ஆய், முயலும் காழியான்
பெயல்வை எய்தி நின்று, இயலும் உள்ளமே 10

தேரர் அமணரைச், சேர்வில் கொச்சை மன்
நேரில் கழல் நினைந்து, ஓரும் உள்ளமே 11

தொழு மனத்தவர் கழுமலத்து உறை
பழுது இல் சம்பந்தன் மொழிகள்பத்துமே 12

29. திருப்பிரமபுரம்

(மொழிமாற்று)

திருமுறை 1/117 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

காடது அணிகலம் கார்அரவம் பதி கால்அதனில்
தோடது அணிகுவர் சுந்தரக் காதினில் தூச் சிலம்பர்
வேடது அணிவர் விசயற்கு உருவம் வில்லும் கொடுப்பர்
பீடது அணிமணி மாடப் பிரமபுரத்து அரரே 1

கற்றைச்சடையது கங்கணம் முன்கையில் திங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார் படைத்தோன் தலை சுட்டது பண்டு
எற்றித்துப் பாம்பை அணிந்தது கூற்றை எழில் விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணுபுரத்து எங்கள் வேதியரே 2

கூவிளம் கையது பேரி சடைமுடிக் கூட்டத்தது
தூ விளங்கும் பொடிப் பூண்டது பூசிற்றுத் துத்திநாகம்
ஏ விளங்கும் நுதல் ஆனையும் பாகம் உரித்தனர் இன்
பூ இளஞ் சோலைப் புகலியுள் மேவிய புண்ணியரே 3

உரித்தது பாம்பை உடல்மிசை இட்டது ஓர் ஒண் களிற்றை
எரித்தது ஓர் ஆமையை இன்புஉறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை வேள்விபல் நூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குருவில் வீற்றிருந்தவரே 4

கொட்டுவர் அக்கு அரை ஆர்ப்பது தக்கை குறுந்தாளன
இட்டுவர் பூதம் கலப்புஇலர் இன்புகழ் என்பு உலவின்
மட்டு வருந்தழல் சூடுவர் மத்தமும் ஏந்துவர் வான்
தொட்டு வரும் கொடித் தோணிபுரத்து உறை சுந்தரரே 5

சாத்துவர் பாசம் தடக்கையில் ஏந்துவர் கோவணம் தம்
கூத்து அவர் கச்சுக் குலவி நின்று ஆடுவர் கொக்கு இறகும்
பேர்த்தவர் பல்படை பேய்அவை சூடுவர் பேர்எழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியரே 6

காலது கங்கை கற்றைச்சடை உள்ளாற் கழல் சிலம்பு
மாலது ஏந்தல் மழுஅது பாகம் வளர் கொழுங் கோட்டு
ஆலது ஊர்வர் அடல் ஏற்று இருப்பர் அணி மணிநீர்ச்
சேலது கண்ணி ஓர்பங்கர் சிரபுரம் மேயவரே 7

நெருப்புரு வெள்விடை மேனியர் ஏறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மா முருகன்
விருப்புறு பாம்புக்கு மெய் தந்தையார் விறல் மாதவர் வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புறவத்து அணி புண்ணியரே 8

இலங்கைத் தலைவனை ஏந்திற்று இறுத்தது இரலை இல்நாள்
கலங்கிய கூற்று உயிர் பெற்றது மாணி குமைபெற்றது
கலம் கிளர் மொந்தையின் ஆடுவர் கொட்டுவர் காட்டகத்துச்
சலம்கிளர் வாழ் வயல் சண்பையுள் மேவிய தத்துவரே 9

அடிஇணை கண்டிலன் தாமரையோன் மால் முடி கண்டிலன்
கொடி அணியும் புலி ஏறு உகந்து ஏறுவர் தோல்உடுப்பர்
பிடி அணியும் நடையாள் வெற்பு இருப்பது ஓர் கூறு உடையர்
கடி அணியும் பொழில் காழியுள் மேய கறைக்கண்டரே 10

கையது வெண்குழை காதது சூலம் அமணர்புத்தர்
எய்துவர் தம்மை அடியவர் எய்தார் ஓர் ஏனக்கொம்பு
மெய் திகழ் கோவணம் பூண்பது உடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழில் கொச்சையுள் மேவிய கொற்றவரே 11

கல் உயர்கழுமல இஞ்சியுள் மேவிய கடவுள் தன்னை
நல் உரை ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குஉணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர் தொல்லைவானவர் தங்களொடும்
செல்குவர் சீர்அருளாற் பெறலாம் சிவலோகம் அதே. 12

30. திருப்பிரமபுரம்

(திருஏக பாதம்)

திருமுறை.1/127 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான் 1

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன் 2

புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே 3

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன் 4

சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன் 5

பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந் தராயவன் பொன்னடி 6

செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில் 7

பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன் 8

தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான்
தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான்
தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான்
தசமுகன் நெரிதர ஊன்று சண்பையான் 9

காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே 10

கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே 11

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை 12

31. திருப்பிரமபுரம்

திருக்கோமுத்திரி அந்தாதி

திருமுறை 2/74 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

பூமகன்ஊர் புத்தேளுக்கு இறைவன் ஊர்
குறைவிலாப் புகலி பூமேல்
மாமகள்ஊர் வெங்குரு நல் தோணிபுரம்
பூந்தராய் வாய்ந்த இஞ்சிச்
சேமம் மிகு சிரபுரம் சீர்ப்புறவம் நிறை
புகழ்ச் சண்பை காழி கொச்சை
காமனை முன் காய்ந்த நுதல் கண்ணவன் ஊர்
கழுமலம் நாம் கருதும் ஊரே 1

கருத்துடைய மறையவர் சேர் கழுமலம் மெய்த்
தோணிபுரம் கனக மாட
உருத் திகழ் வெங்குருப் புகலி ஓங்கு தராய்
உலகு ஆரும் கொச்சை காழி
திருத் திகழும் சிரபுரம் தேவேந்திரன்ஊர்
செங்கமலத்து அயன்ஊர் தெய்வத்
தருத் திகழும் பொழில் புறவம் சண்பை சடைமுடி
அண்ணல் தங்கும் ஊரே 2

ஊர் மதியைக் கதுவ உயர் மதில் சண்பை
ஒளி மருவு காழி கொச்சை
கார் மலியும் பொழில் புடைசூழ் கழுமலம் மெய்த்
தோணிபுரம் கற்றோர் ஏத்தும்

சீர் மருவு பூந்தராய் சிரபுரம் மெய்ப்
புறவம் அயன்ஊர் பூங் கற்பத்
தார் மருவும் இந்திரன்ஊர் புகலி வெங்குரு
கங்கை தரித்தோன் ஊரே 3

தரித்த மறையாளர் மிகு வெங்குரு சீர்த்
தோணிபுரம் தரியார் இஞ்சி
எரித்தவன் சேர் கழுமலமே கொச்சை பூந்தராய்
புகலி இமையோர்கோன் ஊர்
தெரித்த புகழ்ச் சிரபுரம் சீர்திகழ் காழி
சண்பைசெழு மறைகள் எல்லாம்
விரித்த புகழ்ப் புறவம் விரைக் கமலத்தோன் ஊர்
உலகில் விளங்கும் ஊரே 4

விளங்கு அயன்ஊர் பூந்தராய் மிகு சண்பை
வேணுபுரம் மேகம் ஏய்க்கும்
இளங் கமுகம் பொழில் தோணிபுரம் காழி
எழில் புகலி புறவம் ஏர்ஆர்
வளம் கவரும் வயல் கொச்சை வெங்குரு மாச்
சிரபுரம் வன்னெஞ்சம் உண்டு
களங்கம் மலி களத்தவன் சீர்க் கழுமலம்
காமன் உடலம் காய்ந்தோன் ஊரே 5

காய்ந்து வரு காலனை அன்று உதைத்தவன் ஊர்
கழுமலம் மாத்தோணிபுரம் சீர்
ஏய்ந்த வெங்குரு புகலி இந்திரன்ஊர்
இருங் கமலத்து அயன்ஊர் இன்பம்
வாய்ந்த புறவம் திகழும் சிரபுரம் பூந்தராய்
கொச்சை காழி சண்பை
சேந்தனை முன் பயந்து உலகில் தேவர்கள்தம்
பகை கெடுத்தோன் திகழும் ஊரே 6

திகழ் மாடம் மலி சண்பை பூந்தராய்
பிரமன்ஊர் காழி தேசு ஆர்
மிகு தோணிபுரம் திகழும் வேணுபுரம்
வயம்கொச்சை புறவம் விண்ணோர்
புகழ் புகலி கழுமலம் சீர்ச் சிரபுரம்
வெங்குரு வெம்போர் மகிடற்செற்று
நிகழ் நீலி நின்மலன்தன் அடிஇணைகள்
பணிந்துஉலகில் நின்ற ஊரே 7

நின்ற மதில் சூழ்தரு வெங்குரு தோணிபுரம்
நிகழும் வேணு மன்றில்
ஒன்று கழுமலம் கொச்சை உயர் காழி
சண்பை வளர் புறவம் மோடி
சென்று புறங்காக்கும் ஊர் சிரபுரம் பூந்தராய்
புகலி தேவர்கோன் ஊர்
வென்றி மலி பிரமபுரம் பூதங்கள் தாம்
காக்கமிக்க ஊரே 8

மிக்க கமலத்து அயன்ஊர் விளங்கு
புறவம் சண்பை காழி கொச்சை
தொக்க பொழில் கழுமலம் தூத் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன் சேர் ஊர்
ஒமக் கொள் பொழில் வேணுபுரம் மதில்புகலி
வெங்குரு வல் அரக்கன் திண்தோள்
ஒக்க இருபது முடிகள் ஒருபதும் ஈடு
அழித்து உகந்த எம்மான் ஊரே 9

எம்மான் சேர் வெங்குரு சீர்ச் சிலம்பன்ஊர்
கழுமலம் நல் புகலி என்றும்
பொய்ம்மாண்பு இலோர் புறவம் கொச்சை
புரந்தரன்ஊர் நல் தோணிபுரம் போர்க்
கைம்மாவை உரிசெய்தோன் காழி அயன் ஊர்
தராய் சண்பை காரின்
மெய்ம் மால் பூ மகன் உணரா வகை தழலாய்
விளங்கிய எம் இறைவன் ஊரே 10

இறைவன் அமர் சண்பை எழில் புறவம்அயன் ஊர்
இமையோர்க்கு அதிபன் சேர் ஊர்
குறைவு இல் புகழ்ப் புகலி வெங்குரு தோணிபுரம்
குணம் ஆர் பூந்தராய் நீர்ச்
சிறை மலி நல் சிரபுரம் சீர்க் காழி வளர்
கொச்சை கழுமலம் தேசு இன்றிப்
பறி தலையோடு அமண்கையர் சாக்கியர்கள்
பரிசு அறியா அம்மான் ஊரே 11

அம்மான் சேர் கழுமலம் மாச் சிரபுரம்
வெங்குரு கொச்சை புறவம் அம் சீர்
மெய்ம் மானத்து ஒண் புகலி மிகு காழி
தோணிபுரம் தேவர் கோன்ஊர்
அம்மால் மன் உயர் சண்பை தராய்அயன் ஊர்
வழி முடக்கும் ஆவின் பாச்சல்
தம்மான் ஒன்றிய ஞானசம்பந்தன்
தமிழ்கற்போர் தக்கோர்தாமே 12

32. திருப்பிரமபுரம்

(வழிமொழித் திருவிராகம்)

திருமுறை 3/67 இராகம் : பந்துவராளி பண் : சாதாரி
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

சுரர்உலகு நரர்கள் பயில் தரணிதலம்
முரண் அழிய அரணமதில்முப்
புரம் எரிய விரவு வகை சர விசை கொள்
கரம் உடைய பரமன் இடமாம்
வரம்அருள வரன்முறையின் நிரல்நிறை
கொள்வரு சுருதிசிர உரையினால்
பிரமன் உயர் அரன் எழில் கொள் சரணஇணை
பரவ வளர் பிரமபுரமே 1

தாணு மிகு ஆண் இசைகொடு ஆணு வியர்
பேணும் அது காணும் அளவில்
கோணும் நுதல் நீள்நயனி கோண்இல்பிடி
மாணி மது நாணும் வகையே
ஏணு கரி பூண் அழிய ஆண் இயல் கொள்
மாணி பதி சேண் அமரர்கோன்
வேணுவினை ஏணி நகர் காணில் திவி
காண நடு வேணுபுரமே 2

பகல் ஒளிசெய் நகமணியை முகைமலரை
நிகழ் சரண அகவு முனிவர்க்கு
அகலம் மலி சகலகலை மிக உரைசெய்
முகம்உடைய பகவன் இடமாம்

பகை களையும் வகையில்அறுமுக இறையை
மிகஅருள நிகர் இல் இமையோர்
புக உலகு புகழ எழில் திகழ் நிகழ்
அலர் பெருகு புகலிநகரே 3

அம் கண் மதி கங்கைநதி வெங்கண்
அரவங்கள் எழில் தங்கும் இதழித்
துங்க மலர் தங்கு சடை அங்கி நிகர்
எங்கள் இறை தங்கும் இடமாம்
வெங்கதிர் விளங்கு உலகம் எங்கும் எதிர்
பொங்கு எரி புலன்கள் களைவோர்
வெங் குரு விளங்கி உமைபங்கர்
சரணங்கள் பணி வெங்குருஅதே 4

ஆண் இயல்பு காண வனவாண இயல்
பேணி எதிர் பாணமழை சேர்
தூணி அற நாணி அற வேணு சிலை
பேணி அற நாணி விசயன்
பாணி அமர் பூண அருள் மாணு
பிரமாணி இடம் ஏணி முறையில்
பாணி உலகு ஆள மிக ஆணின் மலி
தோணி நிகர் தோணிபுரமே 5

நிராமய பராபர புராதன
பராவு சிவராக அருள் என்று
இராவும் எதிராயது பராய் நினை
புராணன் அமராதி பதி ஆம்
அராமிசை இராதஎழில் தரு ஆய அர
பராயண வராக உரு வா
தராயனை விராய் எரி பராய்
மிகு தராய் மொழி விராய பதியே 6

அரணைஉறு முரணர்பலர் மரணம் வர
இரணம் மதில் அரம் மலி படைக்
கரம் விசிறு விரகன் அமர் கரணன் உயர்
பரன் நெறிகொள் கரனது இடமாம்
பரவு அமுது விரவ விடல் புரளம் உறும்
அரவை அரி சிரம் அரிய அச்
சிரம் அரன சரணம்அவை பரவ இரு
கிரகம்அமர் சிரபுரம்அதே 7

அறம் அழிவு பெற உலகு தெறு புயவன்
விறல்அழிய நிறுவி விரல் மா
மறையின் ஒலிமுறை முரல்செய் பிறைஎயிறன்
உற அருளும் இறைவன் இடமாம்
குறைவில் மிக நிறைதை உழி மறை அமரர்
நிறை அருள முறையொடு வரும்
புறவன் எதிர் நிறை நிலவு பொறையன் உடல்
பெற அருளும் புறவம் அதுவே 8

விண் பயில மண் பகிரி வண் பிரமன்
எண் பெரிய பண் படைகொள் மால்
கண் பரியும் ஒண்பு ஒழிய நுண்பொருள்கள்
தண் புகழ் கொள் கண்டன் இடமாம்
மண் பரியம் ஒண்பு ஒழிய நுண்பு சகர்
புண் பயில விண் படர அச்
சண்பை மொழி பண்ப முனி கண் பழிசெய்
பண்பு களை சண்பைநகரே 9

பாழி உறை வேழம் நிகர் பாழ் அமணர்
சூழும் உடலாளர் உணரா
ஏழின்இசை யாழின்மொழி ஏழையவள்
வாழும் இறை தாழும் இடமாம்
கீழ் இசை கொள் மேல்உலகில் வாழ் அரசு
சூழ் அரசு வாழ அரனுக்கு
ஆழிய சில்காழி செய ஏழ் உலகில்
ஊழி வளர் காழிநகரே 10

நச்சுஅரவு கச்சு என அசைச்சு மதி
உச்சியின் மிலைச்சு ஒரு கையால்
மெய்ச்சிரம் அணைச்சு உலகில் நிச்சம்இடு
பிச்சை அமர் பிச்சன் இடமாம்
மச்சம் மதம் நச்சி மதமச் சிறுமியை
செய் தவ அச்ச விரதக்
கொச்சை முரவு அச்சர் பணிய சுரர்கள்
நச்சி மிடை கொச்சைநகரே 11

ஒழுகல் அரிது அழி கலியில் உழி உலகு
பழி பெருகு வழியை நினையா
முழுது உடலின் எழும் மயிர்கள் தழுவும் முனி
குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழுது உலகில் இழுகும் மலம் அழியும் வகை
கழுவும் உரை கழுமலநகர்ப்
பழுதில் இறை எழுதும் மொழி தமிழ் விரகன்
வழிமொழிகள் மொழி தகையவே 12

33. திருப்பிரமபுரம்

(திருஈரடி)

திருமுறை 3/110 இராகம் : சங்கராபரணம், பைரவி பண் : பழம்பஞ்சுரம்

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

வரம்அதேகொளா உரம்அதேசெயும் புரம் எரித்தவன் பிரமநல்புரத்து
அரன்நன்நாமமே பரவுவார்கள் சீர் விரவும் நீள் புவியே 1

சேண் உலாம் மதில் வேணு மண்உளோர் காணமன்றில் ஆர் வேணுநல்புரத்
தாணுவின் கழல் பேணுகின்றவர் ஆணி ஒத்தவரே 2

அகலம் ஆர் தரைப் புகலும் நால்மறைக்கு இகல்இலோர்கள் வாழ் புகலி மா நகர்
பகல் செய்வோன் எதிர்ச் சகல சேகரன் அகிலநாயகனே 3

துங்க மாகரி பங்கமா அடும் செங் கையான் நிகழ் வெங்குருத் திகழ்
அங்கணான் அடி தம் கையால் தொழத் தங்குமோ வினையே 4

காணி ஒண் பொருள் கற்றவர்க்கு ஈகை உடைமையோர் அவர் காதல் செய்யும் நல்
தோணிவண்புரத்து ஆணி என்பவர் தூ மதியினரே 5

ஏந்து அரா எதிர் வாய்ந்த நுண்இடைப் பூந் தண் ஓதியாள் சேர்ந்த பங்கினன்
பூந்தராய் தொழும் மாந்தர் மேனிமேல் சேர்ந்து இரா வினையே 6

சுரபுரத்தினைத் துயர்செய் தாருகன் துஞ்ச வெஞ்சினக் காளியைத்தரும்
சிரபுரத்து உளான் என்ன வல்லவர் சித்தி பெற்றவரே 7

உறவும்ஆகி அற்றவர்களுகக் மா நெதி கொடுத்து நீள் புவி இலங்கு சீர்ப்
புறவ மா நகர்க்கு இறைவனே என தெறகிலா வினையே 8

பண்பு சேர்இலங்கைக்கு நாதன் நல் முடிகள்பத்தையும் கெட நெரித்தவன்
சண்பை ஆதியைத் தொழுமவர்களைச் சாதியா வினையே 9

ஆழி அங்கையில் கொண்ட மால் அயன் அறிவு ஒணாதது ஓர் வடிவுகொண்டவன்
காழி மா நகர்க் கடவுள் நாமமே கற்றல் நல்தவமே 10

விச்சை ஒன்று இலாச் சமணர் சாக்கியப்பிச்சர்தங்களைக் கரிசு அறுத்தவன்
கொச்சை மா நகர்க்கு அன்பு செய்பவர் குணங்கள் கூறுமினே 11

கழுமலத்தினுள் கடவுள் பாதமே கருது ஞானசம்பந்தன் இன்தமிழ்
முழுதும் வல்லவர்க்கு இன்பமே தரும் முக்கண் எம் இறையே 12

34. திருப்பிரமபுரம்

(திருவியமகம்)

திருமுறை 3/113 இராகம் : சங்கராபரணம், பைரவி பண் : பழம்பஞ்சுரம்
இறைவன் : பிரமபுரீசுவரார் இறைவி : திருநிலைநாயகி

உற்று உமை சேர்வது மெய்யினையே
உணர்வதும் நின் அருள்மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன் பணியே
அமரர்கள் செய்வதும் உன் பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபுரத்தை உகந்தனையே 1

சதி மிக வந்த சலந்தரனே
தடி சிரம் நேர் கொள் சலம் தரனே
அதிர் ஒளி சேர் திகிரிப்படையால்
அமர்ந்தனர் உம்பர் துதிப்பு அடையால்
மதி தவழ் வெற்புஅது கைச்சிலையே
மரு விடம் ஏற்பது கைச்சிலையே
விதியினில் இட்டு அவிரும் பரனே
வேணுபுரத்தை விரும்புஅரனே 2

காது அமரத் திகழ் தோடினனே
கானவனாய் கடிது ஓடினனே
பாதம் அதால் கூற்று உதைத்தனனே
பார்த்தன் உடல்அம்பு தைத்தனனே
தாது அவிழ் கொன்றை தரித்தனனே
சார்ந்த வினைஅது அரித்தனனே
போதம் அமரும் உரைப் பொருளே
புகலி அமர்ந்த பரம்பொருளே 3
மைத் திகழ் நஞ்சு உமிழ் மாசுணமே
மகிழ்ந்து அரை சேர்வது மா சுண்ணமே
மெய்த்து உடல் பூசுவர் மேல் மதியே
வேதம் அது ஓதுவர் மேல்மதியே
பொய்த் தலையோடு உறும் அத்தம்அதே
புரிசடை வைத்தது மத்தம்அதே
வித்தகர் ஆகிய எம் குருவே
விரும்பி அமர்ந்தனர் வெங்குருவே 4

உடன் பயில்கின்றனன் மாதவனே
உறு பொறி காய்ந்து இசை மா தவனே
திடம் பட மாமறை கண்டனனே
திரிகுணம் மேவிய கண்டனனே
படம் கொள் அரவுஅரை செய்தனனே
பகடு உரிகொண்டு அரைசெய்தனனே
தொடர்ந்த துயர்க்கு ஒரு நஞ்சு இவனே
தோணிபுரத்து உறை நம் சிவனே 5

திகழ் கையதும் புகை தங்கு அழலே
தேவர் தொழுவதும் தம் கழலே
இகழ்பவர் தாம்ஒரு மான் இடமே
இருந் தனுவோடு எழில் மானிடமே
மிக வரும் நீர் கொளும் மஞ்சு அடையே
மின் நிகர்கின்றதும் அம்சடையே
தக இரதம் கொள் வசுந்தரரே
தக்க தராய் உறை சுந்தரரே 6
ஓர்வு அரு கண்கள் இணைக்க அயலே
உமையவள் கண்கள் இணைக் கயலே
ஏர் மருவும் கழல் நாகம்அதே
எழில் கொள் உதாசனன் ஆகம்அதே
நீர் வரு கொந்து அளகம் கையதே
நெடுஞ்சடை மேவிய கங்கையதே
சேர்வு அருயோக தியம்பகனே
சிரபுரம் மேய தி அம்பு அகனே 7

ஈண்டு துயிலமர் அப்பினனே
இருங் கண் இடந்து அடி அப்பினனே
தீண்டல் அரும் பரிசு அக் கரமே
திகழ்ந்து ஒளி சேர்வது சக்கரமே
வேண்டி வருந்த நகைத் தலையே
மிகைத்து அவரோடு நகைத்தலேயே
பூண்டனர் சேரலும் மா பதியே
புறவம் அமர்ந்த உமாபதியே 8

நின் மணி வாயது நீழலையே
நேசம்அது ஆனவர் நீழலையே
உன்னி மனத்து எழு சங்கம்அதே
ஒளி அதனோடு உறுசங்கம் அதே
கன்னியரைக் கவரும் களனே
கடல்விடம் உண்ட கருங்களனே
மன்னி வரைப் பதி சண்பு ஐயதே
வாரி வயல் மலி சண்பை அதே 9
இலங்கை அரக்கர் தமக்கு இறையே
இடந்து கயிலை எடுக்க இறையே
புலன்கள் கெட உடன் பாடினனே
பொறிகள் கெட உடன்பாடினனே
இலங்கிய மேனி இரா வணனே
எய்து பெயரும் இராவணனே
கலந்து அருள் பெற்றதும் மா வசியே
காழி அரன் அடி மா வசியே 10

கண் நிகழ் புண்டரிகத்தினனே
    கலந்து இரி புண் தரி கத்தினனே
மண் நிகழும் பரிசு ஏனம்அதே
    வானகம் ஏய் வகை சேனம்அதே
நண்ணி அடிமுடி எய்தலரே
    நளிர் மலி சோலையில் எய்து அலரே
பண் இயல் கொச்சை பசுபதியே
    பசு மிக ஊர்வர் பசுபதியே 11

பரு மதில் மதுரை மன் அவை எதிரே
    பதிகம்அது எழுது இலை அவை எதிரே
வரு நதிஇடை மிசை வரு கரனே
    வசையொடும் அலர் கெட அருகு அரனே
கருதல் இல் இசை முரல்தரும் அருளே
    கழுமலம் அமர் இறை தரும் அருளே
மருவிய தமிழ்விரகன மொழியே
    வல்லவர்தம் இடர் திடம் ஒழியே 12

திருச்சிற்றம்பலம்



35. திருஆலவாய்

(திருசக்கரமாற்று)

திருமுறை 2/70 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்
இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

பிரமன்ஊர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரம் மன்னு பூந்தராய் பொன் அம் சிரபுரம் புறவம் சண்பை
அரன் மன்னு தண் காழி கொச்சைவயம் உள்ளிட்டு அங்கு ஆதிஆய
பரமன் ஊர் பன்னிரண்டாய் நின்ற திருக் கழுமலம் நாம் பரவும் ஊரே1

வேணுபுரம் பிரமன்ஊர் புகலி பெரு வெங்குரு வெள்ளத்து ஓங்கும்
தோணிபுரம் பூந்தராய் தூ நீர்ச் சிரபுரம் புறவம் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சைவயம் சண்பை கூரும் செல்வம்
காணிய வையகத்தார் ஏத்தும் கழுமலம் நாம் கருதும் ஊரே 2

புகலி சிரபுரம் வேணுபுரம் சண்பை புறவம் காழி
நிகரில் பிரமபுரம் கொச்சைவயம் நீர்மேல் நின்ற மூதூர்
அகலிய வெங்குருவோடு அம் தண் தராய் அமரர்பெருமாற்கு இன்பம்
பகரும் நகர் நல்ல கழுமலம் நாம் கைதொழுது பாடும் ஊரே 3

வெங்குரு தண் புகலி வேணுபுரம் சண்பை வெள்ளம் கொள்ளத்
தொங்கிய தோணிபுரம் பூந்தராய் தொகு பிரமபுரம் தொல் காழி
தங்கு பொழில் புறவம் கொச்சைவயம் தலை பண்டு ஆண்ட மூதூர்
கங்கை சடைமுடிமேல் ஏற்றான் கழுமலம் நாம் கருதும் ஊரே 4

தொல் நீரில் தோணிபுரம் புகலி வெங்குரு துயர் தீர் காழி
இன் நீர வேணுபுரம் பூந்தராய் பிரமன்ஊர் எழிலார் சண்பை
நன்நீர பூம்புறவம் கொச்சைவயம் சிலம்பன் நகராம் நல்ல
பொன்நீர புன்சடையான் பூந் தண் கழுமலம் நாம் புகழும் ஊரே 5

தண் அம் தராய் புகலி தாமரையான்ஊர் சண்பை தலை முன் ஆண்ட
அண்ணல் நகர் கொச்சைவயம் தண் புறவம் சீர் அணி ஆர் காழி
விண் இயல் சீர் வெங்குரு நல் வேணுபுரம் தோணிபுரம் மேலார் ஏத்து
கண்நுதலான் மேவிய நல் கழுமலம் நாம் கைதொழுது கருதும்ஊரே6

சீரார் சிரபுரமும் கொச்சைவயம் சண்பையொடு புறவம் நல்ல
ஆராத் தராய் பிரமன் ஊர்புகலி வெங்குருவொடு அந்தண் காழி
ஏரார் கழுமலமும் வேணுபுரம் தோணிபுரம் என்றுஎன்று உள்கிப்
பேரால் நெடியவனும் நான்முகனும் காண்பு அரிய பெருமான் ஊரே 7

புறவம் சிரபுரமும் தோணிபுரம் சண்பைமிகு புகலிகாழி
நறவம் மிகு சோலைக் கொச்சைவயம் தராய் நான்முகன்தன்ஊர்
விறல் ஆய வெங்குருவும் வேணுபுரம் விசயன்மேல் அம்பு எய்து
திறலால் அரக்கனைச் செற்றான்தன் கழுமலம் நாம் சேரும் ஊரே 8
சண்பை பிரமபுரம் தண் புகலி வெங்குரு நல் காழி சாயாப்
பண்பார் சிரபுரமும் கொச்சைவயம் தராய் புறவம்பார் மேல்
நண்பார் கழுமலம்சீர் வேணுபுரம் தோணிபுரம் நாண் இலாத
வெண்பல் சமணரொடு சாக்கியரை வியப்பு அழித்த விமலன் ஊரே 9

செழு மலிய பூங்காழி புறவம் சிரபுரம் சீர்ப் புகலி செய்ய
கொழுமலரான் நன்நகரம் தோணிபுரம் கொச்சைவயம் சண்பை ஆய
விழுமிய சீர் வெங்குருவோடு ஓங்குதராய் வேணுபுரம் மிகுநன் மாடக்
கழுமலம் என்று இன்னபெயர் பன்னிரண்டும் கண்ணுதலான் கருதும்ஊரே 10


கொச்சைவயம் பிரமன்ஊர் புகலி வெங்குருப் புறவம் காழி
நிச்சல் விழவு ஓவா நீடு ஆர் சிரபுரம் நீள் சண்பை மூதூர்
நச்சு இனிய பூந்தராய் வேணுபுரம் தோணிபுரம் ஆகி நம்மேல்
அச்சங்கள் தீர்த்துஅருளும் அம்மான் கழுமலம் நாம் அமரும் ஊரே 11

காவிமலர் புரையும் கண்ணார் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவிய சீர்ப் பன்னிரண்டும் நல்நூலாப் பத்திமையால் பனுவன்மாலை
நாவின் நலம் புகழ் சீர் நால்மறையான் ஞானசம்பந்தன் சொன்ன
மேவி இசை மொழிவார் விண்ணவரில் எண்ணுதலை விருப்புளாரே 12

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (பிரமனூர் வேணுபுரம்)

தனது திருமாளிகைக்கு எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையாரைப் பாண்டியன் தனது தலைப்பக்கம் ஒரு மணிப்பீடம் இடுவித்து அதிலெழுந் தருளுமாறு வேண்டிக்கொண்டான் எழுந்தருளிய பிள்ளையாரது திரு நோக்கத்தால் அரசன் சிறிது வெப்புநீங்கிப் பேசும் ஆற்றலுடையவனாய்ப் பிள்ளையாரைப் பார்த்துத் தேவரீரது கெழுவுறு பதி யாதென்று விருப்புடன் கேட்டபோது அவர் இப்பதிகத்தை எடுத்து அதன் திருப்பாட்டின் இறுதிதோறும் 'கழுமலநாங் கருதுமூர்' என்று வைத்துப் பாடியருளினார்.



36. திருப்பிரமபுரம்

(திருசக்கரமாற்று)

திருமுறை 2/73 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்

இறைவன் : பிரமபுரீசுவரர் இறைவி : திருநிலைநாயகி

விளங்கிய சீர்ப் பிரமன்ஊர் வேணுபுரம்
புகலி வெங்குரு மேல் சோலை
வளம் கவரும் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம் வண் புறவம் மண்மேல்
களங்கம் இல் ஊர்சண்பை கமழ் காழி வயம் கொச்சை
கழுமலம் என்று இன்ன
இளங்குமரன் தன்னைப்பெற்று இமையவர்தம்
பகை எறிவித்த இறைவன் ஊரே 1

திரு வளரும் கழுமலமே கொச்சை
தேவேந்திரன்ஊர் அயன்ஊர் தெய்வத்
தருவளரும் பொழில்புறவம் சிலம்பன்ஊர்
காழி தகு சண்பை ஒண் பா
உரு வளர் வெங்குரு புகலி ஓங்கு தராய்
தோணிபுரம் உயர்ந்த தேவர்
வெருவ வளர் கடல்விடம்அது உண்டு அணிகொள்
கண்டத்தோன் விரும்பும் ஊரே 2

வாய்ந்த புகழ் மறை வளரும் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன் வாழ் ஊர்
ஏய்ந்த புறவம் திகழும் சண்பை எழில்
காழி இறை கொச்சை அம் பொன்

வேய்ந்த மதில் கழுமலம் விண்ணோர் பணிய
மிக்க அயனூர் அமரர்கோன்ஊர்
ஆய்ந்த கலை ஆர் புகலி வெங்குருஅது
அரன் நாளும் அமரும் ஊரே 3

மாமலையாள்கணவன் மகிழ் வெங்குரு மாப்
புகலி தராய் தோணிபுரம் வான்
சேம மதில் புடை திகழும் கழுமலமே
கொச்சை தேவேந்திரன் ஊர் சீர்ப்
பூமகன்ஊர் பொலிவு உடைய புறவம் விறல்
சிலம்பன்ஊர் காழி சண்பை
பா மருவு கலைஎட்டு எட்டு உணர்ந்து அவற்றின்
பயன்நுகர்வோர் பரவும் ஊரே 4

தரைத்தேவர் பணி சண்பை தமிழ்க் காழி
வயம்கொச்சை தயங்கு பூமேல்
விரைச் சேரும் கழுமலம் மெய் உணர்ந்த அயனூர்
விண்ணவர்தம்கோன்ஊர் வென்றித்
திரைச்சேரும் புனல்புகலி வெங்குரு
செல்வம் பெருகு தோணிபுரம் சீர்
உரைச் சேர் பூந்தராய் சிலம்பன்ஊர் புறவம்
உலகத்தில் உயர்ந்த ஊரே 5

புண்டரிகத்து ஆர் வயல் சூழ் புறவம் மிகு
சிரபுரம் பூங் காழி சண்பை
எண் திசையோர் இறைஞ்சிய வெங்குரு புகலி
பூந்தராய் தோணிபுரம் சீர்
வண்டு அமரும் பொழில் மல்கு கழுமலம் நல்
கொச்சை வானவர்தம்கோன்ஊர்
அண்டு அயன்ஊர் இவை என்பர் அருங்கூற்றை
உதைத்து உகந்த அப்பன் ஊரே 6

வண்மை வளர் வரத்துஅயன்ஊர் வானவர்தம்
கோன்ஊர் வண்புகலி இஞ்சி
வெண்மதி சேர் வெங்குரு மிக்கோர் இறைஞ்சு
சண்பை வியன்காழி கொச்சை
கண் மகிழும் கழுமலம் கற்றோர் புகழும்
தோணிபுரம் பூந்தராய் சீர்ப்
பண் மலியும் சிரபுரம் பார் புகழ்புறவம்
பால்வண்ணன் பயிலும் ஊரே 7

மோடி புறங்காக்கும் ஊர் புறவம் சீர்ச்
சிலம்பன்ஊர் காழிமூதூர்
நீடு இயலும் சண்பை கழுமலம் கொச்சை
வேணுபுரம் கமல நீடு
கூடியவன் ஊர் வளர் வெங்குரு புகலி
தராய் தோணிபுரம் கூடபோர்
தேடி உழல் அவுணர் பயில் திரிபுரங்கள்
செற்ற மலைச் சிலையன் ஊரே 8

இரக்கம் உடை இறைவன் ஊர் தோணிபுரம்
பூந்தராய் சிலம்பன்தன் ஊர்
நிரக்க வருபுனல் புறவம் நின்ற தவத்து
அயன்ஊர் சீர்த் தேவர் கோன்ஊர்
வரக் கரவாப் புகலி வெங்குரு மாசு
இலாச் சண்பை காழி கொச்சை
அரக்கன் விறல் அழித்து அருளி கழுமலம்
அந்தணர் வேதம் அறாத ஊரே 9

மேல்ஓதும் கழுமலம் மெய்த்தவம் வளரும்
கொச்சை இந்திரன்ஊர் மெய்ம்மை
நூல் ஓதும் அயன்தன்ஊர் நுண் அறிவார்
குரு புகலி தராய் தூ நீர்மேல்
சேல் ஓடு தோணிபுரம் திகழ் புறவம்
சிலம்பன் ஊர்செருச் செய்து அன்று
மாலோடும் அயன் அறியான் வண் காழி
சண்பை மண்ணோர் வாழ்த்தும் ஊரே 10

ஆக்கு அமர் சீர் ஊர் சண்பை காழி அமர்
கொச்சை கழுமலம் அன்பான் ஊர்
ஓக்கம் உடைத் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம் ஒண் புறவம் நண்பு ஆர்
பூக்கமலத்தோன் மகிழ் ஊர் புரந்தரன்ஊர்
புகலி வெங்குருவும் என்பர்
சாக்கியரோடு அமண்கையர் தாம்அறியா
வகை நின்றான் தங்கும் ஊரே 11

அக்கரம்சேர் தருமன்ஊர் புகலி தராய்
தோணிபுரம் அணிநீர்ப் பொய்கை
புக்கரம் சேர் புறவம் சீர்ச் சிலம்பன்ஊர்
புகழ்க் காழி சண்பை தொல் ஊர்
மிக்கர் அம் சீர்க் கழுமலமே கொச்சைவயம்
வேணுபுரம் அயன்ஊர் மேல் இச்
சக்கரம் சீர்த் தமிழ்விரகன் தான் சொன்ன
தமிழ் தரிப்போர் தவம் செய்தோரே 12

37. திருவேணுபுரம்

திருமுறை 1/9 இராகம் : நாட்டை பண் : நட்டபாடை

வண்டு ஆர் குழல் அரிவையொடும் பிரியா வகை பாகம்
பெண் தான் மிக ஆனான் பிறைச்சென்னிப் பெருமான்ஊர்
தண்தாமரைமலராள் உறை தவளந்நெடுமாடம்
விண் தாங்குவ போலும் மிகு வேணுபுரம் அதுவே. 1

படைப்பும் நிலை இறுதிப்பயன் பருமையொடு நேர்மை
கிடைப் பல்கணம் உடையான் கிறி பூதப்படையான் ஊர்
புடைப்பாளையின் கமுகின்னொடு புன்னைமலர் நாற்றம்
விடைத்தே வரு தென்றல் மிகு வேணுபுரம் அதுவே. 2

கடம் தாங்கிய கரியை அவர் வெருவ உரிபோர்த்துப்
படம் தாங்கிய அரவக்குழைப் பரமேட்டிதன் பழ ஊர்
நடம் தாங்கிய நடையார் நல பவளத்துவர் வாய் மேல்
விடம் தாங்கிய கண்ணார் பயில் வேணுபுரம் அதுவே. 3

தக்கன்தன சிரம்ஒன்றினை அரிவித்து அவன் தனக்கு
மிக்கவரம் அருள்செய்த எம் விண்ணோர் பெருமான் ஊர்
பக்கம் பலமயில் ஆடிட மேகம் முடிவு அதிர
மிக்கமது வண்டு ஆர் பொழில் வேணுபுரம் அதுவே. 4

நானா வித உருவான் நமை ஆள்வான் நணுகாதார்
வானார் திரி புரம்மூன்று எரியுண்ணச் சிலை தொட்டான்
தேன் ஆர்ந்து எழு கதலிக்கனி உண்பான் திகழ் மந்தி
மேல் நோக்கி நின்று இரங்கும் பொழில் வேணுபுரம் அதுவே.5

மண்ணோர்களும் விண்ணோர்களும் வெருவிம் மிக அஞ்சக்
கண் ஆர் சலம் மூடிக் கடல் ஒங்க(வ்)ஞ் உயர்ந்தான் ஊர்
தண் ஆர் நறுங்கமலம்மலர் சாய இள வாளை
விண் ஆர் குதிகொள்ளும் வியன் வேணுபுரம் அதுவே. 6–7

மலையான்மகள் அஞ்சவ்வரை எடுத்து அவ்வலி அரக்கன்
தலைதோள் அவை நெரியச் சரண்உகிர் வைத்தவன்தன் ஊர்
கலைஆறொடு சுருதித்தொகை கற்றோர் மிகு கூட்டம்
விலைஆயின சொல் தேர் தரு வேணுபுரம் அதுவே 8

வயம் உண்ட அம்மாலும் அடி காணாது அலமாக்கும்
பயன் ஆகிய பிரமன்படுதலை ஏந்திய பரன்ஊர்
கயம்மேவிய சங்கம்தரு கழிவிட்டு உயர் செந்நெல்
வியன் மேவி வந்து உறங்கும் பொழில் வேணுபுரம் அதுவே. 9

மாசு ஏறிய உடலார் அமண் குழுக்களொடு தேரர்
தேசு ஏறிய பாதம் வணங்காமைத் தெரியான்ஊர்
தூசு ஏறிய அல்குல்துடி இடையார் துணை முலையார்
வீசு ஏறிய புருவத்தவர் வேணுபுரம் அதுவே. 10

வேதத்து ஒலியானும் மிகு வேணுபுரம் தன்னைப்
பாதத்தினில் மனம்வைத்து எழு பந்தன்தன பாடல்
ஏதத்தினை இல்லா இவைபத்தும் இசை வல்லார்
கேதத்தினை இல்லார் சிவகெதியைப் பெறுவாரே. 11

பதிக வரலாறு : (வண்டார்)

தொண்டைநாடு, நடுநாடு, வடநாடு முதலிய நாடுகளையடைந்து ஆங்காங்குள்ள திருப்பதிகளை வணங்கிக் 'கற்றவர்கள் பரவு திருக்கழுமல'த்தைச் சென்றடையத் திரும்பும் பாலறாவாயர் 'பன்னிருபேர் படைத்த தொல்லைவளம் பூந்தராய் தூரத்தே தோன்ற'க் கண்டு சிவிகையினின்றும் இறங்கி எதிர் வணங்கி 'வணடார் குழலரிவை' என்னும் இப்பதிக்கத்தை எடுத்துப் பாடிச்சென்று அதில் 'தண்டாமரை மலராளுறை தவளந் நெடுமாடம், விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம்' என அப்பதியைச் சிறப்பித்தருளினார்.

38. திருவேணுபுரம்

திருமுறை 2/17 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்

நிலவும் புனலும் நிறை வாள்அரவும்
இலகும் சடையார்க்கு இடம்ஆம் எழிலார்
உலவும் வயலுக்கு ஒளி ஆர் முத்தம்
விலகும் கடலார் வேணுபுரமே 1

அரவு ஆர் கரவன் அமை ஆர் திரள்தோள்
குரவு ஆர் குழலாள் ஒருகூறன் இடம்
கரவாத கொடைக்கு அலந்தார்அவர்க்கு
விரவுஆக வல்லார் வேணுபுரமே 2

ஆகம் அழகுஆயவள்தான் வெருவ
நாகம் உரி போர்த்தவன் நண்ணும் இடம்
போகம் தரு சீர் வயல் சூழ் பொழில்கள்
மேகம் தவழும் வேணுபுரமே 3

காசு அக் கடலில் விடம் உண்ட கண்டத்து
ஈசர்க்கு இடம்ஆவது இன்நறவ
வாசக்கமலத்து அனம் வன் திரைகள்
வீசத் துயிலும் வேணுபுரமே 4

அரை ஆர் கலை சேர் அனமென்நடையை
உரையா உகந்தான் உறையும் இடம்ஆம்
நிரை ஆர் கமுகின் நிகழ்பாளை உடை
விரை ஆர் பொழில் சூழ் வேணுபுரமே 5

ஒளிரும் பிறையும் உறு கூவிள இன்
தளிரும் சடைமேல் உடையான் இடம்ஆம்
நளிரும் புனலில் நல செங்கயல் கண்
மிளிரும் வயல் சூழ் வேணுபுரமே 6–7

ஏவும் படை வேந்தன் இராவணனை
ஆ என்று அலற அடர்த்தான் இடம்ஆம்
தாவும் மறிமானொடு தண்மதியம்
மேவும் பொழில் சூழ் வேணுபுரமே 8

கண்ணன் கடிமாமலரில் திகழும்
அண்ணல் இருவர் அறியா இறை ஊர்
வண்ணச் சுதை மாளிகைமேல் கொடிகள்
விண்ணில் திகழும் வேணுபுரமே 9

போகம் அறியார் துவர் போர்த்து உழல்வார்
ஆகம் அறியா அடியார் இறைஊர்
மூகம் அறிவார் கலை முத்தமிழ் நூல்
மீ கம் அறிவார் வேணுபுரமே 10

கலம் ஆர் கடல் போல் வளம் ஆர்தரு நல்
புலம் ஆர்தருவேணுபுரத்து இறையை
நலம் ஆர்தரு ஞானசம்பந்தன் சொன்ன
குலம் ஆர் தமிழ் கூறுவர் கூர்மையரே 11

39. திருவேணுபுரம்

திருமுறை 2/81 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்

பூதத்தின் படையினீர் பூங்கொன்றைத் தாரினீர்
ஓதத்தின் ஒலியோடும் உம்பர்வானவர் புகுந்து
வேதத்தின் இசை பாடி விரைமலாகள் சொரிந்து ஏத்தும்
பாதத்தீர் வேணுபுரம் பதிஆகக் கொண்டீரே. 1

சுடகாடு மேவினீர் துன்னம் பெய் கோவணம் தோல்
உடை ஆடைஅது கொண்டீர் உமையாளை ஒருபாகம்
அடையாளம்அது கொண்டீர் அம் கையினில் பரசு எனும்
படை ஆள்வீர் வேணுபுரம் பதிஆகக் கொண்டீரே 2

கங்கை சேர் சடைமுடியீர் காலனை முன் செற்று உகந்தீர்
திங்களோடு இள அரவம் திகழ்சென்னி வைத்து உகந்தீர்
மங்கை ஓர்கூறு உடையீர் மறையோர்கள் நிறைந்து ஏத்தப்
பங்கயன் சேர் வேணுபுரம் பதிஆகக் கொண்டீரே 3

நீர் கொண்ட சடைமுடிமேல் நீள மதியம் பாம்பினொடும்
ஏர் கொண்ட கொன்றையினோடு எழில் மத்தம் இலங்கவே
சீர் கொண்ட மாளிகைமேல் சேயிழையார் வாழ்த்து உரைப்பக்
கார் கொண்ட வேணுபுரம் பதிஆகக் கலந்தீரே 4

ஆலை சேர் தண்கழனி அழகுஆக நறவு உண்டு
சோலை சேர் வண்டுஇனங்கள் இசைபாடத் தூ மொழியார்
காலையே புகுந்து இறைஞ்சிக் கைதொழ மெய் மாதினொடும்
பாலையாழ் வேணுபுரம் பதிஆகக் கொண்டீரே 5

மணி மல்கு மால்வரைமேல் மாதினொடு மகிழ்ந்து இருந்தீர்
துணி மல்கு கோவணத்தீர் சுடுகாட்டில் ஆட்டு உகந்தீர்
பணி மல்கு மறையோர்கள் பரிந்து இறைஞ்ச வேணுபுரத்து
அணி மல்கு கோயிலே கோயில்ஆக அமர்ந்தீரே 6

நீலம் சேர் மிடற்றினீர் நீண்ட செஞ்சடையினீர்
கோலம் சேர் விடையினீர் கொடுங்காலன்தனைச் செற்றீர்
ஆலம் சேர் கழனி அழகுஆர் வேணுபுரம் அமரும்
கோலம் சேர் கோயிலே கோயிலாகக் கொண்டீரே 7

இரை மண்டிச் சங்கு ஏறும் கடல் சூழ்தென் இலங்கையர் கோன்
விரை மண்டு முடி நெரிய விரல் வைத்தீர் வரைதன்னின்
கரை மண்டிப் பேர் ஓதம் கலந்து எற்றும் கடல் கவின் ஆர்
விரை மண்டு வேணுபுரமே அமர்ந்து மிக்கீரே. 8

தீ ஓம்பு மறைவாணர்க்கு ஆதிஆம் திசைமுகன் மால்
போய் ஓங்கி இழிந்தாரும் போற்ற அரிய திருவடியீர்
பாய் ஓங்கு மரக் கலங்கள் படு திரையால் மொத்துண்டு
சேய் ஓங்கு வேணுபுரம் செழும் பதியாத் திகழ்ந்தீரே. 9

நிலை ஆர்ந்த உண்டியினர் நெடுங் குண்டர் சாக்கியர்கள்
புலைஆனார் அறஉரையைப் போற்றாது உன் பொன்னடியே
நிலைஆகப் பேணீ நீ சரண் என்றார்தமை என்றும்
விலைஆக ஆட்கொண்டு வேணுபுரம் விரும்பினையே 10–11

40. திருப்புகலி

திருமுறை 1/30 இராகம் : காம்போதி பண் : தக்கராகம்

விதிஆய் விளைவுஆய் விளைவின் பயன்ஆகிக்
கொதியா வரு கூற்றை உதைத்தவர் சேரும்
பதிஆவது பங்கயம் நின்று அலர தேன்
பொதி ஆர் பொழில் சூழ் புகலிந் நகர்தானே 1

ஒன்னார் புரம்மூன்றும் எரித்த ஒருவன்
மிக ஆர் இடையாளொடும் கூடிய வேடம்
தன்னால் உறைவு ஆவது தண்கடல் சூழ்ந்த
பொன் ஆர் வயல் பூம் புகலிந் நகர்தானே 2

வலி இல் மதி செஞ்சடை வைத்த மணாளன்
புலியின்அதள் கொண்டு அரை ஆர்த்த புனிதன்
மலியும் பதி மா மறையோர் நிறைந்து ஈண்டிப்
பொலியும் புனல் பூம் புகலிந்நகர்தானே 3

கயல் ஆர் தடங்கண்ணியொடும் எருது ஏறி
அயலார் கடையில் பலி கொண்ட அழகன்
இயலால் உறையும் இடம் எண்திசையோர்க்கும்
புயல் ஆர் கடல் பூம் புகலிந்நகர்தானே 4

காது ஆர் கன பொன்குழை தோடுஅது இலங்கத்
தாது ஆர் மலர் தண்சடை ஏற முடித்து
நாதான் உறையும் இடம் ஆவது நாளும்
போது ஆர் பொழில் பூம் புகலிந்நகர்தானே 5

வலம்ஆர் படை மான் மழு ஏந்திய மைந்தன்
கலம் ஆர் கடல் நஞ்சு அமுதுஉண்ட கருத்தன்
குலம் ஆர் பதி கொன்றைகள் பொன் சொரிய தேன்
புலம் ஆர் வயல் பூம் புகலிந்நகர்தானே 6

கறுத்தான் கனலால் மதில்மூன்றையும் வேவச்
செறுத்தான் திகழும் கடல்நஞ்சு அமுதுஆக
அறுத்தான் அயன்தன் சிரம் ஐந்திலும் ஒன்றைப்
பொறுத்தான் இடம் பூம் புகலிந்நகர்தானே 7

தொழிலால் மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல
எழில் ஆர் வரையால் அன்று அரக்கனைச் செற்ற
கழலான் உறையும் இடம் கண்டல்கள் மிண்டிப்
பொழிலால் மலி பூம் புகலிந்நகர்தானே 8

மாண்டார் சுடலைப் பொடி பூசி மயானத்து
ஈண்டா நடம்ஆடிய ஏந்தல் தன் மேனி
நீண்டான் இருவர்க்கு எரிஆய் அரவுஆரம்
பூண்டான் நகர் பூம் புகலிந்நகர்தானே 9

உடையார் துகில் போர்த்து உழல்வார் சமண்கையர்
அடையாதன சொல்லுவர் ஆதர்கள் ஓத்தைக்
கிடையாதவன்தன் நகர் நல் மலி பூகம்
புடை ஆர்தரு பூம் புகலிந்நகர்தானே 10

இரைக்கும் புனல் செஞ்சடை வைத்த எம்மான்தன்
புரைக்கும் பொழில் பூம் புகலிந்நகர்தன்மேல்
உரைக்கும் தமிழ் ஞானசம்பந்தன் ஒண் மாலை
வரைக்கும் தொழில் வல்லவர் நல்லவர்தாமே 11

41. திருப்புகலி

திருமுறை 1/104 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

ஆடல் அரவு அசைத்தான் அருமாமறைதான் விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகாடு அமர்ந்த பிரான்
ஏடு அவிழ் மாமலையாள் ஒருபாகம் அமர்ந்து அடியார் ஏத்த
ஆடிய எம் இறை ஊர் புகலிப்பதிஆமே 1

ஏலம் மலி குழலார் இசை பாடி எழுந்து அருளால் சென்று
சோலை மலி சுனையில் குடைந்து ஆடித் துதிசெய்ய
ஆலை மலி புகைபோய் அண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலைஅது செய்யும் புகலிப்பதிஆமே 2

ஆறு அணி செஞ்சடையான் அழகு ஆர் புரம்மூன்றும் அன்று வேவ
நீறு அணிஆக வைத்த நிமிர்புன்சடை எம்இறைவன்
பாறு அணி வெண்தலையில் பகலே பலி என்று வந்து நின்ற
வேறு அணி கோலத்தினான் விரும்பும் புகலிஅதே. 3

வெள்ளம் அது சடைமேல் கரந்தான் விரவார் புரங்கள் மூன்றும்
கொள்ள எரிமடுத்தான் குறைவு இன்றி உறை கோயில்
அள்ளல் விளை கழனி அழகு ஆர் விரைத் தாமரைமேல் அன்னம்
புள்இனம் வைகி எழும் புகலிப்பதிதானே 4

சூடும் மதிச்சடைமேல் சுரும்பு ஆர் மலர்க்கொன்றை துன்ற நட்டம்
ஆடும் அமரர்பிரான் அழகு ஆர் உமையோடும் உடன்
வேடுபட நடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட இனிது உறையும் புகலிப்பதியாமே 5

மைந்துஅணி சோலையின்வாய் மதுப்பாய் வரிவண்டு இனங்கள் வந்து
நந்து இசை பாட நடம் பயில்கின்ற நம்பன் இடம்
அந்தி செய் மந்திரத்தால் அடியார்கள் பரவிஎழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப்பதிதானே 6

மங்கை ஓர்கூறு உகந்த மழுவாளன் வார்சடைமேல் திங்கள்
கங்கைதனைக் கரந்த கறைக்கண்டன் கருதும் இடம்
செங்கயல் வார் கழனி திகழும் புகலிதனைச் சென்று தம்
அம் கையினால் தொழுவார் அவலம் அறியாரே 7

வில் இயல் நுண்இடையாள்உமையாள் விருப்பன் அவன் நண்ணும்
நல் இடம் என்று அறியான் நலியும் விறல்அரக்கன்
பல்லொடு தோள் நெரிய விரல் ஊன்றிப் பாடலுமே கை வாள்
ஒல்லை அருள்புரிந்தான் உறையும் புகலியதே 8

தாது அலர்தாமரைமேல் அயனும் திருமாலும் தேடி
ஓதியும் காண்பு அரிய உமைகோன் உறையும்மிடம்
மாதவி வான்வகுளம் மலர்ந்துஎங்கும் விரைதோய வாய்ந்த
போதுஅலர் சோலைகள் சூழ் புகலிப் பதிதானே 9

வெந் துவர் மேனியினார் விரி கோவணம் நீத்தார் சொல்லும்
அந்தரஞானம் எல்லாம் அவை ஓர் பொருள் என்னேல்
வந்து எதிரும்புரம் மூன்று எரித்தான் உறைகோயில் வாய்ந்த
புந்தியினார் பயிலும் புகலிப்பதிதானே 10

வேதம் ஓர் கீதம்உணர்வாணர் தொழுது ஏத்த மிகு வாசப்
போதனைப் போல் மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானம் மிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்
ஓத வல்லார் உலகில் உறு நோய் களைவாரே 11

42. திருப்புகலி

திருமுறை 2/25 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்

உகலி ஆழ்கடல் ஓங்கு பார்உளீர்
அகலியா வினை அல்லல் போய் அறும்
இகலியார் புரம் எய்தவன் உறை
புகலி மா நகர் போற்றி வாழ்மினே 1

பண்ணி ஆள்வது ஓர் ஏற்றர் பால்மதிக்
கண்ணியார் கமழ் கொன்றை சேர் முடிப்
புண்ணியன் உறையும் புகலியை
நண்ணுமின் நலமான வேண்டிலே 2

வீசும் மின் புரை காதல் மேதகு
பாச வல்வினை தீர்த்த பண்பினன்
பூசும் நீற்றினன் பூம் புகலியைப்
பேசுமின் பெரிது இன்பம் ஆகவே 3

கடி கொள் கூவிளம் மத்தம் வைத்தவன்
படி கொள் பாரிடம் பேசும் பான்மையன்
பொடி கொள் மேனியன் பூம் புகலியுள்
அடிகளை அடைந்து அன்பு செய்யுமே 4

பாதத்து ஆர் ஒலி பல்சிலம்பினன்
ஓதத்து ஆர் விடம் உண்டவன் படைப்
பூதத்தான் புகலிந்நகர் தொழ
ஏதத்தார்க்கு இடம் இல்லை என்பரே 5

மறையினான் ஒலி மல்கு வீணையன்
நிறையினார் நிமிர்புன்சடையன் எம்
பொறையினான் உறையும் புகலியை
நிறையினால் தொழ நேசம் ஆகுமே 6

கரவுஇடை மனத்தாரைக் காண்கிலான்
இரவுஇடைப் பலி கொள்ளும் எம் இறை
பொரு விடை உயர்த்தான் புகலியைப்
பரவிடப் பயில் பாவம் பாறுமே 7

அருப்பின் ஆர் முலை மங்கை பங்கினன்
விருப்பினான் அரக்கன் உரம் செகும்
பொருப்பினான் பொழில் ஆர் புகலியூர்
இருப்பினான் அடி ஏத்தி வாழ்த்துமே 8

மாலும் நான்முகன்தானும் வார் கழல்
சீலமும் முடி தேட நீண்டுஎரி
போலும் மேனியன் பூம் புகலியுள்
பால்அதுஆடிய பண்பன் அல்லனே 9

நின்று துய்ப்பவர் நீசர்தேரர் சொல்
ஒன்றுஅதுஆக வையா உணர்வினுள்
நின்றவன் நிகழும் புகலியைச்
சென்று கைதொழச் செல்வம் ஆகுமே 10

புல்லம்ஏறிதன் பூம் புகலியை
நல்ல ஞானசம்பந்தன் நாவினால்
சொல்லும் மாலைஈர் ஐந்தும் வல்லவர்க்கு
இல்லை ஆம் வினை இரு நிலத்துளே 11

43. திருப்புகலி

திருமுறை 2/29 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்

முன்னிய கலைப்பொருளும் மூஉலகில் வாழ்வும்
பன்னிய ஒருத்தர் பழ வூர் வினவின் ஞாலம்
துன்னி இமையோர்கள் துதிசெய்து முன் வணங்கும்
சென்னியர் விருப்புஉறு திருப்புகலி ஆமே 1

வண்டு இரை மதிச் சடை மிலைத்த புனல் சூடிப்
பண்டு எரி கை ஆடு பரமன் பதி அது என்பர்
புண்டரிக வாசம் அது வீச மலர்ச்சோலைத்
தெண்திரை கடல்பொலி திருப் புகலிஆமே 2

பா அணவு சிந்தை அவர் பத்தரொடு கூடி
நா அணவும் அந்தணன் விருப்பு இடம் அது என்பர்
பூ அணவு சோலை இருள் மாலை எதிர் கூர
தே வண விழா வளர் திருப் புகலிஆமே 3

மை தவழும் மா மிடறன் மாநடம்அது ஆடி
கை வளையினாளொடு கலந்த பதி என்பர்
செய் பணி பெருத்து எழும் உருத்திரர்கள் கூடித்
தெய்வம் அது இணக்கு உறு திருப் புகலிஆமே 4

முன்னம் இரு மூன்று சமயங்கள் அவையாகிப்
பின்னை அருள்செய்த பிறையாளன் உறைகோயில்
புன்னைய மலர்ப்பொழில்கள் அக்கின் ஒளி காட்டச்
செந்நெல் வயல் ஆர்தரு திருப் புகலிஆமே 5

வங்கம் மலியும் கடல் விடத்தினை நுகர்ந்த
அங்கணன் அருத்தி செய்து இருக்கும் இடம் என்பர்
கொங்கு அண வியன்பொழிலின் மாசுபனி மூச
தெங்கு அணவு தேன் மலி திருப் புகலிஆமே 6

நல்குரவும் இன்பமும் நலங்கள் அவையாகி
வல்வினைகள் தீர்த்துஅருளும் மைந்தன் இடம் என்பர்
பல்கும் அடியார்கள் படி ஆர இசை பாடிச்
செல்வ மறையோர் உறை திருப் புகலிஆமே 7

பரப்புஉறு புகழ்ப் பெருமையாளன் வரைதன்னால்
அரக்கனை அடர்த்து அருளும் அண்ணல் இடம் என்பர்
நெருக்குறு கடல்திரைகள் முத்தம்மணி சிந்தச்
செருக்குறு பொழில் பொலி திருப் புகலிஆமே 8

கோடலொடு கூன்மதி குலாயசடை தன்மேல்
ஆடுஅரவம் வைத்துஅருளும் அப்பன் இருவர்க்கும்
நேட எரி ஆகி இருபாலும் அடி பேணித்
தேட உறையும் நகர் திருப் புகலிஆமே 9

கற்ற அமணர் உற்றுஉலவு தேரர் உரைசெய்த
குற்றம் மொழி கொள்கைஅது இலாத பெருமான் ஊர்
பொன் தொடி மடந்தையரும் மைந்தர் புலன் ஐந்தும்
செற்றவர் விருப்புறு திருப் புகலிஆமே 10

செந்தமிழ் பரப்புஉறு திருப் புகலிதன்மேல்
அந்தம் முதல்ஆகி நடுவு ஆய பெருமானைப்
பந்தன் உரை செந்தமிழ்கள் பத்தும் இசை கூர
வந்த வணம் ஏத்துமர் வானம் உடையாரே 11

44. திருப்புகலி

திருமுறை 2/54 இராகம் : நவரோசு பண் : காந்தாரம்

உரு ஆர்ந்த மெல்லியல் ஓர்பாகம் உடையீர் அடைவோர்க்குக்
கரு ஆர்ந்த வான்உலகம் காட்டிக் கொடுத்தல் கருத்து ஆனீர்
பொரு ஆர்ந்த தெண்கடல் ஒண்சங்கம் திளைக்கும் பூம் புகலித்
திரு ஆர்ந்த கோயிலே கோயில் ஆகத் திகழ்ந்தீரே 1

நீர் ஆர்ந்த செஞ்சடையீர் நிரை ஆர் கழல் சேர் பாதத்தீர்
ஊர் ஆர்ந்த சில்பலியீர் உழைமான்உரி தோல் ஆடையீர்
போர் ஆர்ந்த தெண்திரை சென்று அணையும் கானல் பூம் புகலிச்
சீர் ஆர்ந்த கோயிலே கோயில்ஆகச் சேர்ந்தீரே 2

அழி மல்கு பூம் புனலும் அரவும் சடைமேல் அடைவு எய்த
மொழி மல்கு மாமறையீர் கறை ஆர் கண்டத்து எண்தோளீர்
பொழில் மல்கு வண்டுஇனங்கள் அறையும் கானல் பூம் புகலி
எழில் மல்கு கோயிலே கோயில்ஆக இருந்தீரே 3

கையில் ஆர்ந்த வெண்மழு ஒன்று உடையீர் கடிய கரியின்தோல்
மயில் ஆர்ந்த சாயல் மடமங்கை வெருவ மெய் போர்த்தீர்
பயில் ஆர்ந்த வேதியர்கள் பதிஆய் விளங்கும் பைம் புகலி
எயில் ஆர்ந்த கோயிலே கோயில்ஆக இசைந்தீரே 4

நா ஆர்ந்த பாடலீர் ஆடல் அரவம் அரைக்கு ஆர்த்தீர்
பா ஆர்ந்த பல்பொருளின் பயன்கள் ஆனீர் அயன் பேணும்
பூ ஆர்ந்த பொய்கைகளும் வயலும் சூழ்ந்த பொழில் புகலித்
தே ஆர்ந்த கோயிலே கோயில் ஆகத் திகழ்ந்தீரே 5

மண் ஆர்ந்த மண்முழவம் ததும்ப மலையான் மகள் என்றும்
பெண் ஆர்ந்த மெய் மகிழப் பேணி எரி கொண்டு ஆடினீர்
விண் ஆர்ந்த மதியம் மிடை மாடத்து ஆரும் வியன்புகலிக்
கண் ஆர்ந்த கோயிலே கோயில்ஆகக் கலந்தீரே 6

களி புல்கு வல்அவுணர் ஊர்மூன்று எரியக் கணை தொட்டீர்
அளி புல்கு பூ முடியீர் அமரர் ஏத்த அருள்செய்தீர்
தெளி புல்கு தேன்இனமும் அலருள் விரை சேர் திண் புகலி
ஒளி புல்கு கோயிலே கோயில் ஆக உகந்தீரே 7

பரந்து ஓங்கு பல்புகழ் சேர் அரக்கர்கோனை வரைக்கீழ் இட்டு
உரம் தோன்றும் பாடல்கேட்டு உகவை அளித்தீர் உகவாதார்
புரம் தோன்று மும்மதிலும் எரியச் செற்றீர் பூம் புகலி
வரம் தோன்று கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே 8

சலம் தாங்கு தாமரைமேல் அயனும் தரணி அளந்தானும்
கலந்துஓங்கி வந்து இழிந்தும் காணா வண்ணம் கனல்ஆனீர்
புலம் தாங்கி ஐம்புலனும் செற்றார் வாழும் பூம் புகலி
நலம் தாங்கு கோயிலே கோயில்ஆக நயந்தீரே. 9

நெடிது ஆய வன்சமணும் நிறைவு ஒன்று இல்லாச் சாக்கியரும்
கடிதுஆய கட்டுரையால் கழற மேல் ஓர் பொருள்ஆனீர்
பொடி ஆரும் மேனியினீர் புகலி மறையோர் புரிந்து ஏத்த
வடிவு ஆரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே 10

ஒப்பு அரிய பூம் புகலி ஓங்கு கோயில் மேயானை
அப் பரிசில் பதிஆன அணி கொள் ஞானசம்பந்தன்
செப்ப அரிய தண் தமிழால் தெரிந்த பாடல்இவை வல்லார்
எப்பரிசில் இடர் நீங்கி இமையோர் உலகத்து இருப்பாரே 11

45. திருப்புகலி

திருமுறை 2/122 இராகம் : எதுகுல காம்போதி பண் : செவ்வழி

விடைஅது ஏறி வெறி அக்கு அரவு ஆர்த்த விமலனார்
படைஅதுஆகப் பரசு தரித்தார்க்கு இடம்ஆவது
கொடையில் ஓவார் குலமும் உயர்ந்த மறையோர்கள்தாம்
புடை கொள் வேள்விப்புகை உம்பர் உலாவும் புகலியே. 1

வேலைதன்னில் மிகு நஞ்சினை உண்டு இருள்கண்டனார்
ஞாலம் எங்கும் பலி கொண்டு உழல்வார் நகர்ஆவது
சால நல்லார் பயிலும் மறை கேட்டுப் பதங்களைச்
சோலை மேவும் கிளித்தான் சொல் பயிலும் புகலியே 2

வண்டு வாழும் குழல் மங்கை ஓர்கூறு உகந்தார் மதித்
துண்டம் மேவும் சுடர்த் தொல்சடையார்க்கு இடம்ஆவது
கெண்டை பாய மடுவில் உயர் கேதகை மாதவி
புண்டரீகம்மலர்ப்பொய்கை நிலாவும் புகலியே 3

திரியும் மூன்றுபுரமும் எரித்துத் திகழ் வானவர்க்கு
அரிய பெம்மான் அரவக் குழையார்க்கு இடம்ஆவது
பெரிய மாடத்து உயரும் கொடியின் மிடைவால் வெயில்
புரிவு இலாத தடம் பூம்பொழில் சூழ் தண் புகலியே 4

ஏவில் ஆரும் சிலைப் பார்த்தனுக்கு இன் அருள் செய்தவர்
நாவினாள் மூக்கு அரிவித்த நம்பர்க்கு இடம்ஆவது
மாவில் ஆரும் கனி வார் கிடங்கில் விழ வாளை போய்ப்
பூவில் ஆரும் புனல் பொய்கையில் வைகும் புகலியே 5

தக்கன் வேள்வி தகர்த்த தலைவன் தையலாளொடும்
ஒக்கவே எம் உரவோன் உறையும் இடம்ஆவது
கொக்கு வாழை பலவின் கொழுந் தண் கனி கொன்றைகள்
புக்க வாசப்புன்னை பொன்திரள் காட்டும் புகலியே(6–7)

தொலைவு இலாத அரக்கன் உரத்தைத் தொலைவித்து அவன்
தலையும் தோளும் நெரித்த சதுரர்க்கு இடம் ஆவது
கலையின் மேவும் மனத்தோர் இரப்போர்க்குக் கரப்புஇலார்
பொலியும்அம் தண்பொழில் சூழ்ந்து அழகுஆரும் புகலியே 8

கீண்டு புக்கார் பறந்தே உயர்ந்தார் கேழல் அன்னமாய்
காண்டும் என்றார் கழல் பணிய நின்றார்க்கு இடம்ஆவது
நீண்ட நாரை இரை ஆரல் வார நிறை செறுவினில்
பூண்டு மிக்க வயல் காட்டும் அம் தண் புகலியே 9

தடுக்கு உடுத்துத் தலையைப் பறிப்பாரொடு சாக்கியர்
இடுக்கண் உய்ப்பார் இறைஞ்சாத எம்மாற்கு இடம் ஆவது
மடுப்பு அடுக்கும் சுருதிப்பொருள் வல்லவர் வான்உளோர்
அடுத்துஅடுத்துப் புகுந்து ஈண்டும் அம் தண் புகலியே10

எய்த ஒண்ணா இறைவன் உறைகின்ற புகலியைக்
கைதவம் இல்லாக் கவுணியன் ஞானசம்பந்தன் சீர்
செய்த பத்தும் இவை செப்ப வல்லார் சிவலோகத்தில்
எய்தி நல்ல இமையோர்கள் ஏத்த இருப்பார்களே 11

திருச்சிற்றம்பலம்

46. திருப்புகலி

திருமுறை 3/3 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்

இயல் இசை எனும் பொருளின் திறமாம்
புறல்அன மிடறுஉடைப் புண்ணியனே
கயல்அன வரிநெடும் கண்ணியொடும்
அயல்உலகு அடிதொழ அமர்ந்தவனே
கலன் ஆவது வெண்தலை கடிபொழில் புகலிதன்னுள்
நிலன் நாள்தொறும் இன்புற நிறை மதி அருளினனே 1

நிலைஉறும் இடர் நிலையாத வண்ணம்
இலை உறு மலர்கள் கொண்டு ஏத்துதும் யாம்
மலையினில் அரிவையை வெருவ வன்தோல்
அலைவரு மதகரி உரித்தவனே
இமையோர்கள் நின் தாள் தொழ எழில் திகழ் பொழில் புகலி
உமையாளொடு மன்னினை உயர் திருவடி இணையே 2

பாடினை அருமறை வரல்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்தில்
சாடினை காலனைத் தயங்கு ஒளி சேர்
நீடு வெண்பிறைமுடி நின்மலனே
நினையே அடியார் தொழ நெடுமதில் புகலிந் நகர்
தனையே இடம் மேவினை தவநெறி அருள் எமக்கே3

நிழல் திகழ் மழுவினை யானையின்தோல்
அழல் திகழ் மேனியில் அணிந்தவனே
கழல் திகழ் சிலம்புஒலி அலம்ப நல்ல
முழவொடும் அருநடம் முயற்றினனே
முடிமேல் மதி சூடினை முருகு அமர் பொழில் புகலி
அடியார்அவர் ஏத்துஉற அழகொடும் இருந்தவனே 4

கருமையின் ஒளிர் கடல் நஞ்சம் உண்ட
உரிமையின் உலகுஉயிர் அளித்த நின்தன்
பெருமையை நிலத்தவர் பேசின்அல்லால்
அருமையில் அளப்பு அரிது ஆயவனே
அரவு ஏர் இடையாளொடும் அலைகடல் மலி புகலிப்
பொருள் சேர்தர நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே5

அடை அரிமாவொடு வேங்கையின் தோல்
புடை பட அரைமிசைப் புனைந்தவனே
படை உடை நெடுமதில் பரிசு அழித்த
விடை உடை கொடி மல்கு வேதியனே
விகிர்தா பரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய் மடமாதொடும் தாள் பணிந்தவர் தமக்கே 6

அடியவர் தொழுது எழ அமரர் ஏத்தச்
செடிய வல்வினைபல தீர்ப்பவனே
துடிஇடை அகல்அல்குல் தூமொழியைப்
பொடி அணி மார்புஉறப் புல்கினனே
புண்ணியா புனிதா புகர் ஏற்றினை புகலிந்நகர்
நண்ணினாய் கழல்ஏத்திட நண்ணகிலா வினையே 7

இரவொடு பகல்அது ஆம் எம்மான் உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழிஅடியேன்
குர விரி நறுங்கொன்றை கொண்டுஅணிந்த
அர விரிசடைமுடி ஆண்டகையே
அனமென்நடையாளொடும் அதிர்கடல் இலங்கைமன்னை
இனம் ஆர்தரு தோள் அடர்த்து இருந்தனை புகலியுளே 8

உருகிட உவகை தந்து உடலினுள்ளால்
பருகிடும் அமுது அன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூஉளானும்
பெருகிடும் அருள்எனப் பிறங்கு எரி ஆய்
உயர்ந்தாய் இனி நீ எனை ஒண்மலர் அடிஇணைக்கீழ்
வயந்துஆங்குற நல்கிடு வளர்மதில் புகலிமனே 9

கையினில் உண்பவர் கணிகநோன்பர்
செய்வன தவம்அலாச் செதுமதியார்
பொய்யவர் உரைகளைப் பொருள் எனாத
மெய்யவர் அடி தொழ விரும்பினனே
வியந்தாய் வெள்ஏற்றினை விண்ணவர் தொழு புகலி
உயர்ந்தார் பெருங்கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே10

புண்ணியர் தொழுது எழு புகலிந்நகர்
விண்ணவர் அடி தொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம்பந்தன் வாய்மை
பண்ணிய அருந்தமிழ்பத்தும் வல்லார்
நடலைஅவை இன்றிப்போய் நண்ணுவர் சிவன்உலகம்
இடர்ஆயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே 11

47. திருப்புகலி

திருமுறை 3/7 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்

கண்நுதலானும் வெண்நீற்றினானும் கழல் ஆர்க்கவே
பண் இசை பாட நின்று ஆடினானும் பரஞ்சோதியும்
புண்ணிய நால்மறையோர்கள் ஏத்தும் புகலிந்நகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் வீற்றிருந்த பெருமான் அன்றே 1

சாம்பலோடும் தழல்ஆடினானும் சடையின்மிசைப்
பாம்பினோடும் மதி சூடினாலும் பசுஏறியும்
பூம் படுகல் இள வாளை பாயும் புகலிந்நகர்க்
காம்புஅன தோளியொடும் இருந்த கடவுள் அன்றே 2

கருப்பு நல் வார் சிலைக் காமன் வேவக் கடைக்கண்டானும்
மருப்பு நல் ஆணையின் ஈர்உரி போர்த்த மணாளனும்
பொருப்பு அன மா மணி மாடம் ஓங்கும் புகலிந்நகர்
விருப்பின் நல்லாளொடும் வீற்றிருந்த விமலன் அன்றே 3

அங்கை இலங்கு அழல் ஏந்தினானும் அழகுஆகவே
கங்கையைச் செஞ்சடை சூடினானும் கடலின் இடைப்
பொங்கிய நஞ்சுஅமுதுஉண்டவனும் புகலிந்நகர்
மங்கைநல்லாளொடும் வீற்றிருந்த மணவாளனே 4

சாமநல்வேதனும் தக்கன்தன் வேள்வி தகர்த்தானும்
நாமம் நூறுஆயிரம் சொல்லி வானோர் தொழும் நாதனும்
பூ மல்கு தண்பொழில் மன்னும் அம் தண் புகலிந்நகர்க்
கோமளமாதொடும் வீற்றிருந்த குழகன் அன்றே 5

இரவுஇடை ஒள்எரிஆடினானும் இமையோர் தொழச்
செருஇடை முப்புரம் தீ எரித்த சிவலோகனும்
பொரு விடை ஒன்று உகந்து ஏறினானும் புகலிந்நகர்
அரவுஇடை மாதொடும் வீற்றிருந்த அழகன்அன்றே 6

சேர்ப்பது திண் சிலை மேவினானும் திகழ் பாலன்மேல்
வேர்ப்பதுசெய்த வெங்கூற்று உதைத்தானும் வேள்விப்புகை
போர்ப்பதுசெய்து அணி மாடம் ஓங்கும் புகலிந்நகர்ப்
பார்ப்பதியோடு உடன் வீற்றிருந்த பரமன் அன்றே 7

கல் நெடுமால்வரைக்கீழ் அரக்கன் இடர் கண்டானும்
வில் நெடும் போர் விறல் வேடன்ஆகி விசயற்கு ஒரு
பொன் நெடுங்கோல் கொடுத்தானும் அம் தண் புகலிந்நகர்
அன்னம் அன்ன நடை மங்கையொடும் அமர்ந்தான் அன்றே8

பொன் நிற நான்முகன் பச்சையான் என்று இவர் புக்குழித்
தன்னை இன்னான் எனக் காண்பு அரிய தழல்சோதியும்
புன்னை பொன்தாது உதிர் மல்கும் அம் தண் புகலிந்நகர்
மின்இடை மாதொடும் வீற்றிருந்த விமலன்அன்றே 9

பிண்டியும் போதியும் பேணுவார் பேணப் பேணாதது ஓர்
தொண்டரும் காதல்செய் சோதிஆய சுடர்ச்சோதியான்
புண்டரீகம் மலர்ப் பொய்கை சூழ்ந்த புகலிந்நகர்
வண்டு அமர் கோதையொடும் இருந்த மணவாளனே 10

பூங் கமழ் கோதையொடும் இருந்தான் புகலிந்நகர்ப்
பாங்கனை ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் பத்து இவை
ஆங்கு அமர்வு எய்திய ஆதிஆக இசை வல்லவர்
ஓங்கு அமராவதியோர் தொழச் செல்வதும் உண்மையே 11

48. திருவீழிமிழலை

திருமுறை 1/4 இராகம் : நாட்டை பண் : நட்டபாடை

மைம்மரு பூங்குழல்கற்றை துற்ற
வாள்நுதல் மான்விழி மங்கையோடும்
பொய்ம் மொழியா மறையோர்கள் ஏத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம் இறையே இமையாத முக்கண்
ஈச என் நேச இது என்கொல் சொல்வாய்
மெய்ம்மொழி நால்மறையோர் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 1

கழல் மல்கு பந்தொடு அம்மானை முற்றில்
கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழில் மல்கு கிள்ளையைச் சொல் பயிற்றும்
புகலி நிலாவிய புண்ணியனே
எழில் மலரோன் சிரம் ஏந்தி உண்டோர்
இன்புறு செல்வம் இது என்கொல் சொல்லாய்
மிழலையுள் வேதியர் ஏத்தி வாழ்த்த
விண் இழி கோயில் விரும்பியதே 2

கன்னியர் ஆடல் கலந்து மிக்க
கந்துக வாடை கலந்து துங்கப்
பொன்னியல் மாடம் நெருங்கு செல்வப்
புகலி நிலாவிய புண்ணியனே

இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத்து
எம் இறையே இது என்கொல்சொல்வாய்
மின்னியல் நுண்ணிடையார் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 3

நாகபணம் திகழ் அல்குல் மல்கு
நன்நுதல் மான்விழி மங்கையோடும்
பூக வளம் பொழில் சூழ்ந்த அந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
ஏக பெருந்தகை ஆயபெம்மான்
எம் இறையே இது என்கொல் சொல்லாய்
மேகம் உரிஞ்சு எயில் சூழ் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே. 4

சந்துஅளறு ஏறு தடம் கொள் கொங்கைத்
தையலொடும் தளராத வாய்மைப்
புந்தியினால் மறையோர்கள் ஏத்தும்
புகலி நிலாவிய புண்ணியனே
எம்தமை ஆளுடை ஈச எம்மான்
எம் இறையே இது என்கொல் சொல்லாய்
வெந்த வெண் நீறணிவார் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 5

சங்கு ஒளி இப்பி சுறா மகரம்
தாங்கி நிரந்து தரங்கம் மேன்மேல்
பொங்கு ஒலி நீர் சுமந்து ஓங்கு செம்மைப்
புகலி நிலாவிய புண்ணியனே

எங்கள் பிரான் இமையோர்கள் பெம்மான்
எம் இறையே இது என்கொல் சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 6

காமன் எரிப்பிழம்பு ஆக நோக்கிக்
காம்பு அன தோளியொடும் கலந்து
பூ மரு நான்முகன் போல்வர் ஏத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
ஈமவனத்து எரி ஆட்டு உகந்த
எம் பெருமான் இது என்கொல்சொல்வாய்
வீ மரு தண்பொழில் சூழ் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 7

இலங்கையர் வேந்து எழில் வாய்த்த திண்தோள்
இற்று அலற விரல் ஒற்றி ஐந்து
புலன் களைகட்டவர் போற்ற அந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
இலங்கு எரி ஏந்தி நின்று எல்லி ஆடும்
எம் இறையே இது என்கொல் சொல்லாய்
விலங்கல்ஒண்மாளிகை சூழ் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே. 8

செறி முளரித் தவிசு ஏறி ஆறும்
செற்று அதில் வீற்றிருந்தானும் மற்றைப்
பொறி அரவத்து அணையானும் காணாப்
புகலி நிலாவிய புண்ணியனே

எறிமழுவோடு இளமான் கை இன்றி
இருந்த பிரான் இது என்கொல் சொல்லாய்
வெறி கமழ் பூம்பொழில் சூழ் மழிலை
விண் இழி கோயில் விரும்பியதே 9

பத்தர்கணம் பணிந்து ஏத்த வாய்த்த
பான்மைஅது அன்றியும் பல்சமணும்
புத்தரும் நின்று அலர்தூற்ற அந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
எத்தவத்தோர்க்கும் இலக்காய் நின்ற
எம் பெருமான் இது என்கொல் சொல்லாய்
வித்தகர் வாழ் பொழில் சூழ் மிழலை
விண் இழி கோயில் விரும்பியதே 10

விண் இழி கோயில் விரும்பி மேவும்
வித்தகம் என்கொல் இது என்று சொல்லிப்
புண்ணியனைப் புகலி நிலாவு
பூம்கொடியோடு இருந்தானைப் போற்றி
நண்ணிய கீர்த்தி நலம் கொள்கேள்வி
நால்மறை ஞானசம்பந்தன் சொன்ன
டண்ணியல் பாடவல்லார்கள் இந்தப்
பாரொடு விண் பரிபாலகரே. 11

49. திருவெங்குரு

திருமுறை 1/75 இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி பண் : குறிஞ்சி

காலை நல்மாமலர் கொண்டு அடி பரவி
கைதொழு மாணியைக் கறுத்த வெங்காலன்
ஓலம்அது இட முன் உயிரொடு மாள
உதைத்தவன் உமையவள்விருப்பன் எம்பெருமான்
மாலை வந்து அணுக ஓதம் வந்து உலவி
மறி திரை சங்கொடு பவளம் முன் உந்தி
வேலை வந்து அணையும் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 1

பெண்ணினைப் பாகம் அமர்ந்து செஞ்சடைமேல்
பிறையொடும் அரவினை அணிந்து அழகுஆகப்
பண்ணினைப் பாடி ஆடி முன் பலிகொள்
பரமர் எம் அடிகளார் பரிசுகள் பேணி
மண்ணினை மூடி வான்முகடு ஏறி
மறிதிரை கடல் முகந்து எடுப்ப மற்று உயர்ந்து
விண் அளவு ஓங்கி வந்து இழி கோயில்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 2

ஓர் இயல்பு இல்லா உருவம்அது ஆகி
ஒண்திறல் வேடனது உருஅது கொண்டு
காரிகை காணத் தனஞ்சயன் தன்னைக்
கறுத்து அவற்கு அளித்து உடன் காதல்செய் பெருமான்

நேரிசைஆக அறுபதம் முரன்று
நிரை மலர்த் தாதுகள் மூச விண்டு உதிர்ந்து
வேரிகள் எங்கும் விம்மிய சோலை
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 3

வண்டு அணை கொன்றை வன்னியும் மத்தம்
மருவிய கூவிளம் எருக்கொடு மிக்க
கொண்டு அணி சடையர் விடையினர் பூதம்
கொடுகொட்டி குடமுழாக் கூடியும் முழவப்
பண் திகழ்வுஆகப் பாடி ஓர் வேதம்
பயில்வர் முன் பாய் புனல் கங்கையைச் சடைமேல்
வெண்பிறை சூடி உமையவளோடும்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 4

சடையினர் மேனி நீறுஅது பூசித்
தக்கை கொள் பொக்கணம் இட்டு உடன்ஆகக்
கடைதொறும் வந்து பலிஅது கொண்டு
கண்டவர் மனம்அவை கவர்ந்து அழகுஆகப்
படைஅது ஏந்திப் பைங்கயல்கண்ணி
உமையவள் பாகமும் அமர்ந்து அருள்செய்து
விடையொடு பூதம் சூழ்தரச் சென்று
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 5

கரை பொரு கடலில் திரைஅது மோதக்
கங்குல் வந்து ஏறிய சங்கமும் இப்பி
உரை உடை முத்தம் மணல்இடை வைகி
ஓங்கு வான் இருள் அறத் துரப்ப எண்திசையும்

புரை மலி வேதம் போற்று பூசுரர்கள்
புரிந்தவர் நலம் கொள் ஆகுதியினின் நிறைந்த
விரை மலி தூபம் விசும்பினை மறைக்கும்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 6

வல்லிநுண் இடையாள் உமையவள் தன்னை
மருகிட வரு மதகளிற்றினை மயங்க
ஒல்லையில் பிடித்து அங்கு உரித்து அவள் வெருவல்
கெடுத்தவர் விரிபொழில் மிகு திரு ஆலில்
நல்அறம் உரைத்து ஞானமோடு இருப்ப
நலிந்திடல்உற்று வந்து அக் கருப்பு
வில்லியைப் பொடிபட விழித்தவர் விரும்பி
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 7

பாங்கு இலா அரக்கன் கயிலை அன்று எடுப்பப்
பலதலை முடியொடு தோள்அவை நெரிய
ஓங்கிய விரலால் ஊன்றி அன்று அவற்கே
ஒளி திகழ் வாள்அது கொடுத்து அழகுஆய
கோங்கொடு செருந்தி கூவிளம் மத்தம்
கொன்றையும் குலாவிய செஞ்சடைச் செல்வர்
வேங்கை பொன்மலர் ஆர் விரை தரு கோயில்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 8

ஆறுஉடைச் சடை எம் அடிகளைக் காண
அரியொடு பிரமனும் அளப்பதற்கு ஆகிச்
சேறுஇடைத் திகழ் வானத்துஇடை புக்கும்
செலவு அறத் தவிர்ந்தனர் எழில் உடைத் திகழ் வெண்

நீறு உடைக் கோல மேனியர் நெற்றிக்
கண்ணினர் விண்ணவர் கைதொழுது ஏத்த
வேறு எமை ஆள விரும்பிய விகிர்தர்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 9

பாடு உடைக் குண்டர் சாக்கியர் சமணர்
பயில்தரும் மறஉரை விட்டு அழகுஆக
ஏடு உடை மலராள்பொருட்டு வன்தக்கன்
எல்லை இல் வேள்வியைத் தகர்த்து அருள்செய்து
காடுஇடைக் கடிநாய் கலந்து உடன்சூழக்
கண்டவர் வெருஉற விளித்து வெய்து ஆய
வேடு உடைக் கோலம் விரும்பிய விகிர்தர்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரே 10

விண் இயல் விமானம் விரும்பிய பெருமான்
வெங்குரு மேவி உள் வீற்றிருந்தாரை
நண்ணிய நூலன் ஞானசம்பந்தன்
நவின்ற இவ் வாய்மொழி நலம் மிகு பத்தும்
பண் இயல்புஆகப் பத்திமையாலே
பாடியும் ஆடியும் பயில வல்லோர்கள்
விண்ணவர் விமானம் கொடுவர ஏறி
வியன்உலகு ஆண்டுவீற்றிருப்பவர்தாமே 11

50. திருவெங்குரு

திருமுறை 3/94 இராகம் : பந்துவராளி பண் : சாதாரி

விண்ணவர் தொழுதுஎழு வெங்குரு மேவிய
சுண்ணவெண்பொடி அணிவீரே
சுண்ணவெண்பொடி அணிவீர் உம தொழு கழல்
எண்ண வல்லார் இடர் இலரே 1

வேதியர் தொழுது எழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறையீரே
ஆதிய அருமறையீர் உமை அலர்கொடு
ஓதியர் உணர்வு உடையோரே 2

விளங்கு தண்பொழில் அணி வெங்குரு மேவிய
இளம்பிறை அணி சடையீரே
இளம்பிறை அணி சடையீர் உமது இணைஅடி
உளம் கொள உறு பிணி இலரே 3

விண்டு அலர் பொழில் அணி வெங்குரு மேவிய
வண்டு அமர் வளர்சடையீரே
வண்டு அமர் வளர்சடையீர் உமை வாழ்த்தும் அத்
தொண்டர்கள் துயர் பிணி இலரே 4

மிக்கவர் தொழுது எழு வெங்குரு மேவிய
அக்கினொடு அரவு அசைத்தீரே
அக்கினொடு அரவு அசைத்தீர் உமது அடியிணை
தக்கவர் உறுவது தவமே 5

வெந்தவெண்பொடி அணி வெங்குரு மேவிய
அந்தம் இல் பெருமையினீரே
அந்தம் இல் பெருமையினீர் உமை அலர்கொடு
சிந்தைசெய்வோர் வினை சிதைவே 6

விழ மல்கு பொழில் அணிவெங்குரு மேவிய
அழல் மல்கும் அங்கையினீரே
அழல் மல்கும் அங்கையினீர் உமை அலர்கொடு
தொழ அல்லல் கெடுவது துணிவே 7

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்த நல்மலர் புனைவீரே
மத்த நல்மலர் புனைவீர் உமது அடி தொழும்
சித்தம் அது உடையவர் திருவே 8

மேலவர் தொழுது எழு வெங்குரு மேவிய
ஆல நல் மணிமிடற்றீரே
ஆல நல் மணிமிடற்றீர் உமது அடி தொழும்
சீலம் அது உடையவர் திருவே 9

விரை மல்கு பொழில் அணி வெங்குரு மேவிய
அரை மல்கு புலிஅதளீரே
அரை மல்கு புலிஅதளீர் உமது அடிஇணை
உரை மல்கு புகழவர் உயர்வே (10–11)

51. திருத்தோணிபுரம்

திருமுறை 1/60 இராகம் : ஆரபி, சுத்த சாவேரி பண் : பழந்தக்கராகம்
இறைவன் : தோணியப்பர் இறைவி : திருநிலைநாயகி

வண் தரங்கப் புனல் கமல மது மாந்திப் பெடையினொடும்
ஒண் தரங்க இசை பாடும் அளிஅரசே ஒளி மதியத்
துண்டர் அங்கப்பூண் மார்பர் திருத் தோணிபுரத்து உறையும்
பண்டரங்கர்க்கு என் நிலைமை பரிந்து ஒரு கால் பகராயே 1

எறிசுறவம் கழிக் கானல் இளங்குருகே என் பயலை
அறிவுஉறாது ஒழிவதுவும் அருவினையேன் பயன் அன்றே
செறி சிறார் பதம் ஓதும் திருத் தோணிபுரத்து உறையும்
வெறி நிற ஆர்மலர்க்கண்ணி வேதியர்க்கு விளம்பாயே 2

பண் பழனக் கோட்டுஅகத்து வாட்டம் இலாச் செஞ்சூட்டுக்
கண்பு அகத்தின் வாரணமே கடுவினையேன் உறு பயலை
செண்பகம் சேர் பொழில் புடை சூழ் திருத் தோணிபுரத்து உறையும்
பண்பனுக்கு என் பரிசு உரைத்தால் பழி ஆமோ மொழியாயே 3

காண் தகைய செங்கால் ஒண் கழி நாராய் காதலால்
பூண் தகைய முலை மெலிந்து பொன் பயந்தாள் என்று வளர்
சேண் தகையே மணி மாடத் திருத் தோணிபுரத்து உறையும்
ஆண்தகையாற்க்கு இன்றே சென்று அடி அறிய உணர்த்தாயே 4

பாராரே எனை ஒரு கால் தொழுகின்றேன் பாங்கு அமைந்த
கார் ஆரும் செழு நிறுத்துப் பவளக்கால் கபோதகங்காள்
தேர் ஆரும் நெடுவீதித் திருத் தோணிபுரத்து உறையும்
நீர் ஆரும் சடையாருக்கு என் நிலைமை நிகழ்த்தீரே 5

சேற்று எழுந்த மலர்க்கமலச் செஞ்சாலிக்கதிர் வீச
வீற்றிருந்த அன்னங்காள் விண்ணோடு மண் மறைகள்
தோற்றுவித்த திருத் தோணிபுரத்து ஈசன் துளங்காத
கூற்று உதைத்த திருவடியே கூடுமா கூறீரே 6

முன்றில்வாய் மடல்பெண்ணைக் குரம்பை வாழ் முயங்கு சிறை
அன்றில்காள் பிரிவுஉறும்நோய் அறியாதீர் மிக வல்லீர்
தென்றலார் புகுந்து உலவும் திருத் தோணிபுரத்து உறையும்
கொன்றை வார்சடையார்க்கு என் கூர் பயலை கூறீரே 7

பால் நாறும் மலர்ச் சூதப் பல்லவங்கள்அவை கோதி
ஏனோர்க்கும் இனிதுஆக மொழியும் எழில் இளங்குயிலே
தேன் ஆரும் பொழில் புடை சூழ் திருத் தோணிபுரத்து அமரர்
கோனாரை என்னிடத்தே வர ஒரு கால் கூவாயே 8

நல் பதங்கள் மிக அறிவாய் நான் உன்னை வேண்டுகின்றேன்
பொற்பு அமைந்த வாய் அலகில் பூசைநல்லாய் போற்றுகின்றேன்
சொல்பதம் சேர் மறையாளர் திருத் தோணிபுரத்து உறையும்
வில் பொலி தோள் விகிர்தனுக்கு என் மெய்ப்பயலை விளம்பாயே 9

சிறை ஆரும் மடக்கிளியே இங்கேவா தேனொடு பால்
முறையாலே உணத் தருவன் மொய் பவளத்தொடு தரளம்
துறை ஆரும் கடல் தோணிபுரத்து ஈசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கு ஒரு கால் பேசாயே 10

போர் மிகுத்த வயல் தோணிபுரத்து உறையும் புரிசடைஎம்
கார் மிகுந்த கறைக் கண்டத்து இறைவனை வண்கமலத்
தார் மிகுத்த வரைமார்பன் சம்பந்தன் உரைசெய்த
சீர் மிகுத்த தமிழ் வல்லார் சிவலோகம் சேர்வாரே 11

52. திருத்தோணிபுரம்

திருமுறை 3/81 இராகம் : பந்துவராளி பண் : சாதாரி

சங்கு அமரும் முன்கை மடமாதை ஒருபால் உடன்விரும்பி
அங்கம் உடல்மேல் உற அணிந்து பிணி தீர அருள் செய்யும்
எங்கள் பெருமான் இடம் எனத் தகும் முனைக் கடலன் முத்தம்
துங்க மணி இப்பிகள் கரைக்குவரு தோணிபுரம் ஆமே 1

சல்லரியி யாழ் முழவம் மொந்தை குழல் தாளம்அது இயம்பக்
கல் அரிய மாமலையர் பாவை ஒருபாகம் நிலைசெய்து
அல் எரி கை ஏந்தி நடம் ஆடு சடை அண்ணல் இடம் என்பர்
சொல் அரிய தொண்டர் துதிசெய்ய வளர் தோணிபுரம் ஆமே2

வண்டுஅரவு கொன்றை வளர்புன் சடையின்மேல் மதியம் வைத்துப்
பண்டு அரவு தன் அரையில் ஆர்த்த பரமேட்டி பழி தீரக்
கண்டு அரவ ஒண் கடலின் நஞ்சம் அமுதுஉண்ட கடவுள்ஊர்
தொண்டர்அவர் மிண்டி வழிபாடு மல்கு தோணிபுரம் ஆமே 3

கொல்லை விடைஏறு உடைய கோவணவன் நா அணவும் மாலை
ஒல்லை உடையான் அடையலார் அரணம் ஒள்அழல் விளைத்த
வில்லை உடையான் மிக விரும்பு பதி மேவி வளர் தொண்டர்
சொல்லை அடைவு ஆக இடர் தீர்த்து அருள்செய் தோணிபுரம் ஆமே 4

தேயும் மதியம் சடை இலங்கிட விலங்கல் மலி கானில்
காயும் அடு திண் கரியின் ஈர்உரிவை போர்த்தவன் நினைப்பார்
தாய் என நிறைந்தது ஒரு தன்மையினர் நன்மையொடு வாழ்வு
தூய மறையாளர் முறை ஓதி நிறை தோணிபுரம் ஆமே 5

பற்றலர்தம் முப்புரம் எரித்து அடி பணிந்தவர்கள் மேலைக்
குற்றம் அது ஒழித்து அருளு கொள்கையினன் வெள்ளில் முதுகானில்
பற்றவன் இசைக்கிளவி பாரிடம்அது ஏத்த நடமாடும்
துற்ற சடை அத்தன் உறைகின்ற பதி தோணிபுரம் ஆமே 6

பண் அமரும் நால்மறையர் நூல் முறை பயின்ற திருமார்பில்
பெண் அமரும் மேனியினர் தம் பெருமை பேசும் அடியார் மெய்த்
திண் அமரும் வல்வினைகள் தீர அருள்செய்தல் உடையான் ஊர்
துண்ணென விரும்பு சரியைத் தொழிலர் தோணிபுரம்ஆமே 7

தென்திசை இலங்கை அரையன்திசைகள் வீரம் விளைவித்து
வென்றி இசை புயங்களை அடர்த்து அருளும் வித்தகன் இடம் சீர்
ஒன்று இசை இயல் கிளவி பாட மயில் ஆட வளர் சோலை
துன்றுசெய வண்டு மலி தும்பி முரல் தோணிபுரம் ஆமே 8

நாற்றம் மிகு மா மலரின்மேல் அயனும் நாரணனும் நாடி
ஆற்றல் அதனால் மிக அளப்பரிய வண்ணம் எரியாகி
ஊற்றம் மிகு கீழ்உலகும் மேல்உலகும் ஓங்கி எழுதன்மைத்
தோற்றம் மிக நாளும் அரியான் உறைவு தோணிபுரம் ஆமே 9

மூடு துவர் ஆடையினர் வேடம் நிலை காட்டும் அமண்ஆதர்
கேடுபல சொல்லிடுவர் அம்மொழி கெடுத்து அடைவினான் அக்
காடு பதிஆக நடம்ஆடி மடமாதொடு இரு காதில்
தோடு குழை பெய்தவர் தமக்கு உறைவு தோணிபுரம் ஆமே10

துஞ்சு இருளில் நின்று நடம் ஆடி மிகு தோணிபுரம் மேய
மஞ்சனை வணங்கு திருஞானசம்பந்தன சொல் மாலை
தஞ்சம்என நின்று இசை மொழிந்த அடியார்கள் தடுமாற்றம்
வஞ்சம் இலர் நெஞ்சு இருளும் நீங்கி அருள் பெற்று வளர்வாரே 11

53. திருத்தோணிபுரம்

திருமுறை 3/100 இராகம் : சங்கராபரணம், பைரவி பண் : பழம்பஞ்சுரம்

கரும்பு அமர் வில்லியைக் காய்ந்து காதல் காரிகைமாட்டு அருளி
அரும்புஅமர் கொங்கை ஓர்பால் மகிழ்ந்த அற்புதம் செப்பு அரிதால்
பெரும் பகலே வந்து என் பெண்மை கொண்டு பேர்ந்தவர் சேர்ந்த இடம்
சுரும்பு அமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத் தோணிபுரம்தானே 1

கொங்கு இயல் பூங்குழல் கொவ்வைச்செவ்வாய்க் கோமளமாதுஉமையாள்
பங்கு இயலும் திருமேனி எங்கும் பால்வெள்ளைநீறு அணிந்து
சங்கு இயல் வெள்வளை சோர வந்து என் சாயல் கொண்டார்தமது ஊர்
துங்கு இயல் மாளிகை சூழ்ந்த செம்மைத் தோணிபுரம்தானே 2

மத்தக்களிற்று உரி போர்க்கக் கண்டு மாதுஉமை பேதுஉறலும்
சித்தம் தெளிய நின்று ஆடி ஏறுஊர் தீவண்ணர் சில்பலிக்கு என்று
ஒத்தபடி வந்து என் உள்ளம் கொண்ட ஒருவர்க்கு இடம்போலும்
துத்தம் நல் இன்இசை வண்டு பாடும் தோணிபுரம்தானே (3–7)

வள்ளல் இருந்த மலைஅதனை வலம் செய்தல் வாய்மை என
உள்ளம் கொள்ளாது கொதித்து எழுந்து அன்று எடுத்தோன் உரம் நெரிய
மெள்ள விரல் வைத்து என் உள்ளம் கொண்டார் மேவும் இடம்போலும்
துள் ஒலி வெள்ளத்தின்மேல் மிதந்த தோணிபுரம்தானே 8

வெல் பறவைக் கொடி மாலும் மற்றை விரைமலர்மேல் அயனும்
பல் பறவைப்படிஆய் உயர்ந்தும் பன்றிஅது ஆய்ப் பணிந்தும்
செல்வு அற நீண்டு எம் சிந்தை கொண்ட செல்வர் இடம்போலும்
தொல் பறவை சுமந்து ஓங்கு செம்மைத் தோணிபுரம்தானே 9

குண்டிகை பீலி தட்டோடு நின்று கோசரம் கொள்ளியரும்
மண்டை கை ஏந்தி மனம் கொள் கஞ்சிஊணரும் வாய் மடிய
இண்டை புனைந்து எருது ஏறி வந்து என் எழில் கவர்ந்தார் இடம்ஆம்
தொண்டு இசை பாடல் அறாத தொன்மைத் தோணிபுரம்தானே 10

தூ மரு மாளிகை மாடம் நீடு தோணிபுரத்து இறையை
மாமறைநான்கினொடு அங்கம்ஆறும் வல்லவன் வாய்மையினால்
நா மரு கேள்விநலம் திகழும் ஞானசம்பந்தன் சொன்ன
பா மரு பாடல்கள்பத்தும் வல்லார் பார் முழுது ஆள்பவரே 11

திருச்சிற்றம்பலம்

54. திருப்பூந்தராய்

திருமுறை 2/1 இராகம் : நாதநாமக்கிரியா பண் : இந்தளம்

செந்நெல் அம் கழனிப் பழனத்து அயலே செழும்
புன்னை வெண் கிழியில் பவளம் புரை பூந்தராய்த்
துன்னி நல் இமையோர் முடி தோய் கழலீர் சொலீர்
பின்னுசெஞ்சடையில் பிறை பாம்பு உடன் வைத்ததே 1

எற்று தெண் திரை ஏறிய சங்கினொடு இப்பிகள்
பொன் திகழ் கமலப் பழனம் புகு பூந்தராய்த்
சுற்றி நல் இமையோர் தொழு பொன்கழலீர் சொலீர்
பெற்றம் ஏறுதல் பெற்றிமையோர் பெருமானீரே 2

சங்கு செம்பவளத்திரள் முத்துஅவை தாம்கொடு
பொங்கு தெண்திரை வந்து அலைக்கும் புனல் பூந்தராய்த்
துங்க மால்களிற்றின்உரி போர்த்து உகந்தீர் சொலீர்
மங்கை பங்கமும் அங்கத்தொடு ஒன்றிய மாண்புஅதே 3

சேம வல் மதில் பொன் அணி மாளிகை சேண் உயர்
பூ மணம் கமழும் பொழில் சூழ்தரு பூந்தராய்ச்
சோமனும் அரவும்தொடர் செஞ்சடையீர் சொலீர்
காமன் வெண்பொடி ஆகக் கடைக்கண் சிவந்ததே 4

பள்ளம் மீன்இரை தேர்ந்து உழலும் பகுவாயன
புள்ளும் நாள்தொறும் சேர் பொழில் சூழ்தரு பூந்தராய்த்
துள்ளும் மான்மறி ஏந்திய செங்கையினீர் சொலீர்
வெள்ள நீர் ஒரு செஞ்சடை வைத்த வியப்புஅதே 5

மாது இலங்கிய மங்கையர் ஆட மருங்கு எலாம்
போதில் அம் கமலம் மது வார் புனல் பூந்தராய்ச்
சோதி அம்சுடர்மேனி வெண்நீறு அணிவீர் சொலீர்
காதில் அம் குழை சங்கவெண்தோடுஉடன் வைத்ததே (6–7)

வருக்கம் ஆர்தரு வான் கடுவன்னொடு மந்திகள்
தருக் கொள் சோலை தரும் கனி மாந்திய பூந்தராய்த்
துரக்கும் மால்விடைமேல் வருவீர் அடிகேள் சொலீர்
அரக்கன் ஆற்றல் அழித்து அருள் ஆக்கிய ஆக்கமே 8

வரி கொள் செங்கயல் பாய் புனல் சூழ்ந்த மருங்குஎலாம்
புரிசை நீடு உயர் மாடம் நிலாவிய பூந்தராய்ச்
சுருதி பாடிய பாண் இயல் தூ மொழியீர் சொலீர்
கரிய மால் அயன் நேடி உமைக் கண்டிலாமையே 9

வண்டல் அம் கழனிம் மடை வாளைகள் பாய் புனல்
புண்டரீகம் மலர்ந்து மதுத் தரு பூந்தராய்த்
தொண்டர் வந்து அடி போற்றிசெய் தொல்கழலீர் சொலீர்
குண்டர்சாக்கியர் கூறியதாம் குறி இன்மையே 10

மகர வார்கடல் வந்து அணவும் மணல் கானல்வாய்ப்
புகலி ஞானசம்பந்தன் எழில் மிகு பூந்தராய்ப்
பகவனாரைப் பரவுசொல் மாலைபத்தும் வல்லார்
அகல்வர் தீவினை நல்வினையோடு உடன்ஆவரே 11

55. திருப்பூந்தராய்

திருமுறை 3/2 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தார பஞ்சமம்

பந்து சேர் விரலாள் பவளத்துவர்
வாயினாள் பனி மா மதி போல் முகத்து
அந்தம் இல் புகழாள் மலைமாதொடும் ஆதிபிரான்
வந்து சேர்விடம் வானவர் எத்திசையும்
நிறைந்து வலம் செய்து மாமலர்
புந்திசெய்து இறைஞ்சிப் பொழி பூந்தராய் போற்றுதுமே 1

காவி அம்கருங்கண்ணினாள் கனித்
தொண்டைவாய்க் கதிர் முத்தநல் வெண்நகைத்
தூவி அம் பெடைஅன்னம் நடைச் சுரி மென்குழலாள்
தேவியும் திருமேனிஓர் பாகமாய்
ஒன்று இரண்டு ஒரு மூன்றொடு சேர்பதி
பூவில் அந்தணன் ஒப்பவர் பூந்தராய் போற்றுதுமே 2

பைஅரா வரும் அல்குல் மெல்லியல்
பஞ்சின்நேரடி வஞ்சிகொள் நுண்இடைத்
தையலாள் ஒருபால் உடை எம்இறை சாருமிடம்
செய்எலாம் கழு நீர் கமலம்மலர்த்
தேறல் ஊறலின் சேறுஉலராத நல்
பொய் இலா மறையோர் பயில் பூந்தராய் போற்றுதுமே 3

முள்ளிநாள்முகை மொட்டு இயல் கோங்கின்
அரும்பு தென் கொள் குரும்பை மூவாமருந்து
உள் இயன்ற பைம்பொன் கலசத்து இயல் ஒத்த முலை
வெள்ளிமால்வரை அன்னது ஓர் மேனியில்
மேவினார் பதி வீ மரு தண்பொழில்
புள்இனம் துயில் மல்கிய பூந்தராய் போற்றுதுமே 4

பண் இயன்று எழு மெய்மொழியாள் பகர்
கோதை ஏர் திகழ் பைந்தளிர்மேனி ஓர்
பெண் இயன்ற மொய்ம்பின் பெருமாற்கு இடம் பெய்வளையார்
கண் இயன்று எழு காவிச் செழுங் கருநீலம்
மல்கிய காமரு வாவி நல்
புண்ணியர் உறையும் பதி பூந்தராய் போற்றுதுமே 5

வாள்நிலாமதி போல் நுதலாள் மட
மாழை ஒண்கணாள் வன்தரளந்நகை
பாண் நிலாவிய இன்இசையார் மொழிப் பாவையொடும்

சேண் நிலாத் திகழ் செஞ்சடை எம் அண்ணல்
சேர்வது சிகரப்பெருங்கோயில் சூழ்
போழ்நிலா நுழையும்பொழில் பூந்தராய் போற்றுதுமே 6

கார் உலாவிய வார்குழலாள் கயல்
கண்ணினாள் புயல் கால் ஒளி மின்இடை
வார்உலாவிய மென்முலையாள் மலைமாது உடனாய்
நீர்உலாவிய சென்னியன் மன்னி
நிகரும் நாமம் முந்நான்கு நிகழ்பதி
போர் உலாவு எயில் சூழ்பொழில் பூந்தராய் போற்றுதுமே 7


காசை சேர் குழலாள் கயல் ஏர் தடம்
கண்ணி காம்பு அன தோள் கதிர் மென்முலைத்
தேசு சேர்மலை மாதுஅமரும் திருமார்பு அகலத்து
ஈசன் மேவும் இருங்கயிலை எடுத்தானை
அன்று அடர்த்தான் இணைச் சேவடி
பூசை செய்பவர் சேர் பொழில் பூந்தராய் போற்றுதுமே 8

கொங்குசேர்குழலாள் நிழல் வெண்ணகைக்
கொவ்வைவாய்க் கொடியேர் இடையாள்உமை
பங்குசேர் திருமார்பு உடையார் படர் தீ உருவாய்
மங்குல்வண்ணனும் மா மலரோனும்
மயங்கநீண்டவர் வான்.மிசைவந்து எழு
பொங்குநீரில் மிதந்தநல் பூந்தராய் போற்றுதுமே 9

கலவமாமயிலார் இயலாள்கரும்பு
அன்ன மெய்மொழியாள் கதிர் வாள்நுதல்
குலவு பூங்குழலாள் உமை கூறணை வேறு உரையால்
அலவை சொல்லுவார் தேர்அமண் ஆதர்கள்
ஆக்கினான்தனை நண்ணலும் நல்கும்நன்
புலவர் தாம்புகழ் பொன்பதி பூந்தராய் போற்றுதுமே 10

தேம்பல் நுண்இடையாள் செழும்சேல் அன
கண்ணியோடு அண்ணல் சேர்வுஇடம் தேன்அமர்
பூம்பொழில் திகழ் பொன் பதி பூந்தராய் போற்றுதும் என்று
ஓம்பு தன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்தன் ஒண் தமிழ்மாலைகொண்டு
ஆம் படி இவை ஏத்த வல்லார்க்கு அடையா வினையே11

திருச்சிற்றம்பலம்



56. திருப்பூந்தராய்

திருமுறை 3/5 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்று அது ஆகிய நம்பன்தானே 1

புள்இனம் புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளம் தாங்கு விகிர்தன் அடி தொழ
ஞாலத்தில் உயர்வார் உள்கும் நன்னெறி
மூலம்ஆய முதல்வன்தானே 2

வேந்தராய் உலகு ஆள விருப்புஉறின்
பூந்தராய்நகர் மேயவன் பொன்கழல்
நீதியால் நினைந்து ஏத்தி உள்கிடச்
சாதியா வினை ஆனதானே 3

பூசுரர் தொழுது ஏத்திய பூந்தராய்
ஈசன் சேவடி ஏத்தி இறைஞ்சிடச்
சிந்தை நோய்அவை தீர நல்கிடும்
இந்து வார்சடை எம் இறையே 4

பொலிந்த என்புஅணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்தியர் ஆகி வணங்கிட
நும்தம் மேல்வினை ஓட வீடுசெய்
எந்தைஆய எம் ஈசன்தானே 5

பூதம் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
நாதன் சேவடி நாளும் நவின்றிட
நல்கும் நாள்தொறும் இன்பம் நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞகனே 6

புற்றின் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிடப்
பாவம்ஆயின தீரப் பணித்திடும்
சேஅது ஏறிய செல்வன்தானே 7

போதகத்துஉரி போர்த்தவன் பூந்தராய்
காதலித்தான் கழல் விரல்ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்து அவனுக்கு அருள்
பெருக்கி நின்ற எம் பிஞ்ஞகனே 8

மத்தம்ஆன இருவர் மருவு ஒணா
அத்தன்ஆனவன் மேவிய பூந்தராய்
ஆள்அதுஆக அடைந்து உய்ம்மின் நும்வினை
மாளும்ஆறு அருள்செய்யும் தானே 9

பொருத்தம் இல் சமண்சாக்கியர் பொய் கடிந்து
இருத்தல் செய்த பிரான் இமையோர் தொழப்
பூந்தராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்தும் மான்மறி எம் இறையே 10

புந்தியால் மிக நல்லவர் பூந்தராய்
அந்தம் இல் எம் அடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண்டு ஏத்தி வாழும் நும்
பந்தம் ஆர் வினை பாறிடுமே 11

57. திருப்பூந்தராய்

திருமுறை 3/13 இராகம் : கேதார கௌளம் பண் : காந்தாரபஞ்சமம்

மின் அன எயிறு உடை விரவலோர்கள்தம்
துன்னிய புரம் உகச் சுளிந்த தொன்மையர்
புன்னை அம்பொழில்அணி பூந்தராய்நகர்
அன்ன அன்ன நடை அரிவை பங்கரே 1

மூதணி முப்புரத்து எண்ணிலோர்களை
வேது அணி சரத்தினால் வீட்டினார் அவர்
போது அணி பொழில் அமர் பூந்தராய் நகர்த்
தாது அணி குழல் உமை தலைவர் காண்மினே 2

தருக்கிய திரிபுரத்தவர்கள்தாம் உகப்
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்
பொருக் கடல் புடை தரு பூந்தராய் நகர்க்
கருக்கிய குழல் உமை கணவர் காண்மினே 3

நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகம் ஆர் புரங்களை மறிதத மாண்பினர்
பூகம் ஆர் பொழில் அணி பூந்தராய் நகர்ப்
பாகு அமர் மொழி உமை பங்கர் காண்மினே 4

வெள்ளயிறு உடைய அவ் விரவலார்கள் ஊர்
ஒள்ளரியூட்டிய ஒருவனார் ஒளிர்
புள் அணி புறவினில் பூந்தராய் நகர்க்
கள் அணி குழல் உமை கணவர் காண்மினே 5

துங்கு இயல் தானவர் தோற்றம் மா நகர்
அங்கியில் வீழ்தர ஆய்ந்த அம்பினர்
பொங்கிய கடல் அணி பூந்தராய் நகர்
அம்கயல் அன கணி அரிவை பங்கரே 6

அண்டர்கள் உய்ந்திட அவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விடம் உண்ட கண்டனார்
புண்டரீகவ்வயல் பூந்தராய்நகர்
வண்டு அமர்குழலிதன் மணாளர் காண்மினே 7

மா சின அரக்கனை வரையின் வாட்டிய
காய்சின எயில்களைக் கறுத்த கண்டனார்
பூசுரர் பொலிதரு பூந்தராய்நகர்க்
காசை செய் குழல் உமை கணவர் காண்மினே 8

தாம் முகம் ஆக்கிய அசுரர்தம் பதி
வேம் முகம் ஆக்கிய விகிர்தர் கண்ணனும்
பூமகன் அறிகிலாப் பூந்தராய்நகர்க்
கோமகன் எழில்பெறும்அரிவை கூறரே 9

முத்தர அசுரர்கள் மொய்த்த முப்புரம்
அத் தகும் அழல்இடை வீட்டினார் அமண்
புத்தரும் அறிவு ஒணாப் பூந்தராய்நகர்
கொத்து அணி குழல் உமை கூறர் காண்மினே 10

புரம் எரிசெய்தவர் பூந்தராய்நகர்ப்
பரம் மலி குழல் உமைநங்கை பங்கரைப்
பரவிய பந்தன் மெய்ப் பாடல் வல்லவர்
சிரம் மலி சிவகதி சேர்தல் திண்ணமே 11

58. திருச்சிரபுரம்

திருமுறை 1/47 இராகம் : ஆரபி, சுத்த சாவேரி பண் : பழந்தக்கராகம்

பல் அடைந்த வெண்தலையில் பலி கொள்வது அன்றியும் போய்
வில் அடைந்த புருவ நல்லாள் மேனியில் வைத்தல் என்னே
சொல் அடைந்த தொல்மறையோடு அங்கம் கலைகள் எல்லாம்
செல் அடைந்த செல்வர் வாழும் சிரபுரம் மேயவனே 1

கொல்லை முல்லைநகையினாள் ஓர்கூறுஅது அன்றியும் போய்
அல்லல் வாழ்க்கைப் பலி கொண்டு உண்ணும் ஆதரவு என்னை கொல்ஆம்
சொல்ல நீண்ட பெருமையாளர் தொல்கலை கற்று வல்லார்
செல்ல நீண்ட செல்வம் மல்கு சிரபுரம் மேயவனே 2

நீர் அடைந்த சடையின் மேல் ஓர் நிகழ்மதி அன்றியும் போய்
ஊர் அடைந்த ஏறுஅது ஏறி உண் பலி கொள்வது என்னே
கார் அடைந்த சோலை சூழ்ந்த காமரம் வண்டு இசைப்பச்
சீர் அடைந்த செல்வம் ஓங்கு சிரபுரம் மேயவனே 3

கை அடைந்த மானினோடு கார்அரவு அன்றியும் போய்
மெய் அடைந்த வேட்கையோடு மெல்லியல் வைத்தல் என்னே
கை அடைந்த களைகள்ஆகச் செங்கழுநீர்மலர்கள்
செய் அடைந்த வயல்கள் சூழ்ந்த சிரபுரம் மேயவனே 4

புரம் எரித்த வெற்றியோடும் போர் மதயானைதன்னைக்
கரம் எடுத்துத் தோல் உரித்த காரணம்ஆவது என்னே
மரம் உரித்த தோல் உடுத்த மா தவர் தேவரோடும்
சிரம் எடுத்த கைகள் கூப்பும் சிரபுரம் மேயவனே 5

கண்ணுமூன்றும் உடையது அன்றிக் கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு பாம்பு உடன்வைத்தல் என்னே
எண்ணும் மூன்றுகனலும் ஓம்பி எழுமையும் விழுமியர்ஆய்த்
திண்ணம் மூன்றுவேள்வியாளர் சிரபுரம் மேயவனே 6

குறைபடாத வேட்கையோடு கோல்வளைாள் ஒருபால்
பொறை படாத இன்பமோடு புணர்தரும் மெய்ம்மை என்னே
இறை படாத மென்முலையார் மாளிகைமேல் இருந்து
சிறை படாத பாடல் ஓங்கு சிரபுரம் மேயவனே 7

மலை எடுத்த வாள் அரக்கன் அஞ்ச ஒருவிரலால்
நிலை எடுத்த கொள்கையானே நின்மலனே நினைவார்
துலை எடுத்த சொல் பயில்வார் மேதகு வீதிதோறும்
சிலை எடுத்த தோளினானே சிரபுரம் மேயவனே 8

மாலினோடு மலரினானும் வந்தவர் காணாது
சாலும் அஞ்சப்பண்ணி நீண்ட தத்துவம் மேயது என்னே
நாலுவேதம் ஓதலார்கள் நம்துணை என்று இறைஞ்சச்
சேலு மேயும் கழனி சூழ்ந்த சிரபுரம் மேயவனே 9

புத்தரோடு சமணர் சொற்கள் புறன்உரை என்று இருக்கும்
பத்தர் வந்து பணிய வைத்த பான்மைஅது என்னைகொல்ஆம்
மத்தயானை உரியும் போர்த்து மங்கையொடும் உடனே
சித்தர் வந்து பணியும் செல்வச் சிரபுரம் மேயவனே 10

தெங்கம் நீண்ட சோலை சூழ்ந்த சிரபுரம் மேயவனை
அங்கம் நீண்ட மறைகள் வல்ல அணி கொள் சம்பந்தன் உரை
பங்கம் நீங்கப் பாடவல்ல பத்தர்கள் பார்இதன்மேல்
சங்கமோடு நீடி வாழ்வர் தன்மையினால் அவரே 11

59. திருச்சிரபுரம்

திருமுறை 1/109 இராகம் : சௌராட்டிரம் பண் : வியாழக்குறிஞ்சி

வார் உறு வனமுலை மங்கை பங்கன்
நீர்உறு சடைமுடி நிமலன் இடம்
கார் உறு கடிபொழில் சூழ்ந்து அழகுஆர்
சீர் உறு வளவயல் சிரபுரமே 1

அங்கமொடு அருமறை அருள்புரிந்தான்
திங்களொடு அரவு அணி திகழ் முடியன்
மங்கையொடு இனிது உறை வள நகரம்
செங்கயல் மிளிர் வயல் சிரபுரமே 2

பரிந்தவன் பல் முடிஅமரர்க்கு ஆகித்
திரிந்தவர் புரம்அவை தீயின் வேவ
வரிந்த வெஞ்சிலை பிடித்து அடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே 3

நீறு அணி மேனியன் நீள் மதியோடு
ஆறு அணி சடையினன் அணியிழை ஓர்
கூறு அணிந்து இனிது உறை குளிர் நகரம்
சேறு அணி வளவயல் சிரபுரமே 4

அருந்திறல் அவுணர்கள் அரண் அழியச்
சரம் துரந்து எரிசெய்த சங்கரன் ஊர்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவு அணி சிரபுரமே 5

கலை அவன் மறை அவன் காற்றொடு தீ
மலை அவன் விண்ணொடு மண்ணும் அவன்
கொலையவன் கொடிமதில் கூட்டுஅழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே 6

வான் அமர் மதியொடு மத்தம் சூடித்
தானவர் புரம் எய்த சைவன் இடம்
கான் அமர் மடமயில்பெடை பயிலும்
தேன் அமர் பொழில் அணி சிரபுரமே 7

மறுத்தவர் திரிபுரம் மாய்ந்து அழியக்
கறுத்தவன் கார்அரக்கன் முடிதோள்
இறுத்தவன் இருஞ் சினக் காலனை முன்
செறுத்தவன் வள நகர் சிரபுரமே 8

வண்ண நல்மலர் உறை மறையவனும்
கண்ணனும் கழல் தொழ கனல்உருஆய்
விண் உற ஓங்கிய விமலன் இடம்
திண்ண நல்மதில் அணி சிரபுரமே 9

வெற்று அரை அழல்பவர் விரி துகிலார்
கற்றிலர் அறஉரை புறன்உரைக்கப்
பற்றலர் திரி புரம்மூன்றும் வேவச்
செற்றவன் வள நகர் சிரபுரமே 10

அருமறை ஞானசம்பந்தன் அம்தண்
சிரபுரநகர் உறை சிவன் அடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும் வல்லார்
திருவொடு புகழ் மல்கு தேசினரே 11

60. திருச்சிரபுரம்

திருமுறை 2/102 இராகம் : பந்துவராளி பண் : நட்டராகம்

அன்னம்மெல்நடை அரிவையொடு இனிது உறை அமரர்தம் பெருமானார்
மின்னு செஞ்சடை வெள் எருக்கம் மலர் வைத்தவர் வேதம்தாம்
பன்னு நன்பொருள் பயந்தவர் பருமதில் சிரபுரத்தார் சீரார்
பொன்னின்மாமலர் அடிதொழும் அடியவர் வினையொடும் பொருந்தாரே 1

கோல மாகரி உரித்தவர் அரவொடும் ஏனக்கொம்பு இள ஆமை
சாலப் பூண்டுதண் மதி அது சூடிய சங்கரனார் தம்மைப்
போலத் தம்அடியார்க்கும் இன்பு அளிப்பவர் பொருகடல் விடமுண்ட
நீலத்தார் மிடற்று அண்ணலார் சிரபுரம் தொழவினை நில்லாவே 2

மானத் திண்புய வரிசிலைப் பார்த்தனைத் தவம்கெட மதித்தன்று
கானத்தே திரி வேடனாய் அமர்செயக் கண்டு அருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் திரிதரும் சிரபுரத்து உறைஎங்கள்
கோனைக் கும்பிடும் அடியரைக் கொடுவினை குற்றங்கள் குறுகாவே 3

மாணி தன்னுயிர் மதித்து உண வந்த அக்காலனை உதை செய்தார்
பேணி உள்குமெய் அடியவர் பெருந்துயர்ப் பிணக்கறுத்து அருள்செய்வார்
வேணி வெண்பிறை உடையவர் வியன்புகழ்ச் சிரபுரத்து அமர்கின்ற
ஆணிப் பொன்னினை அடிதொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே 4

பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய் நின்றார்
சேரும் சந்தனம் அகிலொடு வந்து இழி செழும்புனல் கோட்டாறு
வாரும் தண்புனல் சூழ் சிரபுரம்தொழும் அடியவர் வருந்தாரே 5

ஊழி அந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்துஇவ் உலகங்கள் அவைமூட
ஆழி எந்தையென்று அமரர்கள் சரண்புக அந்தரத்து உயர்ந்தார்தாம்
யாழின் நேர்மொழி ஏழையோடு இனிதுறை இன்பன்எம் பெருமானார்
வாழி மாநகர்ச் சிரபுரம் தொழுதுஎழ வல்வினை அடையாவே 6

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப் பிணம்இடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும் வித்தகனார் ஒண்
சாய்கள் தான்மிக உடையதண் மறையவர் தகுசிரபுரத்தார் தாம்
தாய்கள் ஆயினார் பல்லுயிர்க்கும் தமைத் தொழும்அவர் தளராரே 7

இலங்குபூண்வரை மார்புடை இராவணன் எழில்கொள்வெற்புஎடுத்தஅன்று
கலங்கச் செய்தலும் கண்டுதம் கழலடி நெரியவைத்து அருள்செய்தார்
புலங்கள் செங்கழு நீர்மலர்த் தென்றல்மன்று அதனிடைப் புகுந்தாரும்
குலங்கொள் மாமறை அவர் சிரபுரம் தொழுது எழ வினை குறுகாவே8

வண்டு சென்று அணை மலர்மிசை நான்முகன் மாயன்என்று இவர்அன்று
கண்டு கொள்ளவோர் ஏனமோடு அன்னமாய்க் கிளறியும் பறந்தும்தாம்
பண்டு கண்டது காணவே நீண்டஎம் பசுபதி பரமேட்டி
கொண்ட செல்வத்துச் சிரபுரம் தொழுதுஎழ வினைஅவை கூடாவே 9

பறித்த புன்தலைக் குண்டிகைச் சமணரும் பார்மிசைத் துவர்தோய்ந்த
செறித்த சீவரத் தேரரும் தேர்கிலாத் தேவர்கள் பெருமானார்
முறித்து மேதிகள் கரும்புதின்று ஆவியின் மூழ்கிட இளவாளை
வெறித்துப் பாய்வயல் சிரபுரம் தொழவினை விட்டிடும் மிகத்தானே 10

பரசு பாணியைப் பத்தர்கள் அத்தனைப் பைஅரவொடு அக்கு
நிரைசெய் பூண்திரு மார்புடைநிமலனை நித்திலப் பெருந்தொத்தை
விரைசெய் பூம்பொழில் சிரபுரத்து அண்ணலை விண்ணவர் பெருமானைப்
பரவு சம்பந்தன் செந்தமிழ் வல்லவர் பரமனைப் பணிவாரே 11

61. திருப்புறவம்

திருமுறை : 1/74 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

நறவம் நிறை வண்டு அறை தார்க்கொன்றை நயந்து நயனத்தால்
சுறவம் செறி வண் கொடியோன் உடலம் பொடியா விழிசெய்தான்
புறவம் உறை வண்பதியா மதியார் புரம்மூன்று எரிசெய்த
இறைவன் அறவன் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 1

உரவன் புலியின்உரி தோல்ஆடை உடைமேல் படநாகம்
விரவி விரி பூங்கச்சா அசைத்த விகிர்தன் உகிர்தன்னால்
பொரு வெங்களிறு பிளிற உரித்துப் புறவம் பதி ஆக
இரவும் பகலும் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 2

பந்தம் உடைய பூதம் பாடப் பாதம் சிலம்பு ஆர்க்க
கந்தம் மல்கு குழலி காண கரிகாட்டு எரி ஆடி
அம் தண்கடல் சூழ்ந்து அழகு ஆர் புறவம் பதியா அமர்வு எய்தி
எம்தம் பெருமான் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 3

நினைவார் நினைய இனியான் பனி ஆர் மலர் தூய் நித்தலும்
கனை ஆர் விடை ஒன்று உடையான் கங்கைத் திங்கள் கமழ்கொன்றை
புனை வார்சடையின் முடியான் கடல் சூழ் புறவம் பதி ஆக
எனை ஆள் உடையான் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 4

செங்கண் அரவும் நகுவெண்தலையும் முகிழ்வெண்திங்களும்
தங்கு சடையன் விடையன் உடையன் சரி கோவண ஆடை
பொங்கு திரை வண்கடல் சூழ்ந்து அழகு ஆர் புறவம் பதி ஆக
எங்கும் பரவி இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 5

பின்னு சடைகள் தாழக் கேழல் எயிறு பிறழப் போய்
அன்னநடையார் மனைகள்தோறும் அழகு ஆர் பலி தேர்ந்து
புன்னை மடலின் பொழில் சூழ்ந்து அழகு ஆர் புறவம் பதியாக
என்னை யுடையான் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 6

உண்ணற்கு அரிய நஞ்சை உண்டு ஒரு தோழம்தேவர்
விண்ணிற் பொலிய அமுதம் அளித்த விடைசேர் கொடி அண்ணல்
பண்ணில் சிறை வண்டு அறை பூஞ்சோலைப் புறவம் பதியாக
எண்ணில் சிறந்த இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 7

விண்தான் அதிர வியன் ஆர் கயிலை வேரோடு எடுத்தான் தன்
திண்தோள் உடலும் முடியும் நெரியச் சிறிதே ஊன்றிய
புண்தான் ஒழிய அருள்செய் பெருமான் புறவம் பதி ஆக
எண்தோள் உடையான் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 8

நெடியான் நீள் தாமரைமேல் அயனும் நேடிக் காண்கில்லாப்
படி ஆம் மேனி உடையான் பவளவரை போல் திரு மார்பில்
பொடி ஆர் கோலம் உடையான் கடல் சூழ் புறவம் பதி ஆக
இடி ஆர் முழவு ஆர் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 9

ஆலும் மயிலின் பீலி அமணர் அறிவு இல் சிறுதேரர்
கோலும் மொழிகள் ஒழியக் குழுவும் தழலும் எழில்வானும்
போலும் வடிவும் உடையான் கடல்சூழ் புறவம் பதி ஆக
ஏலும் வகையால் இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே. 10

பொன் ஆர் மாடம் நீடும் செல்வப் புறவம் பதி ஆக
மின் ஆர் இடையாள் உமையாளோடும் இருந்த விமலனைத்
தன் ஆர்வம் செய் தமிழின் விரகன் உரைத்த தமிழ் மாலை
பல் நாள் பாடி ஆடப் பிரியார் பரலோகம்தானே. 11

திருச்சிற்றம்பலம்

62. திருப்புறவம்

திருமுறை : 1/97 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

எய்யா வென்றித் தானவர் ஊர்மூன்று எரிசெய்த
மைஆர் கண்டன் மாதுஉமை வைகும் திருமேனிச்
செய்யான் வெண்நீறு அணிவான் திகழ் பொன் பதிபோலும்
பொய்யா நாவின் அந்தணர் வாழும் புறவம்மே. 1

மாது ஒருபாலும் மால் ஒருபாலும் மகிழ்கின்ற
நாதன் என்று ஏத்தும் நம்பான் வைகும் நகர்போலும்
மாதவி மேய வண்டு இசை பாட மயில் ஆடப்
போது அலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்மே. 2

வற்றா நதியும் மதியும் பொதியும் சடைமேலே
புற்று ஆடுஅரவின் படம் ஆடவும் இப் புவனிக்கு ஓர்
பற்றுஆய் இடுமின் பலி என்று அடைவார் பதிபோலும்
பொன் தாமரையின் பொய்கை நிலாவும் புறவம்மே. 3

துன்னார் புரமும் பிரமன்சிரமும் துணிசெய்து
மின்ஆர் சடைமேல் அரவும் மதியும் விளையாடப்
பல் நாள் இடுமின் பலி என்று அடைவார் பதிபோலும்
பொன் ஆர் புரிநூல் அந்தணர் வாழும் புறவம்மே. 4

தேவா அரனே சரண் என்று இமையோர் திசைதோறும்
காவாய் என்று வந்து அடையக் கார்விடம் உண்டு
பா ஆர் மறையும் பயில்வோர் உறையும் பதிபோலும்
பூ ஆர் கோலச் சோலை சுலாவும் புறவம்மே. 5

கற்று அறிவு எய்திக் காமன் முன் ஆகும் முகவுஎல்லாம்
அற்று அரனே நின் அடி சரண் என்னும் அடியோர்க்குப்
பற்றுஅதுஆய பாசுபதன் சேர் பதி என்பர்
பொன் திகழ் மாடத்து ஒளிகள் நிலாவும் புறவம்மே. 6

எண்திசையோர் அஞ்சிடு வகை கார் சேர் வரை என்னக்
கொண்டு எழு கோல முகில் போல் பெரிய கரிதன்னைப்
பண்டு உரிசெய்தோன் பாவனைசெய்யும் பதி என்பர்
புண்டரிகத்தோன் போல் மறையோர் சேர் புறவம்மே. 7

பரக்கும் தொல்சீர் தேவர்கள் சேனைப் பௌவத்தைத்
துரக்கும் செந்தீப் போல் அமர் செய்யும் தொழில் மேவும்
அரக்கன் திண்தோள் அழிவித்தான் அக்காலத்தில்
புரக்கும் வேந்தன் சேர்தரு மூதூர் புறவம்மே. 8

மீத் திகழ் அண்டம் தந்த அயனோடு மிகு மாலும்
மூர்த்தியை நாடிக் காண ஒணாது முயல் விட்டு ஆங்கு
ஏத்த வெளிப்பாடு எய்தியவன்தன் இடம் என்பர்
பூத் திகழ் சோலைத் தென்றல் உலாவும் புறவம்மே. 9

வையகம் நீர் தீ வாயுவும் விண்ணும் முதல்ஆனான்
மெய்அல தேரர் உண்டு இலை என்றே நின்றே தம்
கையினில் உண்போர் காண ஒணாதான் நகர் என்பர்
பொய் அகம் இல்லாப் பூசுரர் வாழும் புறவம்மே. 10

பொன் இயல் மாடப் புரிசை நிலாவும் புறவத்து
மன்னிய ஈசன் சேவடி நாளும் பணிகின்ற
தன் இயல்பு இல்லாச் சண்பையர்கோன் சீர்ச் சம்பந்தன்
இன்இசைஈர் ஐந்து ஏத்த வல்லோர்கட்கு இடர் போமே.11

திருச்சிற்றம்பலம்

63. திருப்புறவம்

திருமுறை : 3/84 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

பெண்இயல் உருவினர் பெருகிய புனல் விரவிய பிறைக்
கண்ணியர் கடு நடை விடையினர் கழல் தொழும் அடியவர்
நண்ணிய பிணி கெட அருள்புரிபவர் நணுகு உயர் பதி
புண்ணிய மறையவர் நிறை புகழ் ஒலிமலி புறவமே. 1

கொக்குஉடை இறகொடு பிறையொடு குளிர்சடைமுடியினர்
அக்குஉடை வடமும் ஓர் அரவமும் மலரரை மிசையினில்
திக்குஉடை மருவிய உருவினர் திகழ் மலைமகளொடும்
புக்கு உடன்உறைவது புதுமலர் விரை கமழ் புறவமே. 2

கொங்கு இயல் சுரிகுழல் வரிவளை இளமுலை உமை ஒரு
பங்கு இயல் திருவுரு உடையவர் பரசுவொடு இரலை மெய்
தங்கிய கரதலம் உடையவர் விடையவர் உறைபதி
பொங்கிய பொருகடல் கொள அதன்மிசை உயர் புறவமே. 3

மாதவம் உடை மறையவன் உயிர் கொள வரு மறலியை
மேதகு திருவடி இறைஉற உயிர் அது விலகினார்
சாதகஉரு இயல் சுரன்இடை உமைவெருஉற வரு
போதக உரியதள் மருவினர் உறைபதி புறவமே. 4

காமனை அழல் கொள விழிசெய்து கருதலர் கடிமதில்
தூமம் அது உற விறல் சுடர் கொளுவிய இறை தொகு பதி
ஓமமொடு உயர்மறை பிற இயவகைதனொடு ஒளி கெழு
பூமகள் அலரொரொடு புனல்கொடு வழிபடு புறவமே. 5

சொல் நயம் உடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுஉணர் பெருமையர் திருவடி பேணிட
முன்னைய முதல்வினை அற அருளினர் உறை முது பதி
புன்னையின் முகை நிதி பொதி அவிழ் பொழி அணி புறவமே.6

வரி தரு புலிஅதள் உடையினர் மழு எறி படையினர்
பரி தரு நகுதலைவடம் முடிமிசை அணி பெருமையர்
எரிதரும் உருவினர் இமையவர் தொழுவது ஓர் இயல்பினர்
புரிதரு குழல் உமையொடும் இனிது உறை பதி புறவமே.7

வசி தரும் உருவொடு மலர்தலை உலகினை வலிசெயும்
நிசிசரன் உடலொடு நெடு முடி ஒருபதும் நெரிவுஉற
ஒசிதர ஒருவிரல் நிறுவினர் ஒளிவளர் வெளிபொடி
பொசிதரு திருஉரு உடையவர் உறைபதி புறவமே. 8

தேனக மருவிய செறிதரு முளிரி செய் தவிசினில்
ஊனக மருவிய புலன்நுகர் உணர்வுடை ஒருவனும்
வானகம் வரையக மறிகடல் நிலன்எனும் எழுவகைப்
போனகம் மருவினன் அறிவு அரியவர் பதி புறவமே. 9

கோசரம் நுகர்பவர் கொழுகிய துவர் அன துகிலினர்
பாசுர வினை தரு பளகர்கள் பழிதரு மொழியினர்
நீசரை விடும் இனி நினைவு உறும் நிமலர்தம் உறைபதி
பூசுரர் மறை பயில் நிறை புகழ் ஒலி மலி புறவமே. 10

போதுஇயல் பொழில் அணி புறவ நன் நகர்உறை புனிதனை
வேதியர் அதிபதி மிகு தலை தமிழ் கெழு விரகினன்
ஓதிய ஒருபதும் உரியது ஓர் இசை கொள உரைசெயும்
நீதியர் அவர் இரு நிலன்இடை நிகழ்தரு பிறவியே. 11

திருச்சிற்றம்பலம்

64. திருச்சண்பை நகர்

திருமுறை : 1/66 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

பங்கம் ஏறு மதி சேர்சடையார் விடையார் பலவேதம்
அங்கம்ஆறும் மறைநான்கு அவையும் ஆனார் மீன் ஆரும்
வங்கம் மேவு கடல் வாழ் பரதர் மனைக்கே நுனைமுக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பைநகராரே. 1

சூது அகம் சேர் கொங்கையாள் ஓர்பங்கர் சுடர்க் கமலப்
போதுஅகம் சேர் புண்ணியனார் பூதகணநாதர்
மேதகம் சேர் மேகம் அம் தண்சோலையில் விண்ஆர்ந்த
சாதகம் சேர் பாளை நீர் சேர் சண்பைநகராரே. 2

மகரத்து ஆடு கொடியோன் உடலம் பொடிசெய்து அவனுடைய
நிகர் ஒப்பில்லாத் தேவிக்கு அருள்செய் நீலகண்டனார்
பகரத் தாரா அன்னம் பகன்றில் பாதம் பணிந்து ஏத்தத்
தகரப் புன்னை தாழைப்பொழில் சேர் சண்பைநகராரே. 3

மொய் வல்அசுரர் தேவர் கடைந்த முழுநஞ்சுஅது உண்ட
தெய்வர் செய்யஉருவர் கரிய கண்டர் திகழ் சுத்திக்
கையர் கட்டங்கத்தர் கரியின் உரியர் காதலால்
சைவர் பாசுபதர்கள் வணங்கும் சண்பைநகராரே. 4

கலம் ஆர் கடலுள் விடம் உண்டு அமரர்க்கு அமுதம் அருள்செய்த
குலம் ஆர் கயிலைக்குன்றுஅது உடையர் கொல்லை எருதுஏறி
நலம் ஆர் வெள்ளை நாளிகேரம் விரியா நறும்பாளை
சலம் ஆர் கரியின் மருப்புக்காட்டும் சண்பைநகராரே. 5

மா கரம் சேர் அத்தியின் தோல் போர்த்து மெய்ம் மால்ஆன
சூகரம் சேர் எயிறு பூண்ட சோதியன் மேதக்க
ஆகரம் சேர் இப்பிமுத்தை அம் தண்வயலுக்கே
சாகரம் சேர் திரைகள் உந்தும் சண்பைநகராரே. (6–7)

இருளைப் புரையும் நிறத்தின் அரக்கன்தனை ஈடு அழிவித்து
அருளைச் செய்யும் அம்மான் ஏர்ஆர் அம் தண் கந்தத்தின்
மருளைச் சுரும்பு பாடி அளக்கர் வரை ஆர் திரைக்கையால்
தரளத்தோடு பவளம் ஈனும் சண்பைநகராரே. 8

மண்தான் முழுதும் உண்ட மாலும் மலர்மிசை மேல் அயனும்
எண்தான் அறியா வண்ணம் நின்ற இறைவன் மறைஓதி
தண்டு ஆர் குவளைக் கள் அருந்தித் தாமரைத்தாதின்மேல்
பண்தான் கொண்டு வண்டு பாடும் சண்பைநகராரே. 9

போதியாரும் பிண்டியாரும் புகழ் அல சொன்னாலும்
நீதி ஆகக் கொண்டு அங்கு அருளும் நிமலன் இரு நான்கின்
மாதி சித்தர் மாமறையின் மன்னிய தொல் நூலர்
சாதி கீத வர்த்தமானர் சண்பைநகராரே. 10

வந்தியோடு பூசை அல்லாப் போழ்தில் மறை பேசிச்
சந்திபோதில் சமாதிசெய்யும் சண்பைநகர் மேய
அந்திவண்ணன்தன்னை அழகுஆர் ஞானசம்பந்தன் சொல்
சிந்தைசெய்து பாட வல்லார் சிவகதி சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

65. திருச்சண்பை நகர்

திருமுறை : 3/75 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

எம்தமது சிந்தை பிரியாத பெருமான் என இறைஞ்சி இமையோர்
வந்து துதிசெய்ய வளர் தூபமொடு தீபம் மலி வாய்மை அதனால்
அந்தி அமர் சந்தி பல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்
சந்த மலி குந்தளம் நல் மாதினொடு மேவு பதி சண்பைநகரே. 1

அங்கம்விரி துத்தி அரவு ஆமை விரவு ஆரம் அமர் மார்பில் அழகன்
பங்கயமுகத்து அரிவையோடு பிரியாது பயில்கின்ற பதிதான்
பொங்கு பரவைத் திரை கொணர்ந்து பவளத்திரள் பொலிந்த அயலே
சங்கு புரி இப்பி தரளத்திரள் பிறங்கு ஒளி கொள் சண்பைநகரே. 2

போழும் மதி தாழும் நதி பொங்கு அரவு தங்கு புரிபுன்சடையினன்
யாழின்மொழி மாழைவிழி ஏழைஇளமாதினொடு இருந்த பதிதான்
வாழை வளர் ஞாழல் மகிழ் மன்னு புனைதுன்னு பொழில் மாடு மடலார்
தாழை முகில் வேழம் மிகு தந்தம் என உந்து தகு சண்பைநகரே. 3

கொட்ட முழவு இட்ட அடி வட்டணைகள் கட்ட நடம்ஆடி குலவும்
பட்டம் நுதல் கட்டு மலர் மட்டு மலி பாவையொடு மேவு பதிதான்
வட்டமதி தட்டு பொழிலுள் தமது வாய்மை வழுவாத மொழியார்
சட்ட கலைஎட்டு மருவு எட்டும் வளர் தத்தை பயில் சண்பைநகரே. 4

பண் அங்கு எழுவு பாடலினொடு ஆடல் பிரியாத பரமேட்டி பகவன்
அணங்கு எழுவு பாகம் உடை ஆகம் உடை அன்பர் பெருமானது இடமாம்
இணங்கு எழுவி ஆடு கொடி மாடம் மதில் நீடு விரை ஆர் புறவுஎலாம்
தணம் கெழுவி ஏடு அலர் கொள் தாமரையில் அன்னம் வளர் சண்பைநகரே. 5

பாலன் உயிர்மேல் அணவு காலன் உயிர் பாற உதைசெய்த பரமன்
ஆலும் மயில் போல் இயலி ஆயிழை தன்னோடும்அமர்வு எய்தும் இடமாம்
ஏலம் மலி சோலை இனவண்டு மலர் கெண்டி நறவு உண்டு இசைசெய
சாலி வயல் கோலம் மலி சேல் உகள நீலம் வளர் சண்பைநகரே. 6

விண்பொய் அதனால் மழை விழாது ஒழியினும் விளைவுதான் மிக உடை
மண் பொய் அதனால் வளமிலாது ஒழியினும் தமது வண்மைவழுவார்
உண்ப கரவார் உலகின் ஊழிபலதோறும் நிலையான பதிதான்
சண்பைநகர் ஈசனடி தாழும் அடியார் தமது தன்மையதுவே. 7

வரைக்குல மகட்கு ஒரு மறுக்கம் வருவித்த மதியில் வலியுடை
அரக்கனது உரக் கரசிரத்து உற அடர்த்து அருள்புரிந்த அழகன்
இருக்கையது அருக்கன் முதலான இமையோர் குழுமி ஏழ் விழவினில்
தருக்குலம் நெருக்கும் மலி தண்பொழில்கள் கொண்டல் அன சண்பைநகரே. 8

நீலவரை போல நிகழ் கேழல்உரு நீள் பறவை நேர் உருவம் ஆம்
மாலும் மலரானும் அறியாமை வளர் தீஉருவம் ஆன வரதன்
சேலும் இன வேலும் அன கண்ணியொடு நண்ணு பதி சூழ்புறவெலாம்
சாலி மலி சோலை குயில் புள்ளினொடு கிள்ளை பயில் சண்பைநகரே. 9

போதியர்கள் பிண்டியர்கள் போது வழுவாத வகைஉண்டு பலபொய்
ஓதியவர் கொண்டு செய்வது ஒன்றும் இலை நன்று அது உணர்வீர் உரைமினோ
ஆதி எமை ஆள் உடைய அரிவையொடு பிரிவு இலி அமர்ந்த பதிதான்
சாதிமணி தெண்திரை கொணர்ந்து வயல் புக எறிகொள் சண்பைநகரே. 10

வாரின் மலி கொங்கை உமை நங்கையொடு சங்கரன் மகிழ்ந்து அமரும் ஊர்
சாரின் முரல் தெண்கடல் விசும்புற முழங்கு ஒலி கொள் சண்பைநகர்மேல்
பாரின் மலிகின்ற புகழ் நின்ற தமிழ் ஞானசம்பந்தன் உரைசெய்
சீரின் மலி செந்தமிழ்கள் செப்பும்அவர் சேர்வர் சிவலோக நெறியே. 11

திருச்சிற்றம்பலம்

66. சீர்காழி

திருமுறை : 1/24 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : பிரமபுரீசுவரர் இறைவியார் : திருநிலைநாயகி

பூவார் கொன்றைப் புரிபுன் சடைஈசா
காவாய் என நின்று ஏத்தும் காழியார்
மேவார் புரம் மூன்று அட்டார் அவர்போலாம்
பாவார் இன்சொல் பயிலும் பரமரே. 1

எந்தை என்று அங்கு இமையோர் புகுந்து ஈண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமலர் அவர்போலாம்
அந்தி நட்டம் ஆடும் அடிகளே. 2

தேனை வென்ற மொழியாள் ஒருபாகம்
கானமான் கைக் கொண்ட காழியார்
வானம் ஓங்கு கோயில் அவர்போலாம்
ஆன இன்பம் ஆடும் அடிகளே. 3

மாணா வென்றிக் காலன் மடியவே
காணா மாணிக்கு அளித்த காழியார்
நாணார் வாளி தொட்டார் அவர்போலாம்
பேணார் புரங்கள் அட்ட பெருமானே. 4

மாடே ஓதம் எறிய வயல்செந்நெல்
காடு ஏறிச்சங்கு ஈனும் காழியார்
வாடா மலராள் பங்கர் அவர்போலாம்
ஏடார் புரம் மூன்று எரித்த இறைவரே. 5

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாம்
செங்கண் அரக்கர் புரத்தை எரித்தாரே. 6

கொல்லை விடைமுன் பூதம் குனித்தாடும்
கல்ல வடத்தை உகப்பார் காழியார்
அல்ல இடத்து நடந்தார் அவர்போலாம்
பல்ல இடத்தும் பயிலும் பரமரே. 7

எடுத்த அரக்கன் நெரிய விரல்ஊன்றிக்
கடுத்து முரிய அடர்த்தார் காழியார்
எடுத்த பாடற்கு இரங்கும் அவர் போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. 8

ஆற்றல் உடைய அரியும் பிரமனும்
தோற்றம் காணா வென்றிக் காழியார்
ஏற்றம் ஏறு அங்கு ஏறும் அவர்போலாம்
கூற்றம் மறுகக் குமைத்த குழகரே. 9

பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர்
கரக்கும் உரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த இறைவர் அவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத்து ஐயரே. 10

காரார் வயல்சூழ் காழிக் கோன்தனைச்
சீரார் ஞானசம்பந்தன் சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லார்
ஏரார் வானத்து இனிதா இருப்பரே. 11

திருச்சிற்றம்பலம்

67. சீர்காழி

திருமுறை : 1/34 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

அடல் ஏறு அமரும் கொடி அண்ணல்
மடல் ஆர் குழலாளொடு மன்னும்
கடல் ஆர் புடை சூழ்தரு காழி
தொடர்வார் அவர் தூ நெறியாரே. 1

திரை ஆர் புனல் சூடிய செல்வன்
வரையார்மகளோடு மகிழ்ந்தான்
கரை ஆர் புனல் சூழ்தரு காழி
நிரை ஆர் மலர் தூவுமின் இன்றே. 2

இடி ஆர் குரல் ஏறு உடை எந்தை
துடி ஆர் இடையாளொடு துன்னும்
கடி ஆர் பொழில் சூழ்தரு காழி
அடி ஆர் அறியார் அவலம்மே. 3

ஒளி ஆர் விடம் உண்ட ஒருவன்
அளி ஆர் குழல் மங்கையொடு அன்பாய்க்
களி ஆர் பொழில் சூழ்தரு காழி
எளிதுஆம் அது கண்டவர் இன்பே. 4

பனி ஆர் மலர் ஆர்தரு பாதன்
முனி தான் உமையோடு முயங்கிக்
கனி ஆர் பொழில் சூழ்தரு காழி
இனிதுஆம் அது கண்டவர் ஈடே. 5

கொலை ஆர்தரு கூற்றம் உதைத்து
மலையான்மகளோடு மகிழ்ந்தான்
கலையார் தொழுது ஏத்திய காழி
தலையால் தொழுவார் தலையாரே. 6

திரு ஆர் சிலையால் எயில் எய்து
உருஆர் உமையோடு உடன்ஆனான்
கரு ஆர் பொழில் சூழ்தரு காழி
மருவாதவர் வான் மருவாரே. 7

அரக்கன் வலி ஒல்க அடர்த்து
வரைக்கு மகளோடு மகிழ்ந்தான்
சுரக்கும் புனல் சூழ்தரு காழி
நிரக்கும் மலர் தூவும் நினைந்தே. 8

இருவர்க்கு எரி ஆகி நிமிர்ந்தான்
உருவில் பெரியாளொடுசேரும்
கரு நல் பரவை கமழ் காழி
மருவ பிரியும் வினை மாய்ந்தே. 9

சமண்சாக்கியர் தாம் அலர் தூற்ற
அமைந்தான் உமையோடு உடன் அன்பாய்க்
கமழ்ந்து ஆர் பொழில் சூழ்தரு காழி
சுமந்தார் மலர் தூவுதல் தொண்டே. 10

நலம்ஆகிய ஞானசம்பந்தன்
கலம் ஆர் கடல் சூழ்தரு காழி
நிலைஆக நினைந்தவர் பாடல்
வலர்ஆனவர் வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

68. சீர்காழி

திருமுறை : 1/81 பண் : குறிஞ்சி இராகம் :சுருட்டி, எதுகுல காம்போதி

நல்லார் தீ மேவும் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர் பொன்கழல் ஏத்த
வில்லால் புரம் செற்றான் மேவும் பதிபோலும்
கல் ஆர் மதில் சூழ்ந்த காழிந்நகர்தானே. 1

துளி வண் தேன் பாயும் இதழி தூ மத்தம்
தெளிவெண் திங்கள் மாசுணம் நீர் திகழ் சென்னி
ஒளி வெண்தலைமாலை உகந்தான் ஊர்போலும்
களி வண்டு யாழ்செய்யும் காழிந்நகர்தானே. 2

ஆலக் கோலத்தின் நஞ்சு உண்டு அமுதத்தைச்
சாலத் தேவர்க்கு ஈந்து அளித்தான் தன்மையால்
பாலற்குஆய் நன்றும் பரிந்து பாதத்தால்
காலற் காய்ந்தான் ஊர் காழிந்நகர்தானே. (3–7)

இரவில் திரிவோர்கட்கு இறை தோள் இணைபத்தும்
நிரவி கர வாளை நேர்ந்தான் இடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால்நீறு அணிவோர்க்கும்
கரவு இல் தடக்கையார் காழிந்நகர்தானே. 8

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலும் இரந்தோர்க்கு எந்நாளும்
காலம் பகராதார் காழிந்நகர்தானே. 9

தம் கை இட உண்பார் தாழ் சீவரத்தார்கள்
பெங்கை உணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை ஒருபாகம் மகிழ்ந்தான் மலர்ச் சென்னிக்
கங்கை தரித்தான் ஊர் காழிந்நகர்தானே. 10

வாசம் கமழ் காழி மதி செஞ்சடை வைத்த
ஈசன் நகர்தன்னை இணை இல் சம்பந்தன்
பேசும் தமிழ் வல்லோர் பெருநீர் உலகத்துப்
பாசம்தனை அற்றுப் பழி இல் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

69. சீர்காழி

திருமுறை : 1/102 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

உரவு ஆர் கலையின் கவிதைப் புலவர்க்கு ஒருநாளும்
கரவா வண்கைக் கற்றவர் சேரும் கலிக் காழி
அரவு ஆர் அரையா அவுணர் புரம்மூன்று எரிசெய்த
சரவா என்பார் தத்துவஞானத் தலையாரே. 1

மொய் சேர் வண்டு உண் மும்மதம் நால்வாய் முரண் வேழக்
கை போல் வாழை காய்குலை ஈனும் கலிக் காழி
மை சேர் கண்டத்து எண்தோள் முக்கண் மறையோனே
ஐயா என்பார்க்கு அல்லல்கள் ஆன அடையாவே. 2

இளகக் கமலத்து ஈன்கள் இயங்கும் கழி சூழக்
களகப் புரிசைக் கவின் ஆர் சாரும் கலிக்காழி
அளகத் திரு நன்நுதலி பங்கா அரனே என்று
உளகப் பாடும் அடியார்க்கு உறு நோய் அடையாவே. 3

எண் ஆர் முத்தம் ஈன்று மரகதம் போல் காய்த்துக்
கண் ஆர் கமுகு பவளம்பழுக்கும் கலிக் காழிப்
பெண் ஓர்பாகா பித்தா பிரானே என்பார்க்கு
நண்ணா வினைகள் நாள்தொறும் இன்பம் நணுகும்மே. 4

மழை ஆர் சாரல் செம்புனல் வந்து அங்கு அடி வருடக்
கழை ஆர் கரும்பு கண்வளர் சோலைக் கலிக் காழி
உழை ஆர் கரவா உமையாள் கணவா ஒளிர்சங்கக்
குழையா என்று கூற வல்லார்கள் குணவோரே. 5

குறி ஆர் திரைகள் வரைகள்நின்றும் கோட்டாறு
கறி ஆர் கழி சம்புஇரசம் கொடுக்கும் கலிக் காழி
வெறி ஆர் கொன்றைச் சடையா விடையா என்பாரை
அறியா வினைகள் அருநோய் பாவம் அடையாவே.(6–7)

உலம் கொள் சங்கத்து ஆர்கலி ஓதத்து உதையுண்டு
கலங்கள் வந்து கார் வயல் ஏறும் கலிக் காழி
இலங்கை மன்னன்தன்னை இடர் கண்டு அருள்செய்த
சலம் கொள் சென்னி மன்னா என்னத் தவம் ஆமே. 8

ஆவிக் கமலத்து அன்னம் இயங்கும் கழி சூழக்
காவிக்கண்ணார் மங்கலம் ஓவாக் கலிக் காழிப்
பூவில் தோன்றும் புத்தேளொடு மாலவன்தானும்
மேவிப் பரவும் அரசே என்ன வினை போமே. 9

மலை ஆர் மாடம் நீடு உயர் இஞ்சி மஞ்சு ஆரும்
கலை ஆர் மதியம் சேர்தரும் அம் தண் கலிக் காழித்
தலைவா சமணர்சாக்கியர்க்கு என்றும் அறிவுஒண்ணா
நிலையாய் என்ன தொல்வினைஆய நில்லாவே. 10

வடிகொள் வாவிச் செங்கழுநீரில் கொங்குஆடிக்
கடி கொள் தென்றல் முன்றினில் வைகும் கலிக் காழி
அடிகள்தம்மை அந்தம் இல் ஞானசம்பந்தன்
படி கொள் பாடல் வல்லவர்தம்மேல் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

70. சீர்காழி

திருமுறை : 2/11 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

நல்லானை நால்மறையோடு இயல் ஆறுஅங்கம்
வல்லானை வல்லவர்பால் மலிந்து ஓங்கிய
சொல்லானைத் தொல்மதில் காழியே கோயில்ஆம்
இல்லானை ஏத்த நின்றார்க்கு உளது இன்பமே. 1

நம் மானம் மாற்றி நமக்கு அருளாய் நின்ற
பெம்மானைப் பேய்உடன் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரும் அணி காழி
எம்மானை ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையே. 2

அருந்தானை அன்பு செய்து ஏத்தகில்லார் பால்
பொருந்தானைப் பொய்அடிமைத் தொழில் செய்வாருள்
விருந்தானை வேதியர் ஓதி மிடை காழி
இருந்தானை ஏத்துமின் நும் வினை ஏகவே. 3

புற்றானைப் புற்று அரவம் அரையின்மிசைச்
சுற்றானைத் தொண்டு செய்வார் அவர் தம்மொடும்
அற்றானை அந்தணர் காழி அமர் கோயில்
பற்றானைப் பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே. 4

நெதியானை நெஞ்சுஇடம் கொள்ள நினைவார்தம்
விதியானை விண்ணவர்தாம் வியந்து ஏத்திய
கதியானைக் கார்உலவும் பொழில் காழி ஆம்
பதியானைப் பாடுமின் நும் வினை பாறவே. 5

செப்பு ஆன மென்முலையாளைத் திகழ் மேனி
வைப்பானை வார் கழல் ஏத்தி நினைவார் தம்
ஒப்பானை ஓதம் உலாவு கடல் காழி
மெய்ப்பானை மேவிய மாந்தர் வியந்தாரே. 6

துன்பானைத் துன்பம் அழித்து அருள் ஆக்கிய
இன்பானை ஏழ்இசையின் நிலை பேணுவார்
அன்பானை அணி பொழில் காழிநகர் மேய
நம்பானை நண்ண வல்லார் வினை நாசமே. 7

குன்றானைக் குன்று எடுத்தான் புயம்நால் ஐந்தும்
வென்றானை மென்மலரானொடு மால்தேட
நின்றானை நேரிழையாளொடும் காழியுள்
நன்றானை நம்பெருமானை நணுகுமே. (8–9)

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்அவை கேட்டு வெகுளேன்மின்
பூஆயகொன்றையினானைப் புனல் காழிக்
கோ ஆய கொள்கையினான் அடி கூறுமே. 10

கழி ஆர் சீர் ஓதம் மல்கும் கடல் காழியுள்
ஒழியாது கோயில் கொண்டானை உகந்து உள்கித்
தழி ஆர் சொல் ஞானசம்பந்தன் தமிழ் ஆர
மொழிவார்கள் மூஉலகும் பெறுவார்களே. 11

திருச்சிற்றம்பலம்

71. சீர்காழி

திருமுறை : 2/39 பண் : இந்தளம் இராகம் :நாதநாமக்கிரியா

ஆரூர் தில்லைஅம்பலம் வல்லம் நல்லம்
வடகச்சியும் அச்சிறுபாக்கம் நல்ல
கூரூர் குடவாயில் குடந்தை வெண்ணி
கடல் சூழ் கழிப்பாலை தென் கோடி பீடுஆர்
நீர் ஊர் வயல் நின்றியூர் குன்றியூரும்
குருகாவையூர் நாரையூர் நீடு கானப்
பேரூர் நல் நீள் வயல் நெய்த்தானமும்
பிதற்றாய் பிறைசூடி தன் பேரிடமே. 1

அண்ணாமலை ஈங்கோயும் அத்தி முத்தாறு
அகலா முதுகுன்றம் கொடுங்குன்றமும்
கண் ஆர் கழுக்குன்றம் கயிலை கோணம்
பயில் கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண் ஆர் மொழி மங்கை ஓர்பங்கு உடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணி நின்றே
எண்ணாய் இரவும் பகலும்
இடும்பைக்கடல் நீந்தல் ஆம் காரணமே. 2

அட்டானம் என்று ஓதிய நால் இரண்டும்
அழகன் உறை காஅனைத்தும் துறைகள்
எட்டுஆம் திருமூர்த்தியின் காடுஒன்பதும்
குளம்மூன்றும் களம் அஞ்சும் பாடிநான்கும்

மட்டுஆர் குழலாள் மலைமங்கைபங்கன்
மதிக்கும் இடம் ஆகிய பாழிமூன்றும்
சிட்டானவன் பாசூர் என்றே விரும்பாய்
அரும்பாவங்கள் ஆயின தேய்ந்து அறவே. 3

அறப்பள்ளி அகத்தியான்பள்ளி வெள்ளைப்
பொடிப் பூசி ஆறு அணிவான் அமர் காட்டுப்பள்ளி
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி
திரு நனிபள்ளி சீர் மகேந்திரத்துப்
பிறப்பு இல்லவன் பள்ளி வெள்ளச் சடையான்
விரும்பும் இடைப்பள்ளி வண் சக்கரம் மால்
உறைப்பால் அடி போற்றக் கொடுத்த பள்ளி
உணராய் மட நெஞ்சமே உன்னி நின்றே. 4

ஆறை வடமாகறல் அம்பர் ஐயாறு
அணி ஆர் பெருவேளூர் விளமர் தெங்கூர்
சேறை துலை புகலூர் அகலாது
இவை காதலித்தான் அவன் சேர்பதியே. 5

மன வஞ்சர் மற்று ஓட முன் மாதர் ஆரும்
மதி கூர் திருக்கூடலில் ஆலவாயும்
இன வஞ்சொல் இலா இடைமாமருதும்
இரும்பைப் பதிமாகாளம் வெற்றியூரும்
கனம் அம் சின மால் விடையான் விரும்பும்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்
தன மென்சொலில் தஞ்சம் என்றே நினைமின்
தவம்ஆம் மலம் ஆயினதான் அறுமே. 6

மாட்டூர் மட பாச்சிலாச்சிராமம்
மயிண்டீச்சரம் வாதவூர் வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கம் கொட்டும்
கடல் ஒற்றியூர் மற்று உறையூர் அவையும்
கோட்டூர் திரு ஆமாத்தூர் கோழம்பமும்
கொடுங்கோவலூர் திருக் குணவாயில்... ... 7

... ... குலாவு திங்கள்
சடையான் குளிரும் பரிதி நியமம்
போற்றூர் அடியார் வழிபாடு ஒழியாத் தென்
புறம் பயம் பூவணம் பூழியூரும்
காற்று ஊர் வரை அன்று எடுத்தான் முடித்தோள்
நெரித்தான் உறைகோயில் என்று என்று நீ கருதே. 8


நெற்குன்றம் ஒத்தூர் நிறைநீர் மருகல்
நெடுவாயில் குறும்பலா நீடு திரு
நற்குன்றம் வலம்புரம் நாகேச்சுரம்
நளிர்சோலை உஞ்சேனைமாகாளம் வாய்மூர்
கல்குன்றம் ஒன்றுஏந்தி மழை தடுத்த
கடல் வண்ணனும் மா மலரோனும் காணாச்
சொற்கு என்றும் தொலைவு இலாதான் உறையும்
குடமூக்கு என்று சொல்லிக் குலாவுமினே. 9

குத்தங்குடி வேதிகுடி புனல்சூழ்
குருந்தங்குடி தேவள் மருவும்
அத்தங்குடி தண் திரு வண்குடியும்
அலம்பும் சலம் தன் சடைவைத்து உகந்த

நித்தன் நிமலன் உமையோடும் கூட
நெடுங்காலம் உறைவிடம் என்று சொல்லாப்
புத்தர் புறம் கூறிய புன் சமணர்
நெடும் பொய்களை விட்டு நினைந்து உய்ம்மினே.10

அம்மானை அருந்தவம் ஆகிநின்ற
அமரர்பெருமான் பதிஆன உன்னிக்
கொய்ம் மா மலர்ச்சோலை குலாவு கொச்சைக்கு
இறைவன் சிவஞானசம்பந்தன் சொன்ன
இம்மாலை ஈர்ஐந்தும் இரு நிலத்தில்
இரவும் பகலும் நினைந்து ஏத்தி நின்று
விம்மா வெருவா விரும்பும் அடியார்
விதியார் பிரியார் சிவன்சேவடிக்கே. 11

திருச்சிற்றம்பலம்



72. சீர்காழி

திருமுறை : 2/49 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

பண்ணின் நேர்மொழி மங்கைமார் பலம்
பாடி ஆடிய ஓசை நாள்தொறும்
கண்ணின் நேர் அயலே பொலியும் கடல் காழிப்
பெண்ணின் நேர் ஒருபங்கு உடைப்பெரு
மானை எம்பெருமான் என்று என்றுஉன்னும்
அண்ணலார் அடியார் அருளாலும் குறைவிலரே. 1

மொண்டு அலம்பிய வார்திரைக்கடல்
மோதி மீது எறி சங்கம் வங்கமும்
கண்டல் அம் புடை சூழ் வயல்சேர் கலிக் காழி
வண்டு அலம்பிய கொன்றையான் அடி
வாழ்த்தி ஏத்திய மாந்தர் தம்வினை
விண்டல் அங்கு எளிதுஆம் அதுநல் விதியாமே. 2

நாடுஎலாம் ஒளி எய்த நல்லவர்
நன்றும் ஏத்தி வணங்குவார் பொழில்
காடுஎலாம் மலர் தேன் துளிக்கும் கடல் காழித்
தோடு உலாவிய காது உளாய் சுரி சங்க
வெண்குழையாய் என்று என்று உன்னும்
வேடம் கொண்டவர்கள் வினை நீங்கல் உற்றாரே. 3

மையின் ஆர் பொழில் சூழ நீழலில்
வாசம் ஆர் மது மல்க நாள்தொறும்
கையின் ஆர் மலர் கொண்டு எழுவார் கலிக் காழி
ஐயனே அரனே என்று ஆதரித்து
ஓதி நீதி உளே நினைப்பவர்
உய்யும்ஆறு உலகில் உயர்ந்தாரின் உள்ளாரே. 4

மலி கடுந் திரைமேல் நிமிர்ந்து எதிர்
வந்துவந்து ஒளிர் நித்திலம் விழக்
கலி கடிந்த கையார் மருவும் கலிக் காழி
வலிய காலனை வீட்டி மாணிதன்
இன் உயிர் அளித்தானை வாழ்த்திட
மெலியும் தீவினை நோய் அவை மேவுவர் வீடே. 5

மற்றும் இவ் உலகத்து உளோர்களும்
வான் உளோர்களும் வந்து வைகலும்
கற்ற சிந்தையராய்க் கருதும் கலிக் காழி
நெற்றிமேல் அமர் கண்ணினானை
நினைந்து இருந்து இசை பாடுவார் வினை
செற்ற மாந்தர் எனத் தெளிமின்கள் சிந்தையுளே. 6

தான் நலம் புரை வேதியரொடு
தக்க மாதவர் தாம்தொழ பயில்
கானலின் விரை சேர விம்மும் கலிக் காழி
ஊனுள் ஆர்உயிர் வாழ்க்கையாய் உறவுஆகி
நின்ற ஒருவனே என்றுஎன்று
ஆனலம் கொடுப்பார் அருள் வேந்தர் ஆவாரே. 7

மைத்த வண்டு எழு சோலை ஆலைகள்
சாலி சேர் வயல் ஆர வைகலும்
கத்து வார்கடல் சென்று உலவும் கலிக் காழி
அத்தனே அரனே அரக்கனை
அன்று அடர்த்து உகந்தாய் உன கழல்
பத்தராய்ப் பரவும் பயன் ஈங்கு நல்காயே. 8

பரு மராமொடு தெங்கு பைங்கதலிப்
பருங்கனி உண்ண மந்திகள்
கருவரால் உகளும் வயல் சூழ் கலிக் காழித்
திருவின்நாயகன் ஆய மாலொடு
செய்யமாமலர்ச் செல்வன் ஆகிய
இருவர் காண்பு அரியான் என ஏத்துதல் இன்பமே. 9

பிண்டம் உண்டு உழல்வார்களும் பிரியாது
வண் துகில் ஆடை போர்த்தவர்
கண்டு சேரகிலார் அழகுஆர் கலிக் காழித்
தொண்டைவாய் உமையோடு கூடிய
வேடனே சுடலைப் பொடி அணி
அண்டவாணன் என்பார்க்கு அடையா அல்லல்தானே. 10

பெயர் எனும் இவை பன்னிரண்டினும்
உண்டெனப் பெயர் பெற்ற ஊர் திகழ்
கயல் உலாம் வயல் சூழ்ந்து அழகுஆர் கலிக் காழி
நயன் நடன் கழல் ஏத்தி வாழ்த்திய
ஞானசம்பந்தன் செந்தமிழ்உரை
உயருமா மொழிவார் உலகத்து உயர்ந்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

73. சீர்காழி

திருமுறை : 2/59 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

நலம் கொள் முத்தும் மணியும் அணியும் திரள் ஓதம்
கலங்கள்தன்னில் கொண்டு கரை சேர் கலிக் காழி
வலம் கொள் மழு ஒன்று உடையாய் விடையாய் என ஏத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க்கு அடையா அருநோயே. 1

ஊர்ஆர் உவரிச் சங்கம் வங்கம் கொடுவந்து
கார்ஆர் ஓதம் கரைமேல் உயர்த்தும் கலிக் காழி
நீர் ஆர் சடையாய் நெற்றிக்கண்ணா என்றுஎன்று
பேர்ஆயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. 2

வடி கொள் பொழிலின் மழலை வரிவண்டு இசைசெய்யக்
கடி கொள் போதில் தென்றல் அணையும் கலிக் காழி
முடி கொள் சடையாய் முதல்வா என்று முயன்று ஏத்தி
அடி கைதொழுவார்க்கு இல்லை அல்லல் அவலமே. 3

மனைக்கே ஏற வளம் செய் பவளம் வளர் முத்தம்
கனைக்கும் கடலுள் ஓதம் ஏறும் கலிக் காழிப்
பனைக்கைப் பகட்டு ஈர்உரியாய் பெரியார் எனப் பேணி
நினைக்க வல்ல அடியார் நெஞ்சில் நல்லாரே. 4

பருதி இயங்கும் பாரில் சீர் ஆர் பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விரும்பும் கலிக் காழிச்
சுருதி மறைநான்குஆன செம்மை தருவானைக்
கருதி எழுமின் வழுவா வண்ணம் துயர் போமே. 5

மந்தம் மருவும் பொழிலில் எழில் ஆர் மது உண்டு
கந்தம் மருவ வரிவண்டு இசைசெய் கலிக் காழிப்
பந்தம் நீங்க அருளும் பரனே என ஏத்திச்
சிந்தைசெய்வார் செம்மை நீங்காது இருப்பாரே. 6

புயல் ஆர் பூமி நாமம் ஓதிப் புகழ் மல்கக்
கயல் ஆர் கண்ணார் பண் ஆர் ஒலிசெய் கலிக் காழிப்
பயில்வான்தன்னைப் பத்தி ஆரத் தொழுது ஏத்த
முயல்வார்தம்மேல் வெம்மைக் கூற்றம் முடுகாதே. 7

அரக்கன் முடிதோள் நெரிய அடர்த்தான் அடியார்க்குக்
கரக்க கில்லாது அருள்செய் பெருமான் கலிக் காழிப்
பரக்கும் புகழான்தன்னை ஏத்திப் பணிவார் மேல்
பெருக்கும் இன்பம் துன்பம்ஆன பிணி போமே. 8

மாண்ஆய் உலகம் கொண்ட மாலும் மலரோனும்
காணா வண்ணம் எரிஆய் நிமிர்ந்தான் கலிக் காழிப்
பூண் ஆர் முலையாள் பங்கத்தானைப் புகழ்ந்து ஏத்திக்
கோணா நெஞ்சம் உடையார்க்கு இல்லைக் குற்றமே. 9

அஞ்சி அல்லல் மொழிந்து திரிவார் அமண்ஆதர்
கஞ்சி காலை உண்பார்க்கு அரியான் கலிக் காழித்
தஞ்சம்ஆய தலைவன் தன்னை நினைவார்கள்
துஞ்சல் இல்லா நல்ல உலகம் பெறுவாரே. 10

ஊழிஆய பாரில் ஓங்கும் உயர் செல்வக்
காழி ஈசன் கழலே பேணும் சம்பந்தன்
தாழும் மனத்தால் உரைத்த தமிழ்கள்இவை வல்லார்
வாழி நீங்கா வானோர்உலகில் மகிழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

74. சீர்காழி

திருமுறை : 2/75 பண் : காந்தாரம் இராகம் :நவரோசு

விண் இயங்கும் மதிக்கண்ணியான் விரியும் சடைப்
பெண் நயம் கொள் திருமேனியான் பெருமான் அனல்
கண் நயம்கொள் திருநெற்றியான் கலிக் காழியுள்
மண் நயம்கொள் மறையாளர் ஏத்து மலர்ப்பாதனே. 1

வலிய காலன் உயிர் வீட்டினான் மடவாளொடும்
பலி விரும்பியது ஓர் கையினான் பரமேட்டியான்
கலியை வென்ற மறையாளர்தம் கலிக் காழியுள்
நலிய வந்த வினை தீர்த்து உகந்த எம் நம்பனே. 2

சுற்றல் ஆம் நல் புலித்தோல் அசைத்து அயன் வெண்தலைத்
துற்றல் ஆயது ஒரு கொள்கையான் சுடுநீற்றினான்
கற்றல் கேட்டல் உடையார்கள் வாழ்கலிக் காழியுள்
மல் தயங்கு திரள்தோள் எம்மைந்தன் அவன் நல்லனே.3

பல் அயங்கு தலை ஏந்தினான் படுகான் இடை
மல் அயங்கு திரள்தோள்கள் ஆர நடம்ஆடியும்
கல் அயங்கு திரைசூழ நீள் கலிக் காழியுள்
தொல் அயங்கு புகழ் பேண நின்ற சுடர் வண்ணனே. 4

தூ நயம் கொள் திருமேனியில் பொடிப் பூசிப்போய்
நா நயம்கொள் மறை ஓதி மாது ஒரு பாகமாக்
கான் நயம் கொள்புனல் வாசம்ஆர் கலிக் காழியுள்
தேன் நயம் கொள் முடி ஆன்ஐந்து ஆடிய செல்வனே. 5

சுழி இலங்கும் புனல்கங்கையாள் சடை ஆகவே
மொழி இலங்கும் மடமங்கை பாகம் உகந்தவன்
கழி இலங்கும் கடல் சூழும் தண் கலிக் காழியுள்
பழி இலங்கும் துயர் ஒன்று இலாப் பரமேட்டியே. 6

முடி இலங்கும் உயர் சிந்தையால் முனிவர் தொழ
வடி இலங்கும் கழல் ஆர்க்கவே அனல் ஏந்தியும்
கடி இலங்கும் பொழில் சூழும் தண் கலிக் காழியுள்
கொடி இலங்கும் இடையாளொடும் குடி கொண்டதே. 7

வல்ல அரக்கன் வரை பேர்க்க வந்தவன் தோள்முடி
கல் அரக்க இவ்விறல் வாட்டினான் கலிக் காழியுள்
நல் ஒருக்கியது ஓர் சிந்தையார் மலர் தூவவே
தொல் இருக்குமறை ஏத்து உகந்து உடன் வாழுமே. 8

மருவு நால்மறையோனும் மா மணிவண்ணனும்
இருவர் கூடி இசைந்து ஏத்தவே எரியான் தன் ஊர்
வெருவ நின்ற திரைஓதம் வார வியல்முத்து அவை
கருவை ஆர் வயல் சங்கு சேர் கலிக் காழியே. 9

நன்றி ஒன்றும் உணராதவன் சமண்சாக்கியர்
அன்றி அங்கு அவர் சொன்ன சொல்அவை கொள்கிலான்
கன்று மேதி இளங்கானல் வாழ் கலிக் காழியுள்
வென்றி சேர் வியன்கோயில் கொண்ட விடையாளனே.10

கண்ணுமூன்றும் உடைஆதி வாழ் கலிக் காழியுள்
அண்ணல் அம் தண் அருள் பேணி ஞானசம்பந்தன் சொல்
வண்ணம் மூன்றும் தமிழில் தெரிந்து இசை பாடுவார்
விண்ணும் மண்ணும் விரிகின்ற தொல் புகழாளரே. 11

திருச்சிற்றம்பலம்

75. சீர்காழி

திருமுறை : 2/96 பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் :நவரோசு

பொங்கு வெண்புரி வளரும் பொற்பு உடை மார்பன் எம் பெருமான்
செங்கண் ஆடுஅரவு ஆட்டும் செல்வன் எம் சிவன் உறை கோயில்
பங்கம் இல் பலமறைகள் வல்லவர் பத்தர்கள் பரவும்
தங்கு வெண்திரைக் கானல் தண்வயல் காழி நன்நகரே.1

தேவர் தானவர் பரந்து திண்வரை மால்கடல் நிறுவி
நாஅதால் அமிர்து உண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு
ஆவ என்று அருநஞ்சம் உண்டவன் அமர்தரு மூதூர்
காவல் ஆர் மதில் சூழ்ந்த கடிபொழில் காழி நன்நகரே.2

கரியின் மா முகம் உடைய கணபதி தாதை பல்பூதம்
திரிய இல் பலிக்கு ஏகும் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நல் மாதர் சதிபட மா நடம் ஆடி
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலி புனல் காழி நன்நகரே. 3

சங்க வெண்குழைச் செவியன் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூண் என உடைய அப்பனுக்கு அழகிய ஊர்ஆம்
துங்க மாளிகை உயர்ந்த தொகு கொடி வான்இடை மிடைந்து
வங்க வாள்மதி தடவும் மணி பொழில் காழி நன்நகரே. 4

மங்கை கூறு அமர் மெய்யான் மான்மறி ஏந்திய கையான்
எங்கள் ஈசன் என்று எழுவார் இடர்வினை கெடுப்பவற்கு ஊர்ஆம்
சங்கை இன்றி நன்நியமம் தாம் செய்து தகுதியின் மிக்க
கங்கைநாடு உயர் கீர்த்தி மறையவர் காழி நன்நகரே. 5

நாறு கூவிளம் மத்தம் நாகமும் சூடிய நம்பன்
ஏறும் ஏறிய ஈசன் இருந்து இனிது அமர்தரு மூதூர்
நீறு பூசிய உருவர் நெஞ்சினுள் வஞ்சம் ஒன்று இன்றித்
தேறுவார்கள் சென்று ஏத்தும் சீர் திகழ் காழி நன்நகரே.6

நடம்அது ஆடிய நாதன் நந்திதன் முழவுஇடைக் காட்டில்
விடம்அமர்ந்து ஒரு காலம் விரித்து அறம் உரைத்தவற்கு ஊர்ஆம்
இடம்அதா மறை பயில்வார் இருந்தவர் திருந்தி அம் போதிக்
குடம்அது ஆர் மணி மாடம் குலாவிய காழி நன்நகரே. 7

கார் கொள் மேனி அவ் அரக்கன் தன் கடுந் திறலினைக் கருதி
ஏர் கொள் மங்கையும் அஞ்ச எழில் மலை எடுத்தவன் நெரியச்
சீர் கொள் பாதத்து ஓர் விரலால் செறுத்த எம் சிவன் உறை கோயில்
தார் கொள் வண்டுஇனம் சூழ்ந்த தண்வயல் காழி நன்நகரே.8

மாலும் மா மலரானும் மருவி நின்று இகலிய மனத்தால்
பாலும் காண்பு அரிதுஆய பரஞ்சுடர் தன் பதி ஆகும்
சேலும் வாளையும் கயலும் செறிந்து தன் கிளையொடு மேய
ஆலும் சாலிநல்கதிர்கள் அணி வயல் காழி நன்நகரே. 9

புத்தர் பொய் மிகு சமணர் பொலி கழல்அடிஇணை காணும்
சித்தம் மற்று அவர்க்கு இலாமைத் திகழ்ந்த நல் செழும்சுடர்க்கு ஊர்ஆம்
சித்தரோடு நல் அமரர் செறிந்த நல்மாமலர் கொண்டு
முத்தனே அருள் என்று முறைமை செய் காழி நன்நகரே.10

ஊழி ஆனவைபலவும் ஒழித்திடும் காலத்தில் ஓங்கு.... 11

திருச்சிற்றம்பலம்

76. சீர்காழி

திருமுறை : 2/97 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

நம் பொருள் நம் மக்கள் என்று நச்சி இச்சை செய்து நீர்
அம்பரம் அடைந்து சால அல்லல் உய்ப்பதன் முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன் மேவு நன்நகர் நலம் கொள் காழி சேர்மினே. 1

பாவம் மேவும் உள்ளமோடு பத்தி இன்றி நித்தலும்
ஏவம் ஆன செய்து சாவதன் முனம் இசைந்து நீர்
தீபம் மாலை தூபமும் செறிந்த கையராகி நம்
தேவதேவன் மன்னும் ஊர் திருந்து காழி சேர்மினே. 2

சோறு கூறை இன்றியே துவண்டு தூரமாய் நுமக்கு
ஏறு சுற்றம் எள்கவே இடுக்கண் உய்ப்பதன் முனம்
ஆறும் ஓர் சடையினான் ஆதி யானை செற்றவன்
நாறு தேன்மலர்ப்பொழில் நலம்கொள்காழி சேர்மினே. 3

நச்சி நீர் பிறன் கடை நடந்து செல்ல நாளையும்
உச்சி வம் எனும் முரை உணர்ந்து கேட்பதன்முனம்
பிச்சர் நச்சுஅரவு அரைப் பெரிய சோதி பேணுவார்
இச்சை செய்யும் எம்பிரான் எழில் கொள்காழி சேர்மினே.4

கண்கள் காண்பு ஒழிந்து மேனி கன்றி ஒன்று அலாத நோய்
உண்கிலாமை செய்து நும்மை உய்த்து அழிப்பதன்முனம்
விண்குலாவு தேவர் உய்ய வேலைநஞ்சு அமுதுசெய்
கண்கள் மூன்று உடைய எம் கருத்தர் காழி சேர்மினே.5

அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவத்தமே பிறந்து நீர்
எல்லையில் பிணக்கினில் கிடந்திடாது எழும்மினோ
பல்லில் வெண்தலையினில் பலிக்கு இயங்கு பான்மையன்
கொல்லை ஏறு அது ஏறுவான் கோலக்காழி சேர்மினே. (6–7)

பொய் மிகுத்த வாயராய்ப் பொறாமையோடு செல்லும் நீர்
ஐ மிகுந்த கண்டராய் அடுத்து உரைப்பதன்முனம்
மை மிகுத்த மேனி வாள் அரக்கனை நெரித்தவன்
பை மிகுத்த பாம்பரைப் பரமர் காழி சேர்மினே. 8

காலினோடு கைகளும் தளர்ந்து காமநோய்தனால்
ஏலவார் குழலினார் இகழ்ந்து உரைப்பதன்முனம்
மாலினொடு நான்முகன் மதித்தவர்கள் காண்கிலா
நீலமேவு கண்டனார் நிகழ்ந்த காழி சேர்மினே. 9

நிலை வெறுத்த நெஞ்சமோடு நேசம் இல் புதல்வர்கள்
முலை வெறுத்த பேர் தொடங்கியே முனிவதன் முனம்
தலை பறித்த கையர்தேரர் தாம் தரிப்பரியவன்
சிலைபிடித்து எயில்எய்தான் திருந்து காழி சேர்மினே.10

தக்கனார் தலைஅரிந்த சங்கரன் தனது அரை
அக்கினோடு அரவு அசைத்த அந்தி வண்ணர் காழியை
ஒக்க ஞானசம்பந்தன் உரைத்த பாடல் வல்லவர்
மிக்க இன்பம் எய்தி வீற்று இருந்து வாழ்தல் மெய்ம்மையே. 11

திருச்சிற்றம்பலம்

77. சீர்காழி

திருமுறை : 2/113 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி

பொடி இலங்கும் திருமேனியாளர் புலிஅதளினர்
அடி இலங்கும் கழல் ஆர்க்க ஆடும் அடிகள் இடம்
இடி இலங்கும் குரல் ஓதம் மல்க எறி வார்திரைக்
கடி இலங்கும் புனல்முத்து அலைக்கும் கடல் காழியே. 1

மயல் இலங்கும் துயர் மாசு அறுப்பான் அருந்தொண்டர்கள்
அயல் இலங்கப் பணி செய்ய நின்ற அடிகள் இடம்
புயல் இலங்கும் கொடையாளர் வேதத்து ஒலி பொலியவே
கயல் இலங்கும் வயல் கழனி சூழும் கடல் காழியே. 2

கூர்வு இலங்கும் திரிசூலவேலர் குழைக் காதினர்
மார்வு இலங்கும் புரிநூல்உகந்தம் மணவாளன் ஊர்
நேர் விலங்கல் அன திரைகள் மோதந்நெடுந் தாரைவாய்க்
கார் விலங்கல் எனக் கலந்து ஒழுகும் கடல் காழியே. 3

குற்றம் இல்லார் குறைபாடு செய்வார் பழி தீர்ப்பவர்
பெற்றம் நல்ல கொடி முன் உயர்த்த பெருமான் இடம்
மற்று நல்லார் மனத்தால் இனியார் மறை கலை எலாம்
கற்று நல்லார் பிழை தெரிந்து அளிக்கும் கடல் காழியே.4

விருது இலங்கும் சரிதைத் தொழிலார் விரிசடையினார்
எருது இலங்கப் பொலிந்து' ஏறும் எந்தைக்கு இடம் ஆவது
பெரிது இலங்கும் மறை கிளைஞர் ஓத பிழை கேட்டலால்
கருது கிள்ளைக்குலம் தெரிந்து தீர்க்கும் கடல் காழியே.5

தோடு இலங்கும் குழைக் காதர் வேதர் சுரும்பு ஆர் மலர்ப்
பீடு இலங்கும் சடைப்பெருமையாளர்க்கு இடம் ஆவது
கோடு இலங்கும் பெரும் பொழில்கள் மல்கப் பெருஞ்செந்நெலின்
காடு இலங்கும் வயல் பயிலும் அம் தண் கடல் காழியே.6

மலை இலங்கும் சிலைஆக வேகம் மதில்மூன்று எரித்து
அலை இலங்கும் புனல் கங்கை வைத்த அடிகட்கு இடம்
இலை இலங்கும் மலர்க்கைதை கண்டல்வெறி விரவலால்
கலை இலங்கும் கணத்துஇனம் பொலியும் கடல் காழியே.7

முழுது இலங்கும் பெரும் பாருள் வாழும் முரண் இலங்கைக் கோன்
அழுது இரங்க சிரம் உரம் ஒடுங்க அடர்த்தாங்கு அவன்
தொழுது இரங்கத் துயர் தீர்த்து உகந்தார்க்கு இடம்ஆவது
கழுதும் புள்ளும் மதில் புறம்அது ஆரும் கடல் காழியே. 8

பூவினானும் விரிபோதில் மல்கும் திருமகள்தனை
மேவினானும் வியந்து ஏத்த நீண்டார் அழலாய் நிறைந்து
ஓவி அங்கே அவர்க்கு அருள்புரிந்த ஒருவர்க்கு இடம்
காவி அம் கண் மடமங்கையர் சேர் கடல் காழியே. 9

உடை நவின்றார் உடை விட்டு உழல்வார் இருந் தவத்தார்
முடை நவின்ற மொழி ஒழித்து உகந்த முதல்வன் இடம்
மடை நவின்ற புனல் கெண்டை பாயும் வயல் மலிதரக்
கடை நவின்றம் நெடுமாடம் ஓங்கும் கடல் காழியே. 10

கருகுமுந்நீர் திரைஓதம் ஆரும் கடல் காழியுள்
உரகம் ஆரும் சடை அடிகள்தம்பால் உணர்ந்து உறுதலால்
பெருக மல்கும் புகழ் பேணும் தொண்டர்க்கு இசையார் தமிழ்
விரகன் சொன்ன இவை பாடி ஆட கெடும் வினைகளே.11

திருச்சிற்றம்பலம்

78. சீர்காழி

திருமுறை : 3/22 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

துஞ்சலும் துஞ்சல் இலாதபோழ்தினும்
நெஞ்சுஅகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சுஎழுத்துமே. 1

மந்திரம் நால்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்று அவர்தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சுஎழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன் புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்சுஎழுத்துமே. 3

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெட சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்சுஎழுத்துமே. 4

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்கு உள பூதமும் அஞ்ச ஐம் பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சு தம் உடை
அம் கையில் ஐவிரல் அஞ்சுஎழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சுஎழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்சுஎழுத்துமே. 7

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சுஎழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர் வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர் வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர் வணம் ஆவன அஞ்சுஎழுத்துமே. 9

புத்தர் சமண் கழுக் கையர் பொய் கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்சுஎழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம்பந்தன் நால்மறை
கற்றவன் காழியர்மன்னன் உன்னிய
அற்றம் இல் மாலைஈர் ஐந்தும் அஞ்சுஎழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (துஞ்சலுந் துஞ்சலி)

சீகாழியிலே எழுந்தருளி இருக்கும் நாள்களில் உபநயனஞ் செய்யும் பருவம் வந்தடைய ஆளுடைய பிள்ளையார் உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றாரேனும் பண்டைய முறைமைப்படி செய்யப்பெறும் உபநயனச் சடங்கினை மறையோர்கள் செய்ய மான்றோலோடு கூடிய உபவீதத்தைத் தரித்தருளினார். ஒரு பிறப்பும் எய்தாதவராகிய இவர் இச் சடங்கினால் சாத்திர முறைப்படி இரு பிறப்பையும் அடைந்தாராய்ச் சடங்கினைச் செய்யும் மறையவர்களால் மறை நான்கினையும் அச்சடங்கி னுக்குரிய மந்திரத்தையுந் தியானப் பொருளாகக் கருதி வணங்கித் துதித்து வழிபட்டு அவ்வேதங்களில் தமக்குள்ளனவாய ஐயங்களை எல்லாங் கேட்டுத் தெளிந்தார்கள். அம் மறையவர்க்கும், உலகவர்க்கும் ஆன்மாக்களை உய்விக்கும் உண்மைப் பொருளைத் தெரிவிக்க விரும்பிய பிள்ளையார் பஞ்சாக்கரத் திருப்பதிக மென்னும் இத்திருப்பதிகத்தை ஓதி அதில் இரண்டாந் திருப்பாட்டில் வேதியர் யாவரும் தமது சந்திகளிலும் சிறப்பாக அந்தியிலும் ஓத வேண்டிய திருமந்திரம் திரு ஐந்தெழுந்தே என்று தெரிவிக்குமாறு, 'செந்தழ லோம்பிய செம்மை வேரியர்க்கு அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே' என்று திருவாய் மலர்ந்து அருளினார். இப்பதிகமே போதிமங்கையில் திருமுறை எழுதும் அன்பர் புத்தநந்தியின் தலையில் இடிவிழுமாறு ஓதியருளியது.



79. சீர்காழி

திருமுறை : 3/40 பண் : கொல்லி இராகம் : நவரோசு

கல்லால்நீழல், அல்லாத் தேவை
நல்லார் பேணார், அல்லோம் நாமே. 1

கொன்றை சூடி, நின்ற தேவை
அன்றி ஒன்றும் நன்று இலோமே. 2

கல்லா நெஞ்சின், நில்லான் ஈசன்
சொல்லாதாரோடு, அல்லோம் நாமே. 3

கூற்று உதைத்த, நீற்றினானைப்
போற்றுவார்கள், தோற்றினாரே. 4

காட்டுள் ஆடும், பாட்டுஉளானை
நாட்டுஉள்ளாரும், தேட்டு உளாரே. 5

தக்கன் வேள்விப், பொக்கம் தீர்த்த
மிக்க தேவர், பக்கத்தோமே. 6

பெண்ஆண்ஆய, விண்ணோர்கோவை
நண்ணாதாரை, எண்ணோம் நாமே. 7

தூர்த்தன் வீரம், தீர்த்த கோவை
ஆத்தம் ஆக, ஏத்தினோமே. 8

பூவினானும், தாவினானும்
நாவினானும், நோவினாரே. 9

மொட்டு அமணர், கட்டர்தேரர்
பிட்டர் சொல்லை, விட்டு உளாமே. 10

அம் தண் காழிப் பந்தன் சொல்லைச்
சிந்தைசெய்வோர், உய்ந்து உளோரே. 11

80. சீர்காழி

திருமுறை : 3/43 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

சந்தம் ஆர் முலையாள் தன கூறனார்
வெந்த வெண்பொடி ஆடிய மெய்யனார்
கந்தம் ஆர் பொழில் சூழ்தரு காழியுள்
எந்தையார் அடி என் மனத்து உள்ளவே. 1

மான் இடம் உடையார் வளர் செஞ்சடைத்
தேன் இடம் கொளும் கொன்றை அம்தாரினார்
கான் இடம் கொளும் தண்வயல் காழியார்
ஊன் இடம் கொண்டு என் உச்சியில் நிற்பரே. 2

மை கொள் கண்டத்தர் வான்மதிச் சென்னியர்
பை கொள் வாள்அரவு ஆட்டும் படிறனார்
கை கொள் மான்மறியார் கடல் காழியுள்
ஐயன் அந்தணர் போற்ற இருக்குமே. 3

புற்றில் நாகமும் பூளையும் வன்னியும்
கற்றைவார்சடை வைத்தவர் காழியுள்
பொற்றொடியோடு இருந்தவர் பொன்கழல்
உற்றபோது உடன் ஏத்தி யுணருமே. 4

நலியும் குற்றமும் நம்உடல் நோய்வினை
மெலியும்ஆறுஅது வேண்டுதிரேல் வெய்ய
கலி கடிந்த கையார் கடல் காழியுள்
அலை கொள் செஞ்சடையார் அடி போற்றுமே. 5

பெண் ஒர்கூறினர் பேயுடன் ஆடுவர்
பண்ணும் ஏத்து இசை பாடிய வேடத்தர்
கண்ணும்மூன்று உடையார் கடல் காழியுள்
அண்ணல்ஆய அடிகள் சரிதையே. 6

பற்றும் மானும் மழுவும் அழகுஉற
முற்றும் ஊர் திரிந்து பலி முன்னுவர்
கற்ற மா நல் மறையவர் காழியுள்
பெற்றம் ஏறுஅது உகந்தார் பெருமையே. 7

எடுத்த வல்அரக்கன் முடிதோள் இற
அடர்த்து உகந்து அருள்செய்தவர் காழியுள்
கொடித் தயங்கு நன்கோயிலுள் இன்புற
இடத்து மாதொடு தாமும் இருப்பரே. 8

காலன்தன் உயிர் வீட்டு கழல் அடி
மாலும் நான்முகன் தானும் வனப்புஉற
ஓலம் இட்டு முன் தேடி உணர்கிலாச்
சீலம் கொண்டவன் ஊர்திகழ் காழியே. 9

உருவம் நீத்தவர்தாமும் உறுதுவர்
தருவல் ஆடையினாரும் தகவு இலர்
கருமம் வேண்டுதிரேல் கடல் காழியுள்
ஒருவன் சேவடியே அடைந்து உய்ம்மினே. 10

கானல் வந்து உலவும் கடல் காழியுள்
ஈனம்இல்லி இணைஅடி ஏத்திடும்
ஞானசம்பந்தன் சொல்லிய நல்தமிழ்
மானம் ஆக்கும் மகிழ்ந்து உரை செய்யவே. 11

திருச்சிற்றம்பலம்

81. திருப்பிரமபுரம்

திருமுறை : 3/117 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா
யாம் ஆமா? நீ ஆம் ஆம்; மாயா ழீ! காமா! காண் நாகா!
காணா காமா! காழீயா! மா மாயா! நீ, மா மாயா! 1

யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா
யாகா! யாழீ! காயா! காதா! யார் ஆர் ஆ தாய் ஆயாய்!
ஆயா! தார் ஆர் ஆயா! தாக ஆயா! காழீயா! கா, யா! 2

தாவாமூவா தாசாகா ழீநாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா
தாவா மூவா தாசா! காழீ நாதா! நீ யாமா! மா!
மா மா யாநீ! தானஆழீ! காசா! தா! வா மூ வாதா! 3

நீவாவாயா காயாழீ காவாவானோ வாராமே
மேராவானோ வாவாகா ழீயாகாயா வாவாநீ
நீவா வாயா! கா யாழீ! கா, வா, வான் நோ வாராமே!
மேரா, வான் நோவாவா! காழீயா! காயா! வா வா, நீ! 4

யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா
யா காலா! மேயா! காழீயா! மேதாவீ! தாய், ஆவீ!
வீயாதா! வீ தாம் மே யாழீ! கா, யாம் மேல் ஆகு ஆயா! 5

மேலேபோகா மேதேழீ காலாலேகா லானாயே
யேனாலாகா லேலாகா ழீதேமேகா போலேமே
மேலே போகாமே, தேழீ, காலாலே கால் ஆனாயே!
ஏல் நால் ஆகி ஆல் ஏலா! காழீ தே! மேகா! போலேமே?6

நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயேயேநீ மாயாநீ
நீயா மானீ! ஏயா மாதா! ஏழீ! கா, நீ தானே!
நே தாநீ! காழீ வேதா! மாயாயே நீ, மாய் ஆநீ? 7

நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே
நே(அ)ணவர் ஆ விழ யா (ஆ)சை இழியே! வேக(அ)தள்ஏரி! அளாயஉழிகா
காழிஉளாய்! அரு இளவு ஏது அ(ஃ)கவே; ஏழ்இசை யாழ இராவணனே.8

காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா
காலே மேலே காண் நீ காழீ! காலே! மாலே! மே பூ
பூமேல்ஏ(ய்), மாலே, காழீ! காண்! ஈ, காலே! மேலே கா!.9

வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகரதே
தேரகளோடமணே நினையேயே யொழிகா வணமேயுரிவே
வேரியும் ஏண் நவ காழியொயே! ஏனை நீள் நேம் அடு அள் ஓகரதே;
தேர(ர்)களோடு அமணே நினை ஏ ஏய் ஒழி! கா வணமே உரிவே. 10

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே
நேர் அகழ் ஆம் இதய ஆசு ஆழி! தாய் ஏல் நன் நீயே; நன் நீள்! ஆய் உழி கா!
காழிஉளான் இன் ஏநயே நினையே, தாழ் இசையா, தமிழ்ஆகரனே.11

திருச்சிற்றம்பலம்

82. திருக்கொச்சைவயம்

திருமுறை : 2/83 பண் : பியந்தைகாந்தாரம் இராகம் : நவரோசு

நீல நல்மாமிடற்றன் இறைவன் சினத்த
நெடுமா உரித்த நிகர் இல்
சேல் அன கண்ணி வண்ணம் ஒருகூறு உருக் கொள்
திகழ் தேவன் மேவு பதிதான்
வேல் அன கண்ணிமார்கள் விளையாடும் ஓசை
விழவு ஓசை வேத ஒலியின்
சால நல் வேலை ஓசை தரு மாட வீதி
கொடி ஆடு கொச்சைவயமே. 1

விடை உடை அப்பன் ஒப்பு இல் நடமாட வல்ல
விகிர் தத்து உருக் கொள் விமலன்
சடைஇடை வெள்எருக்கமலர் கங்கை திங்கள்
தக வைத்த சோதி பதிதான்
மடைஇடை அன்னம் எங்கும் நிரையப் பரந்து
கமலத்து வைகும் வயல்சூழ்
கொடை உடை வண்கையாளர் மறையோர்கள் என்றும்
வளர்கின்ற கொச்சைவயமே. 2

படஅரவு ஆடு முன்கை உடையான் இடும்பை
களைவிக்கும் எங்கள் பரமன்
இடம் உடை வெண்தலைக் கை பலிகொள்ளும் இன்பன்
இடமாய வேர்கொள் பதிதான்
நடம்இட மஞ்ஞை வண்டு மது உண்டு பாடு
நளிர்சோலை கோலு கனகக்
குடம் இடு கூடம் ஏறி வளர் பூவை நல்ல
மறை ஓது கொச்சைவயமே. 3

எண்திசைபாலர் எங்கும் இகலிப் புகுந்து
முயல்வுஉற்ற சிந்தை முடுகிப்
பண்டு ஒளிதீபமாலை இடு தூபமோடு
பணிவுஉற்ற பாதர் பதிதான்
மண்டிய வண்டல் மிண்டி வரும் நீர பொன்னி
வயல் பாய வாளை குழுமிக்
குண்டு அகழ் பாயும் ஓசை படைநீடு அது என்ன
வளர்கின்ற கொச்சைவயமே. 4

பனி வளர் மாமலைக்கு மருகன் குபேரனொடு
தோழமைக் கொள் பகவன்
இனியன அல்லவற்றை இனிது ஆக நல்கும்
இறைவன் இடம்கொள் பதிதான்
முனிவர்கள் தொக்கு மிக்க மறையோர்கள் ஓமம்
வளர் தூமம் ஓடி அணவிக்
குனிமதி மூடி நீடும் உயர் வான் மறைத்து
நிறைகின்ற கொச்சைவயமே. 5

புலிஅதள் கோவணங்கள் உடை ஆடையாக
உடையான் நினைக்கும் அளவில்
நலிதரு முப்புரங்க்ள் எரிசெய்த நாதன்
நலமா இருந்த நகர்தான்
கலி கெட அந்தணாளர் கலை மேவு சிந்தை
உடையார் நிறைந்து வளரப்
பொலிதரு மண்டபங்கள் உயர் மாடம் நீடு
வரை மேவு கொச்சைவயமே. (6–7)


மழைமுகில் போலும் மேனி அடல் வாள் அரக்கன்
முடியோடு தோள்கள் நெரிய
பிழை கெட மா மலர்ப்பொன் அடி வைத்த
பேயொடுஉடன் ஆடி மேய பதி தான்
இழை வளர் அல்குல மாதர் இசை பாடி ஆட
விடுஊசல் அன்ன கமுகின்
குழை தரு கண்ணிவிண்ணில் வருவார்கள் தங்கள்
அடிதேடு கொச்சைவயமே. 8

வண்டு அமர் பங்கயத்து வளர்வானும் வையம்
முழுது உண்ட மாலும் இகலி
கண்டிட ஒண்ணும் என்று கிளறிப் பறந்தும்
அறியாத சோதி பதிதான்
நண்டு உண நாரை செந்நெல் நடுவே இருந்து
விரை தேர போது மதுவிற்
புண்டரிகங்களோடு குமுதம் மலர்ந்து
வயல் மேவு கொச்சைவயமே. 9

கையினில் உண்டுமேனி உதிர் மாசர்குண்டர்
இடு சீவரத்தின் உடையார்
மெய் உரையாத வண்ணம் விளையாட வல்ல
விகிர்தத்து உருக் கொள் விமலன்
பை உடை நாக வாயில் எயிறு ஆர மிக்க
குரவம் பயின்று மலரச்
செய்யினில் நீலமொட்டு விரியக் கமழ்ந்து
மணம் நாறு கொச்சைவயமே. 10

இறைவனை ஒப்பு இலாத ஒளி மேனியானை
உலகங்கள் ஏழும் உடனே
மறைதரு வெள்ளம் ஏவி வளர் கோயில் மன்னி
இனிதா இருந்த மணியைக்
குறைவு இல ஞானமேவு குளிர்பந்தன் வைத்த
தமிழ்மாலை பாடும் அவர்போய்
அறைகழல் ஈசன் ஆளும் நகர் மேவி என்றும்
அழகா இருப்பது அறிவே. 11

திருச்சிற்றம்பலம்



83. திருக்கொச்சைவயம்

திருமுறை : 2/89 பண் : பியந்தைகாந்தாரம் இராகம் : நவரோசு

அறையும் பூம்புனலோடும் ஆடுஅரவச் சடைதன்மேல்
பிறையும் சூடுவர் மார்பில் பெண் ஒருபாகம் அமர்ந்தார்
மறையின் ஒல்லொலி ஓவா மந்திரவேள்வி அறாத
குறைவு இல் அந்தணர் வாழும் கொச்சைவயம் அமர்ந்தாரே. 1

சுண்ணத்தர் தோலொடு நூல் சேர் மார்பினர் துன்னிய பூதக்
கண்ணத்தர் வெங்கனல் ஏந்திக் கங்குல் நின்று ஆடுவர் கேடில்
எண்ணத்தர் கேள்வி நல் வேள்வி அறாதவர் மால்எரி ஓம்பும்
வண்ணத்த அந்தணர் வாழும் கொச்சைவயம் அமர்ந்தாரே. 2

பாலை அன்ன வெண்நீறு பூசுவர் பல்சடை தாழ
மாலை ஆடுவர் கீதம் மா மறை பாடுதல் மகிழ்வர்
வேலை மால்கடல் ஓதம் வெண்திரை கரைமிசை விளங்கும்
கோல மா மணி சிந்தும் கொச்சைவயம் அமர்ந்தாரே. 3

கடி கொள் கூவிளம் மத்தம் கமழ்சடை நெடுமுடிக்கு அணிவர்
பொடிகள் பூசிய மார்பின் புனைவர் நல் மங்கை ஓர்பங்கர்
கடி கொள் நீடுஒலி சங்கின் ஒலியொடு கலை ஒலி துதைந்து
கொடிகள் ஓங்கிய மாடக் கொச்சைவயம் அமர்ந்தாரே. 4

ஆடல் மா மதி உடையார் ஆயின பாரிடம் சூழ
வாடல்வெண்தலை ஏந்தி வையகம் இடுபலிக்கு உழல்வார்
ஆடல் மா மடமஞ்ஞை அணிதிகழ் பேடையொடு ஆடிக்
கூடு தண்பொழில் சூழ்ந்த கொச்சைவயம் அமர்ந்தாரே.5

மண்டு கங்கையும் அரவும் மல்கிய வளர்சடைதன்மேல்
துண்ட வெண்பிறை அணிவர் தொல்வரை வில் அது ஆக
விண்ட தானவர் அரணம் வெவ்அழல் எரி கொள விடைமேல்
கொண்ட கோலமது உடையார் கொச்சைவயம் அமர்ந்தாரே.(6–7)

அன்றுஅவ் ஆல்நிழல் அமர்ந்து அறஉரை நால்வர்க்கு அருளிப்
பொன்றினார் தலைஓட்டில் உண்பது பொருகடல் இலங்கை
வென்றி வேந்தனை ஒல்க ஊன்றிய விரலினர் வான்தோய்
குன்றம் அன்ன பொன் மாடக் கொச்சைவயம் அமர்ந்தாரே. 8

சீர் கொள் மா மலரானும் செங்கண்மால் என்று இவர் ஏத்த
ஏர் கொள் வெவ் அழல் ஆகி எங்கும் உற நிமிர்ந்தாரும்
பார்கொள் விண் அழல் கால் நீர் பண்பினர் பால்மொழியோடும்
கூர்கொள் வேல் வலன் ஏந்திக் கொச்சைவயம் அமர்ந்தாரே. 9

குண்டர் வண் துவர்ஆடை போர்த்தது ஓர் கொள்கையினார்கள்
மிண்டர் பேசிய பேச்சு மெய் அல மை அணி கண்டன்
பண்டை நம்வினை தீர்க்கும் பண்பினர் ஒண்கொடியோடும்
கொண்டல் சேர் மணி மாடக் கொச்சைவயம் அமர்ந்தாரே. 10

கொந்து அணிபொழில் சூழ்ந்த கொச்சைவய நகர் மேய
அந்தணன் அடி ஏத்தும் அருமறை ஞானசம்பந்தன்
சந்தம் ஆர்ந்து அழகாய தண்தமிழ்மாலை வல்லோர் போய்
முந்தி வானவரோடும் புக வலர் முனை கெட வினையே. 11

திருச்சிற்றம்பலம்

84. திருக்கொச்சை வயம்

திருமுறை : 3/89 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

திருந்து மா களிற்று இள மருப்பொடு திரள் மணிச் சந்தம் உந்திக்
குருந்து மா குரவமும் குடசமும் பீலியும் சுமந்து கொண்டு
நிரந்து மா வயல் புகு நீடு கோட்டாறு சூழ் கொச்சை மேவிப்
பொருந்தினார் திருந்து அடி போற்றி வாழ் நெஞ்சமே புகல் அது ஆமே.1

ஏலம் ஆர் இலவமோடு இனமலர்த்தொகுதியாய் எங்கும் நுந்திக்
கோல மா மிளகொடு கொழுங்கனி கொன்றையும் கொண்டு கோட்டாறு
ஆலியா வயல்புகும் அணிதரு கொச்சையே நச்சி மேவும்
நீலம் ஆர் கண்டனை நினை மட நெஞ்சமே அஞ்சல் நீயே. 2

பொன்னும் மா மணி கொழித்து எறி புனல் கரைகள்வாய் நுரைகள் உந்திக்
கன்னிமார் முலைநலம் கவர வந்து ஏறு கோட்டாறு சூழ
மன்னினார் மாதொடும் மருவு இடம் கொச்சையே மருவில் நாளும்
முன்னை நோய் தொடரும்ஆறு இல்லைகாண் நெஞ்சமே அஞ்சல்நீயே. 3

கந்தம் ஆர் கேதகை சந்தனக்காடு சூழ் கதலிமாடே
வந்து மா வள்ளையின் பவர் அளிக் குவளையைச் சாடி ஓடக்
கொந்து வார்குழலினார் குதிகொள் கோட்டாறு சூழ் கொச்சை மேய!
எந்தையார் அடி நினைந்து உய்யல் ஆம் நெஞ்சமே அஞ்சல் நீயே. 4

மறை கொளும் திறலினார் ஆகுதிப் புகைகள் வான் அண்ட மிண்டிச்
சிறை கொளும் புனல் அணி செழு மதி திகழ் மதில் கொச்சைதன்பால்
உறைவு இடம் என மனம் அது கொளும் பிரமனார்சிரம் அறுத்த
இறைவனது அடிஇணை இறைஞ்சி வாழ் நெஞ்சமே அஞ்சல் நீயே. 5

சுற்றமும் மக்களும் தொக்க அத் தக்கனைச்சாடி அன்றே
உற்ற மால்வரை உமைநங்கையைப் பங்கமா உள்கினான் ஓர்
குற்றம் இல் அடியவர் குழுமிய வீதி சூழ் கொச்சை மேவி
நல்தவம் அருள்புரி நம்பனை நம்பிடாய் நாளும் நெஞ்சே.6

கொண்டலார் வந்திடக் கோல வார் பொழில்களில் கூடி மந்தி
கண்டவார் கழைபிடித்து ஏறி மா முகில்தனைக் கதுவு கொச்சை
அண்ட வானவர்களும் அமரரும் முனிவரும் பணிய ஆலம்
உண்ட மா கண்டனார் தம்மையே உள்கு நீ அஞ்சல் நெஞ்சே. 7

அடல் எயிற்று அரக்கனார் நெருக்கி மாமலை எடுத்து ஆர்த்த வாய்கள்
உடல் கெடத் திருவிரல் ஊன்றினார் உறைவிடம் ஒளி கொள் வெள்ளி
மடல்இடைப் பவளமும் முத்தமும் தொத்து வண் புன்னைமாடே
பெடையொடும் குருகுஇனம் பெருகு தண் கொச்சையே பேணு நெஞ்சே.8

அரவினில் துயில்தரும் அரியும் நல் பிரமனும் அன்று அயர்ந்து
குரைகழல் திருமுடி அளவிட அரியவர் கொங்கு செம்பொன்
விரிபொழில் இடைமிகு மலைமகள் மகிழ்தர வீற்றிருந்த
கரிய நல் மிடறு உடைக் கடவுளார் கொச்சையே கருது நெஞ்சே. 9

கடு மலி உடல் உடை அமணரும் கஞ்சி உண் சாக்கியரும்
இடும் அற உரைதனை இகழ்பவர் கருதும் நம் ஈசர் வானோர்
நடுவு உறை நம்பனை நால்மறை அவர் பணிந்து ஏத்த ஞாலம்
உடையவன் கொச்சையே உள்கி வாழ் நெஞ்சமே அஞ்சல் நீயே.10

காய்ந்து தம் காலினால் காலனைச் செற்றவர் கடி கொள் கொச்சை
ஆய்ந்து கொண்டு இடம் என இருந்த நல் அடிகளை ஆதரித்தே
ஏய்ந்த தொல்புகழ் மிகும் எழில்மறை ஞானசம்பந்தன் சொன்ன
வாய்ந்த இம் மாலைகள் வல்லவர் நல்லர் வான்உலகின் மேலே.11

திருச்சிற்றம்பலம்

85. திருக்கழுமலம்

திருமுறை : 1/19 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

பிறை அணி படர்சடைமுடிஇடைப் பெருகிய புனல் உடையவன் நிறை
இறை அணி வளை இணைமுலையவள் இணைவனது எழில்உடை இட வகை
கறை அணி பொழில் நிறை வயல் அணி கழுமலம் அமர் கனல்உருவினன்
நறை அணி மலர் நறுவிரை புல்கு நலம் மலி கழல் தொழல் மருவுமே. 1

பிணி படு கடல்பிறவிகள் அறல் எளிது உளது அது பெருகிய திரை
அணி படு கழுமலம் இனிது அமர் அனல்உருவினன் அவிர்சடைமிசை
தணிபடு கதிர் வளர் இளமதி புனைவனை உமைதலைவனை நிற
மணி படு கறைமிடறனை நலம் மலி கழல் இணை தொழல் மருவுமே.2

வரியுறு புலிஅதள் உடையினன் வளர்பிறை ஒளிகிளர் கதிர் பொதி
விரியுறு சடைவிரை புரை பொழில் விழவு ஒலி மலி கழுமலம்அமர்
எரியுறு நிற இறைவனது அடி இரவொடு பகல் பரவுவர் தமது
எரியுறு வினைசெறிகதிர் முனை இருள் கெட நனி நினைவு எய்துமதே.3

வினை கெட மன நினைவது முடிக எனின் நனி தொழுது எழு குலமதி
புனை கொடிஇடை பொருள் தரு படு களிறினது உரி புதை உடலினன்
மனை குடவயிறு உடையனசில வரு குறள்படை உடையவன் மலி
கனைகடல் அடை கழுமலம் அமர் கதிர் மதியினன் அதிர்கழல்களே.4

தலைமதி புனல் விடஅரவு இவை தலைமையது ஒருசடை இடை உடன்
நிலை மருவ ஓர் இடம் அருளினன் நிழல் மழுவினொடு அழல் கணையினன்
மலை மருவிய சிலைதனில் மதில் எ.யுண மனம் மருவினன் நல
கலை மருவிய புறவு அணிதரு கழுமலம் இனிது அமர் தலைவனே. 5

வரை பொருது இழி அருவிகள் பல பருகு ஒரு கடல் வரி மணல்இடை
கரை பொரு திரைஒலி கெழுமிய கழுமலம் அமர் கனல் உருவினன்
அரை பொரு புலிஅதள் உடையினன் அடிஇணை தொழ அருவினை எனும்
உரை பொடிபட உறு துயர் கெட உயர்உலகு எய்தல் ஒரு தலைமையே.6

முதிர்உறு கதிர் வளர் இளமதி சடையனை நற நிறை தலைதனில்
உதிர்உறு மயிர் பிணை தவிர் தசை உடை புலிஅதள் இடை இருள்கடி
கதிர்உறு சுடர்ஒளி கெழுமிய கழுமலம் அமர் மழு மலி படை
அதிர்உறு கழல் அடிகளது அடி தொழும் அறிவு அலது அறிவு அறியமே.7

கடல் என நிற நெடுமுடியவன் அடுதிறல் தெற அடி சரண் என
அடல்நிறை படை அருளிய புகழ் அரவு அரையினன் அணி கிளர் பிறை
விடம் நிறை மிடறு உடையவன் விரிசடையவன் விடை உடையவன் உமை
உடன் உறை பதிகள் தன் மறுகுடை உயர் கழுமலவியன் நகர்அதே. 8

கொழு மலர் உறை பதியுடையவன் நெடியவன் என இவர்களும் அவன்
விழுமையை அளவு அறிகிலர் இறை விரை புணர் பொழில் அணி விழவு அமர்
கழுமலம் அமர் கனல்உருவினன் அடிஇணை தொழும் அவர் அருவினை
எழுமையும் இல நில வகைதனில் எளிது இமையவர் வியன்உலகமே. 9

அமைவன துவர் இழுகிய துகில் அணி உடையினர் அமண்உருவர்கள்
சமையமும் ஒருபொருள் எனும்அவை சலநெறியன அறஉரைகளும்
இமையவர் தொழுகழுமலம் அமர் இறைவனது அடி பரவுவர்தமை
நமையல வினை நலன் அடைதலில் உயர்நெறி நனி நணுகுவர்களே.10

பெருகிய தமிழ்விரகினன் மலி பெயரவன் உறை பிணர் திரையொடு
கருகிய நிற விரிகடல் அடை கழுமலம் உறைவிடம் என நனி
பெருகிய சிவன்அடி பரவிய பிணை மொழியன ஒருபதும் உடன்
மருவிய மனம் உடையவர் மதிஉடையவர் விதிஉடையவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

86. திருக்கழுமலம்

திருமுறை : 1/79 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

அயில் உறு படையினர் விடையினர் முடிமேல்
அரவமும் மதியமும் விரவிய அழகர்
மயில் உறு சாயல வனமுலை ஒருபால்
மகிழ்பவர் வான்இடை முகில் புல்கும் மிடறர்
பயில்வுஉறு சரிதையர் எருது உகந்து ஏறிப்
பாடியும் ஆடியும் பலி கொள்வர் வலி சேர்
கயிலையும் பொதியிலும் இடம் என உடையார்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 1

கொண்டலும் நீலமும் புரை திருமிடறர்
கொடுமுடி உறைபவர் படுதலைக் கையர்
பண்டு அலர்அயன் சிரம் அரிந்தவர் பொருந்தும்
படர்சடை அடிகளார் பதி அதன் அயலே
வண்டலும் வங்கமும் சங்கமும் சுறவும்
மறிகடல் திரை கொணர்ந்து எற்றிய கரைமேல்
கண்டலும் கைதையும் நெய்தலும் குலவும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 2

எண்இடை ஒன்றினர் இரண்டினர் உருவம்
எரிஇடை மூன்றினர் நால்மறையாளர்
மண்இடை ஐந்தினர் ஆறினர் அங்கம்
வகுத்தனர் ஏழ்இசை எட்டு இருங்கலை சேர்

பண்இடை ஒன்பதும் உணர்ந்தவர் பத்தர்
பாடி நின்று அடி தொழ மதனனை வெகுண்ட
கண்இடைக் கனலினர் கருதிய கோயில்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 3

எரி ஒரு கரத்தினர் இமையவர்க்கு இறைவர்
ஏறு உகந்து ஏறுவர் நீறு மெய் பூசித்
திரிதரும் இயல்பினர் அயலவர் புரங்கள்
தீ எழ விழித்தனர் வேய் புரை தோளி
வரி தரு கண்இணை மடவரல் அஞ்ச
மஞ்சு உற நிமிர்ந்தது ஓர் வடிவொடும் வந்த
கரி உரி மருவிய அடிகளுக்கு இடம்ஆம்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 4

ஊர் எதிர்ந்து இடு பலி தலை கலன்ஆக
உண்பவர் விண் பொலிந்து இலங்கிய உருவர்
பார் எதிர்ந்து அடி தொழ விரை தரும் மார்பில்
படஅரவு ஆமை அக்கு அணிந்தவர்க்கு இடம்ஆம்
நீர் எதிர்ந்து இழி மணி நித்திலம் முத்தம்
நிரை சொரி சங்கமொடு ஒண்மணி வரன்றிக்
கார் எதிர்ந்து ஓதம் வன் திரை கரைக்கு எற்றும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 5

முன் உயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடி உடை அமரர்கள் அடி பணிந்து ஏத்தப்
பின்னிய சடைமிசைப் பிறை நிறைவித்த
பேர்அருளாளனார் பேணிய கோயில்

பொன் இயல் நறுமலர் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 6

கொலைக்கு அணித்தா வரு கூற்று உதை செய்தார்
குரை கழல் பணிந்தவர்க்கு அருளிய பொருளின்
நிலைக்கு அணித்தா வர நினைய வல்லார் தம்
நெடுந் துயர் தவிர்த்த எம் நிமலருக்கு இடம்ஆம்
மலைக்கு அணித்தா வர வன்திரை முரல
மது விரி புன்னைகள் முத்து என அரும்பக்
கலைக்கணம் கானலின் நீழலில் வாழும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 7

புயம்பல உடைய தென்இலங்கையர் வேந்தன்
பொருவரை எடுத்தவன் பொன்முடி திண்தோள்
பயம்பல பட அடர்த்து அருளிய பெருமான்
பரிவொடும் இனிது உறை கோயில்அது ஆகும்
வியன்பல விண்ணினும் மண்ணினும் எங்கும்
வேறுவேறு உகங்களில் பெயர் உளது என்னக்
கம்பல படக்கடல் திரைகரைக்கு எற்றும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுடே. 8

விலங்கல் ஒன்று ஏந்தி வன்மழை தடுத்தோனும்
வெறி கமழ் தாமரையோனும் என்று இவர் தம்
பலங்களால் நேடியும் அறிவு அரிதாய
பரிசினன் மருவி நின்று இனிது உறைகோயில்

மலங்கி வன் திரை வரை எனப் பரந்து எங்கும்
மறிகடல் ஓங்கி வெள் இப்பியும் சுமந்து
கலங்கள் தன் சரக்கொடு நிரக்க வந்து ஏறும்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 9

ஆம் பலதவம் முயன்று அறஉரை சொல்லும்
அறிவு இலாச் சமணரும் தேரரும் கணி சேர்
நோம் பலதவம் அறியாதவர் நொடிந்த
மூதுரை கொள்கிலா முதல்வர் தம் மேனிச்
சாம்பலும் பூசி வெண்தலை கலனாகத்
தையலார் இடு பலி வையகத்து ஏற்றுக்
காம்பு அன தோளியொடு இனிது உறை கோயில்
கழுமலம் நினைய நம் வினைகரிசு அறுமே. 10

கலி கெழு பார்இடை ஊர் என உளது ஆம்
கழுமலம் விரும்பிய கோயில் கொண்டவர் மேல்
வலி கெழு மனம்மிக வைத்தவன் மறை சேர்
வரும் கலை ஞானசம்பந்தன் தமிழின்
ஒலிகெழுமாலை என்று உரைசெய்த பத்தும்
உண்மையினால் நினைந்து ஏத்த வல்லார்மேல்
மெலி கெழு துயர்அடையா வினை சிந்தும்
விண்ணவர் ஆற்றலின் மிகப் பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

87. திருக்கழுமலம்

திருமுறை : 1/26 பண் : வியாழக்குறிச்சி இராகம் : சௌராட்டிரம்

பந்தத்தால் வந்து எப்பால் பயின்று நின்ற உம்பர்அப்
பாலே சேர்வர ஏனோர் கான் பயில் கண முனிவர்களும்
சிந்தித்தே வந்திப்ப சிலம்பின்மங்கை தன்னொடும்
சேர்வார் நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசுஅதுஎலாம்
சந்தித்தே இந்தப் பார்சனங்கள் நின்று தம் கணால்
தாமே காணா வாழ்வார் அத் தகவு செய்தவனது இடம்
கந்தத்தால் எண்திக்கும் கமழ்ந்து இலங்கு சந்தனக்
காடு ஆர் பூ ஆர் சீர் மேவும் கழுமல வள நகரே. 1

பிச்சைக்கே இச்சித்துப் பிசைந்து அணிந்த வெண்பொடிப்
பீடு ஆர் நீடு ஆர் மாடுஆரும் பிறைநுதல் அரிவையொடும்
உச்சத்தான் நச்சிப் போல் தொடர்ந்து அடர்ந்த வெங் கண் ஏறு
ஊராஊரா நீள்வீதிப் பயில்வொடும் ஒலிசெய் இசை
வச்சத்தான் நச்சுச் சேர் வடம் கொள் கொங்கை மங்கைமார்
வாரா நேரே மால் ஆகும் வசி வல அவனது இடம்
கச்சத்தான் மெச்சிப் பூக் கலந்து இலங்கு வண்டு இனம்
கார் ஆர் கார் ஆர் நீள் சோலைக் கழுமல வளநகரே. 2

திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்து இலங்கு மத்தையின்
சேரேசேரே நீர்ஆகச் செறிதரு சுரநதியோடு
அங்கைச் சேர்வு இன்றிக்கே அடைந்து உடைந்த வெண்தலைப்
பாலேமேலே மால்ஏயப் படர்வுஉறும் அவன்இறகும்

பொங்கப் பேர் நஞ்சைச் சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போது ஆர் தாரேதாம் மேவிப் புரிதரு சடையன் இடம்
கங்கைக்கு ஏயும்பொறுப்புஆர் கலந்து வந்த பொன்னியின்
காலே வாரா மேலே பாய் கழுமல வள நகரே. 3

அண்டத்தால் எண்திக்கும் அமைந்து அடங்கு மண்டலத்து
ஆறே வேறே வான்ஆள்வார் அவர்அவர் இடம்அதுஎலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்து அலைந்த உம்பரும்
மாறு ஏலாதார் தாம் மேவும் வலி மிகு புரம் எரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்து இடிந்த இஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவு செய்தவனது இடம்
கண்டிட்டே செஞ்சொல் சேர் கவின் சிறந்த மந்திரக்
காலே ஓவாதார் மேவும் கழுமல வள நகரே. 4

திக்கில் தேவு அற்று அற்றே திகழ்ந்து இலங்கு மண்டலச்
சீறு ஆர் வீறு ஆர் போர் ஆர் தாருகன் உடல் அவன் எதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்து எழுந்த சண்டத்தீப்
போலே பூ நீர் தீ கால் மீ புணர்தரும் உயிர்கள் திறம்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை செங்கதத்
தோடுஏயாமே மா லோகத் துயர்களைம் பவனதிடல்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேஓடா ஊரே சேர் கழுமல வள நகரே. 5

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்த தும்பி மொய்ம்பு உறும்
சேரே வாரா நீள் கோதைத் தெரியிழை பிடிஅது ஆய்
ஒற்றைச் சேர் முற்றல்கொம்பு உடைத் தடக்கை முக்கண் மிக்கு
ஓவாதே பாய் மா தானத்து உறுபுகர்முக இறையைப்

பெற்றிட்டே மற்று இப் பார் பெருத்து மிக்க துக்கமும்
பேரா நோய்தாம் ஏயாமைப் பிரிவு செய்தவனது இடம்
கற்றிட்டே எட்டு எட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணாதாரே சேரா மெய்க் கழுமல வளநகரே. 6

பத்திப் பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள்வாய்ப்
பாலே போகாமே காவாப் பகை அறும் வகை நினையா
முத்திக்கு ஏவி கத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்
மூடா ஊடா நால்அந்தக் கரணமும் ஒருநெறி ஆய்ச்
சித்திக்கே உய்த்திட்டு திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன் உறையும்இடம்
கத்திட்டோர் சட்டங்கம் கலந்து இலங்கும் நல்பொருள்
காலே ஓவாதார் மேவும் கழுமல வள நகரே. 7

செம்பைச் சேர் இஞ்சிச் சூழ் செறிந்து இலங்கு பைம்பொழில்
சேரே வாரா வாரீசத்திரை எறி நகர் இறைவன்
இம்பர்க்கு ஏதம் செய்திட்டு இருந்து அரன் பயின்ற வெற்பு
ஏர் ஆர் பூநேர் ஓர்பாதத்து எழில் விரல் அவண் நிறுவிட்டு
அம் பொன்பூண் வென்றித் தோள் அழிந்து வந்தனம் செய்தாற்கு
ஆர் ஆர் கூர்வாள் வாழ்நாள் அன்று அருள்புரிபவனது இடம்
கம்பத்து ஆர் தும்பித் திண் கவுள் சொரிந்த மும்மதக்
கார் ஆர் சேறு ஆர் மா வீதிக் கழுமல வள நகரே. 8

பன்றிக்கோலம் கொண்டு இப் படித்தடம் பயின்று இடப்
பான் ஆம்ஆறு ஆனாமே அப்பறவையின் உருவுகொள
ஒன்றிட்டே அம்புச் சேர் உயர்ந்த பங்கயத்து அவ
னோதான் ஓதான் அஃது உணராது உருவினது அடி முடியும்

சென்றிட்டே வந்திப்ப திருக்களம் கொள் பைங்கணின்
தேசால் வேறு ஓர் ஆகாரம் தெரிவு செய்தவனது இடம்
கன்றுக்கே முன்றிற்கே கலந்து இலம் நிறைக்கவும்
காலேவாரா மேலேபாய் கழுமல வள நகரே. 9

தட்டு இட்டே முட்டிக்கைத் தடுக்கு இடுக்கி நின்று உணா
தாமே பேணாதே நாளும் சமணொடும் உழல்பவரும்
இட்டத்தால் அத்தம்தான் இது அன்று அது என்று நின்றவர்க்கு
ஏயாமே வாய் ஏதுச்சொல் இலை மலி மருதம்பூப்
புட்டத்தே அட்டிட்டுப் புதைக்கும் மெய்க் கொள் புத்தரும்
போல்வார்தாம் ஓராமே போய்ப் புணர்வு செய்தவனது இடம்
கட்டிக் கால் வெட்டித் தீம்கரும்பு தந்த பைம்புனல்
காலே வாரா மேலே பாய் கழுமல வள நகரே. 10

கஞ்சத்தேன் உண்டிட்டே களித்து வண்டு சண்பகக்
கானே தேனே போர் ஆரும் கழுமலநகர் இறையைத்
தஞ்சைச் சார் சண்பைக் கோன் சமைத்த நல் கலைத் துறை
தாமே போல்வார் தேன் நேர் ஆர் தமிழ்விரகன மொழிகள்
எஞ்சத் தேய்வு இன்றிக்கே இமைத்து இசைத்து அமைத்த கொண்டு
ஏழேஏழே நாலேமூன்று இயல்இசை இசை இயல்பா
வஞ்சத்து ஏய்வு இன்றிக்கே மனம் கொளப் பயிற்றுவோர்
மார்பே சேர்வாள் வானோர் சீர் மதிநுதல் மடவரலே.11

திருச்சிற்றம்பலம்

88. திருக்கழுமலம்

திருமுறை : 1/129 பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

சே உயரும் திண்கொடியான் திருவடியே
சரண் என்று சிறந்த அன்பால்
நா இயலும் மங்கையொடு நான்முகன்தான்
வழிபட்ட நலம்கொள் கோயில்
வாவிதொறும் வண்கமலம் முகம் காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவி இருங்கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டும் கழுமலமே. 1

பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுஉடைய
மலைச்செல்வி பிரியா மேனி
அரும்தகைய சுண்ணவெண்நீறு அலங்கரித்தான்
அமரர் தொழ அமரும் கோயில்
தரும் தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மை பாடிக்
கருந்தடங்கண்ணார் கழல் பந்து அம்மானைப்
பாட்டு அயரும் கழுமலமே. 2

அலங்கல்மலி வானவரும் தானவரும்
அலைகடலைக் கடையப் பூதம்
கலங்க எழு கடுவிடம் உண்டு இருண்ட மணி
கண்டத்தோன் கருதும் கோயில்

விலங்கல் அமர் புயல் மறந்து மீன் சனி புக்கு
ஊன் சலிக்கம் காலம்தானும்
கலங்கல் இலா மனம்பெருவண் கைஉடைய
மெய்யர் வாழ் கழுமலமே. 3

பார் இதனை நலிந்து அமரர் பயம் எய்தச்
சயம் எய்தும் பரிசு வெம்மைப்
போர் இசையும் புரம்மூன்றும் பொன்ற ஒரு சிலை
வளைத்தோன் பொருந்தும் கோயில்
வார் இசை மென்முலை மடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப் பாராட்டக்
கார் இசையும் விசும்பு இயங்கும் கணம்கேட்டு
மகிழ்வு எய்தும் கழுமலமே. 4

ஊர்கின்ற அரவம்ஒளிவிடு திங்களொடு
வன்னி மத்தம் மன்னும்
நீர் நின்ற கங்கை நகுவெண்தலை சேர்
செஞ்சடையான் நிகழும் கோயில்
ஏர் தங்கி மலர் நிலவி இசை வெள்ளிமலை
என்ன நிலவி நின்ற
கார்வண்டின் கணங்களால் கவின் பெருகு
சுதை மாடக் கழுமலமே. 5

தரும் சரதம் தந்து அருள் என்று அடிநினைந்து
தழல்அணைந்து தவங்கள் செய்த
பெரும் சதுரர் பெயலர்க்கும் பீடார் தோழமை
அளித்த பெருமான் கோயில்

அரிந்த வயல் அரவிந்தம் மது உகுப்ப
அதுகுடித்துக் களித்து வாளை
கருஞ் சகடம் இளக வளர் கரும்பு இரிய
அகம்பாயும் கழுமலமே. 6

புவி முதல் ஐம்பூதம்ஆய் புலன்ஐந்துஆய்
நிலன் ஐந்தாய்க் கரணம் நான்காய்
அவைஅவை சேர் பயன்உருஆய் அல்ல உருஆய்
நின்றான் அமரும் கோயில்
தவமுயல்வோர் மலர் பறிப்பத் தாழ விடு
கொம்புஉதைப்பக் கொக்கின் காய்கள்
கவண் எறி கல் போல் சுனையில் கரை சேரப்
புள் இரியும் கழுமலமே. 7

அடல் வந்த வானவரை அழித்து உலகு
தெழித்து உழலும் அரக்கர் கோமான்
மிடல்வந்த இருபதுதோள் நெரியவிரல்
பணிகொண்டோன் மேவும் கோயில்
நட வந்த உழவர் இது நடவு ஒணா வகை
பரலாய்த்தென்று துன்று
கடல் வந்த சங்கு ஈன்ற முத்து வயல்
கரை குவிக்கும் கழுமலமே. 8

பூமகள்தன் கோன் அயனும் புள்ளினொடு
கேழல் உருவாகிப் புக்கிட்டு
ஆம் அளவும் சென்று முடி அடி காணா வகை
நின்றான் அமரும் கோயில்

பா மருவும் கலைப் புலவோர் பல்மலர்கள்
கொண்டு அணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களி கூர்ந்து நின்று
ஏத்தும் கழுமலமே. 9

குணம் இன்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்று கையில்
உணல்மருவும் சமணர்களும் உணராத
வகை நின்றான் உறையும் கோயில்
மணம் மருவும் வதுவை ஒலி விழவின் ஒலி
இவை இசைய மண்மேல் தேவர்
கணம் மருவும் மறையின் ஒலி கீழ்ப்படுக்க
மேல்படுக்கும் கழுமலமே 10

கற்றவர்கள் பணிந்து ஏத்தும் கழுமலத்துள்
ஈசன்தன் கழல்மேல் நல்லோர்
நல்துணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன் தான் நயந்து சொன்ன
சொல் துணை ஓர்ஐந்தினொடு ஐந்து இவை வல்லார்
தூமலராள் துணைவர் ஆகி
முற்று உலகம்அது ஆண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே. 11

திருச்சிற்றம்பலம்

89. திருக்கழுமலம்

திருமுறை : 3/24 பண் : கொல்லி இராகம் : நவரோசு

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவுஇலைக்
கண்ணின் நல்லஃது உறும் கழுமல வள நகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதை ஆர் பொன் கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுஉறத் தான் எனை ஆண்டவன்
காதை ஆர் குழையினன் கழுமல வள நகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டு அணைசெய் தொழில் துயர் அறுத்து உய்யலாம்
வண்டு அணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண் துணை நெற்றியான் கழுமல வள நகர்
பெண் துணை ஆக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வு உளோம் என்று நீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர் வளை முன்கையாள் நேரிழைஅவளொடும்
கயல் வயல் குதிகொளும் கழுமல வள நகர்
பெயர்பல துதிசெய பெருந்தகை இருந்ததே. 4

அடைவு இலோம் என்று நீ அயர்வு ஒழி நெஞ்சமே
விடை அமர் கொடியினான் விண்ணவர் தொழுது எழும்
கடை உயர் மாடம் ஆர் கழுமல வள நகர்
பெடைநடைஅவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்று ஒரு பற்று இலை நெஞ்சமே மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வள நகர்
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழைஅவளொடும்
பெற்று எனை ஆள்உடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறை வளைவது மொழி குறைவு ஒழி நெஞ்சமே
நிறை வளை முன்கையாள் நேரிழைஅவளொடும்
கறை வளர் பொழில் அணி கழுமல வள நகர்
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அரு வரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடு யாழ் பாடவே
கருக்கு வாள் அருள்செய்தான் கழுமல வள நகர்
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பு அரிதுஆய் அவர்
அடியொடு முடி அறியா அழல்உருவினன்
கடி கமழ் பொழில் அணி கழுமல வள நகர்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தார் உறு தட்டு உடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆர் உறு சொல் களைந்து அடிஇணை அடைந்து உய்ம்மின்
கார் உறு பொழில் வளர் கழுமல வள நகர்
பேர்அறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந் தடந் தேன் மல்கு கழுமல வள நகர்
பெருந்தடங்கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகு ஆள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (மண்ணில் நல்லவண்ணம்)

ஆளுடைய பிள்ளையார் திருஆலவாயில் பாண்டியரைச் சமண சமயப் படுகுழியினின்றுங் கரையேற்றி உய்வித்துத் திருநீற்று நெறியினை வளர்த்து எழுந்தருளியிருக்கும் நாள்களில், சிவபாதவிருதயரும் மற்றும் காழியிலுள்ள அந்தணர்களும் தம் தலைவராய பிள்ளையாரது பிரிவினையாற்றாது வருந்தி மதுரையை அடைந்து அவரை அளவளாவினார்கள். ஆளுடைய பிள்ளையார் அவர்களைக் கண்ட போதே திருத்தோணியின் கண் எழுந்தருளித் தமது ஐவகைப் பாசத்தையும் அறுத்தாட் கொண்ட பெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்துத் தளிர்போன்ற தம்முடைய திருக்கைகளைத் தலையின்மீது குவித்து, "அருந்தவத்தீர், எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை எம்பெரு மாட்டி உடனிருந்ததே" என்று அவர்களை நோக்கி வினவி இத் திருப்பதிகம் பாடி அருளினார்.

90. திருக்கழுமலம்

திருமுறை : 3/118 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

மடல் மலி கொன்றை துன்று வாள்எருக்கும்
வன்னியும் மத்தமும் சடைமேல்
படல் ஒலி திரைகள் மோதிய கங்கைத்
தலைவனார் தம் இடம் பகரில்
விடல் ஒலி பரந்த வெண்திரை முத்தம்
இப்பிகள் கொணர்ந்து வெள்அருவிக்
கடல் ஒலி ஓதம் மோத வந்து அலைக்கும்
கழுமலநகர் எனலாமே. 1

மின்னிய அரவும் வெறிமலர் பலவும்
விரும்பிய திங்களும் தங்கு
சென்னியது உடையான் தேவர்தம் பெருமான்
சேயிழையொடும் உறைவு இடமாம்
பொன் இயல் மணியும் முரி கரிமருப்பும்
சந்தமும் உந்து வன்திரைகள்
கன்னியர் ஆடக் கடல் ஒலி மலியும்
கழுமலநகர் எனலாமே. 2

சீர் உறு தொண்டர் கொண்டு அடி போற்றச்
செழு மலர் புனலொடு தூபம்
தார் உறு கொன்றை தம் முடி வைத்த
சைவனார் தங்கு இடம் எங்கும்
ஊர் உறு பதிகள் உலகுடன் பொங்கி
ஒலிபுனல் கொள உடன்மிதந்த
கார் உறு செம்மை நன்மையால் மிக்க
கழுமல நகர் எனலாமே. 3

மண்ணினார் ஏத்த வான்உளார் பரச
அந்தரத்து அமரர்கள் போற்றப்
பண்ணினார் எல்லாம் பலபல வேடம்
உடையவர் பயில்வு இடம் எங்கும்
எண்ணினால் மிக்கார் இயல்பினால் நிறைந்தார்
ஏந்திழை அவரொடு மைந்தர்
கண்ணினால் இன்பம் கண்டு ஒளி பரக்கும்
கழுமலநகர் எனலாமே. 4

சுருதியான் தலையும் நாமகள் மூக்கும்
சுடரவன் கரமும் முன் இயங்கு
பரிதியான் பல்லும் இறுத்து அவர்க்கு அருளும்
பரமனார் பயின்று இனிது இருக்கை
விருதின் நால்மறையும் அங்கம் ஓர் ஆறும்
வேள்வியும் வேட்டவர் ஞானம்
கருதினார் உலகில் கருத்து உடையார் சேர்
கழுமலநகர் எனலாமே. 5

புற்றில் வாள்அரவும் ஆமையும் பூண்ட
புனிதனார் பனிமலர்க்கொன்றை
பற்றி வான்மதியம் சடைஇடை வைத்த
படிறனார் பயின்று இனிது இருக்கை
செற்று வன் திரைகள் ஒன்றொடு ஒன்று ஓடிச்
செயிர்த்து வண் சங்கொடு வங்கம்
கற்றுறை வரைகள் கரைக்கு வந்து உரைக்கும்
கழுமலநகர் எனலாமே. 6

அலை புனல் கங்கை தங்கிய சடையார்
அடல் நெடுமதில் ஒரு மூன்றும்
கொலைஇடைச் செந்தீ வெந்து அறக் கண்ட
குழகனார் கோயிலது என்பர்
மலையின் மிக்க உயர்ந்த மரக்கலம் சரக்கு
மற்றுமற்று இடையிடை எங்கும்
கலை களித்து ஏறிக் கானலில் வாழும்
கழுமலநகர் எனலாமே. 7

ஒருக்க முன் நினையாத் தக்கன்தன் வேள்வி
உடைதர உழறிய படையார்
அரக்கனை வரையால் ஆற்றல் அன்று அழித்த
அழகனார் அமர்ந்து உறை கோயில்
பரக்கும் வண்புகழார் பழிஅவை பார்த்துப்
பலபல அறங்களே பயிற்றிக்
கரக்குமாறு அறியா வண்மையால் வாழும்
கழுமலநகர் எனலாமே. 8

அரு வரை பொறுத்த ஆற்றலினானும்
அணி கிளர் தாமரையானும்
இருவரும் ஏத்த எரிஉரு ஆன
இறைவனார் உறைவிடம் வினவில்
ஒருவர் இவ் உலகில் வாழ்கிலா வண்ணம்
ஒலிபுனல்வெள்ளம் முன் பரப்பக்
கருவரை சூழ்ந்த கடல் இடை மிதக்கும்
கழுமலநகர் எனலாமே. 9

உரிந்து உயர்உருவில் உடை தவிர்ந்தாரும்
அத் துகில் போர்த்து உழல்வாரும்
தெரிந்து புன்மொழிகள் செப்பின கேளாச்
செம்மையார் நன்மையால் உறைவு ஆம்
குருந்து உயர் கோங்கு கொடிவிடு முல்லை
மல்லிகை சண்பகம் வேங்கை
கருந்தடம் கண்ணின் மங்கைமார் கொய்யும்
கழுமலநகர் எனலாமே. 10

கானலம் கழனி ஓதம் வந்து உலவும்
கழுமலநகர் உறைவார் மேல்
ஞானசம்பந்தன் நல்தமிழ் மாலை
நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊன சம்பந்தத்து உறு பிணி நீங்கி
உள்ளமும் ஒருவழிக் கொண்டு
வான்இடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்று இதற்கு ஆணையும் நமதே. 11

திருச்சிற்றம்பலம்

91. திருக்கோலக்கா

திருமுறை : 1/23 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : சத்தபுரீசுவரர் இறைவியார் : ஓசை கொடுத்த நாயகி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்
சடையும் பிறையும் சாம்பல்பூச்சும் கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ. 1

பெண்தான் பாகம் ஆகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக்காவு கோயிலாக்
கண்டான் பாதம் கையால் கூப்பவே
உண்டான் நஞ்சை உலகம் உய்யவே. 2

பூண் நல் பொறி கொள் அரவம் புன்சடை
கோணல் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறை வல்லானையே
பேணப் பறையும் பிணிகள் ஆனவே. 3

தழுக் கொள் பாவம் தளர வேண்டுவீர்
மழுக் கொள் செல்வன் மறிசேர் அம் கையான்
குழுக் கொள் பூதப்படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே. 4

மயில் ஆர் சாயல் மாது ஓர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயில் ஆர் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5

வெடி கொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடி கொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடி கொள் விழவு ஆர் கோலக்காவுள் எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே. 6

நிழல் ஆர் சோலை நீல வண்டு இனம்
குழல் ஆர் பண்செய் கோலக்கா உளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே. 7

எறி ஆர் கடல்சூழ் இலங்கைக் கோன்தனை
முறி ஆர் தடக்கை அடர்த்த மூர்த்திதன்
குறி ஆர் பண்செய் கோலக்காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே. 8

நாற்றமலர்மேல் அயனும் நாகத்தில்
ஆற்றல் அணைமேலவனும் காண்கிலாக்
கூற்றம் உதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாதம் ஏத்தி வாழ்மினே. 9

பெற்ற மாசு பிறக்கும் சமணரும்
உற்ற துவர் தோய் உருஇலாளரும்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

நலம்கொள் காழி ஞான சம்பந்தன்
குலம்கொள் கோலக்கா உளானையே
வலம்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலம்கொள் வினை போய் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (மடையில்)

பிரமதீர்த்தக் கரையில் அருள் பெற்ற பிற்றைஞான்று கழுமலத்துக் கலந்திருந்த தாதையையும், போதமுலை சுரந்தளித்த புண்ணியத் தாயரையும் வணங்கி விடைபெற்றுத் திருக்கோலக்கா அடைந்த திருஞானசம்பந்தப் பெருமான் இறைவன் திருக்கோலிட்டறிவரிய திருவடிகளை வணங்குமாறு 'மடையில் வாளை' என எடுத்துக் கைந் நிறைந்த வொத்தறுத்துக் கலைப் பதிகம் பாடும் போது அதனைக் கண்டு கருணை கூர்ந்த இறைவன் தனது அஞ்செழுத் தெழுதிய செம்பொற்றிருத்தாளம் அவரது திருக்கையிலுறுமாறு அருளினன். பிள்ளையார் அதனைத் தன் திருமுடிமேற் கொண்டு போற்றி இன்னிசைப் பதிகத்தை அதனைக் கொண்டு பாடித் திருக்கடைக் காப்புச் சாத்தியருளினர்.

92. திருப்புள்ளிருக்கு வேளூர்

திருமுறை : 2/43 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : வைத்தியநாதர் இறைவியார் : தையல்நாயகி

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள் ஆர்ந்த சடைமுடி எம்பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயு என்பார்தாம் இருவர்
புள் ஆனார்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளூரே.1

தையலாள் ஒரு பாகம் சடைமேலாள் அவளோடும்
ஐயம் தேர்ந்து உழல்வார் ஓர் அந்தணனார் உறையுமிடம்
மெய் சொல்லா இராவணனை மேல் ஓடி ஈடு அழித்துப்
பொய் சொல்லாது உயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே. 2

வாசநலம் செய்து இமையோர் நாள்தோறும் மலர் தூவ
ஈசன் எம்பெருமானார் இனிதாக உறையுமிடம்
யோசனை போய்ப் பூக்கொணர்ந்து அங்கு ஒருநாளும் ஒழியாமே
பூசனை செய்து இனிது இருந்தான் புள்ளிருக்கு வேளூரே. 3

மா காயம் பெரியது ஒரு மான் உரி தோல் உடைஆடை
ஏகாயம் இட்டு உகந்த எரிஆடி உறையுமிடம்
ஆகாயம் தேர் ஓடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருது அழித்தான் புள்ளிருக்க வேளூரே. 4

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழ நின்ற பரஞ்சோதி பயிலும் இடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5

திறம் கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
அறம் கொண்டு சிவதன்மம் உரைத்த பிரான் அமரும்இடம்
மறம் கொண்டு அங்கு இராவணன் தன் வலி கருதி வந்தானைப்
புறம்கண்ட சடாய் என்பான் புள்ளிருக்கு வேளூரே. 6

அத்தியின் ஈர் உரி மூடி அழகாக அனல் ஏந்திப்
பித்தரைப்போல் பலி திரியும் பெருமானார் பேணும்இடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலம் தவம்செய்து
புத்தி ஒன்ற வைத்து உகந்தான் புள்ளிருக்கு வேளூரே.7

பண் ஒன்ற இசை பாடும் அடியார்கள் குடி ஆக
மண் இன்றி விண் கொடுக்கும் மணிகண்டன் மருவும்இடம்
எண் இன்றி முக்கோடிவாணாள் அது உடையானைப்
புண் ஒன்றப் பொருது அழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 8

வேதித்தார் புரம்மூன்றும் வெங்கணையால் வெந்து அவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாரும் இடம்
ஆதித்தன்மகன் என்ன அகன் ஞாலத்தவரோடும்
போதித்த சடாயு என்பான் புள்ளிருக்கு வேளூரே. 9

கடுத்து வரும் கங்கைதனைக் கமழ் சடைஒன்று ஆடாமே
தடுத்தவர் எம்பெருமானார் தாம் இனிதுஆய் உறையுமிடம்
விடைத்து வரும் இலங்கைக் கோன் மலங்கச் சென்று இராமற்காய்ப்
புடைத்தவனைப் பொருது அழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 10

செடி ஆய உடல் தீர்ப்பான் தீவினைக்கு ஓர் மருந்து ஆவான்
பொடிஆடிக்கு அடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடிஆர்ந்த பொழில் காழிக் கவுணியன் சம்பந்தன் சொல்
மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லைஆம் மறுபிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : (கள்ளார்ந்த பூங்கொன்றை)

திருமறைச் சண்பையாளியார் திருக்கண்ணார் கோயிலை வணங்கித் திருப்புள்ளியருக்கு வேளூரை அடைந்து அங்குச் சடாயு சம்பாதி என்னும் புள்வேந்தர்கள் பூசித்த செயலினைப் போற்றிப் பாடியருளினார்.

93. திருக்கண்ணார் கோயில்

திருமுறை : 1/101 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : கண்ணாயிரநாதர் இறைவியார் : முருகுவளர்கோதை

தண்ணார் திங்கள் பொங்கு அரவம் தாழ்புனல் சூடிப்
பெண் ஆண் ஆய பேரருளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழுவோர்கட்கு இடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே. 1

கந்து அமர் சந்தும் கார்அகிலும் தண் கதிர்முத்தும்
வந்து அமர் தெண்நீர் மண்ணி வளம்சேர் வயல் மண்டிக்
கொந்து அலர் சோலைக் கோகிலம் ஆடக் குளிர் வண்டு
செந்து இசை பாடும் சீர் திகழ் கண்ணார் கோயிலே. 2

பல்லியல் பாணிப் பாரிடம் ஏத்தப் படுகானில்
எல்லி நடம்செய் ஈசன் எம்மான்தன் இடம் என்பர்
கொல்லையின் முல்லை மல்லிகை மௌவல் கொடி பின்னிக்
கல் இயல் இஞ்சி மஞ்சமர் கண்ணார் கோயிலே. 3

தரு வளர் கானம் தங்கிய துங்கப் பெருவேழம்
மரு வளர் கோதை அஞ்ச உரித்து மறைநால்வர்க்கு
உரு வளர் ஆலநீழல் அமர்ந்து ஈங்கு உரைசெய்தார்
கரு வளர் கண்ணார் கோயில் அடைந்தோர் கற்றோரே. 4

மறு மாண் உருவாய் மற்று இணை இன்றி வானோரைச்
செறு மாவலிபால் சென்றுஉலகு எல்லாம் அளவிட்ட
குறு மாண் உருவன் தற்குறியாகக் கொண்டாடும்
கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே. 5

விண்ணவருக்காய் வேலைஉள் நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத் தேவர்க்கு அமுது ஈந்து எவ்வுலகிற்கும்
கண்ணவனைக் கண்ணார்திகழ் கோயில் கனிதன்னை
நண்ண வல்லோர்கட்கு இல்லை நமன்பால் நடலையே. 6

முன்னொரு காலத்து இந்திரன் உற்ற முனிசாபம்
பின்னொரு நாள் அவ் விண்ணவர் ஏத்தப் பெயர்வெய்தித்
தன் அருளால் கண் ஆயிரம் ஈந்தோன் சார்பு என்பர்
கன்னியர் நாளும் துன் அமர் கண்ணார் கோயிலே. 7

பெருக்கு எண்ணாத பேதை அரக்கன் வரைக்கீழால்
நெருக்குண்ணா தன் நீள்கழல் நெஞ்சில் நினைந்து ஏத்த
முருக்குண்ணாது ஓர் மொய்கதிர் வாள்தேர் முன் ஈந்த
திருக்கண்ணார் என்பார் சிவலோகம் சேர்வாரே. 8

செங்கமலப் போதில் திகழ் செல்வன் திருமாலும்
அங்கமலக்கண் நோக்கரும் வண்ணத்து அழலானான்
தங்கமலக் கண்ணார் திகழ் கோயில் தமது உள்ளம்
அங்கமலத்தோடு ஏத்திட அண்டத்து அமர்வாரே. 9

தாறு இடு பெண்ணைத் தட்டு உடையாரும் தாம் உண்ணும்
சோறு உடையார் சொல் தேறன்மின் வெண்ணூல் சேர்மார்பன்
ஏறு உடையன் பரன் என்பு அணிவான் நீள் சடை மேலோர்
ஆறு உடை அண்ணல் சேர்வது கண்ணார் கோயிலே. 10

காமரு கண்ணார் கோயில் உளானைக் கடல்சூழ்ந்த
பூமரு சோலைப் பொன்இயல் மாடப் புகலிக்கோன்
நாமருவு தொன்மைத் தன்மைஉள் ஞானசம்பந்தன்
பா மரு பாடல் பத்தும் வல்லார்மேல் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

94. திருக்கடைமுடி

திருமுறை : **1/111** பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : கடைமுடிநாதர் இறைவியார் : அபிராமி அம்மை

அருத்தனை அறவனை அமுதனை நீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லது இங்கு உலகம் ஏத்தும்
கருத்தவன் வள நகர் கடைமுடியே. 1

திரை பொரு திருமுடி திங்கள் விம்மும்
அரை பொரு புலிஅதள் அடிகள் இடம்
திரை யொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரை பொரு வள நகர் கடைமுடியே. 2

ஆல் இளமதியினொடு அரவு கங்கை
கோல வெண் நீற்றனைத் தொழுது இறைஞ்சி
ஏல நல்மலரொடு விரை கமழும்
காலன வள நகர் கடைமுடியே. 3

கொய் அணி நறுமலர்க்கொன்றை அம்தார்
மை அணி மிடறுஉடை மறையவன் ஊர்
பை அணி அரவொடு மான் மழுவாள்
கை அணிபவன் இடம் கடைமுடியே. 4

மறை அவன் உலகு அவன் மாயன் அவன்
பிறை அவன் புனல் அவன் அனலும் அவன்
இறையவன் என உலகு ஏத்தும் கண்டம்
கறையவன் வள நகர் கடைமுடியே. 5

படஅரவு ஏர்அல்குல் பல்வளைக்கை
மடவரலாளை ஒர் பாகம் வைத்துக்
குடதிசை மதிஅது சூடுசென்னிக்
கடவுள்தன்வள நகர் கடைமுடியே. 6

பொடி புல்கு மார்பினில் புரி புல்கு நூல்
அடி புல்கு பைங்கழல் அடிகள் இடம்
கொடி புல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடி புல்கு வளநகர் கடைமுடியே. 7

நோதல்செய்து அரக்கனை நோக்கு அழியச்
சாதல்செய்து அவன் அடிசரண் எனலும்
ஆதரவு அருள்செய்த அடிகள்அவர்
காதல்செய் வள நகர் கடைமுடியே. 8

அடி முடி காண்கிலர் ஓர்இருவர்
புடை புல்கி அருள்என்று போற்று இசைப்பச்
சடைஇடைப் புனல் வைத்த சதுரன் இடம்
கடைமுடி அதன் அயல் காவிரியே. 9

மண்ணுதல் பறித்தலும் மாயம்இவை
எண்ணியகால் அவை இன்பம் அல்ல
ஒண்நுதல் உமையை ஓர்பாகம் வைத்த
கண்நுதல் வளநகர் கடைமுடியே. 10

பொன் திகழ் காவிரிப் பொரு புனல் சீர்
சென்று அடை கடைமுடிச் சிவன் அடியை
நன்று உணர் ஞானசம்பந்தன் சொன்ன
இன்தமிழ் இவைசொல இன்பமாமே. 11

திருச்சிற்றம்பலம்

95. திருநின்றியூர்

திருமுறை : 1/18 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : மகாலட்சுமீசுவரர் இறைவியார் : உலகநாயகி

சூலம் படை சுண்ணப்பொடி சாந்தம் சுடுநீறு
பால்அம்மதி பவளச்சடைமுடிமேலது பண்டைக்
காலன் வலி காலின்னொடு போக்கிக் கடி கமழும்
நீலம் மலர்ப்பொய்கைநின்றியூரின் நிலையோர்க்கே. 1

அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
நிச்சம் உறு நோயும் இலர் தாமும் நின்றியூரில்
நச்சம் மிடறு உடையார் நறுங்கொன்றை நயந்துஆளும்
பச்சம் உடை அடிகள் திருப்பாதம் பணிவாரே. 2

பறையின் ஒலி சங்கின் ஒலி பாங்கு ஆரவும் ஆர
அறையும் ஒலி எங்கும் அவை அறிவார் அவர் தன்மை
நிறையும் புனல் சடைமேல் உடை அடிகள் நின்றியூரில்
உறையும் இறை அல்லது எனது உள்ளம் உணராதே. 3

பூண்டவ் வரைமார்பில் புரிநூலன் விரிகொன்றை
ஈண்ட அதனோடும் ஒரு பால் அம்மதிஅதனைத்
தீண்டும் பொழில் சூழ்ந்த திரு நின்றிஅது தன்னில்
ஆண்ட கழல் தொழில் அல்லது அறியார் அவர்அறிவே.4

குழலின் இசை வண்டின் இசை கண்டு குயில் கூவும்
நிழலின் எழில் தாழ்ந்த பொழில் சூழ்ந்த நின்றியூரில்
அழலின் வலன் அங்கையது ஏந்தி அனல்ஆடும்
கழலின் ஒலி ஆடும் புரி கடவுள் களைகண்ணே. 5

மூரல்முறுவல் வெண்ணகை உடையாள் ஒரு பாகம்
சாரல் மதிஅதனோடு உடன் சலவம் சடை வைத்த
வீரன் மலி அழகு ஆர் பொழில் மிடையும் திரு நின்றி
ஊரன் கழல் அல்லாது எனது உள்ளம் உணராதே. 6

பற்றி ஒரு தலை கையினில் ஏந்திப்பலி தேரும்
பெற்றிஅதுஆகித் திரி தேவர் பெருமானார்
சுற்றி ஒரு வேங்கைஅதளோடும் பிறைசூடும்
நெற்றி ஒரு கண்ணார் நின்றியூரின் நிலையாரே. (7–8)

நல்ல மலர் மேலானொடு ஞாலம் அது உண்டான்
அல்லர் என ஆவர் என நின்றும்அறிவு அரிய
நெல்லின் பொழில் சூழ்ந்த நின்றியூரில் நிலையார் எம்
செல்வர் அடிஅல்லாது என சிந்தை உணராதே. 9

நெறியில் வரு பேரா வகை நினையா நினைவு ஒன்றை
அறிவு இல் சமண் ஆதர் உரை கேட்டும் அயராதே
நெறிஇல்லவர் குறிகள் நினையாதே நின்றியூரில்
மறி ஏந்திய கையான் அடி வாழ்த்தும் அது வாழ்த்தே. 10

குன்றம் அது எடுத்தான் உடல் தோளும் நெரிவாக
நின்று அங்கு ஒருவிரலால் உற வைத்தான் நின்றியூரை
நன்று ஆர்தரு புகலித் தமிழ் ஞானம் மிகு பந்தன்
குன்றாத் தமிழ் சொல்லக் குறைவு இன்றி நிறை புகழே. 11

திருச்சிற்றம்பலம்

96. திருப்புன்கூர்

திருமுறை : 1/27 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : சிவலோகநாதர் இறைவியார் : சொக்கநாயகி

முந்தி நின்ற வினைகள் அவை போகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. 1

மூவர் ஆய முதல்வர் முறையாலே
தேவர்எல்லாம் வணங்கும் திருப்புன்கூர்
ஆவர் என்னும் அடிகள் அவர்போலும்
ஏவின் அல்லார் எயில்மூன்று எரித்தாரே. 2

பங்கயங்கள் மலரும் பழனத்துச்
செங்கயல்கள் திளைக்கும் திருப்புன்கூர்
கங்கை தங்கு சடையார் அவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே. 3

கரை உலாவு கதிர் மா மணிமுத்தம்
திரை உலாவு வயல் சூழ் திருப்புன்கூர்
உரையின் நல்ல பெருமான அவர்போலும்
விரையின் நல்ல மலர்ச்சேவடியாரே. 4

பவளவண்ணப் பரிசு ஆர் திருமேனி
திகழும் வண்ணம் உறையும் திருப்புன்கூர்
அழகர் என்றும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன்சடையாரே. 5

தெரிந்து இலங்கு கழுநீர் வயல் செந்நெல்
திருந்த நின்ற வயல் சூழ் திருப்புன்கூர்
பொருந்தி நின்ற அடிகள் அவர்போலும்
விரிந்துஇலங்குசடை வெண்பிறையாரே. 6

பாரும் விண்ணும் பரவித் தொழுது ஏத்தும்
தேர் கொள் வீதி விழவு ஆர் திருப்புன்கூர்
ஆர நின்ற அடிகள் அவர்போலும்
கூரம் நின்ற எயில்மூன்று எரித்தாரே. 7

மலையதனார் உடைய மதில்மூன்றும்
சிலையதனால் எரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல அரக்கன் தருக்கினை
மலையதனால் அடர்த்து மகிழ்ந்தாரே. 8

நாட வல்ல மலரான் மாலும்ஆய்த்
தேட நின்றார் உறையும் திருப்புன்கூர்
ஆட வல்ல அடிகள் அவர்போலும்
பாடல்ஆடல் பயிலும் பரமரே. 9

குண்டு முற்றிக் கூறை இன்றியே
பிண்டம் உண்ணும் பிராந்தர் சொல்கொளேல்
வண்டு பாட மலர்ஆர் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. 10

மாடம் மல்கு மதில்சூழ் காழி மன்
சேடர் செல்வர் உறையும் திருப்புன்கூர்
நாட வல்ல ஞானசம்பந்தன்
பாடல்பத்தும் பரவி வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்

97. திருஅன்னியூர்

திருமுறை : 1/96 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : ஆபத் சகாயேசுவரர் இறைவியார் : பெரியநாயகி

மன்னி ஊர் இறை, சென்னியார் பிறை
அன்னியூர் அமர், மன்னுசோதியே. 1

பழகும் தொண்டர் வம், அழகன் அன்னியூர்க்
குழகன் சேவடி, தொழுது வாழ்மினே. 2

நீதி பேணுவீர், ஆதி அன்னியூர்ச்
சோதி நாமமே, ஓதி உய்ம்மினே. 3

பத்தர் ஆயினீர், அத்தர் அன்னியூர்
சித்தர் தாள் தொழ, முத்தர் ஆவரே. 4

நிறைவு வேண்டுவீர், அறவன் அன்னியூர்
மறை உளான் கழற்கு, உறவு செய்ம்மினே. 5

இன்பம் வேண்டுவீர், அன்பன் அன்னியூர்
நன்பொன் என்னுமின், உம்பர் ஆகவே. 6

அந்தணாளர்தம், தந்தை அன்னியூர்
எந்தையே எனப், பந்தம் நீங்குமே. 7

தூர்த்தனைச் செற்ற, தீர்த்தன் அன்னியூர்
ஆத்தமா அடைந்து, ஏத்தி வாழ்மினே. 8

இருவர் நாடிய, அரவன் அன்னியூர்
பரவுவார் விண்ணுக்கு, ஒருவர் ஆவரே. 9

குண்டர் தேரருக்கு, அண்டன் அன்னியூர்த்
தொண்டுளார் வினை, விண்டு போகுமே. 10

பூந்தராய்ப் பந்தன், ஆய்ந்த பாடலால்
வேந்தன் அன்னியூர், சேர்ந்து வாழ்மினே. 11

98. திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருமுறை : 3/90 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : கல்யாணசுந்தரர் இறைவியார் : பரிமளசுகந்தநாயகி

ஓங்கி மேல் உழி தரும் ஒலி புனல் கங்கையை ஒரு சடைமேல்
தாங்கினார் இடுபலி தலை கலனாக் கொண்டதம்அடிகள்
பாங்கினால் உமையொடும் பகல்இடம் புகல்இடம் பைம்பொழில்சூழ்
வீங்கு நீர்த் துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்விக்குடியே. 1

தூறு சேர் சுடலையில் சுடர்எரி ஆடுவர் துளங்கு ஒளிசேர்
நீறு சாந்து என உகந்து அணிவர் வெண்பிறை மல்கு சடைமுடியார்
நாறுசாந்து இளமுலை அரிவையோடு ஒருபகல் அமர்ந்தபிரான்
வீறு சேர் துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே. 2

மழை வளர் இளமதி மலரொடு தலை புல்கு வார்சடைமேல்
கழை வளர் புனல்புகக் கண்டஎம் கண்ணுதல் கபாலியார்தாம்
இழை வளர் துகில்அல்குல் அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்
விழை வளர் துருத்தியார் இரவுஇடத்து உறைவர்வேள்விக்குடியே. 3

கரும்பு அன வரிசிலைப் பெருந்தகைக் காமனைக் கவின் அழித்த
சுரும்பொடு தேன் மல்கு தூ மலர்க்கொன்றை அம் சுடர்ச்சடையார்
அரும்பு அன வனமுலை அரிவையோடு ஒருபகல் அமர்ந்த பிரான்
விரும்பு இடம் துருத்தியார் இரவு இடத்து உறைவர் வேள்விக்குடியே. 4

வளம் கிளர் மதியமும் பொன்மலர்க்கொன்றையும் வாள்அரவும்
களம் கொளச் சடைஇடைவைத்த எம் கண்ணுதல் கபாலியார் தாம்
துளங்கு நூல் மார்பினர் அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்
விளங்கு நீர்த் துருத்தியார் இரவு இடத்து உறைவர் வேள்விக்குடியே.5

பொறி உலாம் அடு புலி உரிவையர் வரிஅராப் பூண்டுஇலங்கும்
நெறி உலாம் பலி கொளும் நீர்மையர் சீர்மையை நினைப்புஅரியார்
மறி உலாம் கையினர் மங்கையோடு ஒருபகல் அமர்ந்த பிரான்
வெறி உலாம் துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே. 6

புரிதரு சடையினர் புலிஉரி அரையினர் பொடி அணிந்து
திரிதரும் இயல்பினர் திரி புரம்மூன்றையும் தீ வளைத்தார்
வரி தரு வனமுலை மங்கையோடு ஒருபகல் அமர்ந்தபிரான்
விரிதரு துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே.7

நீண்டு இலங்கு அவிர்ஒளி நெடுமுடி அரக்கன் இந் நீள்வரையைக்
கீண்டு இடந்திடுவன் என்று எழுந்தவன் ஆள்வினை கீழ்ப்படுத்தார்
பூண்ட நூல் மார்பினர் அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்
வேண்டு இடம் துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே.8

கரைகடல் அரவுஅணைக் கடவுளும் தாமரை நான்முகனும்
குரைகழல்அடி தொழக் கூர் எரி என நிறம் கொண்ட பிரான்
வரை கெழு மகளொடும் பகல்இடம் புகல்இடம் வண்பொழில்சூழ்
விரை கமழ் துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே. 9

அயம் முகம் வெயில் நிலை அமணரும் குண்டரும் சாக்கியரும்
நயம் முக உரையினர் நகுவன சரிதைகள் செய்து உழல்வார்
கயல் அன அரிநெடுங்கண்ணியோடு ஒருபகல் அமர்ந்த பிரான்
வியல்நகர்த்துருத்தியார் இரவுஇடத்து உறைவர் வேள்விக்குடியே.10

விண் உலாம் விரி பொழில் விரை மணல் துருத்தி வேள்விக்குடியும்
ஒண் உலாம் ஒலிகழல் ஆடுவார் அரிவையோடு உறை பதியை
நண் உலாம் புகலியுள் அருமறை ஞானசம்பந்தன் சொன்ன
பண் உலாம் அருந்தமிழ் பாடுவார் ஆடுவார் பழிஇலரே.11

திருச்சிற்றம்பலம்

99. திருமணஞ்சேரி

திருமுறை : 2/16 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : அருள்வள்ளல் நாயகர் இறைவியார் : யாழின்மொழி அம்மை

அயில் ஆரும் அம்பு அதனால் புரம்மூன்று எய்து
குயில் ஆரும் மென்மொழியாள் ஒரு கூறாகி
மயில் ஆரும் மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கு இல்லை பாவமே. 1

விதியானை விண்ணவர்தாம் தொழுது ஏத்திய
நெதியானை நீள்சடைமேல் நிகழ்வித்த வான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல்லார் வினை பாறுமே. 2

எய்ப்புஆனார்க்கு இன்புஉறு தேன் அளித்து ஊறிய
இப்பால்ஆய் எனையும் ஆள உரியானை
வைப்பு ஆன மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெப்பானை மேவி நின்றார் வினை வீடுமே. 3

விடையானை மேல்உலகுஏழும் இப்பார் எலாம்
உடையானை ஊழிதோறுஊழி உளதாய
படையானைப் பண்இசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 4

எறி ஆர் பூங்கொள்றையினோடும் இள மத்தம்
வெறி ஆரும் செஞ்சடை ஆர மிலைத்தானை
மறி ஆரும் கை உடையானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்ப வல்லார்க்கு இடர் சேராவே. 5

மொழியானை முன் ஒரு நால்மறை ஆறுஅங்கம்
பழியாமைப் பண்இசை ஆன பகர்வானை
வழியானை வானவர் ஏத்தும் மணஞ்சேரி
இழியாமை ஏத்த வல்லார்க்கு எய்தும் இன்பமே. 6

எண்ணானை எண் அமர் சீர் இமையோர்கட்குக்
கண்ணானைக் கண் ஒரு மூன்றும் உடையானை
மண்ணானை மா வயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. 7

எடுத்தானை எழில் முடிஎட்டும் இரண்டும் தோள்
கெடுத்தானைக் கேடு இலாச் செம்மை உடையானை
மடுத்து ஆர வண்டு இசை பாடும் மணஞ்சேரி
பிடித்து ஆரப் பேண வல்லார் பெரியோர்களே. 8

சொல்லானைத் தோற்றம் கண்டானும் நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுது ஓங்க
வல்லார் நல் மா தவர் ஏத்தும் மணஞ்சேரி
எல்லாமார் எம்பெருமான் கழல் ஏத்துமே. 9

சற்றேயும் தாம் அறிவில் சமண் சாக்கியர்
சொல் தேயும் வண்ணம்ஓர் செம்மை உடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர்மேல் வினை பற்றாவே. 10

கண் ஆரும் காழியர்கோன் கருத்து ஆர்வித்த
தண் ஆர் சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
மண் ஆரும் மா வயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண் ஆரப் பாடவல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

100. திருக்கருப்பறியலூர்

திருமுறை : 2/31 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : குற்றம்பொறுத்த நாதர் இறைவியார் : கோல்வளைநாயகி

சுற்றமொடு பற்றுஅவை துயக்கு அற அறுத்துக்
குற்றம் இல் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்று அவரை வானவர்தம் வான் உலகம் ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே. 1

வண்டு அணைசெய் கொன்றைஅது வார்சடைகள் மேலே
கொண்டு அணைசெய் கோலம்அது கோள் அரவினோடும்
விண்டு அணைசெய் மும்மதிலும் வீழ்தர ஓர் அம்பால்
கண்டவன் இருப்பது கருப்பறியலூரே. 2

வேதமொடு வேதியர்கள் வேள்வி முதல் ஆகப்
போதினொடு போது மலர் கொண்டு புனைகின்ற
நாதன் என நள்ளிருள்முன் ஆடு குழை தாழும்
காதவன் இருப்பது கருப்பறியலூரே. 3

மடம் படு மலைக்கு இறைவன் மங்கை ஒருபங்கன்
உடம்பினை விடக் கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந்து அணவு காலன் உயிர் கால ஒரு காலால்
கடந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 4

ஒருத்தி உமையோடும் ஒரு பாகம் அது ஆய
நிருத்தன் அவன் நீதி அவன் நித்தன் நெறியாய
விருத்தன் அவன் வேதம் என அங்கம்அவை ஓதும்
கருத்தவன் இருப்பது கருப்பறியலூரே. 5

விண்ணவர்கள் வெற்புஅரசு பெற்ற மகள் மெய்த்தேன்
பண் அமரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வரு காமன் உடல் வேவ எரி காலும்
கண்ணவன் இருப்பது கருப்பறியலூரே. 6

ஆதி அடியைப் பணிய அப்பொடு மலர்ச்சேர்
சோதிஒளி நல் புகை வளர் குவடு புக்குத்
தீது செய வந்து அணையும் அந்தகன் அரங்கக்
காதினன் இருப்பது கருப்பறியலூரே. 7

வாய்ந்த புகழ் விண்ணவரும் மண்ணவரும் அஞ்சப்
பாய்ந்து அமர் செயும் தொழில் இலங்கைநகர் வேந்தற்கு
ஏய்ந்த புயம் அத்தனையும் இற்று விழ மேல்நாள்
காய்ந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 8

பரந்தது நிரந்து வரு பாய் திரைய கங்கை
கரந்து ஓர் சடைமேல் மிசை உகந்து அவளை வைத்து
நிரந்தரம் நிரந்து இருவர் நேடி அறியாமல்
கரந்தவன் இருப்பது கருப்பறியலூரே. 9

அற்றம் மறையா அமணர் ஆதமிலி புத்தர்
சொற்றம் அறியாதவர்கள் சொன்ன சொலை விட்டுக்
குற்றம் அறியாத பெருமான் கொகுடிக் கோயில்
கற்றென இருப்பது கருப்பறியலூரே. 10

நலம் தரு புனல் புகலி ஞானசம்பந்தன்
கலந்தவர் கருப்பறியல் மேய கடவு(ள்)ளைப்
பலம் தரு தமிழ்க்கிளவி பத்தும்இவை கற்று
வலம் தருமவர்க்கு வினை வாடல் எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

101. திருவாழ்கொளிபுத்தூர்

திருமுறை : 1/40 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : மாணிக்கவண்ணர் இறைவியார் : வண்டமர் பூங்குழலி

பொடியுடை மார்பினர் போர்விடை ஏறிப்
பூத கணம்புடை சூழக்
கொடியுடை ஊர்திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடும் கண்உமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலர் இட்டுக்
கறைமிடற்றான் அடி காண்போம். 1

அரைகெழு கோவண ஆடையின் மேல்ஓர்
ஆடு அரவம் அசைத்து ஐயம்
புரைகெழு வெண்தலை ஏந்திப்
போர்விடை ஏறிப் புகழ
வரைகெழு மங்கையது ஆகம்ஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி
விரி சடையான் அடி சேர்வோம். 2

பூண்நெடு நாகம் அசைத்துஅன லாடிப்
புன்தலை அங்கையில் ஏந்தி
ஊண்இடு பிச்சைஊர் ஐயம்
உண்டி என்று பல கூறி
வாள்நெடும் கண்ணுமை மங்கைஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தாள்நெடு மாமலர் இட்டுத்
தலைவன தாள் நிழல் சார்வோம். 3

தார்இடு கொன்றைஓர் வெண்மதி கங்கை
தாழ்சடை மேல்அவை சூடி
ஊர்இடு பிச்சைகொள் செல்வம்
உண்டி என்று பல கூறி
வார்இடு மென்முலை மாதுஒரு பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கார்இடு மாமலர் தூவிக்
கறை மிடற்றான் அடி காண்போம். 4

கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
காதில்ஓர் வெண் குழையோடு
புனமலர் மாலை புனைந்துஊர்
புகுதிஎன்றே பல கூறி
வனமுலை மாமலை மங்கைஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
இனமலர் ஏய்ந்தன தூவி
எம்பெருமான் அடி சேர்வோம். 5

அளைவளர் நாகம் அசைத்துஅனல் ஆடி
அலர்மிசை அந்தணன் உச்சிக்
களை தலையில் பலி கொள்ளும்
கருத்தனே கள்வனே என்னா
வளையொலி முன்கை மடந்தைஓர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தளைஅவிழ் மாமலர் தூவித்
தலைவன தாளிணை சார்வோம். 6

அடர்செவி வேழத்தின் ஈர்உரி போர்த்து
வழிதலை அங்கையில் ஏந்தி
உடல்இடு பிச்சையோடு ஐயம்
உண்டி என்று பல கூறி
மடல்நெடு மாமலர்க் கண்ணியொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமலர் ஆயின தூவித்
தலைவன தாள்நிழல் சார்வோம். 7

உயர்வரை ஒல்க எடுத்த அரக்கன்
ஒளிர் கடகக் கை அடர்த்து
அயல்இடு பிச்சையோடு ஐயம்
ஆர்தலை என்றுஅடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணி பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர் தூவித்
தாழ் சடையான் அடி சார்வோம். 8

கரியவன் நான்முகன் கைதொழுது ஏத்தக்
காணலும் சாரலும் ஆகா
எரி உருவாகி ஊர் ஐயம்
இடுபலி உண்ணிஎன்று ஏத்தி
வரியரவு அல்குல் மடந்தைஒர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமலர் ஆயின தூவி
விகிர்தன சேவடி சேர்வோம். 9

குண்டு அமணர் துவர்க்கூறைகள் மெய்யில்
கொள்கையினார் புறம் கூற
வெண் தலையில் பலி கொண்டல்
விரும்பினை என்று விளம்பி
வண்டமர் பூங்குழல் மங்கைஒர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர் தூவத்
தோன்றி நின்றான் அடி சேர்வோம். 10

கல்உயர் மாக்கடல் நின்று முழங்கும்
கரைபொரு காழிய மூதூர்
நல்உயர் நான்மறை நாவின்
நல்தமிழ் ஞானசம்பந்தன்
வல்உயர் சூலமும் வெண்மழு வாளும்
வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லிய பாடல்கள் வல்லார்
துயர் கெடுதல் எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

102. திரு வாழ்கொளிபுத்தூர்

திருமுறை : 2/94 பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : மாணிக்கவண்ணர் இறைவியார் : வண்டமர்பூங்குழலி

சாகை ஆயிரம் உடையார் சாமமும் ஓதுவது உடையார்
ஈகை யார்கடை நோக்கி இரப்பதும் பலபல உடையார்
தோகை மாமயில் அனைய துடிஇடை பாகமும் உடையார்
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளி புத்தூர் உளாரே. 1

எண்ணில் ஈரமும் உடையார் எத்தனையோ இவர் அறங்கள்
கண்ணும் ஆயிரம் உடையார் கையுமோர் ஆயிரம் உடையார்
பெண்ணும் ஆயிரம் உடையார் பெருமையோர் ஆயிரம் உடையார்
வண்ணம் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே. 2

நொடியோர் ஆயிரம் உடையார் நுண்ணியராம் அவர் நோக்கும்
வடிவும் ஆயிரம் உடையார் வண்ணமும் ஆயிரம் உடையார்
முடியும் ஆயிரம் உடையார் மொய் குழலாளையும் உடையார்
வடிவும் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே.3

பஞ்சி நுண்துகில் அன்ன பைங்கழல் சேவடி உடையார்
குஞ்சி மேகலை உடையார் கொந்தணி வேல்வலன் உடையார்
அஞ்சும் வென்றவர்க்கு அணியார் ஆனையின் ஈருரி உடையார்
வஞ்சி நுண்ணிடை உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே. 4

பரவுவாரையும் உடையார் பழித்துஇகழ் வாரையும் உடையார்
விரவுவாரையும் உடையார் வெண்தலைப் பலிகொள்வது உடையார்
அரவம் பூண்பதும் உடையார் ஆயிரம் பேர்மிக உடையார்
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே. 5

தண்டும் தாளமும் குழலும் தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமும் உடையார் கோலமும் பலபல உடையார்
கண்டு கோடலும் அரியார் காட்சியும் அரியதோர் கரந்தை
வண்டு வாழ்பதி உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே.6

மான வாழ்க்கையது உடையார் மலைந்தவர் மதில்பரிசு அறுத்தார்
தான வாழ்க்கையது உடையார் தவத்தொடு நாம்புகழ்ந்து ஏத்த
ஞான வாழ்க்கையது உடையார் நள்ளிருள் மகளிர்நின்று ஏத்த
வான வாழ்க்கையது உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே.7

ஏழும் மூன்றும்ஓர் தலைகள் உடையவன் இடர்பட அடர்த்து
வேழ்வி செற்றதும் விரும்பி விருப்பவர் பலபல உடையார்
கேழல் வெண்பிறை அன்ன கெழுமணி மிடறுநின்று இலங்க
வாழி சாந்தமும் உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே. 8

வென்றி மாமலரோனும் விரிகடல் துயின்றவன் தானும்
என்றும் ஏத்துகை உடையார் இமையவர் துதிசெய விரும்பி
முன்றில் மாமலர் வாசம் முதுமதி தவழ்பொழில் தில்லை
மன்றில் ஆடலது உடையார் வாழ்கொளி புத்தூர் உளாரே.9

மண்டை கொண்டுஉழல் தேரர் மாசுடை மேனி வன் சமணர்
குண்டர் பேசிய பேச்சுக் கொள்ளன்மின் திகழ்ஒளி நல்ல
துண்ட வெண்பிறை சூடிச் சுண்ணவெண் பொடிஅணிந்து எங்கும்
வண்டு வாழ்பொழில் சூழ்ந்த வாழ்கொளி புத்தூர் உளாரே. 10

நலம்கொள் பூம்பொழில் காழி நல்தமிழ் ஞானசம்பந்தன்
வலம்கொள் வெண்மழு வாளன் வாழ்கொளி புத்தூர்உளானை
இலங்கு வெண்பிறை யானை ஏத்திய தமிழ்இவை வல்லார்
நலங்கொள் சிந்தையர் ஆகி நன்னெறி எய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

103. திருஓமாம் புலியூர்

திருமுறை : 3/122 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்
இறைவர் : துயரம்தீர்த்த நாதர் இறைவியார் : பூங்கொடி நாயகி

பூங்கொடி மடவாள் உடைஒரு பாகம்
புரிதரு சடைமுடி அடிகள்
வீங்குஇருள் நட்டம் ஆடும்எம் விகிர்தர்
விருப்பொடும் உறைவிடம் வினவில்
தேம்கமழ் பொழிலில் செழுமலர் கோதிச்
செறிதரு வண்டுஇசை பாடும்
ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. 1

சம்பரற்கு அருளிச் சலந்தரன் வீயத்
தழல்உமிழ் சக்கரம் படைத்த
எம்பெருமானார் இமையவர் ஏத்த
இனிதின் அங்கு உறைவிடம் வினவில்
அம்பர மாகி அழல்உமிழ் புகையின்
ஆகுதியால் மழை பொழியும்
உம்பர்கள் ஏத்தும் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளிஅதுவே. 2

பாங்குஉடைத் தவத்துப் பகீரதற்கு அருளிப்
படர்சடைக் கரந்தநீர்க் கங்கை
தாங்குதல் தவிர்த்துத் தராதலத்து இழித்த
தத்துவன் உறைவிடம் வினவில்
ஆங்குஎரி மூன்றும் அமர்ந்துஉடன் இருந்த
அங்கையால் ஆகுதி வேட்கும்
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. 3

புற்றுஅரவு அணிந்து நீறுமெய் பூசிப்
பூதங்கள் சூழ்தர ஊர்ஊர்
பெற்றம்ஒன்று ஏறிப் பெய்பலி கொள்ளும்
பிரான்அவன் உறைவிடம் வினவில்
கற்றநால் வேதம் அங்கம்ஓர் ஆறும்
கருத்தினார் அருத்தியால் தெரியும்
உற்றபல் புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. 4

நிலத்தவர் வானம் ஆள்பவர் கீழோர்
துயர்கெட நெடியமாற்கு அருளால்
அலைத்த வல்லசுரர் ஆசு அற ஆழி
அளித்தவன் உறைவிடம் வினவில்
சலத்தினால் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
தன்மையார் நன்மையால் மிக்க
உலப்பில்பல் புகழார் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. 5

மணம்திகழ் திசைகள் எட்டும் ஏழிசையும்
மலியும் ஆறுஅங்கம்ஐ வேள்வி
இணைந்தநால் வேதம் மூன்றுஎரி இரண்டு
பிறப்புஎன ஒருமையால் உணரும்
குணங்களும் அவற்றின் கொள்பொருள் குற்றம்
மற்றவை உற்றதும் எல்லாம்
உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி அதுவே. (6 –7)

தலையொரு பத்தும் தடக்கைய திரட்டி
 தான்உடை அரக்கன்ஒண் கயிலை
அலைவது செய்த அவன்திறல் கெடுத்த
 ஆதியார் உறைவிடம் வினவில்
மலைஎன ஓங்கும் மாளிகை நிலவும்
 மாமதில் மாற்றலர் என்றும்
உலவுபல் புகழார் ஓமமாம் புலியூர்
 உடையவர் வடதளி அதுவே. 8

கள்ளவிழ் மலர்மேல் இருந்தவன் கரியோன்
 என்று இவர் காண்பு அரிது ஆய
ஒள்ளெரி உருவர் உமையவளோடும்
 உகந்தினிது உறைவிடம் வினவில்
பள்ளநீர் வாளை பாய்தரு கழனிப்
 பனிமலர்ச் சோலைசூழ் ஆலை
ஒள்ளிய புகழார் ஓமமாம் புலியூர்
 உடையவர் வடதளி அதுவே. 9

தெள்ளியர் அல்லாத் தேரரோடு அமணர்
 தடுக்கொடு சீவரம் உடுக்கும்
கள்ளமார் மனத்துக் கலதிகட்கு அருளாக்
 கடவுளார் உறைவிடம் வினவில்
நள்ளிருள் யாமம் நால்மறை தெரிந்து
 நலந்திகழ் மூன்றுஎரி ஓம்பும்
ஒள்ளியார் வாழும் ஓமமாம் புலியூர்
 உடையவர் வடதளி அதுவே. 10

விளைதரு வயலுள் வெயில் செறி பவளம்
 மேதிகள் மேய்புலத்து இடறி
ஒளிதர மல்கும் ஓமமாம் புலியூர்
 உடையவர் வடதளி அரனைக்

களிதரு நிவப்பில் காண்தகு செல்வக்
காழியுள் ஞானசம்பந்தன்
அளிதரு பாடல் பத்தும் வல்லார்கள்
அமரலோகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

104. திருநாரையூர்

திருமுறை : 2/86 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : சௌந்தரேசுவரர் இறைவியார் : திரிபுர சுந்தரி

உரையினில் வந்தபாவம் உணர்நோய்கள் உம்ம
செயல்தீங்கு குற்றம் உலகில்
வரையினிலாமை செய்த அவைதீரும் வண்ணம்
மிகஏத்தி நித்தம் நினைமின்
வரைசிலையாக அன்று மதில்மூன்று எரித்து
வளர் கங்குல் நங்கை வெருவத்
திரையொலி நஞ்சம்உண்ட சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 1

ஊன் அடைகின்ற குற்றம் முதலாகி உற்ற
பிணிநோய் ஒருங்கும் உயரும்
வான் அடைகின்ற வெள்ளை மதிசூடி சென்னி
விதியான வேத விகிர்தன்
கான்இடை ஆடிப்பூதப் படையான் இயங்கு
விடையான் இலங்கு முடிமேல்
தேன்அடை வண்டுபாடும் சடைஅண்ணல் நண்ணு
திருநாரையூர் கை தொழவே. 2

ஊர்இடை நின்றுவாழும் உயிர்செற்ற காலன்
துயர்உற்ற தீங்கு விரவிப்
பார்இடை மெள்ளவந்து பழிஉற்ற வார்த்தை
பொழிவுஉற்ற வண்ணம் அகலும்
போரிடை அன்றுமூன்று மதில்எய்த ஞான்று
புகழ்வான் உளோர்கள் புணரும்
தேர்இடை நின்றஎந்தை பெருமான் இருந்த
திருநாரையூர் கை தொழவே. 3

தீ உறவு ஆயஆக்கை அதுபற்றி வாழும்
வினைசெற்ற உற்ற உலகின்
தாய்உறு தன்மையாய தலைவன்தன் நாமம்
நிலையாக நின்று மருவும்
பேய்உறவு ஆயகானில் நடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துமுகந்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 4

வசை அபராதம்ஆய உவரோதம் நீங்கும்
தவமாய தன்மை வரும்வான்
மிசையவர் ஆதியாய திருமார்பு இலங்கு
விரிநூலர் விண்ணும் நிலனும்
இசையவர் ஆசிசொல்ல இமையோர்கள் ஏத்தி
அமையாத காதலொடு சேர்
திசையவர் போற்றநின்ற சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 5

உறைவளர் ஊன்நிலாய உயிர்நிற்கும் வண்ணம்
உணர்வுஆக்கும் உண்மை உலகில்
குறைவுஉளவாகி நின்ற குறைதீர்க்கு நெஞ்சில்
நிறைவாற்று நேசம் வளரும்
மறைவளர் நாவன்மாவின் உரிபோர்த்த மெய்யன்
அரவுஆர்த்த அண்ணல் கழலே
திறைவளர் தேவர்தொண்டின் அருள்பேண நின்ற
திருநாரையூர் கை தொழவே. 6

தனம்வரும் நன்மையாகும் தகுதிக்கு உழந்து
வருதிக்கு உழன்ற உடலின்
இனம்வளர் ஐவர் செய்யும் வினயங்கள் செற்று
நினைவு ஒன்று சிந்தை பெருகும்
முனம்ஒரு காலம்மூன்று புரம்வெந்து மங்கச்
சரம் முன் றெரிந்த அவுணர்
சினம்ஒருகால் அழித்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 7

உரு வரைகின்ற நாளில் உயிர்கொள்ளும் கூற்றம்
நனியஞ்சும் ஆதல் உறநீர்
மருமலர் தூவிஎன்றும் வழிபாடு செய்ம்மின்
அழிபாடு இலாத கடலின்
அருவரை சூழ் இலங்கை அரையன் தன் வீரம்
அழியத் தடக்கை முடிகள்
திருவிரல் வைத்து உகந்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 8

வேறுஉயர் வாழ்வுதன்மை வினைதுக்கம் மிக்க
பகைதீர்க்கும் மேய உடலில்
தேறிய சிந்தைவாய்மை தெளிவிக்க நின்ற
கரவைக் கரந்து திகழும்
சேறுஉயர் பூவின்மேய பெருமானும் மற்றைத்
திருமாலும் நேட எரியாய்ச்
சீறிய செம்மையாகும் சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 9

மிடைபடு துன்பம்இன்பம் உளதாக்கும் உள்ளம்
வெளியாக்கும் உன்னி உணரும்
படைஒரு கையில்ஏந்திப் பலிகொள்ளும் வண்ணம்
ஒலிபாடி ஆடி பெருமை
உடையினை விட்டுஉளோரும் உடல்போர்த்து உளோரும்
உரைமாயும் வண்ணம் அழியச்
செடிபட வைத்துஉகந்த சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழவே. 10

எரிஒரு வண்ணம்ஆய உருவானை எந்தை
பெருமானை உள்கி நினையார்
திரிபுரம் அன்றுசெற்ற சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்தகாழி மறைஞான பந்தன்
உரைமாலை பத்தும் மொழிவார்
திருவளர் செம்மைஆகி அருள்பேறு மிக்கது
உளதுஎன்பர் செம்மை யினரே. 11

திருச்சிற்றம்பலம்

105. திருநாரையூர்

திருமுறை : 3/102 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

காம்பினை வென்றமென் தோளிபாகம் கலந்தான் நலம்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடுவில் திருநாரையூர் மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் உரிதோல்மேல்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே. 1

தீவினை ஆயின தீர்க்கநின்றான் திருநாரையூர் மேயான்
பூவினை மேவு சடைமுடியான் புடைசூழப் பலபூதம்
ஆவினில் ஐந்தும்கொண்டு ஆட்டு உகந்தான் அடங்கார் மதில்மூன்றும்
ஏவினை எய்து அழித்தான் கழலே பரவா எழுவோமே. 2

மாயவன் சேயவன் வெள்ளியவன் விடம்சேரும் மைமிடற்றன்
ஆயவன் ஆகியொர் அந்தரமும் அவன்என்று வரை ஆகம்
தீயவன் நீர்அவன் பூமிஅவன் திருநாரையூர் தன்னில்
மேயவனைத் தொழுவார் அவர்மேல் வினையாயின வீடுமே. 3

துஞ்சிருள் ஆடுவர் தூமுறுவல் துளங்கும் உடம்பினராய்
அஞ்சுடரார் எரியாடுவர் ஆரழலார் விழிக்கண்
நஞ்சுஉமிழ் நாகம் அரைக்கு அசைப்பர் நலன்ஓங்கு நாரையூர்
எம்சிவனார்க்கு அடிமைப்படுவார்க்கு இனிஇல்லை ஏதமே. 4

பொங்கு இளம்கொன்றையினார் கடலில் விடமுண்டு இமையோர்கள்
தங்களை ஆர்இடர் தீரநின்ற தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்து அனல் ஆடலினார் திருநாரையூர் மேய
வெங்கனல் வெண்ணீறு அணியல்லார் அவரே விழுமியரே. 5

பார்உறு வாய்மையினார் பரவும் பரமேட்டி பைங்கொன்றைத்
தார்உறு மார்புடையான் மலையின் தலைவன் மலைகளைச்
சீர்உறும் மாமறுகின் சிறை வண்டு அறையும் திருநாரை
ஊர்உறை எம்இறைவர்க்கு இவை ஒன்றொடு ஒன்று ஒவ்வாவே. 6

கள்ளி இடுதலை ஏந்து கையர் கரிகாடர் கண்நுதலர்
வெள்ளிய கோவண ஆடைதன்மேல் மிளிர் ஆடுஅரவு ஆர்த்து
நள்ளிருள் நட்டம் அது ஆடுவர் நன்நலன் ஓங்கு நாரையூர்
உள்ளியபோழ்தில் எம்மேல் வருவல்வினை ஆயின ஓடுமே 7

நாமம் எனப்பலவும் உடையான் நலன் ஓங்கு நாரையூர்
தாம் ஓம் எனப்பறை யாழ் குழல் தாள் ஆர் கழல் பயில
ஈமவிளக்கு எரி சூழ் சுடலை இயம்பும் இடுகாட்டில்
சாமம் உரைக்க நின்று ஆடுவானும் தழலாய சங்கரனே.8

ஊனுடை வெண்தலை கொண்டு உழல்வான் ஒளிர்புன் சடைமேல் ஓர்
வானிடை வெண்மதி வைத்து உகந்தான் வரிவண்டு யாழ்முரலத்
தேனுடைமாமலர் அன்னம் வைகும் திருநாரையூர் மேய
ஆனிடை ஐந்து உகந்தான் அடியே பரவா அடைவோமே. 9

தூசு புனை துவர் ஆடை மேவும் தொழிலார் உடம்பினில்உள்
மாசு புனைந்து உடை நீத்தவர்கள் மயல்நீர்மை கேளாதே
தேசு உடையீர்கள் தெளிந்து அடைமின் திருநாரையூர் தன்னில்
பூசு பொடித் தலைவர் அடியார் அடியே பொருத்தமே. 10

தண்மதி தாழ்பொழில் சூழ் புகலித் தமிழ் ஞானசம்பந்தன்
ஒண்மதி சேர் சடையான் உறையும் திருநாரையூர் தன்மேல்
பண் மதியால் சொன்ன பாடல்பத்தும் பயின்றார் வினைபோகி
மண் மதியாது போய் வான் புகுவார் வானோர் எதிர்கொளவே. 11

திருச்சிற்றம்பலம்

106. திருநாரையூர்

திருமுறை : 3/107 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

இறைவர் : சௌந்தரேசுவரர் இறைவியார் : திரிபுரசுந்தரி

கடல் இடை வெங்கடு நஞ்சம் உண்ட கடவுள் விடைஏறி
உடல் இடையில் பொடிப் பூச வல்லான் உமையோடு ஒருபாகன்
அடல் இடையில் சிலை தாங்கி எய்த அம்மான் அடியார்மேல்
நடலை வினைத்தொகை தீர்த்து உகந்தான் இடம் நாரையூர்தானே.1

விண்ணின் மின்னேர் மதி துத்திநாகம் விரிபூமலர்க் கொன்றை
பெண்ணின் முன்னே மிக வைத்து உகந்த பெருமான் எரியாடி
நண்ணிய தன் அடியார்களோடும் திருநாரையூரான் என்று
எண்ணுமின் நும்வினை போகும் வண்ணம் இறைஞ்சும் நிறைவாமே.2

தோடு ஒரு காது ஒரு காது சேர்ந்த குழையான் இழைதோன்றும்
பீடு ஒரு கால் பிரியாது நின்ற பிறையான் மறைஓதி
நாடு ஒரு காலமும் சேர நின்ற திரு நாரையூரானைப்
பாடுமின் நீர்பழி போகும் வண்ணம் பயிலும் உயர்வாமே.3

வெண்ணிலவு அம்சடை சேர வைத்து விளங்கும் தலை ஏந்திப்
பெண்ணில் அமர்ந்து ஒரு கூறு ஆது அய பெருமான் அருள் ஆர்ந்த
அண்ணல் மன்னி உறை கோயிலாகும் அணி நாரையூர் தன்னை
நண்ணல் அமர்ந்து உறை வாக்குமின்கள் நடலை கரிசறுமே. 4

வான் அமர் தீவளி நீர் நிலனாய் வழங்கும் பழியாகும்
ஊன் அமர் இன்னுயிர் தீங்கு குற்றம் உறைவால் பிறிது இன்றி
நான் அமரும் பொருளாகி நின்றான் திருநாரையூர் எந்தை
கோன் அவனைக் குறுகக் குறுகா கொடுவல்வினைதானே. 5

கொக்கு இறகும் குளிர் சென்னி மத்தம் குலாய மலர் சூடி
அக்கு அரவோடு அரை ஆர்த்து உகந்த அழகன் குழகாக
நக்கு அமரும் திருமேனியாளன் திருநாரையூர் மேவிப்
புக்கு அமரும் மனத்தோர்கள் தம்மைப் புணரும் புகல்தானே. 6

ஊழியும் இன்பமும் காலமும்ஆகி உயரும் தவமாகி
ஏழிசை இன்பொருள் வாழும்வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி
நாழிகையும் பல ஞாயிறாகி நளிர் நாரையூர் தன்னில்
வாழியர் மேதகு மைந்தர் செய்யும் வகையின் விளைவாமே. 7

கூசம் இலாது அரக்கன் வரையைக் குலுங்க எடுத்தான் தோள்
நாசம் அது ஆகி இற அடர்த்த விரலான் கரவாதார்
பேச வியப்பொடு பேண நின்ற பெரியோன் இடம்போலும்
தேசம் உறப்புகழ் செம்மைபெற்ற திருநாரையூர்தானே. 8

பூமகனும் அவனைப் பயந்த புயலார் நிறத்தானும்
ஆம் அளவும் திரிந்து ஏத்திக் காண்டல் அறிதற்கு அரியான்ஊர்
பா மருவும் குணத்தோர்கள் ஈண்டிப் பலவும் பணிசெய்யும்
தேம் மருவும் திகழ் சோலை சூழ்ந்த திருநாரையூர்தானே.9

வெற்று அரையாகிய வேடம் காட்டித் திரிவார் துவராடை
உற்ற அரையோர்கள் உரைக்கும் சொல்லை உணராது எழுமின்கள்
குற்றம் இலாதது ஓர் கொள்கை எம்மான் குழகன் தொழில் ஆரப்
பெற்று அரவு ஆட்டி வரும்பெருமான் திருநாரையூர் சேர்வே. 10

பாடு இயலும் திரை சூழ் புகலித் திருஞான சம்பந்தன்
சேடு இயலும் புகழ் ஓங்கு செம்மைத் திருநாரையூரான் மேல்
பாடிய தண்தமிழ்மாலைபத்தும் பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையினார்க்கு நீங்கும் அவலக் கடல்தானே. 11

திருச்சிற்றம்பலம்

107. திருக்கடம்பூர்

திருமுறை : 2/68 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : அமுதகடேசுவரர் இறைவியார் : சோதிமின்னம்மை

வான் அமர் திங்களும் நீரும் மருவிய வார்சடை யானைத்
தேன் அமர் கொன்றையினானைத் தேவர் தொழப்படுவானைக்
கான் அமரும் பிணை புல்கிக் கலைபயிலும்கடம் பூரில்
தான் அமர் கொள்கையினானைத் தாள்தொழ வீடுஎளிதாமே.1

அரவினொடு ஆமையும் பூண்டு அம்துகில் வேங்கை அதளும்
விரவும் திருமுடி தன்மேல் வெண்திங்கள் சூடி விரும்பிப்
பரவும் தனிக்கடம் பூரில் பைங்கண் வெள்ளேற்று அண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய இன்பம் நமக்கு அதுவாமே. 2

இளிபடும் இன்சொலினார்கள் இருங்குழல் மேல்இசைந்து ஏறத்
தெளிபடு கொள்கை கலந்த தீத்தொழிலார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி ஒண்ணுதலோடு உடனாகிப்
புலி அதள்ஆடை புனைந்தான் பொன்கழல் போற்றுதும் நாமே. 3

பறையொடு சங்கம் இயம்பப் பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார் கலை ஒலிசேர் கடம்பூரில்
மறைஒலி கூடிய பாடல் மருவிநின்று ஆடல் மகிழும்
பிறைஉடை வார்சடையானைப் பேணவல்லார் பெரியோரே. 4

தீவிரி யக்கழல் ஆர்ப்பச் சேய்எரி கொண்டுஇடு காட்டில்
நாவிரி கூந்தல்நல் பேய்கள் நகைசெய்ய நட்டம் நவின்றோன்
காவிரி கொன்றை கலந்த கண்ணுதலான் கடம்பூரில்
பாவிரி பாடல் பயில்வார் பழியொடு பாவம் இலாரே. 5

தண்புனல் நீள்வயல் தோறும் தாமரை மேலனம் வைகக்
கண்புணர் காவில் வண்டு ஏறக் கள் அவிழும் கடம்பூரில்
பெண்புனை கூறுடை யானைப் பின்னு சடைப்பெருமானைப்
பண்புனை பாடல் பயில்வார் பாவம் இலாதவர் தாமே. 6

பலிகெழு செம்மலர் சாரப் பாடலொடு ஆடல் அறாத
கலிகெழு வீதி கலந்த கார்வயல் சூழ் கடம்பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தான் ஒண்ணுதலாள் உமை கேள்வன்
புலிஅதள் ஆடையினான் தன் புனைகழல் போற்றல் பொருளே.7

பூம் படுகில் கயல் பாயப் புள் இரியப் புறங்காட்டில்
காம்படு தோளியர் நாளும் கண்கவரும் கடம்பூரில்
மேம்படுதேவியொர் பாகம் மேவி எம்மான் என வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித் திசைதொழத் தீய கெடுமே. 8

திருமரு மார்பில் அவனும் திகழ்தரு மாமலரோனும்
இருவருமாய் அறி ஒண்ணா எரிஉருவு ஆகிய ஈசன்
கருவரை காலில் அடர்த்த கண்ணுதலான் கடம்பூரில்
மருவிய பாடல் பயில்வார் வான்உலகம் பெறுவாரே. 9

ஆடை தவிர்த்து அறம்காட்டும் அவர்களும் அந்துவர் ஆடைச்
சோடைகள் நன்னெறி சொல்லார் சொல்லினும் சொல்அல கண்டீர்
வேடம் பலபல காட்டும் விகிர்தன் நம் வேத முதல்வன்
காடு அதனில் நடமாடும் கண்ணுதலான் கடம்பூரே. 10

விடை நவிலும் கொடியானை வெண்கொடி சேர் நெடுமாடம்
கடை நவிலும் கடம்பூரில் காதலனைக் கடல் காழி
நடைநவில் ஞானசம்பந்தன் நன்மையால் ஏத்திய பத்தும்
படைநவில் பாடல் பயில்வார் பழியொடு பாவம் இலாரே.11

திருச்சிற்றம்பலம்

108. திருப்பந்தணை நல்லூர்

திருமுறை : 3/121 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

இறைவர் : பசுபதீசுவரர் இறைவியார் : காம்பன்னதோளிஅம்மை

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
இவைசொல்லி உலகுஎழுந்து ஏத்தக்
கடறினார் ஆவர் காற்றுளார் ஆவர்
காதலித்து உறைதரு கோயில்
கொடிறனார் யாதும் குறைவிலார் தாம்போய்க்
கோவணம் கொண்டு கூத்தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 1

கழியுளார் எனவும் கடலுளார் எனவும்
காட்டுளார் நாட்டுளார் எனவும்
வழியுளார் எனவும் மலையுளார் எனவும்
மண்ணுளார் விண்ணுளார் எனவும்
சுழியுளார் எனவும் சுவடுதாம் அறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்
பழியுளார் போலும் பந்தணை நல்லூர்
நின்ற எம் பசுபதியாரே. 2

காட்டினார் எனவும் நாட்டினார் எனவும்
கடும் தொழில் காலனைக் காலால்
வீட்டினார் எனவும் சாந்தவெண் நீறு
பூசிஓர் வெண்மதி சடைமேல்
சூட்டினார் எனவும் சுவடுதாம் அறியார்
சொல் உள சொல்லும் நால் வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 3

முருகினார் பொழில்சூழ் உலகினார் ஏத்த
மொய்த்தபல் கணங்களின் துயர்கண்டு
உருகினார் ஆகி உறுதிபோந்து உள்ளம்
ஒண்மையால் ஒளிதிகழ் மேனி
கருகினார் எல்லாம் கைதொழுது ஏத்தக்
கடலுள்நஞ்சு அமுதமா வாங்கிப்
பருகினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 4

பொன்னினார் கொன்றை இருவடம் கிடந்து
பொறிகிளர் பூணநூல் புரள
மின்னினார் உருவின் மிளிர்வதோர் அரவம்
மேவுவெண் நீறுமெய் பூசித்
துன்னினார் நால்வர்க்கு அறம்அமர்ந்து அருளித்
தொன்மையார் தோற்றமும் கேடும்
பன்னினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 5

ஒண்பொனார் அனைய அண்ணல்வாழ்க எனவும்
உமையவள் கணவன்வாழ்க எனவும்
அன்பினார் பிரியார் அல்லு நன்பகலும்
அடியவர் அடிஇணை தொழவே
நண்பினார் எல்லாம் நல்லர் என்று ஏத்த
வல்லவர் தீயர் என்று ஏத்தும்
பண்பினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 6


எற்றினார் ஏதும் இடைகொள்வார் இல்லை
இருநிலம் வானுலகு எல்லை
தெற்றினார் தங்கள் காரணமாகச்
செருமலைந்து அடிஇணை சேர்வான்
முற்றினார் வாழும் மும்மதில் வேவ
மூவிலைச் சூலமும் மழுவும்
பற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 7

ஒலிசெய்த குழலின் முழவம் அது இயம்ப
ஓசையால் ஆடல் அறாத
கலிசெய்த பூதம் கையினால் இடவே
காலினால் பாய்தலும் அரக்கன்
வலிகொள்வர் புலியின் உரிகொள்வர்ஏனை
வாழ்வு நன்றானும் ஓர் தலையில்
பலிகொள்வர் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. 8

சேற்றினார் பொய்கைத் தாமரையானும்
செங்கண்மால் இவர் இரு கூறாத்
தோற்றினார் தோற்றத் தொன்மையை அறியார்
துணைமையும் பெருமையும் தம்மில்
சாற்றினார் சாற்றி ஆற்றலோம் என்னச்
சரண்கொடுத்து அவர்செய்த பாவம்
பாற்றினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதியாரே. (9–10)

கல்லிசை பூணக் கலையொலி ஓவாக்
கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை ஏந்தி
மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும் வல்லவர் மேல்
தொல்வினை சூழகிலாவே. 11

திருச்சிற்றம்பலம்



109. திருக்கோடிகா

திருமுறை : 2/99 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : கோடிகாவீசுவரர், திருகோடீசுவரர் இறைவியார் : திரிபுரசுந்தரி, வடிவம்மை

இன்று நன்று நாளை நன்று என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டு போதுமின்
மின் தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றை துன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.1

அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்து இராது நீர்
நல்லது ஓர் நெறியினை நாடுதும் நடமினோ
வில்லை அன்ன வாள்நுதல் வெள்வளை ஓர் பாசமாம்
கொல்லை வெள்ளை ஏற்றினான் கோடிகாவு சேர்மினே.2

துக்கம் மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்
தக்கது ஓர் நெறியினைச் சார்தல்செய்யப் போதுமின்
அக்கு அணிந்து அரைமிசை ஆறுஅணிந்த சென்னிமேல்
கொக்கு இறகு அணிந்தவன் கோடிகாவு சேர்மினே. 3

பண்டு செய்த வல்வினை பற்றுஅறக் கெடும் வகை
உண்டு உமக்கு உரைப்பன் நான் ஒல்லை நீர் எழுமினோ
மண்டு கங்கை செஞ்சடை வைத்து மாதுஓர் பாகமாக்
கொண்டு உகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே. 4

முன்னை நீர்செய் பாவத்தால் மூர்த்திபாதம் சிந்தியாது
இன்னம்நீர் இடும்பையில் மூழ்கிறீர் எழும்மினோ
பொன்னை வென்ற கொன்றையான் பூதம்பாட ஆடலான்
கொல் நவிலும் வேலினான் கோடிகாவு சேர்மினே. 5

ஏவம் மிக்க சிந்தையோடு இன்பம் எய்தலாம் எனப்
பாவம் எத்தனையும் நீர் செய்து ஒரு பயன் இலைக்
காவல் மிக்க மா நகர் காய்ந்து வெங்கனல் படக்
கோவம் மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே. 6

ஏண் அழிந்த வாழ்க்கையை இன்பம் என்று இருந்து நீர்
மாண் அழிந்த மூப்பினால் வருந்தல் முன்னம் வம்மினோ
பூணல் வெள்எலும்பினால் பொன்திகழ் சடைமுடிக்
கோணல்வெண்பிறையினான் கோடிகாவு சேர்மினே. 7

மற்றி வாழ்க்கை மெய் எனும் மனத்தினைத் தவிர்ந்து நீர்
பற்றி வாழ்மின் சேவடி பணிந்து வந்து எழுமினோ
வெற்றி கொள் தசமுகன் விறல் கெட இருந்தது ஓர்
குற்றம் இல் வரையினான் கோடிகாவு சேர்மினே. 8

மங்கு நோய் உறும்பிணி மாயும் வண்ணம் சொல்லுவன்
செங்கண் மால் திசைமுகன் சென்று அளந்தும் காண்கிலா
வெங்கண் மால்விடை உடை வேதியன் விரும்பும் ஊர்
கொங்கு உலாம் வளம் பொழில் கோடிகாவு சேர்மினே. 9

தட்டொடு தழைமயில்பீலி கொள் சமணரும்
பட்டு உடை விரி துகிலினார்கள் சொல் பயனிலை
விட்ட புன் சடையினான் மேதகும் முழவொடும்
கொட்டு அமைந்த ஆடலான் கோடிகாவு சேர்மினே. 10

கொந்து அணி குளிர்பொழில் கோடிகாவு மேவிய
செந்தழல்உருவனைச் சீர்மிகு திறல் உடை
அந்தணர் புகலியுள் ஆய கேள்வி ஞானசம்
பந்தன தமிழ் வல்லார் பாவம்ஆன பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

110. திருமங்கலக்குடி

திருமுறை : 2/10 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : புராணவரதேசுவரர் இறைவியார் : மங்களநாயகி

சீரின் ஆர் மணியும் அகில் சந்தும் செறிவரை
வாரி நீர்வரு பொன்னி வடமங்கலக்குடி
நீரின் மா முனிவன் நெடுங்கைகொடு நீர்தனைப்
பூரித்து ஆட்டிஅர்ச்சிக்க இருந்த புராணனே. 1

பணம்கொள் ஆடுஅரவு அல்குல் நல்லார் பயின்று ஏத்தவே
மணம் கொள் மா மயில் ஆலும் பொழில் மங்கலக்குடி
இணங்கு இலா மறையோர் இமையோர் தொழுது ஏத்திட
அணங்கினோடு இருந்தான் அடியே சரண் ஆகுமே. 2

கருங்கையானையின் ஈர்உரி போர்த்திடு கள்வனார்
மருங்குஎலாம் மணம் ஆர் பொழில் சூழ் மங்கலக்குடி
அரும்பு சேர் மலர்க் கொன்றையினான் அடி அன்பொடு
விரும்பி ஏத்தவல்லார் வினைஆயின வீடுமே. 3

பறையினோடு ஒலிபாடலும் ஆடலும் பாரிடம்
மறையினோடு இயல் மல்கிடுவார் மங்கலக்குடிக்
குறைவு இலா நிறைவே குணம் இல்குணமே என்று
முறையினால் வணங்கும் அவர் முன்நெறி காண்பரே. 4

ஆனில் அம்கிளர் ஐந்தும் அவிர் முடி ஆடி ஓர்
மான் நில் அம்கையினான் மணம் ஆர் மங்கலக்குடி
ஊன்இல்வெண்தலைக் கை உடையான் உயர் பாதமே
ஞானம்ஆக நின்று ஏத்த வல்லார் வினை நாசமே. 5

தேனுமாய் அமுதாகி நின்றான் தெளி சிந்தையுள்
வானுமாய் மதி சூட வல்லான் மங்கலக்குடிக்
கோனை நாள்தொறும் ஏத்திக் குணம்கொடு கூறுவார்
ஊனம்ஆனவை போய்அறும் உய்யும் வகை அதே. 6

வேள் படுத்திடு கண்ணினன் மேரு வில்லாகவே
வாள் அரக்கர் புரம் எரித்தான் மங்கலக்குடி
ஆளும் ஆதிப்பிரான் அடிகள் அடைந்து ஏத்தவே
கோளும் நாள் அவை போய் அறும் குற்றம் இல்லார்களே. 7

பொலியும் மால்வரை புக்கு எடுத்தான் புகழ்ந்து ஏத்திட
வலியும் வாளொடு நாள் கொடுத்தான் மங்கலக்குடிப்
புலியின் ஆடையினான் அடி ஏத்திடும் புண்ணியர்
மலியும் வான்உலகம் புக வல்லவர் காண்மினே. 8

ஞாலம் முன் படைத்தான் நளிர் மாமலர்மேல் அயன்
மாலும் காண ஒணா எரியான் மங்கலக்குடி
ஏல வார்குழலாள் ஒரு பாகம் இடம்கொடு
கோலமாகி நின்றான் குணம் கூறும் குணம் அதே. 9

மெய்யின் மாசினர் மேனி விரி துவர் ஆடையர்
பொய்யை விட்டிடும் புண்ணியர் சேர் மங்கலக்குடிச்
செய்யமேனிச் செழும்புனல்கங்கை செறிசடை
ஐயன் சேவடி ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே. 10

மந்த மாம்பொழில் சூழ் மங்கலக்குடி மன்னிய
எந்தையை எழிலார் பொழில் காழியர் காவலன்
சிந்தைசெய்து அடி சேர்த்திடு ஞானசம்பந்தன் சொல்
முந்தி ஏத்த வல்லார் இமையோர் முதல் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

111. திருப்பனந்தாள்

திருமுறை : 3/62 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி
இறைவர் : செஞ்சடையப்பர் இறைவியார் : பெரியநாயகி

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுஉடையான் மிகு பீடுஉடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியன்ஊர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே. 1

விரித்தவன் நான்மறையை மிக்க விண்ணவர் வந்து இறைஞ்ச
எரித்தவன் முப்புரங்கள் இயல் ஏழுலகில் உயிரும்
பிரித்தவன் செஞ்சடை மேல் நிறை பேரொலி வெள்ளம்தன்னைத்
தரித்தவன் ஊர்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 2

உடுத்தவன் மான்உரிதோல் கழல் உள்கவல்லார் வினைகள்
கெடுத்துஅருள் செய்யவல்லான் கிளர் கீதமொர் நால்மறையான்
மடுத்தவன் நஞ்சுஅமுதா மிக்க மாதவர் வேள்வியைமுன்
தடுத்தவன் ஊர் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 3

சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல் மிக ஏத்துமின் பாய்புனலும்
போழ் இளவெண்மதியும் அனல் பொங்கு அரவும் புனைந்த
தாழ் சடையான் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 4

விடம்படு கண்டத்தினான் இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினான் அவன் எம்மிறை சேரும்இடம்
படம்புரி நாகமொடு திரை பன்மணியும் கொணரும்
தடம் புனல்சூழ் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 5

விடைஉயர் வெல்கொடியான் அடி விண்ணொடு மண்ணும்எல்லாம்
புடைபட ஆடவல்லான் மிகு பூதமார் பல்படையான்
தொடைநவில் கொன்றையொடு வன்னி துன் எருக்கும் அணிந்த
சடையவன் ஊர் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 6

மலையவன் முன்பயந்த மட மாதையொர் கூறுஉடையான்
சிலைமலி வெங்கணையால் புரம் மூன்றுஅவை செற்றுஉகந்தான்
அலைமலி தண்புனலும் மதி ஆடு அரவும் அணிந்த
தலையவன் ஊர்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 7

செற்று அரக்கன் வலியைத் திரு மெல்விரலால் அடர்த்து
முற்றும் வெண்நீறு அணிந்த திருமேனியன் மும்மையினான்
புற்றுஅரவம் புலியின் உரி தோலொடு கோவணமும்
தற்றவன் ஊர்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 8

வின்மலை நாண் அரவம் மிகு வெங்கனல் அம்பு அதனால்
புன்மை செய்தானவர் தம்புரம் பொன்றுவித்தான் புனிதன்
நல்மலர் மேல்அயனும் நண்ணும் நாரணனும் அறியாத்
தன்மையன் ஊர்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 9

ஆதர் சமணரொடும் அடை ஐந்துகில் போர்த்து உழலும்
நீதர் உரைக்கும்மொழி அவை கொள்ளன்மின் நின்மலன் ஊர்
போது அவிழ் பொய்கைதனுள் திகழ் புள் இரியப் பொழில்வாய்த்
தாது அவிழும் பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே. 10

தண்வயல் சூழ்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரத்துக்
கண் அயலே பிறையான் அவன் தன்னைமுன் காழியர்கோன்
நண்ணிய செந்தமிழால் மிகு ஞானசம்பந்தன் நல்ல
பண்ணியல் பாடல்வல்லார் அவர் தம்வினை பற்று அறுமே. 11

திருச்சிற்றம்பலம்

112. திருச்சேய்ஞலூர்

திருமுறை : 1/48 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : சத்தியகிரீசுவரர் இறைவியார் : சகிதேவியார்

நூலடைந்த கொள்கையாலே நுன் அடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்அறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதுஎன்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 1

நீறடைந்த மேனியின்கண் நேரிழையாள் ஒருபால்
கூறடைந்த கொள்கைஅன்றிக் கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி அரவம் அணிந்ததுஎன்னே
சேறடைந்த தண்கழனி சேய்ஞலூர் மேயவனே. 2

ஊனடைந்த வெண்தலையினோடு பலிதிரிந்து
கானடைந்த பேய்களோடு பூதம் கலந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்து எரியாடல் என்னே
தேனடைந்த சோலைமல்கு சேய்ஞலூர் மேயவனே. 3

வீணடைந்த மும்மதிலும் வில்மலையா அரவின்
நாணடைந்த வெம்சரத்தால் நல்லெரி ஊட்டல்என்னே
பாணடைந்த வண்டுபாடும் பைம்பொழில் சூழ்ந்துஅழகார்
சேணடைந்த மாடமல்கு சேய்ஞலூர் மேயவனே. 4

பேயடைந்த காடுஇடமாப் பேணுவது அன்றியும்போய்
வேயடைந்த தோளிஅஞ்ச வேழம் உரித்ததுஎன்னே
வாயடைந்த நால்மறை ஆறு அங்கமோடு ஐவேள்வித்
தீயடைந்த செங்கையாளர் சேய்ஞலூர் மேயவனே. 5

காடடைந்த ஏனம்ஒன்றின் காரணமாகி வந்து
வேடடைந்த வேடனாகி விசயனோடு எய்தது என்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்கணாற்கு அருள்செய்
சேடடைந்த செல்வர்வாழும் சேய்ஞலூர் மேயவனே. 6

பீரடைந்த பாலது ஆட்டப் பேணாது அவன்தாதை
வேரடைந்து பாய்ந்த தாளை வேர் தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்தது என்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே. 7

மாவடைந்த தேர் அரக்கன் வலி தொலைவித்தவன் தன்
நாவடைந்த பாடல் கேட்டு நயந்து அருள் செய்தது என்னே
பூவடைந்த நான்முகன் போல் பூசுரர் போற்றி செய்யும்
சேவடைந்த ஊர்தியானே சேய்ஞலூர் மேயவனே. 8

காரடைந்த வண்ணனோடு கனகம் அனையானும்
பாரடைந்தும் விண்பறந்தும் பாதம் முடிகாணார்
சீரடைந்து வந்துபோற்றச் சென்றுஅருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகில் சேய்ஞலூர் மேயவனே. 9

மாசடைந்த மேனியாரும் மனம் திரியாத கஞ்சி
நேசடைந்த ஊணினாரும் நேசம் இலாதது என்னே
வீசடைந்த தோகைஆட விரை கமழும் பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடும் சேய்ஞலூர் மேயவனே. 10

சேயடைந்த சேய்ஞலூரில் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ் தோணி புரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்குசம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வான்உலகு ஆள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருப்புறம்பயத்தை வணங்கின ஆளுடைய பிள்ளையார் திருச்சேய்ஞலூரை அடைந்தபோது அவ்வூர் மறையவர் தம்பதியை அணிசெய்து எதிர்கொண்டு வணங்கித் தமது திருப்பதியில் தம் மரபில் முன் அவதரித்த சண்டீசப் பிள்ளையாரே மீண்டுந் திரும்பி வந்ததாகப் பேர் உவகை கொண்டு பாராட்டினர். பிள்ளையார் அது சண்டேசப் பிள்ளையார் திரு அவதரித் திருப்பதியாகலின் சிவிகையினின்றும் இறங்கி நடந்துசென்று திருக்கோயிலை அடைந்து இறைவனைப் பணிந்து "நூலடைந்த கொள்கை" என்றெடுத்த ஏழாந் திருப்பாட்டில் "தாதைதா டடிந்த சண்டீசப் பிள்ளையார், பாதகப் பயன்றரு பரிசுபாடித்" திருக்கடைக்காப்பில் அத்திருப்பதியை முன் முருகப் பெருமான் கண்டருளிய தன்மையைச் "சேய் அடைந்த சேய்ஞலூர்" என்று வைத்துச் சிறப்பித்துச் சிலநாள் தங்கியிருந்து திருப்பனந்தாளுக் எழுந்தருளினார்.

113. திருந்துதேவன்குடி

திருமுறை : 3/25 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : தேவதேவேசர்,
கற்கடசேசுவரர் இறைவியார்:அருமருந்துஅம்மை

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர்தேவு எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள்வேடங்களே. 1

வீதிபோக்கு ஆவன வினையை வீட்டுவ்வன
ஓதி யோர்க்கப்படாப் பொருளை யோர்விப்பன
தீது இல் தேவன்குடித் தேவர்தேவு எய்திய
ஆதி அந்தம் இலா அடிகள் வேடங்களே. 2

மானம் ஆக்குவ்வன மாசு நீக்குவ்வன
வானை உள்கச் செலும் வழிகள் காட்டுவ்வன
தேனும் வண்டும் இசை பாடும் தேவன்குடி
ஆன்அஞ்சு ஆடும் முடிஅடிகள் வேடங்களே. 3

செவிகள் ஆர்விப்பன சிந்தையுள் சேர்வன
கவிகள் பாடுவ்வன கண் குளிர்விப்பன
புவிகள் பொங்கப் புனல் பாயும்தேவன்குடி
அவிகள் உய்க்கப்படும் அடிகள் வேடங்களே. 4

விண்ணுலாவும் நெறி வீடு காட்டும் நெறி
மண்ணுலாவும் நெறி மயக்கம் தீர்க்கும் நெறி
தெண்ணிலாவெண்மதி தீண்டு தேவன்குடி
அண்ணலான்ஏறுஉடை அடிகள் வேடங்களே. 5

பங்கம் என்னப் படர் பழிகள் என்னப்படா
புங்கம் என்னப் படர் புகழ்கள் என்னப்படும்
திங்கள் தோயும் பொழில் தீண்டு தேவன்குடி
அங்கம்ஆறும் சொன்ன அடிகள் வேடங்களே. 6

கரைதல் ஒன்றும் இலை கருத வல்லார் தமக்கு
உரையில் ஊனம் இலை உலகினில் மன்னுவர்
திரைகள் பொங்கப் புனல் பாயும்தேவன்குடி
அரையில் வெண்கோவணத்து அடிகள் வேடங்களே. 7

உலகம் உட்கும் திறல் உடை அரக்கன் வலி
விலகு பூதக்கணம் வெருட்டும் வேடத்தின
திலகம் ஆரும் பொழில் சூழ்ந்த தேவன்குடி
அலர் தயங்கும் முடி அடிகள் வேடங்களே. 8

துளக்கம் இல்லாதன தூய தோற்றத்தன
விளக்கம் ஆக்குவ்வன வெறி வண்டு ஆரும் பொழில்
திளைக்கும் தேவன்குடித் திசைமுகனோடு மால்
அளக்க ஒண்ணா வண்ணத்து அடிகள் வேடங்களே.9

செரு மருதம் துவர்த் தேர் அமண் ஆதர்கள்
உரு மருவப்படாத் தொழும்பர் தம் உரை கொளேல்
திரு மருவும் பொய்கை சூழ்ந்த தேவன்குடி
அருமருந்து ஆவன அடிகள் வேடங்களே. 10

சேடர் தேவன்குடித் தேவர்தேவன்தனை
மாடம் ஓங்கும் பொழில் மல்கு தண் காழியான்
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

114. திருவியலூர்

திருமுறை : 1/13 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : யோகாநந்சேசுவரர் இறைவியார் : சாந்தநாயகி

குரவம்கமழ் நறுமென்குழல் அரிவை அவள் வெருவப்
பொருவெங்கரி பட வென்றுஅதன் உரிவைஉடல் அணிவோன்
அரவும் அலை புனலும் இளமதியும் நகுதலையும்
விரவும்சடை அடிகட்கு இடம் விரிநீர் வியலூரே. 1

ஏறார்தரும் ஒருவன்பல உருவன்நிலை ஆனான்
ஆறார்தரு சடையன் அனல் உருவன் புரிவுடையான்
மாறார்புரம் எரியச்சிலை வளைவித்தவன் மடவாள்
வீறார்தர நின்றான் இடம் விரிநீர் வியலூரே. 2

செம்மென்சடை அவைதாழ்வுற மடவார் மனைதோறும்
பெய்ம்மின்பலி எனநின்றுஇசை பகர்வார்அவர் இடமாம்
உம்என்றுஎழும் அருவித்திரள் வரைபற்றிட உரைமேல்
விம்மும்பொழில் கெழுவும் வயல் விரிநீர் வியலூரே. 3

அடைவுஆகிய அடியார்தொழ அலரோன் தலை அதனில்
மடவார் இடுபலி வந்துணல் உடையானவன் இடமாம்
கடையார்தர அகிலார்கழை முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு விரிநீர் வியலூரே. 4

எண்ணார்தரு பயனாய் அயன் அவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாய்உயர் பொருளாய்இறை அவனாய்க்
கண்ணார்தரும் உருவாகிய கடவுள்இடம் எனலாம்
விண்ணோரொடு மண்ணோர் தொழு விரிநீர் வியலூரே.5

வசை விற்கொடு வரு வேடுவன் அவனாய் நிலையறிவான்
திசைஉற்றவர் காணச் செரு மலைவான் நிலை அவனை
அசையப்பொருது அசையாவணம் அவனுக்குஉயர் படைகள்
விசையற்குஅருள் செய்தான்இடம் விரிநீர் வியலூரே. 6

மானார்அரவு உடையான் இரவு உடையான் பகல்நட்டம்
ஊனார் தரும் உயிரான் உயர்வு இசையான் விளை பொருள்கள்
தானாகிய தலைவன் என நினைவார் அவர் இடமாம்
மேல்நாடிய விண்ணோர்தொழும் விரிநீர் வியலூரே. 7

பொருவார் எனக்கு எதிரார் எனப்பொருப்பை எடுத்தான்தன்
கருமால்வரை கரம்தோள்உரம் கதிர்நீள்முடி நெரிந்து
சிரம்ஆயின கதறச்செறி கழல்சேர் திருவடியின்
விரலால் அடர்வித்தான் இடம் விரிநீர் வியலூரே. 8

வளம்பட்டு அவர் மலர்மேயவன் மாலும் ஒருவகையால்
அளம்பட்டு அறிவு ஒண்ணாவகை அழல் ஆகிய அண்ணல்
உளம்பட்டு எழு தழல் தூண் அதன் நடுவே ஒரு உருவம்
விளம்பட்டு அருள் செய்தான் இடம் விரிநீர் வியலூரே. 9

தடுக்கால்உடல் மறைப்பார் அவர் தவர் சீவர மூடிப்
பிடக்கே உரைசெய்வாரொடு பேணார் நமர்பெரியோர்
கடல் சேர்தரு விடம் உண்டு அமுது அமரர்க்கு அருள் செய்த
விடைசேர்தரு கொடியான் இடம் விரிநீர் வியலூரே. 10

விளங்கும் பிறை சடை மேல் உடை விகிர்தன் வியலூரைத்
தளம்கொண்டது ஓர் புகலித் தகு தமிழ் ஞானசம்பந்தன்
துளங்கு இல் தமிழ் பரவித்தொழும் அடியார் அவர் என்றும்
விளங்கும் புகழ் அதனோடு உயர் விண்ணும் உடையாரே. 11

திருச்சிற்றம்பலம்

115. திருஇன்னம்பர்

திருமுறை : 3/95 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : தான்தோன்றிஈசர் இறைவியார் : சௌந்தர நாயகி
எழுத்தறிந்த நாதர் பூங்கொம்பு நாயகி

எண்திசைக்கும் புகழ் இன்னம்பர் மேவிய
வண்டு இசைக்கும் சடையீரே
வண்டு இசைக்கும் சடையீர் உமை வாழ்த்துவார்
தொண்டு இசைக்கும் தொழிலோரே. 1

யாழ்நரம்பின் இசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடியீரே
தாழ்தரு சடைமுடியீர் உமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை இலரே. 2

இளமதிநுதலியொடு இன்னம்பர் மேவிய
வள மதி வளர்சடையீரே
வள மதி வளர்சடையீர் உமை வாழ்த்துவார்
உள மதி மிக உடையோரே. 3

இடி குரல் இசை முரல் இன்னம்பர் மேவிய
கடி கமழ் சடைமுடியீரே
கடி கமழ் சடைமுடியீர் உம கழல் தொழும்
அடியவர் அருவினை இலரே. 4

இமையவர் தொழுது எழும் இன்னம்பர் மேவிய
உமை ஒருகூறு உடையீரே
உமை ஒருகூறு உடையீர் உமை உள்குவார்
அமைகிலர் ஆகிலர் அன்பே. 5

எண் அரும் புகழ்உடை இன்னம்பர் மேவிய
தண் அரும் சடைமுடியீரே
தண் அருஞ் சடைமுடியீர் உமைச் சார்பவர்
விண்ணவர் அடைவு உடையோரே. 6

எழில் திகழும்பொழில் இன்னம்பர் மேவிய
நிழல் திகழ் மேனியினீரே
நிழல் திகழ் மேனியினீர் உமை நினைபவர்
குழறிய கொடுவினை இலரே. 7

ஏத்தரும் புகழ்அணி இன்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவு செய்தீரே
தூர்த்தனைத் தொலைவு செய்தீர் உமைத் தொழுபவர்
கூர்த்த நல் குணம் உடையோரே. 8

இயல்உளோர் தொழுதுஎழும் இன்னம்பர் மேவிய
அயனும் மால் அறிவு அரியீரே
அயனும் மால் அறிவு அரியீர் உமது அடி தொழும்
இயல்உளார் மறுபிறப்பு இலரே. 9

ஏர் அமர் பொழில் அணி இன்னம்பர் மேவிய
தேர்அமண் சிதைவு செய்தீரே
தேர்அமண் சிதைவு செய்தீர் உமைச் சேர்பவர்
ஆர் துயர் அருவினை இலரே. 10

ஏடு அமர் பொழில் அணி இன்னம்பர் ஈசனை
நாடு அமர் ஞானசம்பந்தன்
நாடு அமர் ஞானசம்பந்தன நல்தமிழ்
பாடவல்லார் பழி இலரே. 11

திருச்சிற்றம்பலம்

116. திருப்புறம்பயம்

திருமுறை : 2/30 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : சாட்சிநாதர் இறைவியார் : கரும்படுசொல்லம்மை

மறம்பய மலைந்தவர் மதில்பரிசு அறுத்தனை
நிறம் பசுமை செம்மையொடு இசைந்து உனது நீர்மை
திறம்பயன் உறும்பொருள் தெரிந்து உணரும் நால்வர்க்கு
அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய். 1

விரித்தனை திருச்சடை அரித்து ஒழுகு வெள்ளம்
தரித்தனை அது அன்றியும் மிகப்பெரிய காலன்
எருத்து இற உதைத்தனை இலங்கு இழையொர் பாகம்
பொருத்துதல் கருத்தினை புறம்பயம் அமர்ந்தோய். 2

விரிந்தனை குவிந்தனை விழுங்கு உயிர் உமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையும் நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பயம் அமர்ந்தோய். 3

வளம்கெழு கடும்புனலொடும் சடை ஒடுங்கத்
துளங்கமர் இளம்பிறை சுமந்தது விளங்க
உளம்கொள வளைந்தவர் சுடும்சுடலை நீறு
புளம்கொள விளங்கினை புறம்பயம் அமர்ந்தோய். 4

பெரும்பிணி பிறப்பினொடு இறப்பிலைஓர் பாகம்
கரும்பொடு படும்சொலின் மடந்தையை மகிழ்ந்தோய்
சுரும்புஉண அரும்புஅவிழ் திருந்திஎழு கொன்றை
விரும்பினை புறம்பயம் அமர்ந்த இறை யோனே. 5

அனல்படு தடக்கை அவர் எத் தொழில்ரேனும்
நினைப்புடை மனத்தவர் வினைப்பகையும் நீயே
தனல்படு சுடர்ச்சடை தனிப் பிறையொடு ஒன்றப்
புனல்படு கிடக்கையை புறம்பயம் அமர்ந்தோய். 6

மறத்துறை மறுத்தவர் தவத்து அடியர் உள்ளம்
அறத்துறை ஒறுத்து உனது அருள் கிழமை பெற்றோர்
திறத்து உள திறத்தினை மதித்து அகல நின்றும்
புறத்து உள திறத்தினை புறம்பயம் அமர்ந்தோய். 7

இலங்கையர் இறைஞ்சுஇறை விலங்கலில் முழங்க
உலம்கெழு தடக்கைகள் அடர்த்திடலும் அஞ்சி
வலம்கொள எழுந்தவன் நலம்கவின அஞ்சு
புலங்களை விலங்கினை புறம்பயம் அமர்ந்தோய். 8

வடம் கெட நுடங்குண இடந்த இடை அல்லிக்
கிடந்தவன் இருந்தவன் அளந்து உணரல் ஆகார்
தொடர்ந்தவர் உடம்பொடு நிமிர்ந்து உடன் வணங்கப்
புள் தங்கு அருள்செய்து ஒன்றினை புறம்பயம் அமர்ந்தோய்.9

விடக்கு ஒருவர் நன்று என விடக்கு ஒருவர் தீது என
உடற்கு உடை களைந்தவர் உடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குஉரை படுத்து உமை ஓர் பாகம்
அடக்கினை புறம்பயம் அமர்ந்த உரவோனே. 10

கருங்கழி பொரும்திரை கரைக்குலவு முத்தம்
தரும் கழுமலத்து இறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்புஅவிழ் புறம்பயம் அமர்ந்த தமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்குஅற ஒருங்குவர் பிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்

117. திருவிசயமங்கை

திருமுறை : 3/17 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : விசயநாதர் இறைவியார் : மங்கைநாயகி

மருவமர் குழல்உமை பங்கர் வார்சடை
அரவமர் கொள்கைஎம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழில்அணி விசய மங்கையே. 1

கீதமுன் இசைதரக் கிளரும் வீணையர்
பூதமுன் இயல்புடைப் புனிதர் பொன்னகர்
கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதுஎழு விசய மங்கையே. 2

அக்கு அரவு அரையினர் அரிவை பாகமாத்
தொக்கநல் விடைஉடைச் சோதி தொல்நகர்
தக்க நல் வானவர் தலைவர் நாள்தொறும்
மிக்குஅவர் தொழுதுஎழு விசய மங்கையே. 3

தொடைமலி இதழியும் துன் எருக்கொடு
புடைமலி சடைமுடி அடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடிஅணல் விசய மங்கையே. 4

தோடுஅமர் காதினன் துதைந்த நீற்றினன்
ஏடுஅமர் கோதையோடு இனிது அமர்விடம்
காடுஅமர் மாகரி கதறப் போர்த்ததோர்
வேடம் அது உடை அணல் விசய மங்கையே. 5

மைப்புஉரை கண்உமை பங்கன் வண்டழல்
ஒப்புஉரை மேனிஎம் உடையவன் நகர்
அப்பொடு மலர்கொண்ட ங்கு இறைஞ்சி வானவர்
மெய்ப்பட அருள்புரி விசய மங்கையே. 6

இரும்பொனின் மலைவிலின் எரிசரத்தினால்
வரும் புரங்களைப் பொடி செய்த மைந்தன்ஊர்
சுரும்புஅமர் கொன்றையும் தூய மத்தமும்
விரும்பிய சடையணல் விசய மங்கையே. 7

உளம்கைய இருபதோடு ஒருபதும் கொடு ஆங்கு
அளந்தரும் வரையெடுத்து இடும் அரக்கனைத்
தளர்ந்துஉடல் நெரிதர அடர்த்த தன்மையன்
விளங்கிழை யொடும்புகும் விசய மங்கையே. 8

மண்ணினை உண்டவன் மலரின் மேல்உறை
அண்ணல்கள் தமக்குஅளப் பரிய அத்தன்ஊர்
தண்ணறும் சாந்தமும் பூவும் நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே. 9


கஞ்சியும் கவளம்உண் கவணர் கட்டுரை
நஞ்சினும் கொடியன நமர்கள் நேர்கிலார்
செஞ்சடை முடிஉடைத் தேவன் நன்னகர்
விஞ்சையர் தொழுதெழு விசய மங்கையே. 10

விண்ணவர் தொழுதுஎழு விசய மங்கையை
நண்ணிய புகலியுள் ஞான சம்பந்தன்
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச் சிவிகை முதலியவற்றைப் பெற்றுச் சீகாழிக்குத் திரும்பி எழுந்தருள்கின்ற பிள்ளையார் இடையில் திருப்பழுவூரை வழிபட்டுத் திருவிசய மங்கையை அடைந்தார். அது கோதனம் பூசித்து வழிபட்ட திருப்பதியாதலால் அங்கு இறைவனை வழிபட்டுப் பாடிய பிள்ளையார் தமது திருப்பதிகத்தில் இரண்டாந்திருப் பாட்டில் 'கோதனம் வழிபடக் குலவு நான்மறை வேதியர் தொழுதெழு விசய மங்கையே' என அச்செய்தியைச் சிறப்பித்தருளினார்.



118. திருவைகாவூர்

திருமுறை : 3/71 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : வில்வவனநாதர் இறைவியார் : வளைக்கை நாயகி

கோழை மிடறு ஆக கவி கோளும் இலவாக இசை கூடும்வகையால்
ஏழை அடியார் அவர்கள் யாவைசொன சொல் மகிழும் ஈசன் இடமாம்
தாழை இளநீர் முதியகாய் கமுகின் வீழ நிரை தாறு சிதறி
வாழை உதிர் வீழ் கனிகள் ஊறி வயல் சேறு செயும் வைகாவிலே. 1

அண்டம் உறுமேருவரை அங்கி கணை நாண் அரவு அது ஆகஎழிலார்
விண்டவர்தம் முப்புரம்எரித்த விகிர்தன் அவன் விரும்பும் இடமாம்
புண்டரிகமாமலர்கள் புக்கு விளையாடு வயல் சூழ் தடம் எலாம்
வண்டின் இசை பாட அழகார் குயில் மிழற்று பொழில் வைகாவிலே. 2

ஊனம் இலர் ஆகி உயர் நல் தவம் மெய் கற்று அவை உணர்ந்த அடியார்
ஞானம் மிக நின்று தொழ நாளும் அருள் செய்ய வலநாதன் இடமாம்
ஆனவயல் சூழ்தரும் மல் சூழி அருகே பொழில்கள்தோறும் அழகார்
வானமதியோடு மழை நீள்முகில்கள் வந்து அணவும் வைகாவிலே. 3

இன்ன உரு இன்னநிறம் என்றுஅறி வதேல்அரிது நீதிபலவும்
தன்ன உரு ஆம் என மிகுத்தவன் நீதியொடு தான் அமர்வு இடம்
முன்னை வினைபோய் வகையினால் முழுது உணர்ந்து முயல்கின்ற முனிவர்
மன்ன இரு போதும் மருவித் தொழுது சேரும்வயல் வைகாவிலே. 4

வேதமொடு வேள்வி பல ஆயின மிகுத்து விதி ஆறுசமயம்
ஓதியும் உணர்ந்தும் உள தேவர் தொழ நின்று அருள்செய் ஒருவன் இடமாம்
மேதகைய கேதகைகள் புன்னையொடு ஞாழல்அவை மிக்க அழகால்
மாதவி மணம்கமழ வண்டு பல பாடு பொழில் வைகாவிலே. 5

நஞ்சு அமுது செய்த மணிகண்டன் நமை ஆள்உடைய ஞானமுதல்வன்
செஞ்சடைஇடைப் புனல் கரந்த சிவலோகன் அமர்கின்ற இடமாம்
அம் சுடரொடு ஆறுபதம் ஏழின்இசை எண் அரிய வண்ணம் உளவாய்
மைஞ்சரொடு மாதர்பலரும் தொழுது சேரும் வயல் வைகாவிலே.6

நாளும்மிகு பாடலொடு ஞானம்மிகு நல்ல மலர் வல்ல வகையால்
தோளினொடு கைகுளிரவே தொழும் அவர்க்கு அருள்செய் சோதி இடமாம்
நீள வளர் சோலைதொறும் நாளிபல துன்று கனி நின்றது உதிர
வாளை குதிகொள்ள மது நாற மலர் விரியும் வயல் வைகாவிலே.7

கைஇருபதோடு மெய் கலங்கிட விலங்கலை எடுத்த கடியோன்
ஐ இருசிரங்களை ஒருங்குஉடன் நெரித்த அழகன் தன் இடமாம்
கையின் மலர்கொண்டு நலகாலையொடு மாலை கருதிப் பலவிதம்
வையகம்எலாம் மருவி நின்றுதொழுது ஏத்தும் எழில் வைகாவிலே.8

அந்தம் முதல் ஆதி பெருமான் அமரர்கோனை அயன் மாலும் இவர்கள்
எந்தைபெருமான் இறைவன் என்று தொழ நின்று அருள்செய் ஈசன் இடமாம்
சிந்தை செய்து பாடும் அடியார் பொடி மெய் பூசி எழு தொண்டர் அவர்கள்
வந்து பல சந்த மலர் முந்தி அணையும் பதி நல் வைகாவிலே. 9

ஈசன் எமை ஆளுடைய எந்தைபெருமான் இறைவன் என்று தனையே
பேசுதல்செயா அமணர் புத்தர் அவர் சித்தம் அணையா அவன் இடம்
தேசம்அதுஎலாம் மருவி நின்று பரவித் திகழ நின்ற புகழோன்
வாசமலர் ஆனபல தூவிஅணையும் பதிநல் வைகாவிலே. 10

முற்றும் நமை ஆள்உடைய முக்கண் முதல்வன் திரு வைகாவில் அதனைச்
செற்ற மலினார் சிரபுரத் தலைவன் ஞானசம்பந்தன் உரைசெய்
உற்ற தமிழ்மாலை ஈர் ஐந்தும் இவை வல்லவர் உருத்திரர் எனப்
பெற்று அமர லோகம் மிக வாழ்வர் பிரியார் அவர் பெரும் புகழொடே.11

திருச்சிற்றம்பலம்

119. திருவடகுரங்காடுதுறை

திருமுறை : 3/91 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : குலைவணங்குநாதர் இறைவியார் : அழகுசடைமுடிஅம்மை

கோங்கமே குரவமே கொழு மலர்ப் புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரவி எங்கும்
ஓங்கு மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடம் என விரும்பினாரே. 1

மந்தமாய் இழி மதக்களிற்று இள மருப்பொடு பொருப்பின் நல்ல
சந்தமார் அகிலொடு சாதியின் பலங்களும் தகைய மோதி
உந்து மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
எந்தையார் இணைஅடி இமையவர் தொழுது எழும் இயல்பினாரே. 2

முத்து மா மணியொடு முழை வளர் ஆரமும் முகந்து நுந்தி
எத்து மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
மத்தமாமலரொடு மதிபொதி சடைமுடி அடிகள் தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணம்அன்றே.3

கறியும் மா மிளகொடு கதலியின் ப்லங்களும் கலந்து நுந்தி
எறியும் மா காவிரி வடகரை அடைகுரங்காடு துறை
மறியுலாம் கையினர் மலர்அடி தொழுது எழ மருவும்உள்ளக்
குறியினார் அவர்மிகக் கூடுவார் நீடுவான் உலகின்ஊடே. 4

கோடிடைச் சொரிந்ததேன் அதனொடும் கொண்டல் வாய்விண்டமுன்நீர்
காடிடைப் பீலியும் கடறுஉடைப் பண்டமும் கலந்து நுந்தி
ஓடிடைக் காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
பீடிடைச் சடைமுடி அடிகளார் இடம் எனப் பேணினாரே. 5

கோல மா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார் திருந்து மாங்கனிகள் உந்தி
ஆலும் மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
நீலமாமணிமிடற்று அடிகளை நினைய வல்வினைகள் வீடே.(6–7)

நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னுகோயில்
ஏலமோடு இலைஇலவங்கமே இஞ்சியே மஞ்சள்உந்தி
ஆலியா வருபுனல் வடகரை அடை குரங்காடுதுறையே.8

பொரும் திறல் பெருங்கைமா உரித்து உமை அஞ்சவே ஒருங்கி நோக்கிப்
பெருந் திறத்த நங்கனை அநங்கமா விழித்ததும் பெருமைபோலும்
வருந்திறல் காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
அருந்திறத்து இருவரை அல்லல் கண்டு ஓங்கிய அடிகளாரே.9

கட்ட மண் தேரரும் கடுக்கள் தின் கழுக்களும் கசிவு ஒன்று இல்லாப்
பிட்டர்தம் அற உரை கொள்ளலும் பெருவரைப் பண்டம் உந்தி
எட்டும் மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறைச்
சிட்டனார் அடிதொழச் சிவகதி பெறுவது திண்ணமாமே. 10

தாழ் இளங் காவிரி வடகரை அடை குரங்காடுதுறைப்
போழ்இளமதி பொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியான் அருமறை ஞானசம்பந்தன கருது பாடல்
கோழையா அழைப்பினும் கூடுவார் நீடுவான்உலகின் ஊடே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஇன்னம்பரை வழிபட்டிறைஞ்சிய பிள்ளையார் திருவடகுரங்காடு துறையை அடைந்து திருக்கோயிலிற் சென்று இறைவனைத் துதித்து எடுத்த இத்திருப்பதிகத்தில் ஆறாவது எட்டாவது திருப்பாட்டுக்களில் வாலியார் வழிபட்ட செய்தியைச் சிறப்பித்துப் பாடி அருளினார்.

120. திருப்பழனம்

திருமுறை : 1/67 பண் : தக்கேசி இராகம் : காம்போதி
இறைவர் : ஆபத்சகாயேசுவரர் இறைவியார் : பெரியநாயகி

வேதம் ஓதி வெண்நூல் பூண்டு வெள்ளைஎருது ஏறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரி தோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே. 1

கண்மேல் கண்ணும் சடைமேல் பிறையும் உடையார் காலனைப்
புண் ஆர் உதிரம் எதிர் ஆறு ஓடப் பொன்றப் புறம்தாளால்
எண்ணாது உதைத்த எந்தைபெருமான் இமவான்மகளோடும்
பண் ஆர் களி வண்டு அறை பூஞ்சோலைப் பழன நகராரே. 2

பிறையும் புனலும் சடைமேல்உடையார் பறைபோல் விழி கண் பேய்
உறையும் மயானம் இடமா உடையார் உலகர் தலைமகன்
அறையும் மலர்கொண்டு அடியார் பரவி ஆடல்பாடல்செய்
பறையும் சங்கும் பலியும் ஓவாப் பழனநகராரே. 3

உரம் மன் உயர்கோட்டு உலறு கூகை அலறு மயானத்தில்
இரவில் பூதம் பாட ஆடி எழிலார் அலர்மேலைப்
பிரமன் தலையின் நறவம் ஏற்ற பெம்மான் எமைஆளும்
பரமன் பகவன் பரமேச்சுவரன் பழனநகராரே. 4

குல வெஞ்சிலையால் மதில்மூன்று எரித்த கொல் ஏறு உடை அண்ணல்
கலவமயிலும் குயிலும் பயிலும் கடல் போல் காவேரி
நல மஞ்சு உடைய நறு மாங்கனிகள் குதிகொண்டு எதிர் உந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும் பழனநகராரே. 5

வீளைக் குரலும் விளி சங்கு ஒலியும் விழவின் ஒலி ஓவா
மூளைத்தலை கொண்டு அடியார் ஏத்தப் பொடியா மதில் எய்தார்
ஈளைப் படுகில் இலை ஆர் தெங்கின் குலை ஆர் வாழையின்
பாளைக்கமுகின் பழம் வீழ் சோலைப் பழன நகராரே. 6

பொய்யா மொழியார் முறையால் ஏந்திப் புகழ்வார் திருமேனி
செய்யார் கரிய மிடற்றார் வெண்நூல் சேர்ந்த அகலத்தார்
கை ஆடலினார் புனலால் மல்கு சடைமேல் பிறையோடும்
பைஆடுஅரவம் உடனேவைத்தார் பழனநகராரே. 7

மஞ்சு ஓங்கு உயரம் உடையான் மலையை மாறாய் எடுத்தான் தோள்
அஞ்சோடுஅஞ்சும் ஆறும் நான்கும் அடர ஊன்றினார்
நஞ்சார் சுடலைப் பொடி நீறு அணிந்த நம்பான் வம்பு ஆரும்
பைந்தாமரைகள் கழனி சூழ்ந்த பழனநகராரே. 8

கடி ஆர் கொன்றைச் சுரும்பின் மாலை கமழ் புன்சடையார் விண்
முடியாப் படி மூஅடியால் உலகம் முழுதும் தாவிய
நெடியான் நீள் தாமரைமேல் அயனும் நேடிக் காணாத
படியார் பொடிஆடு அகலம் உடையார் பழனநகராரே. 9

கண்தான் கழுவாமுன்னே ஓடிக் கலவைக்கஞ்சியை
உண்டு ஆங்கு அவர்கள் உரைக்கும் சிறுசொல் ஓரார் பாராட்ட
வண் தாமரையின் மலர்மேல் நறவம் அதுவாய் மிக உண்டு
பண்டான் கெழும வண்டு யாழ்செய்யும் பழனநகராரே. 10

வேய் முத்து ஓங்கி விரை முன் பரக்கும் வேணுபுரம் தன்னுள்
நா உய்த்தனைய திறலான் மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கு இனிய பாடல் பயிலும் பெருமான் பழனத்தை
வாயில் பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

121. திருஐயாறு

திருமுறை : 1/36 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : ஐயாறப்பர் இறைவியார் : அறம் வளர்த்த நாயகி

கலையார் மதியோடு உரநீரும்
நிலையார் சடையார் இடமாகும்
மலை ஆரமும் மா மணி சந்தோடு
அலையார் புனல் சேரும் ஐயாறே. 1

மதி ஒன்றிய கொன்றைவடத்தன்
மதி ஒன்ற உதைத்தவர் வாழ்வு
மதியின்னொடு சேர் கொடி மாடம்
மதியம் பயில்கின்ற ஐயாறே. 2

கொக்கின் இறகின்னொடு வன்னி
புக்க சடையார்க்கு இடமாகும்
திக்கின் இசை தேவர் வணங்கும்
அக்கின் அரையாரது ஐயாறே. 3

சிறை கொண்ட புரம் அவை சிந்தக்
கறை கொண்டவர் காதல்செய் கோயில்
மறை கொண்ட நல்வானவர் தம்மில்
அறையும் ஒலிசேரும் ஐயாறே. 4

உமையாள் ஒருபாகம் அதுஆகச்
சமைவார் அவர் சார்வு இடமாகும்
அமையார் உடல் சோர் தரத்தம்
அமையா வரும் அம் தண் ஐயாறே. 5

தலையின்தொடை மாலை அணிந்து
கலை கொண்டது ஓர் கையினர் சேர்வாம்
நிலைகொண்ட மனத்தவர் நித்தம்
மலர் கொண்டு வணங்கும் ஐயாறே. 6

வரம் ஒன்றிய மா மலரோன்தன்
சிரம் ஒன்றை அறுத்தவர் சேர்வாம்
வரை நின்று இழி வார் தரு பொன்னி
அரவம்கொடு சேரும் ஐயாறே. 7

வரை ஒன்றது எடுத்த அரக்கன்
சிரம் மங்க நெரித்தவர் சேர்வாம்
விரையின் மலர் மேதகு பொன்னித்
திரை தன்னொடு சேரும் ஐயாறே. 8

சங்கக் கயனும் அறியாமைப்
பொங்கும் சுடர் ஆனவர் கோயில்
கொங்கில் பொலியும் புனல் கொண்டு
அங்கிக்கு எதிர் காட்டும் ஐயாறே. 9

துவர் ஆடையர் தோல் உடையார்கள்
கவர் வாய்மொழி காதல் செய்யாதே
தவராசர்கள் தாமரையானோடு
அவர்தாம் அணை அம் தண் ஐயாறே. 10

கலை ஆர் கலிக்காழியர்மன்னன்
நலம் ஆர் தரு ஞானசம்பந்தன்
அலை ஆர் புனல் சூழும் ஐயாற்றைச்
சொலும் மாலை வல்லார் துயர் வீடே. 11

திருச்சிற்றம்பலம்

122. திருஐயாறு

திருமுறை : 1/120 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

பணிந்தவர் அருவினை பற்று அறுத்து அருள்செயத்
துணிந்தவன் தோலொடு நூல் துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேர் எழில் ஆமை கொண்டு
அணிந்தவன் வள நகர் அந்தண் ஐயாறே. 1

கீர்த்தி மிக்கவன் நகர் கிளர் ஒளிஉடன அடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரிஉரி புலிஅதள் அரவு அரை
ஆர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 2

வரிந்த வெஞ்சிலை பிடித்து அவுணர்தம் வள நகர்
எரிந்து அற எய்தவன் எழில் திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரம்அது இமையவர் குறைகொள
அரிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 3

வாய்ந்த வல்அவுணர் தம் வளநகர் எரிஇடை
மாய்ந்து அற எய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்து எழு சடையினன் தொன்மறை ஆறங்கம்
ஆய்ந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 4

வான் அமர் மதி புல்கு சடைஇடை அரவொடு
தேன் அமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மான் அன மென் விழி மங்கை ஓர் பாகமும்
ஆனவன் வளநகர் அந்தண் ஐயாறே. 5

முன்பனை முனிவரோடு அமரர்கள் தொழுது எழும்
இன்பனை இணை இல இறைவனை எழில் திகழ்
என் பொனை ஏதம்இல் வேதியர் தாம் தொழும்
அன்பன வளநகர் அந்தண் ஐயாறே. 6

வன்திறல் அவுணர் தம் வளநகர் எரிஇடை
வெந்து அற எய்தவன் விளங்கிய மார்பினில்
பந்துஅமர்மெல்விரல் பாகம்அது ஆகி தன்
அந்தம் இல் வள நகர் அந்தண் ஐயாறே. 7

விடைத்த வல்அரக்கன் நல் வெற்பினை எடுத்தலும்
அடித்தலத்தால்இறை ஊன்றி மற்று அவனது
முடித்தலை தோள்அவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே. 8

விண்ணவர் தம்மொடு வெங்கதிரோன் நல்
எண்ணிலிதேவர்கள் இந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனும் காண்பு அரிது ஆகிய
அண்ணல் தன் வளநகர் அந்தண் ஐயாறே. 9

மருளுடை மனத்து வன் சமணர்கள் மாசறா
இருளுடை இணைத்துவர்ப் போர்வையினார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை அடிகள் தம் அந்தண் ஐயாறே. 10

நலம் மலி ஞானசம்பந்தனது இன்தமிழ்
அலை மலி புனல் மல்கும் அந்தண் ஐயாற்றினைக்
கலை மலி தமிழ்இவை கற்று வல்லார் மிக
நலம் மலி புகழ் மிகும் நன்மையர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

123. திருஐயாறு

திருமுறை : 1/130 பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

இறைவர் : செம்பொற்சோதி நாதர் இறைவியார் : அறம் வளர்த்த நாயகி

புலன்ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
அறிவு அழிந்திட்டு ஐம் மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடம் ஆட
முழவுஅதிர மழைஎன்று அஞ்சித்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில் பார்க்கும் திருவையாறே. 1

விடல் ஏறு படநாகம் அரைக்கு அசைத்து
வெற்பு அரையன் பாவையோடும்
அடல் ஏறுஒன்றுஅது ஏறி அம் சொலீர்
பலி என்னும் அடிகள் கோயில்
கடல் ஏறித் திரை மோதிக் காவிரியின் உடன்
வந்து கங்குல் வைகித்
திடல் ஏறிச் சுரிசங்கம் செழு முத்து அங்கு
ஈன்று அலைக்கும் திருவையாறே. 2

கங்காளர் கயிலாயமலையாளர்
கானப்பேராளர் மங்கை
பங்காளர் திரிசூலப்படையாளர்
விடையாளர் பயிலும் கோயில்
கொங்குஆள் அப் பொழில் நுழைந்து கூர்வாயால்
இறகு உலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கால் நல் வெண்குருகு பைங்கானல்
இரை தேரும் திருவையாறே. 3

ஊன் பாயும் உடைதலை கொண்டு ஊர்ஊரின்
பலிக்கு உழல்வார் உமையாள்பங்கர்
தான் பாயும் விடை ஏறும் சங்கரனார்
தழல்உருவர் தங்கும் கோயில்
மான் பாய வயல்அருகே மரம் ஏறி
மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன் பாய மீன் பாயச் செழுங்கமலமொட்டு
அலரும் திருவையாறே. 4

நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்எருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கு அணிந்த
தத்துவனார் தங்கும் கோயில்
கார் ஓடி விசும்பு அளந்து கடி நாறும்
பொழில் அணைந்த கமழ் தார் வீதித்
தேரோடும் அரங்கு ஏறிச் சேயிழையார்
நடம் பயிலும்திருவையாறே. 5

வேந்து ஆகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறி காட்டும் விகிர்தன் ஆகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கு அணிந்த
புண்ணியனார் நண்ணும் கோயில்
காந்தாரம் இசைஅமைத்துக் காரிகையார்
பண் பாடக் கவின்ஆர் வீதித்
தேம்தாம் என்று அரங்கு ஏறிச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே. 6

நின்று உலாம் நெடுவிசும்பில் நெருக்கி வரு
புரம்மூன்றும் நீள்வாய் அம்பு
சென்று உலாம்படி தொட்ட சிலையாளி
மலையாளி சேரும் கோயில்
குன்றுஎலாம் குயில்கூவக் கொழும் பிரசமலர்
பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடி வருடச் செழுங் கரும்பு
கண்வளரும் திருவையாறே. 7

அஞ்சாதே கயிலாயமலை எடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சு ஆடு தோள் நெரிய அடர்த்து அவனுக்கு
அருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாயல் இளந் தெங்கின் பழம் வீழ
இள மேதி இரிந்து அங்கு ஓடிச்
செஞ்சாலிக் கதிர்உழக்கிச் செழுங் கமல
வயல் படியும் திருவையாறே. 8

மேல் ஓடி விசும்பு அணவி வியன்நிலத்தை
மிக அகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகை நின்றான் மன்னும் கோயில்
கோல் ஓடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தில் இன்று
சேல் ஓடச் சிலை ஆடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே. 9

குண்டாடு குற்றுஉடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணம் ஒன்று இல்லா
மிண்டாடும் மிண்டர் உரை கேளாதே
ஆள்ஆமின் மேவித் தொண்டீர்
எண்தோளர் முக்கண்ணர் எம்ஈசர்
இறைவர் இனிது அமரும் கோயில்
செண்டு ஆடு புனல் பொன்னிச் செழு மணிகள்
வந்து அலைக்கும் திருவையாறே. 10

அன்னம் மலி பொழில் புடை சூழ் ஐயாற்று எம்பெருமானை
அந்தண் காழி
மன்னிய சீர் மறைநாவன் வளர் ஞானசம்பந்தன்
மருவு பாடல்
இன் இசையால் இவைபத்தும் இசையுங்கால்
ஈசன்அடி ஏத்துவார்கள்
தன் இசையோடு அமருலகில் தவநெறி சென்று
எய்துவார் தாழாது அன்றே. 11

திருச்சிற்றம்பலம்

124. திருஐயாறு

திருமுறை : 2/6 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : செம்பொற்சோதிநாதர் இறைவியார் : அறம்வளர்த்தநாயகி

கோடல் கோங்கம் குளிர் கூவிளமாலை குலாயசீர்
ஒடு கங்கை ஒளிவெண்பிறை சூடும் ஒருவனார்
பாடல் வீணை முழவம் குழல் மொந்தை பண் ஆகவே
ஆடும்ஆறு வல்லானும் ஐயாறு உடை ஐயனே. 1

தன்மை யாரும் அறிவார் இல்லை தாம் பிறர் எள்கவே
பின்னும் முன்னும் சிலபேய்க்கணம் சூழத் திரிதர்வர்
துன்ன ஆடை உடுப்பர் சுடலைப் பொடிப் பூசுவர்
அன்னம் ஆலும் துறையானும் ஐயாறு உடை ஐயனே. 2

கூறு பெண் உடை கோவணம் உண்பதும் வெண்தலை
மாறில் ஆரும் கொள்வார் இல்லை மார்பில் அணிகலம்
ஏறும் ஏறித் திரிவர் இமையோர் தொழுது ஏத்தவே
ஆறும் நான்கும் சொன்னானும் ஐயாறு உடை ஐயனே. 3

பண்ணின் நல்ல மொழியார் பவளத்துவர் வாயினார்
எண்ணின் நல்ல குணத்தார்இணை வேல்வென்ற கண்ணினார்
வண்ணம் பாடி வலி பாடித் தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டு உகந்தானும் ஐயாறுஉடை ஐயனே. 4

வேனல் ஆனை வெருவ உரி போர்த்து உமை அஞ்சவே
வானை ஊடு அறுக்கும் மதி சூடிய மைந்தனார்
தேன் நெய் பால் தயிர் தெங்குஇளநீர் கரும்பின் தெளி
ஆனஞ்சு ஆடு முடியானும் ஐயாறு உடை ஐயனே. 5

எங்கும்ஆகி நின்றானும் இயல்பு அறியப்படா
மங்கை பாகம்கொண்டானும் மதி சூடு மைந்தனும்
பங்கம் இல் பதினெட்டொடு நான்குக்கு உணர்வும்ஆய்
அங்கம்ஆறும் சொன்னானும் ஐயாறு உடை ஐயனே. 6

ஓதி யாரும் அறிவார் இல்லை ஓதி உலகெலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுள் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடு எரி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயாறுஉடை ஐயனே. 7

குரவ நாள்மலர் கொண்டு அடியார் வழிபாடுசெய்
விரவு நீறு அணிவார் சில தொண்டர் வியப்பவே
பரவி நாள்தொறும் பாட நம் பாவம் பறைதலால்
அரவம் ஆர்த்து உகந்தானும் ஐயாறு உடை ஐயனே. 8

உரை செய் தொல் வழி செய்து அறியா இலங்கைக்கு மன்
வரை செய் தோள் அடர்த்தும் மதி சூடிய மைந்தனார்
கரை செய் காவிரியின் வடபால் அது காதலான்
அரை செய் மேகலையானும் ஐயாறு உடை ஐயனே. 9

மாலும் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்
காலம் காம்பு வயிரம் கடிகையன் பொன்கழல்
கோலமாய்க் கொழுந்து ஈன்று பவளம் திரண்டதோர்
ஆல நீழல் உளானும் ஐயாறு உடை ஐயனே. 10

கையில் உண்டு உழல்வாரும் கமழ்துவர் ஆடையால்
மெய்யைப் போர்த்து உழல்வாரும் உரைப்பன மெய் அல
மை கொள் கண்டத்து எண்தோள் முக்கணான் கழல் வாழ்த்தவே
ஐயம் தேர்ந்து அளிப்பானும் ஐயாறு உடை ஐயனே. 11

பலி திரிந்து உழல் பண்டங்கன் மேய ஐயாற்றினைக்
கலி கடிந்த கையான் கடல்காழியர் காவலன்
ஒலி கொள் சம்பந்தன் ஒண்தமிழ்பத்தும் வல்லார்கள் போய்
மலி கொள் விண்ணிடை மன்னிய சீர் பெறுவார்களே.12

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

சமண்டீர்த்துச் சைவம் வளர்த்த பிள்ளையார் திருவையாற்றை அடைந்து சிவ பெருமானை வணங்கும் போது திருஅம்பலத்தாடுந் திருக்கூத்தின் தன்மை அவருள்ளத்திற் தோன்றிய பெற்றிமையால் 'கோடல் கோங்கம்' என்று எடுத்த பதிகத்தின் முதற்றிருப்பாட்டில் 'ஆடுமாறு வல்லானுமை யாறுடை ய்ண்ணலே' என்று அத்திருக்கூத்தைக் கூறின் கண்களின் நீர்பொழிந்திழியுமாறு பேரானந்தங் கொண்டு கூத்தாடி யருளினார்.

125. திருஐயாறு

திருமுறை : 2/32 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : ஐயாறப்பர் இறைவியார் : அறம்வளர்த்தநாயகி

திருத் திகழ் மலைச்சிறுமியோடு மி்கு தேசர்
உருத் திகழ் எழில் கயிலைவெற்பில் உறைதற்கே
விருப்பு உடைய அற்புதர் இருக்கும் இடம் ஏர் ஆர்
மருத் திகழ் பொழில் குலவு வண் திரு ஐயாறே. 1

கந்து அமர உந்து புகை உந்தல் இல் விளக்கேர்
இந்திரன் உணர்ந்து பணி எந்தை இடம் எங்கும்
சந்தம் மலியும் தரு மிடைந்த பொழில் சார
வந்த வளி நந்து அணவு வண் திரு ஐயாறே. 2

கட்டு வடம்எட்டும் உறு வட்டமுழவத்தில்
கொட்டு கரம் இட்ட ஒலி தட்டும் வகை நந்திக்கு
இட்டம் மிக நட்டம்அவை இட்டவர் இடஞ்சீர்
வட்டமதிலுள் திகழும் வண் திரு ஐயாறே. 3

நண்ணி ஓர் வடத்தின் நிழல் நால்வர்முனிவர்க்கு அன்று
எண் இலிமறைப்பொருள் விரித்தவர் இடம் சீர்த்
தண்ணின் மலி சந்து அகிலொடு உந்தி வரு பொன்னி
மண்ணின் மிசை வந்து அணவு வண் திரு ஐயாறே. 4

வென்றி மிகு தாருகனது ஆர்உயிர் மடங்கக்
கன்றி வரு கோபம் மிகு காளி கதம் ஓவ
நின்று நடம்ஆடி இடம் நீடு மலர்மேலால்
மன்றம் மலியும் பொழில் கொள் வண் திரு ஐயாறே. 5

பூதமொடு பேய்கள்பல பாடநடம் ஆடிப்
பாத முதல் பைஅரவு கொண்டு அணி பெறுத்திக்
கோதையர் இடும் பலி கொளும் பரன் இடம் பூ
மாதவி மணம் கமழும் வண் திரு ஐயாறே. 6

துன்னு குழல் மங்கை உமைநங்கை சுளிவு எய்தப்
பின் ஒரு தவம் செய்து உழல் பிஞ்ஞகனும் அங்கே
என்ன சதி என்று உரைசெய் அங்கணன் இடம் சீர்
மன்னு கொடையாளர் பயில் வண் திரு ஐயாறே. 7

இரக்கம் இல் குணத்தொடு உலகு எங்கும் நலி வெம்போர்
அரக்கன் முடிபத்து அலை புயத்தொடும் அடங்கத்
துரக்க விரலிற் சிறிது வைத்தவர் இடம் சீர்
வரக் கருணையாளர் பயில் வண் திரு ஐயாறே. 8

பருத்து உரு அது ஆகி விண் அடைந்தவன் ஓர் பன்றிப்
பெருத்த உருஅது ஆய் உலகு இடந்தவனும் என்றும்
கருத்து உரு ஒணா வகை நிமிர்ந்தவன் இடம்கார்
வருத்து வகை நீர் கொள் பொழில் வண் திரு ஐயாறே.9

பாக்கியம்அது ஒன்றும் இல் சமண்பதகர் புத்தர்
சாக்கியர்கள் என்று உடல் பொதிந்து திரிவார்தாம்
நோக்க அரிய தத்துவன் இடம் படியின்மேலால்
மாக்கம் உற நீடு பொழில் வண் திரு ஐயாறே. 10

வாசம் மலியும் பொழில் கொள் வண் திரு ஐயாற்றுள்
ஈசனை எழில் புகலி மன்னவன் மெய்ஞ்ஞானப்
பூசுரன் உரைத்த தமிழ் பத்தும்இவை வல்லார்
நேசம் மலி பத்தர்அவர் நின்மலன் அடிக்கே. 11

திருச்சிற்றம்பலம்

126. திருநெய்த்தானம்

திருமுறை : 1/15 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : நெய்யாடியப்பர் இறைவியார் : இளமங்கை அம்மை, வாலாம்பிகை அம்மை

மை ஆடிய கண்டன் மலைமகள் பாகமது உடையான்
கை ஆடிய கேடுஇல் கரி உரி மூடிய ஒருவன்
செய் ஆடிய குவளைம் மலர் நயனத்து அவளோடும்
நெய் ஆடிய பெருமான் இடம் நெய்த்தானம் எனீரே.1

பறையும் பழிபாவம் படு துயரம் பல தீரும்
பிறையும் புனல் அரவும் படு சடை எம்பெருமான் ஊர்
அறையும் புனல் வரு காவிரி அலை சேர் வடகரைமேல்
நிறையும் புனை மடவார் பயில் நெய்த்தானம் எனீரே. 2

பேய்ஆயின பாடப் பெருநடம்ஆடிய பெருமான்
வேய் ஆயின தோளிக்கு ஒருபாகம் மிக உடையான்
தாய் ஆகிய உலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நே ஆடிய பெருமான் இடம் நெய்த்தானம் எனீரே. 3

சுடுநீறு அணி அண்ணல் சுடர் சூலம் அனல் ஏந்தி
நடுநள் இருள் நடம்ஆடிய நம்பன் உறை இடமாம்
கடுவாள் இள அரவு ஆடு உமிழ் கடல்நஞ்சம்அது உண்டான்
நெடுவாளைகள் குதிகொள் உயர் நெய்த்தானம் எனீரே.4

நுகர் ஆரமொடு ஏலம் மணி செம்பொன் நுரை உந்திப்
பகரா வருபுனல் காவிரி பரவிப்பணிந்து ஏத்தும்
நிகரான் மணல் இடு தண் கரை நிகழ்வாய நெய்த்தான
நகரான் அடி ஏத்த நமை நடலை அடையாவே. 5

விடையார் கொடி உடையவ் அணல் வீந்தார் வெளை எலும்பும்
உடையார் நறுமாலை சடை உடையார் அவர் மேய
புடையே புனல் பாயும் வயல்பொழில் சூழ்ந்த நெய்த்தானம்
அடையாதவர் என்றும்அமர் உலகம் அடையாரே. 6

நிழலார் வயல் கமழ்சோலைகள் நிறைகின்ற நெய்த்தானத்து
அழல்ஆனவன் அனல் அங்கையில் ஏந்தி அழகாய
கழலான் அடிநாளும் கழலாதே விடல் இன்றித்
தொழலார் அவர் நாளும் துயர் இன்றித் தொழுவாரே. 7

அறையார் கடல் இலங்கைக்கு இறை அணிசேர் கயிலாயம்
இறை ஆரமுன் எடுத்தான் இருபது தோள்இற ஊன்றி
நிறையார் புனல் நெய்த்தானன் நல் நிகழ்சேவடி பரவக்
கறையார் கதிர்வாள் ஈந்தவர் கழலேத்துதல் கதியே. 8

கோலம் முடி நெடுமாலொடு கொய் தாமரையானும்
சீலம் அறிவு அரிது ஆய் ஒளி திகழ்வாய நெய்த்தானம்
காலம்பெற மலர்நீர்அவை தூவித்தொழுது ஏத்தும்
ஞாலம் புகழ் அடியார் உடல் உறு நோய் நலியாவே.9

மத்தம் மலி சித்தத்து இறைமதி இல்லவர் சமணர்
புத்தர்அவர் சொன்னம் மொழி பொருளா நினையேன்மின்
நித்தம் பயில் நிமலன் உறை நெய்த்தானமது ஏத்தும்
சித்தம் உடை அடியார் உடல் செறுநோய் அடையாவே. 10

தலம் மல்கிய புனல் காழியுள் தமிழ்ஞானசம்பந்தன்
நிலம் மல்கிய புகழான் மிகு நெய்த்தானனை நிகரில்
பலம் மல்கிய பாடல் இவைபத்தும் மிக வல்லார்
சில மல்கிய செல்வன் அடிசேர்வர் சிவ கதியே. 11

திருச்சிற்றம்பலம்

127. திருப்பெரும்புலியூர்

திருமுறை : 2/67 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : பிரியாநாதர், வியாக்கிரபுரீசுவரர் இறைவியார் : சௌந்தர நாயகி

மண்ணும் ஓர் பாகம் உடையார் மாலும் ஓர் பாகம் உடையார்
விண்ணும் ஓர் பாகம் உடையார் வேதம் உடைய விமலர்
கண்ணும் ஓர் பாகம் உடையார் கங்கை சடையில் கரந்தார்
பெண்ணும் ஓர் பாகம் உடையார் பெரும்புலியூர் பிரியாரே.1

துன்னு கடல் பவளம் சேர் தூயன நீண்ட திண்தோள்கள்
மின்னு சுடர்க்கொடி போலும் மேனியினாள் ஒரு கங்கைக்
கன்னிகளின் புனையோடு கலைமதி மாலை கலந்த
பின்னுசடைப் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே. 2

கள்ளம் மதித்த கபாலம் கைதனிலே மிக ஏந்தித்
துள்ள மிதித்துநின்று ஆடும் தொழிலர் எழில் மிகு செல்வர்
வெள்ளம் நகுதலைமாலை விரிசடை மேல்மிளிர்கின்ற
பிள்ளைமதிப் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே. 3

ஆடல் இலையம் உடையார் அருமறை தாங்கிஆறு அங்கம்
பாடல் இலயம் உடையார் பன்மை ஒருமை செய்த அஞ்சும்
ஊடலில் ஐயம் உடையார் யோகு எனும் பேரொளி தாங்கிப்
பீடு அல் இலயம் உடையார் பெரும்புலியூர் பிரியாரே. 4

தோடு உடையார் குழைக்காதில் சுடுபொடியார் அனல் ஆடக்
காடு உடையார் எரி வீசும் கைஉடையார் கடல் சூழ்ந்த
நாடு உடையார் பொருள் இன்பம் நல்லவை நாளும் நயந்த
பீடு உடையார் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே. 5

கற்றது உறப் பணி செய்து காண்டும் என்பார் அவர் தங்கள்
முற்று இது அறிதும் என்பார்கள் முதலியர் வேதபுராணர்
மற்று இது அறிதும் என்பார்கள் மனத்துஇடையார் பணி செய்யப்
பெற்றி பெரிதும் உகப்பார் பெரும்புலியூர் பிரியாரே. 6

மறை உடையார் ஒலி பாடல் மாமலர்ச் சேவடி சேர்வார்
குறை உடையார் குறை தீர்ப்பார் குழகர் அழகர் நம் செல்வர்
கறை உடையார் திகழ் கண்டம் கங்கை சடையில் கரந்தார்
பிறை உடையார் சென்னி தன்மேல் பெரும்புலியூர் பிரியாரே. 7

உறவியும் இன்புறு சீரும் ஓங்குதல் வீடு எளிதாகித்
துறவியும் கூட்டமும் காட்டித் துன்பமும் இன்பமும் தோற்றி
மறவிஎன்சிந்தனை மாற்றி வாழ வல்லார் தமக்கு என்றும்
பிறவி அறுக்கும் பிரானார் பெரும்புலியூர் பிரியாரே. 8

சீர்உடையார் அடியார்கள் சேடர் ஒப்பார் சடை சேரும்
நீர்உடையார் பொடிப் பூசு நினைப்பு உடையார் விரி கொன்றைத்
தார் உடையார் விடை ஊர்வார் தலைவர் ஐந்நூற்றுப் பத்தாய
பேர் உடையார் பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே. 9

உரிமைஉடைய அடியார்கள் உள்ளுற உள்க வல்லார்கட்கு
அருமைஉடையன காட்டி அருள்செயும் ஆதி முதல்வர்
கருமை உடை நெடுமாலும் கடிமலர் அண்ணலும் காணாப்
பெருமை உடைப்பெருமானார் பெரும்புலியூர் பிரியாரே.10

பிறை வளரும்முடிச் சென்னிப் பெரும்புலியூர்ப் பெருமானை
நறை வளரும்பொழில் காழி நல்தமிழ் ஞானசம்பந்தன்
மறை வளரும் தமிழ்மாலை வல்லவர் தம்துயர் நீங்கி
நிறை வளர் நெஞ்சினர் ஆகி நீடுலகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

128. திருமழபாடி

திருமுறை : 2/9 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : வயிரத்தூண் நாதர் இறைவியார் : அழகாம்பிகை

களையும் வல்வினை அஞ்சல் நெஞ்சே கருதார் புரம்
உளையும் பூசல் செய்தான் உயர்மால் வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கி எய்தான் மதுத் தும்பிவண்டு
அளையும் கொன்றையம்தார் மழபாடியுள் அண்ணலே. 1

காச்சிலாத பொன்னோக்கும் கன வயிரத்திரள்
ஆச்சிலாத பளிங்கினன் அஞ்சும் முன் ஆடினான்
பேச்சினால் உமக்கு ஆவதென் பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகை சூழ் மழபாடியை வாழ்த்துமே. 2

உரம் கெடுப்பவன் உம்பர்களாய் அவர் தங்களைப்
பரம் கெடுப்பவன் நஞ்சை உண்டு பகலோன்தனை
முரண் கெடுப்பவன் முப்புரம் தீயெழச் செற்றுமுன்
வரம் கொடுப்பவன் மாமழ பாடியுள் வள்ளலே. 3

பள்ளமார் சடையில் புடையே அடையப்புனல்
வெள்ளம் ஆதரித்தான் விடை ஏறிய வேதியன்
வள்ளல் மா மழபாடியுள் மேய மருந்தினை
உள்ளம் ஆதரிமின் வினையாயின ஓயவே. 4

தேன் உலாம் மலர் கொண்டு மெய்த் தேவர்கள் சித்தர்கள்
பால்நெய்அஞ்சு உடன்ஆட்ட முன் ஆடிய பால்வணன்
வான நாடர்கள் கைதொழு மா மழபாடிஎம்
கோனை நாள்தொறும் கும்பிடவே குறி கூடுமே. 5

தெரிந்தவன் புரம்மூன்று உடன் மாட்டிய சேவகன்
பரிந்து கைதொழுவார் அவர் தம் மனம் பாவினான்
வரிந்த வெஞ்சிலை ஒன்று உடையான் மழபாடியைப்
புரிந்து கைதொழுமின் வினைஆயின போகுமே. 6

சந்த வார்குழலாள் உமை தன் ஒருகூறு உடை
எந்தையான் இமையாத முக்கண்ணினன் எம்பிரான்
மைந்தன் வார் பொழில் சூழ்மழபாடி மருந்தினைச்
சிந்தியா எழுவார் வினைஆயின தேயுமே. 7

இரக்கம் ஒன்றும் இலான் இறையான் திருமாமலை
உரக் கையால் எடுத்தான்தனது ஒண் முடிபத்து இற
விரல் தலை நிறுவி உமையாளொடு மேயவன்
வரத்தையே கொடுக்கும் மழபாடியுள் வள்ளலே. 8

ஆலம் உண்டு அமுதம் அமரர்க்கு அருள் அண்ணலார்
காலன் ஆருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல் அடியார் தவத் தார்களும் சார்விடம்
மாலயன் வணங்கும் மழபாடி எம் மைந்தனே. 9

கலியின் வல்அமணும் கருஞ்சாக்கியப் பேய்களும்
நலியும் நாள் கெடுத்து ஆண்ட என நாதனார் வாழ்பதி
பலியும் பாட்டொடு பண் முழவும் பல ஓசையும்
மலியும் மா மழபாடியை வாழ்த்தி வணங்குமே. 10

மலியும் மாளிகை சூழ் மழபாடியுள் வள்ளலைக்
கலிசெய் மா மதில் சூழ் கடல் காழிக் கவுணியன்
ஒலிசெய் பாடல்கள் பத்துஇவை வல்லார்
....உலகத்திலே. 11

திருச்சிற்றம்பலம்

129. திருமழபாடி

திருமுறை : 3/28 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : வயிரத்தூண் நாதர் இறைவியார் : அழகாம்பிகை

காலை ஆர் வண்டினம் கிண்டிய கார் உறும்
சோலை ஆர் பைங்கிளி சொல் பொருள் பயிலவே
வேலை ஆர் விடம் அணி வேதியன் விரும்பு இடம்
மாலை ஆர் மதி தவழ் மா மழபாடியே. 1

கறை அணி மிடறுஉடைக் கண்ணுதல் நண்ணிய
பிறை அணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணும்ஊர்
துறை அணி குருகு இனம் தூ மலர் துதையவே
மறை அணி நாவினான் மா மழபாடியே. 2

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியுள்
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தரப்
பந்து அணை மெல்விரலாளொடும் பயில்வுஇடம்
மந்தம் வந்து உலவு சீர் மா மழபாடியே. 3

அத்தியின் உரிதனை அழகு உறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்
பத்தியால் பாடிடப் பரிந்தவர்க்கு அருள்செய்யும்
அத்தனார் உறைவிடம் அணி மழபாடியே. 4

கங்கை ஆர் சடைஇடைக் கதிர்மதி அணிந்தவன்
வெங் கண் வாள் அரவு உடை வேதியன் தீது இலாச்
செங்கயல்கண் உமையாளொடும் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மா மழபாடியே. 5

பாலனார் ஆர்உயிர் பாங்கினால் உணவரும்
காலனார் உயிர்செகக் காலினால் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடும் சேர்வு இடம்
மாலினார் வழிபடும் மா மழபாடியே. 6

விண்ணிலார் இமையவர் மெய்ம் மகிழ்ந்து ஏத்தவே
எண்ணிலார் முப்புரம் எரியுண நகைசெய்தார்
கண்ணினால் காமனைக் கனல்எழக் காய்ந்த எம்
அண்ணலார் உறைவு இடம் அணி மழபாடியே. 7

கரத்தினால் கயிலையை எடுத்த கார் அரக்கன
சிரத்தினை ஊன்றலும் சிவன்அடி சரண்என
இரத்தினால் கைந்நரம்பு எடுத்து இசை பாடலும்
வரத்தினான் மருவு இடம் மா மழபாடியே. 8

ஏடு உலாம் மலர்மிசை அயன் எழில் மாலும் ஆய்
நாடினார்க்கு அரிய சீர் நாதனார் உறைவு இடம்
பாடுஎலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழில்
மாடுஎலாம் மல்கு சீர் மா மழபாடியே. 9

உறி பிடித்து ஊத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறி பிடித்து அறிவிலா நீசர் சொல் கொள்ளன்மின்
பொறி பிடித்த அரவுஇனம் பூண் எனக் கொண்டு மான்
மறி பிடித்தான் இடம் மா மழபாடியே. 10

ஞாலத்தார் ஆதிரை நாளினான் நாள்தொறும்
சீலத்தான் மேவிய திருமழபாடியை
ஞாலத்தான் மிக்க சீர் ஞானசம்பந்தன் சொல்
கோலத்தால் பாடுவார் குற்றம் அற்றார்களே. 11

திருச்சிற்றம்பலம்

130. திருமழபாடி

திருமுறை : 3/48 பண் : கௌசிகம் இராகம் : பைரவி
இறைவர் : வயிரத்தூண் நாதர் இறைவியார் : அழகாம்பிகை

அங்கை ஆர் அழலன் அழகார் சடைக்
கங்கையான் கடவுள் இடம் மேவிய
மங்கையான் உறையும் மழபாடியைத்
தங்கையால் தொழுவார் தகவாளரே. 1

விதியுமாம் விளைவாம் ஒளி ஆர்ந்ததோர்
கதியுமாம் கசிவாம் வசி ஆற்றம் ஆம்
மதியுமாம் வலியாம் மழ பாடியுள்
நதியம் தோய் சடை நாதன் நல் பாதமே. 2

முழவினான் முதுகாடு உறை பேய்க்கணக்
குழுவினான் குலவும்கையில் ஏந்திய
மழுவினான் உறையும் மழ பாடியைத்
தொழுமின் நும் துயரானவை தீரவே. 3

கலையினான் மறையான் கதி ஆகிய
மலையினான் மருவார் புரம் மூன்றுஎய்த
சிலையினான் சேர் திருமழபாடியைத்
தலையினால் வணங்கத் தவம் ஆகுமே. 4

நல்வினைப் பயன் நால்மறையின் பொருள்
கல்வியாய கருத்தன் உருத்திரன்
செல்வன் மேய திருமழபாடியைப்
புல்கி ஏத்துமது புகழாகுமே. 5

நீடினார் உலகுக்கு உயிராய் நின்றான்
ஆடினான் எரிகான் இடை மாநடம்
பாடினார் இசை மா மழபாடியை
நாடினார்க்கு இல்லை நல்குரவு ஆனவே. 6

மின்னினார் இடையாள் ஒரு பாகமாய்
மன்னினான் உறை மா மழபாடியைப்
பன்னினார் இசையால் வழிபாடு செய்து
உன்னினார் வினைஆயின ஓயுமே. 7

தென்இலங்கையர் மன்னன் செழுவரை
தன்னில் அங்க அடர்த்து அருள் செய்தவன்
மன் இலங்கிய மா மழபாடியை
உன்னில் அங்க உறுபிணி இல்லையே. 8

திருவின் நாயகனும்செழுந்தாமரை
மருவினானும் தொழத்தழல் மாண்புஅமர்
உருவினான் உறையும் மழபாடியைப்
பரவினார் வினைப்பற்று அறுப்பார்களே. 9

நலியும் நன்று அறியாச் சமண்சாக்கியர்
வலிய சொல்லினும் மா மழபாடியுள்
ஒலி செய்வார் கழலான் திறம் உள்கவே
மெலியும் நம் உடல்மேல் வினையானவே. 10

மந்தம் உந்து பொழில் மழபாடியுள்
எந்தை சந்தம் இனிது உகந்து ஏத்துவான்
கந்தமார் கடல் காழியுள் ஞானசம்
பந்தன் மாலை வல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

131. திருப்பழுவூர்

திருமுறை : 2/34 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : வடமூலநாதர் இறைவியார் : அருந்தவ நாயகி

முத்தன்மிகு மூவிலைநல் வேலன் விரி நூலன்
அத்தன் எமை ஆளுடைய அண்ணல்இடம் என்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசம்அது வீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூரே. 1

கோடலொடு கோங்குஅவை குலாவுமுடி தன்மேல்
ஆடரவம் வைத்த பெருமானது இடம் என்பர்
மாடம்மலி சூளிகையில் ஏறி மடவார்கள்
பாடல்ஒலி செய்ய மலிகின்ற பழுவூரே. 2

வாலிய புரத்தில்அவர் வேவவிழி செய்த
போலிய ஒருத்தர்புரி நூலர்இடம் என்பர்
வேலியின் விரைக்கமலம் அன்னமுக மாதர்
பால்என மிழற்றிநடம் ஆடுபழுவூரே. 3

எண்ணும் ஒர் எழுத்தும் இசையின் கிளவி தேர்வார்
கண்ணும் முதலாய கடவுட்கு இடமது என்பர்
மண்ணின் மிசை ஆடி மலையாளர் தொழுதேத்திப்
பண்ணின் ஒலி கொண்டு பயில்கின்ற பழுவூரே. 4

சாதல் புரிவார் சுடலை தன்னில் நடமாடும்
நாதன்நமை ஆளுடைய நம்பன்இடம் என்பர்
வேதமொழி சொல்லி மறையாளர் இறைவன் தன்
பாதம்அவை ஏத்த நிகழ்கின்ற பழுவூரே. 5

மேவுஅயரும் மும்மதிலும் வெம்தழல் விளைத்து
மாஅயர அன்றுஉரிசெய் மைந்தன்இடம் என்பர்
பூவையை மடந்தையர்கள் கொண்டுபுகழ் சொல்லிப்
பாவையர்கள் கற்பொடு பொலிந்த பழுவூரே. 6

மந்தணம் இருந்துபுரி மாமடிதன் வேள்வி
சிந்த விளையாடு சிவலோகன் இடம் என்பர்
அந்தணர்கள் ஆகுதியில் இட்டஅகில் மட்டார்
பைந்தொடி நல் மாதர்சுவடு ஒற்று பழுவூரே. 7

உரக்கடல் விடத்தினை மிடற்றில் உற வைத்து அன்று
அரக்கனை அடர்த்து அருளும் அப்பனிடம் என்பர்
குரக்கினம் விரைப்பொழிலின் மீதுகனி உண்டு
பரக்குஉறு புனல்செய் விளையாடு பழுவூரே. 8

நின்ற நெடுமாலும் ஒரு நான்முகனும் நேட
அன்று தழலாய் நிமிரும் ஆதியிடம் என்பர்
ஒன்றும்இரு மூன்றும்ஒரு நாலும் உணர்வார்கள்
மன்றினில் இருந்து உடன் மகிழ்ந்த பழுவூரே. 9

மொட்டைஅமண் ஆதர் துகில் மூடுவிரி தேரர்
முட்டைகள் மொழிந்த முனிவான் தன்னிடம் என்பர்
மட்டைமலி தாழைஇள நீரதுஇசை பூகம்
பட்டையொடு தாறு விரிகின்ற பழுவூரே. 10

அந்தணர்கள் ஆன மலையாளர் அவர் ஏத்தும்
பந்தம் மலிகின்ற பழுவூர் அரனை ஆரச்
சந்தமிகு ஞானம்உணர் பந்தன் உரை பேணி
வந்தவணம் ஏத்தும் அவர் வானம் உடையாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருநெல்வாயிலரத் துறையினை வழிபட்டுச் சீகாழிக்குத் திரும்பி எழுந்தருளும் ஆளுடைய பிள்ளையார், திருப்பழுவூரை அடைந்து இறைவனை வணங்கும்போது அங்கு மலையாளர் அகம்படித் தொண்டு செய்துறையும் பெருமையினைத் தாமெடுத்த திருப்பதிகத்தின் நான்காந் திருப்பாட்டில் 'மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப், பண்ணினொலி கொண்டு பயில் கின்றபழு வூரே' என்றும், திருக்கடைக் காப்பில், 'அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும், பந்தமலிகின்றபழுவூர்' என்றும் வைத்துச் சிறப்பித்தருளினார்.

132. திருக்கானூர்

திருமுறை : 1/73 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

இறைவர் : முளைநாதர், செம்மேனி நாதர் இறைவியர் : சிவயோக நாயகி

வானார் சோதி மன்னு சென்னி வன்னி புனங்கொன்றைத்
தேனார் போது தானார் கங்கை திங்களொடு சூடி
மானேர் நோக்கி கண்டு அங்கு உவப்ப மாலை ஆடுவார்
கானூர் மேய கண்ணார் நெற்றி ஆன் ஊர் செல்வரே. 1

நீந்தல் ஆகா வெள்ளம் மூழ்கு நீள்சடைதன் மேல் ஓர்
ஏய்ந்த கோணல் பிறையோடு அரவு கொன்றை எழில்ஆரப்
போந்த மென்சொல் இன்பம் பயந்த மைந்தர் அவர்போல் ஆம்
காந்தள் விம்மு கானூர் மேய சாந்தநீற்றாரே. 2

சிறை ஆர் வண்டும் தேனும் விம்மு செய்ய மலர்க்கொன்றை
மறை ஆர் பாடல் ஆடலோடு மால்விடை மேல் வருவார்
இறை ஆர் வந்து என் இல் புகுந்து என் எழில்நலமும் கொண்டார்
கறை ஆர் சோலைக் கானூர் மேய பிறையார் சடையாரே.3

விண்ணார் திங்கள் கண்ணிவெள்ளை மாலை அதுசூடித்
தண்ணார் அக்கோடு ஆமைபூண்டு தழை புன்சடைதாழ
எண்ணா வந்து என் இல்புகுந்தங்கு எவ்வம் நோய்செய்தான்
கண்ணார் சோலைக் கானூர் மேய விண்ணோர் பெருமானே.4

தார் கொள் கொன்றைக்கண்ணியோடும் தண்மதியம்சூடி
சீர்கொள்பாடல் ஆடலோடு சேடராய் வந்து
ஊர்கள்தோறும் ஐயம்ஏற்று என்உள் வெந்நோய் செய்தார்
கார் கொள் சோலைக் கானூர் மேய கறைக்கண்டத்தாரே. 5

முளிவெள்ளலும்பு நீறும் நூலும் மூழ்கும் மார்பராய்
எளிவந்தார்போல் ஐயம்என்று என் இல்லே புகுந்து உள்ளத்
தெளிவும் நாணும் கொண்ட கள்வர் தேறலார்பூவில்
களிவண்டு யாழ்செய் கானூர் மேய ஒளிவெண் பிறையாரே. 6

மூவா வண்ணர் முளைவெண்பிறையர் முறுவல் செய்து இங்கே
பூவார் கொன்றை புனைந்து வந்தார் பொக்கம் பலபேசிப்
போவார் போல மால் செய்து உள்ளம் புக்க புரிநூலர்
தேவார் சோலைக் கானூர் மேய தேவதேவரே. 7

தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல் செய்கை இடம் ஓவார்
குமிழின் மேனி தந்து கோலநீர்மைஅது கொண்டார்
கமழும் சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. 8

அந்தம் ஆதி அயனும் மாலும் ஆர்க்கும் அறிவு அரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னியும் மன்னினான்
வந்து என் உள்ளம் புகுந்து மாலை காலை ஆடுவான்
கந்தம் மல்கு கானூர் மேய எந்தைபெம்மானே. 9

ஆமை அரவோடு ஏனவெண்கொம்பு அக்குமாலை பூண்டு
ஆம் ஓர் கள்வர் வெள்ளர் போல உள் வெந்நோய் செய்தார்
ஓம வேத நான்முகனும் கோள் நாக அணையானும்
சேமம்ஆய செல்வர் கானூர் மேய சேடரே. 10

கழுது துஞ்சும் கங்குல் ஆடும் கானூர் மேயானைப்
பழுது இல் ஞானசம்பந்தன் சொல்பத்தும் பாடியே
தொழுது பொழுது தோத்திரங்கள் சொல்லித் துதித்து நின்று
அழுது நக்கும் அன்பு செய்வார் அல்லல் அறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

133. திருஅன்பில்ஆலந்துறை

திருமுறை : 1/33 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : சத்தியவாகீசர் இறைவியர் : சௌந்திரநாயகி
ஆலந்துறை நாயகி

கணை நீடு எரி மால் அரவம் வரை வில்லா
இணையா எயில்மூன்றும் எரித்த இறைவர்
பிணை மா மயிலும் குயில் சேர் மட அன்னம்
அணையும் பொழில் அன்பில் ஆலந்துறையாரே. 1

சடை ஆர் சதுரன் முதிரா மதி சூடி
விடை ஆர் கொடி ஒன்று உடை எந்தை விமலன்
கிடை ஆர் ஒலி ஒத்து அரவத்துஇசை கிள்ளை
அடை ஆர் பொழில் அன்பில் ஆலந்துறையாரே. 2

ஊரும் அரவம் சடைமேல் உற வைத்துப்
பாரும் பலி கொண்டு ஒலி பாடும் பரமர்
நீர் உண் கயலும் வயல் வாளை வராலோடு
ஆரும் புனல் அன்பில் ஆலந்துறையாரே. 3

பிறையும் அரவும் உற வைத்த முடிமேல்
நறை உண்டு எழு வன்னியும் மன்னு சடையார்
மறையும் பலவேதியர் ஓத ஒலிசென்று
அறையும் புனல் அன்பில் ஆலந்துறையாரே. 4

நீடும் புனல் கங்கையும் தங்க முடிமேல்
கூடும் மலையாள் ஒரு பாகம் அமர்ந்தார்
மாடும் முழவம் அதிரஅம் மடமாதர்
ஆடும் பதி அன்பில் ஆலந்துறையாரே. 5

நீறு ஆர் திருமேனியர் ஊனம்இலார்பால்
ஊறு ஆர் சுவை ஆகிய உம்பர் பெருமான்
வேறு ஆர் அகிலும் மிகு சந்தனம் உந்தி
ஆறு ஆர் வயல் அன்பில் ஆலந்துறையாரே. 6

செடி ஆர் தலையில் பலி கொண்டு இனிது உண்ட
படி ஆர் பரமன் பரமேட்டி தன் சீரைக்
கடி ஆர் மலரும் புனல் தூவிநின்று ஏத்தும்
அடி ஆர் தொழும் அன்பில் ஆலந்துறையாரே. 7

விடத்தார் திகழும்மிடறன் நடம் ஆடி
படத்து ஆர் அரவம் விரவும் சடை ஆதி
கொடித்தேர் இலங்கைக் குலக்கோன் வரையார
அடர்த்தார் அருள் அன்பில் ஆலந்துறையாரே. 8

வணங்கிம் மலர் மேல்அயனும் நெடுமாலும்
பிணங்கி அறிகின்றிலர் மற்றும் பெருமை
கணங்கும் முகத்துஅம் முலையாள் ஒரு பாகம்
அணங்கும் திகழ் அன்பில் ஆலந்துறையாரே. 9

தறியார் துகில் போர்த்து உழல்வார் சமண்கையர்
நெறியா உணராநிலைக் கேடினர் நித்தல்
வெறியார் மலர் கொண்டு அடி வீழும்சுவரை
அறிவார் அவர் அன்பில் ஆலந்துறையாரே. 10

அரவு ஆர் புனல் அன்பில் ஆலந்துறை தன்மேல்
கரவாதவர் காழியுள் ஞானசம்பந்தன்
பரவு ஆர் தமிழ்பத்து இசை பாட வல்லார்போய்
விரவு ஆகுவர் வான்இடை வீடு எளிதுஆமே. 11

திருச்சிற்றம்பலம்

134. திருமாந்துறை

திருமுறை : 2/110 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : ஆம்ரவன நாதர் இறைவியார் : அழகம்மை

செம்பொன் ஆர்தரு வேங்கையும் ஞாழலும் செருந்தி செண்பகம்ஆனைக்
கொம்பும் ஆரமும் மாதவி சுரபுனை குருந்தலர் பரந்துஉந்தி
அம் பொன் நேர்வரு காவிரி வடகரை மாந்துறை உறைகின்ற
எம்பிரான் இமையோர் தொழு பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.1

விளவு தேனொடு சாதியின் பலங்களும் வேய் மணி நிரந்து உந்தி
அளவி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவான் அத்
துளவ மால்மகன் ஐங்கணைக் காமனைச் சுடவிழித்தவன் நெற்றி
அளக வாள்நுதல் அரிவைதன் பங்கனை அன்றிமற்று அறியோமே. 2

கோடு தேன்சொரி குன்றுஇடைப் பூகமும் கூந்தலின் குலை வாரி
ஓடு நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறை நம்பன்
வாடினார் தலையில் பலி கொள்பவன் வானவர் மகிழ்ந்துஏத்தும்
கேடிலாமணியைத் தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே. 3

இலவம் ஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னை இளமருது இலவங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை உறைகண்டன்
அலை கொள் வார்புனல் அம்புலி மத்தமும் ஆடுஅரவு உடன்வைத்த
மலையை வானவர்கொழுந்தினை அல்லது வணங்குதல் அறியோமே.4

கோங்கு செண்பகம் குருந்தொடு பாதிரி குரவிடை மலர்உந்தி
ஓங்கி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானைப்
பாங்கினால் இடுந்தூபமும் தீபமும் பாட்டுஅவி மலர்சேர்த்தித்
தாங்குவார் அவர் நாமங்கள் நாவினில் தலைப்படும் தவத்தோரே. 5

பெருகு சந்தனம் காரகில் பீலியும் பெருமரம் நிமிர்ந்து உந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதன் எம்பெருமானைப்
பரிவினால் இருந்து இரவியும் மதியமும் பார் மன்னர் பணிந்து ஏத்த
மருதவானவர் வழிபடும் மலரடி வணங்குதல் செய்வோமே. 6

நறவம் மல்லிகை முல்லையும் மௌவலும் நாண்மலர் அவைவாரி
இறவில் வந்து எறி காவிரி வடகரை மாந்துறை இறைஅன்று அங்கு
அறவன் ஆகிய கூற்றினைச் சாடிய அந்தணன் வளரவில்லால்
நிறைய வாங்கி வலித்து எயில் எய்தவன் நிரைகழல் பணிவோமே. 7

மந்தம் ஆர்பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்
உந்தி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானை
நிந்தியா எடுத்து ஆர்த்த வல்அரக்கனை நெரித்திடு விரலானைச்
சிந்தியா மனத்தார் அவர் சேர்வது தீநெறி அதுதானே. 8

நீலமாமணி நித்திலத் தொத்தொடு நிரை மலர் நிரந்து உந்தி
ஆலியா வரு காவிரி வடகரை மாந்துறை அமர்வானை
மாலும் நான்முகன் தேடியும் காண்கிலா மலர்அடி இணைநாளும்
கோலம் ஏத்தி நின்று ஆடுமின் பாடுமின் கூற்றுவன் நலியானே. 9

நின்று உணும் சமண் தேரரும் நிலை இலர் நெடுங்கழை நறவு வேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களும் நாணலின் நுரைவாரி
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை மாந்துறை ஒருகாலம்
அன்றி உள் அழிந்து எழும் பரிசு அழகிது அதுஅவர்க்கு இடம்ஆமே.10

வரை வளம் கவர் காவிரி வடகரை மாந்துறை உறைவானைச்
சிரபுரம்பதி உடையவன் கவுணியன் செழுமறை நிறை நாவன்
அர எனும் பணிவல்லவன் ஞானசம்பந்தன் அன்புஉறுமாலை
பரவிடும் தொழில் வல்லவர் அல்லலும் பாவமும் இலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஅன்பிலாந் துறையை வணங்கித் திருமாந்துறைக்கு எழுந்தருளிய பிள்ளையார் திருக்கோயிலை அடைந்து இறைவனை வணங்கி இப்பதிகமெடுத்து அதன் ஆறாந் திருப்பாட்டில் அங்கு சூரியனும் சந்திரனும் மருத்துக்களும் வழிபட்ட செய்தியைச் சிறப்பித்தருளினார்.

135. திருப்பாற்றுறை

திருமுறை : 1/56 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

இறைவர் : திருமூலநாதர் இறைவியார் : மோகநாயகி மேகலாம்பிகை

கார் ஆர் கொன்றை கலந்த முடியினர்
சீர் ஆர் சிந்தை செலச் செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யார் ஆர் ஆதிமுதல்வரே. 1

நல்லாரும் அவர் தீயர் எனப்படும்
சொல்லார் நல்மலர் சூடினார்
பல்ஆர் வெண்தலைச் செல்வர் எம் பாற்றுறை
எல்லாரும் தொழும் ஈசரே. 2

விண் ஆர் திங்கள் விளங்கு நுதலினர்
எண் ஆர் வந்து என் எழில்கொண்டார்
பண் ஆர் வண்டுஇனம் பாடல்செய் பாற்றுறை
யுள் நாள்நாளும் உறைவரே. 3

பூவும் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லார் எயில் எய்தார்
பாவம் தீர் புனல் மல்கிய பாற்றுறை
ஓ என் சிந்தை ஒருவரே. 4

மாகம் தோய் மதி சூடி மகிழ்ந்து எனது
ஆகம் பொன்நநிறம் ஆக்கினார்
பாகம் பொண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. 5

போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்து என் நலம் கொண்டார்
பாதம் தொண்டர் பரவிய பாற்றுறை
வேதம் ஓதும் விகிர்தரே. 6

வாடல்வெண்தலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினார்
பாடல் வண்டுஇனம் பண்செய்யும் பாற்றுறை
ஆடல் நாகம் அசைத்தாரே. 7

வெவ்வ மேனியராய் வெள்ளை நீற்றினர்
எவ்வம் செய்து என் எழில்கொண்டார்
பவ்வம் நஞ்சு அடை கண்டர் எம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. 8

ஏனம் அன்னமும் ஆனவருக்கு எரி
ஆன வண்ணத்து எம் அண்ணலார்
பானல் நலம் மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. 9

வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்து என் நன்நலம் வௌவினார்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாம் ஓர் மணாளரே. 10

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம்பந்தனது இன் தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. 11

திருச்சிற்றம்பலம்

136. திருஆனைக்கா

திருமுறை : 2/23 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : சம்புகேசுவரர் இறைவியார் : அகிலாண்ட நாயகி

மழையார் மிடறா மழுவாள் உடையாய்
உழையார் கரவா உமையாள் கணவா
விழவு ஆரும் வெண்நாவலின் மேவியஎம்
அழகா எனும் ஆயிழையாள் அவளே. 1

கொலையார் கரியின் உரி மூடியனே
மலை ஆர் சிலையா வளைவித்தவனே
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்
நிலையா அருளாய் எனும் நேரிழையே. 2

காலால் உயிர் காலனை வீடுசெய்தாய்
பாலோடு நெய்ஆடிய பால்வணனே
வேலாடு கையாய் எம் வெண்நாவல் உளாய்
ஆல் ஆர் நிழலாய் எனும் ஆயிழையே. 3

சுறவக் கொடி கொண்டவன் நீறு அதுவாய்
உற நெற்றி விழித்த எம் உத்தமனே
விறல் மிக்க கரிக்கு அருள்செய்தவனே
அறம் மிக்கது எனும் ஆயிழையே. 4

செங்கண் பெயர் கொண்டவன் செம்பியர்கோன்
அம்கண் கருணை பெரிதுஆயவனே
வெங் கண் விடையாய் எம்வெண்நாவல் உளாய்
அங்கத்து அயர்வு ஆயினள் ஆயிழையே. 5

குன்றே அமர்வாய் கொலையார் புலியின்
தன் தோல் உடையாய் சடையாய் பிறையாய்
வென்றாய் புரம்மூன்றை வெண்நாவலுளே
நின்றாய் அருளாய் எனும்நேரிழையே. (6 –7)

மலை அன்று எடுத்த அரக்கன் முடிதோள்
தொலையவ் விரல் ஊன்றிய தூ மழுவா
விலையால் எனை ஆளும் வெண்நாவல் உளாய்
அலசாமல் நல்காய் எனும் ஆயிழையே. 8

திரு ஆர்தரு நாரணன் நான்முகனும்
அருவா வெருவா அழல் ஆய் நிமிர்ந்தாய்
விரை ஆரும் வெண்நாவலுள் மேவிய எம்
அரவா எனும் ஆயிழையால் அவனே. 9

புத்தர்பலரோடு அமண்பொய்த்தவர்கள்
ஒத்தவ் உரை சொல் இவை ஓரகிலார்
மெய்த் தேவர் வணங்கும் வெண் நாவல் உளாய்
அத்தா அருளாய் எனும்ஆயிழையே. 10

வெண் நாவல் அமர்ந்து உறை வேதியனைக்
கண் ஆர் கமழ் காழியர்தம் தலைவன்
பண்ணோடு இவை பாடிய பத்தும் வல்லார்
விண்ணோர் அவர் ஏத்த விரும்புவரே. 11

திருச்சிற்றம்பலம்

137. திருஆனைக்கா

திருமுறை : 3/53 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவி பாகம் ஆயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயம் ஆக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதம் இல்லையே.1

சேறுபட்ட தண்வயல் சென்றுசென்று சேண் உலாவு
ஆறுபட்ட நுண் துறை ஆனைக்காவில் அண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகர் இல் பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணில்எண்ண வல்லரே.2

தாரம்ஆய மாதராள் தான்ஓர்பாகம் ஆயினான்
ஈரம் ஆய புன்சடை ஏற்ற திங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை ஆனைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே. 3

விண்ணில் நண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ணவெண்நீறுஆடினான் சூலம்ஏந்து கையினான்
அண்ணல் கண்ஓர் மூன்றினான் ஆனைக்காவு கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க்கு ஏதம்ஒன்றும் இல்லையே. 4

வெய்யபாவம் கைவிட வேண்டுவீர்கள் ஆண்ட சீர்
மைகொள் கண்டன் வெய்யதீ மாலை ஆடு காதலான்
கொய்ய விண்ட நாள்மலர்க்கொன்றை துன்று சென்னிஎம்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே.5

நாணும் ஓர்வு சார்வும் முன் நகையும் உட்கும் நன்மையும்
பேண்உறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும் பெண்ணும் மாகிய ஆனைக்காவில் அண்ணலார்
காணும் கண்ணுமூன்று உடைக் கறைகொள் மிடறன் அல்லனே.6

கூருமாலை நண்பகல் கூடிவல்ல தொண்டர்கள்
பேரும் ஊரும் செல்வமும் பேச நின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப் பாயும்கங்கை செஞ்சடை
ஆரம் நீரோடு ஏந்தினான் ஆனைக்காவு சேர்மினே.7

பொன் அம் மல்கு தாமரைப்போது தாது வண்டுஇனம்
அன்னம் மல்கு தண்டுறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்னவல்ல நால்மறை பாடவல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழல் துன்ன வல்லர் விண்ணையே. 8

ஊனொடு உண்டல் நன்று என ஊனொடு உண்டல் தீது என
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான்
வானொடு ஒன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்று
ஆனொடுஅஞ்சும்ஆடினான் ஆனைக்காவு சேர்மினே. 9

கையில்உண்ணும் கையரும் கடுக்கடிள் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேதநெறியை அறிகிலார்
தையல் பாகம்ஆயினான் தழல்அது உருவத்தான் எங்கள்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே. 10

ஊழிஊழி வையகத்து உயிர்கள்தோற்று வானொடும்
ஆழியானும் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்துஇவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

138. திருஆனைக்கா

திருமுறை : 3/109 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

மண்ணது உண்ட அரி மலரோன் காணா
வெண்நாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணது ஓங்கிய கயிலையாரும்
அண்ணல் ஆரூர் ஆனைக்காவே. 1

வந்து மால்அயன்அவர் காண்பரியார்
வெந்தவெண் நீறு அணி மயேந்திரரும்
கந்தவார் சடைஉடைக் கயிலையாரும்
அந்தண் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 2

மால் அயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலைஅது ஓங்கும் வெண் நாவலாரும்
ஆலை ஆரூர் ஆதி ஆனைக்காவே. 3

கருடனை ஏறு அரி அயனார் காணார்
வெருள் விடை ஏறிய மயேந்திரரும்
கருள்தரு கண்டத்து எம் கயிலையாரும்
அருளன் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 4

மதுசூதனன் நான்முகன் வணங்க அரியார்
மதிஅது சொல்லிய மயேந்திரரும்
கதிர்முலை புல்கிய கயிலையாரும்
அதியன் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 5

சக்கரம் வேண்டும் மால் பிரமன் காணா
மிக்கவர் கயிலை மயேந்திரரும்
தக்கனைத் தலையரி தழல்உருவர்
அக்கு அணியவர் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 6

கண்ணனும் நான்முகன் காண்பரியார்
வெண்நாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணப்பர்க்கு அருள்செய்த கயிலைஎங்கள்
அண்ணல் ஆரூர் ஆதி ஆனைக்காவே. 7

கடல்வண்ணன் நான்முகன் காண்பு அரியார்
தடவரை அரக்கனைத் தலை நெரித்தார்
விடம்அது உண்ட எம் மயேந்திரரும்
அடல் விடை ஆரூர் ஆதி ஆனைக்காவே. 8

ஆதி மால்அயன் அவர் காண்பரியார்
வேதங்கள் துதிசெயும் மயேந்திரரும்
காதில்ஓர் குழைஉடைக் கயிலையாரும்
ஆதி ஆரூர் எந்தை ஆனைக்காவே. 9

அறிவில் அமண்புத்தர் அறிவு கொள்ளேல்
வெறிய மான் கரத்து ஆரூர் மயேந்திரரும்
மறிகடலோன் அயன் தேடத்தானும்
அறிவுஅரு கயிலையோன் ஆனைக்காவே. 10

ஏனமால் அயன் அவர் காண்பு அரியார்
கானம் ஆர் கயிலை நல் மயேந்திரரும்
ஆன ஆரூர் ஆதி ஆனைக்காவை
ஞானசம்பந்தன் தமிழ்சொல்லுமே. 11

திருச்சிற்றம்பலம்

139. திருப்பைஞ்ஞீலி

திருமுறை : 3/14 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : நீலகண்டர் இறைவியார் : விசாலாட்சி
ஆரணீய விடங்கர் நீள்நெடுங்கண்ணி

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓர் இடம் குறைவு இலர் உடையர் கோவணம்
நீர் இடம் சடை விடை ஊர்தி நித்தலும்
பாரிடம் பணி செயும் பயில்பைஞ் ஞீலியே. 1

மருவு இலார் திரிபுரம் எரிய மால்வரை
பரு விலாக் குனித்த பைஞ்ஞீலி மேவலான்
உருஇலான் பெருமையை உளம் கொளாத அத்
திருவிலார் அவர்களைத் தெருட்டல் ஆகுமே. 2

அம் சுரும்பு அணி மலர் அமுதம் மாந்தித் தேன்
பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி மேவலான்
வெஞ்சுரம்தனில் உமை வெருவ வந்தது ஓர்
குஞ்சரம் பட உரி போர்த்த கொள்கையே. 3

கோடல்கள் புறவு அணி கொல்லை முல்லைமேல்
பாடல் வண்டு இசை முரல் பயில் பைஞ்ஞீலியார்
பேடு அலர் ஆண் அலர் பெண்ணும் அல்லது ஓர்
ஆடலை உகந்த எம் அடிகள் அல்லரே. 4

விழி இலா நகுதலை விளங்கு இளம்பிறை
சுழியில் ஆர் வருபுனல் சூழல் தாங்கினான்
பழி இலார் பரவு பைஞ்ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்கலாகுமே. 5

விடைஉடைக் கொடிவலன் ஏந்தி வெண்மழுப்
படைஉடைக் கடவுள் பைஞ்ஞீலி மேவலான்
துடியிடைக் கலை அல்குலாள் ஓர் பாகமாச்
சடைஇடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே. 6

தூயவன் தூய வெண்நீறு மேனிமேல்
பாயவன் பாய பைஞ்ஞீலி கோயிலா
மேயவன் வேய் புரைதோளி பாகமா
ஏயவன் எனைச்செயும் தன்மை என்கொலோ. 7

தொத்தின தோள் முடி உடையவன் தலை
பத்தினை நெரித்த பைஞ்ஞீலி மேவலான்
முத்தினை முறுவல் செய்தாள் ஓர்பாகமாப்
பொத்தினன் திருந்துஅடி பொருந்தி வாழ்மினே. 8

நீருடைப் போது உறைவானும் மாலுமாய்ச்
சீருடைக் கழல் அடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள் பைஞ்ஞீலி மேவிய
தாருடைக்கொன்றை அம் தலைவர் தன்மையே. 9

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியாதவர்களைச் சாதியாதது ஓர்
கோலியா அரு வரை கூட்டி எய்த பைஞ்
ஞீலியான் கழல் அடி நினைந்து வாழ்மினே. 10

கண் புனல் விளைவயல் காழிக் கற்பகம்
நண்பு உணர் அருமறை ஞானசம்பந்தன்
பண்பினர் பரவு பைஞ்ஞீலி பாடுவார்
உண்பின உலகினில் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

139. திருப்பைஞ்ஞீலி

திருமுறை : 3/14 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : நீலகண்டர் இறைவியார் : விசாலாட்சி
ஆரணீய விடங்கர் நீள்நெடுங்கண்ணி

ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓர் இடம் குறைவு இலர் உடையர் கோவணம்
நீர் இடம் சடை விடை ஊர்தி நித்தலும்
பாரிடம் பணி செயும் பயில்பைஞ் ஞீலியே. 1

மருவு இலார் திரிபுரம் எரிய மால்வரை
பரு விலாக் குனித்த பைஞ்ஞீலி மேவலான்
உருஇலான் பெருமையை உளம் கொளாத அத்
திருவிலார் அவர்களைத் தெருட்டல் ஆகுமே. 2

அம் சுரும்பு அணி மலர் அமுதம் மாந்தித் தேன்
பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி மேவலான்
வெஞ்சுரம்தனில் உமை வெருவ வந்தது ஓர்
குஞ்சரம் பட உரி போர்த்த கொள்கையே. 3

கோடல்கள் புறவு அணி கொல்லை முல்லைமேல்
பாடல் வண்டு இசை முரல் பயில் பைஞ்ஞீலியார்
பேடு அலர் ஆண் அலர் பெண்ணும் அல்லது ஓர்
ஆடலை உகந்த எம் அடிகள் அல்லரே. 4

விழி இலா நகுதலை விளங்கு இளம்பிறை
சுழியில் ஆர் வருபுனல் சூழல் தாங்கினான்
பழி இலார் பரவு பைஞ்ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்கலாகுமே. 5

விடைஉடைக் கொடிவலன் ஏந்தி வெண்மழுப்
படைஉடைக் கடவுள் பைஞ்ஞீலி மேவலான்
துடியிடைக் கலை அல்குலாள் ஓர் பாகமாச்
சடைஇடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே. 6

தூயவன் தூய வெண்நீறு மேனிமேல்
பாயவன் பாய பைஞ்ஞீலி கோயிலா
மேயவன் வேய் புரைதோளி பாகமா
ஏயவன் எனைச்செயும் தன்மை என்கொலோ. 7

தொத்தின தோள் முடி உடையவன் தலை
பத்தினை நெரித்த பைஞ்ஞீலி மேவலான்
முத்தினை முறுவல் செய்தாள் ஓர்பாகமாப்
பொத்தினன் திருந்துஅடி பொருந்தி வாழ்மினே. 8

நீருடைப் போது உறைவானும் மாலுமாய்ச்
சீருடைக் கழல் அடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள் பைஞ்ஞீலி மேவிய
தாருடைக்கொன்றை அம் தலைவர் தன்மையே. 9

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியாதவர்களைச் சாதியாதது ஓர்
கோலியா அரு வரை கூட்டி எய்த பைஞ்
ஞீலியான் கழல் அடி நினைந்து வாழ்மினே. 10

கண் புனல் விளைவயல் காழிக் கற்பகம்
நண்பு உணர் அருமறை ஞானசம்பந்தன்
பண்பினர் பரவு பைஞ்ஞீலி பாடுவார்
உண்பின உலகினில் ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

140. திருப்பாச்சிலாச்சிராமம்

திருமுறை : 1/44 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : மாற்றறிவரதர், மணிகண்டீசர் இறைவியார் : பாலசுந்தரி

துணி வளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணி வளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆர் இடமும் பலி தேர்வர்
அணி வளர் கோலம்எலாம் செய்து பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலை புனை மான்உரி தோல்உடை ஆடை
கனல்சுடரால் இவர் கண்கள்
தலை அணி சென்னியர் தார் அணி மார்பர்
தம் அடிகள் இவர் என்ன
அலை புனல் பூம்பொழில் சூழ்ந்து அமர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே. 2

வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சு இருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்நூல்
நஞ்சு அடை கண்டர் நெஞ்சு இடம் ஆக
நண்ணுவர் நம்மை நயந்து

மஞ்சு அடை மாளிகை சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதை செய்வதோ இவர் சீரே. 3

கன மலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனல் தரு தூ மதிக்கண்ணி
புன மலர்மாலை அணிந்து அழகாய
புனிதர் கொல் ஆம் இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 4

மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி
வளர்சடை மேல் புனல் வைத்து
மோந்தை முழாக் குழல் தாளம் ஓர் வீணை
முதிர ஓர் வாய்மூரி பாடி
ஆந்தைவிழிச் சிறு பூதத்தர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வதோ இவர் சார்வே. 5

நீறுமெய் பூசி நிறைசடை தாழ
நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி
ஆறுஅது சூடி ஆடரவு ஆட்டி
ஐவிரல் கோவண ஆடை

பால் தரு மேனியர் பூதத்தர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
ஏறுஅது ஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே. 6

பொங்கு இள நாகம் ஓர் ஏகவடத்தோடு
ஆமை வெண்நூல் புனை கொன்றை
கொங்கு இள மாலை புனைந்து அழகாய
குழகர்கொல்ஆம் இவர் என்ன
அங்கு இளமங்கை ஓர் பங்கினர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதிர் செய்வதோ இவர் சார்வே. 7

ஏவலத்தால் விசயற்கு அருள் செய்து
இராவணனை ஈடு அழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழில் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழை வாடச்
சிதை செய்வதோ இவர் சேர்வே. 8

மேலது நான்முகன் எய்தியது இல்லை
கீழ்அது சேவடி தன்னை
நீல் அது வண்ணனும் எய்தியது இல்லை
என இவர் நின்றதும் அல்லால்

ஆல் அது மா மதி தோய்பொழில் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
பால் அது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழி செய்வதோ இவர் பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனும்
நகுவர் அவர் இருபோதும்
ஊனொடு கூடிய உட்கும் நகையால்
உரைகள் அவை கொள வேண்டா
ஆணொடு பெண்வடிவு ஆயினர் பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
பூண்நெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனை செய்வதோ இவர் பொற்பே. 10

அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிராமத்து உறைகின்ற
புகை மலி மாலை புனைந்து அழகாய
புனிதர் கொலாம் இவர் என்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நல்தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண்தமிழ் கொண்டு இவை ஏத்தச்
சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞான சம்பந்தப்பெருமான், திருவன்பிலாலந்துறை, திருமாந்துறை முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டு, மழநாட்டிலே திருப்பாச்சிலாச்சிராமம் பணிய எழுந்தருளுகையில் அந்நாட்டிற் கொல்லி மலைக்குரிய மழவனென்னும் அரையன் பெறலரும்

பேறாகப் பெற்றெடுத்த தன் பெண் கொடியினை முயலகனென்னும் நோயடைந்து அஃது எவ்வாற்றானுந் தீராது வருத்துதலைக் கண்டு வருந்தித் தான் வழிவழியாக வந்த சைவ மரபினனாதலின் தன்மகளை இறைவன் திருக்கோயிலில் கொணர்வித்துத் திருமுன்னரிட்டு வைத்தவன், பேரொலித் திருச்சின்னத்தால் பிள்ளையா எழுந்தருளுவதறிந்து தன்னகர் அணி செய்து தன் கண்களின் இன்ப அருவி சொரிய எதிர்சென்று சிவிகையின் முன் பணிந்து வீழ்ந்தான். அதனையறிந்த பிள்ளையார் எழுகவென அவனையெழுப்பி அவனோடு திருக்கோயிலை அடைந்து சிவிகையினின்று இறங்கி உள்புக்குத் திருமுன்றிலை அடைந்தபோது அங்கிட்டிருக்கும் கன்னியை வினாவி அரசனால் நிகழ்ச்சியை அறிந்து பாச்சின்மேய பரம்பொருளைத் 'துணிவளர் திங்கள்' என்றெடுத்துப் பணிந்து 'மணிவளர் கண்டரோ, மங்கையை வாட மயல்செய்வதோ இவர் மாண்பு' எனப் பிணிதீர்க்கும் பதிகம் பாடினார் : அப்பதிகம் நிரம்புங் காலத்திலே அப்பெண் நோய்நீங்கி எழுந்து ஒல்கிவந்து தனது அத்தனை அடைந்து அவனோடு நாயனாரைப் பணிந்து பேரருள்பெற்றருளினாள்.

திருச்சிற்றம்பலம்

141. திருஈங்கோய்மலை

திருமுறை : 1/70 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

இறைவர் : மரகதாசலர் இறைவியார் : மரகதவல்லியார்

வானத்து உயர் தண்மதி தோய் சடைமேல் மத்தம்மலர் சூடித்
தேன் ஒத்தன மென்மொழி மான்விழியாள் தேவி பாகமாக்
கானத்து இரவில் எரி கொண்டு ஆடும் கடவுள் உலகு ஏத்த
ஏனத்திரள் வந்து இழியும் சாரல் ஈங்கோய் மலையாரே.1

சூலப்படை ஒன்று ஏந்தி இரவில் சுடுகாடு இடமாகக்
கோலச் சடைகள் தாழக் குழல் யாழ் மொந்தை கொட்டவே
பால் ஒத்தனைய மொழியாள் காண ஆடும் பரமனார்
ஏலத்தொடு நல் இலவம் கமழும் ஈங்கோய்மலையாரே. 2

கண் கொள்நுதலார் கறை கொள் மிடற்றார் கரியின் உரி தோலார்
விண் கொள் மதிசேர் சடையார் விடையார் கொடியார் வெண்நீறு
பெண் கொள் திருமார்பு அதனில் பூசும் பெம்மான் எமைஆள்வார்
எண்கும் அரியும் திரியும் சாரல் ஈங்கோய்மலையாரே. 3

மறையின் இசையார் நெறிமென் கூந்தல் மலையான் மகளோடும்
குறைவெண்பிறையும் புனலும்நிலவும் குளிர்புன்சடை தாழப்
பறையும் குழலும் கழலும்ஆர்ப்பப் படுகாட்டு எரியாடும்
இறைவர் சிறைவண்டு அறை பூஞ்சாரல் ஈங்கோய் மலையாரே.4

நொந்த சுடலைப் பொடி நீறு அணிவார் நுதல் சேர் கண்ணினார்
கந்தமலர்கள் பலவும் நிலவு கமழ் புன்சடை தாழப்
பந்து அண் விரலாள் பாகம்ஆகப் படுகாட்டு எரியாடும்
எந்தம்அடிகள் கடி கொள் சாரல் ஈங்கோய்மலையாரே.5

நீறார் அகலம் உடையார் நிரையார் கொன்றை அரவோடும்
ஆறார் சடையார் அயில்வெங்கணையால் அவுணர் புரம்மூன்றும்
சீறா எரிசெய் தேவர்பெருமான் செங்கண் அடல் வெள்ளை
ஏறார் கொடியார் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே. 6

வினையாயின தீர்த்து அருளே புரியும் விகிர்தன் விரிகொன்றை
நனையார் முடிமேல் மதியம் சூடும் நம்பான் நலம் மல்கு
தனையார் கமலமலர்மேல் உறைவான் தலையோடு அனல் ஏந்தும்
எனை ஆளுடையான் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே.7

பரக்கும் பெருமை இலங்கை என்னும் பதியில் பொலிவாய
அரக்கர்க்கு இறைவன் முடியும் தோளும் அணியார் விரல் தன்னால்
நெருக்கி அடர்த்து நிமலா போற்றி என்று நின்று ஏத்த
இரக்கம் புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே.8

வரியார் புலியின் உரி தோல் உடையான் மலையான் மகளோடும்
பிரியாது உடனாய் ஆடல் பேணும் பெம்மான் திருமேனி
அரியோடு அயனும் அறியாவண்ணம் அளவில் பெருமையோடு
எரியாய் நிமிர்ந்த எங்கள்பெருமான் ஈங்கோய்மலையாரே.9

பிண்டி ஏன்று பெயராநிற்கும் பிணங்கு சமணரும்
மண்டை கலனாக் கொண்டு திரியும் மதியில் தேரரும்
உண்டி வயிறார் உரைகள் கொள்ளாது உமையோடு உடனாகி
இண்டைச் சடையான் இமையோர் பெருமான் ஈங்கோய் மலையாரே.10

விழவார் ஒலியும் முழவும் ஓவா வேணுபுரம் தன்னுள்
அழலார் வண்ணத்து அடிகள் அருள்சேர் அணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ் ஈங்கோய்மலைஈசன்
கழல் சேர்பாடல் பத்தும் வல்லார் கவலை களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

142. திருப்பராய்த்துறை

திருமுறை : 1/135 பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

இறைவர் : பராய்த்துறைநாதர் இறைவியார் : பொன்மயிலம்மையார்

நீறு சேர்வது ஓர் மேனியர் நேரிழை
கூறுசேர்வது ஓர் கோலமாய்ப்
பாறு சேர் தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே. 1

கந்தம் ஆம் மலர்க்கொன்றை கமழ் சடை
வந்த பூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்த பராய்த்துறை
அந்தம் இல்ல அடிகளே. 2

வேதர் வேதம்எல்லாம் முறையால் விரித்து
ஓத நின்ற ஒருவனார்
பாதி பெண்உரு ஆவர் பராய்த்துறை
ஆதி ஆய அடிகளே. 3

தோலும் தம் அரை ஆடை சுடர்விடு
நூலும் தாம் அணி மார்பினர்
பாலும் நெய் பயின்று ஆடு பராய்த்துறை
ஆலநீழல் அடிகளே. 4

விரவி நீறு மெய் பூசுவர் மேனிமேல்
இரவில் நின்று எரிஆடுவர்
பரவினார் அவர் வேதம் பராய்த்துறை
அரவம் ஆர்த்த அடிகளே. 5

மறையும் ஓதுவர் மான்மறிக் கையினர்
கறை கொள் கண்டம் உடையவர்
பறையும் சங்கும் ஒலிசெய் பராய்த்துறை
அறைய நின்ற அடிகளே. 6

விடையும் ஏறுவர் வெண்பொடிப் பூசுவர்
சடையில் கங்கை தரித்தவர்
படை கொள் வெண்மழுவாளர் பராய்த்துறை
அடைய நின்ற அடிகளே. 7

தருக்கின் மிக்க தசக்கிரிவன்தனை
நெருக்கினார் விரல்ஒன்றினால்
பருக்கினார் அவர் போலும் பராய்த்துறை
அருக்கன் தன்னை அடிகளே. 8

நாற்றமாமலரானொடு மாலுமாய்த்
தோற்றமும் அறியாதவர்
பாற்றினார் வினையான பராய்த்துறை
ஆற்றல் மிக்க அடிகளே. 9

திருஇலிச் சிலதேர் அமண் ஆதர்கள்
உரு இலா உரை கொள்ளேலும்
பரு விலால் எயில் எய்துபராய்த்துறை
மருவினான்தனை வாழ்த்துமே. 10

செல்வம் மல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர் மேல்சிதையாதன
செல்வன் ஞானசம்பந்தன செந்தமிழ்
செல்வமாம் இவை செப்பவே. 11

திருச்சிற்றம்பலம்

143. திருக்கற்குடி

திருமுறை : 1/43 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : உச்சிநாதர் கற்பகநாதர் இறைவியார் : அஞ்சனாட்சியம்மை

வடம் திகழ் மென்முலையாளைப் பாகம்அதுஆக மதித்துத்
தடந் திரை சேர் புனல்மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடம் திகழ் முப்புரி நூலர் துன்பமொடு இன்பமது எல்லாம்
கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மா மலையாரே.1

அங்கம்ஓர் ஆறொடு ஐவேள்வி ஆன அருமறை நான்கும்
பங்கம் இல் பாடலோடு ஆடல் பாணி பயின்ற படிறர்
சங்கம்அது ஆர் குறமாதர்தம் கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மா மதி பற்றும் கற்குடி மா மலையாரே. 2

நீர் அகலம் தரு சென்னி நீடிய மத்தமும் வைத்துத்
தாரகையின் ஒளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்
போர் அகலம் தரு வேடர் புனத்திடை இட்ட விறகில்
கார்அகிலின் புகை விம்மும் கற்குடி மா மலையாரே. 3

ஒருங்கு அளி நீஇறைவா என்று உம்பர்கள் ஓலம் இடக் கண்டு
இருங்களம் ஆர விடத்தை இன்அமுது உன்னிய ஈசர்
மருங்கு அளியார் பிடி வாயில் வாழ் வெதிரின்முளை வாரிக்
கருங்களியானை கொடுக்கும் கற்குடி மா மலையாரே.4

போர் மலி திண் சிலை கொண்டு பூதகணம் புடைசூழப்
பார் மலி வேடுஉருஆகிப் பண்டு ஒருவர்க்கு அருள் செய்தார்
ஏர் மலி கேழல் கிளைத்த இன்ஒளி மா மணி எங்கும்
கார் மலி வேடர் குவிக்கும் கற்குடி மா மலையாரே.5

உலந்தவர் என்புஅது அணிந்தே ஊர் இடு பிச்சையர்ஆகி
விலங்கல்வில் வெங்கனலாலே மூஎயில் வேவ முனிந்தார்
நலம்தரு சிந்தையர் ஆகி நா மலி மாலையினாலே
கலந்தவர் காதலில் வாழும் கற்குடி மா மலையாரே.6

மான் இடம் ஆர்தரு கையர் மா மழு ஆரும் வலத்தார்
ஊன் இடை ஆர்தலை ஓட்டில் உண்கலனாக உகந்தார்
தேன் இடையார் தரு சந்தின் திண் சிறையால் தினை வித்திக்
கான் இடை வேடர் விளைக்கும் கற்குடி மா மலையாரே.7

வாள் அமர் வீரம் நினைந்த இராவணன் மாமலையின்கீழ்த்
தோள் அமர் வன்தலை குன்றத் தொல்விரல் ஊன்று துணைவர்
தாள் அமர் வேய் தலை பற்றித் தாழ் கரி விட்ட விசை போய்க்
காளம்அது ஆர்முகில் கீறும் கற்குடி மா மலையாரே. 8

தண்டு அமர் தாமரையானும் தாவி இம் மண்ணை அளந்து
கொண்டவனும் அறிவு ஒண்ணாக் கொள்கையர் வெள்விடை ஊர்வர்
வண்டு இசை ஆயின பாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டு அமர் மா மயில் ஆடும் கற்குடி மா மலையாரே. 9

மூத்துவர் ஆடையினாரும் மூசு கடுப்பொடியாரும்
நாத்துவர் பொய்ம்மொழியார்கள் நயம் இலரா மதி வைத்தார்
ஏத்து உயர் பத்தர்கள் சித்தர் இறைஞ்சு அவர் இடர்எல்லாம்
காத்தவர் காமரு சோலைக் கற்குடி மா மலையாரே.10

காமரு வார் பொழில் சூழும் கற்குடி மா மலையாரை
நா மரு வண்புகழ்க் காழி நலம் திகழ் ஞானசம்பந்தன்
பா மரு செந்தமிழ்மாலை பத்துஇவை பாடவல்லார்கள்
பூ மலி வானவரோடும் பொன்னுலகில் பொலிவாரே.11

திருச்சிற்றம்பலம்

144. திருமூக்கீச்சரம்

திருமுறை : 2/120 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி
இறைவர் : பஞ்சவர்ணேசுவரர் இறைவியார் : காந்திமதியம்மை

சாந்தம்வெண்நீறு எனப்பூசி வெள்ளம்சடை வைத்தவர்
காந்தள்ஆரும் விரல் ஏழையொடுஆடிய காரணம்
ஆய்ந்துகொண்டாங்கு அறியந் நிறைந்தார்அவர் ஆர்கொலோ
வேந்தன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே.1

வெண்தலையோர் கலனாப் பலிதேர்ந்து விரிசடைக்
கொண்டஆரும் புனல்சேர்த்து உமையாளொடும் கூட்டமா
விண்டவர்தம் மதில்எய்த பின்வேனில் வேள்வெந்துஎழக்
கண்டவர் மூக்கீச்சரத்து எம் அடிகள்செய் கன்மமே.2

மருவலார்தம் மதில் எய்ததுவும் மான் மதலையை
உருவில் ஆர அவ்வெரி ஊட்டியதும் உலகுண்டதால்
செருவிலாரும் புலிசெங் கயல் ஆனையினான் செய்த
பொருவின் மூக்கீச்சரத்து எம் அடிகள் செயும்பூசலே.3

அன்னம்அன்ன நடைச் சாயலாளோடு அழகுஎய்தவே
மின்னைஅன்ன சடைக்கங்கையாள் மேவிய காரணம்
தென்னன்கோழி எழில்வஞ்சியும் ஓங்கு செங்கோலினான்
மன்னன் மூக்கிச்சரத்து அடிகள் செய்கின்றதோர் மாயமே.4

விடமுனார் அவ்வழல் வாயதோர் பாம்பரை வீக்கியே
நடமுனார் அவ்வழல் ஆடுவர் பேயொடு நள்ளிருள்
வடமன்நீடு புகழ்ப்பூழியன் தென்னவன் கோழிமன்
அடல்மன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் அச்சமே.5

வெந்தநீறு மெய்யில்பூசுவர் ஆடுவர் வீங்குஇருள்
வந்தெனார் அவ்வளை கொள்வதும் இங்குஒரு மாயமாம்
அந்தண் மாமானதன் நேரியன்செம்பியன் ஆக்கிய
எந்தை மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் ஏதமே. 6

அரையில்ஆரும் கலைஇல்லவன் ஆணொடு பெண்ணுமாய்
உரையிலார் அவ்வழலாடுவர் ஒன்றலர் காண்மினோ
விரவலார்தம் மதில்மூன்று உடன்வெவ்வழல் ஆக்கினான்
அரையன் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் அச்சமே. 7

ஈர்க்கும்நீர் செஞ்சடைக்கு ஏற்றதும் கூற்றை உதைத்ததும்
கூர்க்கும் நன் மூவிலை வேல்வலன் ஏந்திய கொள்கையும்
ஆர்க்கும்வாயான் அரக்கன்உரத்தை நெரித்து அவ்வடல்
மூர்க்கன் மூக்கீச்சரத்து அடிகள் செய்யாநின்ற மொய்ம்புஅதே.8

நீர்உளாரும் மலர்மேல் உறைவான் நெடுமாலுமாய்ச்
சீர்உளாருங் கழல்தேட மெய்த்தீத்திரள் ஆயினான்
சீரினால்அங்கு ஒளிர்தென்ன வன்செம்பியன் வில்லவன்
சேரும் மூக்கிச்சரத்து அடிகள் செய்கின்றதோர் செம்மையே.9

வெண்புலால்மார்பு இடுதுகிளனர் வெற்றுஅரை உழல்பவர்
உண்பினாலே உரைப்பார் மொழிஊனமது ஆக்கினான்
ஒண்புலால்வேல் மிகவல்லவன் ஓங்குஎழில் கிள்ளிசேர்
பண்பின் மூக்கீச்சரத்து அடிகள் செய்கின்றதோர் பச்சையே. 10

மல்லைஆர் மும்முடி மன்னர் மூக்கீச்சரத்து அடிகளைச்
செல்வர்ஆக நினையும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய் வாழ்பவர் காழியுள் ஞானசம்பந்தன
சொல்லவல்லார் அவர் வானுலகு ஆளவும் வல்லரே11

திருச்சிற்றம்பலம்

145. திருச்சிராப்பள்ளி

திருமுறை : 1/98 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

இறைவர் : தாயுமானவர் இறைவியார் : மட்டுவார் குழலம்மை

நன்று உடையானைத் தீயது இலானை நரை வெள்ளேறு
ஒன்று உடையானை உமை ஒருபாகம் உடையானைச்
சென்று அடையாத திரு உடையானைச் சிராப்பள்ளிக்
குன்று உடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே.1

கைம் மகவு ஏந்திக் கடுவனொடுஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி
வெம் முக வேழத்து ஈர்உரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழிஅன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரை நீழல்
செந் தண் புனமும் சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேல்உடையார் விடை ஊரும்
எம்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரல் சுனை மல்கு நீலத்துஇடை வைகிச்
சிறை மல்கு வண்டும் தும்பியும் பாடும் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனல்எரிஆடும் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி உடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில்மூன்றும்
சிலை வரை ஆகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர் அல்லாமை உரைப்பீர்காள்
நிலவரை நீலம் உண்டதும் வெள்ளை நிறம் ஆமே. 5

வெய்ய தண்சாரல் விரி நிற வேங்கைத் தண்போது
செய்யபொன் சேரும் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையல் ஓர்பாகம் மகிழ்வர் நஞ்சு உண்பர் தலைஓட்டில்
ஐயமும் கொள்வர் ஆர் இவர் செய்கை அறிவாரே. 6

வேய் உயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேய் உயர் கோயில் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேய் உயர் கொள்ளி கைவிளக்கு ஆகப் பெருமானார்
தீ உகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்று ஆகாதே. 7

மலை மல்கு தோளன் வலி கெட ஊன்றி மலரோன்தன்
தலை கலன் ஆகப் பலி திரிந்து உண்பர் பழிஓரார்
சொல வல வேதம் சொல வல கீதம் சொல்லுங்கால்
சில அலபோலும் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புஉள்ளி நாடிக் கண்டிலரேனும் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்பு உள்ளீர் உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே.9

நாணாது உடை நீத்தோர்களும் கஞ்சி நாள்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவோர்கள் உரைக்கும்சொல்
பேணாது உறு சீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே.10

தேன் நயம்பாடும் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கு ஏறும் கழுமலஊரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவை வல்லார்
வான சம்பந்தத்து அவரொடு மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

146. திருநெடுங்களம்

திருமுறை : 1/52 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : தாயுமானவர் இறைவியார் : மட்டுவார் குழலம்மை

மறை உடையாய் தோல்உடையாய் வார்சடைமேல் வளரும்
பிறை உடையாய் பிஞ்ஞகனே என்று உனைப் பேசின் அல்லால்
குறை உடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறை உடையார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.1

கனைத்து எழுந்த வெண்திரை சூழ் கடல்இடை நஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை
மனத்துஅகத்தோர் பாடல் ஆடல் பேணி இராப்பகலும்
நினைத்து எழுவார் இடர் களைாய் நெடுங்களம் மேயவனே.2

நின் அடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என் அடியான் உயிரை வவ்வேல் என்றுஅடல் கூற்று உதைத்த
பொன்அடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின் அடியார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.3

மலை புரிந்த மன்னவன்தன் மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கை தங்கும் அவிர்சடை ஆரூரா
தலை புரிந்த பலி மகிழ்வாய் தலைவ நின் தாள்நிழல்கீழ்
நிலை புரிந்தார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே. 4

பாங்கின் நல்லார் படிமம் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலொடு தொழு கழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும் தலைவ நின் தாள்நிழல்கீழ்
நீங்கி நில்லார் இடர் களைபாய் நெடுங்களம் மேயவனே.5

விருத்தன் ஆகிப் பாலன்ஆகி வேதம்ஓர்நான்கு உணர்ந்து
கருத்தன் ஆகிக் கங்கையாளைக் கமழ் சடைமேல் கரந்தாய்
அருத்தன்ஆய ஆதிதேவன் அடிஇணையே பரவும்
நிருத்தர் கீதர் இடர் களையாய் நெடுங்களம்மேயவனே. 6

கூறு கொண்டாய் மூன்றும்ஒன்றாக் கூட்டிஓர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரம் எரித்த மன்னவனே கொடிமேல்
ஏறு கொண்டாய் சாந்தம்ஈது என்று எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.7

குன்றின் உச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை அரு வரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.8

வேழவெண்கொம்பு ஒசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேட ஆங்கு ஓர் சோதியுள் ஆகி நின்றாய்
கேழல்வெண்கொம்பு அணிந்த பெம்மான் கேடு இலாப்பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.9


வெஞ்சொல் தம் சொல் ஆக்கி நின்ற வேடம் இலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும் தத்துவம் ஒன்று அறியார்
துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திரம் நின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே.10

நீட வல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர் வாழும் மா மறுகின் சிரபுரக்கோன் நலத்தால்
நாட வல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருப்பாற்றுறை, திருஎறும்பியூர்த் திருமலை முதலிய தலங்களை வணங்கிய திருஞானசம்பந்தப் பெருமான் திருநெடுங்களத்தை அடைந்து இறைவனை அன்பால் 'நின்பால் நேசம் செலாவனைத் தடுக்கு மிடும்பை தீர்த்தருள்வாய்' என்னும் இப்பதிகத்தைப் பாடியருளினார்.



147. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

திருமுறை : 3/29 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : தீயாடியப்பர் இறைவியார் : வார்கொண்டமுலையாள், சௌந்தரநாயகி

வாருமன்னும் முலைமங்கைஓர் பங்கினன்
ஊரு மன்னும் பலி உண்பதும் வெண்தலை
காரு மன்னும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
நீரு மன்னும் சடை நிமலர்தம் நீர்மையே. 1

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பு அணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
அருத்தனார் அழகுஅமர் மங்கை ஓர்பாகமாப்
பொருத்தனார் கழல்இணை போற்றுதல் பொருளதே. 2

பண்ணின் ஆர் அருமறை பாடினார் நெற்றியோர்
கண்ணினார் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
விண்ணின் ஆர் விரிபுனல் மேவினார் சடைமுடி
அண்ணலார் எம்மைஆளுடைய எம் அடிகளே. 3

பணம் கொள் நாகம் அரைக்கு ஆர்ப்பது பல்பலி
உணங்கல்ஓடு உண்கலன் உறைவது காட்டுஇடைக்
கணங்கள் கூடித்தொழுது ஏத்துகாட்டுப்பள்ளி
நிணம் கொள் சூலப்படை நிமலர்தம் நீர்மையே. 4

வரை உலாம் சந்தொடு வந்து இழி காவிரிக்
கரை உலாம் இடு மணல் சூழ்ந்த காட்டுப்பள்ளித்
திரை உலாம் கங்கையும் திங்களும் சூடி அங்கு
அரை உலாம் கோவணத்து அடிகள் வேடங்களே. 5

வேதனார் வெண்மழு ஏந்தினார் அங்கம் முன்
ஓதினார் உமை ஒருகூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
நாதனார் திருவடி நாளும் நின்று ஏத்துமே. 6

மையினார் மிடறனார் மாமழு ஏந்திய
கையினார் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளித்
தையலோர் பாகமாகத் தண்மதி சூடிய
ஐயனார் அடிதொழ அல்லல் ஒன்று இல்லையே. 7

சிலைதனால் முப்புரம் செற்றவன் சீரினார்
மலைதனால் வல் அரக்கன் வலி வாட்டினான்
கலைதனார் புறவு அணி மல்கு காட்டுப்பள்ளி
தலைதனால் வணங்கிடத் தவம்அது ஆகுமே. 8

செங்கண் மால் திகழ்தரு மலர்உறை திசைமுகன்
தம் கையால் தொழுது எழத் தழல்உரு ஆயினான்
கங்கை ஆர் சடையினான் கருதுகாட்டுப்பள்ளி
அங்கையால் தொழும்அவர்க்கு அல்லல்ஒன்று இல்லையே. 9

போதியார் பிண்டியார் என்ற அப்பொய்யர்கள்
வாதினால் உரைஅவை மெய் அல வைகலும்
காரின் ஆர் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
ஏரினால் தொழுதுஎழ இன்பம் வந்து எய்துமே. 10

பொரு புனல் புடை அணி புறவ நன்நகர்மன்னன்
அருமறைஅவை வல்ல அணி கொள் சம்பந்தன்சொல்
கருமணிமிடற்றினன் கருது காட்டுப்பள்ளி
பரவிய தமிழ்சொல்லப் பறையும் மெய்ப் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

148. திருக்கண்டியூர்

திருமுறை : 3/38 பண் : கொல்லி இராகம் : நவரோசு
இறைவர் : வீரட்டேசுவரர் இறைவியார் : மங்களநாயகி
பிரமசிரக்கண்டீசர்

வினவினேன் அறியாமையில் உரை
செய்ம்மின் நீர் அருள் வேண்டுவீர்
கனைவில் ஆர் புனல் காவிரிக்கரை
மேய கண்டியூர் வீரட்டன்
தனம் முனே தனக்கு இன்மையோர் தர்
ஆயினார் அண்டம் ஆளத்தான்
வனனில் வாழ்க்கை கொண்டு ஆடிப்பாடி இவ்
வையம் மாப்பலி தேர்ந்ததே. 1

உள்ளவாறு எனக்கு உரைசெய்மின் உயர்
வாய மாதவம் பேணுவீர்
கள்ளவிழ் பொழில் சூழும் கண்டியூர்
வீரட்டத்து உறை காதலான்
பிள்ளை வான்பிறை செஞ்சடைம்மிசை
வைத்ததும் பெரு நீர்ஒலி
வெள்ளம் தாங்கியது என்கொலோ மிகு
மங்கையாள் உடனாகவே. 2

அடியர் ஆயினீர் சொல்லுமின் அறி
கின்றிலேன் அரன் செய்கையைப்
படியெலாம் தொழுது ஏத்து கண்டியூர்
வீரட்டத்துறை பான்மையான்

முடிவுமாய் முதலாய் இவ்வையம்
முழுதுமாய் அழகாயதோர்
பொடியதார் திருமார்பினில் புரி
நூலும் பூண்டுஎழு பொற்புஅதே. 3

பழைய தொண்டர்கள் பகருமின் பல ஆய
வேதியன் பான்மையைக்
கழையுலாம் புனல் மல்கு காவிரி
மன்னு கண்டியூர்வீரட்டன்
குழைஓர் காதினில் பெய்து உகந்து ஒரு
குன்றின் மங்கை வெருவுறப்
புழை நெடும் கைநன்மா உரித்து அது
போர்த்து உகந்த பொலிவதே. 4

விரவு இலாது உமைக் கேட்கின்றேன் அடி
விரும்பி ஆட்செய்வீர் விளம்புமின்
கரைஎலாம் திரை மண்டு காவிரிக்
கண்டியூர் உறை வீரட்டன்
முரவம் மொந்தை முழா ஒலிக்க
முழங்கு பேயொடும் கூடிப் போய்ப்
பரவு வானவர்க்கு ஆக வார்கடல்
நஞ்சம் உண்ட பரிசுஅதே. 5

இயலுமாறு எனக்கு இயம்புமின் இறை
வன்னும் ஆய் நிறை செய்கையைக்
கயல்நெடும் கண்ணினார்கள் தாம்பொலி
கண்டியூர் உறை வீரட்டன்

புயல் பொழிந்து இழி வான் உளோர்களுக்காக
அன்று அயன் பொய்ச்சிரம்
அயல் நக அது அரிந்து மற்றுஅதில்
ஊண் உகந்த அருத்தியே. 6

திருந்து தொண்டர்கள் செப்புமின் மிகச்
செல்வன் தன்னது திறம்எலாம்
கருந்தடம் கண்ணினார்கள் தாம்தொழு
கண்டியூர் உறை வீரட்டன்
இருந்து நால்வரொடு ஆல்நிழல் அறம்
உரைத்ததும் மிகு வெம்மையார்
வருந்த வன்சிலையால் அம் மாமதில்
மூன்றும் மாட்டிய வண்ணமே. 7

நாவிரித்து அரன் தொல் புகழ் பல
பேணுவீர் இறை நல்குமின்
காவிரித்தடம் புனல்செய் கண்டியூர்
வீரட்டத்து உறை கண்ணுதல்
கோவிரிப் பயன் ஆன்அஞ்சு ஆடிய
கொள்கையும் கொடி வரைபெற
மாவரைத் தலத்தால் அரக்கனை
வலியை வாட்டிய மாண்பதே. 8

பெருமையே சரணாக வாழ்வுறும்
மாந்தர்காள் இறை பேசுமின்
கருமையார் பொழில் சூழும் தண்வயல்
கண்டியூர் உறை வீரட்டன்

ஒருமையால் உயர் மாலும் மற்றை
மலரவன் உணர்ந்து ஏத்தவே
அருமையால் அவருக்கு உயர்ந்து எரி ஆகி
நின்ற அத்தன்மையே. 9

நமர் எழுபிறப்பு அறுக்கும் மாந்தர்காள்
நவிலுமின் உமைக் கேட்கின்றேன்
கமர் அழிவயல் சூழும் தண்புனல்
கண்டியூர் உறை வீரட்டன்
தமர் அழிந்து எழு சாக்கியச் சமண்
ஆதர் ஓதும் அது கொளாது
அமரர் ஆனவர் ஏத்த அந்தகன்
தன்னைச் சூலத்தில் ஆய்ந்ததே. 10

கருத்தனைப் பொழில் சூழும் கண்டியூர்
வீரட்டத்து உறை கள்வனை
அருத்தனைத் திறம் அடியார்பால் மிகக்
கேட்டு உகந்த வினா உரை
திருத்தம் ஆம் திகழ் காழி ஞானசம்
பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்தர் ஆகிலும் பலர்கள் ஆகிலும்
உரை செய்வார் உயர்ந்தார்களே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருக்கண்டியூருக்கு எழுந்தருளிய பிள்ளையார் திருக்கோயிலை அடைந்து வீரட்டானேச்சுவரைப் பாட எடுத்த 'வினவினேன்' என்னுந் திருப்பதிகத்தில் அடியார் திருக்கூட்டத்தை நோக்கி வீரட்டானரது திருஅருள் தன்மையை அவ்வடியார் உணரும் பண்பிற்கேட்டு வினாவுரையாகப் பாடியருளினார்.

149. திருச்சோற்றுத்துறை

திருமுறை : 1/28 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : தொலையாச்செல்வர் இறைவியார் : ஒப்பிலாம்மை
ஓதவனேசுவரர் அன்னபூரணி

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்பன் என்னாது அருளே துணையாக
ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளி வெண்நீற்று
அப்பர் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 1

பாலும் நெய்யும் தயிரும் பயின்று ஆடித்
தோலும் நாலும் துதைந்த வரைமார்பர்
மாலும் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலும் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 2

செய்யர் செய்யசடையர் விடை ஊர்வர்
கை கொள் வேலர் கழலர் கரிகாடர்
தையலாள் ஒர் பாகம்ஆய எம்
ஐயர் சோற்றுத் துறை சென்று அடைவோமே. 3

பிணி கொள் ஆக்கை ஒழியப் பிறப்புளீர்
துணி கொள் போரார் துளங்கும் மழுவாளர்
மணி கொள் கண்டர் மேய வார் பொழில்
அணி கொள் சோற்றுத் துறை சென்று அடைவோமே. 4

பிறையும் அரவும் புனலும் சடை வைத்து
மறையும் ஓதி மயானம் இடமாக
உறையும் செல்வம் உடையார் காவிரி
அறையும் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 5

துடிகளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசி புறங்காடு அரங்குஆகப்
படி கொள் பாணி பாடல் பயின்று ஆடும்
அடிகள் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 6

சாடிக் காலன் மாள தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டுஆய் வருவார் தாம்
பாடி ஆடிப் பரவுவார் உள்ளத்து
ஆடி சோற்றுத்துறை சென்று அடைவோமே. 7

பெண் ஓர்பாகம் உடையார் பிறைச்சென்னிக்
கண் ஓர்பாகம் கலந்த நுதலினார்
எண்ணாது அரக்கன் எடுக்க ஊன்றிய
அண்ணல் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 8

தொழுவார்இருவர் துயரம் நீங்கவே
அழல்ஆய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியால் மிக்க எம்
எழிலார் சோற்றுத்துறை சென்று அடைவோமே. 9

கோது சாற்றித் திரிவார் அமண்குண்டர்
ஓதும் ஓத்தை உணராது எழு நெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத்துறை சென்று அடைவோமே. 10

அம் தண் சோற்றுத்துறை எம் ஆதியைச்
சிந்தை செய்ம்மின் அடியார் ஆயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்தவாறே புனைதல் வழிபாடே. 11

திருச்சிற்றம்பலம்

150. திருவேதிகுடி

திருமுறை : 3/78 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : வேதபுரீசுவரர், ஆராஅமுதநாதர். இறைவியார் : மங்கையர்க்கரசி

நீறு வரி ஆடுஅரவொடு ஆமை மன என்பு நிரை பூண்பர் இடம்
ஏறுவரி யாவரும் இறைஞ்சு கழல் ஆதியர் இருந்த இடம்ஆம்
தாறு விரி பூகம் மலி வாழை விரை நாற விணைவாளை மடுவில்
வேறு பிரியாது விளையாட வளம் ஆரும் வயல் வேதிகுடியே. 1

சொற் பிரிவு இலாத மறை பாடி நடம்ஆடுவர் தொல் ஆனைஉரிவை
மற் புரி புயத்து இனிது மேவுவர் எந்நாளும் வளர் வானவர் தொழத்
துற்பரிய நஞ்சம் அமுதம் ஆக முன் அயின்றவர் இயன்ற தொகு சீர்
வெற்புஅரையன்மங்கைஒருபங்கர் நகர் என்பர் திரு வேதிகுடியே. 2

போழும் மதி பூண் அரவு கொன்றைமலர் துன்று சடை வென்றி புக மேல்
வாழும் நதி தாழும்அருளாளர் இருள் ஆர் மிடறர் மாதர் இமையோர்
சூழும் இரவாளர் திருமார்பில் விரிநூலர் வரிதோலர் உடை மேல்
வேழஉரி போர்வையினர் மேவுபதி என்பர் திரு வேதிகுடியே. 3

காடர் கரி காலர்கனல் கையர் அனல் மெய்யர் உடல் செய்யர் செவியில்
தோடர் தெரி கீளர் சரி கோவணவர் ஆவணவர் தொல்லை நகர்தான்
பாடல் உடையார்கள் அடியார்கள் மலரோடு புனல் கொண்டுபணிவார்
வேடம் ஒளியான பொடி பூசி இசை மேவு திரு வேதிகுடியே. 4

சொக்கர் துணை மிக்க எயில் உக்கற முனிந்து தொழு மூவர்மகிழத்
தக்க அருள் பக்கம் உற வைத்த அரனார் இனிது தங்கும் நகர்தான்
கொக்கரவம் உற்றபொழில் வெற்றி நிழல் பற்றி வரிவண்டு இசைகுலாம்
மிக்கு அமரர் மெச்சி இனிது அச்சம் இடர் போக நல்கு வேதிகுடியே. 5

செய்யதிருமேனிமிசை வெண்பொடி அணிந்து கரு மான் உரிவைபோர்த்து
ஐயம்இடும் என்று மடமங்கையொடு அகம்திரியும் அண்ணல்இடமாம்
வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ்மிக்கு இழிவிலாத வகையார்
வெய்ய மொழி தண்புலவருக்கு உரைசெயாத அவர் வேதிகுடியே. 6

உன்னி இருபோதும் அடி பேணும் அடியார் தம்இடர் ஒல்கஅருளித்
துன்னி ஒரு நால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன் தன்இடமாம்
கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பிஅரும் மங்கலமிக
மின்இயலும் நுண்ணிடை நன் மங்கையர் இயற்று பதி வேதிகுடியே.7

உரக் கரம் நெருப்பு எழ நெருக்கி வரை பற்றிய ஒருத்தன் முடி தோள்
அரக்கனை அடர்த்தவன் இசைக்கு இனிது நல்கி அருள் அங்கணன் இடம்
முருக்குஇதழ் மடக்கொடி மடந்தையரும் ஆடவரும் மொய்த்த கலவை
விரைக்குழல் மிகக்கமழ விண்இசை உலாவு திருவேதிகுடியே.8

பூவின்மிசை அந்தணனொடு ஆழி பொலி அங்கையனும் நேடஎரியாய்த்
தேவும் இவர் அல்லர் இனி யாவர் என நின்று திகழ்கின்றவன் இடம்
பாவலர்கள் ஓசைஇயல் கேள்விஅது அறாத கொடையாளர் பயில்வாம்
மேவு அரிய செல்வம் நெடுமாடம் வளர் வீதி நிகழ் வேதிகுடியே.9

வஞ்சஅமணர் தேரர் மதிகேடர் தம்மனத்து அறிவிலாதவர் மொழி
தஞ்சம் என என்றும் உணராத அடியார் கருது சைவன் இடமாம்
அஞ்சுபுலன் வென்று அறுவகைப்பொருள் தெரிந்து எழு இசைக்கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி நிகழ்கின்ற திரு வேதிகுடியே.10

கந்தம் மலி தண்பொழில் நல் மாட மிடை காழி வளர் ஞானம் உணர்சம்
பந்தன் மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி ஆதி கழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள் என்ன நிகழ்வு எய்தி இமையோர்
அந்த உலகு எய்தி அரசாளும் அதுவே சரதம் ஆணைநமதே.11

திருச்சிற்றம்பலம்

151. திருத்தென்குடித்திட்டை

திருமுறை : 3/35 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : பசுபதிநாதர் இறைவியார் : உலகநாயகி

முன்னை நால்மறை அவை முறைமுறை குறையொடும்
தன்ன தாள் தொழுது எழ நின்றவன் தன்னிடம்
மன்னு மா காவிரி வந்து அடி வருடநல்
செந்நெல் ஆர் வளவயல் தென்குடித் திட்டையே. 1

மகரம் ஆடும்கொடி மன்மதவேள் தனை
நிகரல் ஆகா நெருப்பு எழ விழித்தான் இடம்
பகர வாள் நித்திலம் பல்மகரத்தொடும்
சிகர மாளிகை தொகும் தென்குடித் திட்டையே. 2

கருவினால் அன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினால் அன்றியே உருவுசெய்தான் இடம்
பருவ நாள் விழவொடும் பாடலோடு ஆடலும்
திருவினால் மிகு புகழ்த் தென்குடித் திட்டையே. 3

உண்ணிலாவு ஆவிஆய் ஓங்கு தன் தன்மையை
விண்ணிலார் அறிகிலா வேதவேதாந்தன் ஊர்
எண் இல் ஆர் எழில் மணிக் கனக மாளிகை இளம்
தெண்நிலா விரிதரும் தென்குடித் திட்டையே. 4

வருந்தி வானோர்கள் வந்து அடைய மா நஞ்சு தான்
அருந்தி ஆர்அமுது அவர்க்கு அருள்செய்தான் அமரும்ஊர்
செருந்தி பூமாதவிப் பந்தர் வண் செண்பகம்
திருந்து நீள் வளர் பொழில் தென்குடித் திட்டையே. 5

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறனார் அமர்தரும் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத்து ஐயுணர்வு எய்திமெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே. 6

கான் அலைக்கும் அவன் கண்ணிடந்து அப்பநீள்
வான் அலைக்கும் தவம் தேவு வைத்தானிடம்
தான் அலைத் தெள் அம் ஊர் தாமரைத் தண்துறை
தேன் அலைக்கும் வயல் தென்குடித் திட்டையே. 7

மாலொடும் பொருதிறல் வாள் அரக்கன் நெரிந்து
ஓலிடும் படிவிரல் ஒன்று வைத்தான் இடம்
காலொடும் கனகமூக்கு உடன்வரக் கயல்வரால்
சேலொடும் பாய்வயல் தென்குடித் திட்டையே. 8

நாரணன் தன்னொடு நான்முகன் தானுமாய்க்
காரணன் அடிமுடி காண ஒண்ணான் இடம்
ஆரணம்கொண்டு பூசுரர்கள் வந்து அடி தொழச்
சீர் அணங்கும் புகழ்த் தென்குடித் திட்டையே. 9

குண்டிகைக் கையுடைக் குண்டரும் புத்தரும்
பண்டு உரைத்து ஏயிடும் பற்று விட்டீர் தொழும்
வண்டு இரைக்கும் பொழில் தண்தலைக் கொண்டலார்
தெண்திரைத் தண்புனல் தென்குடித் திட்டையே. 10

தேன் நல் ஆர் சோலைசூழ் தென்குடித் திட்டையைக்
கானல் ஆர் கடிபொழில் சூழ்தரும் காழியுள்
ஞானம் ஆர் ஞானசம்பந்தன செந்தமிழ்
பால் நல் ஆர் மொழி வலார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

152. திருப்புள்ளமங்கை

திருமுறை : 1/16 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

இறைவர் : பசுபதிநாதர் இறைவியார் : பால்வளைநாயகி

ஆலந்துறைநாதர் அல்லியங்கோதை

பால் உந்துஉறு திரள் ஆயின பரமன் பிரமன்தான்
போலும் திறலவர் வாழ்தரு பொழில் சூழ் புளமங்கைக்
காலன் திறல் அறச்சாடிய கடவுள் இடம் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை அடையா வினை தானே.1

மலையான்மகள்கணவன் மலி கடல் சூழ்தரு தன்மைப்
புலைஆயின களைவான் இடம் பொழில் சூழ்புளமங்கைக்
கலையால் மலி மறையோர் அவர் கருதித் தொழுது ஏத்த
அலையார் புனல் வரு காவிரி ஆலந்துறை அதுவே. 2

கறையார் மிடறு உடையான் கமழ் கொன்றைச் சடை முடிமேல்
பொறையார் தரு கங்கைப்புனல் உடையான் புளமங்கைச்
சிறையார் தரு களி வண்டு அறைபொழில் சூழ் திரு ஆலம்
துறையான் அவன் நறையார் கழல் தொழுமின் துதிசெய்தே. 3

தணியார் மதி அரவின்னொடு வைத்தான் இடம் மொய்த்து எம்
பணியாய் அவன் அடியார் தொழுது ஏத்தும் புளமங்கை
மணியார் தரு கனகம் அவை வயிரத் திரளோடும்
அணியார் மணல் அணை காவிரி ஆலந்துறை அதுவே.4

மெய்த்தன் உறும் வினை தீர் வகை தொழுமின் செழுமலரின்
கொத்தின்னொடு சந்தார் அகில் கொணர் காவிரிக் கரைமேல்
பொத்தின் இடை ஆந்தை பல பாடும் புளமங்கை
அத்தன்நமை ஆள்வான்இடம் ஆலந்துறை அதுவே. 5

மன்ஆனவன் உலகிற்குஒரு மழைஆனவன் பிழையில்
பொன்ஆனவன் முதல்ஆனவன் பொழில் சூழ்புளமங்கை
என்ஆனவன் இசைஆனவன் இளஞாயிறின் சோதி
அன்னான் அவன் உறையும் இடம் ஆலந்துறை அதுவே.6

முடி ஆர்தரு சடைமேல் முளைஇளவெண்மதி சூடிப்
பொடிஆடிய திருமேனியர் பொழில் சூழ்புளமங்கைக்
கடி ஆர் மலர் புனல் கொண்டு தன் கழலே தொழுது ஏத்தும்
அடியார் தமக்கு இனியான் இடம் ஆலந்துறை அதுவே.7

இலங்கை மனன் முடிதோள் இற எழில் ஆர் திருவிரலால்
விலங்கல் இடை அடர்த்தான் இடம் வேதம் பயின்று ஏத்திப்
புலன்கள் தமை வென்றார் புகழ் அவர் வாழ்புள மங்கை
அலங்கல் மலி சடையான் இடம் ஆலந்துறை அதுவே. 8

செறி ஆர்தரு வெள்ளைத் திருநீற்றின் திருமுண்டப்
பொறி ஆர்தரு புரிநூல் வரைமார்பன் புளமங்கை
வெறி ஆர்தரு கமலத்து அயன் மாலும் தனை நாடி
அறியா வகை நின்றான் இடம் ஆலந்துறை அதுவே. 9

நீதி அறியாதார் அமண் கையரொடு மண்டைப்
போதியவர் ஓதும் உரை கொள்ளார் புளமங்கை
ஆதி அவர் கோயில் திரு ஆலந்துறை தொழுமின்
சாதிம் மிகு வானோர் தொழு தன்மைபெறல் ஆமே. 10

பொந்தின் இடைத்தேன் ஊறிய பொழில் சூழ்புளமங்கை
அம்தண்புனல் வரு காவிரி ஆலந்துறை யானைக்
கந்தம் மலி கமழ் காழியுள் கலை ஞானசம்பந்தன்
சந்தம் மலி பாடல் சொலி ஆடத்தவம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

153. திருச்சக்கரப்பள்ளி

திருமுறை : 3/27 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : சக்கரவாகேசுவரர், பசுபதி நாயகர்

இறைவியார் : தேவநாயகி அல்லியங்கோதை

படையினார் வெண்மழுப் பாய் புலித்தோல் அரை
உடையினார் உமைஒருகூறனார் ஊர்வதுஓர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப்பள்ளியே. 1

பாடினார் அருமறை பணிமதி சடைமிசைச்
சூடினார் படுதலை துன் எருக்கு அதனொடும்
நாடினார் இடு பலி நண்ணி ஓர் காலனைச்
சாடினார் வள நகர் சக்கரப்பள்ளியே. 2

மின்னினார் சடைமிசை விரி கதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறி கிளர் அரவமும்
துன்னினார் உலகெலாம் தொழுதுஎழ நால்மறை
தன்னினார் வளநகர் சக்கரப் பள்ளியே. 3

நலம் மலி கொள்கையார் நால்மறை பாடலார்
வலம் மலி மழுவினார் மகிழும் ஊர் வண்டு அறை
மலர் மலி சலமொடு வந்து இழி காவிரி
சலசல மணி கொழி சக்கரப்பள்ளியே. 4

வெந்தவெண்பொடி அணி வேதியர் விரிபுனல்
அந்தம் இல் அணி மலைமங்கையோடு அமரும்ஊர்
கந்தம் ஆர் மலரொடு கார்அகில் பன்மணி
சந்தினோடு அணை புனல் சக்கரபபள்ளியே. 5

பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமை ஒரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடம் சக்கரப்பள்ளியே. 6

பாரினார் தொழுது எழு பரவு பல்லாயிரம்
பேரினார் பெண் ஒரு கூறனார் பேர்ஒலி
நீரினார் சடைமுடி நிரை மலர்க்கொன்றை அம்
தாரினார் வளநகர் சக்கரப்பள்ளியே. 7

முதிர் இலா வெண்பிறை சூடினார் முன்னநாள்
எதிர் இலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அதிர் இலா வல்அரக்கன் வலி வாட்டிய
சதிரினார் வள நகர் சக்கரப்பள்ளியே. 8

துணி படு கோவணம் சுண்ணவெண்பொடியினர்
பணி படு மார்பினர் பனிமதிச் சடையினர்
மணிவணன் அவனொடு மலர்மிசையானையும்
தணிவினர் வளநகர் சக்கரப்பள்ளியே. 9

உடம்பு போர் சீவரர் ஊண்தொழில் சமணர்கள்
விடம் படும் உரைஅவை மெய் அல விரிபுனல்
வடம் படு மலர்கொடு வணங்குமின் வைகலும்
தடம் புனல் சூழ்தரு சக்கரப்பள்ளியே. 10

தண்வயல் புடை அணி சக்கரப்பள்ளி எம்
கண்ணுதல் அவன் அடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம்பந்தன் சொல்
பண்ணிய இவைசொலப் பறையும் மெய்ப் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

154. திருக்கருகாவூர்

திருமுறை : 3/46 பண் : கௌசிகம் இராகம் : பைரவி
இறைவர் : முல்லைவனேசுவரர், இறைவியார் : கரும்பனையாளம்மை
கர்ப்பரட்சகி

முத்து இலங்கு முறுவல் உமை அஞ்சவே
மத்தயானை மறுகவ்வுரி வாங்கி அக்
கத்தை போர்த்த கடவுள் கருகாவூர் எம்
அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 1

விமுதல் வல்ல சடையான் வினை உள்குவார்க்கு
அமுத நீழல் அகலாததோர் செல்வமாம்
கமுதம் முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 2

பழக வல்ல சிறுத்தொண்டர் பாவின் இசைக்
குழகர் என்று குழையா அழையாவரும்
கழல் கொள் பாடல் உடையார் கருகாவூர் எம்
அழகர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 3

பொடி மெய் பூசி மலர் கொய்து புணர்ந்துஉடன்
செடியர் அல்லா உள்ளம் நல்கிய செல்வத்தர்
கடி கொள் முல்லை கமழும் கருகாவூர்எம்
அடிகள் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 4

மையல் இன்றி மலர் கொய்து வணங்கிடச்
செய்யஉள்ளம் மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லை கமழும் கருகாவூர்எம்
ஐயர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 5

மாசில் தொண்டர் மலர் கொண்டு வணங்கிட
ஆசை ஆர அருள் நல்கிய செல்வத்தர்
காய் சினத்த விடையார் கருகாவூர்எம்
ஈசர் வண்ணம் எரியும் எரி வண்ணமே. 6

வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
சிந்தை நின்று அருள் நல்கிய செல்வத்தன்
கந்த மௌவல் கமழும் கருகாவூர்எம்
எந்தை வண்ணம் எரியும் எரி வண்ணமே. (7–8)

பண்ணின் நேர்மொழியாளையொர் பாகனார்
மண்ணு கோலம்உடை அம்மலரானொடும்
கண்ணன் நேட அரியார் கருகாவூர்எம்
அண்ணல் வண்ணம் அழலும் அழல் வண்ணமே. 9

போர்த்த மெய்யினர் போது உழல்வார்கள் சொல்
தீர்த்தம் என்று தெளிவீர் தெளியேன்மின்
கார்த்தண் முல்லை கமழும் கருகாவூர்எம்
ஆத்தர் வண்ணம் அழலும்அழல் வண்ணமே. 10

கலவ மஞ்ஞை உலவும் கருகாவூர்
நிலவு பாடல் உடையான் தன் நீள்கழல்
குலவு ஞானசம்பந்தன செந்தமிழ்
சொலவலார் அவர் தொல்வினை தீருமே. 11

திருச்சிற்றம்பலம்

155. திருநல்லூர்

திருமுறை : 1/86 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

கொட்டும் பறை சீரால் குழும அனல் ஏந்தி
நட்டம் பயின்று ஆடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின்று இருபோதும் முனியாது எழுந்து அன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே. 1

ஏறில் எருது ஏறும் எழில் ஆயிழையோடும்
வேறும் உடனும் ஆம் விகிர்தர்அவர் என்ன
நாறும் மலர்ப் பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் அடியார்கட்கு அடையா குற்றமே. 2

சூடும் இளந்திங்கள் சுடர்பொற்சடை தாழ
ஓடு உண்கலன் ஆக ஊர்ஊர் இடு பிச்சை
நாடும் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் அடியார்கட்கு அடையா பாவமே. 3

நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப்பித் தொழுது
ஏத்தும் அடியார்கட்கு இல்லை இடர்தானே. 4

ஆகத்து உமைகேள்வன் அரவச் சடை தாழ
நாகம் அசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்து அண்மித் தாள்கள் தொழும் தொண்டர்
போகம் மனத்தராய்ப் புகழத் திரிவாரே. 5

கொல்லும் களியானை உரி போர்த்து உமைஅஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லும் நெறியானைச் சேர்ந்தார் இடர்தீரச்
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே. 6

எங்கள் பெருமானை இமையோர் தொழுது ஏத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவு இல்லாத்
தம் கை தலைக்கு ஏற்றி ஆள் என்று அடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற்று அறுப்பாரே. 7

காமன் எழில் வாட்டிக் கடல்சூழ் இலங்கைக் கோன்
நாமம் இறுத்தானை நல்லூர்ப் பெருமானை
ஏம மனத்தாராய் இகழாது எழும் தொண்டர்
தீபமனத்தார்கள் அறியார் தீயவே. 8

வண்ண மலரானும் வையம் அளந்தானும்
நண்ணல் அரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ணமலர் தூவித் தாள்கள் தொழுது ஏத்த
எண்ணும் அடியார்கட்கு இல்லை இடுக்கணே. 9

பிச்சக்குடை நீழற் சமணர் சாக்கியர்
நிச்சம் அலர் தூற்ற நின்ற பெருமானை
நச்சுமிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சும் அடியார்கட்கு இல்லை இடர்தானே. 10

தண்ணம்புனல் காழி ஞானசம்பந்தன்
நண்ணும் புனல் வேலி நல்லூர்ப் பெருமானை
வண்ணம் புனை மாலை வைகல் ஏத்துவார்
விண்ணும் நிலனுமாய் விளங்கும் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

156. திருநல்லூர்

திருமுறை : 2/57 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : பெரியாண்டவர் இறைவியார் : திரிபுரசுந்தரி,
கலியாணசுந்தரேசுவரர் கலியாணசுந்தரி

பெண் அமரும் திருமேனி உடையீர் பிறங்கு சடை தாழப்
பண் அமரும் நால்மறையே பாடி ஆடல் பயில்கின்றீர்
திண் அமரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த திரு நல்லூர்
மண் அமரும் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 1

அலை மல்கு தண்புனலும் பிறையும்சூடி அங்கையில்
கொலை மல்கு வெண்மழுவும் அனலும் ஏந்தும் கொள்கையீர்
சிலை மல்கு வெங்கணையால் புரம்மூன்று எரித்தீர் திரு நல்லூர்
மலை மல்கு கோயிலே கோயில் ஆக மகிழ்ந்தீரே. 2

குறை நிரம்பா வெண்மதியம் சூடிக் குளிர்புன்சடை தாழப்
பறை நவின்ற பாடலோடு ஆடல் பேணிப் பயில்கின்றீர்
சிறை நவின்ற தண்புனலும் வயலும் சூழ்ந்த திருநல்லூர்
மறை நவின்ற கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 3

கூன் அமரும் வெண்பிறையும் புனலும் சூடும் கொள்கையீர்
மான் அமரும் மென்விழியாள் பாகம் ஆகும் மாண்பினீர்
தேன் அமரும் பைம்பொழிலின் வண்டு பாடும் திருநல்லூர்
வான் அமரும் கோயிலே கோயில்ஆக மகிழ்ந்தீரே. 4

நிணம் கவரும் மூவிலையும் அனலும் ஏந்தி நெறிகுழலாள்
அணங்கு அமரும் பாடலோடு ஆடல் மேவும் அழகினீர்
திணம் கவரும் ஆடுஅரவும் பிறையும்சூடித் திரு நல்லூர்
மணம் கமழும் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 5

கார்மருவு பூங்கொன்றை சூடிக்கமழ் புன்சடை தாழ
வார் மருவு மென்முலையாள் பாகமாகும் மாண்பினீர்
தேர் மருவு நெடுவீதிக் கொடிகள் ஆடும் திரு நல்லூர்
ஏர் மருவு கோயிலே கோயிலாக இருந்தீரே. 6

ஊன் தோயும் வெண்மழுவும் அனலும் ஏந்தி உமை காண
மீன் தோயும் திசை நிறைய ஓங்கி ஆடும் வேடத்தீர்
தேன் தோயும் பைம்பொழிலின் வண்டு பாடும் திரு நல்லூர்
வான் தோயும் கோயிலே கோயில் ஆக மகிழ்ந்தீரே. 7

காது அமரும் வெண்குழையீர் கறுத்த அரக்கன் மலை எடுப்ப
மாது அமரும் மென்மொழியாள் மறுகும் வண்ணம் கண்டு உகந்தீர்
தீது அமரா அந்தணர்கள் பரவி ஏத்தும் திரு நல்லூர்
மாது அமரும் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 8

போதின்மேல் அயன் திருமால் போற்றி உம்மைக் காணாது
நாதனே இவன் என்று நயந்து ஏத்த மகிழ்ந்து அளித்தீர்
தீது இலா அந்தணர்கள் தீமூன்று ஓம்பும் திரு நல்லூர்
மாதராள் அவளோடு மன்னு கோயில் மகிழ்ந்தீரே. 9

பொல்லாத சமணரொடு புறம்கூறும் சாக்கியர் ஒன்று
அல்லாதார் அறஉரைவிட்டு அடியார்கள் போற்று ஓவா
நல்லார்கள் அந்தணர்கள் நாளும் ஏத்தும் திருநல்லூர்
மல்லார்ந்த கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 10

கொந்து அணவும் பொழில் புடை சூழ் கொச்சை மேவு குலவேந்தன்
செந்தமிழின் சம்பந்தன் சிறை வண்புனல் சூழ் திருநல்லூர்ப்
பந்து அணவும் மெல்விரலாள் பங்கன்தன்னைப் பயில் பாடல்
சிந்தையால் உரைசெய்வார் சிவலோகம் சேர்ந்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

157. திருநல்லூர்

திருமுறை : 3/83 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

வண்டு இரிய விண்ட மலர் மல்கு சடை தாழ விடை ஏறிப்
பண்டு எரி கை கொண்ட பரமன் பதியது என்பர்அதன் அயலே
நண்டு இரிய நாரை இரை தேர வரைமேல் அருவி முத்தம்
தெண்திரைகள் மோத விரி போது கமழும் திரு நலூரே. 1

பல் வளரும் நாகம் அரை யார்த்து வரைமங்கை ஒருபாகம்
மல் வளர்புயத்தில் அணைவித்து மகிழும் பரமன் இடமாம்
சொல் வளர் இசைக்கிளவி பாடி மடவார் நடம்அது ஆடச்
செல்வ மறையோர்கள் முறை ஏத்த வளரும் திரு நலூரே. 2

நீடுவரை மேரு வில்அதுஆக நிகழ் நாகம் அழல் அம்பால்
கூடலர்கள் மூவெயில் எரித்த குழகன் குலவு சடைமேல்
ஏடு உலவு கொன்றை புனல் நின்று திகழும் நிமலன் இடமாம்
சேடுஉலவு தாமரைகள் நீடுவயலார் திரு நலூரே. 3

கருகு புரி மிடறர் கரிகாடர் எரி கைஅதனில் ஏந்தி
அருகு வரு கரியின் உரி அதள் படஅரவர் இடம் வினவில்
முருகு விரி பொழிலின் மணம் நாற மயில் ஆல மரம் ஏறித்
திருகு சின மந்தி கனி சிந்த மது வார் திரு நலூரே. 4

பொடி கொள் திரு மார்பர் புரிநூலர் புனல் பொங்கு அரவு தங்கும்
முடி கொள் சடை தாழ விடை ஏறு முதலாளர்அவர் இடமாம்
இடி கொள் முழவுஓசை எழிலார் செய்தொழிலாளர் விழமல்கச்
செடி கொள் வினை அகல மனம் இனியவர்கள் சேர் திரு நலூரே. 5

புற்றரவர் நெற்றியொர்கண் ஒற்றை விடை ஊர்வர் அடையாளம்
சுற்றம் இருள் பற்றிய பல்பூதம் இசை பாட நசையாலே
கற்ற மறை உற்று உணர்வர் பற்றலர்கள் முற்றும் எயில்மாளச்
செற்றவர் இருப்பிடம் நெருக்கு புனலார் திருநலூரே. 6

பொங்கு அரவர் அங்கமுடன்மேல் அணிவர் ஞாலம்இடு பிச்சை
தங்கு அரவம் ஆக உழி தந்துமெய் துலங்கிய வெண்நீற்றர்
கங்கை அரவம் விரவு திங்கள் சடை அடிகள் இடம் வினவில்
செங்கயல் வதிக் குதிகொளும் புனல்அது ஆர் திரு நலூரே. 7

ஏறு புகழ் பெற்ற தென்இலங்கையவர்கோனை அரு வரையில்
சீறி அவனுக்கு அருளும் எங்கள் சிவலோகன் இடமாகும்
கூறும் அடியார்கள் இசை பாடிவலம் வந்து அயரும் அருவிச்
சேறு கமர் ஆன அழியத் திகழ்தரும் திரு நலூரே. 8

மாலும் மலர்மேல் அயனும் நேடி அறியாமை எரியாய
கோலம் உடையான் உணர்வு கோதில்புகழான் இடமது ஆகும்
நாலுமறை அங்கம் முதல் ஆறும் எரி மூன்று தழல் ஓம்பும்
சீலம் உடையார்கள் நெடுமாடம் வளரும் திரு நலூரே. 9

கீறும்உடை கோவணம் இலாமையில் உலோவிய தவத்தர்
பாறும் உடல் மூடு துவர் ஆடையர்கள் வேடம்அவை பாரேல்
ஏறு மடவாளொடு இனிது ஏறி முனிருந்தவிடமென்பர்
தேறும் மன வாரம் உடையார் குடிசெயும் திரு நலூரே. 10

திரைகள் இருகரையும் வரு பொன்னி நிலவும் திருநலூர்மேல்
பரசுதருபாணியை நலம் திகழ்செய் தோணிபுர நாதன்
உரைசெய் தமிழ் ஞானசம்பந்தன் இசைமாலை மொழிவார் போய்
விரை செய் மலர் தூவ விதி பேணு கதிபேறு பெறுவாரே.11

திருச்சிற்றம்பலம்

158. திருஆவூர்ப் பசுபதீச்சரம்

திருமுறை : 1/8 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : பசுபதீச்சுவரர் இறைவியார் : மங்களநாயகி

புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடுவார் தம் மனத்தார் திங்கள்
கண்ணியர் என்றுஎன்றும் காதலாளர்
கைதொழுது ஏத்த இருந்த ஊராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரை கமழ்சோலை சுலாவி எங்கும்
பண்ணியல் பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 1

முத்தியர் மூப்பிலர் ஆப்பினுள்ளார்
முக்கணர் தக்கன் தன் வேள்விசாடும்
அத்தியர் என்றுஎன்று அடியர் ஏத்தும்
ஐயன் அணங்கொடு இருந்த ஊராம்
தொத்தியலும் பொழில் மாடுவண்டு
துதைந்தெங்கும் தூமதுப் பாயக்கோயில்
பத்திமைப் பாடல் அறாதஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 2

பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார்
போம் வழிவந்து இழிவு ஏற்றம் ஆனார்
இங்கு உயர் ஞானத்தர் வானோர் ஏத்தும்
இறையவர் என்றும் இருந்த ஊராம்
தெங்கு உயர் சோலைசேர் ஆலை சாலி
திளைக்கும் விளை வயல்சேரும் பொய்கைப்
பங்கயமங்கை விரும்பும் ஆவூர்ப்
பசுகதி ஈச்சரம் பாடுநாவே. 3

தேவி ஓர் கூறினர் ஏறது ஏறும்
செலவினர் நல்குரவு என்னை நீக்கும்
ஆவியர் அந்தணர் அல்லல் தீர்க்கும்
அப்பனார் அங்கே அமர்ந்த ஊராம்
பூவியலும் பொழில் வாசம் வீசப்
புரிகுழலார் சுவடு ஒற்றிமுற்றப்
பாவியல் பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 4

இந்து அணையும் சடையார் விடையார்
இப்பிறப்பு என்னை அறுக்கவல்லார்
வந்து அணைத்து இன்னிசை பாடுவார் பால்
மன்னினர் மன்னி இருந்தவூராம்
கொந்து அணையும் குழலார் விழவில்
கூட்டம் இடைஇடை சேரும்வீதிப்
பந்து அணையும் விரலார் தம்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 5

குற்றம் அறுத்தார் குணத்தின் உள்ளார்
கும்பிடுவார் தமக்கு அன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக் கண்ணார்
உறைபதியாகும் செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்
சொற்கவி பாட நிதானம் நல்கப்
பற்றிய கையினர் வாழும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 6

நீறுஉடையார் நெடுமால்வணங்கும்
நிமிர் சடையார் நினைவார் தம்உள்ளம்
கூறு உடையார் உடை கோவணத்தார்
குவலயம் ஏத்த இருந்தஊராம்
தாறுடை வாழையில் கூழைமந்தி
தகுகனி உண்டுமிண்டிட்டு இனத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும் ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 7

வெண்தலை மாலை விரவிப்பூண்ட
மெய் உடையார் விறலார் அரக்கன்
வண்டு அமர் பூமுடி செற்றுஉகந்த
மைந்தர் இடம்வளம் ஓங்கிஎங்கும்
கண்டு அவர் சிந்தைக் கருத்தின்மிக்கார்
கதி அருள் என்றுகையாரக் கூப்பிப்
பண்டு அலர் கொண்டு பயிலும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 8

மாலும் அயனும் வணங்கிநேட
மற்றவருக்கு எரியாகிநீண்ட
சீலம் அறிவரிது ஆகிநின்ற
செம்மையினாரவர் சேரும்ஊராம்
கோல விழாவின் அரங்கு அது ஏறிக்
கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்
பாலெனவேமொழிந்து ஏத்தும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 9

பின்னிய தாழ்சடையார் பிதற்றும்
பேதையராம் சமண் சாக்கியர்கள்
தன்னியலும் உரை கொள்ள கில்லாச்
சைவர் இடம்தளவு ஏறுசோலைத்
துன்னிய மாதரும் மைந்தர் தாமும்
சுனை இடைமூழ்கித் தொடர்ந்த சிந்தைப்
பன்னிய பாடல் பயிலும் ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே. 10

எண்திசையாரும் வணங்கி ஏத்தும்
எம்பெருமானை எழில் கொள் ஆவூர்ப்
பண்டு உரியார் சிலர் தொண்டர் போற்றும்
பசுபதி ஈச்சரத்து ஆதிதன்மேல்
கண்டல்கள் மிண்டிய கானல் காழிக்
கவுணியன் ஞானசம்பந்தன் சொன்ன
கொண்டு இனிதா விசை பாடி ஆடிக்
கூடும் அவர் உடையார்கள் வானே. 11

திருச்சிற்றம்பலம்

159. திருப்பட்டீச்சரம்

திருமுறை : 3/73 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : பட்டீச்சரநாதர் இறைவியார் : பல்வளைநாயகி

பாடல் மறை சூடல் மதி பல்வளை ஒர்
பாகம் மதில் மூன்று ஒர் கணையால்
கூட எரியூட்டி எழில் காட்டி நிழல்
கூட்டுபொழில் சூழ் பழைசையுள்
மாட மழபாடி உறை பட்டிசரம்
மேய கடி கட்டுஅரவினார்
வேடம் நிலை கொண்டவரை வீடுநெறி
காட்டி வினை வீடும் அவரே. 1

நீரின் மலி புன்சடையர் நீள்அரவு
கச்சைஅது நச்சு இலையது ஓர்
கூரின் மலி சூலம்அது ஏந்தி உடை
கோவணமும் மானின் உரிதோல்
காரின் மலி கொன்றைவிரிதார் கடவுள்
காதல் செய்து மேய நகர்தான்
பாரின் மலி சீர்பழசை பட்டி சரம்
ஏத்த வினை பற்றுஅழியுமே. 2

காலை மடவார்கள் புனல் ஆடுவது
கௌவை கடியார்மறுகுஎலாம்
மாலைமணம் நாறு பழையாறை மழபாடி
அழகாயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பன்உறை பட்டி
பட்டி சரமேபரவுவார்
மேலைஒரு மால்கடல்கள் போல்பெருகி விண்உலகம்
ஆளும்அவரே. 3

கண்ணின்மிசை நண்ணி இழிவிப்ப முகம்
ஏத்து கமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட
ஆடவல பால் மதியினான்
மண்ணின்மிசை நேரின் மழபாடி
ம்லி பட்டி சரமே மருவுவார்
விண்ணின்மிசை வாழும்இமையோரொடு
உடன் ஆதல்அது மேவல் எளிதே. 4

மருவமுழ அதிர மழபாடி மலி
மத்தம்விழவு ஆர்க்கவரை ஆர்
பருவமழை பண் கவர் செய் பட்டிசரம்
மேயபடர் புன்சடையினான்
வெருவ மதயானை உரிபோர்த்து உமையை
அஞ்சவரு வெள் விடையினான்
உருவம் எரிகழல்கள் தொழ உள்ளம்
உடையாரை அடையா வினைகளே. 5

மறையின் ஒலி கீதம் ஒடு பாடுவன
பூதம்அடி மருவி விரவார்
பறையின் ஒலி பெருக நிகழ் நட்டம்
அமர் பட்டிசரம் மேயபனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையின் இடை
ஏற்ற புனல் தோற்ற நிலையாம்
இறைவன் அடிமுறை முறையின் ஏத்தும் அவர்
தீத்தொழில்கள் இல்லர்மிகவே. 6

பிறவி பிணி மூப்பினொடு நீங்கி இமையோர்
உலகு பேணல் உறுவார்
துறவி எனும் உள்ளம் உடையார்கள்
கொடி வீதி அழகாய தொகுசீர்
இறைவன் உறை பட்டிசரம் ஏத்தி எழுவார்கள்
வினை ஏதும்இலவாய்
நறவவிரையாலும் மொழியாலும்
வழிபாடு மறவாத அவரே. 7

நேசம் மிகு தோள் வலவன் ஆகி இறைவன்
மலையை நீக்கியிடலும்
நீசன் விறல் வாட்டி வரையுற்றது
உணராத நிரம்பா மதியினான்
ஈசன் உறை பட்டிசரம் ஏத்தி எழுவார்கள்
வினை ஏதும் இலவாய்
நாசம் அற வேண்டுதலின் நண்ணல்எளிதாம்
அமரர் விண் உலகமே. 8

தூய மலரானும் நெடியானும் அறியார்
அவன தோற்ற நிலையின்
ஏய வகையானது அதனை யார் அறிவார்
அணிகொள் மார்பின் அகலம்
பாய நல நீறது அணிவான் உமைதனோடு
முறை பட்டிசரமே
மேயவனது ஈரடியும் ஏத்த எளிதாகும்
நலம் மேல் உலகமே. 9

தடுக்கினை இடுக்கி மடவார்கள் இடு
பிண்டம் அது உண்டு உழல்தரும்
கடுப்பொடி உடல் கவசர் கத்துமொழி
காதல்செய்து இடாது கமழ்சேர்
மடைக்கயல் வயல் கொள் மழபாடி
நகர் நீடு பழையாறை அதனுள்
படைக்கு ஒரு கரத்தன் மிகு பட்டிசரம்
ஏத்தவினை பற்றுஅறுதலே. 10

மந்த மலி சோலை மழபாடி நகர்
நீடு பழையாறை அதனுள்
பந்தம் உயர் வீடுநல பட்டிசரம்
மேயபடர் புன் சடையனை
அந்தன் மறையோர் இனிது வாழ்புகலி
ஞானசம்பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டு இனிது செப்பவல
தொண்டர்வினை நிற்பது இலவே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானம்பந்தமூர்த்தி நாயனார் திருவலஞ் சுழியை வழிபட்டு அங்கெழுந்தருளி இருக்கும் நாள்களில் மிக்க கொடுமையோடு முதுவேனில் வந்தடைந்தது. அப்போது நாயனார் அங்கு நின்றெழுந்து திருவறைமேற்றளி, திருச்சத்தி முற்றங்களை வணங்கிக்கொண்டு திருப்பட்டீச் சரத்துக்கு எழுந்தருளினார். அவ்வாறு எழுந்தருளும் போது வெயில் வெப்பத்தைத் தணித்தருளும் பொருட்டுத் தமிழ்விரகர் முடிமீது அவறியாதபடி தடணடரளப் பந்தரெடுத்து ஒரு சிவபூதம் 'பட்டீசர் எம்மை விடுத்தார்' என்று சொல்லிற்று. அவ்வார்த்தையும் முத்துப்பந்தரும் ஆகாயத்தில் ஒருங்கு தோன்றக் கண்ட பிள்ளையார் 'இச்செய்கை பட்டீசர் செயலென்றால் இதற்கு நாம் உடன்படத்தக்கது' என்று நிலமுறப் பணிந்தெழுந்தார். திருக்கூட்டத்து அடியார்கள் அப்பந்தரைக் காம்பிலே பிடித்தார்கள். பாலறாவாயர் அப்பந்தர் நிழற்றச் சென்று திருப்பட்டீச்சரத்தை அடைந்து இறைவனை வணங்கிப் பாடி யருளினார்.

திருச்சிற்றம்பலம்

160. திருவலஞ்சுழி

திருமுறை : 2/2 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

விண்டு எலாம் மலர அவ்விரை நாறு தண் தேன் விம்மி
வண்டுஎலாம் நசையால் இசை பாடும் வலஞ்சுழித்
தொண்டுஎலாம் பரவும் சுடர் போல் ஒளியீர் சொலீர்
பண்டுஎலாம் பலி தேர்ந்து ஒலி பாடல் பயின்றதே. 1

பாரல் வெண்குருகும் பகுவாயன நாரையும்
வாரல் வெண்திரைவாய் இரை தேரும் வலஞ்சுழி
மூரல் வெண்முறுவல் நகு மொய் ஒளியீர் சொலீர்
ஊரல் வெண்தலை கொண்டு உலகு ஒக்க உழன்றதே. 2

கிண்ண வண்ணம் மலரும் கிளர் தாமரைக் தாது அளாய்
வண்ண நுண்மணல்மேல் அனம் வைகும் வலஞ்சுழிச்
சுண்ணவெண்பொடிக்கொண்டு மெய் பூச வலீர் சொலீர்
விண்ணவர் தொழ வெண்தலையில் பலி கொண்டதே. 3

கோடுஎலாம் நிறையக் குவளைம் மலரும் குழி
மாடுஎலாம் மலி நீர்மணம் நாறும் வலம்சுழிச்
சேடுஎலாம் உடையீர் சிறுமான் மான் மறியீர் சொலீர்
நாடுஎலாம் அறியத் தலையில் நறவு ஏற்றதே. 4

கொல்லை வேனல் புனத்தின் குரு மா மணி கொண்டு போய்
வல்லை நுண்மணல்மேல் அனம் வைகும் வலஞ்சுழி
முல்லை வெண்முறுவல் நகையாள் ஒளியீர் சொலீர்
சில்லை வெண்தலையில் பலி கொண்டு உழல் செல்வமே. 5

பூச நீர் பொழியும் புனல் பொன்னியில் பன்மலர்
வாசம் நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலம்சுழித்
தேச நீர் திரு நீர் சிறுமான் மறியீர் சொலீர்
ஏச வெண்தலையில் பலி கொள்வது இலாமையே. 6

கந்தமாமலர்ச் சந்தொடு கார்அகிலும் தழீஇ
வந்த நீர்குடைவார் இடர் தீர்க்கும் வலம்சுழி
அந்தம் நீர் முதல் நீர் நடுவாம் அடிகேள் சொலீர்
பந்தம் நீர் கருதாது உலகில் பலி கொள்வதே. 7

தேன் உற்ற நறுமாமலர்ச் சோலையில் வண்டு இனம்
வான் உற்ற நசையால் இசை பாடும் வலம்சுழிக்
கான் உற்ற களிற்றின் உரி போர்க்க வல்லீர் சொலீர்
ஊன் உற்ற தலை கொண்டு உலகு ஒக்க உழன்றதே. 8

தீர்த்தநீர் வந்து இழி புனல் பொன்னியில் பல்மலர்
வார்த்த நீர்குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி
ஆர்த்து வந்த அரக்கனை அன்று அடர்த்தீர் சொலீர்
சீர்த்த வெண்தலையில் பலி கொள்வதும் சீர்மையே. 9

உரம் மன்னும் சடையீர் விடையீர் உமது இன்னருள்
வரம் மன்னும் பெறல் ஆவதும் எந்தை வலஞ்சுழிப்
பிரமனும் திருமாலும் அளப்பு அரியீர் சொலீர்
சிரம் எனும் கலனில்பலி வேண்டிய செல்வமே. 10

வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடின் ஞானம் என் ஆவதும் எந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம்பந்தன செந்தமிழ் கொண்டு இசை
பாடும் ஞானம்வல்லார் அடி சேர்வது ஞானமே. 11

திருச்சிற்றம்பலம்

161. திருவலஞ்சுழி

திருமுறை : 2/106 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திருவலம் சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே. 1

விண்டு ஒழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வரு நஞ்சம்
உண்டு இறைஞ்சு வானவர் தமைத் தாங்கிய இறைவனை உலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையொர் பங்கனை வலம்சுழி இடமாகக்
கொண்டநாதன் மெய்த் தொழில்புரி தொண்டரோடு இனிதுஇருந்தமையாலே. 2

திருந்தலார் புரம் தீ எழச் செறுவன விறலின்கண் அடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்தும் ஆவன மந்திரம் ஆவன வலஞ்சுழி இடமாக
இருந்த நாயகன் இமையவர் ஏத்திய இணைஅடித்தலம்தானே. 3

கறை கொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தினர் அறத்திறம் முனிவர்க்குஅன்று
இறைவர் ஆல்இடை நீழலில் இருந்து உகந்து இனிது அருள் பெருமானார்
மறைகள் ஓதுவர் வருபுனல் வலஞ்சுழி இடம் மகிழ்ந்து அரும்கானத்து
அறை கழல்சிலம்பு ஆர்க்கநின்று ஆடிய அற்புதம் அறியோமே. 4

மண்ணர் நீரர் விண் காற்றினர் ஆற்றலாம் எரிஉரு ஒருபாகம்
பெண்ணர் ஆண் எனத் தெரிவு அரும் வடிவினர் பெரும்கடல் பவளம்போல்
வண்ணர் ஆகிலும் வலம்சுழி பிரிகிலார் பரிபவர் மனம்புக்க
எண்ணர் ஆகிலும் எனைப்பல இயம்புவர் இணைஅடி தொழுவாரே. 5

ஒருவராலும் உவமிப்பதை அரியதோர் மேனியர் மடமாதர்
இருவர் ஆதரிப்பார் பல பூதமும் பேய்களும் அடையாளம்
அருவராததோர் வெண்தலை கைப்பிடித்து அகம்தொறும் பலிக்குஎன்று
வருவரேல் அவர் வலம்சுழி அடிகளே வரிவளை கவர்ந்தாரே. 6

குன்றியூர் குட மூக்குஇடம் வலம்புரம் குலவிய நெய்த்தானம்
என்று இவ்வூர்கள் இலோம் என்றும் இயம்புவர் இமையவர் பணிகேட்பார்
அன்றி ஊர்தமக்கு உள்ளன அறிகிலோம் வலம்சுழி அரனார்பால்
சென்ற ஊர்தனில் தலைப்படலாம் என்று சேயிழை தளர்வாமே. 7

குயிலின் நேர்மொழிக் கொடிஇடை வெருவுறக் குலவரைப் பரப்பாய
கயிலையைப் பிடித்து எடுத்தவன் கதிர்முடி தோள்இருபதும் ஊன்றி
மயிலின்நேரன சாயலோடு அமர்ந்தவன் வலம்சுழி எம்மானைப்
பயில வல்லவர் பரகதி காண்பவர் அல்லவர் காணாரே. 8

அழலது ஓம்பிய அலர்மிசை அண்ணலும் அரவணைத் துயின்றானும்
கழலும் சென்னியும் காண்பரிதாய் அவர் மாண்பு அமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திரு வலம்சுழி வலம்கொடு பாதத்தால்
சுழலும் மாந்தர்கள் தொல்வினை அதனொடு துன்பங்கள் களைவாரே. 9

அறிவு இலாத வன்சமணர்கள் சாக்கியர் தவம்புரிந்து அவம்செய்வார்
நெறி அலாதன கூறுவர் மற்றுஅவை தேறன் மின் மாறா நீர்
மறி உலாம் திரைக் காவிரி வலம்சுழி மருவிய பெருமானைப்
பிறிவு இலாதவர் பெறுகதி பேசிடில் அளவுஅறுப்பு ஒண்ணாதே. 10

மாது ஓர்கூறனை வலம்சுழி மருவிய மருந்தினை வயல்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்து இசை கற்று வல்லார் சொலக் கேட்டு உகந்தவர் தம்மை
வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

162. திருவலஞ்சுழி

திருமுறை : 3/106 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி
இறைவர் : கபர்த்தீசர், திருவலஞ்சுழிஉடையார்
இறைவியார் : பெரியநாயகி வண்டுவார்குழலிநாச்சியார்

பள்ளம்அது ஆய படர்சடைமேல் பயிலும் திரைக் கங்கை
வெள்ளம்அது ஆர விரும்பிநின்ற விகிர்தன் விடைஏறும்
வள்ளல் வலம்சுழி வாணன் என்று மருவி நினைந்து ஏத்தி
உள்ளம் உருக உணருமின்கள் உறுநோய் அடையாவே. 1

கார் அணி வெள்ளைமதியம் சூடிக் கமழ் புன்சடைதன்மேல்
தார் அணி கொன்றையும் தண் எருக்கும் தழைய நுழைவித்து
வார் அணி கொங்கை நலாள் தனோடும் வலம்சுழி மேவியவர்
ஊர் அணி பெய் பலி கொண்டு உகந்த உவகை அறியோமே. 2

பொன் இயலும் திருமேனிதன்மேல் புரிநூல் பொலிவித்து
மின் இயலும் சடை தாழ வேழஉரி போர்த்து அரவுஆட
மன்னிய மாமறையோர்கள் போற்றும் வலம்சுழி வாணர்தம்மேல்
உன்னிய சிந்தையில் நீங்ககில்லார்க்கு உயர்வாம் பிணிபோமே. 3

விடை ஒரு பால் ஒருபால் விரும்பு மெல்லியல் புல்கியதோர்
சடை ஒரு பால் ஒருபால் இடம் கொள் தாழ்குழல் போற்றுஇசைப்ப
நடை ஒரு பால் ஒருபால் சிலம்பு நாளும் வலம்சுழி சேர்
அடை ஒரு பால் அடையாத செய்யும் செய்கை அறியோமே.4

கை அமரும் மழு நாகம் வீணை கலைமான்மறி ஏந்தி
மெய் அமரும் பொடிப் பூசி வீசும் குழை ஆர்தரு தோடும்
பை அமரும் அரவு ஆட ஆடும் படர்சடையார்க்கு இடமாம்
மை அமரும் பொழில் சூழும் வேலி வலம்சுழி மா நகரே. 5

தண்டொடு சூலம் தழைய ஏந்தித் தையல் ஒருபாகம்
கண்டு இடுபெய் பலி பேணி நாணார் கரியின் உரி தோலர்
வண்டு இடுமொய் பொழில் சூழ்ந்த மாட வலஞ்சுழி மன்னியவர்
தொண்டொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பைந் தொடர்வோமே 6

கல் இயலும் மலை அம் கை நீங்க வளைத்து வளையாதார்
சொல் இயலும் மதில் மூன்றும் செற்ற சுடரான் இடர் நீங்க
மல் இயலும் திரள் தோள் எம் ஆதி வலம்சுழி மா நகரே
புல்கிய வேந்தனைப் புல்கி ஏத்தி இருப்பவர் புண்ணியரே.7

வெஞ்சின வாள் அரக்கன் வரையை விறலால் எடுத்தான் தோள்
அஞ்சு ஓர் ஆறு இரு நான்கும் ஒன்றும் அடர்த்தார் அழகு ஆய
நஞ்சுஇருள் கண்டத்து நாதர் என்றும் நணுகும் இடம்போலும்
மஞ்சு உலவும் பொழில் வண்டு கெண்டும் வலம்சுழி மா நகரே. 8

ஏடு இயல் நான்முகன் சீர் நெடுமால் என நின்றவர் காணார்
கூடிய கூர் எரியாய் நிமிர்ந்த குழகர் உலகு ஏத்த
வாடிய வெண்தலை கையில் ஏந்தி வலஞ்சுழி மேய எம்மான்
பாடிய நால்மறையாளர் செய்யும் சரிதை பலபலவே. 9

குண்டரும் புத்தரும் கூறை இன்றிக் குழுவார் உரை நீத்துத்
தொண்டரும் தன் தொழில் பேண நின்ற கழலான் அழல்ஆடி
வண்டு அமரும் பொழில் மல்குபொன்னி வலம்சுழிவாணன் எம்மான்
பண்டு ஒரு வேள்வி முனிந்து செற்ற பரிசே பகர்வோமே. 10

வாழி எம்மான் எனக்கு எந்தை மேய வலஞ்சுழி மா நகர்மேல்
காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன கருத்தின் தமிழ்மாலை
ஆழி இவ் வையகத்து ஏத்த வல்லார் அவர்க்கும் தமருக்கும்
ஊழி ஒரு பெரும் இன்பம் ஒக்கும் உருவும் உயர்வாமே. 11

திருச்சிற்றம்பலம்

163. திருக்குடமூக்கு

திருமுறை : 3/59 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி
இறைவர் : கும்பேசர் இறைவியார் : மங்களநாயகி

அர விரி கோடல் நீடல் அணி காவிரியாற்று அயலே
மர விரி போது மௌவல் மணமல்லிகை கள் அவிழும்
குர விரி சோலை சூழ்ந்த குழகன் குடமூக்கு இடமா
இர விரி திங்கள் சூடி இருந்தான் அவன் எம் இறையே. 1

ஓத்து அரவங்களோடும் ஒலி காவிரி ஆர்த்து அயலே
பூத்து அரவங்களோடும் புகை கொண்டு அடி போற்றி நல்ல
கூத்து அரவங்கள் ஓவாக் குழகன் குடமூக்கு இடமா
ஏத்து அரவங்கள் செய்ய இருந்தான் அவன் எம் இறையே. 2

மயில் பெடை புல்கி ஆல மணல்மேல் மடஅன்னம் மல்கும்
பயில் பெடைவண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்பொழில்வாய்க்
குயில் பெடையோடு பாடல் உடையான் குடமூக்கு இடமா
இயலொடு வானம் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே. 3

மிக்கு அரை தாழ வேங்கைஉரி ஆர்த்து உமையாள் வெருவ
அக்கு அரவு ஆமை ஏனமருப்போடு அவை பூண்டு அழகுஆர்
கொக்கரையோடு பாடல் உடையான் குடமூக்கு இடமா
எக்கரையாரும் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே. 4

வடிவு உடை வாள் தடங்கண் உமை அஞ்ச ஓர் வாரணத்தைப்
பொடி அணி மேனி மூட உரிகொண்டவன் புன்சடையான்
கொடி நெடுமாடம் ஓங்கும் குழகன் குடமூக்கு இடமா
இடி படு வானம் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே. 5

கழை வளர் கவ்வை முத்தம் கமழ் காவிரியாற்று அயலே
தழை வளர் மாவின் நல்ல பலவின் கனிகள் தங்கும்
குழை வளர் சோலை சூழ்ந்த குழகன் குடமூக்கு இடமா
இழை வளர் மங்கையோடும் இருந்தான் அவன் எம் இறையே. 6

மலை மலி மங்கை பாகம் மகிழ்ந்தான் எழில் வையம் உய்யச்
சிலை மலி வெங்கணையால் சிதைத்தான்புரம் மூன்றினையும்
குலை மலி தண்பலவின் பழம் வீழ் குடமூக்கு இடமா
இலை மலி சூலம் ஏந்தி இருந்தான் அவன் எம் இறையே. 7

நெடு முடிபத்து உடைய நிகழ் வாள் அரக்கன் உடலைப்
படும் இடர்கண்டு அயரப் பருமால்வரைக்கீழ் அடர்த்தான்
கொடு மடல் தங்கு தெங்கு பழம் வீழ் குடமூக்கு இடமா
இடு மணல்எக்கர் சூழ இருந்தான் அவன் எம் இறையே. 8

ஆர் எரிஆழியானும் அலரானும் அளப்பு அரிய
நீர் இரி புன்சடைமேல் நிரம்பா மதி சூடி நல்ல
கூர் எரி ஆகி நீண்ட குழகன் குடமூக்கு இடமா
ஈர்உரி கோவணத்தோடு இருந்தான் அவன் எம் இறையே 9

மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டு அமணர்
நாடிய தேவர் எல்லாம் நயந்து ஏத்திய நன்நலத்தான்
கூடிய குன்றம் எல்லாம் உடையான் குடமூக்கு இடமா
ஏடு அலர் கொன்றை சூடி இருந்தான் அவன் எம் இறையே. 10

வெண்கொடி மாடம் ஓங்கு விறல் வெங்குரு நன்நகரான்
நண்பொடு நின்ற சீரான் தமிழ் ஞானசம்பந்தன் நல்ல
தன் குடமூக்கு அமர்ந்தான் அடி சேர் தமிழ்பத்தும் வல்லார்
ண் புடை மேல்உலகம் வியப்பு எய்துவர் வீடு எளிதே. 11

திருச்சிற்றம்பலம்

164. திருக்குடந்தைக்காரோணம்

திருமுறை : 1/72 பண் : தக்கேசி இராகம் : காம்போதி
இறைவர் : சோமநாதர் இறைவியார் : தேனார் மொழியம்மை
காசிவிசுவநாதர் விசாலாட்சி

வார் ஆர் கொங்கை மாது ஓர்பாகம் ஆக வார்சடை
நீர் ஆர் கங்கை திங்கள் சூடி நெற்றி ஒற்றைக்கண்
கூர் ஆர் மழுஒன்று ஏந்தி அம் தண் குழகன் குடமூக்கில்
கார் ஆர் கண்டத்து எண்தோள் எந்தை காரோணத்தாரே. 1

முடி ஆர் மன்னர் மடமான்விழியார் மூஉலகும் ஏத்தும்
படியார் பவளவாயார் பலரும் பரவிப் பணிந்து ஏத்தக்
கொடி ஆர் விடையார் மாட வீதிக் குடந்தைக் குழகு ஆரும்
கடி ஆர் சோலைக் கலவமயில் ஆர் காரோணத்தாரே. 2

மலையார் மங்கை பங்கர் அங்கை அனலர் மடல் ஆரும்
குலையார் தெங்கு குளிர் கொள் வாழை அழகு ஆர் குடமூக்கில்
முலையார் அணி பொன் முளை வெண்நகையார் மூவா மதியினார்
கலை ஆர் மொழியார் காதல் செய்யும் காரோணத்தாரே. 3

போது ஆர் புனல் சேர் கந்தம் உந்திப் பொலிய அவ்அழகு ஆரும்
தாது ஆர் பொழில் சூழ்ந்து எழில் ஆர் புறவில் அம்தண் குட மூக்கில்
மாது ஆர் மங்கை பாகம்ஆக மனைகள் பலி தேர்வார்
காது ஆர் குழையர் காளகண்டர் காரோணத்தாரே. 4

பூ ஆர் பொய்கை அலர் தாமரை செங்கழுநீர் புறவுஎல்லாம்
தேவு ஆர் சிந்தை அந்தணாளர் சீரால் அடி போற்றக்
கூ ஆர் குயில்கள் ஆலும் மயில்கள் இன்சொல் கிளிப்பிள்ளை
கா ஆர் பொழில் சூழ்ந்து அழகு ஆர் குடந்தைக்காரோணத்தாரே. 5

மூப்பு ஊர் நலிய நெதி ஆர் விதி ஆய் முன்னே அனல்வாளி
கோப்பார் பார்த்தன் நிலை கண்டு அருளும் குழகர் குடமூக்கில்
தீர்ப்பார் உடலில் அடுநோய் அவலம் வினைகள் நலியாமைக்
காப்பார் காலன் அடையா வண்ணம் காரோணத்தாரே.6

ஊன் ஆர் தலை கை ஏந்தி உலகம் பலி தேர்ந்து உழல் வாழ்க்கை
மான் ஆர் தோலார் புலியின் உடையார் கரியின்உரி போர்வை
தேன் ஆர் மொழியார் திளைத்து அங்கு ஆடித் திகழும் குடமூக்கில்
கான் ஆர் நட்டம் உடையார் செல்வக் காரோணத்தாரே.7

வரை ஆர் திரள்தோள் மதவாள் அரக்கன் எடுப்ப மலை சேரும்
விரை ஆர் பாதம்நுதியால் ஊன்ற நெரிந்து சிரம்பத்தும்
உரை ஆர் கீதம் பாடக் கேட்டு அங்கு ஒளிவாள் கொடுத்தாரும்
கரை ஆர் பொன்னி சூழ் தண் குடந்தைக் காரோணத்தாரே. 8

கரிய மாலும் செய்யபூமேல் அயனும் கழறிப்போய்
அரிய அண்டம் தேடிப் புக்கும் அளக்க ஒண்கிலார்
தெரிய அரிய தேவர் செல்வம் திகழும் குடமூக்கில்
கரிய கண்டர் காலகாலர் காரோணத்தாரே. 9

நாணார் அமணர் நல்லது அறியார் நாளும் குரத்திகள்
பேணார் தூய்மை மாசு கழியார் பேசேல் அவரோடும்
சேண் ஆர் மதி தோய் மாடம் மல்கு செல்வ நெடுவீதிக்
கோணாகரம் ஒன்று உடையார் குடந்தைக் காரோணத்தாரே.10

கரு ஆர் பொழில் சூழ்ந்து அழகு ஆர் செல்வக் காரோணத்தாரை
திரு ஆர் செல்வம் மல்கு சண்பைத் திகழும் சம்பந்தன்
உரு ஆர் செஞ்சொல்மாலை இவைபத்து உரைப்பார் உலகத்துக்
கரு ஆர் இடும்பைப் பிறப்புஅது அறுத்துக் கவலை கழிவாரே.11

திருச்சிற்றம்பலம்

165. திருநாகேச்சுரம்

திருமுறை : 2/24 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : சண்பகாரணியர் இறைவியார் : குன்றமுலைநாயகி

பொன் நேர் தரு மேனியனே புரியும்
மின் நேர் சடையாய் விரை காவிரியின்
நன்நீர் வயல் நாகேச்சுர நகரின்
மன்னே என வல்வினை மாய்ந்து அறுமே. 1

சிறவார் புரம்மூன்று எரியச் சிலையில்
உற வார்கணை உய்த்தவனே உயரும்
நறவு ஆர் பொழில் நாகேச்சுரநகருள்
அறவா என வல்வினை ஆசு அறுமே. 2

கல்லால் நிழல் மேயவனே கரும்பின்
வில்லான் எழில் வேவ விழித்தவனே
நல்லார் தொழும் நாகேச்சுர நகரில்
செல்வா என வல்வினை தேய்ந்து அறுமே. 3

நகு வான்மதியோடு அரவும் புனலும்
தகு வார் சடையின் முடியாய் தளவம்
நகு வார் பொழில் நாகேச்சுர நகருள்
பகவா என வல்வினை பற்றுஅறுமே. 4

கலைமான்மறியும் கனலும் மழுவும்
நிலையாகிய கையினனே நிகழும்
நலம் ஆகிய நாகேச்சுரநகருள்
தலைவா என வல்வினை தான் அறுமே. 5

குரை ஆர் கழல் ஆட நடம் குலவி
வரையான்மகள் காண மகிழ்ந்தவனே
நரை ஆர் விடை ஏறும் நாகேச்சுரத்து எம்
அரைசே என நீங்கும் அருந்துயரே. 6

முடை ஆர்தரு வெண்தலை கொண்டு உலகில்
கடை ஆர் பலி கொண்டு உழல் காரணனே
நடை ஆர்தரு நாகேச்சுர நகருள்
சடையா என வல்வினைதான் அறுமே. 7

ஓயாத அரக்கன் ஒடிந்து அலற
நீ ஆர் அருள் செய்து நிகழ்ந்தவனே
வாய் ஆர வழுத்துவர் நாகேச்சுரத்
தாயே என வல்வினைதான் அறுமே. 8

நெடியானொடு நான்முகன் நேடல்உறச்
சுடு மால்எரிஆய் நிமிர் சோதியனே
நடு மா வயல் நாகேச்சுரநகரே
இடமா உறைவாய் என இன்பு உறுமே. 9

மலம் பாவிய கையொடு மண்டைஅது உண்
கலம்பாவியர் கட்டுரை விட்டு உலகில்
நலம் பாவிய நாகேச்சுரநகருள்
சிலம்பா எனத் தீவினை தேய்ந்து அறுமே. 10

கலம் ஆர் கடல் சூழ்தரு காழியர்கோன்
தலம் ஆர்தரு செந்தமிழின் விரகன்
நலம் ஆர்தரு நாகேச்சுரத்து அரனைச்
சொல மாலைகள் சொல்ல நிலா வினையே. 11

திருச்சிற்றம்பலம்

166. திருநாகேச்சுரம்

திருமுறை : 2/119 பண் : செவ்வழி இராகம் : எதுகுலகாம்போதி

தழை கொள் சந்தும் அகிலும் மயில்பீலியும் சாதியின்
பழமும் உந்திப் புனல் பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவு இல் வானோர் தொழ நல்கு சீர் மல்கு நாகேச்சுரத்து
அழகர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே. 1

பெண் ஓர்பாகம் அடைய சடையில் புனல் பேணிய
வண்ணம்ஆன பெருமான் மருவும் இடம் மண்உளார்
நண்ணி நாளும் தொழுது ஏத்தி நன்கு எய்து நாகேச்சுரம்
கண்ணினால் காண வல்லார் அவர் கண் உடையார்களே. 2

குறவர் கொல்லைப்புனம் கொள்ளைகொண்டும் மணி குலவு நீர்
பறவை ஆலப் பரக்கும் பழங்காவிரித் தென்கரை
நறவம் நாறும் பொழில் சூழ்ந்து அழகுஆய நாகேச்சுரத்து
இறைவர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையே. 3

கூசம் நோக்காது முன் சொன்ன பொய் கொடுவினை குற்றமும்
நாசம் ஆக்கும் மனத்தார்கள் வந்து ஆடும் நாகேச்சுரம்
தேசம் ஆக்கும் திருக் கோயிலாக் கொண்ட செல்வன் கழல்
நேசம் ஆக்கும் திறத்தார் அறத்தார் நெறிப்பாலரே. 4

வம்பு நாறும் மலரும் மலைப் பண்டமும் கொண்டு நீர்
பைம்பொன் வாரிக் கொழிக்கும் பழங்காவிரித் தென்கரை
நம்பன் நாளும் அமர்கின்ற நாகேச்சுரம் நண்ணுவார்
உம்பர் வானோர் தொழச் சென்று உடனாவதும் உண்மையே. 5

காளமேகம்நிறக் காலனோடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுஉறின்
நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சுரம் நண்ணுவார்
கோளும் நாளும் தீயவேனும் நன்கு ஆம் குறிக்கொண்மினே. 6

வேய் உதிர் முத்தொடு மத்தயானை மருப்பும் விராய்ப்
பாய் புனல் வந்து அலைக்கும் பழங்காவிரித் தென்கரை
ஞாயிறும் திங்களும் கூடிவந்து ஆடும் நாகேச்சுரம்
மேயவன்தன் அடி போற்றி என்பார் வினை வீடுமே. 7

இலங்கை வேந்தன் சிரம்பத்து இரட்டி எழில் தோள்களும்
மலங்கி வீழஅும் மலையால் அடர்த்தான் இடம் மல்கிய
நலம்கொள் சிந்தையவர் நாள்தொறும் நண்ணும் நாகேச்சுரம்
வலம்கொள் சிந்தை உடையார் இடராயின மாயுமே. 8

கரிய மாலும் அயனும் அடியும் முடி காண்பு ஒணா
எரிஅதுஆகி நிமிர்ந்தான் அமரும் இடம் ஈண்டு கா
விரியின் நீர் வந்து அலைக்கும் கரை மேவும் நாகேச்சுரம்
பிரிவிலாத அவ்வடியார்கள் வானில் பிரியார்களே. 9

தட்டு இடுக்கி உறி தூக்கிய கையினர் சாக்கியர்
கட்டுரைக்கும் மொழி கொள்ளலும் வெள்ளில் அம்காட்டுஇடை
நட்டிருள்கண் நடம்ஆடிய நாதன் நாகேச்சுரம்
மட்டு இருக்கும் மலர் இட்டு அடி வீழ்வது வாய்மையே. 10

கந்தம் நாறும் புனல் காவிரித் தென்கரைக் கண்ணுதல்
நந்தி சேரும் திரு நாகேச்சுரத்தின்மேல் ஞானசம்
பந்தன் நாவில் பனுவல் இவைபத்தும் வல்லார்கள் போய்
எந்தை ஈசன் இருக்கும் உலகு எய்த வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

167. திருவிடைமருதூர்

திருமுறை : 1/32 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : மகாலிங்கேசுவரர் இறைவியார் : நன்முலைநாயகி

ஓடே கலன் உண்பதும் ஊர் இடு பிச்சை
காடே இடம்ஆவது கல்லால் நிழல்கீழ்
வாடாமுலைமங்கையும் தானும் மகிழ்ந்து
ஈடா உறைகின்ற இடைமருது ஈதோ. 1

தடம் கொண்டது ஓர் தாமரைப் பொன் முடிதன்மேல்
குடம் கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்து ஆட்டப்
படம் கொண்டது ஓர் பாம்பு அரை ஆர்த்த பரமன்
இடம் கொண்டு இருந்தான் தன் இடைமருது ஈதோ. 2

வெண்கோவணம் கொண்டு ஒரு வெண்தலை ஏந்தி
அம் கோல்வளையாளை ஒர்பாகம் அமர்ந்து
பொங்கா வரு காவிரிக் கோலக் கரைமேல்
எம்கோன் உறைகின்ற இடைமருது ஈதோ. 3

அந்தம் அறியாத அருங் கலம் உந்திக்
கந்தம் கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேதமுதல்வன்
எந்தை உறைகின்ற இடைமருது ஈதோ. 4

வாசம் கமழ் மா மலர்ச் ோலையில் வண்டே
தேசம் புகுந்து ஈண்டி ஒர் செம்மை உடைத்து ஆய்ப்
பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ. 5

வன் புற்று இள நாகம் அசைத்து அழகாக
என்பில் பலமாலையும் பூண்டு எருது ஏறி
அன்பில் பிரியாதவளோடும் உடனாய்
இன்புற்று இருந்தான் தன் இடைமருது ஈதோ. 6

தேக்கும் திமிலும் பலவும் சுமந்து உந்திப்
போக்கிப் புறம் பூசல் அடிப்ப வருமால்
ஆர்க்கும் திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்க இருந்தான் தன் இடைமருது ஈதோ. 7

பூ ஆர் குழலார் அகில்கொண்டு புகைப்ப
ஓவாது அடியார் அடி உள்குளிர்ந்து ஏத்த
ஆவா அரக்கன்தனை ஆற்றல் அழித்த
ஏ ஆர் சிலையான்தன் இடைமருது ஈதோ. 8

முற்றாதது ஓர் பால்மதி சூடும் முதல்வன்
நல் தாமரையானொடு மால்நயந்து ஏத்தப்
பொன் தோளியும் தானும் பொலிந்து அழகாக
எற்றே உறைகின்ற இடைமருது ஈதோ. 9

சிறுதேரரும் சில்சமணும் புறம் கூற
நெறியே பலபத்தர்கள் கைதொழுது ஏத்த
வெறியா வரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார் மழுவாளன் இடைமருது ஈதோ. 10

கண் ஆர் கமழ் காழியுள் ஞானசம்பந்தன்
எண் ஆர் புகழ் எந்தை இடைமருதின்மேல்
பண்ணோடு இசை பாடிய பத்தும் வல்லார்கள்
விண்ணோர் உலகத்தினில் வீற்றிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருநாகேச்சரத்துச் சிவபெருமானை வணங்கித் திருவிடை மருதூருக்கு எழுந்தருளுஞ் சிரபுரச் செல்வர், "ஓடே கலன்" என்னும் உயர்ந்த இத் திருப்பதிகத்தை எல்லையில்லாப் பெரு மகிழ்ச்சியோடு, ஈங்கெனையாளுடைய பிரான் "இடைமருதீதோ" என்று திருப்பாட்டினிறுதிதோறும் வைத்துப் பாடி அப்பதியிலெழுந் தருளினார்.



168. திருவிடைமருதூர்

திருமுறை : 1/95 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

தோடுஒர் காதினன், பாடும் மறையினன்
காடு பேணி நின்று, ஆடும் மருதனே. 1

கருதார் புரம் எய்வர், எருதே இனிது ஊர்வர்
மருதே இடம் ஆகும், விருது ஆம் வினை தீர்ப்பே. 2

எண்ணும் அடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணும் தமது ஆமே. 3

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியாது ஏத்துவார் பெரியார் உலகிலே. 4

பந்த விடை ஏறும் எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர் புந்தி நல்லரே. 5

கழலும் சிலம்பு ஆர்க்கும், எழில் ஆர் மருதரைத்
தொழலே பேணுவார்க்கு உழலும் வினை போமே. 6

பிறை ஆர் சடை அண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையார் இன்பமே. 7

எடுத்தான் புயம்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

இருவர்க்கு எரி ஆய, உருவ மருதரைப்
பரவி ஏத்துவார், மருவி வாழ்வரே. 9

நின்று உண் சமண் தேரர், என்று மருதரை
அன்றி உரை சொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன், மருதர் அடி பாடிப்
பெரிதும் தமிழ் சொல்லப், பொருத வினை போமே. 11

169. திருவிடைமருதூர்

திருமுறை : 1/110 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

மருந்து அவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொடு இறவும்ஆனான்
அருந்தவ முனிவரொடு ஆல்நிழல்கீழ்
இருந்தவன் வள நகர் இடைமருதே. 1

தோற்று அவன் கேடு அவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல் புலித் தோல் அசைத்த
நீற்றவன் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வள நகர் இடைமருதே. 2

படை உடை மழுவினன் பால்வெண் நீற்றன்
நடை நவில் ஏற்றினன் ஞாலம்எல்லாம்
உடைதலை இடு பலி கொண்டு உழல்வான்
இடைமருது இனிது உறை எம் இறையே. 3

பணைமுலை உமை ஒருபங்கன் ஒன்னார்
துணை மதில்மூன்றையும் சுடரில் மூழ்கக்
கணை துரந்து அடு திறல் காலற் செற்ற
இணைஇலி வள நகர் இடைமருதே. 4

பொழில் அவன் புயல் அவன் புயல் இயக்கும்
தொழில் அவன் துயர் அவன் துயர் அகற்றும்
கழலவன் கரிஉரி போர்த்து உகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. 5

நிறை அவன் புனலொடு மதியும் வைத்த
பொறையவன் புகழ் அவன் புகழ நின்ற
மறைஅவன் மறிகடல்நஞ்சை உண்ட
இறையவன் வளநகர் இடைமருதே. 6

நனி வளர் மதியொடு நாகம் வைத்த
பனிமலர்க்கொன்றை அம் படர்சடையன்
முனிவரொடு அமரர்கள் முறை வணங்க
இனிது உறை வள நகர் இடைமருதே. 7

தருக்கின அரக்கன தாளும்தோளும்
நெரித்தவன் நெடுங்கைமாமதகரிஅன்று
உரித்தவன் ஒன்னலர் புரங்கள்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே. 8

பெரியவன் பெண்ணினோடு ஆணும் ஆனான்
வரிஅரவுஅணை மறிகடல் துயின்ற
கரியவன் அலரவன் காண்புஅரிய
எரியவன் வளநகர் இடைமருதே. 9

சிந்தை இல் சமணொடு தேரர்சொன்ன
புந்தி இல் உரைஅவை பொருள் கொளாதே
அந்தணர் ஓத்தினொடு அரவம்ஓவா
எந்தைதன் வள நகர் இடைமருதே. 10

இலை மலி பொழில் இடைமருது இறையை
நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன
பலம் மிகு தமிழ் இவைபத்தும் வல்லார்
உலகு உறு புகழினொடு ஓங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

170. திருவிடைமருதூர்

திருமுறை : 1/121 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

நடை மரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படை மரு தழல் எழ மழு வல பகவன்
புடை மருது இளமுகில் வளம் அமர் பொதுளிய
இடை மருது அடைய நம் இடர் கெடல் எளிதே. 1

மழை நுழை மதியமொடு அழிதலை மடமஞ்ஞை
கழை நுழை புனல் பெய்த கமழ் சடைமுடியன்
குழை நுழை திகழ் செவி அழகொடு மிளிர்வது ஓர்
இழை நுழை புரி அணல் இடம் இடை மருதே. 2

அருமையன் எளிமையன் அழல்விடமிடறினன்
கருமையின் ஒளி பெறு கமழ் சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொடு ஒருமையின்
இருமையும் உடை அணல் இடம் இடைமருதே. 3

பொரி படு முதுகு உற முளி களி புடை புல்கு
நரி வளர் சுடலையுள் நடம் என நவில்வோன்
வரி வளர் குளிர்மதி ஒளிபெற மிளிர்வது ஓர்
எரி வளர்சடை அணல் இடம் இடைமருதே. 4

வரு நல மயில் அன மடநடை மலைமகள்
பெருநலமுலைஇணை பிணைசெய்த பெருமான்
செரு நல மதில் எய்த சிவன் உறை செழு நகர்
இரு நல புகழ் மல்கும் இடம் இடைமருதே. 5

கலை உடை விரி துகில் கமழ்குழல் அகில்புகை
மலை உடை மடமகள் தனை இடம் உடையோன்
விலை உடை அணிகலன் இலன் என மழுவினோடு
இலைஉடைபடையவன் இடம் இடைமருதே. 6

வளம் என வளர்வன வரி முரல் பறவைகள்
இளமணல் அணை கரை இசைசெயும் இடைமருது
உளம் என நினைபவர் ஒலிகழல் இணைஅடி
குளம் அணல் உற மூழ்கி வழிபடல் குணமே. 7

மறை அவன் உலகு அவன் மதியவன் மதி புல்கு
துறை அவன் என வல அடியவர் துயர் இலர்
கறையவன் மிடறுஅது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும் இடம் இடைமருதே. 8

மருதுஇடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுஉடை அகலமொடு இகலினர் இனது எனக்
கருதிடல் அரியது ஒர் உருவொடு பெரியது ஒர்
எருது உடை அடிகள்தம் இடம் இடைமருதே. 9

துவர் உறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவர் உறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவர் உறு புனல் இடை மருதுகை தொழுதுஎழும்
அவர் உறு வினைகெடல் அணுகுதல் குணமே. 10

தட மலி புகலியர் தமிழ் கெழு விரகினன்
இடம் மலி பொழில் இடைமருதினை இசைசெய்த
படம் மலி தமிழ்இவை பரவ வல்லவர் வினை
கெட மலி புகழொடு கிளர் ஒளியினரே. 11

திருச்சிற்றம்பலம்

171. திருவிடைமருதூர்

திருமுறை : 1/122 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

விரிதரு புலிஉரி விரவிய அரையினர்
திரிதரும் எயில்அவை புனைகணையினில் எய்த
எரிதரு சடையினர் இடைமருது அடைவுஉனல்
புரிதரு மனனவர் புகழ் மிக உளதே. 1

மறிதிரை படு கடல் விடம் அடை மிடறினர்
எறிதிரை கரை பொரும் இடைமருது எனுமவர்
செறி திரைநரையொடு செலவு இலர் உலகினில்
பிறிது இரை பெறும் உடல் பெறுகுவது அரிதே. 2

சலசல சொரி புனல் சடையினர் மலைமகள்
நிலவிய உடலினர் நிறை மறைமொழியினர்
இலர் என இடு பலியவர் இடைமருதினை
வலம்இட உடல் நலிவு இலது உள வினையே. 3

விடையினர் வெளியதுஓர் தலை கலன் எனநனி
கடைகடைதொறு பலி இடுக என முடுகுவர்
இடைவிடல் அரியவர் இடைமருது எனும் நகர்
உடையவர் அடிஇணை தொழுவது எம் உயர்வே. 4

உரைஅரும் உருவினர் உணர்வுஅரு வகையினர்
அரை பொரு புலிஅதள் உடையினர் அதன்மிசை
இரை மரும் அரவினர் இடைமருது என உளம்
உரைகள்அது உடையவர் புகழ் மிக உளதே. 5

ஒழுகிய புனல் மதி அரவமொடு உறைதரும்
அழகிய முடி உடை அடிகளது அறைகழல்
எழிலினர் உறை இடைமருதினை மலர்கொடு
தொழுதல்செய்து எழுமவர் துயர் உறல் இலரே. 6

கலை மலி விரலினர் கடியது ஓர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலைஇணை மருவிய வடிவினர்
இலைமலிபடையவர் இடம் இடைமருதே. 7

செருவு அடை இல அவல செயல் செயத் திறலொடும்
அரு வரையினில் ஒருபதுமுடி நெரிதர
இருவகை விரல் நிறியவர் இடைமருது அது
பரவுவர் அருவினை ஒருவுதல் பெரிதே. 8

அரியொடு மலரவன் என இவர் அடிமுடி
தெரி வகை அரியவர் திருவடி தொழுது எழ
எரி தரும் உருவர்தம் இடைமருது அடைவுஉறல்
புரிதரும் மனனவர் புகழ் மிக உளதே. 9

குடை மயிலினதழை மருவிய உருவினர்
உடை மரு துவரினர் பலசொல உறவுஇலை
அடை மரு திருவினர் தொழுது எழு கழலவர்
இடைமருது எனமனம் நினைவதும் எழிலே. 10

பொருகடல் அடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழில்இடைமருதினைப்
பரவிய ஒருபது பயில வல்லவர் இடர்
விரவிலர் வினையொடு வியன்உலகு உறவே. 11

திருச்சிற்றம்பலம்

172. திருவிடைமருதூர்

திருமுறை : 2/56 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : மருதவாணர் இறைவியார் : நன்முலைநாயகி

பொங்கு நூல் மார்பினீர் பூதப்படையினீர் பூங் கங்கை
தங்கு செஞ்சடையினீர் சாமவேதம் ஓதினீர்
எங்கும் எழிலார் மறையோர்கள் முறையால்ஏத்த இடைமருதில்
மங்குல் தோய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 1

நீர் ஆர்ந்த செஞ்சடையீர் நெற்றித்திருக்கண் நிகழ்வித்தீர்
போர் ஆர்ந்த வெண்மழு ஒன்று உடையீர் பூதம் பாடலீர்
ஏர் ஆர்ந்த மேகலையாள் பாகம் கொண்டீர் இடைமருதில்
சீர் ஆர்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 2

அழல் மல்கும் அங்கையில் ஏந்திப் பூதம் அவை பாடச்
சுழல் மல்கும் ஆடலீர் சுடுகாடு அல்லால் கருதாதீர்
எழில் மல்கும் நால்மறையோர் முறையால் ஏத்த இடைமருதில்
பொழில் மல்கு கோயிலே கோயில் ஆகப் பொலிந்தீரே. 3

பொல்லாப் படுதலை ஒன்று ஏந்திப் புறங்காட்டு ஆடலீர்
வில்லால் புரம்மூன்றும் எரித்தீர் விடையார் கொடியினீர்
எல்லாக்கணங்களும் முறையால் ஏத்த இடைமருதில்
செல்வாய கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 4

வருந்திய மா தவத்தோர் வானோர் ஏனோர் வந்து ஈண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவு எய்தத்
திருந்திய நால்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில்
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே. 5

சலம் மல்கு செஞ்சடையீர் சாந்தநீறு பூசினீர்
வலம் மல்கு வெண்மழு ஒன்று ஏந்தி மயானத்து ஆடலீர்
இலம் மல்கு நால்மறையோர் இனிதா ஏத்த இடைமருதில்
புலம் மல்கு கோயிலே கோயிலாகப் பொலிந்தீரே. 6

புனம் மல்கு கொன்றையீர் புலியின் அதளீர் பொலிவு ஆர்ந்த
சினம் மல்கு மால்விடையீர் செய்யீர் கரிய கண்டத்தீர்
இனம் மல்கு நால்மறையோர் ஏத்தும் சீர் கொள் இடைமருதில்
கனம் மல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 7

சிலை உய்த்த வெங்கணையால் புரம்மூன்று எரித்தீர் திறல் அரக்கன்
தலைபத்தும் திண்தோளும் நெரித்தீர் தையல் பாகத்தீர்
இலை மொய்த்த தண்பொழிலும் வயலும் சூழ்ந்த இடைமருதில்
நலம் மொய்த்த கோயிலே கோயிலாக நயந்தீரே. 8

மறை மல்கு நான்முகனும் மாலும் அறியா வண்ணத்தீர்
கறை மல்கு கண்டத்தீர் கபாலம் ஏந்து கையனீர்
அறை மல்கு வண்டுஇனங்கள் ஆலும் சோலை இடைமருதில்
நிறை மல்கு கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 9

சின் போர்வைச் சாக்கியரும் மாசு சேரும் சமணரும்
துன்பு ஆய கட்டுரைகள் சொல்லி அல்லல் தூற்றவே
இன்பு ஆய அந்தணர்கள் ஏத்தும்ஏர் கொள் இடைமருதில்
அன்பு ஆய கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. 10

கல்லின் மணி மாடக் கழுமலத்தார் காவலவன்
நல்ல அருமறையான் நல் தமிழ்ஞானசம்பந்தன்
எல்லி இடைமருதில் ஏத்துபாடல் இவைபத்தும்
சொல்லுவார்க்கும் கேட்பார்க்கும் துயரம்இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

173. திருத்தென்குரங்காடுதுறை

திருமுறை : 2/35 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : ஆபத்சகாயர் இறைவியார் : பவளக்கொடியம்மை

பரவக் கெடும் வல்வினை பாரிடம் சூழ
இரவில் புறங்காட்டு இடைநின்று எரியாடி
அரவச் சடை அந்தணன் மேய அழகார்
குரவப்பொழில் சூழ் குரங்காடு துறையே. 1

விண்டார் புரம்மூன்றும் எரித்த விமலன்
இண்டு ஆர் புறங்காட்டுஇடை நின்று எரியாடி
வண்டு ஆர் கருமென்குழல் மங்கையொர் பாகம்
கொண்டான் நகர்போல் குரங்காடுதுறையே. 2

நிறைவு இல் புறங்காட்டுஇடைநேரிழையோடும்
இறைவு இல் எரியான் மழு ஏந்தி நின்றுஆடி
மறையின் ஒலி வானவர் தானவர் ஏத்தும்
குறைவுஇல்லவன் ஊர் குரங்காடுதுறையே. 3

விழிக்கும் நுதல்மேல் ஒருவெண்பிறை சூடித்
தெழிக்கும் புறங்காட்டு இடைச் சேர்ந்து எரியாடிப்
பழிக்கும் பரிசே பலி தேர்ந்தவன் ஊர் பொன்
கொழிக்கும் புனல் சூழ் குரங்காடுதுறையே. 4

நீறு ஆர் தரு மேனியன் நெற்றி ஓர்கண்ணன்
ஏறு ஆர் கொடி எம் இறை ஈண்டு எரியாடி
ஆறு ஆர் சடை அந்தணன் ஆயிழையாள் ஓர்
கூறான் நகர்போல் குரங்காடு துறையே. 5

நளிரும் மலர்க்கொன்றையும் நாறு கரந்தைத்
துளிரும் சுலவிச் சுடுகாட்டு எரியாடி
மிளிரும் அரவு ஆர்த்தவன் மேவிய கோயில்
குளிரும் புனல் சூழ் குரங்காடுதுறையே. 6

பழகும் வினை தீர்ப்பவன் பார்ப்பதியோடும்
முழவம் குழல் மொந்தை முழங்கி எரிஆடும்
அழகன் அயில்மூஇலைவேல் வலன் ஏந்தும்
குழகன் நகர்போல் குரங்காடுதுறையே. 7

வரை ஆர்த்து எடுத்த அவ்அரக்கன் வலி ஒல்க
நிரை ஆர் விரலால் நெரித்திட்டவன் ஊர்ஆம்
கரை ஆர்ந்து இழி காவிரிக் கோலக் கரைமேல்
குரை ஆர் பொழில் சூழ் குரங்காடுதுறையே. 8

நெடியானொடு நான்முகனும் நினைவு ஒண்ணாப்
படிஆகிய பண்டங்கள் நின்று எரிஆடி
செடி ஆர் தலை ஏந்திய செங்கண் வெள்ஏற்றின்
கொடியான் நகர்போல் குரங்காடுதுறையே. 9

துவர்ஆடையர் வேடம் அலாச் சமண்கையர்
கவர் வாய்மொழி காதல் செய்யாதவன் ஊராம்
நவை ஆர் மணி பொன் அகில் சந்தனம் உந்திக்
குவை ஆர் கரை சேர் குரங்காடுதுறையே. 10

நல்லார் பயில் காழியுள் ஞானசம்பந்தன்
கொல் ஏறு உடையான் குரங்காடுதுறை மேல்
சொல்ஆர் தமிழ்மாலைபத்தும் தொழுது ஏத்த
வல்லார் அவர் வானவரோடு உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

174. திருவைகல் மாடக் கோயில்

திருமுறை : 3/18 பண் : காந்தார பஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : வைகனாதர் இறைவியார் : வைகலாம்பிகை

துளமதி உடை மறி தோன்று கையினர்
இளமதி அணி சடை எந்தையார் இடம்
உளமதி உரடையவர் வைகல் ஓங்கிய
வளமதி தடவிய மாடக்கோயிலே. 1

மெய்அகம் மிளிரும் வெண்நூலர் வேதியர்
மைய கண் மலைமகளோடும் வைகுஇடம்
வையகம் மகிழ்தர வைகல் மேல்திசைச்
செய்யகண்வளவன் முன் செய்த கோயிலே. 2

கணி அணி மலர்கொடு காலை மாலையும்
பணி அணிபவர்க்கு அருள்செய்த பான்மையர்
தணி அணி உமையொடு தாமும் தங்கு இடம்
மணி அணி கிளர் வைகல் மாடக் கோயிலே. 3

கொம்புஇயல்கோதை முன் அஞ்சக் குஞ்சரத்
தும்பி அது உரிசெய்த துங்கர் தங்கு இடம்
வம்பு இயல் சோலைசூழ் வைகல் மேல் திசைச்
செம்பியன் கோச்செங்கணான் செய் கோயிலே. 4

விடம் அடை மிடற்றினர் வேத நாவினர்
மடமொழி மலைமகளோடும் வைகிடம்
மடஅனம் நடை பயில வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக்கோயிலே. 5

நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவர் உறைவுஇடம் இலங்கு மூஎரி
மறையொடு வளர்வு செய்வாணர் வைகலில்
திறை உடை நிறை செல்வன் செய்த கோயிலே. 6

எரிசரம் வரிசிலை வளைய ஏவி முன்
திரிபுரம் எரிசெய்த செல்வர் சேர்வுஇடம்
வரிவளையவர் பயில் வைகல் மேல்திசை
வரு முகில் அணவிய மாடக் கோயிலே. 7

மலை அன இருபதுதோளினான் வலி
தொலைவு செய்து அருள்செய்த சோதியார் இடம்
மலர் மலி பொழில் அணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலை அன மாடக் கோயிலே. 8

மாலவன் மலரவன் நேடி மால் கொள
மால்எரி ஆகிய வரதர் வைகுஇடம்
மாலைகொடு அணி மறைவாணர் வைகலில்
மால் அன மணி அணி மாடக்கோயிலே. 9

கடு உடை வாயினர் கஞ்சி வாயினர்
பிடகுஉரை பேணிலார் பேணு கோயிலாம்
மடம்உடையவர் பயில் வைகல் மா நகர்
வடமலை அனைய நல் மாடக் கோயிலே. 10

மைந்தனது இடம் வைகல்மாடக்கோயிலைச்
சந்து அமர் பொழில் அணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ் கெழு பாடல் பத்துஇவை
சிந்தைசெய்பவர் சிவலோகம் சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

175. திருநல்லம்

திருமுறை : 1/85 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : உமாமகேசுவரர் இறைவியார் : மங்களநாயகி, அங்கோல்வளையம்மை

கல்லால் நிழல் மேய கறை சேர் கண்டா என்று
எல்லாமொழியாலும் இமையோர் தொழுது ஏத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழ எய்த
நல்லான் நமை ஆள்வான் நல்லம்நகரானே. 1

தக்கன் பெருவேள்விதன்னில் அமரரைத்
துக்கம்பல செய்து சுடர்பொன்சடை தாழக்
கொக்கின் இறகோடு குளிர்வெண்பிறை சூடும்
நக்கன் நமை ஆள்வான் நல்லம்நகரானே. 2

அந்திமதியோடும் அரவச் சடை தாழ
முந்தி அனல் ஏந்தி முதுகாட்டு எரிஆடி
சிந்தித்து எழ வல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமை ஆள்வான் நல்லம்நகரானே. 3

குளிரும் மதி சூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் அரவோடு வெண்நூல் திகழ்மார்பில்
தளிரும் திகழ்மேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்லம்நகரானே. 4

மணி ஆர் திகழ் கண்டம் உடையான் மலர் மலகு
பிணி வார் சடை எந்தை பெருமான் கழல்பேணித்
துணி ஆர் மலர்கொண்டு தொண்டர் தொழுது ஏத்த
நணியான் நமை ஆள்வான் நல்லம்நகரானே. 5

வாசம் மலர் மல்கு மலையான்மகளோடும்
பூசும் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் என உள்கி எழுவார் வினைகட்கு
நாசன் நமை ஆள்வான் நல்லம்நகரானே. 6

அம்கோல்வளை மங்கை காண அனல்ஏந்திக்
கொங்கு ஆர் நறுங்கொன்றை சூடிக் குழகுஆக
வெங்காடு இடம்ஆக வெந்தீ விளையாடும்
நம் கோன் நமை ஆள்வான் நல்லம்நகரானே. 7

பெண் ஆர் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண் ஆர் நுதலினான் கயிலை கருத்தினால்
எண்ணாது எடுத்தானை இறையே விரல்ஊன்றி
நண்ணார் புரம் எய்தான் நல்லம்நகரானே. 8

நாகத்துஅணையானும் நளிர் மா மலரானும்
போகத்து இயல்பினால் பொலிய அழகாகும்
ஆகத்தவளோடும் அமர்ந்து அங்கு அழகு ஆரும்
நாகம் அரை ஆர்த்தான் நல்லம்நகரானே. 9

குறி இல் சமணோடு குண்டர்வண்தேரர்
அறிவில் உரை கேட்டு அங்கு அவமே கழியாதே
பொறி கொள் அரவு ஆர்த்தான் பொல்லாவினை தீர்க்கும்
நறை கொள் பொழில் சூழ்ந்த நல்லம் நகரானே. 10

நலம் ஆர் மறையோர் வாழ் நல்லம்நகர் மேய
கொலை சேர் மழுவானைக் கொச்சை அமர்ந்து ஓங்கு
தலம் ஆர் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
கலைகள் இவை வல்லார் கவலை கழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

176. திருக்கோழம்பம்

திருமுறை : 2/13 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் :கோகிலேசுவரர் இறைவியார் : சௌந்திரநாயகி

நீற்றானை நீள்சடை மேல் நிறைவு உள்ளதோர்
ஆற்றானை அழகு அமர் மென்முலையாளை ஓர்
கூற்றானைக் குளிர்பொழில் கோழம்பம் மேவிய
ஏற்றானை ஏத்துமின் நும் இடர் ஏகவே. 1

மைஆன கண்டனை மான்மறி ஏந்திய
கையானைக் கடிபொழில் கோழம்பம் மேவியங
செய்யானைத் தேன் நெய் பாலும்திகழ்ந்து ஆடிய
மெய்யானை மேவுவார்மேல் வினை மேவாவே. 2

ஏதனை ஏதம் இலா இமையோர் தொழும்
வேதனை வெண்குழை தோடு விளங்கிய
காதனைக் கடிபொழில் கோழம்பம் மேவிய
நாதனை ஏத்துமின் நும் வினை நையவே. 3

சடையானைத் தண்மலரான் சிரம் ஏந்திய
விடையானை வேதமும் வேள்வியும்ஆய நன்கு
உடையானைக் குளிர்பொழில் சூழ் திருக் கோழம்பம்
உடையானை உள்குமின் உள்ளம் குளிரவே. 4

காரானைக் கடி கமழ் கொன்றை அம்போது அணி
தாரானைத் தையல் ஓர்பால் மகிழ்ந்து ஓங்கிய
சீரானைச் செறி பொழில் கோழம்பம் மேவிய
ஊரானை ஏத்துமின் நும்இடர் ஒல்கவே. 5

பண்டு ஆலின் நீழலானைப் பரஞ்சோதியை
விண்டார்கள்தம் புரம்மூன்று உடனேவேவக்
கண்டானைக் கடி கமழ் கோழம்பம் கோயிலாக்
கொண்டானைக் கூறுமின் உள்ளம் குளிரவே. 6

சொல்லானைச் சுடுகணையால் புரம்மூன்று எய்த
வில்லானை வேதமும் வேள்வியும் ஆனானைக்
கொல் ஆனை உரியானைக் கோழம்பம் மேவிய
நல்லானை ஏத்துமின் நும் இடர் நையவே. 7

விற்றானை வல்அரக்கர் விறல் வேந்தனைக்
குற்றானைத் திருவிரலால் கொடுங்காலனைச்
செற்றானைச் சீர்திகழும் திருக் கோழம்பம்
பற்றானைப் பற்றுவார் மேல் வினை பற்றாவே. 8

நெடியானோடு அயன் அறியா வகை நின்றது ஓர்
படியானைப் பண்டங்கவேடம் பயின்றானைக்
கடி ஆரும் கோழம்பம் மேவிய வெள்ஏற்றின்
கொடியானைக் கூறுமின் உள்ளம் குளிரவே. 9

புத்தரும் தோகைஅம்பீலி கொள் பொய்ம்மொழிப்
பித்தரும் பேசுவ பேச்சு அல்ல பீடு உடைக்
கொத்து அலர் தண்பொழில் கோழம்பம் மேவிய
அத்தனை ஏத்துமின் அல்லல் அறுக்கவே. 10

தண்புனல் ஓங்கு தண் தராய் மா நகர்
நண்பு உடை ஞானசம்பந்தன் நம்பான் உறை
விண் பொழில் கோழம்பம் மேவிய பத்துஇவை
பண் கொளப் பாட வல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

177. திரு ஆவடுதுறை

திருமுறை : 3/4 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

இறைவர் : மாசிலாமணிஈசர் இறைவியார்: ஒப்பிலாமுலையம்மை

இடரினும் தளரினும் எனதுஉறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதுஎழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்அருள் ஆவடுதுறை அரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன கழல் விடுவேன் அல்லேன்
தாழ் இளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழ்இளமதி வைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல் விரிநறுங்கொன்றைப்போது அணிந்த
கனல் எரி அனல் புல்கு கையவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 3

துப்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம் மலர்அடிஅலால் அரற்றாது என் நாக்
கைம் மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரி எழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 4

கையது வீழினும் கழிவு உறினும்
செய் கழல் அடிஅலால் சிந்தைசெய்யேன்
கொய் அணி நறுமலர் குலாய சென்னி
மை அணி மிடறு உடை மறையவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 5

வெந்துயர் தோன்றி ஓர் வெருஉறினும்
எந்தாய் உன் அடிஅலால் ஏத்தாது என் நா
ஐந்தலைஅரவுகொண்டு அரைக்கு அசைத்த
சந்த வெண்பொடி அணி சங்கரனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 6

வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடிஅலால் அரற்றாது என் நா
ஒப்பு உடை ஒருவனை உருவு அழிய
அப்படி அழல் எழ விழித்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 7

பேர் இடர் பெருகி ஓர் பிணி வரினும்
சீர் உடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏர் உடை மணி முடி இராவணனை
ஆர் இடர் பட வரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது என் நா
கண்ணனும் கடி கமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்புஅரிது ஆயவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 9

பித்தொடு மயங்கி ஓர் பிணி வரினும்
அத்தா உன் அடிஅலால் அரற்றாது என் நாப்
புத்தரும் சமணரும் புறன்உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன் அருள் ஆவடுதுறை அரனே. 10

அலை புனல் ஆவடுதுறை அமர்ந்த
இலை நுனை வேல்படை எம் இறையை
நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலை உடை அருந்தமிழ்மாலை வல்லார்
வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியன்உலகம்
நிலையாக முன் ஏறுவர் நிலம்மிசை நிலை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருத்தெங்குரங்காடுதுறை முதலிய தலங்களை வணங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாவடுதுறையை அடைந்து வழி பட்டெழுந்து அருளியிருக்கு நாள்களில் பிள்ளையார் தந்தையாராகிய சிவபாதவிருதயர் அவர்முன் அணைந்து, யாகஞ் செய்தற்குரிய காலம் வந்தமையால் தாம் சீகாழியை அடைந்து அதனைச் செய்தற்கு வேண்டிய பொன்னை விரும்பி விண்ணப்பித்தார். அதனைக் கேட்ட பிள்ளையார் அதனை யவர் தம்மிடத்தில் முன்னரே சொல்லி இருப்பதையும் நினைந்து அந்தமில்லாத பொருளெனப்படுவது ஆவடுதுறையுள் எந்தையார் இணை அடித் தலங்களன்றோ என எழுந்து திருக்கோயிலை அடைந்து இறைவனைப் போற்றி, என்னை அடைந்து கேட்பாருக்குக் கொடுக்குஞ் செல்வப் பொருளொன்றுமில்லேன் அஃது உன்னடி அல்லது வேறொன்றும் ஆவதை அறியேன் என்று இறைவனது திருவருளை வினாவிய “இடரினுந் தளரினும்” என்னுந் திருப்பதிகத்தைப் பாடி அருளினார். அவ்வாறு தந்தையார் பொருட்டுப் பொருளை நச்சி இன்தமிழ் பாடிய பிள்ளையாரது இச்சையை நிரப்பி அருள்கின்ற இறைவனது இன்னருளால் ஒரு சிவபூதம் பலி பீடத்தின்கண் பசும்பொன் நிறைந்த உலவாக்கிழி ஒன்றை வைத்துப் பிள்ளையாரை நோக்கி ‘இவ்வுலவாக்கிழி உமக்கிறைவன் நல்கியது’ என்றுரைக்க அதன் முன்னர் பிள்ளையார் கைகூப்பி வணங்கி நிலமுறப் பணிந்தெழுந்தார். பணிந்தெழுந்த அவர் அக்கிழியைத் தமது தலைமீது தரித்தெடுத்துத் தன் தாதையார் கையில் கொடுத்து “வேத முதல்வராகிய சிவபெருமானைப் பொருளாகக் கொண்டு தேவரீர் செய்யும் வேள்விக்கும் மற்றும் சீகாழியில் பிறர் செய்வனவற்றிற்கும் ஆகும். எவ்வளவு எடுப்பினும் உலவாது நிறைவுறுவதாகும்” என்று சொல்லி விடை கொடுத்து அவரைச் சீகாழிக்கு அனுப்பித் தாம் சிலநாள் அங்கெழுந்தருளி இருந்தார்.

திருச்சிற்றம்பலம்

178. திருத்துருத்தி

திருமுறை : 2/98 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : உத்தரவேதீசுவரர் இறைவியார் :மிருதுமுகிழாம்பிகை

வரைத்தலைப் பசும்பொனோடு அருங் கலன்கள் உந்தி வந்து
இரைத்து அலைச் சுமந்து கொண்டு எறிந்து இலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்தி புக்கு இருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்த உனக்கு உணர்த்துமாறு வல்லமே. 1

அடுத்துஅடுத்து அகத்தியோடு வன்னி கொன்றை கூவிளம்
தொடுத்துஉடன் சடைப் பெய்தாய் துருத்தியாய் ஓர் காலனை
கடுத்து அடிப்புறத்தினால் நிறத்து உதைத்த காரணம்
எடுத்துஎடுத்து உரைக்கும்ஆறு வல்லம்ஆகில் நல்லமே. 2

கங்குல் கொண்ட திங்களோடு கங்கை தங்கு செஞ்சடைச்
சங்கு இலங்கு வெண்குழை சரிந்து இலங்கு காதினாய்
பொங்கு இலங்கு பூணநூல் உருத்திரா துருத்தி புக்கு
எங்கும் நின் இடங்களா அடங்கி வாழ்வது என்கொலோ. 3

கருத்தினால் ஓர் காணி இல் விருத்தி இல்லை தொண்டர்தம்
அருத்தியால்தம் அல்லல் சொல்லி ஐயம் ஏற்பது அன்றியும்
ஒருத்திபால் பொருத்தி வைத்து உடம்பு விட்டு யோகியாய்
இருத்தி நீ துருத்தி புக்கு இது என்ன மாயம் என்பதே. 4

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்து அடி
மறக்கும் ஆறு இலாத என்னை மையல் செய்து இம் மண்ணின்மேல்
பிறக்கும்ஆறு காட்டினாய் பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்கும்ஆறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது என்னையே. 5

வெயிற்கு எதிர்ந்து இடம் கொடாது அகம் குளிர்ந்த பைம்பொழில்
துயிற்கு எதிர்ந்த புள்இனங்கள் மல்கு தண் துருத்தியாய்
மயிற்கு எதிர்ந்து அணங்கு சாயல் மாது ஓர்பாகம் ஆக மூ
எயிற்கு எதிர்ந்து ஓர் அம்பினால் எரிந்த வில்லி அல்லையே. 6

கணிச்சி அம்படைச் செல்வா கழிந்தவர்க்கு ஒழிந்த சீர்
துணிச் சிரக் கிரந்தையாய் கரந்தையாய் துருத்தியாய்
அணிப்படும் தனிப் பிறைப் பனிக் கதிர்க்கு அவாவு நல்
மணிப் படும் பைநாகம் நீ மகிழ்ந்த அண்ணல் அல்லையே. 7

சுடப் பொடிந்து உடம்பு இழந்து அநங்கன் ஆய மன்மதன்
இடர்ப்படக் கடந்து இடம் துருத்திஆக எண்ணினாய்
கடல்படை உடைய அக் கடல் இலங்கை மன்னனை
அடல் பட அடுக்கலில் அடர்த்த அண்ணல் அல்லையே. 8

களம் குளிர்ந்து இலங்கு போது காதலானும் மாலும் ஆய்
வளம் கிளர் பொன்அம்கழல் வணங்கி வந்து காண்கிலார்
துளங்கு இளம்பிறைச் செனித் துருத்தியாய் திருந்து அடி
உளம் குளிர்ந்தபோது எலாம் உகந்துஉகந்து உரைப்பனே. 9

புத்தர் தத்துவம் இலாச் சமண் உரைத்த பொய்தனை
உத்தமம் எனக்கொளாது உகந்து எழுந்து வண்டுஇனம்
துத்தம் நின்று பண்செயும் சூழ்பொழில் துருத்தி எம்
பித்தர்பித்தனைத் தொழப் பிறப்புஅறுத்தல் பெற்றியே. 10

கற்று முற்றினார் தொழும் கழுமலத்து அருந்தமிழ்
சுற்றம்முற்றும் ஆயினான் அவன் பகர்ந்த சொற்களால்
பெற்றம் ஒன்று உயர்த்தவன் பெருந் துருத்தி பேணவே
குற்றம் முற்றும் இன்மையின் குணங்கள் வந்து கூடுமே.11

திருச்சிற்றம்பலம்

179. திருஅழுந்தூர்

திருமுறை : 2/20 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : வேதபுரீசுரர் இறைவியார் :சௌந்தராம்பிகை

தொழுமாறு வல்லார் துயர் தீர நினைந்து
எழுமாறு வல்லார் இசைபாட விம்மி
அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்
வழிபாடு செய்மாமடம் மன்னினையே. 1

கடல் ஏறிய நஞ்சு அமுதுஉண்டவனே
உடலே உயிரே உணர்வே எழிலே
அடல் ஏறு உடையாய் அழுந்தை மறையோர்
விடலே தொழ மாமடம் மேவினையே. 2

கழிகாடலனே கனல்ஆடலினாய்
பழிபாடு இலனே அவையே பயிலும்
அழிபாடு இலராய் அழுந்தை மறையோர்
வழிபாடுசெய் மா மடம் மன்னினையே. 3

வானே மலையே என மன் உயிரே
தானே தொழுவார் தொழு தாள் மணியே
ஆனே சிவனே அழுந்தையவர் எம்
மானே என மா மடம் மன்னினையே 4

அலை ஆர் புனல் சூழ் அழுந்தைப் பெருமான்
நிலை ஆர் மறியும் நிறை வெண்மழுவும்
இலை ஆர் படையும் இவை ஏந்து செல்வ
நிலையா அது கொள்க என நீ நினையே. 5

நறவு ஆர் தலையின் நயவா உலகில்
பிறவாதவனே பிணிஇல்லவனே
அறை ஆர் கழலாய் அழுந்தை மறையோர்
மறவாது எழ மா மடம் மன்னினையே. 6

தடுமாறு வல்லாய் தலைவா மதியம்
சுடும்ஆறு வல்லாய் சுடர் ஆர் சடையில்
அடும் ஆறு வல்லாய் அழுந்தை மறையோர்
நெடு மா நகர் கைதொழ நின்றனையே. 7

பெரியாய் சிறியாய் பிறையாய் மிடறும்
கரியாய் கரிகாடு உயர்வீடு உடையாய்
அரியாய் எளியாய் அழுந்தை மறையோர்
வெரியார் தொழ மா மடம் மேவினையே. 8

மணி நீள் முடியால் மலையை அரக்கன்
தணியாது எடுத்தான் உடலம் நெரித்த
அணி ஆர் விரலாய் அழுந்தை மறையோர்
மணி மா மடம் மன்னி இருந்தனையே. 9

முடி ஆர் சடையாய் முனம்நாள் இருவர்
நெடியான் மலரான் நிகழ்வால் இவர்கள்
அடி மேல் அறியார் அழுந்தை மறையோ
படியால் தொழ மா மடம் பற்றினையே. 10

அரு ஞானம் வல்லார் அழுந்தை மறையோர்
பெரு ஞானம் உடைப் பெருமான் அவனைத்
திருஞானசம்பந்தன செந்தமிழ்கள்
உருஞானம் உண்டாம் உணர்ந்தார் தமக்கே. 11

திருச்சிற்றம்பலம்

180. திருமயிலாடுதுறை

திருமுறை : 1/38 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : மாயூரநாதேசுவரர் இறைவியார் : அஞ்சொனாயகி

கரவு இன்றி நல்மாமலர் கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரம் ஒன்றிய செஞ்சடையான் வாழ்
வர மா மயிலாடுதுறையே. 1

உர வெங்கரியின் உரி போர்த்த
பரமன் உறையும் பதி என்பர்
குரவம் சுரபுன்னையும் வன்னி
மருவும் மயிலாடு துறையே. 2

ஊனத்து இருள் நீங்கிட வேண்டில்
ஞானப்பொருள் கொண்டு அடி பேணும்
தேன் ஒத்து இனியான் அமரும் சேர்
வானம் மயிலாடுதுறையே. 3

அஞ்சு ஒண் புலனும் அவை செற்ற
மஞ்சன் மயிலாடுதுறையை
நெஞ்சு ஒன்றி நினைந்து எழுவார்மேல்
துஞ்சும் பிணிஆயின தானே. 4

தணி ஆர் மதி செஞ்சடையான் தன்
அணி ஆர்ந்தவருக்கு அருள் என்றும்
பிணிஆயின தீர்த்து அருள்செய்யும்
மணியான் மயிலாடுதுறையே. 5

தொண்டர் இசை பாடியும் கூடிக்
கண்டு துதிசெய்பவன் ஊராம்
பண்டும் பலவேதியர் ஓத
வண்டு ஆர் மயிலாடுதுறையே. 6

அணங்கோடு ஒருபாகம் அமர்ந்து
இணங்கி அருள்செய்தவன் ஊர்ஆம்
நுணங்கும் புரிநூலர்கள் கூடி
வணங்கும் மயிலாடுதுறையே. 7

சிரம் கையினில் ஏந்தி இரந்த
பரம் கொள் பரமேட்டி வரையால்
அரங்க்வ் அரக்கன் வலி செற்ற
வரம் கொள் மயிலாடுதுறையே. 8

ஞாலத்தை நுகர்ந்தவன்தானும்
கோலத்து அயனும் அறியாத
சீலத்தவன் ஊர் சிலர் வடி
மாலைத் தீர் மயிலாடுதுறையே. 9

நின்று உண் சமணும் நெடுந்தோர்
ஒன்றும் அறியாமை உயர்ந்த
வென்றி அருள்ஆனவன் ஊர்ஆம்
மன்றன் மயிலாடுதுறையே. 10

நயர் காழியுள் ஞானசம்பந்தன்
மயல் தீர் மயிலாடுதுறைமேல்
செயலால் உரைசெய்தனபத்தும்
உயர்வுஆம் இவை உற்று உணர்வார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

181. திருமயிலாடுதுறை

திருமுறை : 3/70 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

ஏனஎயிறு ஆடுஅரவொடு என்பு வரிஆமை இவை
பூண்டு இளைஞராய்க்
கான வரி நீடு உழுவை அதள் உடைய படர்சடையர்
காணி எனல் ஆம்
ஆன புகழ் வேதியர்கள் ஆகுதியின் மீது புகை
போகி அழகு ஆர்
வானம் உறு சோலைமிசை மாசுபட மூசும்
மயிலாடுதுறையே. 1

அம் தண்மதி செஞ்சடையர் அம் கண் எழில் கொன்றையொடு
அணிந்து அழகர் ஆம்
எம்தம் அடிகட்கு இனிய தானம்அது வேண்டில் எழில் ஆர்
பதியது ஆம்
கந்தம் மலி சந்தினொடு கார்அகிலும் வாரிவரு
காவிரியுளால்
வந்த திரை உந்தி எதிர்மந்தி மலர் சிந்தும்
மயிலாடுதுறையே. 2

தோளின்மிசை வரிஅரவம் நஞ்சு அழல வீக்கி மிகு
நோக்கு அரியராய்
மூளை படு வெண்தலையில் உண்டு முதுகாடு உறையும்
முதல்வர் இடம் ஆம்
பாளை படு பைங்கமுகு செங்கனி உதிர்த்திட
நிரந்து கமழ் பூ
வாளை குதிகொள்ள மடல் விரிய மணம் நாறும்
மயிலாடுதுறையே. 3

ஏதம் இலர் அரிய மறை மலையர்மகள் ஆகிய
இலங்கு நுதல் ஒண்
பேதை தடமார்பு அது இடம்ஆக உறைகின்ற பெரு
மானது இடமாம்
காதல் மிகு கவ்வையொடு மவ்வல் அவை கூடி வரு
காவிரியுளால்
மாதர் மறிதிரைகள் புக வெறிய வெறி கமழும்
மயிலாடுதறையே. 4

பூ விரி கதுப்பின் மடமங்கையர் அகம்தொறும்
நடந்து பலி தேர்
பா விரி இசைக்கு உரிய பாடல் பயிலும் பரமர்
பழமை எனல் ஆம்
காவிரி நுரைத்து இருகரைக்கும் மணி சிந்த வரி
வண்டு கவர
மா விரி மதுக் கிழிய மந்தி குதி கொள்ளும்
மயிலாடுதுறையே. 5

கடம் திகழ் கருங்களிறு உரித்து உமையும் அஞ்சமிக
நோக்கு அரியராய்
விடம் திகழும் மூஇலைநல்வேல் உடைய வேதியர்
விரும்பும் இடம் ஆம்
தொடர்ந்து ஒளிர் கிடந்தது ஒரு சோதி மிகு தொண்டை எழில்
கொண்ட துவர்வாய்
மடந்தையர் குடைந்த புனல் வாசம் மிக நாறும்
மயிலாடுதுறையே. 6

அவ்வ திசையாரும் அடியாரும் உளர் ஆகஅருள்
செய்து அவர்கள் மேல்
எவ்வம் அற வைகலும் இரங்கி எரிஆடும் எமது
ஈசன் இடம் ஆம்
கவ்வையொடு காவிரி கலந்து வரு தென்கரை
நிரந்து கமழ் பூ
மவ்வலொடு மாதவி மயங்கி மணம் நாறும்
மயிலாடுதுறையே. 7

இலங்கைநகர் மன்னன் முடிஒருபதினொடு இருபதுதோள்
நெரிய விரலால்
விலங்கலில் அடர்த்து அருள்புரிந்தவர் இருந்த இடம்
வினவுதிர்களேல்
கலங்கல் நுரை உந்தி எதிர் வந்த கயம் மூழ்கி மலர்
கொண்டு மகிழா
மலங்கி வரு காவிரி நிரந்து பொழிகின்ற
மயிலாடுதுறையே. 8

ஒண்திறலின் நான்முகனும் மாலும்மிக நேடி
உணராத வகையால்
அண்டம் உற அங்கி உரு ஆகி மிக நீண்ட
அரனாரது இடமாம்
கெண்டைஇரை கொண்டு கெளிறு ஆர் உடன்இருந்து கிளர்
வாய் அறுதல் சேர்
வண்டல்மணல் கெண்டி மடநாரை விளையாடு
மயிலாடுதுறையே. 9

மிண்டு திறல் அமணரொடு சாக்கியரும் அலர்தூற்ற
மிக்க திறலோன்
இண்டை குடிகொண்ட சடை எங்கள் பெருமானது இடம்
என்பர் எழிலார்
தெண்திரை பரந்து ஒழுகு காவிரிய தென்கரை
நிரந்து கமழ் பூ
வண்டுஅவை கிளைக்க மது வந்து ஒழுகு சோலை
மயிலாடுதுறையே. 10

நிணம் தரு மயானம் நிலம் வானம் மதியாதது ஒரு
சூலமொடு பேய்க்
கணம் தொழு கபாலி கழல் ஏத்தி மிக வாய்த்தது ஒரு
காதன்மையினால்
மணம் தண் மலி காழி மறை ஞானசம்பந்தன்
மயிலாடுதுறையைப்
புணர்ந்த தமிழ்ப் பத்தும் இசையால் உரைசெய்வார் பெறுவர்
பொன்னுலகமே. 11

திருச்சிற்றம்பலம்

182. திருவிளநகர்

திருமுறை : 2/78 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : துறைகாட்டும்வள்ளல் இறைவியார் : வேயுறுதோளிஅம்மை

ஒளிர்இளம்பிறை சென்னிமேல் உடையர் கோவண ஆடையர்
குளிர்இளம்மழை தவழ் பொழில் கோல நீர் மல்கு காவிரி
நளிர்இளம்புனல் வார் துறை நங்கைகங்கையை நண்ணினார்
மிளிர்இளம் பொறிஅரவினார் மேயது விளநகர்அதே. 1

அக்கு அரவு அணிகலன் என அதனொடு ஆர்த்தது ஓர் ஆமை பூண்டு
உக்கவர் சுடுநீறு அணிந்து ஒளி மல்கு புனல் காவிரிப்
புக்கவர் துயர் கெடுக எனப் பூசு வெண்பொடி மேவிய
மிக்கவர் வழிபாடுசெய் விளநகர் அவர் மேயமே. 2

வாளி சேர்அடங்கார் மதில் தொலைய நூறிய வம்பின் வேய்த்
தோளி பாகம் அமர்ந்தவர் உயர்ந்த தொல்கடல் நஞ்சு உடன்
காளம் மல்கிய கண்டத்தர் கதிர் விரி சுடர் முடியினர்
மீளி ஏறு உகந்து ஏறினார் மேயது விளநகர்அதே. 3

கால் விளங்கு எரி கழலினார் கை விளங்கிய மேலினார்
நூல் விளங்கிய மார்பினார் நோய் இலார் பிறப்பும் இலார்
மால் விளங்கு ஒளி மல்கிய மாசு இலா மணிமிடறினார்
மேல் விளங்கு வெண்பிறையினார் மேயது விளநகர்அதே. 4

பன்னினார் மறை பாடினார் பாய சீர்ப் பழங்காவிரித்
துன்னு தண்துறை முன்னினார் தூ நெறி பெறுவார் எனச்
சென்னி திங்களைப் பொங்குஅராக் கங்கையோடு உடன்சேர்த்தினார்
மின்னு பொன் புரிநூலினார் மேயது விளநகர்அதே. 5

தேவரும் அமரர்களும் திசைகள்மேல் உள தெய்வமும்
யாவரும் அறியாதது ஓர் அமைதியால் தழல் உருவினார்
மூவரும் இவர் என்னவும் முதல்வரும் இவர் என்னவும்
மேவரும் பொருள் ஆயினார் மேயது விளநகர்அதே. 6

சொல் தரும் மறை பாடினார் சுடர்விடும் சடைமுடியினார்
கல் தருவ்வடம் கையினார் காவிரித்துறை காட்டினார்
மல் தரும் திரள்தோளினார் மாசுஇல் வெண்பொடிப் பூசினார்
வில் தரும் மணிமிடறினார் மேயது விளநகர்அதே. 7

படர்தரும் சடைமுடியினார் பைங்கழல் அடி பரவுவார்
அடர்தரும் பிணி கெடுக என அருளுவார் அரவு அரையினார்
விடர்தரும் மணி மிடறினார் மின்னு பொன் புரிநூலினார்
மிடல் தரும் படைமழுவினார் மேயது விளநகர்அதே. 8

கை இலங்கிய வேலினார் தோலினார் கரி காலினார்
பை இலங்கு அரவு அல்குலாள் பாகம் ஆகிய பரமனார்
மை இலங் ஒளி மல்கிய மாசு இலா மணி மிடறினார்
மெய் இலங்கு வெண்நீற்றினார் மேயது விளநகர்அதே. 9

உள்ளதன்தனைக் காண்பன் கீழ் என்ற மா மணிவண்ணனும்
உள்ளதன்தனைக் காண்பன் மேல் என்ற மா மலர் அண்ணலும்
உள்ளதன்தனைக் கண்டிலார் ஒளி ஆர்தரும் சடை முடியின் மேல்
உள்ளதன்தனைக் கண்டிலா ஒளியார் விளநகர் மேயதே. 10

மென்சிறைவண்டு யாழ்முரல் விளநகர்த் துறை மேவிய
நன் பிறை நுதல் அண்ணலைச் சண்பை ஞானசம்பந்தன் சீர்
இன்பு உறும் தமிழால் சொன்ன ஏத்துவார் வினை நீங்கிப் போய்த்
துன்பு உறும் துயரம் இலாத் தூநெறி பெறுவார்களே. 11

திருச்சிற்றம்பலம்

183. திருப்பறியலூர் வீரட்டம்

திருமுறை : 1/134 பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்புரி
இறைவர் : வீரட்டேசுவரர் இறைவியார் : இளம்கொம்பனையாள்

கருத்தன் கடவுள் கனல் ஏந்தி ஆடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்
திருத்தம் உடையார் திருப்பறியல்ஊரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே. 1

மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனல்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறியல்ஊரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. 2

குளிர்ந்தார் சடையன் கொடும்சிலைவில்காமன்
விளிந்தான் அடங்க வீந்து எய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறியல்ஊரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 3

பிறப்புஆதி இல்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்புஆதி அந்தம் செலச்செய்யும் தேசன்
சிறப்பாடு உடையார் திருப்பறியல்ஊரில்
விறல்பாரிடம் சூழ வீரட்டத் தானே. 4

கரிந்தார் இடுகாட்டில் ஆடும் கபாலி
புரிந்தார் படுதம் புறங்காட்டில் ஆடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறியல்ஊரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 5

அரவுற்ற நாணா அனல் அம்பதாகச்
செருவுற்று அவர்புரம் தீஎழச் செற்றான்
தெருவில் கொடிசூழ் திருப்பறியல்ஊரில்
வெருவுற்று அவர்தொழும் வீரட்டத் தானே. 6

நரையார் விடையான் நலம்கொள் பெருமான்
அரையார் அரவம் அழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறியல்ஊரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 7

வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதான் இருந்துஏழை அன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறியல்ஊரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே. 8

விளங்கொள் மலர்மேல் அயன்ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழலாய் நின்றான்
இளங்கொம்பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப்பறியல் வீரட்டத் தானே. 9

சடையன் பிறையன் சமண் சாக்கியரோடு
அடைஅன்பு இலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோல் அரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே. 10

நறுநீர் உகும்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீடு அரவன் புனைபாடல் வல்லார்க்கு
அறும்நீடு அவலம் அறும்பிறப்புத் தானே. 11

திருச்சிற்றம்பலம்

184. திருச்செம்பொன்பள்ளி

திருமுறை : 1/25 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : சொர்ணபுரீசுவரர் இறைவியார் : மருவார் குழலியம்மை

மருவார் குழலிமாது ஓர்பாகமாய்த்
திருவார் செம்பொன்பள்ளி மேவிய
கருவார் கண்டத்து ஈசன் கழல்களை
மருவாதவர்மேல் மன்னும் பாவமே. 1

வார்ஆர் கொங்கை மாது ஓர்பாகமாய்
சீர்ஆர் செம்பொன்பள்ளி மேவிய
ஏர்ஆர் புரிபுன்சடை எம்ஈசனைச்
சேராதவர்மேல் சேரும் வினைகளே. 2

வரை ஆர் சந்தோடு அகிலும் வரும்பொன்னித்
திரை ஆர் செம்பொன் பள்ளி மேவிய
நரை ஆர் விடை ஒன்று ஊரும் நம்பனை
உரையாதவர் மேல் ஒழியா ஊனமே. 3

மழுவாள் ஏந்தி மாது ஓர்பாகமாய்ச்
செழு ஆர் செம்பொன்பள்ளி மேவிய
எழில்ஆர் புரிபுன்சடை எம் இறைவனைத்
தொழுவார் தம்மேல் துயரம் இல்லையே. 4

மலையான்மகளோடு உடன்ஆய் மதில் எய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலை ஆர் மலர் கொண்டு எல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே. 5

அறை ஆர் புனலோடு அகிலும் வரு பொன்னிச்
சிறை ஆர் செம்பொன்பள்ளி மேவிய
கறை ஆர் கண்டத்து ஈசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே. 6

பையார் அரவு ஏர் அல்குலாளொடும்
செய்யார் செம்பொன்பள்ளி மேவிய
கையார் சூலம் ஏந்து கடவுளை
மெய்யால் வணங்க மேவா வினைகளே. 7

வானார் திங்கள் வளர்புன்சடை வைத்துத்
தேனார் செம்பொன்பள்ளி மேவிய
ஊனார் தலையில் பலிகொண்டு உழல் வாழ்க்கை
ஆனான் கழலே அடைந்து வாழ்மினே. 8

காரார் வண்ணன் கனகம் அனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன்சடை எம் நிமலனை
ஓராதவர்மேல் ஒழியா ஊனமே. 9

மாசு ஆர் உடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசு ஆர் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா என்ன நில்லா இடர்களே. 10

நறவார் புகலி ஞானசம்பந்தன்
செறுவார் செம்பொன்பள்ளி மேயானைப்
பெறுமாறு இசையால் பாடல் இவைபத்தும்
உறுமா சொல்ல ஓங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

185. திருநனிபள்ளி

திருமுறை : 2/84 பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : நற்றுணையப்பர் இறைவியார் : மலையான்மடந்தை

காரைகள் கூகைமுல்லை களவாகை ஈகை
படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடு அமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளை
குதி கொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயல்மேதி வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள். 1

சடையிடை புக்கு ஒடுங்கிஉள தங்கு வெள்ளம்
வளர்திங்கள் கண்ணி அயலே
இடையிடை வைத்தது ஒக்கும் மலர்தொத்துமாலை
இறைவன் இடம்கொள் பதிதான்
மடையிடைவாளைபாய முகிழ்வாய் நெரிந்து
மணம் நாறும் நீலம் மலரும்
நடையுடை அன்னம்வைகு புனல் அம் படப்பை
நனிபள்ளி போலும் நமர்காள். 2

பெறுமலர் கொண்டுதொண்டர் வழிபாடு செய்யல்
ஒழிபாடு இலாத பெருமான்
கறுமலர் கண்டமாக விடம் உண்ட காளை
இடம் ஆய காதல் நகர்தான்
வெறுமலர் தொட்டுவிட்ட விசைபோன கொம்பின்
விடுபோது அலர்ந்த விரைசூழ்
நறுமலர் அல்லிபுல்லி ஒலிவண்டு உறங்கும்
நனிபள்ளி போலும் நமர்காள். 3

குளிர்தரு கங்கைதங்கு சடைமாடு இலங்கு
தலைமாலை யோடு குலவி
ஒளிர்தரு திங்கள் சூடி உமைபாகமாக
உடையான் உகந்த நகர்தான்
குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட
பெடைவண்டு தானும் முரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு வைகும்
நனிபள்ளி போலும் நமர்காள். 4

தோடு ஒரு காதன் ஆகி ஒருகாது இலங்கு
சுரிசங்கு நின்று புரளக்
காடு இடமாக நின்று கனல் ஆடும் எந்தை
இடம்ஆய காதல் நகர்தான்
வீடுஉடன் எய்துவார்கள் விதிஎன்று சென்று
வெறிநீர் தெளிப்ப விரலால்
நாடு உடன்ஆடு செம்மை ஒலிவெள்ளம் ஆரும்
நனிபள்ளி போலும் நமர்காள். 5

மேகமொடு ஓடுதிங்கள் மலரா அணிந்து
 மலையான் மடந்தை மணிபொன்
ஆகமொர் பாகமாக அனல் ஆடும் எந்தை
 பெருமான் அமர்ந்த நகர்தான்
ஊகமொடு ஆடுமந்தி உகளும் சிலம்ப
 அகில்உந்தி ஒண்பொன் இடறி
நாகமொடு ஆரம்வாரு புனல்வந்து அலைக்கும்
 நனிபள்ளி போலும் நமர்காள். 6

தகைமலி தண்டுசூலம் அனல்உமிழு நாகம்
 கொடுகொட்டி வீணை முரல
வகைமலி வன்னிகொன்றை மதமத்தம் வைத்த
 பெருமான் உகந்த நகர்தான்
புகைமலி கந்தமாலை புனைவார்கள் பூசல்
 பணிவார்கள் பாடல் பெருகி
நகைமலி முத்துஇலங்கு மணல்சூழ் கிடக்கை
 நனிபள்ளி போலும் நமர்காள். 7

வலமிகு வாளன்வேலன் வளைவாள் எயிற்று
 மதியா அரக்கன் வலியோடு
உலமிகு தோள்கள்ஒல்க விரலால் அடர்த்த
 பெருமான் உகந்த நகர்தான்
நிலமிகு கீழும்மேலும் நிகர் ஆதும் இல்லை
 எனநின்ற நீதி அதனை
நலம்மிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யும்
 நனிபள்ளி போலும் நமர்காள். 8

நிறஉரு ஒன்றுதோன்றி எரிஒன்றி நின்றது
ஒருநீர்மை சீர்மை நினையார்
அறஉரு வேதநாவன் அயனோடு மாலும்
அறியாத அண்ணல் நகர்தான்
புறவிரி முல்லைமௌவல் குளிர்பிண்டி புன்னை
புனைகொன்றை துன்று பொதுளி
நறவிரி போதுதாது புதுவாசம் நாறும்
நனிபள்ளி போலும் நமர்காள். 9

அனமிகு செல்குசோறு கொணர்கஎன்று கையில்
இடஉண்டு பட்ட அமணும்
மனமிகு கஞ்சி மண்டை அதில்உண்டு தொண்டர்
குணம் இன்றி நின்ற வடிவும்
வினைமிகு வேதம் நான்கும் விரிவித்த நாவின்
விடையான் உகந்த நகர்தான்
நனமிகு தொண்டர்நாளும் அடிபரவல் செய்யும்
நனிபள்ளி போலும் நமர்காள். 10


கடல்வரை ஓதம்மல்கு கழிகானல் பானல்
கமழ்காழி என்று கருதப்
படுபொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை ஒன்ற அத்தர் பியன்மேல் இருந்து
இன்இசையால் உரைத்த பனுவல்
நடுஇருள் ஆடும்எந்தை நனிபள்ளி உள்க
வினைகெடுதல் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

ஆளுடைய பிள்ளையார் இறைவனருள் பெற்றுச் சீகாழியி லெழுந் தருளியுள்ளபோது அச்செய்தியைக் கேட்டறிந்த அவருடைய திருத்தாயர் திருஅவதாரத் தலமாகிய திருநனிபள்ளியின் மறையோர்களெல்லாம் சீகாழியை அடைந்து பிள்ளையாரை வணங்கி அவரைத் தமது திருப்பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டினர். அவரும் அதற்கியைந்து புறப்பட்டுத் திருநனி பள்ளியை நெருங்கி வந்து தமக்கு முன்னே தோன்றும் 'வானணையும் மலர்ச்சோலை சூழ்ந்த பதியா' தென்று கேட்ப, அவர் தாதையார் 'அது திருநனிப்பள்ளி' யென்றனர். அதனையறிந்த பிள்ளையார் 'காரைகள் கூகை முல்லை' என்னும் இப்பதிகத்தையெடுத்து 'இது நனிபள்ளி போலு நமர்காள்' என்று திருப்பாட்டினிறுதிதோறும் வைத்துப் பாடியும் திருக்கடைக்காப்பினில் 'நடு விருளாடுமெந்தை நனிபள்ளி உள்க வினைகெடுத லாணை நமதே' என்று சிறப்பித்தும் அத்திருப்பதியை அடைந்து திருக்கோயிலில் சென்று இறைவனை வணங்கி இன்னருள் பெற்றருளினார். இத்திருப் பதிகமே அத்திருநனிபள்ளி பாலை நிலமாக இருந்ததனை அவ்வூரினர் வேண்டுகோளின்படி நெய்தலாக்குமாறும் பிள்ளையாரால் பாடியருளியது எனப் பெரியோர் கூறுவர். இவ்வுண்மை பதினொராந் திருமுறையின் நம்பியாண்டார் நம்பிகளது ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையில் 'ஒண்கெழுவு, ஞாலத்தினரறிய மன்று நனிபள்ளியது, பாலைதனை நெய்த லாக்கியும்' எனவும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனா அருளிச் செய்த திருக்களிற்றுப் படியாரில் 'ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப், பாடல் பனைதாளம் பாலை நெய்தல்' எனவும் பாராட்டிக் கூறப்பெறுதல் அலறியற் பாலது.

திருச்சிற்றம்பலம்



186. திருவலம்புரம்

திருமுறை : 3/103 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்
இறைவர் : வலம்புரி நாதர் இறைவியார் : வடுவகிர்க்கண்ணி

கொடிஉடை மும்மதில் ஊடு உருவக் குனிவெம் சிலைதாங்கி
இடிபட எய்த அமரர்பிரான் அடியார் இசைந்துஏத்தத்
துடிஇடையாளை ஓர் பாகம் ஆகத் துதைந்தார் இடம்போலும்
வடிவு உடை மேதி வயல்படியும் வலம்புர நன்னகரே. 1

கோத்த கல்லாடையும் கோவணமும் கொடுகொட்டி கொண்டுஒருகைத்
தேய்த்து அன்று அநங்கனைத் தேசுஅழித்துத் திசையார் தொழுது ஏத்தக்
காய்த்த கல்லால் அதன் கீழிருந்த கடவுள் இடம்போலும்
வாய்த்த முத்தீத் தொழில் நான்மறையோர் வலம்புர நன்னகரே. 2

நொய்யது ஓர் மான்மறி கைவிரலின் நுனைமேல் நிலையாக்கி
மெய் எரிமேனி வெண்ணீறு பூசி விரிபுன்சடை தாழ
மையிரும் சோலை மணம்கமழ இருந்தார் இடம்போலும்
வைகலும் மா முழவம் அதிரும் வலம்புர நன்னகரே. 3

ஊன் அமர் ஆக்கை உடம்புதன்னை உணரில் பொருள்அன்று
தேன் அமர் கொன்றையினான் அடிக்கே சிறுகாலை ஏத்துமினோ
ஆன் அமர் ஐந்தும்கொண்டு ஆட்டு உகந்த அடிகள் இடம்போலும்
வானவர் நாள்தொறும் வந்து இறைஞ்சும் வலம்புர நன்னகரே. 4

செற்று எறியும்திரையார் கலுழிச் செழுநீர்கிளர் செஞ்சடைமேல்
அற்று அறியாது அனல் ஆடுநட்டம் அணியார் தடம்கண்ணி
பெற்று அறிவார் எருது ஏறவல்ல பெருமான் இடம்போலும்
வற்று அறியாப்புனல் வாய்ப்புடைய வலம்புர நன்னகரே. 5

உண்ண வண்ணத்து ஒளி நஞ்சம்உண்டு உமையோடு உடனாகிச்
சுண்ண வண்ணப்பொடி மேனிபூசிச் சுடர்ச்சோதி நின்றுஇலங்கப்
பண்ண வண்ணத்தன பாணிசெய்யப் பயின்றார் இடம்போலும்
வண்ண வண்ணப்பறை பாணிஅறா வலம்புர நன்னகரே. 6

புரிதரு புன்சடை பொன்தயங்கப் புரிநூல் புரண்டுஇலங்க
விரைதரு வேழத்தின் ஈருரிதோல் மேல்மூடி வேய்புரைதோள்
அரைதரு பூந்துகில் ஆர் அணங்கை அமர்ந்தார் இடம்போலும்
வரைதரு தொல்புகழ் வாழ்க்கைஅறா வலம்புர நன்னகரே. 7

தண்டுஅணை தோள் இருபத்தினொடும் தலை பத்துஉடையானை
ஒண்டணை மாது உமை தான்நடுங்க ஒருகால் விரலூன்றி
மிண்டது தீர்த்து அருள் செய்யவல்ல விகிர்தர்க்கு இடம்போலும்
வண்டுஅணை தன்னோடு வைகுபொழில் வலம்புர நன்னகரே. 8

தார் உறு தாமரை மேல்அயனும் தரணி அளந்தானும்
தேர்வு அறியா வகையால் இகலித் திகைத்துத் திரிந்தேத்தப்
பேர்வு அறியா வகையால்நிமிர்ந்த பெருமான் இடம்போலும்
வார் உறு சோலை மணம்கமழும் வலம்புர நன்னகரே. 9

காவிய நல்துவர்ஆடையினார் கடு நோன்பு மேல்கொள்ளும்
பாவிகள் சொல்லைப் பயின்று அறியாப்பழந் தொண்டர் உள் உருக
ஆவியுள் நின்றுஅருள் செய்யவல்ல அழகர் இடம்போலும்
வாவியின் நீர்வயல் வாய்ப்புடைய வலம்புர நன்னகரே.10

நல்லியல் நான்மறையோர் புகலித் தமிழ்ஞான சம்பந்தன்
வல்லியல் தோலுடை ஆடையினான் வலம்புர நன் நகரைச்
சொல்லிய பாடல்கள் பத்தும்சொல்ல வல்லவர் தொல்வினைபோய்ச்
செல்வன சேவடி சென்றுஅணுகிச் சிவலோகம் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

187. திருத்தலைச்சங்காடு

திருமுறை : 2/55 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : சங்கருணாதேசுவரர் இறைவியார் : சௌந்தரநாயகி

நலச்சங்க வெண்குழையும் தோடும்பெய்துஓர் நால்வேதம்
சொலச்சங்கை இல்லாதீர் சுடுகாடுஅல்லால் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே. 1

துணிமல்கு கோவணமும் தோலும்காட்டித் தொண்டுஆண்டீர்
மணிமல்கு கண்டத்தீர் அண்டர்க்குஎல்லாம் மாண்பு ஆனீர்
பிணிமல்கு நூல்மார்பர் பெரியோர் வாழும் தலைச்சங்கை
அணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே. 2

சீர்கொண்ட பாடலீர் செங்கண்வெள்ளேறு ஊர்தியீர்
நீர்கொண்டும் பூக்கொண்டும் நீங்காத்தொண்டர் நின்றுஏத்தத்
தார்கொண்ட நூல்மார்பர் தக்கோர்வாழும் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே கோயிலாக இருந்தீரே. 3

வேடம்சூழ் கொள்கையீர் வேண்டிநீண்ட வெண்திங்கள்
ஓடம்சூழ் கங்கையும் உச்சிவைத்தீர் தலைச்சங்கைக்
கூடம்சூழ் மண்டபமும் குலாயவாசல் கொடித்தோன்றும்
மாடம்சூழ் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. 4

சூலம்சேர் கையினீர் சுண்ணவெண்ணீறு ஆடலீர்
நீலம்சேர் கண்டத்தீர் நீண்டசடைமேல் நீர் ஏற்றீர்
ஆலம்சேர் தண்கானல் அன்னம்மன்னும் தலைச்சங்கைக்
கோலம்சேர் கோயிலே கோயிலாக் கொண்டீரே. 5

நிலம்நீரொடு ஆகாசம் அனல் கால் ஆகி நின்றுஐந்து
புலநீர்மை புறம்கண்டார் பொக்கம்செய்யார் போற்று ஓவார்
சலநீதர் அல்லாதார் தக்கோர்வாழும் தலைச்சங்கை
நலநீர கோயிலே கோயிலாக நயந்தீரே. 6

அடிபுல்கு பைங்கழல்கள் ஆர்ப்பப்பேர்ந்து ஓர் அனல் ஏந்திக்
கொடிபுல்கு மென்சாயல் உமையோர்பாகம் கூடினீர்
பொடிபுல்கு நூல்மார்பர் புரிநூலாளர் தலைச்சங்கைக்
கடிபுல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே. 7

திரையார்ந்த மாகடல்சூழ் தென் இலங்கைக் கோமானை
வரையார்ந்த தோள்அடர விரலால்ஊன்றும் மாண்பினீர்
அரையார்ந்த மேகலையீர் அந்தணாளர் தலைச்சங்கை
நிரையார்ந்த கோயிலே கோயிலாக நினைந்தீரே. 8

பாயோங்கு பாம்புஅணை மேலானும் பைந்தாமரையானும்
போய் ஓங்கிக் காண்கிலார் புறம் நின்றுஓரார் போற்றுஓவார்
தீயோங்கு மறையாளர் திகழும்செல்வத் தலைச்சங்கைச்
சேயோங்கு கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 9

அலையாரும் புனல்துறந்த அமணர்குண்டர் சாக்கியர்
தொலையாதுஅங்கு அலர் தூற்றத் தோற்றம்காட்டி ஆட்கொண்டீர்
தலையான நால்வேதம் தரித்தார்வாழும் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே கோயிலாக நின்றீரே. 10

நளிரும் புனல்காழி நல்லஞான சம்பந்தன்
குளிரும் தலைச்சங்கை ஓங்குகோயில் மேயானை
ஒளிரும் பிறையானை உரைத்தபாடல் இவை வல்லார்
மிளிரும் திரைசூழ்ந்த வையத்தார்க்கு மேலாரே. 11

திருச்சிற்றம்பலம்

188. திருஆக்கூர்த்தான்தோன்றிமாடம்

திருமுறை : 2/42 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : தான்தோன்றியப்பர் இறைவியார் : வாள்நெடுங்கண்ணி

அக்கு இருந்த ஆரமும் ஆடுஅரவும் ஆமையும்
தொக்கு இருந்த மார்பினான் தோல்உடையான் வெண்நீற்றான்
புக்கு இருந்த தொல் கோயில் பொய் இலா மெய்ந்நெறிக்கே
தக்கு இருந்தார் ஆக்கூரில் தான்தோன்றிமாடமே. 1

நீர் ஆர வார்சடையான் நீறு உடையான் ஏறு உடையான்
கார் ஆர் பூங்கொன்றையினான் காதலித்த தொல் கோயில்
கூர் ஆரல் வாய் நிறையக் கொண்டு அயலே கோட்டகத்தில்
தாரா மல்கு ஆக்கூரில் தான்தோன்றிமாடமே. 2

வாள்ஆர்கண் செந்துவர்வாய் மாமலையான் தன்மடந்தை
தோள் ஆகம் பாகமாப் புல்கினான் தொல் கோயில்
வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கு இருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே. 3

கொங்கு சேர் தண்கொன்றை மாலையினான் கூற்றுஅடரப்
பொங்கினான் பொங்கு ஒளி சேர் வெண்நீற்றான் பூங்கோயில்
அங்கம்ஆறோடும் அருமறைகள் ஐவேள்வி
தங்கினார் ஆக்கூரில் தான் தோன்றி மாடமே. 4

வீக்கினான் ஆடுஅரவம் வீந்து அழிந்தார் வெண்தலை என்பு
ஆக்கினான் பலகலன்கள் ஆதரித்துப் பாகம் பெண்
ஆக்கினான் தொல்கோயில் ஆம்பல் அம்பூம் பொய்கை புடை
தாக்கினார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 5

பண் ஒளி சேர் நால்மறையான் பாடலினோடு ஆடலினான்
கண் ஒளி சேர் நெற்றியினான் காதலித்த தொல் கோயில்
விண் ஒளி சேர் மா மதியம் தீண்டியக்கால் வெண் மாடம்
தண் ஒளி சேர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 6

வீங்கினார் மும்மதிலும் வில்வரையால் வெந்து அவிய
வாங்கினார் வானவர்கள் வந்து இறைஞ்சும் தொல்கோயில்
பாங்கினார் நால்முறையோடு ஆறுஅங்கம் பலகலைகள்
தாங்கினார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 7

கல்நெடிய குன்று எடுத்தான் தோள் அடரக் கால்ஊன்றி
இன்அருளால் ஆட்கொண்ட எம்பெருமான் தொல்கோயில்
பொன்அடிக்கே நாள்தோறும் பூவோடு நீர் சுமக்கும்
தன் அடியார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 8

நன்மையால் நாரணனும் நான்முகனும் காண்பு அரிய
தொன்மையான் தோற்றம் கேடு இல்லாதான் தொல்கோயில்
இன்மையால் சென்று இரந்தார்க்கு இல்லை என்னாது ஈந்து உவக்கும்
தன்மையார் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 9

நா மருவு புன்மை நவிற்றச் சமண்தேரர்
பூ மருவு கொன்றையினான் புக்கு அமரும் தொல் கோயில்
சேல் மருவு பைங்கயத்துச் செங்கழுநீர் பைங்குவளை
தாம் மருவும் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே. 10

ஆடல் அமர்ந்தானை ஆக்கூரில் தான்தோன்றி
மாடம் அமர்ந்தானை மாடம் சேர் தண் காழி
நாடற்கு அரியசீர் ஞானசம்பந்தன் சொல்
பாடல் இவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

189. திருக்கடவூர் வீரட்டம்

திருமுறை : 3/8 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

இறைவர் : அமிர்தகடேசுவரர் இறைவியார் : அபிராமியம்மை

சடை உடையானும் நெய் ஆடலானும் சரி கோவண
உடை உடையானும் மை ஆர்ந்த ஒண்கண் உமை கேள்வனும்
கடை உடை நன்நெடு மாடம் ஓங்கும் கடவூர்தனுள்
விடை உடை அண்ணலும் வீரட்டானத்து அரன் அல்லனே. 1

எரிதரு வார்சடையானும் வெள்ளைஎருது ஏறியும்
புரிதரு மா மலர்க் கொன்றைமாலை புனைந்து ஏத்தவே
கரிதரு காலனைச் சாடினானும் கடவூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டானத்து அரன் அல்லனே. 2

நாதனும் நள்இருள் ஆடினானும் நளிர் போதின்கண்
பாதனும் பாய்புலித்தோலினானும் பசு ஏறியும்
காதலர் தண் கடவூரினானும் கலந்து ஏத்தவே
வேதம்அது ஓதியும் வீரட்டானத்து அரன் அல்லனே. 3

மழு அமர் செல்வனும் மாசு இலாத பலபூதம் முன்
முழவு ஒலி யாழ் குழல் மொந்தை கொட்ட முதுகாட்டுஇடைக்
கழல் வளர் கால் குஞ்சித்து ஆடினானும் கடவூர்தனுள்
விழவு ஒலி மல்கிய வீரட்டானத்து அரன் அல்லனே. 4

சுடர் மணிச் சுண்ணவெண் நீற்றினானும் சுழல் வாயதோர்
படம் மணி நாகம் அரைக்கு அசைத்த பரமேட்டியும்
கடம் அணி மா உரித் தோலினானும் கடவூர்தனுள்
விடம் அணி கண்டனும் வீரட்டானத்து அரன் அல்லனே. 5

பண் பொலி நால்மறை பாடிஆடிப் பலஊர்கள் போய்
உண் பலி கொண்டு உழல்வானும் வானின் ஒளி மல்கிய
கண் பொலி நெற்றி வெண்திங்களானும் கடவூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டானத்து அரன் அல்லனே. 6

செவ்வழலாய் நிலன்ஆகி நின்ற சிவ மூர்த்தியும்
முவ்வழல் நால்மறை ஐந்தும் ஆய முனிகேள்வனும்
கவ்வழல் வாய்க் கதநாகம் ஆர்த்தான் கடவூர்தனுள்
வெவ்வழல் ஏந்து கை வீரட்டானத்து அரன் அல்லனே. 7

அடிஇரண்டு ஓர்உடம்பு ஐநான்கு இருபது தோள் தச
முடி உடை வேந்தனை மூர்க்கு அழித்த முதல் மூர்த்தியும்
கடிகமழும் பொழில் சூழும் அம் தண் கடவூர்தனுள்
வெடிதலைஏந்தியும் வீரட்டானத்து அரன் அல்லனே. 8

வரை குடையா மழை தாங்கினானும் வளர் போதின்கண்
புரை கடிந்து ஓங்கிய நான்முகத்தான் புரிந்து ஏத்தவே
கரைகடல் சூழ்வையம் காக்கின்றானும் கடவூர்தனுள்
விரை கமழ் பூம்பொழில் வீரட்டானத்து அரன் அல்லனே. 9

தேரரும் மாசுகொள் மேனியாரும் தெளியாதது ஓர்
ஆர் அருஞ்சொல் பொருள் ஆகி நின்ற எமது ஆதியான்
கார் இளங் கொன்றை வெண்திங்களானும் கடவூர்தனுள்
வீரமும் சேர் கழல் வீரட்டானத்து அரன் அல்லனே. 10

வெந்தவெண்நீறு அணி வீரட்டானத்து உறை வேந்தனை
அந்தணர்தம் கடவூர் உளானை அணி காழியான்
சந்தம்எல்லாம் அடிச் சாத்தவல்ல மறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடி ஆடக் கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

190. திருக்கடவூர்மயானம்

திருமுறை : 2/80 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : பிரமபுரீசர் இறைவியார் : அமலக் குயமின்னம்மை

வரிய மறையார் பிறையார் மலை ஓர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார் எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார் அவர் எம்பெருமான் அடிகளே. 1

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலன் ஒன்று ஏந்திக்
கங்கை சடையில் கரந்தார் கடவூர் மயானம் அமர்ந்தார்
செங்கண் வெள்ஏறு ஏறிச் செல்வம் செய்யா வருவார்
அம் கை ஏறிய மறியார் அவர் எம்பெருமான் அடிகளே. 2

ஈடு அல் இடபம் இசைய ஏறி மழு ஒன்று ஏந்திக்
காடு அது இடமா உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பாடல் இசை கொள் கருவி படுதம்பலவும் பயில்வார்
ஆடல் அரவம் உடையார் அவர் எம்பெருமான் அடிகளே.3

இறை நின்று இலங்கு வளையாள் இளையாள் ஒருபால் உடையார்
மறை நின்று இலங்கு மொழியார் மலையார் மனத்தின் மிசையார்
கறை நின்று இலங்கு பொழில்சூழ் கடவூர்மயானம் அமர்ந்தார்
பிறை நின்று இலங்கு சடையார் அவர் எம்பெருமான் அடிகளே. 4

வெள்ளை எருத்தின் மிசையார் விரி தோடு ஒரு காது இலங்கத்
துள்ளும் இளமான்மறியார் சுடர் பொன்சடைகள் துளங்கக்
கள்ளம் நகுவெண்தலையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பிள்ளைமதியம் உடையார் அவர் எம்பெருமான் அடிகளே. 5

பொன்தாது திருமணம் கொள் புனை பூங்கொன்றை புனைந்தார்
ஒன்றா வெள்ஏறு உயர்த்தது உடையார் அதுவே ஊர்வார்
கன்று ஆஇனம்சூழ் புறவின் கடவூர்மயானம் அமர்ந்தார்
பின் தாழ்சடையார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே. 6

பாசம்ஆன களைவார் பரிவார்க்கு அமுதம் அனையார்
ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசைமலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே. 7

செற்ற அரக்கன் அலறத் திகழ் சேவடி மெல் விரலால்
கல்குன்று அடர்த்த பெருமான் கடவூர் மயானம் அமர்ந்தார்
மற்று ஒன்று இணையில் வலிய மாசு இல்வெள்ளி மலைபோல்
பெற்று ஒன்று ஏறி வருவார் அவர் எம்பெருமான் அடிகளே. 8

வரு மா கரியின் உரியார் வளர்புன்சடையார் விடையார்
கருமான்உரி தோல் உடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்
திருமாலொடு நான்முகனும் தேர்ந்தும் காண முன் ஒண்ணாப்
பெருமான் எனவும் வருவார்அவர் எம்பெருமான் அடிகளே. 9

தூய விடைமேல் வருவார் துன்னார் உடைய மதில்கள்
காய வேவச் செற்றார் கடவூர்மயானம் அமர்ந்தார்
தீய கருமம் சொல்லும் சிறு புன் தேரர் அமணர்
பேய் பேய் என்ன வருவார் அவர் எம்பெருமான் அடிகளே. 10

மரவம்பொழில் சூழ் கடவூர் மன்னு மயானம் அமர்ந்த
அரவம் அசைத்த பெருமான் அகலம் அறியல் ஆகப்
பரவும் முறையே பயிலும் பந்தன் செஞ்சொல் மாலை
இரவும் பகலும் பரவி நினைவார் வினைகள் இலரே. 11

திருச்சிற்றம்பலம்

191. திருவேட்டக்குடி

திருமுறை : 3/66 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி
இறைவர் : திருமேனியழகர் இறைவியார் : சாந்தநாயகி

வண்டு இரைக்கும் மலர்க்கொன்றை விரி சடைமேல் வரிஅரவம்
கண்டு இரைக்கும் பிறைச் சென்னிக் காபாலி கனைகழல்கள்
தொண்டு இரைத்துத் தொழுது இறைஞ்சத் துளங்கொளிநீர்ச்சுடர்ப்பவளம்
தெண்திரைக்கள் கொணர்ந்து எறியும் திருவேட்டக் குடியாரே. 1

பாய் திமிலர் வலையோடு மீன் வாரிப் பயின்று எங்கும்
காசினியில் கொணர்ந்து அட்டும் கைதல் சூழ் கழிக் கானல்
போய் இரவில் பேயோடும் புறங்காட்டில் புரிந்து அழகார்
தீ எரி கை மரிழ்ந்தாரும் திரு வேட்டக் குடியிாரே. 2

தோத்திரமா மணல்இலிங்கம் தொடங்கி ஆன் நிரையின்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்துஅருளி
ஆத்தம் என மறை நால்வர்க்கு அறம்புரி நூல் அன்று உரைத்த
தீர்த்தம் மல்கு சடையாரும் திருவேட்டக் குடியாரே. 3

கலவம் சேர் கழிக் கானல் கதிர்முத்தம் கலந்து எங்கும்
அலவன் சேர் அணை வாரிக் கொணர்ந்து எறியும் அகன்றுறைவாய்
நிலவுஅம்சேர் நுண்இடைய நேரிழையாள் அவளோடும்
திலகம்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே. 4

பங்க ஆர் கடல் அலறப் பருவரையோடு அரவுஉழலச்
செங்கண் மால் கடைய எழு நஞ்சு அருந்தும் சிவமூர்த்தி
அங்கம் நால்மறை நால்வர்க்கு அறம்பொருளின் பயன்அளித்த
திங்கள் சேர் சடையாரும் திருவேட்டக் குடியாரே. 5

நாவாய பிறைச்சென்னி நலம் திகழும் இலங்கு இப்பி
கோவாத நித்திலங்கள் கொணர்ந்து எறியும் குளிர்கானல்
ஏ ஆரும் வெஞ்சிலையால் எயில்மூன்றும் எரிசெய்த
தேவாதி தேவனார் திருவேட்டக் குடியாரே. 6

பால் நிலவும் பங்கயத்துப் பைங்கானல் வெண்குருகு
கான் நிலவு மலர்ப்பொய்கைக் கைதல் சூழ் கழிக் கானல்
மானின் விழி மலை மகளோடு ஒருபாகம் பிரிவுஅரியார்
தேன்நிலவு மலர்ச்சோலைத் திருவேட்டக் குடியாரே. 7

துறை உலவு கடலோதம் சுரிசங்கம் இடறிப்போய்
நறை உலவும் பொழில்புன்னை நல்நீழல் கீழ்அமரும்
இறை பயிலும் இராவணன்தன் தலைபத்தும் இருபதுதோள்
திறல் அழிய அடர்த்தாரும் திருவேட்டக் குடியாரே. 8

அருமறை நான்முகத்தானும் அகலிடம்நீர் ஏற்றானும்
இருவருமாய் அளப்புஅரிய எரிஉருவாய் நீண்டபிரான்
வருபுனலின் மணிஉந்தி மறிதிரையார் சுடர்ப்பவளத்
திருஉருவில் வெண்நீற்றார் திருவேட்டக் குடியாரே. 9

இகழ்ந்து உரைக்கும் சமணர்களும் இடும்போர்வைச் சாக்கியரும்
புகழ்ந்து உரையாப் பாவிகள்சொல் கொள்ளேன்மின் பொருள்என்ன
நிகழ்ந்து இலங்கு வெண்மணலில் நிறைத்துண்டப் பிறைக்கற்றை
திகழ்ந்து இலங்கு செஞ்சடையார் திருவேட்டக் குடியாரே. 10

தெண்திரை சேர் வயல்உடுத்த திருவேட்டக் குடியாரைத்
தண்டு அலை சூழ் கலிக்காழித் தமிழ்ஞானசம்பந்தன்
ஒண்தமிழ்நூல் இவைபத்தும் உணர்ந்துஏத்த வல்லார்போய்
உண்டுஉடுப்பில் வானவரோடு உயர்வானத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

192. திருச்தெளிச்சேரி

திருமுறை : 2/3 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : பார்வதீசுவரர் இறைவியார் : சத்தியம்மை

பூ அலர்ந்தன கொண்டு முப்போதும் உம் பொன்கழல்
தேவர் வந்து வணங்கும் மிகு தெளிச்சேரியீர்
மே வரும் தொழிலாளொடு கேழல்பின் வேடனாம்
பாவகம் கொடு நின்றதுபோலும் நும் பான்மையே. 1

விளைக்கும் பத்திக்கு விண்ணவர் மண்ணவர் ஏத்தவே
திளைக்கும் தீர்த்தம் அறாத திகழ் தெளிச்சேரியீர்
வளைக்கும் திண் சிலைமேல் ஐந்துபாணமும் தான்எய்து
களிக்கும் காமனை எங்ஙனம் நீர் கண்ணில் காய்ந்ததே. 2

வம்பு அடுத்த மலர்ப்பொழில் சூழ மதி தவழ்
செம்பு அடுத்த செழும் புரிசைத் தெளிச்சேரியீர்
கொம்பு அடுத்தது ஓர் கோல விடைமிசைக் கூர்மையோடு
அம்பு அடுத்த கண்ணாளொடு மேவல் அழகிதே. 3

கார் உலாம் கடல் இப்பிகள் முத்தம் கரைப் பெயும்
தேர் உலாம் நெடுவீதி அது ஆர் தெளிச்சேரியீர்
ஏர் உலாம் பலிக்கு ஏகிட வைப்புஇடம் இன்றியே
வார் உலாம் முலையாளை ஓர்பாகத்து வைத்ததே. 4

பக்கம் நும்தமைப் பார்ப்பதி ஏத்தி முன் பாவிக்கும்
செக்கர் மா மதி சேர் மதில் சூழ் தெளிச்சேரியீர்
மைக் கொள் கண்ணியர் கைவளை மால் செய்து வௌவவே
நக்கராய் உலகு எங்கும் பலிக்கு நடப்பதே. 5

தவள வெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழ நல்
திவள மா மணி மாடம் திகழ் தெளிச்சேரியீர்
குவளை போல் கண்ணி துண்ணென வந்து குறுகிய
கவள மால்கரி எங்ஙனம் நீர் கையின் காய்ந்ததே. 6

கோடு அடுத்த பொழிலின்மிசைக் குயில் கூவிடும்
சேடு அடுத்த தொழிலின் மிகு தெளிச்சேரியீர்
மாடு அடுத்த மலர்க்கண்ணினாள் கங்கைநங்கையைத்
தோடு அடுத்த மலர்ச் சடை என்கொல் நீர் சூடிற்றே.7

கொத்து இரைத்த மலர்க் குழலாள் குயில்கோலம் சேர்
சித்திரக் கொடி மாளிகை சூழ் தெளிச்சேரியீர்
வித்தகப் படை வல்ல அரக்கன் விறல் தலை
பத்து இரட்டிக் கரம்நெரித்திட்டதும் பாதமே. 8

கால் எடுத்த திரைக்கை கரைக்கு எறி கானல் சூழ்
சேல் அடுத்த வயல் பழனத் தெளிச்சேரியீர்
மால் அடித்தலம் மா மலரான் முடி தேடியே
ஓலம் இட்டிட எங்ஙனம் ஓர் உருக் கொண்டதே. 9

மந்திரம் தரு மா மறையோர்கள் தவத்தவர்
செந்து இலங்கு மொழியவர் சேர் தெளிச்சேரியீர்
வெந்தல்ஆகிய சாக்கியரோடு சமணர்கள்
தம் திறத்தன நீக்குவித்தீர் ஓர் சதிரரே. 10

திக்கு உலாம் பொழில் சூழ் தெளிச்சேரி எம் செல்வனை
மிக்க காழியுள் ஞானசம்பந்தன் விளம்பிய
தக்க பாடல்கள்பத்தும் வல்லார்கள் தடமுடித்
தொக்க வானவர் சூழ இருப்பவர் சொல்லிலே. 11

திருச்சிற்றம்பலம்

193. திருத்தருமபுரம்

திருமுறை : 1/136 பண் : யாழ்மூரி இராகம் : அடாணா

இறைவர் : யாழ்மூரிநாதர் இறைவியார் : மதுரமின்னம்மை

மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னது ஓர்
நடை உடை மலைமகள் துணை என மகிழ்வார்
பூதஇனப்படை நின்று இசை பாடவும் ஆடுவர்
அவர் படர்சடை நெடுமுடியது ஓர் புனலர்
வேதமொடு ஏழ்இசை பாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரை நுரை கரை பொருது விம்மி நின்று அயலே
தாது அவிழ் புன்னை தயங்கு மலர்ச் சிறைவண்டு அறை
எழில் பொழில் குயில் பயில் தருமபுரம்பதியே. 1

பொங்கும் நடைப் புகல் இல் விடையாம் அவர் ஊர்தி வெண்
பொடி அணி தடம் கொள் மார்பு பூணநூல் புரள
மங்குல்இடைத் தவழும் மதி சூடுவர் ஆடுவர்
வளம் கிளர்புனல் அரவம் வைகிய சடையர்
சங்கு கடல் திரையால் உதையுண்டு சரிந்து இரிந்து
ஒசிந்து அசைந்து இசைந்து சேரும் வெண்மணல் குவைமேல்
தங்கு கதிர் மணிநித்திலம் எல்இருள் ஒல்க நின்று
இலங்கு ஒளி நலங்கு எழில் தருமபுரம்பதியே. 2

விண் உறு மால்வரை போல் விடை ஏறுவர் ஆறு
சூடுவர் விரி சுரி ஒளி கொள் தோடு நின்று இலங்கக்
கண்உற நின்று ஒளிரும் கதிர் வெண்மதிக்கண்ணியர்
கழிந்தவர் இழிந்திடும் உடைதலை கலனாப்
பெண் உற நின்றவர் தம் உருவம் அயன் மால் தொழஅவ்
அரிவையைப் பிணைந்து இணைந்து அணைந்ததும் பிரியார்
தண் இதழ் முல்லையொடு எண்இதழ் மௌவல் மருங்கு அலர்
கருங்கழி நெருங்கு நல் தருமபுரம்பதியே. 3

வார் உறு மென்முலை நன்நுதல் ஏழையொடு ஆடுவர்
வளம் கிளர் விளங்கு திங்கள் வைகிய சடையர்
கார் உற நின்று அலரும் மலர்க்கொன்றை அம்கண்ணியர்
கடுவ்விடை கொடி வெடிகொள் காடு உறை பதியர்
பார் உற விண்ணுலகம் பரவப்படுவோர் அவர்
படுதலைப் பலி கொளல் பரிபவம் நினையார்
தார் உறு நல்அரவம் மலர் துன்னிய தாது உதிர்
தழை பொழில் மழைந் நுழை தருமபுரம்பதியே. 4

நேரும் அவர்க்கு உணரப் புகில் இல்லை நெடுஞ்சடைக்
கடும்புனல் படர்ந்து இடம்படுவது ஓர் நிலையர்
பேரும் அவர்க்கு எனை ஆயிரம் முன்னைப் பிறப்பு இறப்பு
இலாதவர் உடல் அடர்த்த பெற்றி யார் அறிவார்
ஆரம் அவர்க்கு அழல் வாயது ஓர் நாகம் அழகு உற
எழு கொழும் மலர் கொள் பொன் இதழிநல் அலங்கல்
தாரம் அவர்க்கு இமவான்மகள் ஊர்வது போர் விடை
கடி படு செடி பொழில் தருமபுரம்பதியே. 5

கூழை அம் கோதை குலாயவள் தம் பிணை புல்க மல்கு
மென்முலைப் பொறி கொள்பொன் கொடிஇடைத் துவர்வாய்
மாழைஒண்கண் மடவாளை ஓர் பாகம் மகிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடி கொடும் மழுவ்வாள்
யாழையும் எள்கிட ஏழிசை வண்டு முரன்று இனம்
துவன்றி மென்சிறஃகறை உறந்நறவ்விரியும் நல்
தாழையும் ஞாழலும் நீடிய கானலின் அள்ளல்
இசை புள்ளினம் துயில் பயில் தருமபுரம்பதியே. 6

தே மரு வார்குழல் அன்னநடைப் பெடைமான் விழித்
திருந்திழை பொருந்து மேனி செங்கதிர் விரியத்
தூ மரு செஞ்சடையில் துதை வெண்மதி துன்று கொன்றை
தொல்புனல் சிரம் கரந்து உரித்த தோல்உடையர்
கா மரு தண்கழி நீடிய கானல் கண்டகம்
கடல் அடை கழி இழிய முண்டகத்து அயலே
தாமரை சேர் குவளைப் படுகில் கழுநீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபுரம்பதியே. 7

தூ வணநீறு அகலம் பொலிய விரை புல்க மல்கு
மென்மலர் வரை புரை திரள்புயம் அணிவர்
கோவணமும் உழையின் அதளும் உடைஆடையர்
கொலை மலி படை ஓர் சூலம் ஏந்திய குழகர்
பா வணமா அலறத் தலைபத்து உடை அவ் அரக்கன்
அவ்வலியொர் கவ்வை செய்து அருள்புரி தலைவர்
தாவண ஏறு உடை எம் அடிகட்கு இடம் வன் தடம்
கடல் இடும் தடங்கரைத் தருமபுரம்பதியே. 8

வார் மலி மென்முலை மாது ஒருபாகம்அது ஆகுவர்
வளம் கிளர் மதி அரவம் வைகிய சடையர்
கூர் மலி சூலமும் வெண்மழுவும் அவர் வெல்படை
குனிசிலை தனிம் மலைஅது ஏந்திய குழகர்
ஆர் மலி ஆழி கொள் செல்வனும் அல்லிகொள் தாமரைம்
மிசைஅவன் அடி முடி அளவு தாம் அறியார்
தார் மலி கொன்றை அலங்கல் உகந்தவர் தங்கு இடம்
தடங்கடல் இடும் திரைத் தருமபுரம்பதியே. 9

புத்தர்கள் தத்துவர் மொய்த்து உறி புல்கிய கையர் பொய்ம்
மொழிந்த அழிவில் பெற்றி உற்ற நற்றவர் புலவோர்
பத்தர்கள் அத் தவம்மெய்ப் பயனாக உகந்தவர்
நிகழ்ந்தவர் சிவந்தவர் சுடலைப்பொடி அணிவர்
முத்தன வெண்நகை ஒண் மலைமாது உமை பொன்அணி
புணல் முலை இணை துணை அணைவதும் பிரியார்
தத்து அருவித்திரள் உந்திய மால்கடல் ஓதம் வந்து
அடார்த்திடும் தடம் பொழில் தருமபுரம்பதியே. 10

பொன் நெடு நல் மணி மாளிகை சூழ் விழவம் மலீ
பொரூஉ புனல் திரூஉ அமர் புகல்லி என்று உலகில்
தன்னொடு நேர் பிற இல் பதி ஞானசம்பந்தனஃது
செந்தமிழ்த் தடம் கடல் தருமபுரம்பதியைப்
பின்நெடுவார்சடையில் பிறையும் அரவம்உடை
அவன் பிணைதுணை கழல்கள் பேணுதல் உரியார்
இன்நெடுநன்உலகு எய்துவர் எய்திய போகமும்
உறுவர்கள் இடர் பிணி துயர் அணைவு இலரே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருவேட்டக் குடியை வணங்கிய ஆளுடைய பிள்ளையார் திருத்தருமபுரத்தை அடைந்தபோது அது திருநீலகண்டப் பெரும் பாணரது திருத்தாயர் பிறப்பிடமாதலின் அவர் சுற்றத்தார் யாவரும் வந்தெதிர்கொண்டு வணங்கினார்கள். பாணர் பெருமான் சுவாமிகள் பாடியருளுந் திருப்பதிகங்களைத் தாம் யாழிலிட்டு வாசிக்கும் பேற்றினை அவர்க்குச் சொல்லினார். அதனைக் கேட்ட அவர்கள் 'நீர் பிள்ளையார் பாடுந் திருப்பதிக இசைகளை யாழிலே இட்டு அளவு பெற வாசித்தலினால் அவற்றின் சிறப்பு உலகத்தில் விளங்குவதாயிற்று' என்று பாராட்டிப் பேசினர். உடனே பாணர் பெருமான் மனநடுங்கிச் சுவாமிகள் திருவடிகளை வணங்கி, 'இறைவரே, திருப்பதிக இசை அளவுபடாத அரிய தன்மையை இவர்களேயன்றி நிலவுலகிலுள்ள யாவரும் அறிந்து உய்யும்பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடி அருளுவீரெனின், அடியேன் அதனை யாழிலேயிட்டு அதனில் அஃது அடங்கப் பெறாமையைக் காட்டப் பெறுவேன்' என்றார். பிள்ளையார் அப்போது பதிகவிசை மாந்தர்களது கண்டத்தினும், யாழினும், இசை நூலிற் கூறிய இசையினது எல்லா முயற்சியினும் அடங்காமையைக் காட்டும் பொருட்டு 'மாதர் மடப்பிடி' என்னுமித் திருப்பதிகம் பாடியருளினார். திருநீலகண்டப் பாணனார் அதனை யாழிலே யிட்டு அடங்காமையைக் கண்டு பயந்து பிள்ளையாரை வணங்கி, சுவாமிகளுடைய பாடல்களை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப் பண்ணியது இவ்யாழன்றோ என்று அதனை ஒச்சி உடைக்கப்புக்கனர். பிள்ளையார் அதனைத் தடுத்து யாழைத் தமது கையிலே வாங்கி, 'ஐயரே, இதனை உடைப்பதேன்? இறைவனும் இறைவியும் அருளிய அருள் திறம் எல்லாம் இந்தக் கருவியிலே அமையுமோ? இயன்ற அளவு வாசித்தலே சால்பு' என்று யாழை அவர் கையிலே கொடுத்தருள அவரும் அதனை வாங்கிச் சிரமேற் கொண்டார் இதனால் இப்பதிகம் 'யாழ்மூரி' என்று வழங்கியது.

திருச்சிற்றம்பலம்

194. திருநள்ளாறும் திருஆலவாயும்

திருமுறை : 1/7 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : தர்ப்பாரண்யேசுரர் இறைவியார் : போகமார்த்த பூண்முலையாள்

பாடக மெல்அடிப் பாவையோடும்
படு பிணக்காடு இடம் பற்றி நின்று
நாடகம்ஆடும் நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
சூடகம் முன்கை மடந்தைமார்கள்
துணைவரொடும் தொழுது ஏத்தி வாழ்த்த
ஆடகமாடம் நெருங்கு கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 1

திங்கள் அம்போதும் செழும்புனலும்
செஞ்சடைமாட்டு அயல் வைத்து உகந்து
நம் கண் மகிழும் நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
பொங்கு இளமென் முலையார்களோடும்
புனமயில் ஆட நிலா முளைக்கும்
அம் கழகச் சுதை மாடக் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 2

தண்நறுமத்தமும் கூவிளமும்
வெண்தலைமாலையும் தாங்கி யார்க்கும்
நண்ணல் அரிய நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
புண்ணியவாணரும் மாதவரும்
புகுந்து உடன்ஏத்தப் புனையிழையார்
அண்ணலின் பாடல் எடுக்கும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 3

பூவினில் வாசம் புனலில் பொற்புப்
புது விரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினில் பாடல் நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர் விச்சாதரர்
கணத்தோடும் சிறந்து பொங்கி
ஆவினில் ஐந்து உகந்து ஆட்டும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 4

செம்பொன் செய் மாலையும் வாசிகையும்
திருந்து புகையும் அவியும் பாட்டும்
நம்பும் பெருமை நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
உம்பரும் நாகர்உலகம்தானும்
ஒலிகடல் சூழ்ந்த உலகத்தோரும்
அம்புதம்நால்களால் நீடும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 5

பாகமும் தேவியை வைத்துக் கொண்டு
பை விரி துத்திப் பரிய பேழ்வாய்
நாகமும் பூண்ட நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
போகமும் நின்னை மனத்துவைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வு பூண்ட
ஆகமும் உடையவர் சேரும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 6

கோவண ஆடையும் நீற்றுப்பூச்சும்
கொடுமழு ஏந்தலும் செஞ்சடையும்
நாவணப் பாட்டு நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
பூவண மேனி இளைய மாதர்
பொன்னும் மணியும் கொழித்து எடுத்து
ஆவணவீதியில் ஆடும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 7

இலங்கை இராவணன் வெற்பு எடுக்க
எழில் விரல் ஊன்றி இசை விரும்பி
நலம் கொளச் சேர்ந்த நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியை நிக்கிப்
புந்தியிலும் நினைச் சிந்தை செய்யும்
அலங்கல் நல்லார்கள் அமரும்கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 8

பணி உடை மாலும் மலரினோனும்
பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல் அரிய நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
மணிஒலி சங்குஒலியோடு மற்றை
மா முரசின் ஒலி என்றும் ஓவாது
அணி கிளர் வேந்தர் புகுதும் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 9

தடுக்கு உடைக் கையரும் சாக்கியரும்
சாதியில் நீங்கிய அத் தவத்தர்
நடுக்கு உற நின்ற நள்ளாறு உடைய
நம்பெருமான் இது என்கொல் சொல்லாய்
எடுக்கும் விழவும் நன்நாள் விழவும்
இரும் பலி இன்பினோடு எத்திசையும்
அடுக்கும் பெருமை சேர் மாடக் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்தவாறே. 10

அன்பு உடையானை அரனை கூடல்
ஆலவாய் மேவியது என்கொல் என்று
நன்பொனை நாதனை நள்ளாற்றானை
நயம் பெறப் போற்றி நலம் குலாவும்
பொன் புடை சூழ்தரு மாடக் காழிப்
பூசுரன் ஞானசம்பந்தன் சொன்ன
இன்பு உடைப் பாடல்கள்பத்தும் வல்லார்
இமையவர் ஏத்த இருப்பர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருக்கொள்ளம்பூதூரை அடைந்து வழிபட்டருள் பெற்ற தோணி புரதோன்றலார் மதுரையிற் பாண்டியனது அவைக்கள திற் புல்லிய சமணரை வாதில் வெல்லுமாறு எரியில் வேவாப் பச்சைத் திருப்பதிகத்தை அருளிய திருநள்ளாற்றை அடைந்து கோயிலிற் சென்று இறைவனை வணங்கி, 'பாடக மெல்லடிப் பாவை' என்னும் இப்பதிகத்தை எடுத்து அதில் 'நள்ளாறுடைய நம்பெருமானே', தென்னவர் கோன் முன் அமணர் செய்த வாதி தீயிலிடும் ஏடு பச்சையாக்கி என்னுள்ளத் துணையாகித் திருஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்னை' என்று வைத்து வினாவுரையாகப் பாடியருளினார்.

195. திருநள்ளாறு

திருமுறை : 1/49 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : தர்ப்பாரணியேச்சுரர் இறைவியார் : போகமார்த்த பூண்முலையாள்

போகம்ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்அகலம்
பாகம்ஆர்த்த பைங்கண்வெள்ஏற்று அண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோல்உடையன் கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடு உடைய காது உடையன் தோல்உடையன் தொலையாப்
பீடு உடைய போர் விடையன் பெண்ணும் ஓர்பால் உடையன்
ஏடு உடைய மேல்உலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடு உடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன் முறையால் ஆற்ற வெண்நீறு ஆடி அணியிழை ஓர்
பால் முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்து ஏத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நால்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்க வல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்து அயலே
மல்க வல்ல கொன்றைமாலை மதியோடு உடன்சூடிப்
பல்க வல்ல தொண்டர் தம் பொன்பாதநிழல் சேர
நல்க வல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறு தாங்கி ஊர்தி பேணி ஏர் கொள் இளமதியம்
ஆறு தாங்கும் சென்னிமேல் ஓர் ஆடுஅரவம் சூடி
நீறு தாங்கி நூல் கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்கள் உச்சிமேல் விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்கள் உச்சி எம்இறைவன் என்று அடியே இறைஞ்சத்
தங்கள் உச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி விண் கொள் முழவு அதிர
அஞ்சுஇடத்து ஓர் ஆடல் பாடல் பேணுவது அன்றியும் போய்ச்
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீஅம்பினால்
சுட்டு மாட்டிச் சுண்ணவெண்நீறு ஆடுவது அன்றியும் போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர் பால்மதியம் சூடி
நட்டம்ஆடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணல் ஆகா அண்ணல் நீழல் ஆர் அழல் போல் உருவம்
எண்ணல் ஆகா உள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணல் ஆகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசு மெய்யர் மண்டைத் தேரர் குண்டர் குணம்இலிகள்
பேசும் பேச்சை மெய் என்று எண்ணி அந் நெறி செல்லன்மின்
மூசுவண்டு ஆர் கொன்றை சூடி மும்மதிலும் உடனே
நாசம் செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல் பத்தும்இவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

தோணிபுரத் தோன்றலாகிய பிள்ளையார் திருத்தருமபுரத்தை வழிபட்டுத் திருநள்ளாற்றை அடைந்து இறைவனை வணங்கி உருகிய அன்புறு காதலினால் உள்ளுருகிப் பொருவில் திருப்பதிகம் "போகமார்த்த பூண்முலையாள்" என்றெடுத்துப் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தி வெளிவந்து திருநீலகண்டப் பெரும்பாணரை அதனை யாழிலிட்டு வாசிக்குமாறு செய்தும், தாம் தாளங்கொடு பாடியும், எல்லோரையும் மகிழ்வித் தருளினார். இத்திருப்பதிகமே மதுரையிற் பாண்டியனது அவைக்களத்தே சமணரோடு வாதஞ் செய்யும் போழ்து அனல் வாதத்தின் பொருட்டுப் பிள்ளையார் திருமுறையிற் கயிறு சாத்தியபோது வர நேர்ந்தது. அவ் ஏட்டைப் பிள்ளையார் கையிலெடுத்துச் சிவபெருமானே பரம்பொருளென்பது உண்மையாயின் இத்திரு ஏடு நெருப்பில் வேகாதிருக்கக்கடவ தெனத் திருநள்ளாற்றை நோக்கித் 'தளரின வளரொளி' என்னுந் திருப்பதிகம் பாடித் தீயிலிட்டுக் குறித்த நேரத்திற்குப் பின் பச்சையாக எடுத்து அவையின ரெல்லோருங் காணக் காட்டித் திருமுறையில் கோத்தருளினார். இதனால் இது பச்சைத் திருப்பதிகமென வழங்கப் பெறும்.

திருச்சிற்றம்பலம்

196. திருநள்ளாறு

திருமுறை : 2/33 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

ஏடு மலி கொன்றை அரவு இந்து இள வன்னி
மாடு அவல செஞ்சடை எம் மைந்தன் இடம் என்பர்
கோடு மலி ஞாழல் குரவு ஏறு சுரபுன்னை
நாடு மலி வாசம்அது வீசிய நள்ளாறே. 1

விண் இயல் பிறைப்பிளவு அறைப்புனல் முடித்த
புண்ணியன் இருக்கும் இடம் என்பர் புவிதன்மேல்
பண்ணிய நடத்தொடு இசை பாடும் அடியார்கள்
நண்ணிய மனத்தின் வழிபாடுசெய் நள்ளாறே. 2

விளங்கு இழை மடந்தைமலைமங்கை ஒருபாகத்து
உளம் கொள இருத்திய ஒருத்தன் இடம் என்பர்
வளம் கெழுவு தீபமொடு தூபம் மலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே. 3

கொக்கு அரவர் கூன்மதியர் கோபர் திருமேனிச்
செக்கர்அவர் சேரும் இடம் என்பர் தடம் மூழ்கிப்
புக்கு அரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி
நக்கர்அவர் நாமம் நினைவு எய்திய நள்ளாறே. 4

நெஞ்சம்இது கண்டுகொள் உனக்கு என நினைந்தார்
வஞ்சம் அது அறுத்துஅருளும் மற்றவனை வானோர்
அஞ்ச முதுகுஆகியவர் கைதொழ எழுந்த
நஞ்சு அமுதுசெய்தவன் இருப்பிடம் நள்ளாறே. 5

பாலன் அடி பேண அவன் ஆருயிர் குறைக்கும்
காலன் உடல்மாள முன் உதைத்த அரன் ஊராம்
கோல மலர் நீர்க் குடம் எடுத்து மறையாளர்
நாலின்வழி நின்று தொழில் பேணிய நள்ளாறே. 6

நீதியர் நெடுந்தகையர் நீள்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பரர் இருக்கை
வேதியர்கள் வேள்வி ஒழியாது மறை நாளும்
ஓதி அரன் நாமமும் உணர்த்திடும் நள்ளாறே. 7

கடுத்து வல்அரக்கன் முன் நெருக்கி வரைதன்னை
எடுத்தவன் முடித் தலைகள்பத்தும் மிகு தோளும்
அடர்த்தவர் தமக்கு இடம்அது என்பர் அளி பாட
நடத்த கலவைத்திரள்கள் வைகிய நள்ளாறே. 8

உயர்ந்தவன் உருக்கொடு திரிந்து உலகம்எல்லாம்
பயந்தவன் நினைப்பு அரிய பண்பன் இடம் என்பர்
வியந்து அமரர் மெச்ச மலர் மல்கு பொழில் எங்கும்
நயம் தரும் வேதஒலி ஆர் திரு நள்ளாறே. 9

சிந்தை திருகல் சமணர் தேரர் தவம் என்னும்
பந்தனை அறுத்து அருளுகின்ற பரமன் ஊர்
மந்த முழவம் தரு விழா ஒலியும் வேதச்
சந்தம் விரவிப் பொழில் முழங்கிய நள்ளாறே. 10

ஆடல் அரவு ஆர் சடையன் ஆயிழைதன்னோடும்
நாடுமலிவு எய்திட இருந்தவன் நள்ளாற்றை
மாடம் மலி காழி வளர் பந்தனது செஞ்சொல்
பாடல் உடையாரை அடையா பழிகள் நோயே. 11

திருச்சிற்றம்பலம்

197. திருநள்ளாறு

திருமுறை : 3/87 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

தளிர் இள வளர் ஒளி தனது எழில் தரு திகழ் மலைமகள்
குளிர் இள வளர் ஒளி வனமுலைஇணை அவை குலவலின்
நளிர் இள வளர் ஒளி மருவும் நள்ளாறர்தம் நாமமே
மிளிர் இள வளர்எரி இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 1

போது அமர் தரு புரிகுழல் எழில் மலைமகள் பூண் அணி
சீதம்அது அணிதரு முகிழ்இளவனமுலை செறிதலின்
நாதம்அது எழில்உரு அனைய நள்ளாறர்தம் நாமமே
மீ தமது எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 2

இட்டு உறும் மணி அணி இணர் புணர் வளர் ஒளி எழில் வடம்
கட்டுஉறு கதிர் இளவனமுலை இணையொடு கலவலின்
நட்டுஉறு செறி வயல் மருவு நள்ளாறர்தம் நாமமே
இட்டுஉறும் எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 3

மைச்சு அணி வரி அரிநயனி தொல்மலைமகள் பயன்உறு
கச்சு அணி கதிர் இளவனமுலை அவையொடு கலவலின்
நச்சு அணி மிடறு உடை அடிகள் நள்ளாறர்தம் நாமமே
மெச்சு அணி எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 4

பண் இயல் மலைமகள் கதிர்விடு பரு மணி அணி நிறக்
கண் இயல் கலசம்அது அன முலைஇணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுதும் நள்ளாறர்தம் நாமமே
விண் இயல் எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 5

போது உறு புரிகுழல் மலைமகள் இளவளர் பொன் அணி
சூது உறு தளிர் நிற வனமுலை அவையொடு துதைதலின்
தாது உறு நிறம் உடை அடிகள் நள்ளாறர்தம் நாமமே
மீதுஉறும் எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 6

கார் மலி நெறிபுரிசுரிகுழல் மலைமகள் கவின்உறு
சீர் மலிதரும் மணி அணி முலை திகழ்வொடு செறிதலின்
தார் மலி நகுதலை உடைய நள்ளாறர் தம் நாமமே
ஏர் மலி எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 7

மன்னிய வளர் ஒளி மலைமகள் தளிர்நிறம் மதம் மிகு
பொன் இயல் மணி அணி கலசம்அது அனமுலை புணர்தலின்
தன் இயல் தசமுகன் நெரிய நள்ளாறர்தம் நாமமே
மின்இயல் எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 8

கான் முக மயில்இயல் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான் முகம் இயல் பணைஇணைமுலைதுணையொடு பயிறலின்
நான்முகன் அரி அறிவு அரிய நள்ளாறர்தம் நாமமே
மேல்முக எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 9

அத்திர நயனி தொல்மலைமகள் பயன்உறும் அதிசயச்
சித்திர மணி அணி திகழ் முலை இணையொடு செறிதலின்
புத்தரொடு அமணர் பொய் பெயரும் நள்ளாறர்தம் நாமமே
மெய்த் திரள் எரியினில் இடில் இவை பழுது இலை மெய்ம்மையே. 10

சிற்றிடை அரிவைதன் வனமுலைஇணையொடு செறிதரும்
நல்திறம் உறு கழுமலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவன் எதிர்இடை எரியினில் இட இவை கூறிய
சொல் தெரி ஒருபதும் அறிபவர் துயர் இலர் தூயரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருமறைக்காட்டிலே ஆளுடைய அரசும், ஆளுடைய பிள்ளையாரும் வேதங்கள் பூசித்தடைத்த திருக்கதவினைத் திறந்து அடைத்தும் இறைவனை வணங்கி இருக்கும் போது வாக்கினர் எனிமன்னர் தாம் திருக்கதவினை அரிது வேண்டித் திறந்ததையும் பிள்ளையார் எளிதில் அடைத்ததையும் எண்ணி வருந்தியிருந்தார். அப்போது திருமுறைக்காட்டு ஈசர் ஒரு சைவவேடத்தோடு அவர்முன் தோன்றி 'வாய்மூரி லிருப்போம் வா' என்றருளிப் போயினார். வாகீசரும் அவரைத் தரிசித்துக் கொண்டே பின்னே எழுந்தருளிச் சென்றும் அவரைச் சமீபித்திலராகியே சென்று கொண்டிருந்தார். அப்பமூர்த்திகள் திருவாய்மூருக் எழுந்தருளுதலைக் கேள்வியுற்றுப் பிள்ளையார் இப்போதங்கே போதற்கென்ன அடைவு என ஐயுற்றுத் தாமும் பின்னே எழுந்தருளி வந்து திருவாய்மூரைச் சமீபித்த போது இறைவன் இறைவியோடு தம் ஆடலை அவருக்குக் காட்டியருளினார். அதனை இரண்டு நாயன்மார்களும் கண்டு வணங்கித் திருக்கோயிலை அடைந்து வழிபட்டார்கள். இறைவன் தனது திருவோலக்கத்தைக் காட்டி அருளிய போது பிள்ளையார் 'தளரிளவளர்' என இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

198. திருக்கோட்டாறு

திருமுறை : 2/52 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : ஐராவதேசுவரர் இறைவியார் : வண்டமர்பூங்குழலி

கருந்தடங்கணின் மாதரார் இசை
செய்யக் கார் அதிர்கின்ற பூம்பொழில்
குருந்தம் மாதவியின் விரை மல்கு கோட்டாற்றில்
இருந்த எம்பெருமானை உள்கி
இணைஅடி தொழுது ஏத்தும் மாந்தர்கள்
வருந்தும்ஆறு அறியார் நெறி சேர்வர் வான்ஊடே. 1

நின்று மேய்ந்து நினைந்து மா கரி
நீரொடும் மலர் வேண்டி வான்மழை
குன்றில் நேர்ந்து குத்திப் பணிசெய்யும் கோட்டாற்றுள்
என்றும் மன்னிய எம்பிரான் கழல்
ஏத்தி வான்அரசு ஆள வல்லவர்
பொன்றும்ஆறு அறியார் புகழ் ஆர்ந்த புண்ணியரே. 2

விரவி நாளும் விழாஇடைப் பொலி
தொண்டர் வந்து வியந்து பண்செயக்
குரவம் ஆரும் நீழல் பொழில் மல்கு் கோட்டாற்றில்
அரவம் நீள்சடையானை உள்கி நின்று
ஆதரித்து முன் அன்பு செய்து அடி
பரவும்ஆறு வல்லார் பழி பற்றுஅறுப்பாரே. 3

அம்பின் நேர் விழி மங்கைமார் பலர்
ஆடகம் பெறு மாடமாளிகைக்
கொம்பி நேர் துகிலின் கொடிஆடு கோட்டாற்றில்
நம்பனே நடனே நலம் திகழ்
நாதனே என்று காதல் செய்தவர்
தம் பின் நேர்ந்து அறியார் தடுமாற்ற வல்வினையே. 4

பழைய தம் அடியார் துதிசெயப்
பார்உளோர்களும் விண்உளோர் தொழக்
குழலும் மொந்தை விழா ஒலி செய்யும் கோட்டாற்றில்
கழலும் வண் சிலம்பும் ஒலி செயக்
கான்இடைக் கணம் ஏத்த ஆடிய
அழகன் என்று எழுவார் அணி ஆவர் வானவர்க்கே. 5

பஞ்சின் மெல்அடி மாதர் ஆடவர்
பத்தர் சித்தர்கள் பண்பு வைகலும்
கொஞ்சி இன்மொழியால் தொழில் மல்கு கோட்டாற்றில்
மஞ்சனே மணியே மணிமிடற்று
அண்ணலே என உள் நெகிழ்ந்தவர்
துஞ்சும்ஆறு அறியார் பிறவார்இத் தொல் நிலத்தே. 6

கலவமாமயிலாள் ஓர்பங்கனைக்
கண்டு கண்மிசை நீர் நெகிழ்த்து இசை
குலவும்ஆறு வல்லார் குடிகொண்ட கோட்டாற்றில்
நிலவு மா மதி சேர் சடை உடை
நின்மலா என உன்னுவார் அவர்
உலவு வானவரின் உயர்வு ஆகுவது உண்மையதே. 7

வண்டல் ஆர் வயல் சாலி ஆலை வளம்
பொலிந்திட வார் புனல் திரை
கொண்டலார் கொணர்ந்து அங்கு உலவும் திகழ் கோட்டாற்றில்
தொண்டுஎலாம் துதிசெய்ய நின்ற
தொழிலனே கழலால் அரக்கனை
மிண்டுஎலாம் தவிர்த்து என் உகந்திட்ட வெற்றிமையே. 8

கருதி வந்து அடியார் தொழுது எழக்
கண்ணனோடு அயன் தேட ஆனையின்
குருதி மெய் கலப்ப உரி கொண்டு கோட்டாற்றில்
விருதினால் மடமாதும் நீயும்
வியப்பொடும் உயர் கோயில் மேவி வெள்
எருது உகந்தவனே இரங்காய் உனது இன்னருளே. 9

உடை இலாது உழல்கின்ற குண்டரும்
ஊண் அருந்தவத்து ஆய சாக்கியர்
கொடைஇலார்மனத்தார் குறை ஆரும் கோட்டாற்றில்
படையிலார் மழு ஏந்தி ஆடிய
பண்பனே இவர் என்கொலோ நுனை
அடைகிலாத வண்ணம் அருளாய் உன் அடியவர்க்கே. 10

காலனைக் கழலால் உதைத்து ஒரு
காமனைக் கனலாகச் சீறிமெய்
கோல வார்குழலாள் குடிகொண்ட கோட்டாற்றில்
மூலனைம் முடிவுஒன்று இலாத எம்
முத்தனைப் பயில் பந்தன் சொல்லிய
மாலைபத்தும் வல்லார்க்கு எளிதாகும் வானகமே. 11

திருச்சிற்றம்பலம்

199. திருக்கோட்டாறு

திருமுறை : 3/12 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : ஐராவதேசுவரர் இறைவியார் : வண்டமர்பூங்குழலி

வேதியன் விண்ணவர் ஏத்த நின்றான் விளங்கும் மறை
ஓதிய ஒண்பொருள்ஆகி நின்றான் ஒளியார் கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்த அழகார் திருக் கோட்டாற்றுள்
ஆதியையே நினைந்து ஏத்த வல்லார்க்கு அல்லல் இல்லையே. 1

ஏல மலர்க் குழல் மங்கைநல்லாள் இமவான்மகள்
பால் அமரும் திருமேனி எங்கள் பரமேட்டியும்
கோல மலர்ப்பொழில் சூழ்ந்து எழிலார் திருக் கோட்டாற்றுள்
ஆலநிழல்கீழ் இருந்து அறம் சொன்ன அழகனே. 2

இலை மல்கு சூலம் ஒன்று ஏந்தினானும் இமையோர் தொழ
மலை மல்கு மங்கை ஓர்பங்கனாய அம்மணிகண்டனும்
குலை மல்கு தண்பொழில் சூழ்ந்த அழகார் திருக் கோட்டாற்றுள்
அலை மல்கு வார்சடை ஏற்று உகந்த அழகன் அன்றே.3

ஊன் அமரும் உடலுள் இருந்தவ் உமைபங்கனும்
வான் அமரும் மதி சென்னி வைத்த மறைஓதியும்
தேன் அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்
தான் அமரும் விடையானும் எங்கள் தலைவன் அன்றே. 4

வம்பு அலரும் மலர்க் கோதை பாகம் மகிழ் மைந்தனும்
செம்பவளத்திருமேனி வெண் நீறு அணி செல்வனும்
கொம்பு அமரும் மலர் வண்டு கெண்டும் திருக் கோட்டாற்றுள்
நம்பன் எனப் பணிவார்க்கு அருள்செய் எங்கள் நாதனே. 5

பந்து அமரும் விரல் மங்கைநல்லாள் ஒருபாகமா
வெந்து அமரும் பொடிப் பூச வல்ல விகிர்தன் மிகும்
கொந்த அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்
அந்தணனை நினைந்து ஏத்த வல்லார்க்கு இல்லை அல்லலே. 6

துண்டு அமரும் பிறை சூடி நீடு சுடர் வண்ணனும்
வண்டு அமரும் குழல் மங்கை நல்லாள் ஒரு பங்கனும்
தெண்திரை நீர்வயல் சூழ்ந்த அழகார் திருக் கோட்டாற்றுள்
அண்டமும் எண்திசை ஆகி நின்ற அழகன் அன்றே. 7

இரவு அமரும் நிறம் பெற்றுஉடைய இலங்கைக்கு இறை
கரவு அமரக் கயிலை எடுத்தான் வலி செற்றவன்
குரவு அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்
அரவு அமரும் சடையான் அடியார்க்கு அருள் செய்யுமே. 8

ஓங்கிய நாரணன் நான்முகனும் உணரா வகை
நீங்கிய தீஉரு ஆகி நின்ற நிமலன் நிழல்
கோங்கு அமரும் பொழில் சூழ்ந்த எழிலார் திருக் கோட்டாற்றுள்
ஆங்கு அமரும் பெருமான் அமரர்க்கு அமரன் அன்றே. 9

கடுக் கொடுத்த துவர்ஆடையர் காட்சி இல்லாதது ஓர்
தடுக்கு இடுக்கிச் சமணே திரிவார்கட்குத் தன்அருள்
கொடுக்ககில்லாக் குழகன் அமரும் திருக் கோட்டாற்றுள்
இடுக்கண் இன்றித் தொழுவார் அமரர்க்கு இறை ஆவரே. 10

கொடி உயர் மால்விடை ஊர்தியினான் திருக் கோட்டாற்றுள்
அடி கழல் ஆர்க்க நின்று ஆட வல்ல அருளாளனைக்
கடி கமழும் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் சொல்
படி இவை பாடி நின்று ஆட வல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

200. திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்

திருமுறை : 3/19 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : பிரமபுரிநாதர் இறைவியார் : பூங்குழல்நாயகி

எரிதர அனல் கையில் ஏந்தி எல்லியில்
நரி திரி கான்இடை நட்டம் ஆடுவர்
அரிசில் அம் பொரு புனல் அம்பர் மா நகர்க்
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே. 1

மைய கண் மலைமகள் பாகமாய் இருள்
கையதோர் கனல் எரி கனல ஆடுவர்
ஐய நன் பொரு புனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண்இறை செய்த கோயில் சேர்வரே. 2

மறை புனை பாடலர் சுடர் கை மல்கவோர்
பிறை புனை சடைமுடி பெயர ஆடுவர்
அறை புனல் நிறை வயல் அம்பர் மாநகர்
இறை புனை எழில்வளர் இடமது என்பரே. 3

இரவு மல்கு இளமதி சூடி ஈடு உயர்
பரவ மல்கு அருமறை பாடி ஆடுவர்
அரவமோடு உயர் செம்மல் அம்பர்க் கொம்பு அலர்
மரவம் மல்கு எழில் நகர் மருவி வாழ்வரே. 4

சங்குஅணி குழையினர் சாமம் பாடுவர்
வெங்கனல் கனல்தர வீசி ஆடுவர்
அங்கு அணி விழவு அமர் அம்பர் மாநகர்ச்
செங்கண்நல்இறை செய்த கோயில் சேர்வரே. 5

கழல் வளர் காலினர் சுடர் கை மல்க ஓர்
சுழல் வளர் குளிர்புனல் சூடி ஆடுவர்
அழல் வளர் மறையவர் அம்பர்ப் பைம்பொழில்
நிழல் வளர் நெடுநகர் இடமது என்பரே. 6

இகல் உறு சுடர்எரி இலங்க வீசியே
பகல் இடம் பலி கொளப் பாடி ஆடுவர்
அகல் இடம் மலி புகழ் அம்பர் வம்பு அவிழ்
புகல் இடம் நெடு நகர் புகுவர்போலுமே. 7

எரி அன மணிமுடி இலங்கைக்கோன் தன
கரி அன தடக்கைகள் அடர்த்த காலினர்
அரியவர் வள நகர் அம்பர் இன்பொடு
புரியவர் பிரிவு இலாப் பூதம் சூழவே. 8

வெறி கிளர் மலர்மிசையவனும் வெம்தொழில்
பொறி கிளர் அரவுஅணைப் புல்கு செல்வனும்
அறிகில அரியவர் அம்பர்ச் செம்பியர்
செறி கழல் இறை செய்த கோயில் சேர்வரே. 9

வழி தலை பறி தலை அவர்கள் கட்டிய
மொழிதலைப் பயன் என மொழியல் வம்மினோ
அழிது அலை பொரு புனல் அம்பர் மாநகர்
உழிதலை ஒழிந்து உளர் உமையும் தாமுமே. 10

அழகரை அடிகளை அம்பர் மேவிய
நிழல் திகழ் சடைமுடி நீலகண்டரை
உமிழ் திரை உலகினில் ஓதுவீர் கொண்மின்
தமிழ் கெழு விரகினன் தமிழ்செய் மாலையே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருநாவுக்கரசு நாயனாரோடு திருஅம்பர் மாகாளத்தை வணங்கி வழிபட்ட பிள்ளையார் திருஅம்பர்ப் பெருந்திருக்கோயிலை அடைந்து வழிபாடாற்றி 'எரிதரவனல்கை' என்னுமித் திருப்பதிகத்தை எடுத்து அதில் பல திருப்பாட்டுக்களில் அத்தலம் கோச்செங்கட்சோழ நாயனாரால் திருப்பணி செய்யப் பெற்றமையைச் சிறப்பித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தித் திருக்கடவூருக்கு எழுந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

201. திருஅம்பர்மாகாளம்

திருமுறை : 1/83 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

அடையார் புரம்மூன்றும் அனல்வாய்விழ எய்து
மடையார் புனல்அம்பர்மாகாளம் மேய
விடையார் கொடி எந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழல் ஏத்தச் சாரா வினைதானே. 1

தேனார் மதமத்தம் திங்கள் புனல் சூடி
வானார் பொழில் அம்பர் மாகாளம் மேய
ஊனார் தலைதன்னில் பலிகொண்டு உழல் வாழ்க்கை
ஆனான் கழல் ஏத்த அல்லல் அடையாவே. 2

திரையார் புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழில் அம்பர் மாகாளம் மேய
நரையார் விடை ஊரும் நம்பான் கழல்நாளும்
உரையாதவர்கண் மேல் ஒழியா ஊனம்மே. 3

கொந்தண் பொழில் சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலி அம்பர்மாகாளம் மேய
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன்சடை வைத்த
எந்தை கழல் ஏத்த இடர் வந்து அடையாவே. 4

அணியார் மலைமங்கை ஆகம் பாகமாய்
மணியார் புனல்அம்பர்மாகாளம் மேய
துணியார் உடையினான் துதை பொன்கழல் நாளும்
பணியாதவர் தம்மேல் பறையா பாவம்மே. 5

பண்டு ஆழ்கடல் நஞ்சை உண்டு களிமாந்தி
வண்டு ஆர்பொழில் அம்பர்மாகாளம் மேய
விண்டார்புரம் வேவ மேருச்சிலையாகக்
கொண்டான் கழல் ஏத்தக் குறுகா குற்றமே. 6

மிளிரும் அரவோடு வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழில் அம்பர்மாகாளம் மேய
கிளரும் சடைஅண்ணல் கேடில் கழல் ஏத்தத்
தளரும் உறு நோய்கள் சாரும் தவம்தானே. 7

கொலையார் மழுவோடு கோலச் சிலைஏந்தி
மலையார் புனல் அம்பர்மாகாளம் மேய
இலையார் திரிசூலப் படையான் கழல்நாளும்
நிலையா நினைவார்மேல் நில்லா வினைதானே. 8

சிறையார் வரிவண்டு தேன்உண்டு இசைபாட
மறையார் நிறை அம்பர்மாகாளம் மேய
நறையார் மலரானும் மாலும் காண்பொண்ணா
இறையான் கழல்ஏத்த எய்தும் இன்பம்மே. 9

மாசு ஊர் வடிவு இன்னார் மண்டை உணல் கொள்வார்
கூசாது உரைக்கும சொல் கொள்கை குணம்அல்ல
வாசு ஆர்பொழில் அம்பர்மாகாளம் மேய
ஈசா என்பார்கட்கு இல்லை இடர் தானே. 10

வெருநீர் கொள ஓங்கும் வேணுபுரம் தன்னுள்
திருமாமறை ஞானசம்பந்தன சேண் ஆர்
பெருமான் மலி அம்பர்மாகாளம் பேணி
உருகா உரைசெய்வார் உயர்வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

202. திருஅம்பர் மாகாளம்

திருமுறை : 2/103 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

புல்கு பொன்நிறம் புரிசடை நெடுமுடிப்போழ் இளமதிசூடிப்
பில்கு தேன் உடை நறுமலர்க் கொன்றையும் பிணையல் செய்தவர் மேய
மல்கு தண்துறை அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
அல்லும் நண்பகலும் தொழும் அடியவர்க்கு அருவினை அடையாவே. 1

அரவம் ஆட்டுவர் அம்துகில் புலிஅதள் அங்கையில் அனல்ஏந்தி
இரவும் ஆடுவர் இவை இவர் சரிதைகள் இசைவன பலபூதம்
மரவம் தோய் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பரவியும் பணிந்து ஏத்த வல்லார் அவர் பயன் தலைப்படுவாரே.2

குணங்கள் கூறியும் குற்றங்கள் பரவியும் குரைகழல்அடி சேரக்
கணங்கள் பாடவும் கண்டவர் பரவவும் கருத்து அறிந்து அவர்மேய
மணம் கொள் பூம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
வணங்கும் உள்ளமோடு அணைய வல்லார்களை வல்வினை அடையாவே. 3

எங்கும் ஏதும் ஓர் பிணியிலர் கேடிலர் இழை வளர் நறுங்கொன்றை
தங்கு தொங்கலும் தாமமும் கண்ணியும் தாம் மகிழ்ந்தவர் மேய
மங்குல் தோய் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கங்குலும் பகலும் தொழும் அடியவர் காதன்மை உடையாரே. 4

நெதியம் என் உள போகம் மற்று என் உள நிலமிசை நலம் ஆய
கதியம் என் உள வானவர் என் உளர் கருதிய பொருள் கூடில்
மதியம் தோய் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
புதிய பூவொடு சாந்தமும் புகையும் கொண்டு ஏத்துதல் புரிந்தோர்க்கே. 5

கண் உலாவிய கதிர்ஒளி முடிமிசைக் கனல்விடு சுடர்நாகம்
தெண் நிலாவொடு திலகமும் நகுதலை திகழ வைத்து அவர்மேய
மண் உலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
உள் நிலாநினைப்பு உடையவர் யாவர் இவ்வுலகினில் உயர்வாரே. 6

தூசு தான் அரைத்தோல் உடைக்கண்ணியம் சுடர்விடு நறுங்கொன்றை
பூசு வெண்பொடிப் பூசவது அன்றியும் புகழ்புரிந்து அவர்மேய
மாசுலாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பேசு நீர்மையர் யாவர் இவ் உலகினில் பெருமையைப் பெறுவாரே. 7

பவ்வம் ஆர் கடல் இலங்கையர் கோன்தனைப் பருவரைக்கீழ் ஊன்றி
எவ்வம் தீர அன்று இமையவர்க்கு அருள்செய்த இறையவன் உறைகோயில்
மவ்வம் தோய் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கவ்வையால் தொழும் அடியவர் மேல்வினை கனல் இடைச்செதிள் அன்றே. 8

உய்யும் காரணம் உண்டு என்று கருதுமின் ஒளிகிளர் மலரோனும்
பைகொள் பாம்பணைப் பள்ளிகொள் அண்ணலும் பரவநின்று அவர்மேய
மை உலாம்பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
கையினால் தொழுது அவலமும் பிணியும் தம் கவலையும் களைவாரே. 9

பிண்டிபாலரும் மண்டை கொள் தேரரும் பீலிகொண்டு உழல்வாரும்
கண்ட நூலரும் கடுந் தொழிலாளரும் கழறநின்றவர் மேய
வண்டு உலாம் பொழில் அரிசிலின் வடகரை வருபுனல் மாகாளம்
பண்டு நாம்செய்த பாவங்கள் பற்றுஅறப் பரவுதல் செய்வோமே. 10

மாறு தன்னொடு மண்மிசை இல்லது வருபுனல் மாகாளத்து
ஈறும் ஆதியும் ஆகிய சோதியை ஏறு அமர் பெருமானை
நாறு பூம்பொழில் காழியுள் ஞானசம்பந்தன தமிழ்மாலை
கூறுவாரையும் கேட்க வல்லாரையும் குற்றங்கள் குறுகாவே. 11

திருச்சிற்றம்பலம்

203. திருஅம்பர் மாகாளம்

திருமுறை : 3/93 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : காளகண்டேசுவரர் இறைவியார் : பட்சநாயகி

படி உளார் விடையினர் பாய் புலித்தோலினர் பாவநாசர்
பொடி கொள் மா மேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொள் மா மலர் இடும் அடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந்து இருப்பிடம் அம்பர்மாகாளம்தானே. 1

கையின் மா மழுவினர் கடுவிடம் உண்ட எம் காளகண்டர்
செய்ய மா மேனியர் ஊன் அமர் உடைதலைப் பலிதிரிவார்
வையமார் பொதுவினில் மறையவர் தொழுது எழ நடம்அதுஆடும்
ஐயன் மாதேவியோடு இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 2

பரவின அடியவர் படுதுயர் கெடுப்பவர் பரிவிலார் பால்
கரவினர் கனலன உருவினர் படுதலைப் பலிகொடு ஏகும்
இரவினர் பகல்எரிகான் இடை ஆடிய வேடர்பூணும்
அரவினர் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 3

நீற்றினர் நீண்டவார் சடையினர் படையினர் நிமலர் வெள்ளை
ஏற்றினர் எரிபுரிகரத்தினர் புரத்துளார் உயிரை வவ்வும்
கூற்றினர் கொடியிடை முனிவுற நனிவரும் குலவு கங்கை
ஆற்றினர் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 4

புறத்தினர் அகத்து உளர் போற்றி நின்று அழுதுஎழும் அன்பர்சிந்தைத்
திறத்தினர் அறிவிலாச் செதுமதித் தக்கன் தன் வேள்வி செற்ற
மறத்தினர் மாதவர் நால்வருக்கு ஆலின் கீழ் அருள்புரிந்த
அறத்தினர் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 5

பழக மா மலர்பறித்து இண்டைகொண்டு இறைஞ்சுவார் பால்செறிந்த
குழகனார் குணம் புகழ்ந்து ஏத்துவார் அவர்பலர் கூடநின்ற
கழகனார் கரி உரித்து ஆடு கங்காளர் நம் காளி ஏத்தும்
அழகனார் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 6

சங்கவார் குழையினர் தழலன உருவினர் தமதுஅருளே
எங்குமாய் இருந்தவர் அருந்தவ முனிவருக்கு அளித்து உகந்தார்
பொங்குமாபுனல் பரந்து அரிசிலின் வடகரை திருத்தம்பேணி
அங்கம் ஆறுஓதுவார் இருப்பிடம் அம்பர்மாகாளம் தானே. 7

பொருசிலை மதனனைப் பொடிபட விழித்தவர் பொழில்இலங்கைக்
குரிசிலைக் குலவரைக் கீழ்உற அடர்த்தவர் கோயில்கூறில்
பெருசிலை நலமணி பீலியோடு ஏலமும் பெருக நுந்தும்
அரிசிலின் வடகரை அழகுஅமர் அம்பர்மாகாளம் தானே. 8

வரிஅரா அதன்மிசைத் துயின்றவன் தானும்மா மலர்உளானும்
எரியராம் அணிகழல் ஏத்த ஒண்ணாவகை உயர்ந்துபின்னும்
பிரியராம் அடியவர்க்கு அணியராய்ப் பணிவு இலாதவர்க்கு என்றும்
அரியராய் அரிவையோடு இருப்பிடம் அம்பர்மாகாளம்தானே. 9

சாக்கியக் கயவர் வன்தலை பறிக் கையரும் பொய்யினால்நூல்
ஆக்கிய மொழிஅவை பிழைஅவை ஆதலின் வழிபடுவீர்
வீக்கிய அரவுடைக் கச்சையான் இச்சையான் அவர்கட்கு எல்லாம்
ஆக்கிய அரன்உறை அம்பர்மாகாளமே அடைமின்நீரே. 10

செம்பொன் மா மணிகொழித்து எழு திரை வருபுனல் அரிசில்சூழ்ந்த
அம்பர்மாகாளமே கோயிலா அணங்கினோடு இருந்தகோனைக்
கம்பினார் நெடுமதில் காழியுள் ஞானசம்பந்தன்சொன்ன
நம்பி நாள் மொழிபவர்க்கு இல்லையாம் வினை நலம் பெறுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

204. திருமீயச்சூர்

திருமுறை : 2/62 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : முயற்சி நாதர் இறைவியார் : சுந்தரநாயகி

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன்சடையில் பதித்த பரமேட்டி
மாயச் சூர் அன்று அறுத்த மைந்தன் தாதை தன்
மீயச்சூரைத் தொழுது வினையை வீட்டுமே. 1

பூ ஆர் சடையின்முடிமேல் புனலர் அனல்கொள்வர்
நா ஆர் மறையர் பிறையர் நற வெண்தலை ஏந்தி
ஏ ஆர் மலையே சிலையாக் கழி அம்பு எரி வாங்கி
மேவார் புரம்மூன்று எரித்தார் மீயச் சூராரே. 2

பொன் நேர் கொன்றைமாலை புரளும் அகலத்தான்
மின் நேர் சடைகள் உடையான் மீயச்சூரானைத்
தன் நேர் பிறர் இல்லானைத் தலையால் வணங்குவார்
அந் நேர் இமையோர்உலகம் எய்தல் அரிது அன்றே. 3

வேக மத நல் யானை வெருவ உரி போர்த்துப்
பாகம் உமையோடுஆகப் படிதம்பல பாட
நாகம் அரைமேல் அசைத்து நடம்ஆடிய நம்பன்
மேகம் உரிஞ்சும் பொழில் சூழ் மீயச்சூரானே. 4

விடை ஆர் கொடியார் சடைமேல் விளங்கும் பிறைவேடம்
படை ஆர் பூதம் சூழப் பாடல்ஆடலார்
பெடை ஆர் வரிவண்டு அணையும் பிணை சேர் கொன்றையார்
விடை ஆர் நடைஒன்று உடையார் மீயச்சூராரே. 5

குளிரும் சடைகொள் முடிமேல் கோலம் ஆர் கொன்றை
ஒளிரும் பிறை ஒன்று உடையான் ஒருவன் கை கோடி
நளிரும் மணி சூழ் மாலை நட்டம் நவில் நம்பன்
மிளிரும் அரவம் உடையான் மீயச்சூரானே. 6

நீலவடிவர் மிடறு நெடியர் நிகர் இல்லார்
கோல வடிவு தமது அம் கொள்கை அறிவு ஒண்ணார்
காலர் கழலர் கரியின் உரியர் மழுவாளர்
மேலர் மதியர் விதியர் மீயச்சூராரே. 7

புலியின் உரி தோல் ஆடை பூசும் பொடி நீற்றர்
ஒலி கொள் புனல் ஓர் சடைமேல் கரந்தார் உமைஅஞ்ச
வலிய திரள்தோள் வன்கண் அரக்கர்கோன் தன்னை
மெலிய வரைக்கீழ் அடர்த்தார் மீயச்சூராரே. 8

காதில் மிளிரும் குழையார் கரிய கண்டத்தார்
போதிலவனும் மாலும் தொழப் பொங்கு எரி ஆனார்
கோதி வரிவண்டு அறை பூம் பொய்கைப் புனல் மூழ்கி
மேதி படியும் வயல் சூழ் மீயச்சூராரே. 9

கண்டார் நாணும் படியார் கலிங்கம் முடை பட்டைக்
கொண்டார் சொல்லைக் குறுகார் உயர்ந்த கொள்கையார்
பெண்தான் பாகம் உடையார் பெரிய வரை வில்லால்
விண்டார் புரம்மூன்று எரித்தார் மீயச்சூராரே. 10

வேடம் உடைய பெருமான் உறையும் மீயச்சூர்
நாடும் புகழ் ஆர் புகலி ஞானசம்பந்தன்
பாடல் ஆய தமிழ்ஈர் ஐந்தும் மொழிந்து உள்கி
ஆடும் அடியார் அகல் வான்உலகம் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

205. திருத்திலதைப்பதி

திருமுறை : 2/118 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி
இறைவர் : மதிமுத்தேசர் இறைவியார் : பொற்கொடி நாயகி

பொடிகள் பூசிப் பலதொண்டர் கூடிப் புலர் காலையே
அடிகள் ஆரத் தொழுது ஏத்த நின்ற அவ்அழகன் இடம்
கொடிகள் ஓங்கிக் குலவும் விழவார் திலதைப்பதி
வடி கொள் சோலைம் மலர் மணம் கமழும் மதிமுத்தமே.1

தொண்டர் மிண்டிப் புகை விம்மு சாந்தும் கமழ் துணையலும்
கொண்டு கண்டார் குறிப்பு உணர நின்ற குழகன் இடம்
தெண்டிரைப் பூம்புனல் அரிசில் சூழ்ந்த திலதைப்பதி
வண்டு கெண்டு உற்று இசை பயிலும் சோலைம் மதிமுத்தமே. 2

அடல் உள் ஏறு உய்த்து உகந்தான் அடியார் அமரர் தொழக்
கடலுள் நஞ்சம் அமுதாக உண்ட கடவுள் இடம்
திடல் அடங்கச் செழுங் கழனி சூழ்ந்த திலதைப்பதி
மடலுள் வாழைக்கனி தேன் பிலிற்றும் மதிமுத்தமே. 3

கங்கை திங்கள் வன்னி துன் எருக்கின்னொடு கூவிளம்
வெங் கண் நாகம் விரிசடையில் வைத்த விகிர்தன் இடம்
செங்கயல் பாய் புனல் அரிசில் சூழ்ந்த திலதைப்பதி
மங்குல் தோயும் பொழில் சூழ்ந்து அழகார் மதிமுத்தமே. 4

புரவிஏழும் மணி பூண்டு இயங்கும் கொடித்தேரினான்
பரவி நின்று வழிபாடு செய்யும் பரமேட்டி ஊர்
விரவி ஞாழல் விரி கோங்கு வேங்கை சுரபுன்னைகள்
மரவமவ்வன் மலரும் திலதைம் மதிமுத்தமே. 5

விண்ணார் வேதம் விரித்து ஓத வல்லார் ஒருபாகமும்
பெண்ணார் எண்ணார் எயில் செற்று உகந்தபெருமான் இடம்
தெண்நிலாவின் ஒளி தீண்டு சோலைத் திலதைப்பதி
மண்உளார் வந்து அருள் பேணிநின்றம் மதிமுத்தமே. 6

ஆறுசூடி அடையார் புரம் செற்றவர் பொற்றொடி
கூறு சேரும் உருவர்க்கு இடம் ஆவது கூறுங்கால்
தேறல் ஆரும் பொழில் சூழ்ந்து அழகு ஆர் திலதைப்பதி
மாறு இலா வண் புனல் அரிசில் சூழ்ந்தம் மதிமுத்தமே. 7

கடுத்து வந்த கனல்மேனியினான் கருவரைதனை
எடுத்தவன்தன் முடிதோள் அடர்த்தார்க்கு இடம்ஆவது
புடைக் கொள் பூகத்து இளம் பாளை புல்கும் மதுப் பாய வாய்
மடுத்து மந்தி உகளும் திலதைம் மதிமுத்தமே. 8

படம் கொள் நாகத்து அணையானும் பைந்தாமரையின் மிசை
இடம் கொள் நால்வேதனும் ஏத்த நின்ற இறைவன் இடம்
திடம் கொள் நாவின் இசைத் தொண்டர் பாடும் திலதைப்பதி
மடங்கல் வந்து வழிபாடு செய்யும் மதிமுத்தமே. 9

புத்தர்தேரர் பொறி இல் சமணர்கரு வீறு இலாப்
பித்தர் சொன்னம் மொழி கேட்கிலாத பெருமான் இடம்
பத்தர் சித்தர் பணிவுற்று இறைஞ்சும் திலதைப்பதி
மத்தயானை வழிபாடு செய்யும் மதிமுத்தமே. 10

மந்தம் ஆரும் பொழில் சூழ் திலதைம் மதிமுத்தர்மேல்
கந்தம் ஆரும் கடல் காழி உள்ளான் தமிழ் ஞானசம்
பந்தன் மாலை பழி தீர நின்று ஏத்த வல்லார்கள் போய்ச்
சிந்தை செய்வார் சிவன் சேவடி சேர்வது திண்ணமே. 11

திருச்சிற்றம்பலம்

206. திருப்பாம்புரம்

திருமுறை : 1/41 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : பாம்புரேசுவரர் இறைவியார் : வண்டார்பூங்குழலி

சீர் அணி திகழ் திருமார்பில் வெண்நூலர்
திரிபுரம் எரிசெய்த செல்வர்
வார் அணி வனமுலை மங்கை ஓர் பங்கர்
மான்மறி ஏந்திய மைந்தர்
கார் அணி மணிதிகழ் மிடறு உடை அண்ணல்
கண்ணுதல் விண்ணவர் ஏத்தும்
பார் அணி திகழ் தருநால்மறையாளர்
பாம்புர நன்னகராரே. 1

கொக்குஇறகோடு கூவிளம் மத்தம்
கொன்றையொடு எருக்கு அணி சடையர்
அக்கினொடு ஆமை பூண்டு அழகு ஆக
அனல்அதுஆடும் எம் அடிகள்
மிக்க நல் வேதவேள்வியுள் எங்கும்
விண்ணவர் விரைமலர் தூவப்
பக்கம் பல்பூதம் பாடிட வருவார்
பாம்புர நன்னகராரே. 2

துன்னலின் ஆடை உடுத்து அதன் மேலோர்
சூறை நல் அரவுஅது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டு ஆடிப்
பித்தராய்த் திரியும் எம்பெருமான்
மன்னு மா மலர்கள் தூவிட நாளும்
மாமலையாட்டியும் தாமும்
பன்னு நால்மறைகள் பாடிட வருவார்
பாம்புர நன்னகராரே. 3

துஞ்சு நாள் துறந்து தோற்றமும் இல்லாச்
சுடர்விடு சோதி எம்பெருமான்
நஞ்சு சேர் கண்டம் உடைய என் நாதர்
நள்ளிருள் நடம்செய்யும் நம்பர்
மஞ்சு தோய் சோலை மா மயில் ஆட
மாடமாளிகை தன்மேல் ஏறிப்
பஞ்சு சேர் மெல் அடிப் பாவையர் பயிலும்
பாம்புர நன்னகராரே. 4

நதிஅதன் அயலே நகுதலைமாலை
நாள்மதி சடைமிசை அணிந்து
கதிஅது ஆகக் காளி முன் காணக்
கான் இடை நடம் செய்த கருத்தர்
விதி அது வழுவா வேதியர் வேள்வி
செய்தவர் ஓத்து ஒலி ஓவாப்
பதிஅது ஆகப் பாவையும் தாமும்
பாம்புர நன்னகராரே. 5

ஓதி நன்கு உணர்வார்க்கு உணர்வு உடை ஒருவர்
ஒளி திகழ் உருவம் சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்த எம் வள்ளல்
மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதி நீ அருள் என்று அமரர்கள் பணிய
அலைகடல் கடைய அன்று எழுந்த
பாதி வெண்பிறை சடை வைத்த எம் பரமர்
பாம்புர நன்னகராரே. 6

மாலினுக்கு அன்று சக்கரம் ஈந்து
மலரவற்கு ஒருமுகம் ஒழித்து
ஆலின்கீழ் அறம்ஓர் நால்வருக்கு அருளி
அனல்அது ஆடும் எம் அடிகள்
காலனைக்காயந்து தம்கழல் அடியால்
காமனைப் பொடிபட நோக்கிப்
பாலனுக்கு அருள்கள் செய்த எம்அடிகள்
பாம்புர நன்னகராரே. 7

விடைத்த வல்அரக்கன் வெற்பினை எடுக்க
மெல்லிய திருவிரல் ஊன்றி
அடர்த்து அவன் தனக்கு அன்று அருள்செய்த அடிகள்
அனல்அதுஆடும் எம் அண்ணல்
மடக்கொடி யவர்கள் வருபுனல் ஆட
வந்து இழி அரிசிலின் கரைமேல்
படப்பையில் கொணர்ந்து பருமணி சிதறும்
பாம்புர நன்னகராரே. 8

கடி படு கமலத்து அயனொடு மாலும்
காதலோடு அடிமுடி தேடச்
செடி படு வினைகள் தீர்த்து அருள் செய்யும்
தீவணர் எம்முடைச் செல்வர்
முடிஉடை அமரர் முனிகணத்தவர்கள்
முறைமுறை அடிபணிந்து ஏத்தப்
படிஅது ஆகப் பாவையும் தாமும்
பாம்புர நன்னகராரே. 9

குண்டர் சாக்கியரும் குணம்இலாதாரும்
குற்றுவிட்டு உடுக்கையர் தாமும்
கண்டவாறு உரைத்துக் கால்நிமிர்த்து உண்ணும்
கையர்தாம் உள்ளவாறு அறியார்
வண்டு சேர் குழலி மலைமகள் நடுங்க
வாரணம் உரிசெய்து போர்த்தார்
பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்
பாம்புர நன்னகராரே. 10

பார் மலிந்து ஓங்கிப் பரு மதில் சூழ்ந்த
பாம்புர நன்னகராரைக்
கார் மலிந்து அழகார் கழனி சூழ் மாடக்
கழுமல முது பதிக் கவுணி
நார் மலிந்து ஓங்கு நான்மறை ஞான
சம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்து அழகு ஆர் செல்வம் அது ஓங்கிச்
சிவன்அடி நண்ணுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

207. திருச்சிறுகுடி

திருமுறை : 3/97 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : மங்களநாதர் இறைவியார் : மங்களநாயகி

திடம் மலி மதில் அணி சிறுகுடி மேவிய
படம் மலி அரவு உடை யீரே
படம் மலி அரவு உடையீர் உமைப் பணிபவர்
அடைவதும் அமருலகு அதுவே. 1

சிற்றிடைஉடன் மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடியீரே
சுற்றிய சடைமுடியீர் உம தொழு கழல்
உற்றவர் உறு பிணி இலரே. 2

தெள்ளிய புனல் அணி சிறுகுடி மேவிய
துள்ளிய மானுடையீரே
துள்ளிய மான் உடையீர் உம தொழுகழல்
உள்ளுதல்செய நலம் உறுமே. 3

செந்நெல வயல் அணி சிறுகுடி மேவிய
ஒன்னலர் புரம் எரித்தீரே
ஒன்னலர் புரம் எரித்தீர் உமை உள்குவார்
சொல்நலம் உடையவர் தொண்டே. 4

செற்றினில் மலி புனல் சிறுகுடி மேவிய
பெற்றி கொள் பிறை முடியீரே
பெற்றி கொள் பிறைமுடியீர் உமைப் பேணி நஞ்சு
அற்றவர் அருவினை இலரே. 5

செங்கயல் புனல் அணி சிறுகுடி மேவிய
மங்கையை இடம் உடையீரே
மங்கையை இடம்உடையீர் உமை வாழ்த்துவார்
சங்கை அது இலர் நலர் தவமே. 6

செறி பொழில் தழுவிய சிறுமுகுடி மேவிய
வெறி கமழ் சடைமுடியீரே
வெறி கமழ் சடைமுடியீர் உமை விரும்பி மெய்ந்
நெறி உணர்வோர் உயர்ந்தோரே. 7

திசையவர் தொழுது எழு சிறுகுடி மேவிய
தசமுகன் உரம் நெரித்தீரே
தசமுகன் உரம் நெரித்தீர் உமைச்சார்பவர்
வசைஅறும் அது வழிபாடே. 8

செரு வரை வயல் அமர் சிறுகுடி மேவிய
இருவரை அசைவு செய்தீரே
இருவரை அசைவு செய்தீர் உமை ஏத்துவார்
அருவினையொடு துயர் இலரே. 9

செய்த்தலை புனல் அணி சிறுகுடி மேவிய
புத்தரொடு அமண் புறத்தீரே
புத்தரொடு அமண் புறத்தீர் உமைப் போற்றுதல்
பத்தர்கள் தம் உடைப் பரிசே. 10

தேன் அமர் பொழில் அணி சிறுகுடி மேவிய
மான் அமர் கரம்உடையீரே
மான் அமர் கரம்உடையீர் உமை வாழ்த்திய
ஞானசம்பந்தன தமிழே. 11

திருச்சிற்றம்பலம்

208. திருவீழிமிழலை

திருமுறை : 1/11 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : வீழியழகர் இறைவியார் : சுந்தரகுசாம்பிகை

சடையார்புனல் உடையான் ஒரு சரிகோவணம் உடையான்
படையார்மழு உடையான் பல பூதப்படை உடையான்
மடமான்விழி உமைமாது இடம் உடையான் எனை உடையான்
விடையார் கொடி உடையான் இடம் வீழிம்மிழலையே. 1

ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குணம்மூன்றாய்
மாறா மறைநான்காய் வரு பூதம் அவை ஐந்தாய்
ஆறு ஆர் சுவை ஏழ்ஓசையொடு எட்டுத்திசைதான் ஆய்
வேறுஆய் உடன்ஆனான் இடம் வீழிம்மிழலையே. 2

வம்மின் அடியீர் நாண்மலர் இட்டுத்தொழுது உய்ய
உம் அன்பினோடு எம் அன்பு செய்து ஈசன் உறை கோயில்
மும்மென்று இசை முரல் வண்டுகள் கெண்டித் திசை எங்கும்
விம்மும் பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழலையே. 3

பண்ணும் பதம்ஏழும் பலஓசைத் தமிழ்அவையும்
உள் நின்றது ஓர் சுவையும் உறு தாளத்து ஒலி பலவும்
மண்ணும் புனல் உயிரும் வரு காற்றும் சுடர்மூன்றும்
விண்ணும் முழுதுஆனான் இடம் வீழிம் மிழலையே. 4

ஆயாதன சமயம்பல அறியாதவன் நெறியின்
தாய்ஆனவன் உயிர்கட்கு முன் தலைஆனவன் மறைமுத்
தீஆனவன் சிவன் எம்இறை செல்வத் திரு ஆரூர்
மேயான்அவன் உறையும் இடம் வீழிம் மிழலையே. 5

கல்லால்நிழல்கீழாய் இடர் காவாய் என வானோர்
எல்லாம் ஒரு தேர்ஆய் அயன் மறை பூட்டி நின்று உய்ப்ப
வல்லாய் எரி காற்று ஈர்க்கு அரி கோல் வாசுகி நாண் கல்
வில்லால் எயில் எய்தான் இடம் வீழிம் மிழலையே. 6

கரத்தான் மலி சிரத்தான் கரி உரித்து ஆயது ஓர் படத்தான்
புரத்தார் பொடிபடத் தன் அடி பணிமூவர்கட்கு ஓவா
வரத்தான் மிக அளித்தான் இடம் வளர் புன்னை முத்து அரும்பி
விரைத் தாது பொன் மணி ஈன்று அணி வீழிம் மிழலையே. 7

முன் நிற்பவர் இல்லா முரண் அரக்கன் வடகயிலை
தன்னைப் பிடித்து எடுத்தான் முடி தடந்தோள் இற ஊன்றிப்
பின்னைப் பணிந்து ஏத்தப் பெருவாள் பேரொடும் கொடுத்த
மின்னிற் பொலி சடையான் இடம் வீழிம் மிழலையே. 8

பண்டு ஏழ்உலகு உண்டான் அவை கண்டானும் முன் அறியா
ஒண்தீஉரு ஆனான் உறை கோயில் நிறை பொய்கை
வண்தாமரைமலர்மேல் மடஅன்னம் நடை பயில
வெண்தாமரை செந் தாது உதிர் வீழிம் மிழலையே. 9

மசங்கல் சமண் மண்டைக் கையர் குண்டக் குணம்இலிகள்
இசங்கும் பிறப்பு அறுத்தான் இடம் இருந்தேன் களித்து இரைத்துப்
பசும்பொன்கிளி களிமஞ்ஞைகள் ஒளிகொண்டு எழு பகலோன்
விசும்பைப் பொலிவிக்கும் பொழில் வீழிம் மிழலையே. 10

வீழிம் மிழலைம் மேவிய விகிர்தன் தனை விரைசேர்
காழிந்நகர்க் கலை ஞானசம்பந்தன் தமிழ் பத்தும்
யாழின்இசை வல்லார்சொலக் கேட்டார்அவர் எல்லாம்
ஊழின்மலி வினைபோயிட உயர்வானஅடை வாரே. 11

திருச்சிற்றம்பலம்

209. திருவீழிமிழலை

திருமுறை : 1/20 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

தட நிலவிய மலை நிறுவி ஓர் தழல் உமிழ்தரு படஅரவுகொடு
அடல் அசுரரொடு அமரர்கள் அலைகடல் கடைவுழி எழும் மிகு சின
விடம் அடைதரும் மிடறு உடையவன் விடைமிசை வருமவன் உறை பதி
திடம் மலிதரு மறை முறை உணர் மறையவர் நிறை திருமிழலையே. 1

தரையொடு திவிதலம் நலிதரு தகுதிறல் உறு சலதரனது
வரையன தலை விசையொடு வரு திகிரியை அரிபெற அருளினன்
உரை மலிதரு சுரநதி மதி பொதி சடையவன் உறை பதிமிகு
திரை மலி கடல் மணல் அணிதரு பெறுதிடர் வளர் திருமிழலையே. 2

மலைமகள்தனை இகழ்வது செய்த மதி அறு சிறுமனவனது உயர்
தலையினொடு அழல்உருவன கரம் அற முனிவு செய்தவன் உறைபதி
கலை நிலவிய புலவர்கள் இடர்களை தருகொடை பயில்பவர் மிகு
சிலை மலி மதில் புடை தழுவிய திகழ்பொழில் வளர் திருமிழலையே. 3

மருவலர் புரம் எரியினில் மடிதர ஒரு கணை செல நிறுவிய
பெரு வலியினன் நலம் மலிதரு கரன் உரம் மிகு பிணம் அமர்வன
இருள்இடை அடை உறவொடு நட விசைஉறு பரன் இனிது உறைபதி
தெருவினில் வரு பெரு விழவு ஒலி மலிதர வளர் திருமிழலையே. 4

அணி பெறு வடமரநிழலினில் அமர்வொடும் அடியினை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும் அருளிய பரன் உறைவிடம்ஒளி
மணி பொருவு அரு மரகதநிலம் மலி புனல் அணைதரு வயல்அணி
திணி பொழில் தரு மணம் மது நுகர் அறுபதம் முரல் திருமிழலையே. 5

வசை அறு வலி வனசரஉருஅதுகொடு நினைவு அருதவம்முயல்
விசையன திறன் மலைமகள் அறிவுறுதிறல் அமர் மிடல்கொடுசெய்து
அசைவு இல படைஅருள் புரிதருமவன் உறைபதி அது மிகுதரு
திசையினில் மலர் குலவிய செறி பொழில் மலிதரு திருமிழலையே. 6

நலம் மலிதரு மறைமொழியொடு நதிஉறுபுனல் புகை ஒளிமுதல்
மலர் அவைகொடு வழிபடுதிறல் மறையவன் உயிரது கொளவரு
சலம் மலிதரு மறலிதன் உயிர்கெட உதைசெய்த அரன் உறை பதி
திலகம் இது என உலகுகள் புகழ்தரு பொழில்அணி திருமிழலையே. 7

அரன் உறைதரு கயிலையை நிலைகுலைவு அது செய்த தசமுகன்அது
கரம் இருபதும் நெரிதரவிரல் நிறுவிய கழல்அடி உடையவன்
வரன்முறை உலகுஅவை தரு மலர் வளர் மறையவன் வழி வழுவிய
சிரம்அதுகொடு பலி திரிதரு சிவன் உறை பதி திருமிழலையே. 8

அயனொடும் எழில் அமர் மலர்மகள் மகிழ் கணன் அளவிடல் ஒளிய ஓர்
பயம் உறு வகை தழல் நிகழ்வது ஓர் படி உருஅது வர வரல் முறை
சய சய என மிகு துதிசெய வெளி உருவிய அவன் உறை பதி
செயம் நிலவிய மதில் மதிஅது தவழ்தர உயர் திருமிழலையே. 9

இகழ் உருவொடு பறி தலைகொடும் இழி தொழில் மலி சமண் விரகினர்
திகழ் துவர்உடை உடல் பொதிபவர் கெட அடியவர் மிக அருளிய
புகழ் உடை இறை உறை பதிபுனல் அணிகடல் புடைதழுவிய புவி
திகழ் சுரர்தரு நிகர் கொடையினர் செறிவொடு திகழ் திருமிழலையே. 10

சினம் மலி கரி உரிசெய்த சிவன் உறைதரு திருமிழலையைமிகு
தன மனர் சிரபுரநகர் இறை தமிழ்விரகனது உரை ஒருபதும்
மன மகிழ்வொடு பயில்பவர் எழில் மலர்மகள் கலைமகள் சயமகள்
இனம் மலி புகழ்மகள் இசைதர இரு நிலன்இடை இனிது அமர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

210. திருவீழிமிழலை

திருமுறை : 1/35 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

அரையார் விரிகோவண ஆடை
நரையார் விடைஊர்தி நயந்தான்
விரையார் பொழில் வீழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே. 1

புனைதல்புரி புன்சடைதன்மேல்
கனைதல் ஒரு கங்கை கரந்தான்
வினை இல்லவர் வீழிம்மிழலை
நினைவில் அவர்நெஞ்சமும் நெஞ்சே. 2

அழ வல்லவர் ஆடியும்பாடி
எழ வல்லவர் எந்தை அடிமேல்
விழ வல்லவர் வீழிம்மிழலை
தொழ வல்லவர் நல்லவர் தொண்டே. 3

உரவம் புரிபுன்சடைதன்மேல்
அரவம் அரை ஆர்த்த அழகன்
விரவும் பொழில் வீழிம்மிழலை
பரவும் அடியார் அடியாரே. 4

கரிது ஆகிய நஞ்சு அணி கண்டன்
வரிது ஆகிய வண்டு அறை கொன்றை
விரி தார் பொழில் வீழிம்மிழலை
உரிதா நினைவார் உயர்வாரே. 5

சடை ஆர் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமேல் அதுஒர் பைங்கண்
விடையான் உறை வீழிம்மிழலை
அடைவார் அடியார் அவர்தாமே. 6

செறி ஆர் கழலும் சிலம்பு ஆர்க்க
நெறி ஆர் குழலாளொடு நின்றான்
வெறி ஆர் பொழில் வீழிம்மிழலை
அறிவார் அவலம் அறியாரே. 7

உளையா வலி ஒல்க அரக்கன்
வளையா விரல் ஊன்றிய மைந்தன்
விளை ஆர் வயல் வீழிம்மிழலை
அளையா வருவார் அடியாரே. 8

மருள்செய்து இருவர் மயல்ஆக
அருள்செய்தவன் ஆர் அழல் ஆகி
வெருள்செய்தவன் வீழிம்மிழலை
தெருள் செய்தவர் தீவினை தேய்வே. 9

துளங்கும் நெறியார் அவர் தொன்மை
வளம் கொள்ளன்மின் புல்அமண்தேரை
விளங்கும் பொழில் வீழிம்மிழலை
உளம்கொள்பவர்தம் வினைஓய்வே. 10

நளிர் காழியுள் ஞானசம்பந்தன்
குளிர் ஆர் சடையான் அடிகூற
மிளிர் ஆர் பொழில் வீழிம்மிழலை
கிளர் பாடல் வல்லார்க்கு இலைகேடே. 11

திருச்சிற்றம்பலம்

211. திருவீழிமிழலை

திருமுறை : 1/82 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

இரும் பொன்மலை வில்லா எரி அம்பா நாணில்
திரிந்த புரம்மூன்றும் செற்றான் உறை கோயில்
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி எதிர்கொள்வார் வீழிமிழலையே. 1

வாதைப்படுகின்ற வானோர் துயர் தீர
ஓதக்கடல் நஞ்சை உண்டான் உறை கோயில்
கீதத்துஇசையோடும் கேள்விக் கிடையோடும்
வேதத்து ஒலி ஓவா வீழிமிழலையே. 2

பயிலும் மறையாளன் தலையில் பலிகொண்டு
துயிலும்பொழுது ஆடும் சோதி உறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் இள வேயும்
வெயிலும் பொலி மாதர் வீழிமிழலையே. 3

இரவன் பகலோனும் எச்சத்து இமையோரை
நிரவிட்டு அருள்செய்த நிமலன் உறைகோயில்
குரவம் சுரபுன்னை குளிர் கோங்கு இளவேங்கை
விரவும் பொழில் அம்தண் வீழிமிழலையே. 4

கண்ணின் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக்கு அருள்செய்த பெருமான் உறைகோயில்
மண்ணில் பெரு வேள்வி வளர் தீப்புகை நாளும்
விண்ணில் புயல்காட்டும் வீழிமிழலையே. 5

மால் ஆயிரம் கொண்டு மலர்க்கண் இட ஆழி
ஏலா வலயத்தோடு ஈந்தான் உறை கோயில்
சேல் ஆகிய பொய்கைச் செழு நீர்க் கமலங்கள்
மேலால் எரி காட்டும் வீழிமிழலையே. 6

மதியால் வழிபட்டான் வாழ்நாள் கொடுபோவான்
கொதியா வரு கூற்றைக் குமைத்தான் உறை கோயில்
நெதியால் மிகு செல்வர் நித்த நியமங்கள்
விதியால் நிற்கின்றார் வீழிமிழலையே. 7

எடுத்தான் தருக்கினை இழித்தான் விரல்ஊன்றிக்
கொடுத்தான் வாள் ஆளாக்கொண்டான் உறைகோயில்
படித்தார் மறை வேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிக வாழும் வீழிமிழலையே. 8

கிடந்தான் இருந்தானும் கீழ்மேல் காணாது
தொடர்ந்து ஆங்கு அவர் ஏத்தச் சுடர் ஆயவன் கோயில்
படம் தாங்கு அரவுஅல்குல் பவளத்துவர்வாய் மேல்
விடம் தாங்கிய கண்ணார் வீழிமிழலையே. 9

சிக்கு ஆர் துவர் ஆடைச் சிறுதட்டு உடையாரும்
நக்கு ஆங்கு அலர் தூற்றும் நம்பான் உறைகோயில்
தக்கார் மறை வேள்வித் தலையாய் உலகுக்கு
மிக்கார் அவர் வாழும் வீழிமிழலையே. 10

மேல்நின்று இழி கோயில் வீழிமிழலையுள்
ஏனத்துஎயிற்றானை எழில் ஆர் பொழில் காழி
ஞானத்து உயர்கின்ற நலம் கொள் சம்பந்தன்
வாய்மைத்து இவை சொல்ல வல்லோர் நல்லோரே. 11

திருச்சிற்றம்பலம்

212. திருவீழிமிழலை

திருமுறை : 1/124 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர் மலி குழல் உமைதனை இடம் மகிழ்பவர்
நலம் மலி உரு உடையவர் நகர் மிகு புகழ்
நிலம் மலி மிழலையை நினைய வலவரே. 1

இருநிலம் இதன்மிசை எழில்பெறும் உருவினர்
கரு மலிதரு மிகு புவி முதல் உலகினில்
இருள் அறு மதியினர் இமையவர் தொழுது எழு
நிருபமன் மிழலையை நினைய வலவரே. 2

கலைமகள் தலைமகன் இவன் என வருபவர்
அலை மலிதரு புனல் அரவொடு நகுதலை
இலை மலி இதழியும் இசைதரு சடையினர்
நிலை மலி மிழலையை நினைய வலவரே. 3

மாடு அமர் சனம் மகிழ் தருமனம் உடையவர்
காடு அமர் கழுதுகள்அவை முழவொடு இசை
பாடலின் நவில்பவர் மிகுதரும் உலகினில்
நீடு அமர் மிழலையை நினைய வலவரே. 4

புகழ்மகள் துணையினர் புரிகுழல் உமைதனை
இகழ்வு செய்தவன் உடை எழில் மறைவழி வளர்
முகம்அது சிதைதர முனிவுசெய்தவன் மிகு
நிகழ்தரு மிழலையை நினைய வலவரே. 5

அன்றினர் அரி என வருபவர் அரிதினில்
ஒன்றிய திரிபுரம் ஒருநொடியினில் எரி
சென்று கொள் வகை சிறுமுறுவல்கொடு ஒளிபெற
நின்றவன் மிழலையை நினைய வலவரே. 6

கரம் பயில் கொடையினர் கடிமலர் அயனது ஒர்
சிரம் பயில்வு அற எறி சிவன் உறை செழு நகர்
வரம் பயில் கலைபல மறை முறை அறநெறி
நிரம்பினர் மிழலையை நினைய வலவரே. 7

ஒருக்கிய உணர்வினொடு ஒளிநெறி செலுமவர்
அரக்கன் நல்மணிமுடிஒருபதும் இருபது
கரக்கனம் நெரிதர மலர் அடிவிரல் கொடு
நெருக்கினன் மிழலையை நினைய வலவரே. 8

அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர்
கடிமலர் அயன் அரி கருத அருவகை தழல்
வடிவு உருஇயல்பினொடு உலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினைய வலவரே. 9

மன்மதன் என ஒளி பெறுமவர் மருதுஅமர்
வன் மலர் துவர்உடையவர்களும் மதிஇலர்
துன்மதி அமணர்கள் தொடர்வரு மிகு புகழ்
நின்மலன் மிழலையை நினைய வலவரே. 10

நித்திலன் மிழலையை நிகர் இலி புகலியுள்
வித்தகமறை மலி தமிழ்விரகன மொழி
பத்தியில் வருவன பத்துஇவை பயில்வொடு
கற்று வல்லவர் உலகினில் அடியவரே. 11

திருச்சிற்றம்பலம்

213. திருவீழிமிழலை

திருமுறை : 1/132 பண் : மேகராகக் குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

ஏர் இசையும் வட ஆலின் கீழ் இருந்து அங்கு
ஈர் இருவர்க்கு இரங்கி நின்று
நேரிய நால்மறைப் பொருளை உரைத்து
ஒளிர்சேர் நெறி அளித்தோன் நின்ற கோயில்
பார் இசையும் பண்டிதர்கள் பல்நாளும்
பயின்று ஓதும் ஓசை கேட்டு
வேரி மலி பொழில் கிள்ளை வேதங்கள்
பொருள் சொல்லும் மிழலை ஆமே. 1

பொறிஅரவம் அது சுற்றிப் பொருப்பே மத்தாகப்
புத்தேளிர் கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடம் உண்ட
கண்டத்தோன் மன்னும் கோயில்
செறி இதழ்த் தாமரைத்தவிசில் திகழ்ந்து ஓங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறி கதிர்ச்சாமரை இரட்ட இள அன்னம்
வீற்றிருக்கும் மிழலைஆமே. 2

எழுந்து உலகை நலிந்து உழலும் அவுணர்கள்தம்
புரம் மூன்றும் எழில்கண் நாடி
உழுந்து உருளும் அளவையின் ஒள்எரி கொளவெம்
சிலைவளைத்தோன் உறையும் கோயில்
கொழும் தரளம் நகை காட்டக் கோகநதம்
முகம்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்த கயல் விழி காட்ட வில் பவளம்
வாய்காட்டும் மிழலை ஆமே. 3

உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம்
யோனி பேதம்
நிரை சேரப் படைத்து அவற்றின் உயர்க்கு உயிராய்
அங்கு அங்கே நின்றான் கோயில்
வரை சேரும் முகில் முழவ மயில்கள் பல
நடம்ஆட வண்டு பாட
விரை சேர் பொன் இதழி தர மென்காந்தள்
கைஏற்கும் மிழலை ஆமே. 4

காணுமாறு அரிய பெருமான் ஆகிக்
காலமாய்க் குணங்கள் மூன்றாய்ப்
பேணு மூன்று உருவாகிப் பேர்உலகம்
படைத்து அளிக்கும் பெருமான் கோயில்
தாணுவாய் நின்ற பரதத்துவனை
உத்தமனை இறைஞ்சீர் என்று
வேணு வார்கொடி விண்ணோர்தமை விளிப்ப
போல்ஓங்கு மிழலை ஆமே. 5

அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகல் உடையோர் தம்உள்ளப்புண்டரிகத்து உள்
இருக்கும் புராணர் கோயில்
தகவு உடை நீர் மணித்தலத்துச் சங்கு உள வர்க்கம்
திகழச் சலசத் தீயுள்
மிக உடைய புன்கு மலர்ப்பொரி அட்ட
மணம் செய்யும் மிழலை ஆமே. 6

ஆறு ஆடு சடைமுடியன் அனல்ஆடும்
மலர்க்கையன் இமயப்பாவை
கூறு ஆடு திருஉருவன் கூத்தாடும்
குணம்உடையோன் குளிரும் கோயில்
சேறு ஆடு செங்கழுநீர்த் தாதுஆடி
மதுஉண்டு சிவந்த வண்டு
வேறு ஆய உருவாகிச் செவ்வழிநல்பண்
பாடும் மிழலைஆமே. 7

கருப்பம் மிகும் உடல்அடர்த்துக் கால்ஊன்றிக்
கை மறித்துக் கயிலைஎன்னும்
பொருப்பு எடுக்கல் உறும் அரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரல் புனிதர் கோயில்
தருப்பமிகு சலந்தரன்தன் உடல்தடிந்த சக்கரத்தை
வேண்டி ஈண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி விமானம்சேர்
மிழலை ஆமே. 8

செந்தளிர்மா மலரோனும் திருமாலும் ஏனமோடு
அன்னம் ஆகி
அந்தம்அடி காணாதே அவர்ஏத்த
வெளிப்பட்டோன் அமரும் கோயில்
புந்தியின் நால்மறைவழியே புல்பரப்பி
நெய் சமிதை கையில் கொண்டு
வெந்தழலின் வேட்டு உலகில் மிக அளிப்போர்
சேரும்ஊர் மிழலை ஆமே. 9

எண் இறந்த அமணர்களும் இழிதொழில்சேர்
சாக்கியரும் என்றும் தன்னை
நண் அரிய வகை மயக்கித் தன் அடியார்க்கு
அருள் புரியும் நாதன் கோயில்
பண் அமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசை கேட்டு
விண்ணவர்கள் வியப்புஎய்தி விமானத்தோடும்
இழியும் மிழலை ஆமே. 10

மின் இயலும் மணி மாடம் மிடை வீழி
மிழலையான் விரை ஆர் பாதம்
சென்னிமிசைக் கொண்டு ஒழுகும் சிரபுரக் கோன்
செழுமறைகள் பயிலும் நாவன்
பன்னிய சீர் மிகு ஞானசம்பந்தன்
பரிந்து உரைத்த பத்தும் ஏத்தி
இன் இசையால் பாடவல்லார் இரு நிலத்தில்
ஈசன் எனும் இயல்பினோரே. 11

திருச்சிற்றம்பலம்

214. திருவீழிமிழலை

திருமுறை : 3/9 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

கேள்வியர் நாள்தொறும் ஓதும் நல்வேதத்தர் கேடுஇலா
வேள்வி செய் அந்தணர்வேதியர் வீழிமிழலையார்
வாழியர் தோற்றமும் கேடும் வைப்பார் உயிர்கட்கு எலாம்
ஆழியர் தம் அடி போற்றி என்பார்கட்கு அணியரே. 1

கல்லின் நன்பாவை ஓர்பாகத்தர் காதலித்து ஏத்திய
மெல் இனத்தார் பக்கல் மேவினர் வீழிமிழலையார்
நல் இனத்தார் செய்த வேள்வி செகுத்து எழு ஞாயிற்றின்
பல்அனைத்தும் தகர்த்தார் அடியார் பாவ நாசரே. 2

நஞ்சினை உண்டு இருள்கண்டர் பண்டு அந்தகனைச் செற்ற
வெஞ்சின மூவிலைச்சூலத்தர் வீழிமிழலையார்
அஞ்சனக் கண் உமை பங்கினர் கங்கை அங்கு ஆடிய
மஞ்சனச் செஞ்சடையார் என வல்வினை மாயுமே. 3

கலை இலங்கும் மழு கட்டங்கம் கண்டிகை குண்டலம்
விலை இலங்கும் மணி மாடத்தர் வீழிமிழலையார்
தலை இலங்கும் பிறை தாழ்வடம் சூலம் தமருகம்
அலை இலங்கும் புனல் ஏற்றவர்க்கும் அடியார்க்குமே. 4

பிறை உறு செஞ்சடையார் விடையார் பிச்சை நச்சியே
வெறி உறு நாள்பலி தேர்ந்து உழல் வீழிமிழலையார்
முறைமுறையால் இசை பாடுவார் ஆடி முன் தொண்டர்கள்
இறை உறை வாஞ்சியம் அல்லது எப்போதும் என் உள்ளமே. 5

வசை அறு மா தவம் கண்டு வரிசிலை வேடனாய்
விசையனுக்கு அன்று அருள்செய்தவர் வீழிமிழலையார்
இசை வரவிட்டு இயல் கேட்பித்துக் கல்லவடம் இட்டுத்
திசை தொழுது ஆடியும் பாடுவார் சிந்தையுள் சேர்வரே.6

சேடர் விண்ணோர்கட்குத் தேவர் நல் மூஇருதொல் நூலர்
வீடர் முத்தீயர் நால்வேதத்தர் வீழிமிழலையார்
காடு அரங்கா உமை காண அண்டத்தின் இமையோர் தொழ
நாடகம்ஆடியை ஏத்த வல்லார் வினை நாசமே. 7

எடுத்தவன் மாமலைக்கீழ் இராவணன் வீழ்தர
விடுத்து அருள்செய்து இசை கேட்டவர் வீழிமிழலையார்
படுத்து வெங்காலனைப் பால் வழிபாடுசெய் பாலற்குக்
கொடுத்தனர் இன்பம் கொடுப்பர் தொழக் குறைவு இல்லையே. 8

திக்கு அமர் நான்முகன் மால்அண்டம் மண்டலம் தேடிட
மிக்கு அமர் தீத்திரள் ஆயவர் வீழிமிழலையார்
சொக்கம்அது ஆடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும்
நக்கர் தம் நாமம் நமச்சிவாய என்பார் நல்லரே. 9

துற்று அரைஆர் துவர் ஆடையர் துப்பரவு ஒன்று இலா
வெற்று அரையார் அறியா நெறி வீழிமிழலையார்
சொல் தெரியாப்பொருள் சோதிக்கு அப்பால் நின்ற சோதிதான்
மற்று அறியா அடியார்கள் தம் சிந்தையுள் மன்னுமே. 10

வேதியர் கைதொழு வீழிமிழலை விரும்பிய
ஆதியை வாழ்பொழில் காழியுள் ஞானசம்பந்தன் ஆய்ந்து
ஓதிய ஒண்தமிழ் பத்துஇவை உற்று உரைசெய்பவர்
மாது இயல் பங்கன் மலர் அடி சேரவும் வல்லரே. 11

திருச்சிற்றம்பலம்

215. திருவீழிமிழலை

திருமுறை : 3/80 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

சீர் மருவு தேசினொடு தேசம் மலி செல்வ மறையோர்கள் பணியத்
தார் மருவு கொன்றை அணி தாழ்சடையினான் அமர் சயம்கொள் பதிதான்
பார் மருவு பங்கயம் உயர்ந்த வயல் சூழ் பழனம் நீட அருகே
கார் மருவு வெண்களப மாளிகை கவின் பெருகு வீழிநகரே. 1

பட்டமுழவு இட்டபணிலத்தினொடு பல்மறைகள் ஓது பணி நல்
சிட்டர்கள் சயத்துதிகள் செய்ய அருள்செய் தழல் கொள் மேனியவன் ஊர்
மட்டு உலவு செங்கமல வேலிவயல் செந்நெல் வளர் மன்னு பொழில்வாய்
விட்டு உலவு தென்றல் விரை நாறு பதி வேதியர்கள் வீழிநகரே. 2

மண் இழி சுரர்க்கு வளம் மிக்க பதி மற்றும் உள மன் உயிர்களுக்கு
எண் இழிவு இல் இன்பம் நிகழ்வு எய்த எழில்ஆர் பொழில் இலங்கு அறுபதம்
பண் இழிவு இலாத வகை பாட மடமஞ்ஞை நடம்ஆட அழகார்
விண்இழிவிமானம் உடை விண்ணவர்பிரான் மருவு வீழிநகரே. 3

செந்தமிழர் தெய்வமறை நாவர் செழு நன்கலை தெரிந்த அவரோடு
அந்தம் இல குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரன் ஊர்
கொந்து அலர் பொழில் பழன வேலி குளிர் தண்புனல் வளம் பெருகவே
வெந் திறல் விளங்கி வளர் வேதியர் விரும்பு பதி வீழிநகரே. 4

பூதபதி ஆகிய புராணமுனி புண்ணிய நல்மாதை மருவிப்
பேதம்அது இலாத வகை பாகம் மிக வைத்த பெருமானது இடமாம்
மாதவர்கள் அன்ன மறையாளர்கள் வளர்த்த மலி வேள்வி அதனால்
ஏதம்அது இலாத வகை இன்பம் அமர்கின்ற எழில் வீழிநகரே. 5

மண்ணில் மறையோர் மருவு வைதிகமும் மா தவமும் மற்று உலகத்து
எண் இல் பொருள்ஆயவை படைத்த இமையோர்கள் பெருமானது இடமாம்
நண்ணி வரு நாவலர்கள் நாள்தொறும் வளர்க்க நிகழ்கின்ற புகழ்சேர்
விண் உலவு மாளிகை நெருங்கி வளர் நீள்புரிசை வீழிநகரே. 6

மந்திர நல்மாமறையினோடு வளர் வேள்விமிசை மிக்க புகை போய்
அந்தர விசும்பு அணவி அற்புதம் எனப்படரும் ஆழி இருள்வாய்
மந்தர நல் மாளிகை நிலாவு மணி நீடு கதிர்விட்ட ஒளி போய்
வெந்தழல் விளக்கு என விரும்பினர் திருந்து பதி வீழிநகரே. 7

ஆன வலியின் தசமுகன் தலை அரங்க அணி ஆழிவிரலால்
ஊன் அமர் உயர்ந்த குருதிப்புனலில் வீழ்தர உணர்ந்த பரன் ஊர்
தேன் அமர்திருந்து பொழில் செங்கனக மாளிகை திகழ்ந்த மதிளோடு
ஆன திரு உற்று வளர் அந்தணர் நிறைந்த அணி வீழிநகரே.8

ஏனஉரு ஆகி மண் இடந்த இமையோனும் எழில் அன்னஉருவம்
ஆனவனும் ஆதியினோடு அந்தம் அறியாத அழல்மேனியவன் ஊர்
வான் அணவும் மா மதில் மருங்கு அலர் நெருங்கிய வளம் கொள் பொழில்வாய்
வேனல் அமர்வு எய்திட விளங்கு ஒளியின் மிக்க புகழ் வீழிநகரே.9

குண்டுஅமணர்ஆகி ஒரு கோலம் மிகு பீலியொடு குண்டிகை பிடித்து
எண்திசையும் இல்லது ஒரு தெய்வம் உளது என்பர் அது என்ன பொருளாம்
பண்டை அயன் அன்னவர்கள் பாவனை விரும்பு பரன் மேவு பதி சீர்
வெண்தரளவாள்நகை நல் மாதர்கள் விளங்கும் எழில் வீழிநகரே. 10

மத்தம் மலி கொன்றை வளர்வார்சடையில் வைத்த பரன் வீழிநகர் சேர்
வித்தகனை வெங்குருவில் வேதியன் விரும்பு தமிழ்மாலைகள் வல்லார்
சித்திர விமானம் அமர் செல்வம் மலிகின்ற சிவலோகம் மருவி
அத்தகு குணத்தவர்கள் ஆகி அனுபோகமொடு யோகம் அவரதே. 11

திருச்சிற்றம்பலம்

216. திருவீழிமிழலை

திருமுறை : 3/85 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

மட்டு ஒளி விரிதரு மலர் நிறை சுரிகுழல் மடவரல்
பட்டு ஒளி மணி அல்குல் உமை அமை உரு ஒருபாகமாக்
கட்டு ஒளிர்புனலொடு கடிஅரவு உடன்உறை முடிமிசை
விட்டு ஒளி உதிர் பிதிர் மதியவர் பதிவிழிமிழலையே. 1

எண்ணிறவரி வளை நெறிகுழல் எழில் மொழி இளமுலைப்
பெண் உறும் உடலினர் பெருகிய கடல்விடம் மிடறினர்
கண் உறு நுதலினர் கடியது ஒர் விடையினர் கனலினர்
விண் உறு பிறை அணி சடையினர் பதிவிழிமிழலையே.2

மைத் தகு மதர் விழி மலைமகள்உரு ஒரு பாகமா
வைத்தவர் மதகரி உரிவைசெய்தவர் தமை மருவினார்
தெத்தென இசை முரல் சரிதையர் திகழ்தரும் அரவினர்
வித்தக நகுதலை உடையவர் இடம் விழிமிழலையே. 3

செவ்அழல் என நனி பெருகிய உருவினர் செறிதரு
கவ்வு அழல்அரவினர் கதிர் முதிர் மழுவினர் தொழு இலா
முவ்அழல் நிசிசரர் விறல்அவை அழிதர முது மதில்
வெவ்அழல் கொள நனி முனிபவர் பதிவிழிமிழலையே.4

பைங்கணது ஒரு பெரு மழலை வெள்ஏற்றினர் பலி எனா
எங்கணும் உழிதர்வர் இமையவர் தொழுது எழும் இயல்பினர்
அங்கணர் அமரர்கள் அடிஇணை தொழுது எழ ஆரமா
வெங் கண அரவினர் உறைதரு பதிவிழிமிழலையே. 5

பொன் அன புரிதரு சடையினர் பொடி அணி வடிவினர்
உன்னினர் வினைஅவை கள்ளதலை மருவிய ஒருவனார்
தென்னென இசை முரல் சரிதையர் திகழ்தரும் மார்பினில்
மின் என மிளிர்வது ஓர் அரவினர் பதிவிழிமிழலையே. 6

அக்கினொடு அரவு அரை அணிதிகழ் ஒளியது ஓர் ஆமை பூண்டு
இக்கு உக மலி தலை கலன் என இடு பலி ஏகுவர்
கொக்கரை குழல் முழ விழவொடும் இசைவது ஓர் சரிதையர்
மிக்கவர் உறைவது விரை கமழ் பொழில் விழிமிழலையே.7

பாதம் ஓர்விரல் உற மலை அடர் பலதனை நெரிதரப்
பூதமொடு அடியவர் புனை கழல் தொழுது எழு புகழினர்
ஓதமொடு ஒலிதிரை படு கடல் விடம் உடை மிடறினர்
வேதமொடு உறு தொழில் மதியவர் பதிவிழிமிழலையே.8

நீர் அணி மலர்மிசை உறைபவன் நிறைகடல் உறு துயில்
நாரணன் என இவர்இருவரும் நறுமலர்அடி முடி
ஓர் உணர்வினர் செலல்உறல் அரும் உருவினொடு ஒளி திகழ்
வீர அணர் உறைவது வெறி கமழ் பொழில் விழிமிழலையே. 9

இச்சையர் இனிது என இடு பலி படுதலை மகிழ்வது ஓர்
பிச்சையர் பெருமையை இறைபொழுது அறிவு என உணர்விலர்
மொச்சைய அமணரும் முடை படு துகிலரும் அழிவது ஓர்
விச்சையர் உறைவது விரை கமழ் பொழில் விழிமிழலையே. 10

உன்னிய அருமறை ஒலியினை முறை மிகு பாடல்செய்
இன்இசையவர் உறை எழில் திகழ் பொழில் விழிமிழலையை
மன்னிய புகலியுள் ஞானசம்பந்தன வண்தமிழ்
சொன்னவர் துயர் இலர் வியன்உலகு உறு கதி பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

217. திருவீழிமிழலை

திருமுறை : 1/92 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசு இல் மிழலையீர், ஏசல் இல்லையே. 1

இறைவர் ஆயினீர், மறை கொள் மிழலையீர்
கறை கொள் காசினை முறைமை நல்குமே. 2

செய்யமேனியீர், மெய் கொள் மிழலையீர்
பை கொள் அரவினீர், உய்ய நல்குமே. 3

நீறு பூசினீர், ஏறுஅது ஏறினீர்
கூறு மிழலையீர், பேறும் அருளுமே. 4

காமன் வேவ ஓர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேமம் நல்குமே. 5

பிணி கொள் சடையினீர், மணி கொள் மிடறினீர்
அணி கொள் மிழலையீர், பணிகொண்டு அருளுமே. 6

மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

அரக்கன் நெரிதர, இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

அயனும் மாலுமாய், முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர்,பயனும் அருளுமே. 9

பறிகொள் தலையினார், அறிவது அறிகிலார்
வெறி கொள் மிழலையீர், பிறிவுஅது அரியதே. 10

காழி மா நகர், வாழி சம்பந்தன்
வீழிமிழலைமேல், தாழும் மொழிகளே. 11

பதிக வரலாறு :

ஆளுடைய பிள்ளையார் அப்பர்மூர்த்தியோடு தம் பெருமானைப் போற்றித் திருவீழிமிழலையில் இருக்கும்போது மழையின்மையினாலும், காவிரிப் பெருக்கின்மையினாலும் பஞ்சமுண்டாகி உயிர்கள் பசிநோயால் மெலிந்து வருத்தமுறச் சிவனடியாரும் வருந்தினர். அதுகண்ட நாயன்மார்கள் கண்ணுதலான் திருநீற்றுச்சார்வினோர்க்குங் கவலை வருமோவென்று கருத்துட்கொண்டு துயிலுமன்றிரவில் இறைவன் அவர் கனவில் தோன்றி, 'அன்பர்களே, காலமாறுதலினால் நீங்கள் கவல்வீரல்லீரெனினும் உங்களை உற்ற அடியார் வாட்டந் தீர்க்கும் பொருட்டுப் பஞ்சம் நீங்குமாறும் திருக்கோயிலில் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் நாடோறும் ஒவ்வொர் காசு உங்களுக்குத் தருகின்றோம்' என்றருளி மறைந்தருளினார். பிள்ளையார் மற்றைநாட் காலையில் அப்பர்மூர்த்தியோடுந் திருக்காயிலை அடைந்து கிழக்குப் பீடத்துக் காசு இருத்தலைக் கண்டு வணங்கி எழுந்து நாடோறுஞ் சிவனடியார் வந்து அமுது செய்யக்கடவர் என்று இருபோதும் பறைசாற்றித் தெரிவித்துத்தந் தம் மடத்தில் வரும் அடியார்களெல்லோரையுங் கறி பால் தயிர் நெய்யோடும் உண்பித்து வந்தார். நாவின் மன்னரும் தமது திருமடத்தில் அவ்வாறே செய்து வந்தார். அப்போது பிள்ளையார் வாகீசரது திருமடத்தில் அடியவர்கள் காலம்பெற அமுது செய்விக்கப் பெறுதலையும் அவ்வாறாதல் காலந்தாழ்த்துச் செய்தமைக்கப் பெறுதலையும் அவ்வாறாதல் தாம் இறைவனிடம் பெறுங்காசு வட்டங்கொடுத்து மாற்றப் பெறவேண்டி இருத்தலினால் ஆதலையுமறிந்து மொழிவேந்தர் கைத்தொண்டு செய்தலினால் வாசியில்லாக்காசு பெறுதலை யுன்னித் தாமும் இறைவனைப் பாடியவ்வாறு பெறுமாறு திருக்கோயிலை யடைந்து 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்னும் இப்பதிகம் பாடி அந்நாள் தொடங்கி வருநாளெல்லாம் வாசியில்லாக் காசுபெற்று மகிழ்ந்து தமது திருமடத்திலும் காலம்பெற உண்பித்தார். சிலநாளில் பஞ்சம் நீங்கி உலக முய்ந்தது. இவ்விருபெருங்குரவரும் அந்நாளில் திருவீழிமிழலையிற் கூடிய கூட்டத்தினாய்த்திக் குவலயமென்ப பெரியோர்.

திருச்சிற்றம்பலம்

218. திருவீழிமிழலை

திருமுறை : 3/98 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

வெண்மதி தவழ் மதில் மிழலை உளீர் சடை
ஒண்மதி அணி உடையீரே
ஒண்மதி அணி உடையீர் உமை உணர்பவர்
கண் மதி மிகுவது கடனே. 1

விதிவழி மறையவர் மிழலை உளீர் நடம்
சதிவழி வருவது ஓர் சதிரே
சதிவழி வருவது ஓர் சதிருடையீர் உமை
அதிகுணர் புகழ்வதும் அழகே. 2

விரை மலி பொழில் அணி மிழலை உளீர் ஒரு
வரைமிசை உறைவதும் வலதே
வரைமிசை உறைவது ஓர் வலது உடையீர் உமை
உரைசெயும்அவை மறைஒலியே. 3

விட்டு எழில் பெறு புகழ் மிழலை உளீர் கையில்
இட்டு எழில் பெறுகிறது எரியே
இட்டு எழில் பெறுகிறது எரி உடையீர் புரம்
அட்டது வரைசிலையாலே. 4

வேல் நிகர் கண்ணியர் மிழலை உளீர் நல
பானிகர் உரு உடையீரே
பானிகர் உரு உடையீர் உமதுஉடன் உமை
தான் மிக உறைவது தவமே. 5

விரை மலி பொழில் அணி மிழலை உளீர் செனி
நிரை உற அணிவது நெறியே
நிரை உற அணிவது ஓர் நெறி உடையீர் உமது
அரை உற அணிவன அரவே. 6

விசை உறு புனல் வயல் மிழலை உளீர் அரவு
அசைவுஉற அணிவுடையீரே
அசைவுஉற அணிவுடையீர் உமை அறிபவர்
நசை உறும் நாவினர்தாமே. 7

விலங்கல்ஒண்மதில் அணி மிழலை உளீர் அன்று
இலங்கை மன் இடர் கெடுத்தீரே
இலங்கை மன் இடர் கெடுத்தீர் உமை ஏத்துவார்
புலன்களை முனிவது பொருளே. 8

வெற்பு அமர் பொழில் அணி மிழலை உளீர் உமை
அற்புதன் அயன் அறியானே
அற்புதன் அயன் அறியா வகை நின்றவன்
நற்பதம் அறிவது நயமே. 9

வித்தக மறையவர் மிழலைஉளீர் அன்று
புத்தரொடு அமண் அழித்தீரே
புத்தரொடு அமண் அழித்தீர் உமைப் போற்றுவார்
பத்திசெய் மனம் உடையவரே. 10

விண் பயில் பொழில் அணி மிழலையுள் ஈசனைச்
சண்பையுள் ஞானசம்பந்தன்
சண்பையுள் ஞானசம்பந்தன தமிழ்இவை
ஒண் பொருள் உணர்வதும் உணர்வே. 11

திருச்சிற்றம்பலம்

219. திருவீழிமிழலை

திருமுறை : 3/111 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

வேலின் நேர்தரு கண்ணினாள்உமை பங்கன் அங்கணன் மிழலை மா நகர்
ஆலநீழலின் மேவினான் அடிக்கு அன்பர் துன்புஇலரே.1

விளங்கும் நால்மறை வல்ல வேதியர் மல்கு சீர்வளர் மிழலையான் அடி
உளம்கொள்வார்தமை உளம்கொள் வார் வினை ஒல்லை ஆசு அறுமே. 2

விசையினோடு எழு பசையும் நஞ்சினை அசைவு செய்தவன் மிழலை மா நகர்
இசையும் ஈசனை நசையின் மேவினால் மிசைசெயா வினையே. 3

வென்றி சேர் கொடி மூடு மா மதில் மிழலை மா நகர் மேவி நாள்தொறும்
நின்ற ஆதிதன் அடி நினைப்பவர் துன்பம் ஒன்று இலரே.4

போதகம்தனை உரிசெய்தோன் புயல் நேர்வரும் பொழில்மிழலை மா நகர்
ஆதரம் செய்த அடிகள் பாதம் அலால் ஓர் பற்று இலமே.5

தக்கன் வேள்வியைச் சாடினார் மணி தொக்க மாளிகை மிழலை மேவிய
நக்கனார் அடி தொழுவர் மேல் வினை நாள்தொறும் கெடுமே. 6

போர் அணாவு முப்புரம் எரித்தவன் பொழில்கள் சூழ்தரு மிழலை மா நகர்ச்
சேரும் ஈசனைச் சிந்தைசெய்பவர் தீவினை கெடுமே. 7

இரக்கம்இல் தொழில் அரக்கனார் உடல் நெருக்கினான் மிகு மிழலையான் அடி
சிரக் கொள் பூ என ஒருக்கினார் புகழ் பரக்கும் நீள் புவியே. 8

துன்று பூமகன் பன்றிஆனவன் ஒன்றும் ஓர்கிலா மிழலையான் அடி
சென்று பூம்புனல் நின்று தூவினார் நன்று சேர்பவரே.9

புத்தர் கைச் சமண்பித்தர் பொய்க் குவை வைத்த வித்தகன் மிழலை மா நகர்
சித்தம்வைத்தவர் இத் தலத்தினுள் மெய்த் தவத்தவரே.10

சந்தம் ஆர் பொழில் மிழலை ஈசனைச் சண்பை ஞானசம்பந்தன் வாய் நவில்
பந்தம் ஆர் தமிழ்பத்தும் வல்லவர் பத்தர் ஆகுவரே. 11

220. திருவீழிமிழலை

திருமுறை : 3/116 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம்

துன்று கொன்றை நம் சடையதே தூய கண்டம் நஞ்சு அடையதே
கன்றின்மான் இடக் கையதே கல்லின்மான் இடக்கை அதே
என்றும் ஏறுவது இடவமே என்இடைப் பலி இடவமே
நின்றதும் மிழலையுள்ளுமே நீர் எனைச் சிறிதும் உள்ளுமே. 1

ஓதி வாயதும் மறைகளே உரைப்பதும் பலமறைகளே
பாதி கொண்டதும் மாதையே பணிகின்றேன் மிகும் மாதையே
காது சேர் கனம் குழையரே காதலால் கனம் குழையரே
வீதிவாய் மிகும் வேதியா மிழலை மேவிய வேதியா. 2

பாடுகின்ற பண் டாரமே பத்தர் அன்ன பண்டாரமே
சூடுகின்றது மத்தமே தொழுத என்னை உன்மத்தமே
நீடு செய்வதும் தக்கதே நின் அரைத் திகழ்ந்து அக்கு அதே
நாடு சேர் மிழலை ஊருமே நாகம் நஞ்சு அழலை ஊருமே. 3

கட்டுகின்ற கழல் நாகமே காய்ந்ததும் மதனன் ஆகமே
இட்டம் ஆவது இசை பாடலே இசைந்த நூலின் அமர்பு ஆடலே
கொட்டுவான் முழவம் வாணனே குலாய சீர் மிழலைவாணனே
நட்டம்ஆடுவது சந்தியே நான் உய்தற்கு இரவு சந்தியே. 4

ஒவுஇலாது இடும் கரணமே உன்னும் என்னுடைக் கரணமே
ஏவு சேர்வும் நின் ஆணையே அருளில் நின்ன பொற்று ஆணையே
பாவியாது உரை மெய் இலே பயின்ற நின் அடி மெய்யிலே
மேவினான் விறல் கண்ணனே மிழலை மேய முக்கண்ணணே. 5

வாய்ந்த மேனி எரிவண்ணமே மகிழ்ந்து பாடுவது வண்ணமே
காய்ந்து வீழ்ந்தவன் காலனே கடு நடம்செயும் காலனே
போந்தது எம்மிடை இரவிலே உம்இடைக் கள்வம் இரவிலே
ஏய்ந்ததும் மிழலைஎன்பதே விரும்பியே அணிவது என்பதே. 6

அப்பு இயன்ற கண் அயனுமே அமரர் கோமகனும் அயனுமே
ஒப்பு இல் இன்று அமரர் தருவதே ஒண் கையால் அமரர் தருவதே
மெய்ப் பயின்றவர் இருக்கையே மிழலைஊர் உமது இருக்கையே
செப்புமின் எருது மேயுமே சேர்வு உமக்கு எருதும் ஏயுமே. 7

தானவக்குலம் விளக்கியே தாரகைச் செலவு இளக்கிய
வான் அடர்த்த கயிலாயமே வந்து மேவு கயிலாயமே
தான் எடுத்த வல்அரக்கனே தடமுடித்திரள் அரக்கனே
மேல் நடைச்செல இருப்பனே மிழலை நன் பதி விருப்பனே. 8

காயம் மிக்கது ஒரு பன்றியே கலந்த நின்ன உருபு அன்றியே
ஏய இப் புவி மயங்கவே இருவர்தாம் மனம் மயங்கவே
தூய மெய்த்திரள் அகண்டனே தோன்றி நின்ற மணிகண்டனே
மேய இத் துயில் விலக்கணா மிழலை மேவிய விலக்கணா. 9

கஞ்சியைக் குலவு கையரே கலக்கம் ஆர் அமணர்கையரே
அஞ்ச வாதில்அருள்செய்யநீ அணைந்திடும் பரிசு செய்ய நீ
வஞ்சனே வரவும் வல்லையே மதித்து எனைச் சிறிதும் வல்லையே
வெஞ்சல் இன்றி வரு வித்தகா மிழலை சேரும் விறல் வித்தகா.10

மேய செஞ்சடையின் அப்பனே மிழலை மேவிய என் அப்பனே
ஏயுமா செய விருப்பனே இசைந்தவா செய விருப்பனே
காய வர்க்க சம்பந்தனே காழி ஞானசம்பந்தனே
வாய் உரைத்த தமிழ்ப்பத்துமே வல்லவர்க்கும் இவை பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

221. திருவீழிமிழலை

திருமுறை : 3/119 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம்
பூசு சாந்தம் பொடி நீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டம்
காளியைக் குணம் செய் கூத்து உடையோன்
அள்ளல் கார்ஆமை அகடு வான்மதியம்
ஏய்க்க முள்தாழைகள் ஆனை
வெள்ளைக்கொம்பு ஈனும் விரி பொழில் வீழி
மிழலையான் என வினை கெடுமே. 1

இசைந்தஆறு அடியார் இடு துவல் வானோர்
இழுகு சந்தனத்து இளங் கமலப்
பசும்பொன் வாசிகைமேல் பரப்புவாய் கரப்பாய்
பத்தி செய்யாதவர் பக்கல்
அசும்பு பாய் கழனி அலர் கயன் முதலோடு
அடுத்து அரிந்து எடுத்த வான் சும்மை
விசும்பு தூர்ப்பன போல் விம்மிய வீழி
மிழலையான் என வினை கெடுமே. 2

நிருத்தன் ஆறுஅங்கன் நீற்றன் நால்மறையன்
நீலம்ஆர் மிடற்றன் நெற்றிக்கண்
ஒருத்தன் மற்று எல்லாஉயிர்கட்கும் உயிராய்
உளன் இலன் கேடுஇலி உமைகோன்
திருத்தம்ஆய் நாளும் ஆடு நீர்ப் பொய்கை
சிறியவர் அறிவினின் மிக்க
விருத்தரை அடி வீழ்ந்து இடம் புகும் வீழி
மிழலையான் என வினை கெடுமே. 3

தாங்க அருங்காலம் தவிர வந்து இருவர்
தம்மொடும் கூடினார் அங்கம்
பாங்கினால் தரித்துப் பண்டு போல் எல்லாம்
பண்ணிய கண்நுதல் பரமர்
தேம் கொள்பூங் கமுகு தெங்கு இளங் கொடி மாச்
செண்பகம் வண் பலா இலுப்பை
வேங்கை பூ மகிழால் வெயில் புகா வீழி
மிழலையான் என வினை கெடுமே. 4

கூசு மா மயானம் கோயில் வாயில்கண்
குடவயிற்றன சில பூதம்
பூசு மா சாந்தம் பூதி மெல்லோதி
பாதி நல்பொங்கு அரவு அரையோன்
வாசமாம் புன்னை மௌவல் செங்கழுநீர்
மலர் அணைந்து எழுந்த வான்தென்றல்
வீசு மாம்பொழில் தேன் துவலை சேர் வீழி
மிழலையான் என வினை கெடுமே. 5

பாதி ஓர் மாதர் மாலும் ஓர் பாகர்
பங்கயத்து அயனும் ஓர் பாலர்
ஆதி ஆய் நடு ஆய் அந்தம் ஆய் நின்ற
அடிகளார் அமரர்கட்கு அமரர்
போது சேர் சென்னிப் புரூரவாப் பணிசெய்
பூசுரர் பூமகன் அனைய
வேதியர் வேதத்து ஒலி அறா வீழி
மிழலையான் என வினை கெடுமே. 6

தன் தவம் பெரிய சலந்தரன் உடலம்
தடிந்த சக்கரம் எனக்கு அருள் என்று
அன்று அரி வழிபட்டு இழிச்சிய விமானத்து
இறையவன் பிறை அணி சடையன்
நின்ற நாள் காலை இருந்த நாள் மாலை
கிடந்த மண் மேல் வரு கலியை
வென்ற வேதியர்கள் விழா அறா வீழி
மிழலையான் என வினை கெடுமே. 7

கடுத்த வாள் அரக்கன் கயிலை அன்று எடுத்த
கரம் உரம் சிரம் நெரிந்து அலற
அடர்த்தது ஓர்விரலால் அஞ்சுஎழுத்து உரைக்க
அருளினன் தட மிகு நெடுவாள்
படித்த நால்மறை கேட்டு இருந்த பைங்கிளிகள்
பதங்களை ஓத பாடு இருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
மிழலையான் என வினை கெடுமே. 8

அளவிடல் உற்ற அயனொடு மாலும்
அண்டம் மண் கிண்டியும் காணா
முளை எரி ஆய மூர்த்தியைத் தீர்த்த
முக்கண் எம் முதல்வனை முத்தைத்
தளை அவிழ் கமலத் தவிசின்மேல் அன்னம்
தன் இளம்பெடையொடும் புல்கி
விளை கதிர்க்கவரி வீச வீற்றிருக்கும்
மிழலையான் என வினை கெடுமே. 9

கஞ்சிப் போது உடையார் கையில் கோசாரக்
கலதிகள் கட்டுரை விட்டு
அஞ்சித் தேவு இரிய எழுந்த நஞ்சு அதனை
உண்டு அமரர்க்கு அமுது அருளி
இஞ்சிக்கே கதலிக்கனி விழக் கமுகின்
குலையொடும் பழம் விழத் தெங்கின்
மிஞ்சுக்கே மஞ்சு சேர் பொழில் வீழி
மிழலையான் என வினை கெடுமே. 10

வேந்தர் வந்து இறைஞ்ச வேதியர் வீழி
மிழலையுள் விண்இழிவிமானத்து
ஏய்ந்த தன் தேவியோடு உறைகின்ற
ஈசனை எம்பெருமானைத்
தோய்ந்த நீர்த் தோணிபுரத்து உறை மறையோன்
தூ மொழி ஞானசம்பந்தன்
வாய்ந்த பாமாலை வாய் நவில்வாரை
வானவர் வழிபடுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

222. திருப்பேணுபெருந்துறை

திருமுறை : 1/42 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : சிவானந்தர் இறைவியார் : மலைஅரசி

பைம் மா நாகம் பல்மலர்க்கொன்றை
பன்றிவெண்கொம்புஒன்று பூண்டு
செம்மாந்து ஐயம் பெய்க என்று சொல்லிச்
செய் தொழில் பேணியோர் செல்வர்
அம் மான் நோக்கிய அந்தளிர்மேனி
அரிவை ஓர்பாகம் அமர்ந்த
பெம்மான் நல்கிய தொல்புகழாளர்
பேணு பெருந்துறையாரே. 1

மூவரும்ஆகி இருவரும்ஆகி
முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்
பல்கணம் நின்று பணியச்
சாவம்அது ஆகிய மால்வரை கொண்டு
தண் மதில்மூன்றும் எரித்த
தேவர்கள்தேவர் எம்பெருமானார்
தீது இல் பெருந்துறையாரே. 2

செய் பூங்கொன்றை கூவிளமாலை
சென்னியுள் சேர் புனல் சேர்த்திக்
கொய் பூங்கோதை மாதுஉமை பாகம்
கூடி ஓர் பீடு உடை வேடர்
கை போல் நான்ற கனிகுலைவாழை
காய்குலையில்கமுகு ஈனப்
பெய் பூம்பாளை பாய்ந்து இழிதேறல்
பில்கு பெருந்துறையாரே. 3

நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவும் ஆகி ஓர் ஐந்து
புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்ந்த
புண்ணியர் வெண்பொடிப் பூசி
நலனொடு தீங்கும் தான் அலது இன்றி
நன்கு எழு சிந்தையர் ஆகி
மலனொடு மாசும் இல்லவர் வாழும்
மல்கு பெருந்துறையாரே. 4

பணிவாய் உள்ள நன்கு எழு நாவின்
பத்தர்கள் பத்திமை செய்யத்
துணியார் தங்கள் உள்ளம் இலாத
சுமடர்கள் சோதிப்பு அரியார்
அணியார் நீலம் ஆகிய கண்டர்
அரிசில் உரிஞ்சு கரைமேல்
மணி வாய் நீலம்வாய் கமழ் தேறல்
மல்கு பெருந்துறையாரே. 5

எண்ணார் தங்கள் மும்மதில் வேவ
ஏவலம் காட்டிய எந்தை
விண்ணோர் சாரத் தன் அருள் செய்த
வித்தகர் வேத முதல்வர்
பண்ணார பாடல் ஆடல் அறாத
பசுபதி ஈசனோர் பாகம்
பெண்ணாண் ஆய வார்சடை யண்ணல்
பேணு பெருந்துறையாரே. 6

விழையார் உள்ளம் நன்கு எழு நாவில்
வினைகெட வேதம்ஆறு அங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய ஆற்றால்
பெரியோர் ஏத்தும் பெருமான்
தழையார் மாவின் தாழ் கனிஉந்தித்
தண் அரிசில் புடைசூழ்ந்து
குழையார் சோலை மெல்நடை அன்னம்
கூடு பெருந்துறையாரே. 7

பொன்னம் கானல் வெண்திரை சூழ்ந்த
பொருகடல் வேலி இலங்கை
மன்னன் ஒல்க மால்வரை ஊன்றி
மா முரண் ஆகமும் தோளும்
முன் அவை வாட்டிப் பின் அருள்செய்த
மூவிலை வேல் உடை மூர்த்தி
அன்னம் கன்னிப்பேடையொடு ஆடி
அணவு பெருந்துறையாரே. 8

புள் வாய் போழ்ந்து மா நிலம் கீண்ட
பொருகடல்வண்ணனும் பூவின்
உள் வாய் அல்லிமேல் உறைவானும்
உணர்வு அரியான் உமைகேள்வன்
முள் வாய் தாளின் தாமரை மொட்டின்
முகம் மலரக் கயல் பாயக்
கள் வாய் நீலம் கண்மலர் ஏய்க்கும்
காமர் பெருந்துறையாரே. 9

குண்டும் தேரும் கூறை களைந்தும்
கூப்பிலர் செப்பிலர் ஆகி
மிண்டும் மிண்டர் மிண்டுஅவை கண்டு
மிண்டுசெயாது விரும்பும்
தண்டும் பாம்பும் வெண்தலைசூலம்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டும் தேனும் வாழ் பொழில் சோலை
மல்கு பெருந்துறையாரே. 10

கடைஆர் மாடம் நன்கு எழுவீதிக்
கழுமலஊரன் கலந்து
நடை ஆர் இன்சொல் ஞானசம்பந்தன்
நல்ல பெருந்துறை மேய
படை ஆர் சூலம்வல்லவன் பாதம்
பரவிய பத்துஇவை வல்லார்
உடையார் ஆகி உள்ளமும் ஒன்றி
உலகினில் மன்னுவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

223. திருநறையூர்ச்சித்தீச்சரம்

திருமுறை : 1/29 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : சித்தநாதேசுவரர் இறைவியார் : அழகாம்பிகை

ஊர் உலாவு பலி கொண்டு உலகு ஏத்த
நீர் உலாவும் நிமிர்புன் சடைஅண்ணல்
சீர் உலாவும் மறையரோர் நறையூரில்
சேரும் சித்தீச்சரம் சென்று அடை நெஞ்சே. 1

காடும் நாடும் கலக்கப் பலி நண்ணி
ஓடு கங்கை ஒளிர்புன்சடைதாழ
வீடும் ஆக மறையோர் நறையூரில்
நீடும் சித்தீச்சரமே நினைநெஞ்சே. 2

கல்வியாளர் கனகம்அழல்மேனி
புல்கு கங்கை புரிபுன்சடையான் ஊர்
மல்கு திங்கள் பொழில் சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச்சரம் சென்று அடை செஞ்சே. 3

நீட வல்ல நிமிர்புன்சடை தாழ
ஆட வல்ல அடிகள் இடமாகும்
பாடல் வண்டு பயிலும் நறையூரில்
சேடர் சித்தீச்சரமே தெளி நெஞ்சே. 4

உம்பராலும் உலகின் அவராலும்
தம் பெருமை அளத்தற்கு அரியான் ஊர்
நம்பு உலாவும் மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச்சரமே தெளிநெஞ்சே. 5

கூர் உலாவு படையான் விடைஏறி
போர் உலாவு மழுவான் அனல்ஆடி
பேர் உலாவு பெருமான் நறையூரில்
சேரும் சித்தீச்சரமே இடமாமே. 6

அன்றி நின்ற அவுணர் புரம் எய்த
வென்றி வில்லி விமலன் விரும்பும் ஊர்
மன்றில் வாசம் மணம் ஆர் நறையூரில்
சென்று சித்தீச்சரமே தெளி நெஞ்சே. 7

அரக்கன் ஆண்மை அழிய வரைதன்னால்
நெருக்க ஊன்றும் விரலான் விரும்பும் ஊர்
பரக்கும் கீர்த்தி உடையார் நறையூரில்
திருக் கொள் சித்தீச்சரமே தெளி நெஞ்சே. 8

ஆழியானும் அலரின் உறைவானும்
ஊழி நாடி உணரார் திரிந்து மேல்
சூழு நேட எரி ஆம் ஒருவன் சீர்
நீழல் சித்தீச்சரமே நினைநெஞ்சே. 9

மெய்யின் மாசர் விரிநுண்துகில் இலார்
கையில் உண்டு கழறும் உரை கொள்ளேல்
உய்ய வேண்டில் இறைவன் நறையூரில்
செய்யும் சித்தீச்சரமே தவமாமே. 10

மெய்த்து உலாவும் மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச்சரத்தை உயர் காழி
அத்தன்பாதம் அணி ஞானசம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

224. திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருமுறை : 1/71 பண் : தக்கேசி இராகம் : காம்போதி
இறைவர் : சித்தநாதேசுவரர் இறைவியார் : அழகாம்பிகை

பிறை கொள் சடையர் புலியின் உரியர் பேழ்வாய் நாகத்தர்
கறை கொள் கண்டர் கபாலம் ஏந்தும் கையர் கங்காளர்
மறை கொள் கீதம் பாடச் சேடர் மனையில் மகிழ்வு எய்திச்
சிறை கொள் வண்டு தேன் ஆர் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.1

பொங்கு ஆர் சடையர் புனலர் அனலர் பூதம் பாடவே
தம் காதலியும் தாமும் உடன் ஆய்த் தனி ஓர் விடை ஏறிக்
கொங்கு ஆர் கொன்றை வன்னி மத்தம் சூடிக் குளிர் பொய்கைச்
செங்கால் அனமும் பெடையும் சேரும் சித்தீச் சரத்தாரே. 2

முடி கொள் சடையர் முளைவெண்மதியர் மூவா மேனிமேல்
பொடி கொள் நூலர் புலியின் அதளர் புரிபுன்சடை தாழக்
கடி கொள் சோலை வயல் சூழ் மடுவில் கயலார் இனம் பாயக்
கொடி கொள் மாடக்குழாம் ஆர் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.3

பின் தாழ் சடைமேல் நகுவெண் தலையர் பிரமன் தலைஏந்தி
மின் தாழ் உருவில் சங்கு ஆர் குழைதான் மிளிரும் ஒருகாதர்
பொன் தாழ் கொன்றை செருந்தி புன்னை பொருந்து செண்பகம்
சென்றார் செல்வத் திருவார் நறையூர் சித்தீச் சரத்தாரே. 4

நீர் ஆர் முடியர் கறை கொள் கண்டர் மறைகள் நிறை நாவர்
பாரார் புகழால் பத்தர் சித்தர் பாடி ஆடவே
தேரார் வீதி முழவார் விழவின் ஒலியும் திசை செல்லச்
சீரார் கோலம் பொலியும் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.5

நீண்ட சடையர் நிரை கொள் கொன்றை விரை கொள் மலர் மாலை
தூண்டு சுடர் பொன்ஒளி கொள் மேனிப் பவளத்துஎழிலார் வந்து
ஈண்டு மாடம் எழிலார் சோலை இலங்கு கோபுரம்
தீண்டு மதியம் திகழும் நறையூர்ச் சித்திச் சரத்தாரே. 6

குழல் ஆர் சடையர் கொக்கின் இறகர் கோலம் நிறமத்தம்
தழல் ஆர் மேனித் தவளநீற்றர் சரி கோவணக்கீளர்
எழில் ஆர் நாகம் புலியின்உடை மேல் இசைத்து விடைஏறிக்
கழல் ஆர் சிலம்பு புலம்ப வருவார் சித்தீச் சரத்தாரே. 7

கரை ஆர் கடல் சூழ் இலங்கை மன்னன் கயிலை மலை தன்னை
வரை ஆர் தோளால் எடுக்க முடிகள் நெரித்து மனம்ஒன்றி
உரை ஆர் கீதம் பாட நல்ல உலப்பில் அருள் செய்தார்
திரை ஆர் புனல்சூழ் செல்வ நறையூர்ச் சித்தீச் சரத்தாரே. 8

நெடியான் பிரமன் நேடிக் காணார் நினைப்பார் மனத்தாராய்
அடியார் அவரும் அருமா மறையும் அண்டத்து அமரரும்
முடியால் வணங்கிக் குணங்கள் ஏத்தி முதல்வா அருள் என்னச்
செடியார் செந்நெல் திகழும் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.9

நின்று உண் சமணர் இருந்து உண் தேரர் நீண்ட போர்வையார்
ஒன்றும் உணரா ஊமர் வாயில் உரை கேட்டு உழல்வீர்காள்
கன்று உண் பயப்பால் உண்ண முலையில் கபாலம் அயல் பொழியச்
சென்று உண்டு ஆர்ந்து சேரும் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே.10

குயில் ஆர் கோல மாதவிகள் குளிர்பூஞ்சுரபுன்னை
செயில் ஆர் பொய்கை சேரும் நறையூர்ச் சித்தீச் சரத்தாரை
மயில் ஆர் சோலை சூழ்ந்த காழி மல்கு சம்பந்தன்
பயில்வார்க்கு இனிய பாடல் வல்லார் பாவம் நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

225. திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருமுறை : 2/87 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : சித்தநாதர் இறைவியார் : அழகம்மை

நேரியன் ஆகும்அல்லன் ஒருபாலும் மேனி
அரியான்முன் ஆய ஒளியான்
நீர்இயல் காலும்ஆகி நிறைவானும் ஆகி
உறுதீயும் ஆய நிமலன்
ஊர்இயல் பிச்சைபேணி உலகங்கள் ஏத்த
நல்கஉண்டு பண்டு சுடலை
நாரிஓர் பாகமாக நடம்ஆட வல்ல
நறையூரின் நம்பன் அவனே. 1

இடமயில் அன்னசாயல் மடமங்கை தன்கை
எதிர்நாணி பூண வரையில்
கடும்அயில் அம்புகோத்து எயில் செற்றுஉகந்து
அமரர்க்கு அளித்த தலைவன்
மடமயில் ஊர்திதாதை எனநின்று தொண்டர்
மனம்நின்ற மைந்தன் மருவும்
நடம்மயில் ஆலநீடு குயில்கூவு சோலை
நறையூரின் நம்பன் அவனே. 2

சூடகம் முன்கைமங்கை ஒருபாகம் ஆக
அருள் காரணங்கள் வருவான்
ஈடுஅகம் ஆனநோக்கி இடுபிச்சை கொண்டு
படுபிச்சன் என்று பரவத்
தோடகமாய் ஒர் காதும் ஒருகாது இலங்கு
குழைதாழ வேழ உரியன்
நாடகமாக ஆடி மடவார்கள் பாடும்
நறையூரின் நம்பன் அவனே. 3

சாயல்நல் மாதொர்பாகன் விதியாய சோதி
கதியாக நின்ற கடவுள்
ஆய்அகம் என்னுள்வந்த அருள்ஆய செல்வன்
இருள்ஆய கண்டன் அவனித்
தாய்என நின்றுஉகந்த தலைவன் விரும்பு
மலையின்கண் வந்து தொழுவார்
நாயகன் என்றுஇறைஞ்சி மறையோர்கள் பேணும்
நறையூரின் நம்பன் அவனே. 4

நெதிபடு மெய்எம்ஐயன் நிறைசோலை சுற்றி
நிகழ்அம்பலத்தின் நடுவே
அதிர்பட ஆடவல்ல அமரர்க்கு ஒருத்தன்
எமர்சுற்றம் ஆய இறைவன்
மதிபடு சென்னிமன்னு சடைதாழ வந்து
விடைஏறி இல்பலி கொள்வான்
நதிபட உந்திவந்து வயல்வாளை பாயும்
நறையூரின் நம்பன் அவனே. 5

கணிகைஒர் சென்னிமன்னு மதுவன்னி கொன்றை
மலர்துன்று செஞ்சடையினான்
பணிகையின் முன்இலங்கு வருவேடம் மன்னு
பலவாகி நின்ற பரமன்
அணுகிய வேதஓசை அகல்அங்கம் ஆறின்
பொருள் ஆன ஆதி அருளான்
நணுகிய தொண்டர்கூடி மலர்தூவி ஏத்து
நறையூரின் நம்பன் அவனே. 6

ஒளிர் தருகின்ற மேனி உருஎங்கும் அங்கம்
அவைஆர ஆடல் அரவம்
மிளிர்தரு கைஇலங்க அனல்ஏந்தி ஆடும்
விகிர்தன் விடம்கொள் மிடறன்
துளிதரு சோலைஆலை தொழில்மேவ வேதம்
எழில்ஆர வென்றி அருளும்
நளிர்மதி சேரும் மாடம் மடவார்கள் ஆரும்
நறையூரின் நம்பன் அவனே. 7

அடல்எருது ஏறுஉகந்த அதிரும் கழல்கள்
எதிரும் சிலம்பொடு இசையக்
கடல்இடை நஞ்சம்உண்டு கனிஉற்ற கண்டன்
முனி உற்று இலங்கை அரையன்
உடலொடு தோள்அனைத்தும் முடிபத்தும் இறுத்தும்
இசைகேட்டு இரங்கி ஒருவாள்
நடலைகள் தீர்த்து நல்கி நமை ஆளவல்ல
நறையூரின் நம்பன் அவனே. 8

குலமலர் மேவினானும் மிகு மாயனாலும்
 எதிர்கூடி நேடி நினைவுற்று
இலபல எய்தஒணாமை எரியாய் உயர்ந்த
 பெரியான் இலங்கு சடையன்
சிலபல தொண்டர் நின்று பெருமைக்கள் பேச
 அருமைத் திகழ்ந்த பொழிலின்
நலமலர் சிந்தவாச மணம் நாறுவீதி
 நறையூரின் நம்பன் அவனே. 9

துவர் உறுகின்ற ஆடை உடல்போர்த்து உழன்ற
 அவர் தாமும் அல்ல சமணும்
கவர்உறு சிந்தையாளர் உரைநீத்து உகந்த
 பெருமான் பிறங்கு சடையன்
தவமலி பத்தர் சித்தர் மறையாளர் பேண
 முறைமாதர் பாடி மருவும்
நவமணி துன்றுகோயில் ஒளிபொன் செய் மாட
 நறையூரின் நம்பன் அவனே. 10

கானல் உலாவி ஓதம் எதிர்மல்கு காழி
 மிகுபந்தன் முந்தி உணர
ஞானம் உலாவு சிந்தை அடிவைத்து உகந்த
 நறையூரின் நம்பன் அவனை
ஈனம் இலாதவண்ணம் இசையால் உரைத்த
 தமிழ்மாலை பத்தும் நினைவார்
வானம் நிலாவ வல்லர் நிலம் எங்கும் நின்று
 வழிபாடு செய்யும் மிகவே. 11

திருச்சிற்றம்பலம்

226. திரு அரிசிற்கரைப்புத்தூர்

திருமுறை : 2/67 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : படிக்காசுவைத்தபரமர் இறைவியார் : அழகாம்பிகை

மின்னும் சடைமேல் இளவெண்திங்கள் விளங்கவே
துன்னும் கடல்நஞ்சுஇருள் தோய் கண்டர் தொல் மூதூர்
அன்னம் படியும் புனல் ஆர் அரிசில் அலை கொண்டு
பொன்னும் மணியும் பொரு தென்கரைமேல் புத்தூரே.1

மேவா அசுரர் மேவு எயில் வேவ மலைவில்லால்
ஏ ஆர் எரி வெங்கணையால் எய்தான் எய்தும் ஊர்
நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே. 2

பல்ஆர்தலை சேர் மாலை சூடிப் பாம்பும் பூண்டு
எல்லாஇடமும் வெண்நீறு அணிந்து ஓர் ஏறு ஏறிக்
கல் ஆர் மங்கை பங்கரேனும் காணுங்கால்
பொல்லார் அல்லர் அழகிய புத்தூர்ப் புனிதரே. 3

வரி ஏர் வளையாள் அரிவை அஞ்ச வருகின்ற
கரி ஏர் உரிவை போர்த்த கடவுள் கருதும் ஊர்
அரி ஏர் கழனிப் பழனம் சூழ்ந்து அங்கு அழகுஆய
பொரி ஏர் புன்கு சொரி பூஞ்சோலைப் புத்தூரே. 4

என்போடு அரவம் ஏனத்துஎயிறோடு எழில் ஆமை
மின் போல் புரிநூல் விரவிப் பூண்ட வரைமார்பர்
அன்போடு உருகும் அடியார்க்கு அன்பர் அமரும் ஊர்
பொன்போது அலர் கோங்கு ஓங்கு சோலைப் புத்தூரே.5

வள்ளி முலை தோய் குமரன் தாதை வான் தோயும்
வெள்ளிமலை போல் விடை ஒன்று உடையான் மேவும்ஊர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பால் சிறைவண்டும்
புள்ளும் மலி பூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே. 6

நிலம் தண்ணீரோடு அனல் கால் விசும்பின் நீர்மையான்
சிலந்தி செங்கண் சோழன் ஆகச் செய்தான் ஊர்
அலந்த அடியான் அற்றைக்கு அன்று ஓர் காசு எய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே. 7

இத் தேர் ஏக இம் மலை பேர்ப்பன் என்று ஏந்தும்
பத்துஓர்வாயான் வரைக்கீழ் அலறப் பாதம்தான்
வைத்து ஆர் அருள்செய் வரதன் மருவும் ஊர் ஆன
புத்தூர் காணப் புகுவார் வினைகள் போகுமே. 8

முள் ஆர் கமலத்து அயன் மால் முடியோடு அடி தேட
ஒள் ஆர் எரி ஆய் உணர்தற்கு அரியான் ஊர்போலும்
கள் ஆர் நெய்தல் கழுநீர் ஆம்பல் கமலங்கள்
புள் ஆர் பொய்கைப் பூப்பல தோன்றும் புத்தூரே. 9

கை ஆர் சோறு கவர் குண்டர்களும் துவருண்ட
மெய் ஆர் போர்வை மண்டையர் சொல்லு மெய் அல்ல
பொய்யா மொழியால் அந்தணர் போற்றும் புத்தூரில்
ஐயா என்பார்க்கு ஐயுறவு இன்றி அழகாமே. 10

நறவம் கமழ்பூங் காழி ஞானசம்பந்தன்
பொறி கொள் அரவம் பூண்டான் ஆண்ட புத்தூர்மேல்
செறி வண்தமிழ் செய் மாலை செப்ப வல்லார்கள்
அறவன்கழல் சேர்ந்து அன்போடு இன்பம் அடைவாரே.11

திருச்சிற்றம்பலம்

227. திருச்சிவபுரம்

திருமுறை : 1/21 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : பிரமபுரிநாதர், சிவபுரநாதர் இறைவியார் : பெரியநாயகி, சிங்காரவல்லி

புவம் வளி கனல் புனல் புவி கலை உரை மறை
திரிகுணம் அமர் நெறி
திவம் மலிதரு சுரர் முதலியர் திகழ்தரும்
உயிர்அவை அவைதம
பவம் மலி தொழில்அது நினைவொடு பதுமநல்
மலர் அது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநிலன்
இனில்நிலை பெறுவரே. 1

மலை பல வளர் தரு புவிஇடை மறை தரு
வழி மலி மனிதர்கள்
நிலை மலி சுரர் முதல் உலகுகள் நிலைபெறு
வகை நினைவொடு மிகும்
அலைகடல் நடுவு அறிதுயில் அமர் அரிஉரு
இயல்பரன் உறைபதி
சிலைமலி மதிள் சிவபுர நினைபவர் திரு
மகளொடு திகழ்வரே. 2

பழுது இல கடல் புடை தழுவிய படி முதலிய
உலகுகள் மலி
குழுவிய சுரர் பிறர் மனிதர்கள் குலம் மலி
தரும்உயிர் அவைஅவை
முழுவதும் அழி வகை நினைவொடு முதல் உருவு
இயல் பரன் உறை பதி
செழு மணி அணி சிவபுரநகர் தொழும்அவர்
புகழ் மிகும் உலகிலே. 3

நறை மலிதரும் அளறொடு முகை நகுமலர்
புகை மிகு வளர் ஒளி
நிறை புனல்கொடு தனை நினைவொடு நியதமும்
வழிபடும் அடியவர்
குறைவு இல பதம் அணை தர அருள் குணம் உடை
இறை உறை வன பதி
சிறை புனல் அமர் சிவபுரம் அது நினைபவர்
செயமகள் தலைவரே. 4

சினம் மலி அறுபகை மிகு பொறி சிதைதரு
வகை வளி நிறுவிய
மனன் உணர்வொடு மலர்மிசை எழுதரு பொருள்
நியதமும் உணர்பவர்
தனது எழில் உருஅதுகொடு அடை தகு பரன்
உறைவது நகர் மதில்
கனம் மருவிய சிவபுரம் நினைபவர்
கலைமகள் தர நிகழ்வரே. 5

சுருதிகள்பல நல முதல் கலை துகள் அறு
வகை பயில்வொடு மிகு
உருவு இயல் உலகுஅவை புகழ்தர வழி ஒழுகும்
மெய் உறு பொறி ஒழி
அருதவம் முயல்பவர் தனது அடி அடை வகை
நினை அரன் உறை பதி
திரு வருள் சிவபுரம் நினைபவர் திகழ் குலன்
நிலன்இடை நிகழுமே. 6

கதம் மிகு கருஉருவொடு உகிர்இடைவட
வரை கண கணஎன
மதம் மிகு நெடுமுகன் அமர் வளைமதி திகழ்
எயிறுஅதன் நுதிமிசை
இதம் அமர் புவிஅது நிறுவிய எழில் அரி
வழிபட அருள்செய்த
பதம் உடையவன் அமர் சிவபுரம் நினைபவர்
நிலவுவர் படியிலே. 7

அசைவுஉறு தவ முயல்வினில் அயன் அருளினில்
வரு வலிகொடு சிவன்
இசை கயிலையை எழுதரு வகை இருபது
கரம்அவை நிறுவிய
நிசிசரன் முடிஉடைதர ஒரு விரல்பணி
கொளுமவன் உறை பதி
திசை மலி சிவபுரம் நினைபவர் செழுநிலன்
இனில் நிகழ்வு உடையரே. 8

அடல் மலி படை அரி அயனொடும் அறிவு அரியதொர்
அழல் மலிதரு
சுடர் உருவொடு நிகழ் தர அவர் வெருவொடு
துதிஅதுசெய எதிர்
விடம் மலி களம் நுதல் அமர் கண் அது உடை உரு
வெளிபடுமவன் அவன்நகர்
திடம்மலி பொழில்எழில் சிவபுரம் நினைபவர்
வழி புவி திகழுமே. 9

குணம்அறிவுகள் நிலைஇல பொருள் உரை மருவிய
பொருள்களும் இல
திணம்எனுமவரொடு செதுமதி மிகு
சமணரும் மலி தமது கை
உணல் உடையவர் உணர்வு அருபரன் உறைதரு
பதி உலகினில் நல
கணம் மருவிய சிவபுரம் நினைபவர் எழில்
உரு உடையவர்களே. 10

திகழ் சிவபுர நகர் மருவிய சிவன் அடி
இணை பணி சிரபுர
நகர் இறை தமிழ்விரகனது உரை நலம்மலி
ஒருபதும் நவில்பவர்
நிகழ்குலம் நிலநிறை திருவுரு நிகரில
கொடை மிகு சயமகள்
புகழ் புவி வளர் வழி அடிமையின் மிகை புணர்
தர நலம் மிகுவரே. 11

திருச்சிற்றம்பலம்

228. திருச்சிவபுரம்

திருமுறை : 1/112 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இன்குரல்இசை கெழும் யாழ் முரலத்
தன் கரம் மருவிய சதுரன் நகர்
பொன் கரை பொரு பழங்காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. 1

அன்று அடல் காலனைப் பாலனுக்காய்ப்
பொன்றிட உதைசெய்த புனிதன் நகர்
வென்றி கொள் எயிற்று வெண்பன்றி முன்னாள்
சென்று அடி வீழ்தரு சிவபுரமே. 2

மலைமகள் மறுகிட மதகரியைக்
கொலை மல்க உரிசெய்த குழகன் நகர்
அலை மல்கும் அரிசிலின் அதன் அயலே
சிலை மல்கும் மதில் அணி சிவபுரமே. 3

மண் புனல் அனலொடு மாருதமும்
விண் புனை மருவிய விகிர்தன் நகர்
பண் புணை குரல்வழி வண்டு கெண்டிச்
செண்பகம் அலர் பொழில் சிவபுரமே. 4

வீறு நன்கு உடையவள் மேனி பாகம்
கூறு நன்கு உடையவன் குளிர் நகர்தான்
நாறு நன் குர விரி வண்டு கெண்டித்
தேறல் உண்டு எழுதரு சிவபுரமே. 5

மாறு எதிர்வரு திரிபுரம் எரித்து
நீறுஅது ஆக்கிய நிமலன் நகர்
நாறு உடை நடுபவர் உழவரொடும்
சேறு உடைவயல் அணி சிவபுரமே. 6

ஆவிஐந்து அமர்ந்தவன் அரிவையொடு
மேவிநன்கு இருந்தது ஓர் வியல்நகர்தான்
பூவின வண்டு அமர்தரு பொய்கை அன்னச்
சேவல் தன்பெடை புல்கு சிவபுரமே. 7

எழில்மலை எடுத்த வல்இராவணன் தன்
முழுவலி அடக்கிய முதல்வன் நகர்
விழவினில் எடுத்த வெண்கொடி மிடைந்து
செழு முகில் அடுக்கும் வண் சிவபுரமே 8

சங்கு அளவிய கையன்சதுர்முகனும்
அங்கு அளவு அறிவு அரியவன் நகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. 9

மண்டையின் குண்டிகை மாசு தரும்
மிண்டரை விலக்கிய விமலன் நகர்
பண்டு அமர்தரு பழங்காவிரியின்
தெண்திரை பொருது எழு சிவபுரமே. 10

சிவன் உறைதரு சிவபுரநகரைக்
கவுணியர்குலபதி காழியர்கோன்
தவம் மல்கு தமிழ்இவை சொல்ல வல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருவரதைப் பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர்மயானம், திருக்குடவாயில், திருநறையூர்ச் சித்தீச்சரம் முதலிய பதிகளை வணங்கித் திருப்புத்தூரில் எழுந்தருளியிருந்த சிரபுரச்செல்வர் வெண்பன்றி உருவாய்ச் செங்கணெடுமால் பணியுஞ் சிவபுரத்துச் சென்றடைந்து கங்கை சடைக் கரந்த கண்ணுதலாரைப் பணிந்து 'இன்குரலிசை' என்னும் இப்பதிகமெடுத்து அதனில் இரண்டாந் திருப்பாட்டில் "வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றி முன்னாள், சென்றடி வீழ்தரு சிவபுரமே" என்று இவ்வாறு அப்பதிச் சிறப்பை வைத்துப் பாடியருளினார்.

229. திருச்சிவபுரம்

திருமுறை : 1/125 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : பிரமபுரிநாதர், சிவபுரநாதர் இறைவியார் : பெரியநாயகி, சிங்காரவல்லி

கலை மலி அகல்அல்குல் அரிவைதன் உருவினன்
முலை மலிதரு திருஉருவம்அது உடையவன்
சிலை மலி மதில் பொதி சிவபுரநகர் தொழ
இலை நலி வினை இருமையும் இடர் கெடுமே. 1

படர் ஒளி சடையினன் விடையினன் மதில்அவை
சுடர்எரி கொளுவிய சிவன்அவன் உறை பதி
திடல் இடு புனல் வயல் சிவபுரம் அடைய நம்
இடர் கெடும் உயர்கதி பெறுவது திடனே. 2

வரை திரிதர அரவு அகடு அழல் எழ வரு
நுரைதரு கடல்விடம் நுகர்பவன் எழில் திகழ்
திரை பொரு புனல் அரிசில் அது அடை சிவபுரம்
உரைதரும் அடியவர் உயர்கதியினரே. 3

துணிவு உடையவர் சுடுபொடியினர் உடல்அடு
பிணி அடைவு இலர் பிறவியும் அற விசிறுவர்
திணிவு உடையவர் பயில் சிவபுரம் மருவிய
மணிமிடறனது அடிஇணை தொழுமவரே. 4

மறையவன் மதியவன் மலையவன் நிலையவன்
நிறையவன் உமையவள் மகிழ் நடம் நவில்பவன்
இறையவன் இமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவு என உடையவன் எமை உடையவனே. 5

முதிர்சடை இளமதி நதிபுனல் பதிவுசெய்து
அதிர்கழல் ஒலிசெய அருநடம் நவில்பவன்
எதிர்பவர் புரம் எய்த இணைஇலி அணை பதி
சதிர் பெறும் உளம் உடையவர் சிவபுரமே. 6

வடிவு உடை மலைமகள் சலமகள் உடன் அமர்
பொடிபடும் உழைஅதள் பொலி திருஉருவினன்
செடி படு பலி திரி சிவன் உறை சிவபுரம்
அடைதரும் அடியவர் அருவினை இலரே. 7

கரம்இருபதும் முடிஒருபதும் உடையவன்
உரம் நெரிதர வரை அடர்வு செய்தவன் உறை
பரன் என அடியவர் பணிதரு சிவபுர
நகர் அது புகுதல் நம் உயர்கதி அதுவே. 8

அன்று இயல் உருவு கொள் அரிஅயன் எனுமவர்
சென்று அளவிடல் அரியவன் உறை சிவபுரம்
என்று இருபொழுதும் முன் வழிபடுமவர் துயர்
ஒன்று இலர் புகழொடும் உடையர் இவ் உலகே. 9

புத்தரொடு அமணர்கள் அறஉரை புறஉரை
வித்தகம் ஒழிகில விடை உடை அடிகள்தம்
இத் தவம் முயல்வுஉறில் இறைவன சிவபுரம்
மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே. 10

புந்தியர் மறை நவில் புகலி மன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகர் உறை
எந்தையை உரைசெய்த இசை மொழிபவர் வினை
சிந்தி முன் உற உயர்கதி பெறுவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

230. திருக்கருக்குடி

திருமுறை : 3/21 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : சற்குணலிங்கேசுவரர் இறைவியார் : அத்துவிதநாயகி

நனவிலும் கனவிலும் நாளும் தன் ஒளி
நினைவிலும் எனக்கு வந்து எய்தும் நின்மலன்
கனைகடல் வையகம் தொழு கருக்குடி
அனல் எரிஆடும் எம் அடிகள் காண்மினே. 1

வேதியன் விடை உடை விமலன் ஒன்னலர்
மூதெயில் எரி எழ முனிந்த முக்கணன்
காது இயல் குழையினன் கருக்குடி அமர்
ஆதியை அடி தொழ அல்லல் இல்லையே. 2

மஞ்சு உறு பொழில் வளம் மலி கருக்குடி
நஞ்சு உறு திருமிடறு உடைய நாதனார்
அம்சுரும்பு ஆர் குழல் அரிவை அஞ்சவே
வெஞ்சுரம்தனில் விளையாடல் என்கொலோ. 3

ஊன் உடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கான்இடை ஆடலான் பயில் கருக்குடிக்
கோன் உயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழ கழல் வாழ்த்தி வாழ்மினே. 4

சூடுவர் சடைஇடைக் கங்கைநங்கையைக்
கூடுவர் உலகுஇடை ஐயம் கொண்டு ஒலி
பாடுவர் இசை பறை கொட்ட நட்டிருள்
ஆடுவர் கருக்குடி அண்ணல் வண்ணமே. 5

இன்பு உடையார் இசை வீணை பூண் அரா
என்பு உடையார் எழில் மேனிமேல் எரி
முன்பு உடையார் முதல் ஏத்தும் அன்பருக்கு
அன்பு உடையார் கருக்குடி எம் அண்ணலே. 6

காலமும் ஞாயிறும் தீயும் ஆயவர்
கோலமும் முடி அரவு அணிந்த கொள்கையர்
சீலமும் உடையவர் திருக் கருக்குடிச்
சாலவும் இனிது அவர் உடைய தன்மையே. 7

எறிகடல் புடை தழுவு இலங்கை மன்னனை
முறிபட வரைஇடை அடர்த்த மூர்த்தியார்
கறை படு பொழில் மதி தவழ் கருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே. 8

பூ மனும் திசைமுகன்தானும் பொற்புஅமர்
வாமனன் அறிகிலா வண்ணம் ஓங்கு எரி
ஆம் என உயர்ந்தவன் அணி கருக்குடி
நா மனனில் வர நினைதல் நன்மையே. 9

சாக்கியர் சமண் படு கையர் பொய்ம்மொழி
ஆக்கிய உரை கொளேல் அருந்திரு நமக்கு
ஆக்கிய அரன் உறை அணி கருக்குடிப்
பூக் கமழ் கோயிலே புடைபட்டு உய்ம்மினே. 10

கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன்தன் ஒளி
ஆன மெய்ஞ் ஞானசம்பந்தன் சொல்லிய
ஊனம் இல் மொழி வலார்க்கு உயரும் இன்பமே. 11

திருச்சிற்றம்பலம்

231. திருவாஞ்சியம்

திருமுறை : 2/7 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : வாஞ்சியநாதர் இறைவியார் : வாழவந்தநாயகி

வன்னி கொன்றை மதமத்தம் எருக்கொடு கூவிளம்
பொன் இயன்ற சடையில் பொலிவித்த புராணனார்
தென்ன என்று வரிவண்டு இசைசெய் திருவாஞ்சியம்
என்னை ஆள் உடையான் இடமாக உகந்ததே. 1

காலகாலர் கரிகான் இடை மாநடம் ஆடுவர்
மேலர் வேலைவிடம் உண்டு இருள்கின்ற மிடற்றினர்
மாலை கோல மதி மாடம் மன்னும் திருவாஞ்சியம்
ஞாலம் வந்து பணியப் பொலி கோயில் நயந்ததே. 2

மேவில் ஒன்றர் விரிவுஉற்ற இரண்டினர் மூன்றும்ஆய்
நாவில் நாலர் உடல்அஞ்சினர் ஆறர் ஏழ்ஓசையர்
தேவில் எட்டர் திருவாஞ்சியம் மேவிய செல்வனார்
பாவம் தீர்ப்பர் பழி போக்குவர் தம் அடியார்கட்கே. 3

சூலம் ஏந்தி வளர் கையினர் மெய் சுவண்டுஆகவே
சால நல்லபொடிப் பூசுவர் பேசுவர் மாமறை
சீலம் மேவு புகழால் பெருகும் திருவாஞ்சியம்
ஆலம் உண்ட அடிகள் இடமாக அமர்ந்ததே. 4

கை இலங்கு மறி ஏந்துவர் காந்தளம் மெல்விரல்
தையல் பாகம் உடையார் அடையார் புரம் செற்றவர்
செய்யமேனிக் கரியம் மிடற்றார் திருவாஞ்சியத்து
ஐயர் பாதம் அடைவார்க்கு அடையா அருநோய்களே.5

அரவம் பூண்பர் அணியும் சிலம்பு ஆர்க்க அகம்தொறும்
இரவில் நல்ல பலி பேணுவர் நாண் இலர் நாமமே
பரவுவார் வினை தீர்க்க நின்றார் திருவாஞ்சியம்
மருவி ஏத்த மடமாதொடு நின்ற எம் மைந்தரே. 6

விண்ணில் ஆன பிறை சூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால் அநங்கன் உடலம் பொடி ஆக்கினார்
பண்ணில் ஆன இசைபாடல் மல்கும் திருவாஞ்சியத்து
அண்ணலார்தம் அடி போற்ற வல்லார்க்கு இல்லை அல்லலே. 7

மாடம் நீடு கொடி மன்னிய தென் இலங்கைக்கு மன்
வாடி ஊட வரையால் அடர்த்து அன்று அருள் செய்தவர்
வேட வேடர் திருவாஞ்சியம் மேவிய வேந்தரைப்
பாட நீடு மனத்தார் வினைபற்று அறுப்பார்களே. 8

செடி கொள் நோயின் அடையார் திறம்பார் செறு தீவினை
கடிய கூற்றமும் கண்டு அகலும் புகல்தான் வரும்
நெடிய மாலொடு அயன் ஏத்த நின்றார் திருவாஞ்சியத்து
அடிகள் பாதம் அடைந்தார் அடியார் அடியார்கட்கே. 9

பிண்டம் உண்டு திரிவார் பிரியும் துவர் ஆடையார்
மிண்டர் மிண்டும் மொழி மெய் அல பொய் இலை எம்இறை
வண்டு கெண்டி மருவும் பொழில் சூழ் திருவாஞ்சியத்து
அண்டவாணன் அடி கைதொழுவார்க்கு இல்லை அல்லலே. 10

தென்றல் துன்றும் பொழில் சென்று அணையும் திருவாஞ்சியத்து
என்றும் நின்ற இறையானை உணர்ந்து அடி ஏத்தலால்
நன்று காழி மறை ஞானசம்பந்தன செந்தமிழ்
ஒன்றும் உள்ளம் உடையார் அடைவார் உயர் வானமே.11

திருச்சிற்றம்பலம்

232. திருப்பனையூர்

திருமுறை : 1/37 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : சௌந்தரநாதர், அழகியநாதர் இறைவியார் : பெரியநாயகி அம்மை

அரவச் சடைமேல் மதி மத்தம்
விரவிப் பொலிகின்றவன் ஊராம்
நிரவிப் பலதொண்டர்கள் நாளும்
பரவிப் பொலியும் பனையூரே. 1

எண் ஒன்றி நினைந்தவர் தம்பால்
உள் நின்று மகிழ்ந்தவன் ஊராம்
கள்நின்று எழுசோலையில் வண்டு
பண்நின்று ஒலி செய் பனையூரே. 2

அலரும் எறி செம்சடை தன்மேல்
மலரும் பிறை ஒன்று உடையான் ஊர்
சிலர் என்றும் இருந்து அடி பேணப்
பலரும் பரவும் பனையூரே. 3

இடி ஆர் கடல் நஞ்சமுது உண்டு
பொடி ஆடிய மேனியினான் ஊர்
அடியார் தொழ மன்னவர் ஏத்தப்
படியார் பணியும் பனையூரே. 4

அறை ஆர் கழல்மேல் அரவு ஆட
இறை ஆர் பலி தேர்ந்தவன் ஊராம்
பொறையார் மிகு சீர் விழ மல்கப்
பறையார் ஒலிசெய் பனையூரே. 5

அணியார் தொழ வல்லவர் ஏத்த
மணியார் மிடறு ஒன்று உடையான் ஊர்
தணியார் மலர்கொண்டு இருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. 6

அடையாதவர் மூஎயில் சீறும்
விடையான் விறல் ஆர் கரியின் தோல்
உடையான் அவன் எண் பலபூதப்
படையான் அவன் ஊர் பனையூரே. 7

இலகும் முடிபத்து உடையானை
அலல் கண்டு அருள்செய்த எம்அண்ணல்
உலகில் உயிர் நீர் நிலம் மற்றும்
பல கண்டவன் ஊர் பனையூரே. 8

வரம் முன்னி மகிழ்ந்து எழுவீர்காள்
சிரம் முன் அடி தாழ வணங்கும்
பிரமன்னொடு மால் அறியாத
பரமன் உறையும் பனையூரே. 9

அழி வல் அமணரொடு தேரர்
மொழி வல்லன சொல்லியபோதும்
இழிவு இல்லது ஒர் செம்மையினான் ஊர்
பழிஇல்லவர் சேர் பனையூரே. 10

பார் ஆர் விடையான் பனையூர்மேல்
சீர் ஆர் தமிழ் ஞானசம்பந்தன்
ஆராத சொல்மாலைகள்பத்தும்
ஊர்ஊர் நினைவார் உயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

233. திருவிற்குடி வீரட்டம்

திருமுறை : 2/108 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

இறைவர் : வீரட்டநாதர் இறைவியார் : ஏலவார் குழலி

வடி கொள் மேனியர் வான மா மதியினர்
நதியினர் மது ஆர்ந்த
கடி கொள் கொன்றை அம் சடையினர் கொடியினர்
உடைபுலி அதள் ஆர்ப்பர்
விடை அது ஏறும் எம்மான் அமர்ந்து இனிது உறை
விற்குடிவீரட்டம்
அடியர்ஆகி நின்று ஏத்த வல்லார் தமை
அருவினை அடையாவே. 1

களம் கொள் கொன்றையும் கதிர் விரி மதியமும்
 கடி கமழ் சடைக்கு ஏற்றி
உளம் கொள் பத்தர்பால் அருளிய பெருமையர்
 பொரு கரிஉரி போர்த்து
விளங்கு மேனியர் எம்பெருமான் உறை
 விற்குடி வீரட்டம்
வளம் கொள் மா மலரால் நினைந்து ஏத்துவார்
 வருத்தம் அது அறியாரே. 2

கரிய கண்டத்தர் வெளிய வெண்பொடி அணி
 மார்பினர் வலங்கையில்
எரியர் புன்சடை இடம்பெறக் காட்டகத்து
 ஆடிய வேடத்தர்
விரியும் மா மலர்ப் பொய்கை சூழ் மது மலி
 விற்குடி வீரட்டம்
பிரிவிலாதவர் பெருந்தவத்தோர் எனப்
 பேணுவர் உலகத்தே. 3

பூதம் சேர்ந்து இசைபாடலர் ஆடலர்
 பொலிதர நலம் ஆர்ந்த
பாதம் சேர் இணைச்சிலம்பினர் கலம் பெறு
 கடல் எழு விடம் உண்டார்
வேதம் ஓதிய நா உடையான் இடம்
 விற்குடி வீரட்டம்
சேரும் நெஞ்சினர்க்கு அல்லது உண்டோ பிணி
 தீவினை கெடுமாறே. 4

கடிய ஏற்றினர் கனல் அன மேனியர்
அனல் எழ ஊர்மூன்றும்
இடிய மால்வரை கால் வளைத்தான் தனது
அடியவர் மேல் உள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப்பான் உறை
விற்குடி வீரட்டம்
படியது ஆகவே பரவுமின் பரவினால்
பற்றுஅறும் அருநோயே. 5

பெண் ஓர் கூறினர் பெருமையர் சிறுமறிக்
கையினர் மெய் ஆர்ந்த
அண்ணல் அன்புசெய்வார் அவர்க்கு எளியவர்
அரியவர் அல்லார்க்கு
விண்ணில் ஆர் பொழில் மல்கிய மலர்விரி
விற்குடி வீரட்டம்
எண்ணிலாவிய சிந்தையினார் தமக்கு
இடர்கள் வந்து அடையாவே. (6–7)

இடம் கொள் மாகடல் இலங்கையர் கோன்தனை
இகல்அழி தரஊன்று
திடம் கொள் மால்வரையான் உரையார் தரு
பொருளினன் இருள் ஆர்ந்த
விடம்கொள் மா மிடறுஉடைவன் உறைபதி
விற்குடி வீரட்டம்
தொடங்குமாறு இசை பாடி நின்றார் தமைத்
துன்ப நோய் அடையாவே. 8

செங்கண் மாலொடு நான்முகன் தேடியும்
திருவடி அறியாமை
எங்கும் ஆர்எரி ஆகிய இறைவனை
அறை புனல் முடிஆர்ந்த
வெங்கண் மால் வரைக் கரி உரித்து உகந்தவன்
விற்குடி வீரட்டம்
தம் கையால் தொழுது ஏத்த வல்லார்அவர்
தவ மல்கு குணத்தாரே. 9

பிண்டம் உண்டு உழல்வார்களும் பிரிதுவர்
ஆடையர் அவர் வார்த்தை
பண்டும் இன்றும் ஓர் பொருள் எனக் கருதன்மின்
பரிவு உறுவீர் கேண்மின்
விண்ட மா மலர்ச் சடையவன் இடம் எனில்
விற்குடி வீரட்டம்
கண்டுகொண்டு அடி காதல் செய்வார் அவர்
கருத்து உறும் குணத்தாரே. 10

விலங்கலே சிலை இடம் என உடையவன்
விற்குடி வீரட்டத்து
இலங்குசோதியை எம்பெருமான் தனை
எழில் திகழ் கழல் பேணி
நலம் கொள் வாழ் பொழில் காழியுள் ஞானசம்
பந்தன் நல் தமிழ்மாலை
வலம் கொடே இசை மொழியுமின் மொழிந்தக்கால்
மற்று அது வரம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

234. திருப்புகலூர்

திருமுறை : 1/2 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

இறைவர் : அக்னீசுவரர் இறைவியார் : கருந்தார் குழலி

குறி கலந்த இசைபாடலினான் நசையால் இவ் உலகுஎல்லாம்
நெறி கலந்தது ஒரு நீர்மையனாய் எருது ஏறிப் பலி பேணி
முறிகலந்தது ஒரு தோல் அரைமேல் உடையான் இடம் மொய்ம்மலரின்
பொறி கலந்த பொழில் சூழ்ந்து அயலே புயலாரும் புகலூரே. 1

காது இலங்கு குழையன் இழை சேர் திருமார்பன் ஒருபாகம்
மாது இலங்கு திருமேனியினான் கருமானின் உரிஆடை
மீது இலங்க அணிந்தான் இமையோர் தொழ மேவும் இடம்சோலைப்
போதில் அங்கு நசையால் வரிவண்டு இசை பாடும் புகலூரே. 2

பண் நிலாவும் மறை பாடலினான் இறை சேரும் வளை அம் கைப்
பெண் நிலாவ உடையான் பெரியார் கழல் என்றும் தொழுதுஏத்த
உள் நிலாவி அவர் சிந்தையுள் நீங்கா ஒருவன் இடம் என்பர்
மண் நிலாவும் அடியார் குடிமைத்தொழில் மல்கும் புகலூரே. 3

நீரின் மல்கு சடையன் விடையன் அடையார்தம் அரண் மூன்றும்
சீரின் மல்கு மலையே சிலையாக முனிந்தான் உலகு உய்யக்
காரின் மல்கு கடல்நஞ்சம் அது உண்ட கடவுள் இடம் என்பர்
ஊரின் மல்கி வளர் செம்மையினால் உயர்வு எய்தும் புகலூரே.4

செய்யமேனி வெளியபொடிப் பூசுவர் சேரும் அடியார்மேல்
பைய நின்ற வினை பாற்றுவர் போற்று இசைத்து என்றும் பணிவாரை
மெய்ய நின்ற பெருமான் உறையும் இடம் என்பர் அருள் பேணிப்
பொய் இலாத மனத்தார் பிரியாது பொருந்தும் புகலூரே. 5

கழலின் ஓசை சிலம்பின் ஒலி ஓசை கலிக்கப் பயில்கானில்
குழலின் ஓசை குறள் பாரிடம் போற்றக் குனித்தார் இடம் என்பர்
விழவின் ஓசை அடியார் மிடை உற்று விரும்பிப் பொலித் தெங்கும்
முழவின் ஓசை முந்நீர் அயர்வு எய்த முழங்கும் புகலூரே.6

வெள்ளம் ஆர்ந்து மிளிர்செஞ்சடைதன்மேல் விளங்கும் மதி சூடி
உள்ளம் ஆர்ந்த அடியார் தொழுது ஏத்த உகக்கும் அருள்தந்துஎம்
கள்ளம் ஆர்ந்து கழியப் பழி தீர்த்த கடவுள் இடம்என்பர்
புள்ளை ஆர்ந்த வயலின் விளைவால் வளம் மல்கும் புகலூரே.7

தென்இலங்கை அரையன் வரை பற்றி எடுத்தான் முடிதிண்தோள்
தன் இலங்கு விரலால் நெரிவித்து இசை கேட்டு அன்று அருள்செய்த
மின்இலங்கு சடையான் மடமாதொடு மேவும் இடம் என்பர்
பொன் இலங்கு மணி மாளிகைமேல் மதி தோயும் புகலூரே. 8

நாகம் வைத்த முடியான் அடி கைதொழுது ஏத்தும் அடியார்கள்
ஆகம் வைத்த பெருமான் பிரமன்னொடு மாலும் தொழுது ஏத்த
ஏகம் வைத்த எரியாய் மிக ஓங்கிய எம்மான் இடம் போலும்
போகம் வைத்த பொழிலின் நிழலான் மதுவாரும் புகலூரே. 9

செய்தவத்தர் மிகு தேரர்கள் சாக்கியர் செப்பில் பொருள் அல்லாக்
கைதவத்தர் மொழியைத் தவிர்வார்கள் கடவுள் இடம் போலும்
கொய்து பத்தர் மலரும் புனலும்கொடு தூவித் துதிசெய்து
மெய் தவத்தின் முயல்வார் உயர்வானகம் எய்தும் புகலூரே. 10

புற்றில் வாழும் அரவம் அரை ஆர்த்தவன் மேவும் புகலூரைப்
கற்று நல்லவர் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பற்றி என்றும் இசை பாடியமாந்தர் பரமன் அடிசேர்ந்து
குற்றம் இன்றிக் குறைபாடு ஒழியாப்புகழ் ஓங்கிப் பொலிவாரே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

சிரபுரச் செம்மலார் திருப்புகலூருக்கு எழுந்தருளும்போது இதன் முன்னரே ஆண்டெழுந் தருளியிருந்த நாவினுக்கரசரும் நம்பி சீர் முருகரும் அடியார் குழாத்தோடு எதிர்கொண் டழைத்தருள அவரோடு சென்று இறைவனை வழிபட்டு வணங்கி முருக நாயனார் திருமடத்திலே எழுந்தருளியிருந்தார். அப்போது திருநீலநக்கநாயனாரும் சிறுத்தொண்ட நாயனாருந் தத்தமது ஊர்களினின்றும் எழுந்தருளி யளவளாவி யிருந்தார்கள். அந்நாட்களிலொருநாள் பிள்ளையார் அவர்யாவரோடுந் திருக்கோயிலுக்குச் சென்று கும்பிடுங் கொள்கையிற் 'குறிகலந்தவிசை' என்னுமித் திருப்பதிகம் பாடி அப்பதிகத்தின் திருப்பாட்டுக்களின் இறுதிதோறும் அத்திருப்பதியின் தலைமைசான்ற நிலைமையினைச் சால்புற விளம்பியருளினார்.

235. திருப்புகலூர்

திருமுறை : 2/115 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி

இறைவர் : அக்கினீசுரர் இறைவியார் : கருந்தார்க்குழலி

வெங்கள் விம்மு குழல் இளையர் ஆடவ்வெறி விரவு நீர்ப்
பொங்கு செங்கண் கருங்கயல்கள் பாயும் புகலூர் தனுள்
திங்கள் சூடி திரிபுரம் ஓர் அம்பால் எரியூட்டிய
எங்கள் பெம்மான் அடி பரவ நாளும் இடர் கழியுமே. 1

வாழ்ந்த நாளும் இனி வாழும் நாளும் இவை அறிதிரேல்
வீழ்ந்த நாள் எம்பெருமானை ஏத்தா விதி இல்லிர்காள்
போழ்ந்த திங்கள் புரிசடையினான்தன் புகலூரையே
சூழ்ந்த உள்ளம் உடையீர்காள் உங்கள் துயர் தீருமே. 2

மடையில் நெய்தல் கருங்குவளை செய்ய மலர்த் தாமரை
புடை கொள் செந்நெல் விளை கழனி மல்கும் புகலூர் தனுள்
தொடை கொள் கொன்றை புனைந்தான் ஓர் பாகம் மதிசூடியை
அடைய வல்லார் அமருலகம் ஆளப்பெறுவார்களே. 3

பூவும் நீரும் பலியும் சுமந்து புகலூரரையே
நாவினாலே நவின்று ஏத்தல் ஓவார் செவித்துளைகளால்
யாவும் கேளார் அவன் பெருமைஅல்லால் அடியார்கள்தாம்
ஓவும் நாளும் உணர்வு ஒழிந்த நாள் என்றுஉளம் கொள்ளவே. 4

அன்னம் கன்னிப்பெடை புல்கி ஒல்கி அணி நடைய வாய்ப்
பொன் அம்காஞ்சி மலர்ச்சின்னம் ஆலும் புகலூர்தனுள்
முன்னம் மூன்றுமதில் எரித்த மூர்த்தி திறம் கருதுங்கால்
இன்னர் என்னப் பெரிது அரியர் ஏத்தச் சிறிது எளியரே.5

குலவராகக் குலம் இலருமாகக் குணம் புகழுங்கால்
உலகில் நல்ல கதி பெறுவரேனும் அலர் ஊறு தேன்
புலவம் எல்லாம் வெறிகமழும் அம் தண் புகலூர்தனுள்
நிலவம் மல்கு சடை அடிகள் பாதம் நினைவார்களே. 6

ஆணும் பெண்ணும் என நிற்பரேனும் அரவு ஆரமாப்
பூணுமேனும் புகலூர்தனக்கு ஓர்பொருள் ஆயினான்
ஊணும் ஊரார் இடு பிச்சை ஏற்று உண்டு உடைகோவணம்
பேணுமேனும் பிரான் என்பரால் எம்பெருமானையே. 7

உய்ய வேண்டில் எழு போத நெஞ்சே உயர் இலங்கைக் கோன்
கைகள் ஒல்கக் கருவரை எடுத்தானை ஓர்விரலினால்
செய்கை தோன்றச் சிதைத்து அருள வல்ல சிவன் மேய பூம்
பொய்கை சூழ்ந்த புகலூர் புகழப் பொருள் ஆகுமே. 8

நேமியானும் முகம்நான்கு உடையந் நெறி அண்ணலும்
ஆம் இது தகைந்து ஏத்தப் போய் ஆர்அழல் ஆயினான்
சாமிதாதை சரண் ஆகும் என்று தலைசாய்மினோ
பூமிஎல்லாம் புகழ் செல்வம் மல்கும் புகலூரையே. 9

வேர்த்த மெய்யர் உருவத்து உடைவிட்டு உழல்வார்களும்
போர்த்த கூறைப் போதி நீழலாரும் புகலூர்தனுள்
தீர்த்தம்எல்லாம் சடைக் கரந்த தேவன் திறம் கருதுங்கால்
ஓர்த்து மெய் என்று உணராது பாதம் தொழுது உய்ம்மினே. 10

புந்தி ஆர்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பல்பொடிப் பூச வல்ல விடைஊர்தியை
அந்தம் இல்லா அனல்ஆடலானை அணி ஞானசம்
பந்தன் சொன்ன தமிழ் பாடி ஆடக் கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

236. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்

திருமுறை : 2/92 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : வர்த்தமானீச்சுவரர் இறைவியார் : கருந்தார்க்குழலி

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்இருள் ஆடும் நாதனார் நவின்று உறை கோயில்
புள் தன் பேடையொடு ஆடும் பூம் புகலூர்த் தொண்டர் போற்றி
வட்டம் சூழ்ந்து அடி பரவும் வர்த்தமானீச்சரத்தாரே. 1

முயல் வளாவிய திங்கள் வாள்முகத்து அரிவையில் தெரிவை
இயல் வளாவியது உடைய இன் அமுது எந்தை எம்பெருமான்
கயல் வளாவிய கழனிக் கருநிறக் குவளைகள் மலரும்
வயல் வளாவிய புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே. 2

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டுகொண்டு அடி பரவிக் குறிப்பு அறி முருகன் செய் கோலம்
கண்டுகண்டு கண் குளிரக் களி பரந்து ஒளி மல்கு கள் ஆர்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே. 3

பண்ண வண்ணத்தர் ஆகிப் பாடலொடு ஆடல் அறாத
விண்ண வண்ணத்தர் ஆய விரி புகலூர் ஓர்பாகம்
பெண்ண வண்ணத்தர் ஆகும் பெற்றியொடு ஆண் இணைபிணைந்த
வண்ண வண்ணத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே. 4

ஈசன் ஏறு அமர் கடவுள் இன்அமுது எந்தை எம்பெருமான்
பூசும் மாசு இல் வெண் நீற்றர் பொலிவு உடைப் பூம் புகலூரில்
மூசு வண்டு அறை கொன்றை முருகன் முப்போதும் செய் முடிமேல்
வாசமாமலர் உடையார் வர்த்தமானீச்சரத்தாரே. 5

தளிர் இளங் கொடி வளரத் தண்கயம் இரிய வண்டு ஏறிக்
கிளர் இளம் உழை நுழையக் கிழிதரு பொழில் புகலூரில்
உளர் இளஞ் சினை மலரும் ஒளிதரு சடைமுடிஅதன் மேல்
வளர் இளம்பிறை உடையார் வர்த்தமானீச்சரத்தாரே. 6

தென்சொல் விஞ்சு அமர் வடசொல் திசைமொழி எழில் நரம்பு எடுத்துத்
துஞ்சு நெஞ்சு இருள் நீங்கத் தொழுது எழு தொல் புகலூரில்
அஞ்சனம் பிதிர்ந்தனைய அலைகடல் கடைய அன்று எழுந்த
வஞ்ச நஞ்சு அணி கண்டர் வர்த்தமானீச்சரத்தாரே. 7

சாமவேதம் ஓர் கீதம் ஓதி அத் தசமுகன் பரவும்
நாமதேயம் அது உடையார் நன்குணர்ந்து அடிகள்என்று ஏத்தக்
காம தேவனை வேவக் கனல்எரி கொளுவிய கண்ணார்
வாம தேவர்தண் புகலூர் வர்த்தமானீச்சரத்தாரே. 8

சீர் அணங்கு உற நின்ற செரு உறு திசைமுகனோடு
நாரணன் கருத்தழிய நகை செய்த சடைமுடி நம்பர்
ஆரணங்குறும் உமையை அஞ்சுவித்து அருளுதல் பொருட்டால்
வாரணத்துஉரி போர்த்தார் வர்த்தமானீச்சரத்தாரே. 9

கையில் உண்டு உழல்வாரும் கமழ் துவர் ஆடையினால் தம்
மெய்யைப் போர்த்து உழல்வாரும் உரைப்பன மெய் என விரும்பேல்
செய்யில் வாளைகளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மை கொள் கண்டத்து எம்பெருமான் வர்த்தமானீச்சரத்தாரே.10

பொங்கு தண்புனல் சூழ்ந்து போது அணிபொழில் புகலூரில்
மங்குல் மா மதி தவழும் வர்த்தமானீச்சரத்ததரைத்
தங்கு சீர் திகழ் ஞானசம்பந்தன் தண்தமிழ்பத்தும்
எங்கும் ஏத்த வல்லார்கள் எய்துவர் இமையவர்உலகே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருப்புகலூரில் முருகநாயனாரது திருமடத்தி லெழுந்தருளியிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருபுப்கலூர்த் திருக்கோயிலிலுள்ள திருவர்த்தமானீச்சரத்தை வணங்கி இப்பதிகம் பாடி அதல் மூன்றாந் திருப்பாட்டில் 'குறிப்பறி முருகன் செய்கோலம்' எனவும் ஐந்தால் திருப்பாட்டில் 'முருகன் முப்போதுஞ் செய்முடிமேல் வாசமாமலருடையார்' எனவும் அந்நாயனாரது திருப்பள்ளித்தாமத் திருத்தொண்டினைச் சிறப்பித்தருளினார்.

237. திருஇராமனதீச்சரம்

திருமுறை : 1/15 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : இராமநாதர் இறைவியார் : சரிவார்குழலி

சங்கு ஒளிர் முன்கையர் தம்இடையே
அங்கு இடு பலி கொளுமவன் கோபப்
பொங்கு அரவு ஆடலோன் புவனிஓங்க
எங்கும் மன் இராமனதீச்சரமே. 1

சந்த நல்மலர் அணி தாழ்சடையன்
தந்த மதத்தவன் தாதையோ தான்
அந்தம் இல் பாடலோன் அழகன் நல்ல
எம் தவன் இராமனதீச்சரமே. 2

தழைமயில்ஏறவன் தாதையோ தான்
மழை பொதி சடையவன் மன்னு காதில்
குழைஅது விலங்கிய கோல மார்பின்
இழையவன் இராமனதீச்சரமே. 3

சத்தியுள்ஆதிஓர்தையல் பங்கன்
முத்திஅது ஆகிய மூர்த்தியோ தான்
அத்திய கையினில் அழகு சூலம்
வைத்தவன் இராமனதீச்சரமே. 4

தாழ்ந்த குழல்சடைமுடி அதன்மேல்
தோய்ந்த இளம்பிறை துளங்கு சென்னிப்
பாய்ந்த கங்கையொடு படஅரவம்
ஏய்ந்தவன் இராமனதீச்சரமே. 5

சரிகுழல் இலங்கியதையல் காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவன் ஆடலோன் அங்கை ஏந்தும்
எரியவன் இராமனதீச்சரமே. 6

மாறு இலா மாது ஒருபங்கன் மேனி
நீறுஅது ஆடலோன் நீள்சடைமேல்
ஆறுஅது சூடுவான் அழகன் விடை
ஏறவன் இராமனதீச்சரமே. 7

தடவரை அரக்கனைத் தலை நெரித்தோன்
படஅரவு ஆட்டிய படர்சடையன்
நடம்அது ஆடலான் நால்மறைக்கும்
இடமவன் இராமனதீச்சரமே. 8

தனம் அணி தையல்தன் பாகன்தன்னை
அனம் அணி அயன் அணிமுடியும் காணான்
பனம் அணி அரவு அரி பாதம் காணான்
இனம் அணி இராமனதீச்சரமே. 9

தறி போல் ஆம் சமணர்சாக்கியர் சொல் கொளேல்
அறிவோரால் நாமம் அறிந்து உரைமின்
மறி கையோன் தன் முடி மணி ஆர் கங்கை
எறியவன் இராமனதீச்சரமே. 10

தேன்மலர்க் கொன்றையோன் ....
.... உந்தமக்கு ஊனம்அன்றே. 11

திருச்சிற்றம்பலம்

238. திருச்செங்காட்டங்குடி

திருமுறை : 1/61 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : கணபதீச்சுரர் இறைவியார் : திருக்குழல்நன்மாது

நறை கொண்ட மலர் தூவி விரை அளிப்ப நாள்தோறும்
முறை கொண்டு நின்று அடியார் முட்டாமே பணி செய்யச்
சிறை கொண்ட வண்டு அறையும் செங்காட்டங்குடி அதனுள்
கறை கொண்ட கண்டத்தான் கணபதீச்சரத்தானே. 1

வார் ஏற்ற பறை ஒலியும் சங்குஒலியும் வந்து இயம்ப
ஊர் ஏற்ற செல்வத்தோடு ஓங்கிய சீர் விழவு ஓவாச்
சீர் ஏற்றம் உடைத்துஆய செங்காட்டங்குடி அதனுள்
கார் ஏற்ற கொன்றையான் கணபதீச்சரத்தானே. 2

வரந்தையான் சோபுரத்தான் மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான் கிண்கிணியான் கையதுஓர்
சிரந்தையான் செங்காட்டம் குடியான் செஞ்சடை சேரும்
கரந்தையான் வெண்நீற்றான் கணபதீச்சரத்தானே. 3

தொங்கலும் கமழ்சாந்தும் அகில்புகையும் தொண்டர்கொண்டு
அங்கையால் தொழுதுஏத்த அருச்சுனற்கு அன்று அருள்செய்தான்
செங்கயல்பாய் வயல்உடுத்த செங்காட்டங்குடி அதனுள்
கங்கை சேர் வார்சடையான் கணபதீச்சரத்தானே. 4

பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்று ஆட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்து அடியார் புரிந்து ஏத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங்குடி அதனுள்
காலினால் கூற்று உதைத்தான் கணபதீச்சரத்தானே. 5

நுண்ணியான் மிகப்பெரியான் ஓஉளார் வாய் உளான்
தண்ணியான் வெய்யான் நம் தலைமேலான் மனத்து உளான்
திண்ணியான் செங்காட்டங்குடியான் செஞ்சடை மதியக்
கண்ணியான் கண்நுதலான் கணபதீச்சரத்தானே. 6

மையினார் மலர்நெடுங்கண் மலைமகள் ஓர் பாகம்ஆம்
மெய்யினான் பைஅரவம் அரைக்கு அசைத்தான் மீன்பிறழ் அச்
செய்யின் ஆர் தண் கழனிச் செங்காட்டங்குடி அதனுள்
கையினார் கூர் எரியான் கணபதீச்சரத்தானே. 7

தோடு உடையான் குழை உடையான் அரக்கன்தன் தோள்அடர்த்த
பீடு உடையான் போர் விடையான் பெண் பாகம் மிகப் பெரியான்
சேடு உடையான் செங்காட்டங்குடி உடையான் சேர்ந்துஆடும்
காடு உடையான் நாடு உடையான் கணபதீச்சரத்தானே.8

ஆன் ஊரா உழிதருவான் அன்று இருவர் தேர்ந்து உணரா
வான்ஊரான் வையகத்தான் வாழ்த்துவார் மனத்து உளான்
தேன்ஊரான் செங்காட்டங்குடியான் சிற்றம்பலத்தான்
கான்ஊரான் கழுமலத்தான் கணபதீச்சரத்தானே. 9

செடி நுகரும் சமணர்களும் சீவரத்த சாக்கியரும்
படி நுகராது அயர் உழப்பார்க்கு அருளாத பண்பினான்
பொடி நுகரும் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே. 10

கறை இலங்கு மலர்க்குவளை கண் காட்டக் கடிபொழிலின்
நறை இலங்கு வயல் காழித் தமிழ்ஞானசம்பந்தன்
சிறை இலங்கு புனல் படப்பைச் செங்காட்டங்குடி சேர்த்தும்
மறை இலங்கு தமிழ் வல்லார் வான்உலகத்து இருப்பாரே.11

திருச்சிற்றம்பலம்

239. திருச்செங்காட்டங்குடி

திருமுறை : 3/63 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

பைங்கோட்டு மலர்ப் புன்னைப் பறவைகாள் பயப்பு ஊரச்
சங்கு ஆட்டம் தவிர்த்து என்னைத் தவிரா நோய் தந்தானே
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டன் பணி செய்ய
வெங்காட்டுள் அனல் ஏந்தி விளையாடும் பெருமானே. 1

பொன்னம் பூங் கழிக் கானல் புணர்துணையோடு உடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள் அகன்றும் போய் வருவீர்காள்
கன்நவில் தோள் சிறுத்தொண்டன் கணபதீச்சரம்மேய
இன்அமுதன் இணைஅடிக்கீழ் எனது அல்லல் உரையீரே. 2

குட்டத்தும் குழிக் கரையும் குளிர்பொய்கைத் தடத்துஅகத்தும்
இட்டத்தால் இரை தேரும் இருஞ் சிறகின் மடநாராய்
சிட்டன் சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
வட்டவார்சடையார்க்கு என் வருத்தம் சென்று உரையாயே. 3

கான் அருகும் வயல் அருகும் கழி அருகும் கடல்அருகும்
மீன் இரிய வருபுனலில் இரை தேர் வெண் மடநாராய்
தேன் அமர் தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
வான் அமரும் சடையார்க்குஎன் வருத்தம் சென்று உரையாயே.4

ஆரல் ஆம் சுறவம் மேய்ந்து அகன் கழனிச் சிறகு உலர்த்தும்
பாரல் வாய்ச் சிறு குருகே பயில் தூவி மடநாராய்
சீர் உலாம் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
நீர் உலாம் சடையார்க்கு என் நிலைமை சென்று உரையீரே. 5

குறைக் கொண்டார் இடர் தீர்த்தல் கடன் அன்றே குளிர்பொய்கைத்
துறைக் கெண்டை கவர் குருகே துணை பிரியா மடநாராய்
கறைக்கண்டன் பிறைச்சென்னிக் கணபதீச்சரம் மேய
சிறுத்தொண்டன்பெருமான் சீர் அருள்ஒருநாள் பெறலாமே.6

கரு அடிய பசுங் கால் வெண்குருகே ஒண் கழி நாராய்
ஒரு அடியாள் இரந்தாள் என்று ஒரு நாள் சென்று உரையீரே
செறு வடிதோள் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
திருவடிதன் திருஅருளே பெறலாமோ திறத்தவர்க்கே. 7

கூர் ஆரல் இரை தேர்ந்து குளம் உலவி வயல் வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கு ஒன்று உரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
பேராளன் பெருமான்தன் அருள் ஒரு நாள் பெறலாமே. 8

நறப் பொலி பூங் கழிக் கானல் நவில் குருகே உலகுஎல்லாம்
அறப் பலி தேர்ந்து உழல்வார்க்கு என் அலர் கோடல் அழகியதே
சிறப்பு உலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
பிறப்பிலி பேர் பிதற்றி நின்று இழக்கோ எம் பெரு நலமே. (9 –10)

செந்தண் பூம் புனல் பரந்த செங்காட்டங்குடி மேய
வெந்தநீறு அணி மார்பன் சிறுத்தொண்டன்அவன் வேண்ட
அம்தண் பூங் கலிக் காழி அடிகளையே அடி பரவும்
சந்தம் கொள் சம்பந்தன் தமிழ்உரைப்போர் தக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருநாகைக்காரோணம், திருக்கீழ்வேளூர் என்னுந் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருள அதனை அறிந்த சிறுத்தொண்ட நாயனார் பெருமகிழ்ச்சி கொண்டு ஓடிச்சென்று எதிர்கொண்டு தம்பதியிலெழுந்தருள் வித்தார். எழுந்தருளிய பிள்ளையார் அவரோடு திருக்கோயிலை அடைந்து இறைவனைப் பணிந்து அவ்விறைவர் சிறுத்தொண்டர் தொழவிருந்த தன்மையைத் திருப்பாட்டுகள் தோறும் வைத்துச் 'சிறுத்தொண்டன் பணி செய்ய, வெங்காடடுளனலேந்தி விளையாடும் பெருமானே' என்பன வாதியாய மொழிகளாற் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார்.

240. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

திருமுறை : 1/6 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

இறைவர் : மாணிக்கவண்ணர் இறைவியார் : வண்டுவார்குழலி

அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடி பரவ
மங்குல்மதி தவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயல் ஆர் புனல் செல்வம் மல்கு
சீர் கொள் செங்காட்டங்குடி அதனுள்
கங்குல் விளங்கு எரி ஏந்தி ஆடும்
கணபதிஈச்சரம் காமுறவே. 1

நெய்தவழ் மூஎரி காவல்ஓம்பும்
நேர்புரி நூல் மறையாளர் ஏத்த
மைதவழ் மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செய்தவ நான் மறையோர்கள் ஏத்தும்
சீர்கொள் செங் காட்டங்குடி அதனுள்
கைதவழ் கூர் எரி ஏந்திஆடும்
கணபதிஈச்சரம் காமுறவே. 2

தோலொடு நூல் இழை சேர்ந்த மார்பர்
தொகு மறையோர்கள் வளர்ந்த செந்தீ
மால்புகை போய் விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
சேல்புல்கு தண்வயல் சோலைசூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கால்புல்கு பைங்கழல் ஆர்க்க ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 3

நாமரு கேள்வியர் வேள்வி ஓவா
நான்மறையோர் வழிபாடு செய்ய
மாமருவும் மணிக்கோயில் மேய
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
தேமரு பூம்பொழில் சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
காமரு சீர் மகிழ்ந்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 4

பாடல் முழவும் விழவும் ஓவாய்
பன்மறையோர் அவர்தாம் பரவ
மாட நெடுங்கொடி விண்தடவும்
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
சேடக மாமலர்ச்சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
காடகமே இடமாக ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 5

புனைஅழல் ஓம்புகை அந்தணாளர்
பொன்னடி நாள்தொறும் போற்றி இசைப்ப
மனைகெழு மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
சினைகெழு தண்வயல் சோலைசூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கனைவளர் கூர் எரி ஏந்தி ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. (6–7)

பூண்தங்கு மார்பின் இலங்கை வேந்தன்
பொன்நெடும் தோள்வரையால் அடர்த்து
மாண்தங்கு நூல்மறையோர் பரவ
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
சேண்தங்கு மா மலர்ச்சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
காண்தங்கு தோள்பெயர்த்து எல்லிஆடுங்
கணபதி ஈச்சரம் காமுறவே. 8

அந்தமும் ஆதியும் நான்முகனும்
அரவு அணையானும் அறிவுஅரிய
மந்திர வேதங்கள் ஓதுநாவர்
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செந்தமிழோர்கள் பரவி ஏத்தும்
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கந்தம் அகில் புகையே கமழும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 9

இலை மருதே அழகாக நாளும்
இடு துவர்க்காயொடு சுக்குத் தின்னும்
நிலை அமண் தேரரை நீங்கி நின்று
நீதர் அல்லார் தொழும் மா மருகல்
மலைமகள் தோள் புணர்வாய் அருளாய்
மாசில் செங்காட்டங்குடி அதனுள்
கலை மல்கு தோலுடுத்து எல்லியாடும்
கணபதி ஈச்சரம் காமுறவே. 10

நாலும் குலைக் கமுகு ஓங்கு காழி
ஞானசம்பந்தன் நலம்திகழும்
மாலின் மதி தவழ் மாடம்ஓங்கும்
மருகலில் மற்று அதன் மேல்மொழிந்த
சேலும் கயலும் திளைத்தகண்ணார்
சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
சூலம் வல்லான் கழல் ஏத்துபாடல்
சொல்ல வல்லார் வினை இல்லையாமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

ஆளுடைய பிள்ளையார் திருமருகலில் வணிகன் விடந்தீர்த்து, மணம் புணரும் பெருவாழ்வும் வகுத்து விடை கொடுத்தனுப்பி அமர்கின்ற நாளில், திருச்செங் காட்டங் குடியினின்றும் சிறுத் தொண்டர் எழுந்தருளி வந்து மீண்டும் தமது திருப்பதிக்கு வருமாறு வேண்டினார். பிள்ளையார் தருக்கூட்டத்தோடு திருக்கோயிலுக்குச் சென்று மற்றும் பாங்கர் எங்குஞ்சென்று இறைவனை வணங்குமாறு விரும்பித் தொழும்போது திருமருகற் கோயிலில் இறைவன் திருச்செங் காட்டங்குடிக் கணபதீச் சரத்துள்ள திருவோலக்கத்தைக் காட்டியருள, "அங்கமும் வேதமும் ஓதுநாவர்" என்னுந் திருப்பதிகத்தை எடுத்து "மருகனிலாவியமைந்த, சீர்கொள் செங்காட்டங் குடியதனுள் கணபதீச்சரங் காமுறுதல் என்கொல் சொல்லாய்" என்று வினாவுரையாகப் பாடியருளி, சிறுத்தொண்ட நாயனாருக்கு விடை கொடுத்துத் தாம் திருப்புகலூருக்கு எழுந்தருளினார்.

241. திருமருகல்

திருமுறை : 2/18 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே. 1

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலி நீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலி நீர்மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீலகண்டம் உடையாய் மருகல்
கணி நீலவண்டு ஆர் குழலாள் இவள்தன்
அணி நீலஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய் மருகல்
புலரும்தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள்இவளே. 6

வழுவாள் பெருமான்கழல் வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கல் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலம்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

பதிக வரலாறு :

ஆளுடைய பிள்ளையார் திருமருகலில் வணிகன் விடந்தீர்த்து, மணம் புணரும் பெருவாழ்வும் வகுத்து விடை கொடுத்தனுப்பி அமர்கின்ற நாளில், திருச்செங் காட்டங் குடியினின்றும் சிறுத் தொண்டர் எழுந்தருளி வந்து மீண்டும் தமது திருப்பதிக்கு வருமாறு வேண்டினார். பிள்ளையார் தருக்கூட்டத்தோடு திருக்கோயிலுக்குச் சென்று மற்றும் பாங்கர் எங்குஞ்சென்று இறைவனை வணங்குமாறு விரும்பித் தொழும்போது திருமருகற் கோயிலில் இறைவன் திருச்செங் காட்டங்குடிக் கணபதீச் சரத்துள்ள திருவோலக்கத்தைக் காட்டியருள, "அங்கமும் வேதமும் ஓதுநாவர்" என்னுந் திருப்பதிகத்தை எடுத்து "மருகனிலாவியமைந்த, சீர்கொள் செங்காட்டங் குடியதனுள் கணபதீச்சரங் காமுறுதல் என்கொல் சொல்லாய்" என்று வினாவுரையாகப் பாடியருளி, சிறுத்தொண்ட நாயனாருக்கு விடை கொடுத்துத் தாம் திருப்புகலூருக்கு எழுந்தருளினார்.

241. திருமருகல்

திருமுறை : 2/18 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே. 1

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
ஏந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலி நீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலி நீர்மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணி நீலவண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீலகண்டம் உடையாய் மருகல்
கணி நீலவண்டு ஆர் குழலாள் இவள்தன்
அணி நீலஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய் மருகல்
புலரும்தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள்இவளே. 6

வழுவாள் பெருமான்கழல் வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கல் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலம்கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாதது ஓர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள்இவளை அயர்வு ஆக்கினையே. 9

அறிவுஇல் சமணும் அலர்சாக்கியரும்
நெறிஅல்லன செய்தனர் நின்று உழல்வார்
மறி ஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறி ஆர் குழலி நிறை நீக்கினையே. 10

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடிஉள்குதலால்
இயல் ஞானசம்பந்தன பாடல்வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்தப் பெருமான் திருச்செங்காட்டங் குடியினின்றும் திருமருகலை அடைந்து இறைவனை வணங்கி அங்கிருக்கும் நாள்களில் ஒரு வணிகன் வழிப்போக்கனாய் ஒரு கன்னியை அழைத்துக் கொண்டு வந்து கோயிலின் பக்கலில் ஒரு மடத்திலே இரவில் கண்துயிலும்போது பாம்பு கடித்திறந்தான். அக் கன்னி அவனைப் பாம்பு தீண்டியுந்தான் தீண்டாமல் இருந்து வருந்தி அழுது புரண்டு அரற்றினாள். பலவிதமான தீர்வுகள் செய்தும் அவ்விடம் இறங்கி அவன் பிழைத் தானில்லை. அதனைக் கண்ட அப்பெண் விடியற் காலத்தில் 'அன்னையையும் அத்தனையும் நீத்து உன்னைச் சார்ந்து வந்தேன், நீ அரவானுயிர் நீங்கி இறந்தாய், என்னையும் விட்டு நீத்தாய், இவ்விடுக்கண் தீர்த்து எனக்குக் களைகணாவார் யார் ? வணிககுல

மணியே, யானும் வாழாமல் உயிர் துறக்கின்றேன்' என்று கூறிப் பின்னும் தன்னறிவினால் திருக்கோயிற் றிருவாயில் திசையை நோக்கித் தொழுது 'அடியவர்களாய அமரருய்ய அலைகடல்வாய் விடமுண்ட அமுதமே, நெடியானும் நான்முகனுங் காணாத நீலவிட அரவு அணிந்த நிமலா, வெந்து மாண்ட வேள் உருவினை இரதி வேண்டப் புரிந்தளித்த புண்ணியனே, சீறி வந்த காலனை உதைத்துச் சிறுவனுக்கு அளித்த செய்ய தாளா, இந்த விடக் கொடுவேக நீங்குமாறும், யானிடுக்கண் குழிநின்று ஏறுமாறும் எழின் மருகற் பெருமானே, இரங்காயோ, என்று இறைவனைச் சிந்தித்தழுகின்ற ஓசையை இறைவனை வணங்கக் கோயிலுக்கு வரும் காழிவருங் கவுணியனார் கேட்டுக் கருணை கூர்ந்தாண்டு வந்து பரிவுறும் அவளைப் பார்த்துப் 'பயப்படேல், பருவரலும் நும்பரிசும் பகர்வா' யென்ன அவளும் கரகமலம் உச்சிமேற் கூப்பிக் கண்ணருவி சொரிந்திழியப் பிள்ளையாரை அடிபணிந்து 'வைப்பூர்க்கோனாகிய தாமன் என் தந்தை, இவன் அவன் மருகன், என்னுடன் தோன்றி என்னின் மூத்தார் அறுவரையும் இவனுக்கெனச் சொல்லிச் சொல்லிப் பொருள் பெற்றுப் பிறர்க்குப் கொடுத்தான், தளர்ந்தழியு மிவனுக்காகத் தகவு செய்து அவரை விட்டு இவனுடன் போந்தேன், இவனும் ஈண்டு அரவந் தீண்டி மாண்டான், கடலிற் கலங் கவிழ்த்தார் போல் நின்றேன், சுற்றத்தாரெனத் தோன்றித் துயரொழித்தருளினீர்' என்றிவ்வாறு தன் செய்தி கூறி நின்றாள். உடனே பிள்ளையார் அவனுக்கு அருளுமாறு கருணை மிக்கு விடந்தீரத் திருமருகற் பெருமானை 'இந்த ஒள்ளிழையாள் உண் மெலிவு தகுமோ' என்னும் பொருள் வைத்துச் 'சடையா யெனுமால்' என்றிப் பதிகம் பாடிவிடந் தீர்த்தருளினார். விடந் தீர்ந்தெழுந்த வணிகனும் அப்பெண்ணும் பின் சாயாருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். அவரும், அவ்விருவரும் மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்.

242. திருச்சாத்தமங்கை

திருமுறை : 3/58 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : அயவந்தி நாதர் இறைவியார் : மலர்க்கண்ணம்மை

திரு மலர்க்கொன்றைமாலை திளைக்கும் மதி சென்னி வைத்தீர்
இருமலர்க்கண்ணிதன்னோடு உடன்ஆவதும் ஏற்பது ஒன்றே
பெரு மலர்ச்சோலை மேகம் உரிஞ்சும் பெருஞ் சாத்தமங்கை
அரு மலர் ஆதிமூர்த்தீ அயவந்தி அமர்ந்தவனே. 1

பொடிதனைப் பூசு மார்பில் புரிநூல் ஒரு பால் பொருந்தக்
கொடி அன சாயலாளோடு உடன்ஆவதும் கூடுவதே
கடி மணம் மல்கி நாளும் கமழும் பொழில் சாத்த மங்கை
அடிகள் நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே. 2

நூல் நலம் தங்கு மார்பில் நுகர் நீறு அணிந்து ஏறு அது ஏறி
மான் அன நோக்கிதன்னோடு உடன்ஆவதும் மாண்பதுவே
தான் நலம் கொண்டு மேகம் தவழும் பொழில் சாத்தமங்கை
ஆன் நலம் தோய்ந்த எம்மான் அயவந்தி அமர்ந்தவனே.3

மற்ற வில் மால்வரையா மதில் எய்து வெண்நீறு பூசிப்
புற்று அரவு அல்குலாளோடு உடன்ஆவதும் பொற்பதுவே
கற்றவர் சாத்தமங்கைநகர் கைதொழச் செய்த பாவம்
அற்றவர் நாளும் ஏத்த அயவந்தி அமர்ந்தவனே. 4

வெந்தவெண்நீறு பூசி விடை ஏறிய வேதகீதன்
பந்து அணவும் விரலாள் உடன் ஆவதும் பாங்கதுவே
சந்தம் ஆறுஅங்கம் வேதம் தரித்தார் தொழும் சாத்தமங்கை
அந்தமாய் ஆதிஆகி அயவந்தி அமர்ந்தவனே. 5

வேதம்ஆய் வேள்விஆகி விளங்கும் பொருள் வீடுஅதுஆகிச்
சோதிஆய் மங்கை பாகம் நிலைதான் சொல்லல்ஆவது ஒன்றே
சாதியால் மிக்க சீரால் தகுவார் தொழும் சாத்தமங்கை
ஆதிஆய் நின்ற பெம்மான் அயவந்தி அமர்ந்தவனே. 6

இமயம்எல்லாம் இரிய மதில் எய்து வெண்நீறு பூசி
உமையை ஓர்பாகம் வைத்த நிலைதான் உன்னல் ஆவது ஒன்றே
சமயம் ஆறுஅங்கம் வேதம் தரித்தார் தொழும் சாத்தமங்கை
அமைய வேறு ஓங்கு சீரான் அயவந்தி அமர்ந்தவனே. 7

பண் உலாம் பாடல் வீணை பயில்வான் ஓர் பரமயோகி
விண் உலாம் மால்வரையான்மகள் பாகமும் வேண்டினையே
தண்நிலாவெண்மதியம் தவழும் பொழில் சாத்தமங்கை
அண்ணலாய் நின்ற எம்மான் அயவந்தி அமர்ந்தவனே.8

பேர் எழில் தோள் அரக்கன் வலி செற்றதும் பெண் ஓர் பாகம்
ஈர் எழில் கோலம்ஆகி உடன்ஆவதும் ஏற்பதுஒன்றே
கார்எழில்வண்ணனோடு கனகம் அனையானும் காணா
ஆர்அழல்வண்ண மங்கை அயவந்தி அமர்ந்தவனே. 9

கங்கை ஓர் வார்சடைமேல் அடையப் புடையே கமழும்
மங்கையோடு ஒன்றி நின்ற அம்மதிதான் சொல்லல்ஆவது ஒன்றே
சங்கை இல்லா மறையோர் அவர்தாம் தொழு சாத்தமங்கை
அங்கையில் சென்னி வைத்தாய் அயவந்தி அமர்ந்தவனே. 10

மறையினார் மல்கு காழித் தமிழ் ஞானசம்பந்தன் மன்னும்
நிறையின் ஆர் நீலநக்கன் நெடு மா நகர் என்று தொண்டர்
அறையும் ஊர் சாத்தமங்கை அயவந்திமேல் ஆய்ந்த பத்தும்
முறைமையால் ஏத்த வல்லார் இமையோரிலும் முந்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருநள்ளாற்றை வணங்கி வழிபட்ட பிள்ளையார் திருச்சாத்த மங்கைக்கு எழுந்தருளியபோது திருநிலநக்க நாயனார் நகரை அலங்கரித்து எதிர்கொண்டுவந்து வணங்கி அளவளாவினார். அளவளாவிய பிள்ளையார் அந்நாயனாரோடு திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி வழிபட்டு மீண்டு அன்று அவர் திருமனையில் திருவமுது செய்தருளினார். மறுநாள் திருக்கோயிலை யடைந்து இறைவனை இத்திருப்பதிகங் கொண்டு துதித்துப் பாடியதில் 'சாத்தமங்கை யடிகணக்கன் பரவ வய வந்திய மர்ந்தவனே' என்று இரண்டாந் திருப்பாட்டினும், 'மன்னு நிறையினார் நீலநக்கனெடு மாநகரென்று தொண்டர் அறையுமூர் சாத்தமங்கை' எறு திருக்கடைக் காப்பினும் அந்நாயனாரைச் சிறப்பித்தருளினார்.

243. திருநாகைக்காரோணம்

திருமுறை : 1/84 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி

இறைவர் : காயாரோகணேசுவரர் இறைவியார் : நீலாயதாட்சியம்மை

புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல் பாய
நனையும் சடைமேல்ஓர் நகுவெண்தலை சூடி
வினை இல் அடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையும் கடல் நாகைக்காரோணத்தானே. 1

பெண் ஆண் என நின்ற பெம்மான் பிறைச் சென்னி
அண்ணாமலைநாடன் ஆரூர் உறை அம்மான்
மண் ஆர் முழவு ஓவா மாடம் நெடுவீதிக்
கண் ஆர் கடல் நாகைக்காரோணத்தானே. 2

பாரோர் தொழ விண்ணோர் பணியம் மதில்மூன்றும்
ஆரார் அழலூட்டி அடியார்க்கு அருள்செய்தான்
தேர் ஆர் விழவு ஓவாச் செல்வன் திரை சூழ்ந்த
கார் ஆர் கடல் நாகைக்காரோணத்தானே. 3

மொழி சூழ் மறை பாடி முதிரும் சடைதன்மேல்
அழி சூழ் புனல் ஏற்ற அண்ணல் அணியாய
பழி சூழ்விலர்ஆய பத்தர் பணிந்து ஏத்தக்
கழி சூழ் கடல் நாகைக்காரோணத்தானே. 4

ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச்
சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தைசெய வல்லான்
பேணி வழிபாடு பிரியாது எழும் தொண்டர்
காணும் கடல் நாகைக்காரோணத்தானே. 5

ஏனத்துஎயிறோடும் அரவம் மெய் பூண்டு
வானத்து இளந்திங்கள் வளரும் சடை அண்ணல்
ஞானத் துரை வல்லார் நாளும் பணிந்து ஏத்தக்
கானல் கடல் நாகைக்காரோணத்தானே. 6

அரை ஆர் அழல்நாகம் அக்கோடு அசைத்திட்டு
விரை ஆர் வரைமார்பின் வெண்நீறு அணிஅண்ணல்
வரை ஆர்வன போல வளரும் வங்கங்கள்
கரை ஆர் கடல் நாகைக்காரோணத்தானே. 7

வலம் கொள் புகழ் பேணி வரையால் உயர் திண்தோள்
இலங்கைக்கு இறை வாட அடர்த்து அங்கு அருள்செய்தான்
பலம் கொள் புகழ் மண்ணில் பத்தர் பணிந்து ஏத்தக்
கலம் கொள் கடல் நாகைக்காரோணத்தானே. 8

திருமால் அடி வீழத் திசை நான்முகன் ஏத்தப்
பெருமான் என நின்ற பெம்மான் பிறைச் சென்னிச்
செரு மால்விடை ஊரும் செல்வன் திரை சூழ்ந்த
கருமால்கடல் நாகைக்காரோணத்தானே. 9

நல்லார் அறம் சொல்லப் பொல்லார் புறம்கூற
அல்லார் அலர் தூற்ற அடியார்க்கு அருள்செய்வான்
பல்ஆர்தலைமாலை அணிவான் பணிந்து ஏத்தக்
கல்ஆர் கடல் நாகைக்காரோணத்தானே. 10

கரை ஆர் கடல் நாகைக்காரோணம் மேய
நரை ஆர் விடையானை நவிலும் சம்பந்தன்
உரை ஆர் தமிழ்மாலை பாடும் அவர்எல்லாம்
கரையா உருஆகிக் கலி வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

244. திருநாகைக் காரோணம்

திருமுறை : 2/116 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி
இறைவர் : காயாரோகணேசுவரர் இறைவியார் : நீலாயதாட்சியம்மை

கூனல் திங்கள்குறுங்கண்ணி கான்ற நெடுவெண்நிலா
ஏனல் பூத்தம் மராங் கோதையோடும் விராவும் சடை
வான நாடன் அமரர் பெருமாற்கு இடம்ஆவது
கானல் வேலி கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 1

விலங்கல் ஒன்று சிலையா மதில் மூன்று உடன்வீட்டினான்
இலங்கு கண்டத்து எழில் ஆமை பூண்டாற்கு இடம் ஆவது
மலங்கி ஓங்கிஇவ் வரு வெண்திரை மல்கிய மால்கடல்
கலங்கல் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 2

வெறி கொள் ஆரும் கடல் கைதை நெய்தல் விரி பூம்பொழில்
முறி கொள் ஞாழல் முடப்புன்னை முல்லை முகை வெண்மலர்
நறை கொள் கொன்றை நயந்து ஓங்கும் நாதற்கு இடம் ஆவது
கறை கொள் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.3

வண்டு பாடவளர் கொன்றை மாலை மதியோடு உடன்
கொண்ட கோலம் குளிர்கங்கை தங்கும் குருள்குஞ்சியுள்
உண்டுபோலும் என வைத்து உகந்த ஒருவற்கு இடம்
கண்டல் வேலி கழி சூழ் கடல் நாகைக்கரரோணமே. 4

வார் கொள் கோலம் முலை மங்கைநல்லார் மகிழ்ந்து ஏத்தவே
நீர் கொள் கோலச் சடைநெடு வெண்திங்கள் நிகழ்வு எய்தவே
போர் கொள் சூலப்படை புல்கு கையார்க்கு இடமாவது
கார் கொள் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.5

விடையது ஏறி இவ்விட அரவு அசைத்த விகிர்தர் அவர்
படைகொள் பூதம் பல பாட ஆடும் பரம் ஆயவர்
உடைகொள் வேங்கை உரிதோல் உடையார்க்கு இடமாவது
கடைகொள் செல்வம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 6

பொய்து வாழ்வார் மனம் பாழ்படுக்கும் மலர்ப்பூசனை
செய்து வாழ்வார் சிவன் சேவடிக்கே செலும் சிந்தையார்
எய்த வாழ்வார் எழில் நக்கர் எம்மாற்கு இடமாவது
கைதல் வேலி கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 7

பத்துஇரட்டிதிரள்தோள் உடையான் முடிபத்து இற
அத்து இரட்டி விரலால் அடர்த்தார்க்கு இடமாவது
மைத் திரட்டி வரு வெண்திரை மல்கிய மால்கடல்
கத்து இரட்டும் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 8

நல்ல போதில் உறைவானும் மாலும் நடுக்கத்தினால்
அல்லர் ஆவர் என நின்ற பெம்மாற்கு இடமாவது
மல்லல் ஓங்கி இவ்வரு வெண்திரை மல்கிய மால்கடல்
கல்லல் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே. 9

உயர்ந்த போதின் உருவத்து உடை விட்டு உழல்வார்களும்
பெயர்ந்த மண்டை இடு பிண்டமா உண்டு உழல்வார்களும்
நயந்து காணா வகை நின்ற நாதர்க்கு இடமாவது
கயம் கொள் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.10

மல்கு தண் பூம் புனல் வாய்ந்து ஒழுகும் வயல் காழியான்
நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் நல்லார்கள்முன்
வல்லவாறே புனைந்து ஏத்தும் காரோணத்து வண்தமிழ்
சொல்லுவார்க்கும் இவை கேட்பவர்க்கும் துயர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

245. திருச்சிக்கல்

திருமுறை : 2/8 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : நவநீதநாதர் இறைவியார் : வேல்நெடுங்கண்ணி

வான் உலாவும் மதி வந்து உலவும் மதில் மாளிகை
தேன் உலாவும் மலர்ச்சோலை மல்கும் திகழ் சிக்கலுள்
வேனல் வேளை விழித்திட்ட வெண்ணெய்ப்பெருமான் அடி
ஞானம்ஆக நினைவார் வினைஆயின நையுமே. 1

மடம் கொள் வாளை குதிகொள்ளும் மணமலர்ப்பொய்கை சூழ்
திடம் கொள் மா மறையோர் அவர் மல்கிய சிக்கலுள்
விடம் கொள் கண்டத்து வெண்ணெய்ப் பெருமான் அடி மேவியே
அடைந்து வாழும் அடியார் அவர் அல்லல் அறுப்பரே. 2

நீலம் நெய்தல் நிலவி மலரும் சுனை நீடிய
சேலும் ஆலும் கழனி வளம் மல்கிய சிக்கலுள்
வேல்ஒண்கண்ணியினாளை ஓர்பாகன் வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன் கழல் ஏத்த நம் பாவம் பறையுமே. 3

கந்தம் உந்தக் கைதை பூத்துக் கமழ்ந்து சேரும் பொழில்
செந்து வண்டு இன்இசை பாடல் மல்கும் திகழ் சிக்கலுள்
வெந்தவெண்நீற்று அண்ணல் வெண்ணெய்ப்பிரான் விரையார் கழல்
சிந்தைசெய்வார் வினையாயின தேய்வது திண்ணமே. 4

மங்குல் தங்கும் மறையோர்கள் மாடத்து அயலே மிகு
தெங்கு துங்கப் பொழில் செல்வம் மல்கும் திகழ் சிக்கலுள்
வெங்கண் வெள்ஏறு உடை வெண்ணெய்ப்பிரான் அடி மேவவே
தங்கும் மேன்மை சரதம் திரு நாளும் தகையுமே. 5

வண்டு இரைத்து மது விம்மிய மா மலர்ப்பொய்கை சூழ்
தெண்திரைக் கொள் புனல் வந்து ஒழுகும் வயல் சிக்கலுள்
விண்டு இரைத்து அம்மலரால் திகழ் வெண்ணெய்ப் பெருமான் அடி
கண்டு இரைத்து மனமே மதியாய் கதி ஆகவே. 6

முன்னு மாடம் மதில்மூன்று உடனே எரியாய் விழத்
துன்னு வார்வெங்கணை ஒன்று செலுத்திய சோதியான்
செந்நெல் ஆரும் வயல் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உன்னி நீடம் மனமே நினையாய் வினைஓயவே. 7

தெற்றல்ஆகிய தென்இலங்கைக்கு இறைவன் மலை
பற்றினான் முடிபத்தொடு தோள்கள் நெரியவே
செற்ற தேவன் நம் சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் அடி
உற்று நீ நினையாய் வினை ஆயின ஓயவே. 8

மாலினோடு அருமாமறை வல்ல முனிவனும்
கோலினார் குறுகச் சிவன் சேவடி கோலியும்
சீலம் தாம் அறியார் திகழ் சிக்கல் வெண்ணெய்ப்பிரான்
பாலும் பல்மலர் தூவ பறையும் நம் பாவமே. 9

பட்டை நல் துவர் ஆடையினாரொடும் பாங்குஇலாக்
கட்டு அமண்கழுக்கள் சொல்லினைக் கருதாது நீர்
சிட்டன் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் செழுமாமறைப்
பட்டன் சேவடியே பணிமின் பிணி போகவே. 10

கந்தம் ஆர் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நல்
செந் தண்பூம்பொழில் சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் அடிச்
சந்தமாச் சொன்ன செந்தமிழ் வல்லவர் வான்இடை
வெந்தநீறு அணியும் பெருமான் அடி மேவரே. 11

திருச்சிற்றம்பலம்

246. திருக்கீழ்வேளூர்

திருமுறை : 2/105 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : அட்சயநாதர் இறைவியார் : வனமுலைநாயகி

மின் உலாவிய சடையினர் விடையினர்
 மிளிர்தரும் அரவோடும்
பன் உலாவிய மறைஒலி நாவினர்
 கறை அணி கண்டத்தர்
பொன் உலாவிய கொன்றைஅம்தாரினர்
 புகழ் மிகு கீழ்வேளூர்
உன் உலாவிய சிந்தையர்மேல் வினை
 ஓடிட வீடு ஆமே. 1

நீர் உலாவிய சடைஇடை அரவொடு
மதி சிரம்நிரைமாலை
வார் உலாவிய வனமுலையவளொடு
மணி சிலம்புஅவை ஆர்க்க
ஏர் உலாவிய இறைவனது உறைவிடம்
எழில் திகழ் கீழ்வேளூர்
சீர் உலாவிய சிந்தைசெய்து அணைபவர்
பிணியொடு வினை போமே. 2

வெண்நிலா மிகு விரிசடை அரவொடு
வெள்எருக்கு அலர்மத்தம்
பண் நிலாவிய பாடலோடு ஆடலர்
பயில்வுஉறு கீழ்வேளூர்ப்
பெண் நிலாவிய பாகனைப் பெருந்திருக்
கோயில் எம் பெருமானை
உள் நிலாவி நின்று உள்கிய சிந்தையார்
உலகினில் உள்ளாரே. 3

சேடு உலாவிய கங்கையைச் சடைஇடைத்
தொங்கவைத்து அழகாக
நாடு உலாவிய பலி கொளும் நாதனார்
நலம் மிகு கீழ்வேளூர்ப்
பீடு உலாவிய பெருமையர் பெருந்திருக்
கோயிலுள் பிரியாது
நீடு உலாவிய நிமலனைப் பணிபவர்
நிலை மிகப் பெறுவாரே. 4

துன்று வார்சடைச் சுடர் மதி நகுதலை
வடம் அணி சிரமாலை
மன்று உலாவிய மா தவர் இனிது இயல்
மணம் மிகு கீழ்வேளூர்
நின்று நீடிய பெருந்திருக்கோயிலின்
நிமலனை நினைவோடும்
சென்று உலாவி நின்று ஏத்த வல்லார்வினை
தேய்வது திணம் ஆமே. 5

கொத்து உலாவிய குழல் திகழ் சடையனைக்
கூத்தனை மகிழ்ந்து உள்கித்
தொத்து உலாவிய நூல் அணி மார்பினர்
தொழுது எழு கீழ்வேளூர்ப்
பித்து உலாவிய பத்தர்கள் பேணிய
பெருந்திருக்கோயில் மன்னும்
முத்து உலாவிய வித்தினை ஏத்துமின்
முடுகிய இடர் போமே. 6

பிறை நிலாவிய சடைஇடைப் பின்னலும்
வன்னியும் துன்னாரும்
கறை நிலாவிய கண்டர் எண் தோளினர்
காதல்செய் கீழ்வேளூர்
மறை நிலாவிய அந்தணர் மலிதரு
பெருந்திருக்கோயில் மன்னும்
நிறை நிலாவிய ஈசனை நேசத்தால்
நினைபவர் வினை போமே. 7

மலை நிலாவிய மைந்தன் அம் மலையினை
எடுத்தலும் அரக்கன் தன்
தலை எலாம் தெரிந்து அலறிட ஊன்றினான்
உறைதரு கீழ்வேளூர்க்
கலை நிலாவிய நாவினர் காதல்செய்
பெரும் திருக்கோயிலுள்
நிலை நிலாவிய ஈசனை நேசத்தால்
நினைய வல்வினை போமே. 8

மஞ்சு உலாவிய கடல் கிடந்தவனொடு
மலரவன் காண்பு ஒண்ணாப்
பஞ்சு உலாவிய மெல்வடிப் பார்ப்பதி
பாகனைப் பரிவோடும்
செஞ்சொலார் பலர் பரவிய தொல்புகழ்
மல்கிய கீழ்வேளூர்
நஞ்சு உலாவிய கண்டனை நணுகுமின்
நடலைகள் நணுகாவே. 9

சீறு உலாவிய தலையினர் நிலையிலா
அமணர்கள் சீவரத்தார்
வீறு இலாத வெஞ்சொல்பல விரும்பன்மின்
சுரும்பு அமர் கீழ்வேளூர்
ஏறு உலாவிய கொடியனை ஏதமில்
பெரும் திருக்கோயில் மன்னு
பேறு உலாவிய பெருமையன் திருவடி
பேணுமின் தவமாமே. 10

குருண்ட வார்குழல்சடை உடைக் குழகனை
அழகு அமர் கீழ்வேளூர்த்
திரண்ட மா மறையவர் தொழும் பெருந்திருக்
கோயில் எம் பெருமானை
இருண்ட மேதியின் இனம் மிகு வயல் மல்கு
புகலி மன் சம்பந்தன்
தெருண்ட பாடல் வல்லார் அவர் சிவகதி
பெறுவது திடம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

247. திருத்தேவூர்

திருமுறை : 2/82 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

பண் நிலாவியமொழிஉமை பங்கன் எம்பெருமான்
விண்ணில் வானவர்கோன் விமலன் விடைஊர்தி
தெண்நிலா மதி தவழ்தரு மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.1

ஓதி மண்டலத்தோர் முழுது உய்ய வெற்பு ஏறு
சோதிவானவன் துதிசெய மகிழ்ந்தவன் தூ நீர்த்
தீது இல் பங்கயம் தெரிவையர் முகம்மலர் தேவூர்
ஆதி சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 2

மறைகளால் மிக வழிபடு மாணியைக் கொல்வான்
கறுவு கொண்ட அக் காலனைக் காய்ந்த எம் கடவுள்
செறுவில் வாளைகள் சேல்அவை பொருவயல் தேவூர்
அறவன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 3

முத்தன் சில்பலிக்கு ஊர்தொறும் முறைமுறை திரியும்
பித்தன் செஞ்சடைப் பிஞ்ஞகன் தன் அடியார்கள்
சித்தன் மாளிகை செழு மதி தவழ் பொழில் தேவூர்
அத்தன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 4

பாடுவார் இசை பல்பொருள் பயன் உகந்து அன்பால்
கூடுவார் துணைக் கொண்ட தம் பற்று அறப் பற்றித்
தேடுவார் பொருள்ஆனவன் செறிபொழில் தேவூர்
ஆடுவான் அடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 5

பொங்கு பூண் முலைப் புரிகுழல் வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக் கடவுள் தென்தேவூர்
அங்கணன் தனை அடைந்தனம் அல்லல்ஒன்று இலமே.6

வன் புயத்த அத்தானவர் புரங்களை எரியத்
தன் புயத்து உறத் தடவரை வளைத்தவன் தக்க
தென்தமிழ்க் கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்
அன்பன் சேவடி அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 7

தரு உயர்ந்த வெற்பு எடுத்த அத் தசமுகன் நெரிந்து
வெருவ ஊன்றிய திருவிரல் நெகிழ்த்து வாள் பணித்தான்
தெருவுதோறும் நல் தென்றல் வந்து உலவிய தேவூர்
அரவுசூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 8

முந்திக் கண்ணனும் நான்முகனும் அவர் காணா
எந்தை திண் திறல் இருங்களிறு உரித்த எம்பெருமான்
செந்து இனத்து இசை அறுபதம் முரல் திருத்தேவூர்
அந்திவண்ணனை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே.9

பாறு புத்தரும் தவம் அணி சமணரும் பலநாள்
கூறி வைத்தது ஓர் குறியினைப் பிழைஎனக் கொண்டு
தேறி மிக்க நம் செஞ்சடைக் கடவுள் தென்தேவூர்
ஆறுசூடியை அடைந்தனம் அல்லல் ஒன்று இலமே. 10

அல்லல் இன்றி விண் ஆள்வர்கள் காழியர்க்கு அதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்
எல்லை இல்புகழ் மல்கிய எழில் வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும் வல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

248. திருத்தேவூர்

திருமுறை : 3/74 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

காடு பயில் வீடு முடைஓடு கலன் மூடும்உடை
ஆடை புலிதோல்
தேடு பலி ஊண்அது உடை வேடம் மிகு வேதியர்
திருந்து பதிதான்
நாடகம்அது ஆடமஞ்ஞை பாட அரி கோடல்கை
மறிப்ப நலமார்
சேடு மிகு பேடைஅனம் ஊடி மகிழ் மாடம் மிடை
தேவூர் அதுவே. 1

கோள் அரவு கொன்றை நகுவெண்தலை எருக்கு வனி
கொக்கு இறகொடும்
வாள்அரவு தண்சலமகள் குலவு செஞ்சடை வரத்து
இறைவன் ஊர்

வேள் அரவு கொங்கை இள மங்கையர்கள் குங்குமம்
விரைக்கும் மணம் ஆர்
தேள் அரவு தென்றல் தெரு எங்கும் நிறைவு ஒன்றிவரு
தேவூர் அதுவே. 2

பண்தடவுசொல்லின்மலைவல்லிஉமை பங்கன் எமை
ஆளும் இறைவன்
எண் தடவு வானவர் இறைஞ்சு கழலோன் இனிது
இருந்த இடமாம்
விண் தடவு வார் பொழில் உகந்த நறவுஆடி மலர்
சூடி விரைஆர்
செண் தடவும் மாளிகை செறிந்து திரு ஒன்றிவளர்
தேவூர் அதுவே. 3

மாசில் மன நேசர் தமது ஆசை வளர் சூலதரன்
மேலை இமையோர்
ஈசன் மறைஓதி எரிஆடி மிகு பாசுபதன்
மேவு பதிதான்
வாசமலர் கோதுகுயில் வாசகமும் மாதர்அவர்
பூவை மொழியும்
தேச ஒலி வீணையொடு கீதம்அது வீதிநிறை
தேவூர் அதுவே. 4

கானம் உறு மான்மறியன் ஆனைஉரிபோர்வை கனல்
ஆடல் புரிவோன்
ஏனஎயிறு ஆமை இள நாகம் வளர் மார்பின்
இமையோர் தலைவன் ஊர்

வான் அணவு சூதம் இள வாழை மகிழ் மாதவி
பலா நிலவி வார்
தேன்அமுது உண்டு வரிவண்டு மருள் பாடி வரு
தேவூர் அதுவே. 5

ஆறினொடு கீறுமதி ஏறு சடை ஏறன் அடையார்
நகர்கள் தான்
சீறும் அவை வேறுபட நீறு செய்த நீறன் நமை
ஆளும் அரன் ஊர்
வீறு மலர் ஊறும் மது ஏறி வளர்வுஆய
விளைகின்ற கழனிச்
சேறு படு செங்கயல் விளிப்ப இள வாளை வரு
தேவூர் அதுவே. 6

கன்றி எழ வென்றி நிகழ் துன்று புரம் அன்று அவிய
நின்று நகைசெய்
என்தனது சென்றுநிலை எந்தை தன தந்தை அமர்
இன்ப நகர் தான்
முன்றில்மிசை நின்ற பலவின் கனிகள் தின்று
கறவைக் குருளைகள்
சென்று இசைய நின்று துளி ஒன்ற விளையாடி வளர்
தேவூர் அதுவே. 7

ஓதம் மலிகின்ற தென்இலங்கை அரையன்மலி
புயங்கள் நெரியப்
பாதம் மலிகின்ற விரல் ஒன்றினில் அடர்த்த பரமன்
தனது இடம்

போதம் மலிகின்ற மடவார்கள் நடம் ஆடலொடு
பொங்கும் முரவம்
சேதம் மலிகின்ற கரம் வென்றி தொழிலாளர் புரி
தேவூர் அதுவே. 8

வண்ணம் முகில் அன்ன எழில் அண்ணலொடு சுண்ணம் மலி
வண்ணம் மலர்மேல்
நண் அவனும் எண் அரிய விண்ணவர்கள் கண்ணவன்
நலம் கொள் பதிதான்
வண்ண வன நுண்இடையின் எண் அரிய அன்னநடை
இன்மொழியினார்
திண்ண வணமாளிகை செறிந்த இசையாழ் மருவு
தேவூர் அதுவே. 9

பொச்சம் அமர் பிச்சை பயில் அச் சமணும் எச்சம் அறு
போதியரும் ஆம்
மொச்சை பயில் இச்சை கடி பிச்சன் மிகு நச்சுஅரவன்
மொச்ச நகர்தான்
மைச் சில்முகில் வைச்சபொழில் 10

துங்கம் மிகு பொங்கு அரவு தங்கு சடை நங்கள் இறை
துன்று குழல் ஆர்
செங்கயல்கள் மங்கை உமை நங்கை ஒரு பங்கன் அமர்
தேவூர் அதன்மேல்
பைங்கமலம் அங்கு அணி கொள் திண் புகலி ஞானசம்
பந்தன் உரைசெய்
சங்கம் மலி செந்தமிழ்கள் பத்தும்இவை வல்லவர்கள்
சங்கை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

249. திருஆரூர்

திருமுறை : 1/91 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி
இறைவர் : வண்மீகநாதர், புற்றிடங்கொண்டார் இறைவியார் : அல்லியங்கோதையம்மை

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை
பத்தி மலர் தூவ, முத்தி ஆகுமே. 1

பிறவி அறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவாது ஏத்துமின், துறவி ஆகுமே. 2

துன்பம் துடைப்பீர்காள், அன்பன் அணி ஆரூர்
நன்பொன்மலர் தூவ, இன்பம்ஆகுமே. 3

உய்யல்உறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையினால் தொழ, நையும் வினைதானே. 4

பிண்டம் அறுப்பீர்காள், அண்டன் ஆரூரைக்
கண்டு மலர் தூவ, விண்டு வினை போமே. 5

பாசம் அறுப்பீர்காள், ஈசன் அணி ஆரூர்
வாசமலர் தூவ, நேசம் ஆகுமே. 6

வெய்ய வினை தீர, ஐயன் அணி ஆரூர்
செய்யமலர் தூவ, வையம் உமதுஆமே. 7

அரக்கன் ஆண்மையை, நெருக்கினான் ஆரூர்
கரத்தினால் தொழத், திருத்தம் ஆகுமே. 8

துள்ளும் இருவர்க்கும், வள்ளல் ஆரூரை
உள்ளுமவர் தம்மேல், வி்ள்ளும் வினைதானே. 9

கடுக் கொள் சீவரை, அடக்கினான் ஆரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. 10

சீர் ஊர் சம்பந்தன், ஆரூரைச் சொன்ன
பார் ஊர் பாடலார், பேரார் இன்பமே. 11

250. திருஆரூர்

திருமுறை : 1/105 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

பாடலன் நால்மறையன் படி பட்ட கோலத்தன் திங்கள்
குடலன் மூஇலைய சூலம் வலன்ஏந்திக்
கூடலர் மூஎயிலும் எரி உண்ணக் கூர் எரி கொண்டு எல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே. 1

சோலையில் வண்டு இனங்கள் சுரும்போடு இசை முரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகை போய் முகில் தோயும் ஆரூரில்
பாலொடு நெய் தயிரும் பயின்று ஆடும் பரமேட்டி பாதம்
காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே. 2

உள்ளம் ஓர் இச்சையினால் உகந்து ஏத்தித் தொழுமின் தொண்டீர் மெய்யே
கள்ளம் ஒழிந்திடுமின் கரவாது இருபொழுதும்
வெள்ளம் ஓர் வார்சடை மேல் கரந்திட்ட வெள்ஏற்றான் மேய
அள்ளல் அகன் கழனி ஆரூர் அடைவோமே. 3

வெந்துஉறு வெண்மழுவாள்படையான் மணிமிடற்றான் அரையின்
ஐந்தலை ஆடரவம் அசைந்தான் அணிஆரூர்ப்
பைந்தளிர்க் கொன்றை அம்தார்ப் பரமன் அடி பரவப் பாவம்
நைந்து அறும் வந்து அணையும் நாள்தொறும் நல்லனவே. 4

வீடு பிறப்பு எளிதுஆம் அதனை வினவுதிரேல் வெய்ய
காடு இடம் ஆக நின்று கனல் ஏந்திக் கைவீசி
ஆடும் அவிர்சடையான் அவன் மேய ஆரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே. 5

249. திருஆரூர்

திருமுறை : 1/91 பண் : குறிஞ்சி இராகம் : அரிகாம்போதி
இறைவர் : வண்மீகநாதர், புற்றிடங்கொண்டார் இறைவியார் : அல்லியங்கோதையம்மை

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரை
பத்தி மலர் தூவ, முத்தி ஆகுமே. 1

பிறவி அறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவாது ஏத்துமின், துறவி ஆகுமே. 2

துன்பம் துடைப்பீர்காள், அன்பன் அணி ஆரூர்
நன்பொன்மலர் தூவ, இன்பம்ஆகுமே. 3

உய்யல்உறுவீர்காள், ஐயன் ஆரூரைக்
கையினால் தொழ, நையும் வினைதானே. 4

பிண்டம் அறுப்பீர்காள், அண்டன் ஆரூரைக்
கண்டு மலர் தூவ, விண்டு வினை போமே. 5

பாசம் அறுப்பீர்காள், ஈசன் அணி ஆரூர்
வாசமலர் தூவ, நேசம் ஆகுமே. 6

வெய்ய வினை தீர, ஐயன் அணி ஆரூர்
செய்யமலர் தூவ, வையம் உமதுஆமே. 7

அரக்கன் ஆண்மையை, நெருக்கினான் ஆரூர்
கரத்தினால் தொழத், திருத்தம் ஆகுமே. 8

துள்ளும் இருவர்க்கும், வள்ளல் ஆரூரை
உள்ளுமவர் தம்மேல், விள்ளும் வினைதானே. 9

கடுக் கொள் சீவரை, அடக்கினான் ஆரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. 10

சீர் ஊர் சம்பந்தன், ஆரூரைச் சொன்ன
பார் ஊர் பாடலார், பேரார் இன்பமே. 11

250. திருஆரூர்

திருமுறை : 1/105 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

பாடலன் நால்மறையன் படி பட்ட கோலத்தன் திங்கள்
சூடலன் மூஇலைய சூலம் வலன்ஏந்திக்
கூடலர் மூஎயிலும் எரி உண்ணக் கூர் எரி கொண்டு எல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே. 1

சோலையில் வண்டு இனங்கள் சுரும்போடு இசை முரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகை போய் முகில் தோயும் ஆரூரில்
பாலொடு நெய் தயிரும் பயின்று ஆடும் பரமேட்டி பாதம்
காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே. 2

உள்ளம் ஓர் இச்சையினால் உகந்து ஏத்தித் தொழுமின் தொண்டீர் மெய்யே
கள்ளம் ஒழிந்திடுமின் கரவாது இருபொழுதும்
வெள்ளம் ஓர் வார்சடை மேல் கரந்திட்ட வெள்ஏற்றான் மேய
அள்ளல் அகன் கழனி ஆரூர் அடைவோமே. 3

வெந்துஉறு வெண்மழுவாள்படையான் மணிமிடற்றான் அரையின்
ஐந்தலை ஆடரவம் அசைந்தான் அணிஆரூர்ப்
பைந்தளிர்க் கொன்றை அம்தாரப் பரமன் அடி பரவப் பாவம்
நைந்து அறும் வந்து அணையும் நாள்தொறும் நல்லனவே. 4

வீடு பிறப்பு எளிதுஆம் அதனை வினவுதிரேல் வெய்ய
காடு இடம் ஆக நின்று கனல் ஏந்திக் கைவீசி
ஆடும் அவிர்சடையான் அவன் மேய ஆரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமமே. 5

கங்கை ஓர் வார்சடைமேற் கரந்தான் கிளிமழலைக் கேடில்
மங்கை ஓர் கூறு உடையான் மறையான் மழு ஏந்தும்
அம் கையினாள் அடியே பரவி அவள் மேய ஆரூர்
தம் கையினால் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 6

நீறு அணி மேனியனாய் நிரம்பா மதிசூடி நீண்ட
ஆறு அணிவார் சடையான் ஆரூர் இனிது அமர்ந்தான்
சேறு அணி மா மலர்மேல் பிரமன் சிரம் அரிந்த செங்கண்
ஏறு அணி வெல் கொடியான் அவன் எம்பெருமானே.(7 – 8)

வல்லியந்தோல் உடையான் வளர்திங்கள்கண்ணியினான் வாய்த்த
நல் இயல் நான்முகத்தோன் தலையில் நறவு ஏற்றான்
அல்லி அம்கோதைதன்னை ஆகத்து அமர்ந்து அருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே. 9

செந்துவர் ஆடையினார் உடை விட்டு நின்று உழல்வார் சொன்ன
இந்திரஞாலம் ஒழிந்து இன்புற வேண்டுதிரேல்
அந்தர மூஎயிலும் அரணம் எரியூட்டி ஆரூர்த்
தம் திரமா உடையான் அவன் எம் தலைமையனே. 10

நல்ல புனல் புகலித் தமிழ் ஞானசம்பந்தன் நல்ல
அல்லிமலர்க் கழனி ஆரூர் அமர்ந்தானை
வல்லது ஓர் இச்சையினால் வழிபாடு இவைபத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பம் துடைப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

251. திருஆரூர்

திருமுறை : 2/79 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

பவனமாய்ச் சோடையாய் நா எழாப் பஞ்சுதோய்ச் சட்டஉண்டு
சிவன தாள் சிந்தியாப் பேதைமார் போல நீ வெள்கினாயே
கவனம்ஆய்ப் பாய்வது ஓர் ஏறு உகந்து ஏறிய காளகண்டன்
அவனது ஆரூர் தொழுது உய்யல் ஆம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 1

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டு ஒரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழைநெஞ்சே
அம் தண் ஆரூர் தொழுது உய்யல் ஆம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 2

நிணம் குடர் தோல் நரம்பு என்பு சேர் ஆக்கைதான் நிலாயது அன்றால்
குணங்களார்க்கு அல்லது குற்றம் நீங்காது எனக் குலுங்கினாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனம்கொடுஏத்தும்
அணங்கன் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல்நெஞ்சே. 3

நீதியால் வாழ்கிலை நாள் செலாநின்றன நித்தம் நோய்கள்
வாதியா ஆதலால் நாளும் நாள் இன்பமே மருவினாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனும் ஏத்தும் முக்கண்
ஆதி ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே.4

பிறவியால் வருவன கேடு உள ஆதலால் பெரிய இன்பத்
துறவியார்க்கு அல்லது துன்பம் நீங்காது எனத் தூங்கினாயே
மறவல் நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்த நீர் மல்கு சென்னி
அறவன் ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 5

செடி கொள் நோய் ஆக்கை அம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறு பறவை
கடி கொள் பூந்தேன் சுவைத்து இன்புறலாம் என்று கருதினாயே
முடிகளால் வானவர் முன் பணிந்து அன்பராய் ஏத்தும் முக்கண்
அடிகள் ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 6

ஏறு மால்யானையே சிவிகை அந்தளகம் ஈச்சோப்பி வட்டில்
மாறி வாழ் உடம்பினார் படுவது ஓர் நடலைக்கு மயங்கினாயே
மாறு இலா வனமுலை மங்கைஓர் பங்கினர் மதியம் வைத்த
ஆறன் ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே. 7

என்பினால் கழி நிரைத்து இறைச்சி மண் சுவர் எறிந்து இதுநம் இல்லம்
புன் புலால் நாறு தோல் போர்த்துப் பொல்லாமையால் முகடு கொண்டு
முன்புஎலாம் ஒன்பதுவாய்தல் ஆர் குரம்பையில் மூழ்கிடாதே
அன்பன் ஆரூர் தொழுது உய்யலாம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 8

தந்தை தாய் தன் உடன் தோன்றினார் புத்திரர் தாரம் என்னும்
பந்தம் நீங்காதவர்க்கு உய்ந்துபோக்கில் எனப் பற்றினாயே
வெந்தநீறுஆடியார் ஆதியார் சோதியார் வேத கீதர்
எந்தை ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே.9

நெடிய மால் பிரமனும் நீண்டு மண் இடந்து இன்னம் நேடிக்காணாப்
படியனார் பவளம் போல் உருவனார் பணிவளர் மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணி அணி கண்டத்து எண்தோள்
அடிகள் ஆரூர் தொழுது உய்யல் ஆம் மையல் கொண்டு அஞ்சல் நெஞ்சே. 10

பல்இதழ் மாதவி அல்லி வண்டு யாழ்செயும் காழிஊரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம்பந்தன் ஆரூர்
எல்லியம் போது எரிஆடும் எம் ஈசனை ஏத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீது இலார் ஓதநீர் வையகத் தே. 11

திருச்சிற்றம்பலம்

252. திருஆரூர்

திருமுறை : 2/101 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

பருக்கையானை மத்தகத்து அரிக்குலத்து உகிர்ப் புக
நெருக்கி வாய நித்திலம் நிரக்கு நீள் பொருப்பன் ஊர்
தருக் கொள் சோலை சூழ நீடு மாட மாளிகைக் கொடி
அருக்கன்மண்டலத்து அணாவும் அம் தண் ஆரூர்என்பதே. 1

விண்ட வெள் எருக்கு அலர்ந்த வன்னி கொன்றை மத்தமும்
இண்டை கொண்ட செஞ்சடைமுடிச் சிவன் இருந்த ஊர்
கெண்டை கொண்டு அலர்ந்த கண்ணினார்கள் கீத ஓசை போய்
அண்டர் அண்டம் ஊடுஅறுக்கும் அம்தண் ஆரூர் என்பதே. 2

கறுத்த நஞ்சம் உண்டு இருண்ட கண்டர் காலன் இன்உயிர்
மறுத்து மாணிதன் தன் ஆகம் வண்மை செய்த மைந்தன் ஊர்
வெறித்து மேதி ஓடி மூசு வள்ளைவெள்ளை நீள்கொடி
அறுத்து மண்டி ஆவி பாயும் அந்தண் ஆரூர் என்பதே. 3

அஞ்சும் ஒன்றி ஆறு வீசி நீறு பூசி மேனியில்
குஞ்சி ஆர வந்திசெய்ய அஞ்சல் என்னி மன்னும் ஊர்
பஞ்சி ஆரும் மெல்அடிப் பணைத்த கொங்கை நுண்இடை
அம்சொலார் அரங்குஎடுக்கும் அம்தண் ஆரூர் என்பதே. 4

சங்கு உலாவு திங்கள் சூடி தன்னை உன்னுவார் மனத்து
அங்கு உலாவி நின்ற எங்கள் ஆதிதேவன் மன்னும் ஊர்
தெங்கு உலாவு சோலை நீடு தேன் உலாவு செண்பகம்
அங்கு உலாவி அண்டம் நாறும் அம் தண் ஆரூர் என்பதே. 5

கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான் உகந்தஊர்
துள்ளி வாளை பாய்வயல் சுரும்பு உலாவு நெய்தல் வாய்
அள்ளல் நாரை ஆரல் வாரும் அம் தண் ஆரூர் என்பதே. 6

கங்கை பொங்கு செஞ்சடைக் கரந்த கண்டர் காமனை
மங்க வெங்கணால் விழித்த மங்கைபங்கள் மன்னும் ஊர்
தெங்கில்ஊடு போகி வாழை கொத்து இறுத்து மாவின்மேல்
அம் கண் மந்தி முந்தி ஏறும் அம் தண் ஆரூர் என்பதே.7

வரைத்தலம் எடுத்தவன் முடித்தலம் உரத்தொடும்
நெரித்தவன் புரத்தை முன் எரித்தவன் இருந்தஊர்
நிரைத்த மாளிகைத் திருவின் நேரனார்கள் வெண்நகை
அரத்த வாய் மடந்தைமார்கள் ஆடும் ஆரூர் என்பதே. 8

இருந்தவன் கிடந்தவன் இடந்து விண் பறந்து மெய்
வருந்தியும் அளப்பு ஒணாத வானவன் மகிழ்ந்த ஊர்
செருந்தி ஞாழல் புன்னை வன்னி செண்பகம் செழுங் குரா
அரும்பு சோலை வாசம் நாறும் அம் தண் ஆரூர் என்பதே. 9

பறித்த வெண்தலைக் கடுப் படுத்த மேனியார் தவம்
வெறித்த வேடன் வேலைநஞ்சம் உண்ட கண்டன் மேவும் ஊர்
மறித்து மண்டு வண்டல் வாரி மிண்டு நீர் வயல்செநெல்
அறுத்த வாய் அசும்பு பாயும் அம் தண் ஆரூர் என்பதே.10

வல்லி சோலை சூதம் நீடு மன்னு வீதி பொன் உலா
அல்லிமாது அமர்ந்து இருந்த அம் தண் ஆரூர் ஆதியை
நல்ல சொல்லும் ஞானசம்பந்தன் நாவின் இன்உரை
வல்ல தொண்டர் வானம் ஆள வல்லர் வாய்மை ஆகவே.11

திருச்சிற்றம்பலம்

253. திருஆரூர்

திருமுறை : 3/45 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

இறைவர் : வண்மீகநாதர், புற்றிடங்கொண்டார் இறைவியார் : அல்லியங்கோதையம்மை

அந்தம்ஆய் உலகு ஆதியும் ஆயினான்
வெந்தவெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தையே புகுந்தான் திருவாரூர் எம்
எந்தைதான் எனை ஏன்று கொளும் கொலோ. 1

கருத்தனே கருதார் புரம்மூன்று எய்த
ஒருத்தனே உமையாள் ஒரு கூறனே
திருத்தனே திரு ஆரூர் எம் தீவண்ண
அருத்த என் எனை அஞ்சல்என்னாததே. 2

மறையன் மா முனிவன் மருவார் புரம்
இறையின் மாத்திரையில் எரியூட்டினான்
சிறைவண்டு ஆர் பொழில் சூழ் திரு ஆரூர் எம்
இறைவன்தான் எனை ஏன்றுகொளும்கொலோ. 3

பல்இல்ஓடு கை ஏந்திப் பலி திரிந்து
எல்லி வந்து இடுகாட்டு எரி ஆடுவான்
செல்வம் மல்கிய தென்திரு ஆரூரான்
அல்லல் தீர்த்து எனை அஞ்சல் எனும்கொலோ. 4

குருந்தம் ஏறிக் கொடிவிடு மாதவி
விரிந்து அலர்ந்த விரை கமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ் திரு ஆரூரான்
வருந்தும்போது எனை வாடல் எனும் கொலோ. 5

வார் கொள் மென்முலையாள் ஒருபாகமா
ஊர்களார் இடு பிச்சை கொள் உத்தமன்
சீர் கொள் மாடங்கள் சூழ் திரு ஆரூரான்
ஆர்கணா எனை அஞ்சல் என்னாததே. 6

வளைக்கை மங்கை நல்லாளை ஓர்பாகமாத்
துளைக்கையானை துயர் படப் போர்த்தவன்
திளைக்கும் தண்புனல் சூழ் திரு ஆரூரான்
இளைக்கும்போது எனை ஏன்று கொளும்கொலோ. 7

இலங்கை மன்னன் இருபதுதோள் இறக்
கலங்கக் கால்விரலால் கடைக் கண்டவன்
வலம்கொள் மா மதில் சூழ் திரு ஆரூரான்
அலங்கல் தந்து எனை அஞ்சல் எனும்கொலோ. 8

நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப்
படியவன் பனிமா மதிச் சென்னியான்
செடிகள் நீக்கிய தென்திருஆரூர் எம்
அடிகள்தான் எனை அஞ்சல் எனும்கொலோ. 9

மாசு மெய்யினர் வண் துவர் ஆடை கொள்
காசை போர்க்கும் கலதிகள் சொல் கொளேல்
தேசம் மல்கிய தென்திரு ஆரூர் எம்
ஈசன்தான் எனை ஏன்று கொளும் கொலோ. 10

வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னி வைத்த பிரான் திரு ஆரூரை
மன்னு காழியுள் ஞானசம்பந்தன் வாய்ப்
பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

254. திருவிளமர்

திருமுறை : 3/88 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : பதஞ்சலி மனோகரர் இறைவியார் : யாழினும்மென்மொழியாள்

மத்தகம் அணி பெற மலர்வது ஓர் மதி புரை நுதல் கரம்
ஒத்து அகம் நக மணி மிளிர்வது ஓர் அரவினர் ஒளி கிளர்
அத் தகவு அடி தொழ அருள் பெறு கண்ணொடும் உமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வள நகர் விளமரே. 1

பட்டு இலகிய முலை அரிவையர் உலகினில் இடு பலி
ஒட்டு இலகு இணைமரவடியினர் உமை உறு வடிவினர்
சிட்டு இலகு அழகிய பொடியினர் விடைமிசை சேர்வது ஓர்
விட்டு இலகு அழகு ஒளி பெயரவர் உறைவது விளமரே. 2

அம் கதிர் ஒளியினர் அரைஇடை மிளிர்வது ஓர் அரவொடு
செங்கதிர் என நிறம் அனையது ஓர் செழு மணி மார்பினர்
சங்கு அதிர் பறை குழல் முழவினொடு இசைதரு சரிதையர்
வெங்கதிர் உறும் மழு உடையவர் இடம் எனில் விளமரே. 3

மாடம்அது என வளர் மதில்அவை எரிசெய்வர் விரவு சீர்ப்
பீடு என வருமறை உரைசெய்வர் பெரிய பல்சரிதைகள்
பாடலர் ஆடிய சுடலையில் இடம் உற நடம் நவில்
வேடம்அது உடையவர் வியல்நகர் அதுசொலில் விளமரே. 4

பண்தலை மழலைசெய் யாழ்என மொழிஉமை பாகமாக்
கொண்டு அலை குரைகழல் அடிதொழுமவர் வினை குறுகிலர்
விண்தலை அமரர்கள் துதிசெய அருள்புரி விறலினர்
வெண்தலை பலி கொளும் விமலர் தம் வள நகர் விளமரே. 5

மனைகள்தொறு இடு பலிஅது கொள்வர் மதி பொதி சடையினர்
கனைகடல் அடு விடம் அமுதுசெய் கறை அணி மிடறினர்
முனை கெட வருமதில் எரிசெய்தஅவர் கழல் பரவுவார்
வினை கெட அருள்புரி தொழிலினர் செழுநகர் விளமரே.6

நெறி கமழ்தரும் உரை உணர்வினர் புணர்வுஉறு மடவரல்
செறி கமழ்தரு உரு உடையவர் படைபல பயில்பவர்
பொறி கமழ்தரு படஅரவினர் விரவிய சடைமிசை
வெறி கமழ்தரு மலர் அடைபவர் இடம் எனில் விளமரே.7

தெண்கடல் புடை அணி நெடுமதில் இலங்கையர் தலைவனைப்
பண் பட வரைதனில் அடர்செய்த பைங்கழல் வடிவினர்
திண் கடல் அடை புனல் திகழ்சடை புகுவது ஓர் சேர்வினார்
விண் கடல்விடம்மலி அடிகள் தம் வளநகர் விளமரே. 8

தொண்டு அசைவுஉற வரு துயர் உறு காலனை மாள்உற
அண்டல்செய்து இருவரை வெருஉற ஆர்அழல் ஆயினார்
கொண்டல் செய்தரு திருமிடறினர் இடம்எனில் அளிஇனம்
விண்டு இசைஉறு மலர் நறு மது விரி பொழில் விளமரே. 9

ஒள்ளியர் தொழுது எழ உலகினில் உரைசெயும் மொழிபல
கொள்ளிய களவினர் குண்டிகையவர் தவம் அறிகிலார்
பள்ளியை மெய் எனக் கருதன்மின் பரிவொடு பேணுவீர்
வெள்ளிய பிறை அணி சடையினர் வள நகர்விளமரே.10

வெந்தவெண்பொடி அணி அடிகளை விளமருள் விகிர்தரைச்
சிந்தையுள் இடைபெற உரைசெய்த தமிழ்இவை செழுவிய
அந்தணர் புகலியுள் அழகு அமர் அருமறை ஞானசம்
பந்தன மொழிஇவை உரைசெயுமவர் வினை பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

255. திருக்கரவீரம்

திருமுறை : 1/58 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : கரவீரநாதர் இறைவியார் : பிரத்தியட்சமின்னம்மை

அரியும் நம் வினைஉள்ளன ஆசு அற
வரி கொள் மாமணி போல் கண்டம்
கரியவன் திகழும் கரவீரத்து எம்
பெரியவன் கழல் பேணவே. 1

தங்குமோ வினை தாழ்சடை மேலவன்
திங்களோடு உடன்சூடிய
கங்கையாள் திகழும் கரவீரத்து எம்
சங்கரன் கழல் சாரவே. 2

ஏதம் வந்து அடையா இனி நல்லன
பூதம் பல்படை ஆக்கிய
காதலான் திகழும் கரவீரத்து எம்
நாதன் பாதம் நணுகவே. 3

பறையும் நம்வினை உள்ளன பாழ்பட
மறையும் மாமணி போல் கண்டம்
கறையவன் திகழும் கரவீரத்து எம்
இறையவன் கழல் ஏத்தவே. 4

பண்ணினார் மறை பாடலன் ஆடலன்
விண்ணினார் மதில் எய்தமுக்
கண்ணினான் உறையும் கரவீரத்தை
நண்ணுவார் வினை நாசமே. 5

நிழலின் ஆர் மதி சூடிய நீள்சடை
அழலினார் அழல் ஏந்திய
கழலினார் உறையும் கரவீரத்தைத்
தொழவல்லார்க்கு இல்லை துக்கமே. 6

வண்டர் மும்மதில் மாய்தர எய்தவன்
அண்டன் ஆர்அழல் போல்ஒளிர்
கண்டனார் உறையும் கரவீரத்துத்
தொண்டர்மேல் துயர் தூரமே. 7

புனல் இலங்கையர்கோன் முடிபத்து இறச்
சின வல் ஆண்மை செகுத்தவன்
கனலவன் உறைகின்ற கரவீரம்
என வல்லார்க்கு இடர் இல்லையே. 8

வெள்ளத் தாமரையானொடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திரள் ஆகிய
கள்ளத்தான் உறையும் கரவீரத்தை
உள்ளத் தான் வினை ஓயுமே. 9

செடி அமண்ணொடு சீவரத்தார் அவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடியவன் உறைகின்ற கரவீரத்து
அடியவர்க்கு இல்லை அல்லலே. 10

வீடிஇலான் விளங்கும் கரவீரத்து எம்
சேடன்மேல் கசிவால் தமிழ்
நாடும் ஞானசம்பந்தன சொல்இவை
பாடுவார்க்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

256. திருப்பெருவேளூர்

திருமுறை : 3/64 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : பிரியாதநாதர் இறைவியார் : ஏலவார்குழலி

அண்ணாவும் கழுக்குன்றும் ஆய மலைஅவை வாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்து ஏத்த அருள்செய்வார்
கண் ஆவார் உலகுக்குக் கருத்தானார் புரம் எரித்த
பெண் ஆண் ஆம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 1

கருமானின்உரி உடையர் கரிகாடர் இமவானார்
மருமானார் இவர் என்றும் மடவாளோடு உடன்ஆவர்
பொரு மான விடை ஊர்வது உடையார் வெண்பொடிப்பூசும்
பெருமானார் பிஞ்ஞகனார் பெருவேளூர் பிரியாரே. 2

குணக்கும் தென் திசைக்கண்ணும் குடபாலும் வடபாலும்
கணக்கு என்ன அருள்செய்வார் கழிந்தோர்க்கும் ஒழிந்தோர்க்கும்
வணக்கம்செய் மனத்தராய் வணங்காதார் தமக்கு என்றும்
பிணக்கம்செய் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 3

இறைக் கொண்ட வளையாளோடு இரு கூறுஆய் ஒருகூறு
மறைக் கண்டத்து இறை நாவர் மதில் எய்த சிலை வலவர்
கறைக் கொண்ட மிடறுஉடையர் கனல் கிளரும் சடைமுடிமேல்
பிறைக் கொண்ட பெருமானார் பெருவேளூர் பிரியாரே.4

விழையாதார் விழைவார் போல் விகிர்தங்கள்பல பேசிக்
குழையாதார் குழைவார் போல் குணம்நல்லபல கூறி
அழையாவும் அரற்றாவும் அடி வீழ்வார் தமக்கு என்றும்
பிழையாத பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 5

விரித்தார் நால்மறைப் பொருளை உமை அஞ்ச விறல்வேழம்
உரித்தார் ஆம் உரி போர்த்து மதில்மூன்றும் ஒரு கணையால்
எரித்தார் ஆம் இமைப்பு அளவில் இமையோர்கள் தொழுது இறைஞ்சப்
பெருத்தார் எம்பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 6

மறப்பு இலா அடிமைக்கண் மனம் வைப்பார் தமக்கு எல்லாம்
சிறப்புஇலார் மதில் எய்த சிலை வல்லார் ஒரு கணையால்
இறப்பு இலார் பிணி இல்லார் தமக்கு என்றும் கேடு இலார்
பிறப்பு இலாப் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 7

எரி ஆர் வேல் கடல் தானை இலங்கைக் கோன்தனைவீழ
முரி ஆர்ந்த தடந்தோள்கள் அடர்த்து உகந்த முதலாளர்
வரி ஆர் வெஞ்சிலை பிடித்து மடவாளை ஒரு பாகம்
பிரியாத பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 8

சேண் இயலும் நெடுமாலும் திசைமுகனும் செரு எய்திக்
காண் இயல்பை அறிவு இலராய்க் கனல்வண்ணர் அடிஇணைக்கீழ்
நாணி அவர் தொழுது ஏத்த நாணாமே அருள்செய்து
பேணிய எம்பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 9

புற்று ஏறி உணங்குவார் புகை ஆர்ந்த துகில் போர்ப்பார்
சொல் தேற வேண்டா நீர் தொழுமின்கள் சுடர்வண்ணம்
மல் தேரும் பரிமாவும் மதகளிறும் இவை ஒழியப்
பெற்று ஏறும் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. 10

பைம்பொன் சீர் மணி வாரிப் பலவும்சேர் கனி உந்தி
அம் பொன் செய் மடவரலார் அணி மல்கு பெருவேளூர்
நம்பந்தன் கழல் பரவி நவில்கின்ற மறை ஞான
சம்பந்தன் தமிழ் வல்லார்க்கு அருவினைநோய் சாராவே. 11

திருச்சிற்றம்பலம்

257. திருக்குடவாயில்

திருமுறை : 2/22 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

திகழும் திருமாலொடு நான்முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோயில் நிலாயவனே. 1

ஓடும் நதியும் மதியோடு உரகம்
சூடும் சடையன் விடை தொல்கொடி மேல்
கூடும் குழகன் குடவாயில் தனில்
நீடும் பெருங்கோயில் நிலாயவனே. 2

கலையான் மறையான் கனல் ஏந்து கையான்
மலையாள் அவள் பாகம் மகிழ்ந்த பிரான்
கொலை ஆர் சிலையான் குடவாயில் தனில்
நிலை ஆர் பெருங்கோயில் நிலாயவனே. 3

சுலவும் சடையான் சுடுகாடு இடமா
நல மென்முலையாள் நகைசெய்ய நடம்
குலவும் குழகன் குடவாயில்தனில்
நிலவும் பெருங்கோயில் நிலாயவனே. 4

என்தன் உளம் மேவி இருந்த பிரான்
கன்றன் மணி போல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவாயில் தனில்
நின்ற பெருங்கோயில் நிலாயவனே. 5

அலை சேர் புனலன் அனலன் அமலன்
தலை சேர் பலியன் சதுரன் விதிரும்
கொலை சேர் படையன் குடவாயில் தனில்
நிலை சேர் பெருங்கோயில் நிலாயவனே. 6

அறை ஆர் கழலன் அழலன் இயலின்
பறை யாழ் முழவும் மறை பாட நடம்
குறையா அழகன் குடவாயில்தனில்
நிறை ஆர் பெருங்கோயில் நிலாயவனே. 7

வரை ஆர் திரள்தோள் அரக்கன் மடிய
வரை ஆர் ஒர்கால் விரல்வைத்த பிரான்
வரை ஆர் மதில்சூழ் குடவாயில் மன்னும்
வரை ஆர் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 8

பொன் ஒப்பவனும் புயல் ஒப்பவனும்
தன் ஒப்பு அறியாத் தழல் ஆய் நிமிர்ந்தான்
கொல் நல் படையான் குடவாயில் தனில்
மன்னும் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 9

வெயிலின் நிலையார் விரி போர்வையினார்
பயிலும் உரையே பகர் பாவிகள் பால்
குயிலன் குழகன் குடவாயில் தனில்
உயரும் பெருங்கோயில் உயர்ந்தவனே. 10

கடுவாய் மலி நீர் குடவாயில்தனில்
நெடு மா பெருங்கோயில் நிலாயவனைத்
தடம் ஆர் புகலித் தமிழ் ஆர் விரகன்
வடம் ஆர் தமிழ் வல்லார் நல்லவரே. 11

திருச்சிற்றம்பலம்

258. திருக்குடவாயில்

திருமுறை : 2/58 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : கோணேசுவரர் இறைவியார் : பெரியநாயகி

கலை வாழும் அம் கையீர் கொங்கை ஆரும் கருங்கூந்தல்
அலை வாழும் செஞ்சடையில் அரவும் பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம் பொன்பவளம் பழுக்கும் குடவாயில்
நிலை வாழும் கோயிலே கோயிலாக நின்றீரே. 1

அடி ஆர்ந்த பைங்கழலும் சிலம்பும் ஆர்ப்ப அங்கையில்
செடி ஆர்ந்த வெண்தலை ஒன்று ஏந்தி உலகம் பலிதேர்வீர்
குடி ஆர்ந்த மா மறையோர் குலாவி ஏத்தும் குடவாயில்
படி ஆர்ந்த கோயிலே கோயிலாகப் பயின்றீரே. 2

கழல் ஆர் பூம்பாதத்தீர் ஓதக்கடலில் விடம் உண்டு அன்று
அழல் ஆரும் கண்டத்தீர் அண்டர் போற்றும் அளவினீர்
குழல் ஆர் வண்டினங்கள் கீதத்தொலிசெய் குடவாயில்
நிழல் ஆர்ந்த கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 3

மறி ஆரும் கைத்தலத்தீர் மங்கை பாகமாகச் சேர்ந்து
எறி ஆரும் மா மழுவும்எரியும் ஏந்தும் கொள்கையீர்
குறி ஆர வண்டு இனங்கள் தேன் மிழற்றும் குடவாயில்
நெறி ஆரும் கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 4

இழை ஆர்ந்த கோவணமும் கீளும் எழில் ஆர் உடையாகப்
பிழையாத சூலம்பெய்து ஆடல்பாடல் பேணினீர்
குழை ஆரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த குடவாயில்
விழவு ஆர்ந்த கோயிலே கோயில் ஆக மிக்கீரே. 5

அரவு ஆர்ந்த திருமேனி ஆவெண்நீறு ஆடினீர்
இரவு ஆர்ந்த பெய் பலி கொண்டு இமையோர் ஏத்த நஞ்சு உண்டீர்
குரவு ஆர்ந்த பூஞ்சோலை வாசம் வீசும் குடவாயில்
திரு ஆர்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 6

பாடல் ஆர் வாய்மொழியீர் பைங்கண் வெள்ஏறு ஊர்தியீர்
ஆடல் ஆர் மாநடத்தீர் அரிவை போற்றும் ஆற்றலீர்
கோடல் ஆர் தும்பி முரன்று இசை மிழற்றும் குடவாயில்
நீடல் ஆர் கோயிலே கோயில் ஆக நிகழ்ந்தீரே. 7

கொங்கு ஆர்ந்த பைங்கமலத்து அயனும் குறள்ஆய் நிமிர்ந்தானும்
அங்காந்து தள்ளாட அழலாய் நிமிர்ந்தீர் இலங்கைக் கோன்
தம் காதல் மா முடியும் தாளும் அடர்த்தீர் குடவாயில்
பங்கு ஆர்ந்த கோயிலே கோயிலாகப் பரிந்தீரே. 8–9

தூசு ஆர்ந்த சாக்கியரும் தூய்மை இல்லாச் சமணரும்
ஏசு ஆர்ந்த புன்மொழி நீத்து எழில்கொள் மாடக் குடவாயில்
ஆசாரம் செய் மறையோர் அளவில் குன்றாது அடிபோற்றத்
தேசு ஆர்ந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே. 10

நளிர் பூந் திரை மல்கு காழி ஞானசம்பந்தன்
குளிர் பூங் குடவாயில் கோயில் மேய கோமானை
ஒளிர் பூந்தமிழ்மாலை உரைத்தபாடல் இவை வல்லார்
தளர்வுஆனதாம் ஒழியத் தகு சீர் வானத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

259. திருச்சேறை

திருமுறை : 3/86 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : செந்நெறியப்பர் இறைவியார் : ஞானவல்லி

முறி உறு நிறம் மல்கு முகில்முலை மலைமகள் வெருவ முன்
வெறி உறு மதகரி அதள்பட உரிசெய்த விறலினர்
நறி உறும் இதழியின்மலரொடு நதி மதி நகுதலை
செறிஉறு சடைமுடி அடிகள்தம் வள நகர் சேறையே. 1

புனம் உடை நறுமலர்பலகொடு தாழுவது ஓர் புரிவினர்
மனம் உடை அடியவர் படு துயர் களைவது ஓர் வாய்மையர்
இனம் உடை மணியினொடு அரசு இலை ஒளிபெற மிளிர்வதோர்
சினம் முதிர் விடை உடை அடிகள் தம் வளநகர் சேறையே. 2

புரிதரு சடையினர் புலிஅதள் அரையினர் பொடி புல்கும்
எரி தரும் உருவினர் இடபம்அது ஏறுவர் ஈடுஉலா
வரி தரு வளையினர் அவர்அவர் மகிழ்தர மனைதொறும்
திரிதரு சரிதையர் உறைதரு வளநகர் சேறையே. 3

துடி படும் இடை உடை மடவரல் உடன் ஒரு பாகமா
இடிபடு குரல் உடை விடையினர் படம் உடை அரவினர்
பொடி படும் உருவினர் புலிஉரி பொலிதரும் அரையினர்
செடி படு சடைமுடி அடிகள்தம் வளநகர் சேறையே. 4

அந்தரம் உழிதரு திரிபுரம் ஒருநொடி அளவினில்
மந்தரவரிசிலை அதன்இடை அரவு அரிவாளியால்
வெந்து; அழிதர எய்த விடலையர் விடம் அணி மிடறினர்
செந்தழல் நிறம் உடை அடிகள்தம் வள நகர் சேறையே.5

மத்தரம் உறு திறல் மறவர் தம் வடிவுகொடு உருவுஉடைப்
பத்துஒருபெயர் உடை விசயனை அசைவு செய் பரிசினால்
அத்திரம் அருளும் நம் அடிகளது அணிகிளர் மணி அணி
சித்திர வள நகர் செறி பொழில் தழுவிய சேறையே. 6

பாடினர் அருமறை முறைமுறை பொருள் என அருநடம்
ஆடினர் உலகு இடை அலர் கொடும் அடியவர் துதிசெய
வாடினர் படுதலை இடுபலி அதுகொடு மகிழ்தரும்
சேடர்தம் வள நகர் செறி பொழில் தழுவிய சேறையே. 7

கட்டு உரம் அதுகொடு கயிலை நல் மலை மலி கரம் உடை
நிட்டுரன் உடலொடு நெடு முடி ஒருபதும் நெரிசெய்தார்
மட்டு உரம் மலர்அடி அடியவர் தொழுவது எழ அருள்செயும்
சிட்டர்தம் வள நகர் செறி பொழில் தழுவிய சேறையே. 8

பன்றியர் பறவையர் பரிசு உடை வடிவொடு படர்தர
அன்றிய அவர்அவர் அடியொடு முடிஅவை அறிகிலார்
நின்று இரு புடைபட நெடுஎரி நடுவெ ஒர் நிகழ்தரச்
சென்று உயர் வெளி பட அருளிய அவர் நகர் சேறையே.9

துகள் துறு விரி துகில் உடையவர் அமண் எனும் வடிவினர்
விகடம்அது உறு சிறுமொழி அவை நலம்இல வினவிடல்
முகிழ்தரும் இளமதி அரவொடும் அழகுற முதுநதி
திகழ்தரு சடைமுடி அடிகள் தம் வளநகர் சேறையே. 10

கற்ற நல்மறை பயில் அடியவர் அடிதொழு கவின்உறு
சிற்றிடையவளொடும் இடமென உறைவது ஓர் சேறைமேல்
குற்றம்இல் புகலியுள் இகல் அறு ஞானசம்பந்தன
சொல் தகவு உறமொழிபவர் அழிவு இலர் துயர் தீருமே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாலவாயிலே பாண்டியரது அவைக்களத்தே சமணரோடு வாதஞ் செய்யத் தொடங்கித் திருமுறையிற் கயிறு சாத்திய போது 'போகமார்த்த பூண் முலையாள்' என்னுந் திருப்பதிகம் வர அதனைக் கையிலே வைத்துக் கொண்டு இப்பதிகம் பரமசிவனைப் பரம்பொருளெனவும். பெண்ணொரு பாகமெனனவுங் கூறுதலின், நெருப்பிலிடப்படின் பழுதிலை, இது மெய்ம்மை என்னுங் கருத்துடைய இத்திருப்பதிகம் பாடி அவ்வேட்டினை நெருப்பிலேயிட்டு வேகாமற் பச்சையாய் எடுத்துருளினார்.

260. திருநாலூர்மயானம்

திருமுறை : 2/46 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : பலாசவனநாதர் இறைவியார் : பெரியநாயகி

பால் ஊரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேல் ஊரும் செஞ்சடையான் வெண்நூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான் தன் அடி நினைந்து
மால் ஊரும் சிந்தையர்பால் வந்து ஊரா மறுபிறப்பே. 1

சூடும் பிறை சென்னிச் சூழ்காடு இடமாக
ஆடும் பறைசங்கு ஒலியோடு அழகாக
நாடும் சிறப்பு ஓவா நாலூர் மயானத்தைப்
பாடும் சிறப்போர் பால் பற்றா ஆம் பாவமே. 2

கல்லால்நிழல் மேவிக் காமுறு சீர் நால்வர்க்கு அன்று
எல்லா அறன்உரையும் இன்அருளால் சொல்லினான்
நல்லார் தொழுது ஏத்தும் நாலூர் மயானத்தைச்
சொல்லாதவர் எல்லாம் செல்லாதார் தொல்நெறிக்கே. 3

கோலத்து ஆர் கொன்யைான் கொல் புலித்தோல் ஆடையான்
நீலத்து ஆர் கண்டத்தான் நெற்றி ஓர் கண்ணினான்
ஞாலத்தார் சென்று ஏத்தும் நாலூர்மயானத்தில்
சூலத்தான் என்பார்பால் சூழாவாம் தொல்வினையே. 4

கறை ஆர் மணிமிடற்றான் காபாலி கட்டங்கன்
பிறை ஆர் வளர்சடையான் பெண்பாகன் நண்பாய
நறை ஆர் பொழில் புடை சூழ் நாலூர் மயானத்து எம்
இறையான் என்று ஏத்துவார்க்கு எய்தும் ஆம் இன்பமே.5

கண் ஆர் நுதலான் கனல்ஆடுஇடம்ஆகப்
பண்ஆர் மறை பாடி ஆடும் பரஞ்சோதி
நண்ணார் புரம் எய்தான் நாலூர் மயானத்தை
நண்ணாதவர்எல்லாம் நண்ணாதார் நன்னெறியே. 6

கண் பாவு வேகத்தால் காமனை முன் காய்ந்து உகந்தான்
பெண் பாவு பாகத்தான் நாகத்தோல் ஆகத்தான்
நண்பு ஆர் குணத்தோர்கள் நாலூர் மயானத்தை
எண் பாவு சிந்தையார்க்கு ஏலா இடர்தானே. 7

பத்துத்தலையோனைப் பாதத்து ஒருவிரலால்
வைத்து மலைஅடர்த்து வாளொடு நாள் கொடுத்தான்
நத்தின் ஒலி ஒவா நாலூர் மயானத்து என்
அத்தன் அடி நினைவார்க்கு அல்லல் அடையாவே. 8

மாலோடு நான்முகனும் நேட வளர் எரிஆய்
மேலோடு கீழ் காணா மேன்மையான் வேதங்கள்
நாலோடும் ஆறுஅங்கம் நாலூர் மயானத்து எம்
பாலோடு நெய்ஆடி பாதம் பணிவோமே. 9

துன்புஆய மாசார் துவர்ஆய போர்வையார்
புன் பேச்சுக் கேளாதே புண்ணியனை நண்ணுமின்கள்
நண்பால் சிவாய எனா நாலூர் மயானத்தே
இன்பாய் இருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே. 10

ஞாலம் புகழ் காழி ஞானசம்பந்தன்தான்
நாலுமறை ஓது நாலூர் மயானத்தைச்
சீலம் புகழால் சிறந்து ஏத்த வல்லாருக்கு
ஏலும் புகழ் வானத்து இன்புஆய் இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

261. திருஇரும்பூளை

திருமுறை : 2/36 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : காசியாரணியர் இறைவியார் : ஏலவார்குழலி உமையம்மையார்

சீரார் கழலே தொழுவீர் இது செப்பீர்
வார் ஆர் முலை மங்கையொடும் உடனாகி
ஏர் ஆர் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
கார் ஆர் கடல் நஞ்சு அமுது உண்ட கருத்தே. 1

தொழல் ஆர் கழலே தொழு தொண்டர்கள் சொல்லீர்
குழல் ஆர் மொழிக் கோல்வளையோடு உடனாகி
எழில் ஆர் இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
கழல் தான் கரிகான் இடை ஆடு கருத்தே. 2

அன்பால் அடி கைதொழுவீர் அறியீரே
மின் போல் மருங்குல் மடவாளொடு மேவி
இன்பாய் இரும்பூளை இடம்கொண்ட ஈசன்
பொன் போல் சடையில் புனல் வைத்த பொருளே. 3

நச்சித் தொழுவீர்கள் நமக்கு இது சொல்லீர்
கச்சிப் பொலி காமக்கொடிஉடன் கூடி
இச்சித் திரும்பூளை இடம் கொண்ட ஈசன்
உச்சித்தலையில் பலிகொண்டு உழல்ஊணே. 4

சுற்று ஆர்ந்து அடியே தொழுவீர் இது சொல்லீர்
நல் தாழ்குழல் நங்கையொடும் உடன்ஆகி
எற்றே இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
புற்று ஆடுஅரவோடு என்பு பூண்ட பொருளே. 5

தோடு ஆர் மலர் தூய்த் தொழு தொண்டர்கள் சொல்லீர்
சேடு ஆர் குழல் சேயிழையோடு உடன் ஆகி
ஈடு ஆய் இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
காடு ஆர் கடு வேடுவன் ஆனகருத்தே. (6 – 7)

ஒருக்கும் மனத்து அன்பருள்ளீர் இது சொல்லீர்
பருக் கை மதவேழம் உரித்து உமையோடும்
இருக்கை இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
அரக்கன் உரம் தீர்த்து அருள் ஆக்கியவாறே. 8

துயர் ஆயின நீங்கித் தொழும் தொண்டர் சொல்லீர்
கயல் ஆர் கருங்கண்ணியொடும் உடனாகி
இயல்பாய் இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
முயல்வார் இருவர்க்கு எரி ஆகிய மொய்ம்பே. 9


துணை நல்மலர் தூய்த் தொழும் தொண்டர்கள் சொல்லீர்
பணைமென்முலைப் பார்ப்பதியோடு உடனாகி
இணையில் இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
அணைவில் சமண் சாக்கியம் ஆக்கியவாறே. 10

எந்தை இரும்பூளை இடம் கொண்ட ஈசன்
சந்தம் பயில் சண்பையுள் ஞானசம்பந்தன்
செந்தண்தமிழ் செப்பிய பத்துஇவை வல்லார்
பந்தம் அறுத்து ஓங்குவர் பான்மையினாலே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருவாறை வடதளியை வழிபட்டுப் பாடிய தமிழ் விரகர் எப்பொருளுமாய் நின்றார் இரும்பூளை அடைந்து சிவிகையினின்றும் இறங்கித் தொண்டர்கள் எதிர்கொள்ளத் திருக்கோயிலைச் சேர்ந்து பரம்பொருளைப் பாடுவார் அடியார்களை நோக்கிக் கடல் நஞ்சு அமுதுண்ட கருத்து, கரிகானிடை யாடிய கருத்து, சடையிற் புனல்வைத்த பொருள், உச்சித்தலையிற் பலிகொண்டுழலூண், அரவோடென்பு பூண்ட பொருள், காடார் கடுவேடுவனான கருத்து, அரக்கன்னுரந் தீர்த்தருளாக்கியளவாறு, முயல்வாரிருவர்கு எரியாகிய மொய்ம்பு, அணைவில் சமண் சாக்கியமாக்கியவாறு என்னும், இவைகளின் பொருளை வினவிச் 'சீரார் கழலே தொழுவீரிது செப்பீர்' என எடுத்து வேதப் பொருள் விளங்கப் பாடியருளினர்.



262. திரு அரதைப்பெரும்பாழி

திருமுறை : 3/82 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : பாதாளவரதர் இறைவியார் : அலங்காரஅம்மை

பைத்த பாம்போடு அரைக் கோவணம் பாய் புலி
மொய்த்த பேய்கள் முழக்கம் முதுகாட்டு இடை
நித்தம்ஆக நடம் ஆடி வெண்நீறு அணி
பித்தர் கோயில் அரதைப்பெரும்பாழியே. 1

கயல சேல கருங்கண்ணியர் நாள்தொறும்
பயலை கொள்ளப் பலி தேர்ந்து உழல் பான்மையார்
இயலை வானோர் நினைந்தோர்களுக்கு எண்ணரும்
பெயரர் கோயில் அரதைப்பெரும்பாழியே. 2

கோடல் சாலஉடையார் கொலை யானையின்
மூடல் சாலஉடையார் முளிகான் இடை
ஆடல் சாலஉடையார் அழகாகிய
பீடர் கோயில் அரதைப் பெரும்பாழியே. 3

மண்ணர் நீரார் அழலார் மலி காலினார்
விண்ணர் வேதம் விரித்து ஓதுவார் மெய்ப்பொருள்
பண்ணர் பாடல் உடையார் ஒரு பாகமும்
பெண்ணர் கோயில் அரதைப் பெரும்பாழியே. 4

மறையர் வாயின் மொழி மானொடு வெண்மழுக்
கறைகொள் சூலம் உடைக்கையர் கார்ஆர்தரும்
நறை கொள் கொன்றை நயந்தார் தரும் சென்னிமேல்
பிறையர் கோயில் அரதைப் பெரும்பாழியே. 5

புற்று அரவம் புலித்தோல் அரைக் கோவணம்
தற்று இரவில் நடம் ஆடுவர் தாழ்தரு
சுற்று அமர் பாரிடம் தொல்கொடியின் மிசைப்
பெற்றர் கோயில் அரதைப்பெரும்பாழியே. 6

துணையிறுத் தஞ்சுரி சங்கமர் வெண்பொடி
இணை இல் ஏற்றை உகந்து ஏறுவரும் எரி
கணையினால் முப்புரம் செற்றவர் கையினில்
பிணையர் கோயில் அரதைப்பெரும்பாழியே. 7

சரிவுஇலா வல் அரக்கன் தடந்தோள் தலை
நெரிவில் ஆர் அடர்த்தார் நெறிமென் குழல்
அரிவை பாகம் அமர்ந்தார் அடியாரொடும்
பிரிவு இல் கோயில் அரதைப்பெரும்பாழியே. 8

வரிஅரா என்பு அணி மார்பினர் நீர்மல்கும்
எரி அராவும் சடைமேல் பிறை ஏற்றவர்
கரிய மாலோடு அயன் காண்பு அரிது ஆகிய
பெரியர் கோயில் அரதைப்பெரும்பாழியே. 9

நாண் இலாத சமண்சாக்கியர் நாள்தொறும்
ஏணி இலாத மொழி அவ்வெழில் ஆயவர்
சேண் உலா மும்மதில் தீ எழச் செற்றவர்
பேணு கோயில் அரதைப் பெரும்பாழியே. 10

நீரின் ஆர் புன்சடை நிமலனுக்கு இடம் எனப்
பாரினார் பரவு அரதைப் பெரும்பாழியைச்
சீரின் ஆர் காழியுள் ஞானசம்பந்தன் செய்
ஏரின் ஆர் தமிழ் வல்லார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

263. திருஅவள்இவள்நல்லூர்

திருமுறை : 3/82 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : சாட்சிநாயகேசுவரர் இறைவியார் : சௌந்தரநாயகி

கொம்பு இரிய வண்டு உலவு கொன்றை புரி நூலொடு குலாவித்
தம் பரிசினோடு சுடு நீறுதடவந்து இடபம் ஏறிக்
கம்பரிய செம்பொன் நெடுமாட மதில் கல்வரை வில்லாக
அம்பு எரிய எய்த பெருமான் உறைவது அவள்இவள்நலூரே.1

ஓமையன கள்ளியன வாகையன கூகைமுரல் ஓசை
ஈமம் எரி சூழ் சுடலை வாசம் முதுகாடு நடமாடித்
தூய்மை உடை அக்கொடு அரவம் விரவி மிக்கு ஒளி துளங்க
ஆமையொடு பூணும் அடிகள் உறைவது அவள்இவள்நலூரே. 2

நீறு உடைய மார்பில் இமவான் மகள் ஓர்பாகம் நிலைசெய்து
கூறு உடைய வேடமொடு கூடி அழகாயது ஒரு கோலம்
ஏறு உடையரேனும் இடுகாடு இரவில் நின்று நடம் ஆடும்
ஆறு உடைய வார்சடையினான் உறைவது அவள்இவள்நலூரே.3

பிணியும் இலர் கேடும் இலர் தோற்றம் இலர் என்று உலகு பேணிப்
பணியும் அடியார்கள் அன பாவம் அற இன்னருள் பயந்து
துணி உடைய தோலும் உடை கோவணமும் நாகம் உடன் தொங்க
அணியும் அழகாக உடையான் உறைவது அவள்இவள்நலூரே.4

குழலின் வரிவண்டு முரல் மெல்லியன பொன்மலர்கள் கொண்டு
கழலின்மிசை இண்டை புனைவார் கடவுள் என்றுஅமரர் கூடித்
தொழலும் வழிபாடும் உடையார் துயரும் நோயும்இலர் ஆவர்
அழலும் மழு ஏந்து கையினான் உறைவது அவள்இவள்நலூரே.5

துஞ்சல் இலராய் அமரர் நின்று தொழுது ஏத்த அருள் செய்து
நஞ்சு மிடறு உண்டு கரிது ஆயவெளிது ஆகி ஒரு நம்பன்
மஞ்சு உற நிமிர்ந்து உமைநடுங்க அகலத்தொடு வளாவி
அஞ்ச மதவேழ உரியான் உறைவது அவள்இவள்நலூரே.6

கூடு அரவம் மொந்தை குழல் யாழ் முழவினோடும் இசை செய்யப்
பீடு அரவம் ஆகு படர் அம்பு செய்து பேர்இடபமோடும்
காடு அரவம் ஆகு கனல் கொண்டு இரவில் நின்றுநடம் ஆடி
ஆடுஅரவம் ஆர்த்தபெருமான் உறைவது அவள்இவள்நலூரே.7

ஒருவரையும் மேல் வலி கொடேன் என எழுந்த விறலோன் இப்
பெருவரையின்மேல் ஓர்பெருமானும் உளனோ என வெகுண்ட
கருவரையும் ஆழ்கடலும் அன்ன திறல் கைகள் உடையோனை
அருவரையில் ஊன்றி அடர்த்தான் உறைவது அவள்இவள்நலூரே. 8

பொறி வரிய நாகம் உயர் பொங்கு அணைஅணைந்த புகழோனும்
வெறி வரிய வண்டு அறைய விண்ட மலர்மேல் விழுமியோனும்
செறிவு அரிய தோற்றமொடு ஆற்றல்மிக நின்றுசிறிதேயும்
அறிவு அரியன்ஆய பெருமான் உறைவது அவள்இவள்நலூரே. 9

கழி அருகு பள்ளி இடமாக அடும் மீன்கள் கவர்வாரும்
வழி அருகு சாரவெயில் நின்று அடிசில் உள்கி வருவாரும்
பழி அருகினார் ஒழிக பான்மையொடு நின்றுதொழுது ஏத்தும்
அழிஅருவி தோய்ந்த பெருமான் உறைவது அவள்இவள்நலூரே.10

ஆன மொழியான திறலோர் பரவும் அவள்இவள்நல்லூர் மேல்
போன மொழி நல்மொழிகள் ஆயபுகழ் தோணிபுரஊரன்
ஞானமொழி மாலை நல நாடு புகழ் ஞானசம்பந்தன்
தேனமொழி மாலைபுகழ்வார் துயர்கள் தீயது இலர் தாமே.11

திருச்சிற்றம்பலம்

264. திருப்பரிதிநியமம்

திருமுறை : 3/104 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி
இறைவர் : பரிதியப்பர் இறைவியார் : மங்களநாயகி

விண் கொண்ட தூ மதி சூடி நீடுவிரிபுன் சடைதாழப்
பெண் கொண்ட மார்பில் வெண்நீறு பூசிப் பேணார் பலி தேர்ந்து
கண் கொண்ட சாயலொடு ஏர் கவர்ந்த கள்வர்க்கு இடம்போலும்
பண்கொண்ட வண்டுஇனம் பாடி ஆடும் பரிதிந் நியமமே.1

அரவு ஒலி வில்ஒலி அம்பின்ஒலி அடங்கார் புரம்மூன்றும்
நிரவ வல்லார் நிமிர்புன்சடைமேல் நிரம்பா மதிசூடி
இரவில் புகுந்து என் எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்
பரவ வல்லார் வினை பாழ்படுக்கும் பரிதிந் நியமமே. 2

வாண்முக வார்குழல் வாள்நெடுங்கண் வளைத்தோள் மாதுஅஞ்ச
நீள்முகம் ஆகிய பைங்களிற்றின் உரி மேல் நிகழ்வித்து
நாண்முகம் காட்டி நலம் கவர்ந்த நாதர்க்கு இடம்போலும்
பாண் முக வண்டு இனம் பாடி ஆடும் பரிதிந் நியமமே. 3

வெம்சுரம் சேர் விளையாடல் பேணி விரிபுன்சடை தாழத்
துஞ்சிருள் மாலையும் நண்பகலும் துணையா பலிதேர்ந்து
அஞ்சுரும் பார் குழல் சோர உள்ளம் கவர்ந்தார்க்கு இடம்போலும்
பஞ்சுரம் பாடி வண்டு யாழ்முரலும் பரிதிந் நியமமே. 4

நீர் புல்கு புன்சடை நின்று இலங்க நெடு வெண்மதி சூடித்
தார் புல்கு மார்பில் வெண் நீறு அணிந்து தலையார் பலிதேர்வார்
ஏர் புல்கு சாயல் எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்
பார் புல்கு தொல்புகழால் விளங்கும் பரிதிந் நியமமே. 5

வெங்கடுங்காட்டகத்து ஆடல்பேணி விரிபுன்சடை தாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத் திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாயல் எழில் கவர்ந்த சைவர்க்கு இடம்போலும்
பைங்கொடிமுல்லை படர் புறவின் பரிதிந் நியமமே. 6

பிறை வளர் செஞ்சடை பின் தயங்கப் பெரிய மழுஏந்தி
மறை ஒலி பாடி வெண்நீறு பூசி மனைகள் பலிதேர்வார்
இறை வளை சோர எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்
பறைஒலி சங்குஒலியால் விளங்கும் பரிதிந் நியமமே. 7

ஆசு அடைவானவர் தானவரோடு அடியார் அமர்ந்து ஏத்த
மாசு அடையாத வெண்நீறு பூசி மனைகள் பலி தேர்வார்
காசு அடை மேகலை சோர உள்ளம் கவர்ந்தார்க்கு இடம்போலும்
பாசடைத் தாமரை வைகும்பொய்கைப் பரிதிந் நியமமே. 8

நாடினர் காண்கிலர் நான்முகனும் திருமால் நயந்து ஏத்த
கூடலர் ஆடலர் ஆகி நாளும் குழகர் பலி தேர்வார்
ஏடலர் சோர எழில்கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்
பாடலர் ஆடலராய் வணங்கும் பரிதிந் நியமமே. 9

கல்வளர் ஆடையர் கையில் உண்ணும் கழுக்கள் இழுக்கான
சொல் வளமாக நினைக்க வேண்டா சுடுநீறு அதுஆடி
நல்வளை சோர நலம் கவர்ந்த நாதர்க்கு இடம்போலும்
பல் வளர் முல்லை அம்கொல்லை மேலிப் பரிதிந் நியமமே. 10

பைஅரவம் விரி காந்தள் விம்மு பரிதிந் நியமத்துத்
தையலொர் பாகம் அமர்ந்தவனைத் தமிழ்ஞானசம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்த பத்தும் பரவிப் புகழ்ந்து ஏத்த
ஐயறவு இல்லை பிறப்பு அறுத்தல் அவலம் அடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

265. திருவெண்ணியூர்

திருமுறை : 2/14 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : வெண்ணிநாதர் இறைவியார் : அழகிய நாயகி

சடையானைச் சந்திரனோடு செங்கண் அரா
உடையானை உடைதலையில் பலி கொண்டுஊரும்
விடையானை விண்ணவர் தாம்தொழும் வெண்ணியை
உடையானை அல்லது உள்காது எனது உள்ளமே. 1

சோதியைச் சுண்ணவெண் நீறு அணிந்திட்ட எம்
ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத
வேதியை வேதியர்தாம் தொழும் வெண்ணியில்
நீதியை நினையவல்லார் வினை நில்லாவே. 2

கனிதனைக் கனிந்தவரைக் கலந்து ஆட்கொள்ளும்
முனிதனை மூஉலகுக்கு ஒருமூர்த்தியை
நனிதனை நல்லவர் தாம் தொழும் வெண்ணியில்
இனிதனை ஏத்துவர் ஏதம் இலாதாரே. 3

மூத்தானை மூஉலகுக்கு ஒரு மூர்த்தியாய்க்
காத்தானைக் கனிந்தவரைக் கலந்து ஆளாக
ஆர்த்தானை அழகுஅமர் வெண்ணி அம்மான் தன்னை
ஏத்தாதார் என்செய்வார் ஏழை அப் பேய்களே. 4

நீரானை நிறைபுனல் சூழ்தரு நீள் கொன்றைத்
தாரானைத் தையல்ஓர் பாகம் உடையானைச்
சீரானைத் திகழ்தரு வெண்ணி அமர்ந்துஉறை
ஊரானை உள்க வல்லார் வினை ஒயுமே. 5

முத்தினை முழுவயிரத்திரள் மாணிக்கத்
தொத்தினைத் துளக்கம் இலாத விளக்குஆய
வித்தினை விண்ணவர் தாம்தொழும் வெண்ணியில்
அத்தனை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 6

காய்ந்தானைக் காமனையும் செறு காலனைப்
பாய்ந்தானைப் பரிய கைம்மாஉரித் தோல்மெய்யில்
மேய்ந்தானை விண்ணவர் தாம்தொழும் வெண்ணியில்
நீந்தானை நினைய வல்லார் வினை நில்லாவே. 7

மறுத்தானை மாமலையை மதியாது ஓடிச்
செறுத்தானைத் தேசு அழியத்திகழ் தோள்முடி
இறுத்தானை எழில் அமர் வெண்ணி எம்மான் எனப்
பொறுத்தானைப் போற்றுவார் ஆற்றல் உடையாரே. 8

மண்ணினை வானவரோடு மனிதர்க்கும்
கண்ணினைக் கண்ணனும் நான்முகனும் காணா
விண்ணினை விண்ணவர்தாம் தொழும் வெண்ணியில்
அண்ணலை அடைய வல்லார்க்கு இல்லை அல்லலே. 9

குண்டரும் குணம் இலாத சமண் சாக்கிய
மிண்டர்கள் மிண்டுஅவை கேட்டு வெகுளேன்மின்
விண்டவர்தம் புரம் எய்தவன் வெண்ணியில்
தொண்டராய் ஏத்த வல்லார் துயர் தோன்றாவே. 10

மரு ஆரும் மல்கு காழித் திகழ் சம்பந்தன்
திரு ஆரும் திகழ்தரு வெண்ணி அமர்ந்தானை
உரு ஆரும் ஒண்தமிழ்மாலை இவை வல்லார்
பொருஆகப் புக்கு இருப்பார் புவலோகத்தே. 11

திருச்சிற்றம்பலம்

266. திருப்பாதாளீச்சரம்

திருமுறை : 1/180 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : சர்ப்பபுரீசுவரர் இறைவியார் : அமுதநாயகி

மின் இயல் செஞ்சடைமேல் விளங்கும் மதி மத்தமொடு நல்ல
பொன் இயல் கொன்றையினான் புனல்சூடிப் பொற்பு அமரும்
அன்னம் அ்ன நடையாள் ஒருபாகத்து அமர்ந்து அருளி நாளும்
பன்னிய பாடலினான் உறை கோயில் பாதாளே. 1

நீடு அலர்கொன்றையொடு நிரம்பா மதி சூடி வெள்ளைத்
தோடு அமர் காதில் நல்ல குழையான் சுடுநீற்றான்
ஆடுஅரவம் பெருக அனல் ஏந்திக் கை வீசி வேதம்
பாடலினால் இனியான் உறைகோயில் பாதாளே. 2

நாகமும் வான்மதியும் நலம் மல்கு செஞ்சடையான் சாமம்
போக நல் வில்வரையால் புரம்மூன்று எரித்து உகந்தான்
தோகைநல்மாமயில் போல் வளர் சாயல் தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்து உகந்தான் உறை கோயில் பாதாளே. 3

அங்கமும் நால்மறையும் அருள்செய்து அழகு ஆர்ந்த அம்சொல்
மங்கை ஓர்கூறு உடையான் மறையோன் உறைகோயில்
செங்கயல் நின்று உகளும் செறுவில் திகழ்கின்ற சோதிப்
பங்கயம் நின்று அலரும் வயல் சூழ்ந்த பாதாளே. 4

பேய்பலவும் நிலவப் பெருங்காடு அரங்காக உன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவும் திகழ்வித்துத்
தேய்பிறையும் அரவும் பொலிகொன்றைச் சடைதன்மேல் சேரப்
பாய்புனலும் உடையான் உறைகோயில் பாதாளே. 5

கண் அமர் நெற்றியினான் கமழ்கொன்றைச் சடைதன்மேல் நன்று
விண் இயல் மா மதியும் உடன்வைத்தவன் விரும்பும்
பெண் அமர் மேனியினான் பெருங்காடு அரங்காக ஆடும்
பண் இயல் பாடலினான் உறைகோயில் பாதாளே. 6

விண்டு அலர் மத்தமொடு மிளிரும் இள நாகம் வன்னி திகழ்
வண்டு அலர்கொன்றை நகு மதி புல்கு வார்சடையான்
விண்டவர்தம் புரம்மூன்று எரிசெய்து உரை வேதநான்கும் அவை
பண்டு இசைபாடலினான் உறைகோயில் பாதாளே. 7

மல்கிய நுண்இடையாள் உமைநங்கை மறுக அன்று கையால்
தொல்லைமலை எடுத்த அரக்கன் தலைதோள் நெரித்தான்
கொல்லை விடை உகந்தான் குளிர்திங்கள் சடைக்கு அணிந்தோன்
பல்இசை பாடலினான் உறைகோயில் பாதாளே. 8

தாமரைமேல் அயனும் அரியும் தமது ஆள்வினையால் தேடிக்
காமனை வீடுவித்தான் கழல் காண்பிலராய் அகன்றார்
பூ மருவும் குழலாள் உமைநங்கை பொருந்தி இட்ட நல்ல
பா மருவும் குணத்தான் உறைகோயில் பாதாளே. 9

காலையில் உண்பவரும் சமண்கையரும் கட்டுரை விட்டு அன்று
ஆலவிடம் நுகர்ந்தான் அவன் தன் அடியே பரவி
மாலையில் வண்டு இனங்கள் மதுஉண்டு இசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டு உகந்தான் உறைகோயில் பாதாளே.10

பல்மலர் வைகு பொழில் புடை சூழ்ந்த பாதாளைச் சேரக்
பொன் இயல் மாடம் மல்கு புகலிந் நகர் மன்னன்
தன் ஒளி மிக்கு உயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
இன்இசைபத்தும் வல்லார் எழில் வானத்து இருப்பாரே.11

திருச்சிற்றம்பலம்

267. திருக்களர்

திருமுறை : 2/51 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : களர்முளை நாதர் இறைவியார் : இளங்கொம்பன்னாள்

நீருள் ஆர் கயல் வாவி சூழ் பொழில்
நீண்ட மா வயல் ஈண்டு மா மதில்
தேரின் ஆர் மறுகில் விழா மல்கு திருக் களருள்
ஊர்உளார் இடு பிச்சை பேணும்
ஒருவனே ஒளிர்செஞ்சடைம்மதி
ஆர நின்றவனே அடைந்தார்க்கு அருளாயே. 1

தோளின்மேல் ஒளி நீறு தாங்கிய
தொண்டர் வந்து அடி போற்ற மிண்டிய
தாளினார் வளரும் தவம் மல்கு திருக் களருள்
வேளின் நேர் விசயற்கு அருள்புரி
வித்தகா விரும்பும் அடியாரை
ஆள்உகந்தவனே அடைந்தார்க்கு அருளாயே. 2

பாட வல்ல நல் மைந்தரோடு
பனிமலர்பல கொண்டு போற்றிசெய்
சேடர் வாழ் பொழில் சூழ் செழு மாடத் திருக் களருள்
நீட வல்ல நிமலனே அடி
நிரை கழல் சிலம்பு ஆர்க்க மாநடம்
ஆட வல்லவனே அடைந்தார்க்கு அருளாயே. 3

அம்பின் நேர் தடங்கண்ணினார் உடன்
ஆடவர் பயில் மாட மாளிகை
செம்பொனார் பொழில் சூழ்ந்து அழகு ஆய திருக் களருள்
என்பு பூண்டது ஓர் மேனி எம் இறைவா
இணைஅடி போற்றி நின்றவர்க்கு
அன்பு செய்தவனே அடைந்தார்க்கு அருளாயே. 4

கொங்கு உலாம் மலர்ச்சோலை வண்டுஇனம்
கெண்டி மா மது உண்டு இசைசெயத்
தெங்கு பைங்கமுகம் புடை சூழ்ந்த திருக் களருள்
மங்கைதன்னொடும் கூடிய
மணவாளனே பிணை கொண்டு ஓர் கைத்தலத்து
அம் கையில் படையாய் அடைந்தார்க்கு அருளாயே.5

கோல மா மயில் ஆலக் கொண்டல்கள்
சேர் பொழில் குலவும் வயல் இடைச்
சேல் இளங் கயல் ஆர் புனல் சூழ்ந்த திருக் களருள்
நீலம் மேவிய கண்டனே நிமிர்
புன்சடைப் பெருமான் எனப்பொலி
ஆலநீழல்உளாய் அடைந்தார்க்கு அருளாயே. 6

தம் பலம்அறியாதவர் மதில்
தாங்கு மால்வரையால் அழல் எழத்
திண்பலம் கெடுத்தாய் திகழ்கின்ற திருக் களருள்
வம்புஅலர் மலர் தூவி நின் அடி
வானவர் தொழ கூத்து உகந்து பேர்
அம்பலத்து உறைவாய் அடைந்தார்க்கு அருளாயே.7

குன்று அடுத்த நல் மாளிகைக் கொடி
மாடம் நீடு உயர் கோபுரங்கள்மேல்
சென்று அடுத்து உயர் வான்மதி தோயும் திருக் களருள்
நின்று அடுத்து உயர் மால்வரைத் திரள்
தோளினால் எடுத்தான் தன் நீள்முடி
அன்று அடர்த்து உகந்தாய் அடைந்தார்க்கு அருளாயே. 8

பண்ணி யாழ் பயில்கின்ற மங்கையர்
பாடல் ஆடலொடு ஆர வாழ் பதி
தெண்நிலாமதியம் பொழில் சேரும் திருக் களருள்
உள் நிலாவிய ஒருவனே
இருவர்க்கு நின் கழல் காட்சி ஆர்அழல்
அண்ணல் ஆய எம்மான் அடைந்தார்க்கு அருளாயே. 9

பாக்கியம்பல செய்த பத்தர்கள்
பாட்டொடும் பல பணிகள் பேணிய
தீக்கு இயல் குணத்தார் சிறந்து ஆரும் திருக் களருள்
வாக்கினால் மறை ஓதினாய் அமண்
தேரர் சொல்லிய சொற்கள் ஆனபொய்
ஆக்கி நின்றவனே அடைந்தார்க்கு அருளாயே. 10

இந்து வந்து எழும் மாட வீதி
எழில் கொள் காழிந்நகர்க் கவுணியன்
செந்து நேர் மொழியார் அவர் சேரும் திருக் களருள்
அந்தி அன்னது ஓர் மேனியான்ன
அமரர் தம் பெருமானை ஞானசம்
பந்தன் சொல் இவைபத்தும் பாடத் தவம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

268. திருச்சிற்றேமம்

திருமுறை : 3/42 பண் : கொல்லிக்கௌவாணம் இராகம் : நவரோசு
இறைவர் : பொன்வைத்தநாதர் இறைவியார் : அகிலாண்டநாயகி

நிறைவெண்திங்கள் வாள்முக மாதர் பாட நீள்சடைக்
குறைவெண்திங்கள் சூடி ஓர் ஆடல் மேய கொள்கையான்
சிறைவண்டு யாழ்செய் பைம்பொழில் பழனம் சூழ்சிற்றேமத்தான்
இறைவன் என்றே உலகு எலாம் ஏத்த நின்ற பெருமானே. 1

மாகத்திங்கள் வாள்முக மாதர் பாட வார்சடைப்
பாகத்திங்கள் சூடி ஓர் ஆடல் மேய பண்டங்கன்
மேகத்து ஆடு சோலை சூழ்மிடை சிற்றேமம் மேவினான்
ஆகத்து ஏர் கொள் ஆமையைப் பூண்டஅண்ணல் அல்லனே. 2

நெடு வெண்திங்கள் வாள்முக மாதர் பாட நீள்சடைக்
கொடுவெண்திங்கள் சூடி ஓர் ஆடல் மேய கொள்கையான்
படு வண்டு யாழ்செய் பைம்பொழில் பழனம் சூழ் சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக் காலினால் காய்ந்த கடவுள் அல்லனே. 3

கதிரார் திங்கள் வாள்முக மாதர் பாடக் கண்ணுதல்
முதிரார் திங்கள் சூடியோர் ஆடல்மேய முக்கணன்
எதிரார் புனல்அம்புன்சடை எழிலாரும் சிற்றேமத்தான்
அதிரார் பைங்கண் ஏறுஉடை ஆதிமூர்த்தி அல்லனே. 4

வானார் திங்கள் வாள்முக மாதர் பாட வார்சடைக்
கூனார் திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
தேனார் வண்டு பண்செயும் திரு ஆரும் சிற்றேமத்தான்
மானார் விழிநன்மாதொடும் மகிழ்ந்த மைந்தன் அல்லனே. 5

பனிவெண்திங்கள் வாள்முக மாதர் பாடப் பல்சடைக்
குனிவெண்திங்கள் சூடி ஓர் ஆடல் மேய கொள்கையான்
தனி வெள்விடையன் புள்இனத் தாமம்சூழ்சிற்றேமத்தான்
முனிவு மூப்பும் நீக்கிய முக்கண் மூர்த்தி அல்லனே. 6

கிளரும் திங்கள்வாள்முக மாதர் பாடக் கேடு இலா
வளரும் திங்கள் சூடி ஓர் ஆடல் மேய மாதவன்
தளிரும் கொம்பும் மதுவும்ஆர் தாமம் சூழ் சிற்றேமத்தான்
ஒளிரும் வெண்நூல் மார்பன் என் உள்ளத்து உள்ளான் அல்லனே.7

சூழ்ந்த திங்கள் வாள்முக மாதர் பாடச் சூழ்சடைப்
போழ்ந்த திங்கள் சூடி ஓர் ஆடல் மேய புண்ணியன்
தாழ்ந்த வயல் சிற்றேமத்தான் தடவரையைத் தன் தாளினால்
ஆழ்ந்த அரக்கன் ஒல்க அன்று அடர்த்த அண்ணல் அல்லனே. 8

தனிவெண் திங்கள் வாள்முக மாதர் பாடத் தாழ்சடைத்
துணிவெண் திங்கள் சூடியோர் ஆடல்மேய தொன்மையான்
அணிவெண்ணச் சிற்றேமத்தான் அலர்மேல் அந்தணாளனும்
மணிவண்ணனும்முன் காண்கிலா மழுவாள்செல்வன் அல்லனே.9

வெள்ளைத்திங்கள் வாள்முக மாதர் பாட வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோர் ஆடல்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தார் சிற்றேமத்தான் உருவார்புத்தர் ஒப்பிலாக்
கள்ளத்தாரைத் தான் ஆக்கி உள்கரந்து வைத்தான் அல்லனே.10

கல்லில்ஓதம் மல்கு தண்கானல் சூழ்ந்த காழியான்
நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்
செல்வன் ஊர்சீற்றேமத்தைப் பாடல்சீரார் நாவினால்
வல்லர் ஆகி வாழ்த்துவார் அல்லல் இன்றி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

269. திருவுசாத்தானம்

திருமுறை : 3/33 பண் : கொல்லி இராகம் : நவரோசு
இறைவர் : மந்திரபுரீசுவரர் இறைவியார் : பெரியநாயகி

நீர்இடைத் துயின்றவன் தம்பி நீள் சாம்புவான்
போர் உடைச் சுக்கிரீவன் அனுமான் தொழக்
கார் உடை நஞ்சு உண்டு காத்து அருள் செய்த எம்
சீர் உடைச் சேடர் வாழ் திரு உசாத்தானமே. 1

கொல்லை ஏறு உடையவன் கோவணஆடையன்
பல்லை ஆர் படுதலைப் பலிகொளும் பரமனார்
முல்லை ஆர் புறவு அணி முது பதி நறை கமழ்
தில்லையான் உறைவுஇடம் திரு உசாத்தானமே. 2

தாம் அலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார்தம் கனா ஆக்கினான் ஒருநொடிக்
காமனார் உடல் கெடக் காய்ந்த எம் கண்ணுதல்
சேமமா உறைவுஇடம் திரு உசாத்தானமே. 3

மறி தரு கரத்தினான் மால்விடை ஏறியான்
குறி தரு கோல நல் குணத்தினார் அடி தொழ
நெறி தரு வேதியர் நித்தலும் நியமம் செய்
செறி தரு பொழில் அணி திரு உசாத்தானமே.(4–6)

பண்டு இரைத்து அயனும் மாலும் பலபத்தர்கள்
தொண்டு இரைத்தும் மலர் தூவி தோத்திரம் சொலக்
கொண்டு இரைக் கொடியொடும் குருகினின் நல்இனம்
தெண்திரைக் கழனிசூழ் திரு உசாத்தானமே. 7

மடவரல்பங்கினன் மலைதனை மதியாது
சடசட எடுத்தவன் தலைபத்து நெரிதர
அடர்தர ஊன்றி அங்கே அவற்கு அருள்செய்தான்
திடம்என உறைவிடம் திரு உசாத்தானமே. 8

ஆண் அலார் பெண் அலார் அயனொடு மாலுக்கும்
காண ஒணா வண்ணத்தான் கருதுவார் மனத்து உளான்
பேணுவார் பிணியொடும் பிறப்பு அறுப்பான் இடம்
சேண் உலாம் மாளிகைத் திரு உசாத்தானமே. 9

கானம் ஆர் வாழ்க்கையான் கார்அமண் தேரர் சொல்
ஊனமாக் கொண்டு நீர் உரைமின் உய்ய எனில்
வானம் ஆர் மதில் அணி மாளிகை வளர் பொழில்
தேன மா மதியம்தோய் திரு உசாத்தானமே. 10

வரை திரிந்து இழியும் நீர் வளவயல் புகலி மன்
திரை திரிந்து எறிகடல் திரு உசாத்தானரை
உரை தெரிந்து உணரும் சம்பந்தன் ஒண் தமிழ் வல்லார்
நரைதிரை இன்றியே நன்நெறி சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்




270. திருஇடும்பாவனம்

திருமுறை : 1/17 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : சற்குணநாதர் இறைவியார் : மங்களநாயகி

மனம் ஆர்தரு மடவாரொடு மகிழ் மைந்தர்கள் மலர் தூய்த்
தனம் ஆர்தரு சங்கக்கடல் வங்கத்திரள் உந்திச்
சினம் ஆர்தரு திறல்வாள்எயிற்று அரக்கன் மிகு குன்றில்
இன மா தவர் இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே. 1

மலையார் தரு மடவாள் ஒருபாகம் மகிழ்வு எய்தி
நிலையார் தரு நிமலன் வலி நிலவும் புகழ்ஒளி சேர்
கலையார் தரு புலவோர் அவர் காவல் மிகு குன்றில்
இலையார் தரு பொழில் சூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 2

சீலம் மிகு சித்தத்தவர் சிந்தித்து எழும் எந்தை
ஞாலம் மிகு கடல் சூழ்தரும் உலகத்தவர் நலமார்
கோலம் மிகு மலர்மென்முலை மடவார் மிகு குன்றில்
ஏலம் கமழ் பொழில் சூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 3

பொழில் ஆர்தரு குலைவாழைகள் எழிலார் திகழ் போழ்தில்
தொழிலால் மிகு தொண்டர் அவர் தொழுது ஆடிய முன்றில்
குழல் ஆர்தரு மலர்மென்முலை மடவார் மிகு குன்றில்
எழில் ஆர்தரும் இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே. 4

பந்து ஆர் விரல் உமையாள் ஒருபங்கா கங்கை முடிமேல்
செந்தாமரை மலர் மல்கிய செழுநீர் வயல் கரைமேல்
கொந்து ஆர் மலர்புன்னை மகிழ் குரவம் கமழ் குன்றில்
எந்தாய் என இருந்தான் இடம் இடும்பாவனம் இதுவே. 5

நெறி நீர்மையர் நீள் வானவர் நினையும் நினைவாகி
அறி நீர்மையில் எய்தும் அவர்க்கு அறியும் அறிவு அருளிக்
குறி நீர்மையர் குணம் ஆர்தரு மணம் ஆர்தரு குன்றில்
எறி நீர் வயல் புடை சூழ்தரும் இடும்பாவனம் இதுவே. 6

நீறு ஏறிய திருமேனியர் நிலவும் உலகு எல்லாம்
பாறு ஏறிய படுவெண்தலை கையில் பலி வாங்கா
கூறு ஏறிய மடவாள் ஒருபாகம் மகிழ்வு எய்தி
ஏறு ஏறிய இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே.7

தேர் ஆர்தரு திகழ் வாள்எயிற்று அரக்கன் சிவன் மலையை
ஓராது எடுத்து ஆர்த்தான் முடி ஒருபஃதுஅவை நெரித்துக்
கூர் ஆர்தரு கொலைவாளொடு குணம் நாமமும் கொடுத்த
ஏர் ஆர்தரும் இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே. 8

பொருள் ஆர்தரும் மறையோர் புகழ் விருத்தர் பொலி மலிசீர்த்
தெருள் ஆர்தரு சிந்தையொடு சந்தம் மலர்பல தூய்
மருள் ஆர்தரு மாயன் அயன் காணார் மயல் எய்த
இருள் ஆர்தரு கண்டர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே.9

தடுக்கை உடன் இடுக்கித் தலை பறித்துச் சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள் உடம்புஇட்டு உழல்வாரும்
மடுக்கள் மலர் வயல்சேர் செந்நெல் மலி நீர் மலர்க் கரைமேல்
இடுக்கண் பல களைவான் இடம் இடும்பாவனம் இதுவே. 10

கொடி ஆர் நெடுமாடக் குன்றளூரின் கரைக் கோல
இடி ஆர் கடல் அடி வீழ்தரும் இடும்பாவனத்து இறையை
அடி ஆயும் அந்தணர் காழியுள் அணி ஞானசம்பந்தன்
படியால் சொன்ன பாடல் சொல பறையும்வினை தானே.11

திருச்சிற்றம்பலம்

271. திருக்கடிக்குளம்

திருமுறை : 2/104 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : கற்பகநாயகர் இறைவியார் : சௌந்தரநாயகி

பொடி கொள் மேனி வெண்நூலினர் தோலினர்
புலிஉரி அதள் ஆடை
கொடி கொள் ஏற்றினர் மணி கிணின் என வரு
குரைகழல் சிலம்பு ஆர்க்கக்
கடி கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்து
உறையும் கற்பகத்தைத் தம்
முடிகள் சாய்த்து அடி வீழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே. 1

விண்களார் தொழும் விளக்கினைத் துளக்கு இலா
விகிர்தனை விழவு ஆரும்
மண்களார் துதித்து அன்பராய் இன்புஉறும்
வள்ளலை மருவி தம்
கண்கள் ஆர்தரக் கண்டு நம் கடிக்குளத்து
உறைதரு கற்பகத்தைப்
பண்கள் ஆர்தரப் பாடுவார் கேடிலர்
பழி இலர் புகழ் ஆமே. 2

பொங்கு நன் கரிஉரிஅது போர்ப்பது
    புலிஅதள் உடை நாகம்
தங்க மங்கையைப் பாகமது உடையவர்
    தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத்து
    உறைதரு கற்பகத்தை
எங்கும் ஏத்தி நின்று இன்புஉறும் அடியரை
    இடும்பை வந்து அடையாவே. 3

நீர் கொள் நீள்சடைமுடியனை நித்திலத்
    தொத்தினை நிகர் இல்லாப்
பார்கொள் பார் இடத்து அவர்தொழும் பவளத்தைப்
    பசும்பொன்னை விசும்பு ஆரும்
கார் கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்து
    உறையும் கற்பகம்தன்னைச்
சீர் கொள் செல்வங்கள் ஏத்த வல்லார்வினை
    தேய்வது திணமாமே. 4

சுரும்பு சேர் சடைமுடியினன் மதியொடு
    துன்னிய தழல்நாகம்
அரும்பு தாது அவிழ்ந்து அலர்ந்தன மலர்பல
    கொண்டு அடியவர் போற்றக்
கரும்பு கார் மலி கொடி மிடை கடிக்குளத்து
    உறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையோடு உள்மகிழ்ந்து உரைப்பவர்
    விதி உடையவர் தாமே. 5

மாது இலங்கிய பாகத்தன் மதியமொடு
அலைபுனல் அழல் நாகம்
போது இலங்கிய கொன்றையும் மத்தமும்
புரிசடைக்கு அழகாகக்
காது இலங்கிய குழையினன் கடிக்குளத்து
உறைதரு கற்பகத்தின்
பாதம் கைதொழுது ஏத்த வல்லார் வினை
பற்று அறக்கெடும் அன்றே. 6

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்
குழாம்பல குளிர்பொய்கை
உலவு புள்இனம் அன்னங்கள் ஆலிடும்
பூவை சேரும் கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத்து
உறையும் கற்பகத்தைச் சீர்
நிலவி நின்றுநின்று ஏத்துவார் மேல்வினை
நிற்ககில்லா தானே. 7

மடுத்த வாள் அரக்கன் அவன் மலைதன்மேல்
மதிஇலாமையில் ஓடி
எடுத்தலும் முடிதோள்கரம் நெறிந்து இற
இறையவன் விரல் ஊன்றக்
கடுத்து வாயொடு கை எடுத்து அலறிடக்
கடிக்குளம்தனில்மேவின்
கொடுத்த பேரருள் கூத்தனை ஏத்துவார்
குணம் உடையவர் தாமே. 8

நீரினார் கடல் துயின்றவன் அயனொடு
நிகழ் அடி முடி காணார்
பாரினார் விசும்பு உற பரந்து எழுந்தத ஓர்
பவளத்தின் படிஆகிக்
காரினார் பொழில் சூழ்தரு கடிக்குளத்து
உறையும் கற்பகத்தின் தன்
சீரினார் கழல் ஏத்த வல்லார்களைத்
தீவினை அடையாவே. 9

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணரும்
குறியினில் நெறிநில்லா
மிண்டர் மிண்டு உரை கேட்டு அவை மெய் எனக்
கொள்ளன் மின் விடம்உண்ட
கண்டர் முண்டம் நல் மேனியர் கடிக்குளத்து
உறைதரும் எம் ஈசர்
தொண்டர் தொண்டரைத் தொழுது அடி பணிமின்கள்
தூ நெறி எளிது ஆமே. 10

தனம் மலி புகழ் தயங்கு பூந்தராய் அவர்
மன்னன் நல் சம்பந்தன்
மனம் மலி புகழ் வண் தமிழ்மாலைகள்
மால்அதுஆய் மகிழ்வோடும்
கனம் மலி கடல் ஓதம் வந்து உலவிய
கடிக்குளத்து அமர்வானை
இனம் மலிந்து இசைபாட வல்லார்கள் போய்
இறைவனோடு உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

272. திருத்தண்டலை நீணெறி

திருமுறை : 3/50 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

இறைவர் : நீணெறிநாதர் இறைவியார் : ஞானாம்பிகை

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடையார்க்கு இடம்
கரும்பும் செந்நெலும் காய் கமுகின் வளம்
நெருங்கும் தண்டலை நீணெறி காண்மினே. 1

இகழும் காலன் இதயத்தும் என்உளும்
திகழும் சேவடியான் திருந்தும் இடம்
புகழும் பூமகளும் புணர் பூசுரர்
நிகழும் தண்டலை நீணெறி காண்மினே. 2

பரந்த நீலப் படர்எரிவல்விடம்
கரந்த கண்டத்தினான் கருதும் இடம்
சுரந்த மேதி துறை படிந்து ஒடையில்
நிரந்த தண்டலை நீணெறி காண்மினே. 3

தவந்த என்பும் தவளப் பொடியுமே
உவந்த மேனியினான் உறையும் இடம்
சிவந்த பொன்னும் செழுந் தரளங்களும்
நிவந்த தண்டலை நீணெறி காண்மினே. (4-7)

இலங்கை வேந்தன் இருபதுதோள் இற
விலங்கலில் அடர்த்தான் விரும்பும் இடம்
சலம் கொள் இப்பி தரளமும் சங்கமும்
நிலம்கொள் தண்டலை நீணெறி காண்மினே. 8

கரு வரு உந்தியின் நான்முகன் கண்ணன் என்று
இருவரும் தெரியா ஒருவன் இடம்
செரு வருந்திய செம்பியன்கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே. 9

கலவு சீவரத்தார் கையில் உண்பவர்
குலவமாட்டாக் குழகன் உறைவிடம்
சுலவு மா மதிலும் சுதை மாடமும்
நிலவு தண்டலை நீணெறி காண்மினே. 10

நீற்றர் தண்டலை நீள்நெறி நாதனைத்
தோற்று மேன்மையர் தோணிபுரத்து இறை
சாற்று ஞானசம்பந்தன் தமிழ்வலார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே. 11

திருச்சிற்றம்பலம்

273. திருக்கோட்டூர்

திருமுறை : 2/209 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : கொழுந்துநாதர் இறைவியார் : தேன்மொழிப்பாவையம்மை

நீலம் ஆர்தரு கண்டனே நெற்றி ஓர்
கண்ணனே ஒற்றை விடைச்
சூலம் ஆர்தரு கையனே துன்று பைம்
பொழில்கள் சூழ்ந்து அழகுஆய
கோல மா மலர் மணம் கமழ் கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
சால நீள்தலம் அதனிடைப் புகழ்மிகத்
தாங்குவர் பாங்காலே. 1

பங்கயம்மலர்ச்சீறடிப் பஞ்சுறு
மெல்விரல் அரவுஅல்குல்
மங்கைமார்பலர் மயில்குயில் கிளிஎன
மிழற்றிய மொழியார் மென்
கொங்கையார் குழாம் குணலை செய் கோட்டூர் நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
சங்கை ஒன்று இலராகிச் சங்கரன் திரு
அருள் பெறல் எளிதாமே. 2

நம்பனார் நல மலர்கொடு தொழுது எழும்
அடியவர் தமக்கு எல்லாம்
செம்பொனார் தரும் எழில்திகழ் முலைஅவர்
செல்வம் மல்கிய நல்ல
கொம்பனார் தொழுது ஆடிய கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
அம்பொனார் தரும் உலகினில் அமரரோடு
அமர்ந்து இனிது இருப்பாரே. 3

பலவு நீள்பொழில் தீங்கனி தேன்பலா
மாங்கனி பயில்வாய
கலவ மஞ்ஞைகள் நிலவுசொல் கிள்ளைகள்
அன்னம்சேர்ந்து அழகாய
குலவு நீள்வயல் கயல் உகள் கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
நிலவு செல்வத்தர் ஆகி நீள் நிலத்திடை
நீடிய புகழாரே. 4

உருகுவார் உள்ளத்து ஒண்சுடர் தனக்கு என்றும்
அன்பராம் அடியார்கள்
பருகும் ஆரமுது என நின்று பரிவொடு
பத்தி செய்து எத்திசையும்
குருகு வாழ்வயல் சூழ்தரு கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும்போய்
அவன் அருள் பெறலாமே. 5

துன்று வார்சடைத் தூமதி மத்தமும்
துன் எருக்கு ஆர் வன்னி
பொன்றினார் தலைக் கலனொடு பரிகலம்
புலிஉரி உடை ஆடை
கொன்றை பொன் என மலர்தரு கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவாரை
என்றும் ஏத்துவார்க்கு இடர்இலை கேடுஇலை
ஏதம் வந்து அடையாவே. 6

மாடமாளிகை கோபுரம் கூடங்கள்
மணி அரங்கு அணிசாலை
பாடு சூழ்மதில் பைம்பொன் செய் மண்டபம்
பரிசொடு பயில்வாய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
கேடது ஒன்று இலராகி நல் உலகினில்
கெழுவுவர் புகழாலே. 7

ஒளி கொள்வாள் எயிற்று அரக்கன் அவ்வுயர் வரை
எடுத்தலும் உமைஅஞ்சிச்
சுளிய ஊன்றலும் சோர்ந்திட வாளொடு
நாள் அவற்கு அருள்செய்த
குளிர்கொள் பூம்பொழில் சூழ்தரு கோட்டூர்நல்
கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர் கொள் தாமரைப் பாதங்கள் அருள்பெறும்
தவம்உடையவர் தாமே. 8

பாடி ஆடும் மெய்ப் பத்தர்கட்கு அருள்செயும்
முத்தினைப் பவளத்தைத்
தேடிமால்அயன் காண ஒண்ணாத அத்
திருவினைத் தெரிவைமார்
கூடி ஆடவர் கைதொழு கோட்டூர் நல்
கொழுந்தே என்று எழுவார்கள்
நீடு செல்வத்தர் ஆகி இவ்வுலகினில்
நிகழ்தரு புகழாரே. 9

கோணல் வெண்பிறைச் சடையனைக் கோட்டூர் நல்
கொழுந்தினைச் செழும்திரளைப்
பூணல் செய்து அடிபோற்றுமின் பொய்இலா
மெய்யன் நல்அருள் என்றும்
காணல் ஒன்றிலாக் கார் அமண் தேரர்குண்டு
ஆக்கர் சொல் கருதாதே
பேணல் செய்து அரனைத் தொழும் அடியவர்
பெருமையைப் பெறுவாரே. 10

பந்து உலாவிரல் பவளவாய்த் தேன்மொழிப்
பாவையோடு உருவாகும்
கொந்துலா மலர் விரிபொழில் கோட்டூர் நல்
கொழுந்தினைச் செழும்பவளம்
வந்து உலாவிய காழியுள் ஞானசம்
பந்தன் ஆய்ந்து உரைசெய்த
சந்து உலாம்தமிழ் மாலைகள் வல்லவர்
தாங்குவர் புகழாலே. 11

திருச்சிற்றம்பலம்

274. திருவெண்டுறை

திருமுறை : 3/61 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : வெண்டுறை நாதர் இறைவியார் : வேல்நெடுங்கண்ணியம்மை

ஆதியன் ஆதிரையன் அனல்ஆடிய ஆர் அழகன்
பாதியோர் மாதினொடும் பயிலும் பரமாபரமன்
போது இயலும் முடிமேல் புனலோடுஅரவம் புனைந்த
வேதியன் மாதிமையால் விரும்பும் இடம் வெண்டுறையே.1

காலனை ஓர் உதையில் உயிர் வீடுசெய்வார் கழலான்
பாலொடு நெய் தயிரும் பயின்று ஆடிய பண்டரங்கன்
மாலை மதியொடு நீர் அரவம் புனைவார் சடையான்
வேல்அனகண்ணியொடும் விரும்பும் இடம் வெண்டுறையே. 2

படை நவில் வெண்மழுவான் பலபூதப்படை உடையான்
கடை நவில் மும்மதிலும் எரியூட்டிய கண்ணுதலான்
உடை நவிலும் புலித்தோல் உடை ஆடையினான் கடிய
விடை நவிலும் கொடியான் விரும்பும் இடம் வெண்டுறையே. 3

பண் அமர் வீணையினான் பரவிப்பணி தொண்டர்கள் தம்
எண் அமர் சிந்தையினான் இமையோர்க்கும் அறிவு அரியான்
பெண் அமர் கூறுஉடையான் பிரமன் தலையில் பலியான்
விண் அவர் தம்பெருமான் விரும்பும் இடம் வெண்டுறையே. 4

பார் இயலும் பலியான் படியார்க்கும் அறிவுஅரியான்
சீர் இயலும் மலையாள் ஒரு பாகமும் சேரவைத்தான்
போர் இயலும் புரம் மூன்று உடன் பொன்மலையே சிலையா
வீரியம் நின்று செய்தான் விரும்பும் இடம் வெண்டுறையே. 5

ஊழிகளாய் உலகாய் ஒருவர்க்கும் உணர்வு அரியான்
போழ்இளவெண்மதியும் புனலும் அணி புன்சடையான்
யாழின் மொழி உமையாள் வெருவவ் எழில் வெண்மருப்பின்
வேழம் உரித்த பிரான் விரும்பும் இடம் வெண்டுறையே.6

கன்றிய காலனையும் உருளக்கனல் வாய் அலறிப்
பொன்ற முனிந்த பிரான் பொடி ஆடிய மேனியினான்
சென்று இமையோர் பரவும் திகழ் சேவடியான் புலன்கள்
வென்றவன் எம் இறைவன் விரும்பும் இடம் வெண்டுறையே. 7

கரம் இரு பத்தினாலும் கடுவன் சினமாய் எடுத்த
சிரம் ஒரு பத்தும் உடை அரக்கன் வலிசெற்று உகந்தான்
பரவ வல்லார் வினைகள் அறுப்பான் ஒருபாகமும் பெண்
விரவிய வேடத்தினான் விரும்பும்இடம் வெண்டுறையே.8

கோல மலர் அயனும் குளிர் கொண்டல் நிறத்தவனும்
சீலம் அறிவு அரிதாய்த் திகழ்ந்து ஓங்கிய செந்தழலான்
மூலம்அதுஆகி நின்றான் முதிர்புன்சடை வெண்பிறையான்
வேலைவிடமிடற்றான் விரும்பும் இடம் வெண்டுறையே.9

நக்கஉருவாயவரும் துவர்ஆடைநயந்து உடையாம்
பொக்கர்கள் தம்உரைகள் அவை பொய் என எம்இறைவன்
திக்கு நிறை புகழார் தரு தேவர்பிரான் கனகம்
மிக்கு உயர் சோதி அவன் விரும்பும் இடம் வெண்பிறையே. 10

திண்ணமரும்புரிசைத் திரு வெண்டுறை மேயவனைத்
தண்ணமரும்பொழில் சூழ்தரு சண்பையர் தம்தலைவன்
எண்ணமர் பல்கலையான் இசை ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினைஆயின பற்றுஅறுமே.11

திருச்சிற்றம்பலம்

275. திருக்கொள்ளம்பூதூர்

திருமுறை : 3/6 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : வில்வவனநாதர் இறைவியார் : சௌந்தரநாயகி

கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்
நட்டம்ஆடிய நம்பனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 1

கோட்டகக் கழனிக் கொள்ளம்பூதூர்
நாட்டு அகத்து உறை நம்பனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 2

குலையினார் தெங்கு சூழ் கொள்ளம்பூதூர்
விலையில் ஆட்கொண்ட விகிர்தனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 3

குவளை கண்மலரும் கொள்ளம்பூதூர்த்
தவள நீறு அணி தலைவனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 4

கொன்றை பொன் சொரியும் கொள்ளம்பூதூர்
நின்ற புன்சடை நிமலனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 5

ஓடம் வந்து அணையும் கொள்ளம்பூதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 6

ஆறு வந்து அணையும் கொள்ளம்பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 7

குரக்குஇனம் பயிலும் கொள்ளம்பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 8

பருவரால் உகளும் கொள்ளம்பூதூர்
இருவர் காண்பு அரியான் கழல் உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 9

நீர அகக் கழனிக் கொள்ளம்பூதூர்த்
தேர்அமண் செற்ற செல்வனை உள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்குமாறு அருள் நம்பனே. 10

கொன்றை சேர் சடையான் கொள்ளம்பூதூர்
நன்று காழியுள் ஞானசம்பந்தன்
இன்று சொல்மாலை கொண்டு ஏத்த வல்லார் போய்
என்றும் வானவரோடு இருப்பாரோ. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

தென்தமிழ் நாட்டில் திருநீற்றுநெறியை வளர்த்துத் திரும்பியெழுந்தருளும் பிள்ளையார் சோழநாட்டை யடைந்து திருக்களர், திருப்பாதாளீச்சுரம் முதலிய திருப்பதிகளை வணங்கி முள்ளிவாய்க்கரையை அணைந்தார். அணைந்தபோது அவ்வாறு ஆளியங்கா வண்ணம் பெருகி யோடக் கோல் நிலை பெறாத தன்மையால் ஓடக்காரர்கள் ஓடங்களை நிறுத்திப் போய் விட்டார்கள். கரையினின்ற பிள்ளையார் அடுத்த கரையிற் றமக்கு முன்பாகத் திருக்கொள்ளம்பூதூர் தோன்றுதலைக் கண்டு அதனை விரைந்து சென்று வணங்க விரும்பி ஓடத்தைக் கட்டவிழ்த்து ஆற்றில் விட்டுத் திருக்கூட்டத்தினை யேற்றி நாவலமே கோலாக அதன் மேற்றாமும் நின்று நம்பர்தமைக் கொட்டமென இப்பதிகத்தை நவின்று பாடி யாற்றைக் கடந்து திருக்கூட்டத்துடன் இறைவனை யணைந்து வழிபட்டுத் 'தாணுவே, ஆற்றின்கண் ஓட முய்க்குந் தன்மையா லருள் தந்த தலைவ, நாகப்பூணியனாய், களிற்றுரிவை போர்த்த முக்கட் புனிதனே' என்று துதித் தாண்டெழுந் தருளியிருந்தார்.

276. திருக்கொள்ளிக்காடு

திருமுறை : 3/16 பண் : காந்தாரபஞ்சமம் இராகம்: கேதார கௌளம்

இறைவர் : அக்கினியீச்சுரர் இறைவியார் : பஞ்சின்மெல்லடியாள்

நிணம் படு சுடலையில் நீறு பூசி நின்று
இணங்குவர் பேய்களோடு இடுவர் மாநடம்
உணங்கல்வெண் தலைதனில் உண்பர் ஆயினும்
குணம் பெரிது உடையர் நம் கொள்ளிக்காடரே. 1

ஆற்ற நல் அடிஇணை அலர்கொண்டு ஏத்துவான்
சாற்றிய அந்தணன் தகுதி கண்ட நாள்
மாற்றலன்ஆகி முன் அடர்த்து வந்து அணை
கூற்றினை உதைத்தனர் கொள்ளிக்காடரே. 2

அத்தகு வானவர்க்கு ஆக மால்விடம்
வைத்தவர் மணிபுரை கண்டத்தின் உள்ளே
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்து அலர் கொன்றையர் கொள்ளிக்காடரே. 3

பா வணம் மேவு சொல்மாலையில் பல
நா வணம் கொள்கையின் நவின்ற செய்கையர்
ஆவணம் கொண்டு எமை ஆள்வர் ஆயினும்
கோவணம் கொள்கையர் கொள்ளிக்காடரே. 4

வார்அணி வனமுலை மங்கையாளொடும்
சீர் அணி திருஉருத் திகழ்ந்த சென்னியர்
நார் அணி சிலைதனால் நணுகலார் எயில்
கூர் எரி கொளுவினர் கொள்ளிக்காடரே. 5

தொல்லை வல்லினை தீர்ப்பார் சுடலை வெண்பொடி அணி சுவண்டர்
எல்லி சூடிநின்று ஆடும் இறையவர் இமையவர் ஏத்தச்
சில்லை மால்விடை ஏறித் திரிபுரம் தீ எழச் செற்ற
வில்லினார் திருத்தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.6

நெறி கொள் சிந்தையர் ஆகி நினைபவர் வினை கெட நின்றார்
முறி கொள் மேனி முக்கண்ணர் முளைமதி நடுநடுத்து இலங்கப்
பொறிகொள் வாள்அரவு அணிந்த புண்ணியர் வெண்பொடிப்பூசி
வெறிகொள் பூம்பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே. 7

எண் இலா விறல் அரக்கன் எழில் திகழ் மால்வரை எடுக்கக்
கண் எலாம் பொடிந்து அலறக் கால்விரல் ஊன்றிய கருத்தர்
தண் உலாம் புனல்கண்ணி தயங்கிய சடைமுடிச் சதுரர்
விண் உலாம் பொழில் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.8

தேடித்தான் அயன் மாலும் திருமுடி அடிஇணை காணார்
பாடத்தான் பலபூதப் படையினர் சுடலையில் பலகால்
ஆடத்தான் மிக வல்லர் அருச்சுனற்கு அருள்செயக் கருதும்
வேடத்தார் திருத் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே. 9

சடம் கொள் சீவரப் போர்வைச் சாக்கியர் சமணர் சொல் தவிர
இடம் கொள் வல்வினை தீர்க்கும் ஏத்துமின் இருமருப்பு ஒருகைக்
கடம் கொள் மால்களிற்று உரியர் கடல் கடைந்திடக் கனன்று எழுந்த
விடம்கொள் கண்டத்தர் தெங்கூர் வெள்ளியம் குன்று அமர்ந்தாரே.10

வெந்தநீற்றினர் தெங்கூர் வெள்ளிஅம்குன்று அமர்ந்தாரைக்
கந்தம் ஆர்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
சந்தம்ஆயின பாடல் தண்டமிழ் பத்தும் வல்லார்மேல்
பந்தம் ஆயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே. 11

திருச்சிற்றம்பலம்

278. திருநெல்லிக்கா

திருமுறை : 2/19 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : நெல்லிவனநாதர் இறைவியார் : மங்களநாயகி

அறத்தால் உயிர் காவல் அமர்ந்து அருளி
மறத்தால் மதில்மூன்றுஉடன் மாண்பு அழித்த
திறத்தால் தெரிவு எய்திய தீ வெண்திங்கள்
நிறத்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 1

பதிதான் இடுகாடு பைங்கொன்றை தொங்கல்
மதிதான் அது சூடிய மைந்தனும் தான்
விதி தான் வினை தான் விழுப்பம் பயக்கும்
நெதி தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 2

நலம்தான் அவன் நான்முகன் தன் தலையைக்
கலம்தான் அதுகொண்ட கபாலியும் தான்
புலம்தான் புகழால் எரிவிண் புகழும்
நிலம்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 3

தலைதான் அது ஏந்திய தம் அடிகள்
கலைதான் திரி காடு இடம் நாடு இடம் ஆம்
மலைதான் எடுத்தான் மதில் மூன்று உடைய
நிலைதான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 4

தவம்தான் கதிதான் மதி வார்சடை மேல்
உவந்தான் சுறவேந்தன் உரு அழியச்
சிவந்தான் செயச்செய்து செறுத்து உலகில்
நிவந்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 5

வெறி ஆர் மலர்க்கொன்றை அம்தார் விரும்பி
மறி ஆர் மலைமங்கை மகிழ்ந்தவன் தான்
குறியால் குறிகொண்டவர் போய்க் குறுகும்
நெறியான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 6

பிறைதான் சடைச் சேர்த்திய எந்தைபெம்மான்
இறை தான் இறவாக் கயிலைமலையான்
மறை தான் புனல்ஒண்மதி மல்கு சென்னி
நிறை தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 7

மறைத்தான் பிணி மாது ஒருபாகம் தன்னை
மிறைத்தான் வரையால் அரக்கன் மிகையைக்
குறைத்தான் சடைமேல் குளிர் கோல்வளையை
நிறைத்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 8

தழல் தாமரையான் வையம் தாயவனும்
கழல்தான் முடி காணிய நாண் ஒளிரும்
அழல்தான் அடியார்க்கு அருளாய்ப் பயக்கும்
நிழல் தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 9

கனத்து ஆர் திரை மாண்டு அழல் கான்ற நஞ்சை
என் அத்தா என வாங்கி அது உண்ட கண்டன்
மனத்தால் சமண் சாக்கியர் மாண்பு அழிய
நினைத்தான் நெல்லிக்காவுள் நிலாயவனே. 10

புகர்ஏதும் இலாத புத்தேள்உலகின்
நிகர் ஆம் நெல்லிக்காவுள் நிலாயவனை
நகரா நல ஞானசம்பந்தன் சொன்ன
பகர்வார் அவர் பாவம் இலா தவரே. 11

திருச்சிற்றம்பலம்

279. திருக்காறாயில்

திருமுறை : 2/15 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : கண்ணாயிரநாதர் இறைவியார் : கயிலாயநாயகி

நீரானே நீள்சடைமேல் ஒர் நிரை கொன்றை
தாரானே தாமரைமேல் அயன்தான்தொழும்
சீரானே சீர் திகழும் திருக் காறாயில்
ஊரானே என்பவர் ஊனம் இலாதாரே. 1

மதியானே வரிஅரவோடு உடன் மத்தம் சேர்
விதியானே விதி உடை வேதியர்தாம் தொழும்
நெதியானே நீர் வயல் சூழ் திருக்காறாயில்
பதியானே என்பவர் பாவம் இலாதாரே. 2

விண்ணானே விண்ணவர் ஏத்த விரும்புஞ்சீர்
மண்ணானே விண்இடை வாழும் உயிர்க்கு எல்லாம்
கண்ணானே கடிபொழில் சூழ் திருக்காறாயில்
எண்ணானே என்பவர் ஏதம் இலாதாரே. 3

தாயானே தந்தையும் ஆகிய தன்மைகள்
ஆயானே ஆய நல் அன்பர்க்கு அணியானே
சேயானே சீர் திகழும் திருக்காறாயில்
மேயானே என்பவர் மேல்வினை மேவாவே. 4

கலையானே கலைமலி செம்பொற் கயிலாய
மலையானே மலைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையானே சீர் திகழும் திருக்காறாயில்
நிலையானே என்பவர் மேல்வினை நில்லாவே. 5

ஆற்றானே ஆறு அணி செஞ்சடை ஆடுஅரவு
ஏற்றானே ஏழ்உலகும் இமையோர்களும்
போற்றானே பொழில் திகழும் திருக்காறாயில்
நீற்றானே என்பவர்மேல் வினை நில்லாவே. 6

சேர்த்தானே தீவினை தேய்ந்து அறத் தேவர்கள்
ஏத்தானே ஏத்தும் நல் மா முனிவர்க்கு இடர்
காத்தானே கார் வயல் சூழ் திருக்காறாயில்
ஆர்த்தானே என்பவர்மேல் வினை அடராவே. 7

கடுத்தானே காலனைக் காலால் கயிலாயம்
எடுத்தானை ஏதம் ஆகம் முனிவர்க்கு இடர்
கெடுத்தானே கேழ் கிளரும் திருக்காறாயில்
அடுத்தானே என்பவர்மேல் வினை அடராவே. 8

பிறையானே பேணிய பாட லொடு இன்னிசை
மறையானே மாலொடு நான்முகன் காணாத
இறையானே எழில் திகழும் திருக்காறாயில்
உறைவானே என்பவர்மேல் வினை ஓடுமே. 9

செடியாரும் புன் சமண் சீவரத்தார்களும்
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில் சூழ் திருக்காறாயில்
குடியாரும் கொள்கையினார்க்கு இல்லை குற்றமே. 10

ஏய்ந்த சீர் எழில் திகழும் திருக்காறாயில்
ஆய்ந்த சீரார் அடி ஏத்தி அருள்பெற்ற
பாய்ந்த நீர்க் காழியுள் ஞானசம்பந்தன் சொல்
வாய்ந்தவாறு ஏத்துவார் வான்உலகு ஆள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

280. திருவலிவலம்

திருமுறை : 1/50 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

ஒல்லை ஆறி உள்ளம் ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லை ஆறித் தூய்மை செய்து காமவினை அகற்றி
நல்ல ஆறே உன்தன் நாமம் நாவில் நவின்று ஏத்த
வல்ல ஆறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே. 1

இயங்குகின்ற இரவி திங்கள் மற்றும் நல் தேவர் எல்லாம்
பயங்களாலே பற்றி நின்பால் சித்தம் தெளிகின் றிலர்
தயங்குசோதி சாமவேதா காமனைக் காய்ந்தவனே
மயங்குகின்றேன் வந்து நல்காய் வலிவலம் மேயவனே.2

பெண்டிர் மக்கள் சுற்றம் என்னும் பேதைப் பெருங்கடலை
விண்டு பண்டே வாழமாட்டேன் வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே உன்தன் நாமம் காதலிக்கின்றது உள்ளம்
வண்டு கெண்டிப் பாடும் சோலை வலிவலம் மேயவனே.3

மெய்யர்ஆகிப் பொய்யை நீக்கி வேதனையைத் துறந்து
செய்யர்ஆனார் சிந்தையானே தேவர்குலக்கொழுந்தே
நைவன் நாயேன் உன்தன் நாமம் நாளும் நவிற்றுகின்றேன்
வையம்முன்னே வந்து நல்காய் வலிவலம் மேயவனே. 4

துஞ்சும்போதும் துற்றும்போதும் சொல்லுவன் உன் திறமே
தஞ்சம் இல்லாத் தேவர் வந்து உன் தாள்இணைக்கீழ்ப் பணிய
நஞ்சை உண்டாய்க்கு என் செய்கேனோ நாளும் நினைந்து அடியேன்
வஞ்சம் உண்டு என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.5

புரிசடையாய் புண்ணியனே நண்ணலார் மூஎயிலும்
எரிய எய்தார் எம்பெருமான் என்று இமையோர் பரவும்
கரிஉரியாய் காலகாலா நீலமணிமிடற்று
வரிஅரவா வந்து நல்காய் வலிவலம் மேயவனே. 6

தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயம் ஆய காயம்தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே. 7

நீர் ஒடுங்கும் செஞ்சடையாய் நின்னுடைய பொன்மலையை
வேரொடும் பீழ்ந்து ஏந்தல் உற்ற வேந்தன் இராவணனைத்
தேரொடும் போய் வீழ்ந்து அலறத் திருவிரலால் அடர்த்த
வார் ஒடுங்கும் கொங்கை பங்கா வலிவலம் மேயவனே.8

ஆதிஆய நான்முகனும் மாலும் அறிவு அரிய
சோதியானே நீதிஇல்லேன் சொல்லுவன் நின் திறமே
ஓதி நாளும் உன்னை ஏத்தும் என்னை வினை அவலம்
வாதியாமே வந்து நல்காய் வலிவலம் மேயவனே. 9

பொதியிலானே பூவணத்தாய் பொன் திகழும் கயிலைப்
பதியிலானே பத்தர் சித்தம் பற்று விடாதவனே
விதிஇலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்று இவர்கள்
மதிஇலாதார் என் செய்வாரோ வலிவலம் மேயவனே. 10

வன்னி கொன்றை மத்தம் சூடும் வலிவலம் மேயவனைப்
பொன்னிநாடன் புகலி வேந்தன் ஞானசம்பந்தன் சொன்ன
பன்னு பாடல்பத்தும் வல்லார் மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னு சோதி ஈசனோடே மன்னிஇருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

281. திருவலிவலம்

திருமுறை : 1/123 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்
இறைவர் : மனத்துணைநாதர் இறைவியார் : மாழையங்கண்ணி

பூ இயல் புரிகுழல் வரிசிலை நிகர் நுதல்
ஏ இயல் கணை பிணை எதிர் விழி உமையவள்
மேவிய திருஉரு உடையவன் விரைமலர்
மா இயல் பொழில் வலிவலம் முறை இறையே. 1

இட்டம் அது அமர் பொடி இசைதலின் நசை பெறு
பட்டு அவிர் பவளநல்மணி என அணி பெறு
விட்டுஒளிர் திருஉரு உடையவன் விரைமலர்
மட்டு அமர் பொழில் வலிவலம் உறை இறையே. 2

உரு மலி கடல் கடைவுழி உலகு அமர் உயிர்
வெருஉறு வகை எழு விடம் வெளிமலை அணி
கருமணி நிகர் களம் உடையவன் மிடைதரு
மரு மலி பொழில் வலிவலம் உறை இறையே. 3

அனல் நிகர் சடை அழல் அவிஉற என வரு
புனல் நிகழ்வதும் மதி நனை பொறிஅரவமும்
என நினைவொடு வரும் இதும் மெல முடிமிசை
மனம் உடையவர் வலிவலம் உறை இறையே. 4

பிடியதன் உரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனது அடி வழிபடுமவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே. 5

தரை முதல் உலகினில் உயிர் புணர் தகை மிக
விரை மலி குழல் உமையொடு விரவுஅது செய்து
நரைதிரை கெடு தகைஅது அருளினன் எழில்
வரைதிகழ் மதில் வலிவலம் உறை இறையே. 6

நலிதரு தரை வர நடை வரும் இடையவர்
பொலிதரு மடவரலியர் மனை அதுபுகு
பலி கொள வருபவன் எழில் மிகு தொழில் வளர்
வலி வரு மதில் வலிவலம் உறை இறையே. 7

இரவணன் இருபதுகரம் எழில் மலைதனின்
இரவண நினைதர அவன் முடி பொடி செய்து
இரவணம் அமர் பெயர் அருளினன் நகநெதி
இரவண நிகர் வலிவலம் உறை இறையே. 8

தேன் அமர்தரு மலர் அணைபவன் வலிமிகும்
ஏனம்அதுஆய் நிலம் அகழ் அரி அடிமுடி
தான் அணையா உரு உடையவன் மிடைகொடி
வான் அணை மதில் வலிவலம் உறை இறையே. 9

இலை மலிதர மிகு துவர் உடையவர்களும்
நிலைமையில் உணல் உடையவர்களும் நினைவது
தொலை வலி நெடுமறை தொடர் வகை உருவினன்
மலை மலி மதில் வலிவலம் உறை இறையே. 10

மன்னிய வலிவலநகர் உறை இறைவனைங
இன்னியல் கழுமலநகர் இறை எழில்மறை
தன்னியல் கலை வல தமிழ்விரகனது உரை
உன்னிய ஒருபதும் உயர்பொருள் தருமே. 11

திருச்சிற்றம்பலம்

282. திருக்கைச்சினம்

திருமுறை : 2/45 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : கைச்சினநாதர் இறைவியார் : வெள்வளைநாயகி

தையல் ஓர்கூறு உடையான் தண்மதி சேர் செஞ்சடையான்
மை உலாம் மணிமிடற்றான் மறை விளங்கு பாடலான்
நெய் உலாம் மூஇலைவேல் ஏந்தி நிவந்து ஒளி சேர்
கைஉடையான் மேவி உறை கோயில் கைச்சினமே. 1

விடம் மல்கு கண்டத்தான் வெள்வளை ஓர்கூறு உடையான்
படம் மல்கு பாம்பு அரையான் பற்றாதார் புரம் எரித்தான்
நடம் மல்கும் ஆடலினான் நால்மறையோர் பாடலினான்
கடம் மல்கு மா உரியான் உறை கோயில் கைச்சினமே. 2

பாடல் ஆர் நால்மறையான் பைங்கொன்றை பாம்பினொடும்
சூடலான் வெண்மதியம் துன்று கரந்தையொடும்
ஆடலான் அங்கை அனல் ஏந்தி ஆடரவக்
காடலான் மேவி உறை கோயில் கைச்சினமே. 3

பண்டு அமரர் கூடிக் கடைந்த படு கடல் நஞ்சு
உண்ட பிரான் என்று இறைஞ்சி உம்பர் தொழுது ஏத்த
விண்டவர்கள் தொல் நகரம்மூன்று உடனே வெந்து அவியக்
கண்ட பிரான் மேவி உறை கோயில் கைச்சினமே. 4

தேய்ந்து மலி வெண்பிறையான் செய்யதிருமேனியினான்
வாய்ந்து இலங்கு வெண்நீற்றான் மாதினை ஓர் கூறுஉடையான்
சாய்ந்து அமரர் வேண்டத் தடங்கடல் நஞ்சு உண்டு அநங்கைக்
காய்ந்த பிரான் மேவி உறை கோயில் கைச்சினமே. 5

மங்கை ஓர்கூறு உடையான் மன்னும் மறை பயின்றான்
அங்கை ஓர் வெண்தலையான் ஆடுஅரவம் பூண்டு உகந்தான்
திங்களொடு பாம்பு அணிந்த சீர் ஆர் திருமுடிமேல்
கங்கையினான் மேவிஉறை கோயில் கைச்சினமே.6

வரிஅரவே நாண் ஆக மால்வரையே வில் ஆக
எரிகணையால் முப்புரங்கள் எய்து உகந்த எம்பெருமான்
பொரி சுடலை ஈமப் புறங்காட்டான் போர்த்தது ஓர்
கரிஉரியான் மேவிஉறை கோயில் கைச்சினமே. 7

போது உலவு கொன்றை புனைந்தான் திருமுடிமேல்
மாதுஉமையாள் அஞ்ச மலை எடுத்த வாள் அரக்கன்
நீதியினால் ஏத்த நிகழ்வித்து நின்று ஆடும்
காதலினான் மேவி உறை கோயில் கைச்சினமே. 8

மண்ணினை முன் சென்று இரத்த மாலும் மலரவனும்
எண் அறியா வண்ணம் எரிஉருவம் ஆயபிரான்
பண்இசையால் ஏத்தப்படுவான் தன் நெற்றியின்மேல்
கண் உடை 'யான் மேவி உறை கோயில் கைச்சினமே.(9 – 10)

தண்வயல் சூழ் காழித் தமிழ்ஞானசம்பந்தன்
கண்நுதலான் மேவிஉறை கோயில் கைச்சினத்தைப்
பண்இசையால் ஏத்திப் பயின்ற இவை வல்லார்
விண்ணவராய் ஓங்கி வியன்உலகம் ஆள்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

283. திருக்கோளிலி

திருமுறை : 1/62 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : கோளிலிநாதர் இறைவியார் : வண்டமர்பூங்குழலி

நாள்ஆய போகாமே நஞ்சு அணியும் கண்டனுக்கே
ஆள்ஆய அன்பு செய்வோம் மட நெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடு படாத் திறம் அருளிக்
கோள்ஆய நீக்குமவன் கோளிலி எம்பெருமானே. 1

ஆடுஅரவத்து அழகு ஆமை அணி கேழல்கொம்பு ஆர்த்த
தோடுஅரவத்து ஒரு காதன் துணைமலர்நல் சேவடிக்கே
பாடு அரவத்து இசை பயின்று பணிந்து எழுவார்தம் மனத்தில்
கோடரவம் தீர்க்குமவன் கோளிலி எம்பெருமானே. 2

நன்று நகு நாள்மலரால் நல்இருக்குமந்திரம்கொண்டு
ஒன்றி வழிபாடு செயல் உற்றவன்தன் ஓங்கு உயிர்மேல்
கன்றி வரு காலன் உயிர் கண்டு அவனுக்கு அன்று அளித்தான்
கொன்றைமலர் பொன்திகழும் கோளிலி எம்பெருமானே. 3

வந்த மணலால் இலிங்கம் மண்ணியின் கண் பால்ஆட்டும்
சிந்தைசெய்வோன்தன் கருமம் தேர்ந்து சிதைப்பான் வரும்அத்
தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்று அருளிக்
கொந்து அணவும் மலர் கொடுத்தான் கோளிலி எம்பெருமானே.4

வஞ்ச மனத்து அஞ்சு ஒடுக்கி வைகலும் நல் பூசனையால்
நஞ்சு அமுதுசெய்து அருளும் நம்பி எனவே நினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துஉகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சுஅணவும் கோளிலி எம் பெருமானே. 5

தாவியவன் உடன் இருந்தும் காணாத தற்பரனை
ஆவிதனில் அஞ்சு ஒடுக்கி அங்கணன் என்று ஆதரிக்கும்
நா இயல் சீர் நமிநந்தியடிகளுக்கு நல்குமவன்
கோ இயலும் பூ எழு கோல் கோளிலி எம்பெருமானே. 6

கல் நவிலும் மால்வரையான் கார் திகழும் மாமிடற்றான்
சொல் நவிலும் மா மறையான் தோத்திரம்செய் வாயின்உளான்
மின் நவிலும் செஞ்சடையான் வெண்பொடியான் அங்கையினில்
கொல் நவிலும் சூலத்தான் கோளிலி எம் பெருமானே. 7

அந்தரத்தில் தேர் ஊரும் அரக்கன் மலை அன்று எடுப்பச்
சுந்தரத் தன் திருவிரலால் ஊன்ற அவன் உடல் நெரிந்து
மந்திரத்த மறை பாட வாள் அவனுக்கு ஈந்தானும்
கொந்து அரத்த மதிச் சென்னிக் கோளிலி எம்பெருமானே. 8

நாணம் உடை வேதியனும் நாரணனும் நண்ண ஒணாத்
தாணு எனை ஆள்உடையான் தன் அடியார்க்கு அன்புடைமை
பாணன் இசை பத்திமையால் பாடுதலும் பரிந்து அளித்தான்
கோணல்இளஙம்பிறைச் சென்னிக் கோளிலி எம்பெருமானே.9

தடுக்கு அமரும் சமணரொடு தர்க்கசாத்திரத்தவர் சொல்
இடுக்கண் வரும் மொழி கேளாது ஈசனையே ஏத்துமின்கள்
நடுக்கம் இலா அமருலகம் நண்ணலும் ஆம் அண்ணல்கழல்
கொடுக்ககிலா வரம்கொடுக்கும் கோளிலி எம்பெருமானே. 10

நம்பனை நல் அடியார்கள் நாம் உடைமாடு என்று இருக்கும்
கொம்பனையாள் பாகன் எழில் கோளிலி எம்பெருமானை
வம்பு அமரும் தண் காழிச் சம்பந்தன் வண்தமிழ்கொண்டு
இன்பு அமர வல்லார்கள் எய்துவர்கள் ஈசனையே. 11

திருச்சிற்றம்பலம்

284. திருவாய்மூர்

திருமுறை : 2/111 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

இறைவர் : வாய்மூரிநாதர் இறைவியார் : பாலினும்நன்மொழியாள்

தளிர் இள வளர் என உமைபாடத்
தாளம் இட ஓர் கழல் வீசிக்
கிளர் இள மணி அரவு அரை ஆர்த்து
ஆடும் வேடக் கிறிமையார்
விளர் இளமுலையவர்க்கு அருள் நல்கி
வெண்நீறு அணிந்து ஓர் சென்னியின்மேல்
வளர்இமைதியமொடு இவர்ஆனீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 1

வெந்தழல் வடிவினர் பொடிப் பூசி
விரிதரு கோவண உடை மேல் ஓர்
பந்தம் செய்து அரவு அசைத்து ஒலி பாடிப்
பல பல கடைதொறும் பலி தேர்வார்
சிந்தனை புகுந்து எனக்கு அருள் நல்கிச்
செஞ்சுடர்வண்ணர்தம் அடி பரவ
வந்தனைபல செய இவர்ஆனீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 2

பண்ணின் பொலிந்த வீணையர்
பதின்எண் கணமும் உணரா நஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினார்
உள்ளம் உருகின் உடன்ஆவார்
சுண்ணப்பொடி நீறு அணி மார்பர்
சுடர்பொன்சடைமேல் திகழ்கின்ற
வண்ணப் பிறையோடு இவர்ஆணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 3

எரி கிளர் மதியமொடு எழில் நுதல்மேல்
எறி பொறி அரவினொடு ஆறு மூழ்க
விரி கிளர் சடையினர் விடைஏறி
வெருவவந்து இடர்செய்த விகிர்தனார்
புரி கிளர் பொடி அணி திருஅகலம்
பொன்செய்த வாய்மையர் பொன்மிளிரும்
வரிஅரவு அரைக்கு அசைத்து இவர்ஆணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 4

அஞ்சன மணிவணம் எழில்நிறமா
அகம்மிடறு அணிகொள உடல் திமில
நஞ்சினை அமரர்கள் அமுதம் என
நண்ணிய நறுநுதல் உமை நடுங்க
வெஞ்சின மால்களியானையின் தோல்
வெருஉறப் போர்த்து அதன் நிறமும்அஃதே
வஞ்சனை வடிவினொடு இவர்ஆணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 5

அல்லிய மலர் புல்கு விரிகுழலார்
    கழல்இணை அடிநிழல் அவைபரவ
எல்லி அம்போது கொண்டு எரிஏந்தி
    எழிலொடு தொழில்அவை இசைய வல்லார்
சொல்லிய அருமறை இசை பாடிச்
    சூடு இளமதியினர் தோடு பெய்து
வல்லியம் தோல் உடுத்து இவர்ஆணீர்
    வாய்மூர் அடிகள் வருவாரே. 6

கடிபடு கொன்றைநன்மலர் திகழும்
    கண்ணியர் விண்ணவர் கன மணிசேர்
முடி பில்கும் இறையவர் மறுகில் நல்லார்
    முறைமுறை பலிபெய முறுவல் செய்வார்
பொடி அணி வடிவொடு திருஅகலம்
    பொன் என மிளிர்வது ஒர் அரவினொடும்
வடி நுனை மழுவினொடு இவர்ஆணீர்
    வாய்மூர் அடிகள் வருவாரே. 7

கட்டு இணை புதுமலர்க் கமழ்கொன்றைக்
    கண்ணியர் வீணையர் தாமும் அஃதே
எண் துணை சாந்தமொடு உமை துணையா
    இறைவனார் உறைவது ஒர் இடம் வினவில்
பட்டு இணை அகல்அல்குல் விரிகுழலார்
    பாவையர் பலி எதிர் கொணர்ந்து பெய்ய
வட்டணை ஆடலொடு இவர்ஆணீர்
    வாய்மூர் அடிகள் வருவாரே. 8

ஏனமருப்பினொடு எழில் ஆமை
இசையப் பூண்டு ஓர் ஏறுஏறிக்
கானம்அது இடமா உறைகின்ற
கள்வர் கனவில் துயர் செய்து
தேன் உண மலர்கள் உந்தி விம்மித்
திகழ்பொன்சடை மேல் திகழ்கின்ற
வானநல்மதியினொடு இவர்ஆணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 9


சூடல் வெண்பிறையினர் சுடர்முடியர்
சுண்ணவெண் நீற்றினர் சுடர்மழுவர்
பாடல் வண்டு இசை முரல் கொன்றைஅம்தார்
பாம்பொடு நூல்அவை பசைந்து இலங்கக்
கோடல் நன் முகிழ்விரல் கூப்பி நல்லார்
குறை உறு பலிஎதிர் கொணர்ந்து பெய்ய
வாடல்வெண்தலை பிடித்து இவர்ஆணீர்
வாய்மூர் அடிகள் வருவாரே. 10

திங்களொடு அரு வரைப் பொழில் சோலைத்
தேன் நலம் கானல் அம்திருவாய்மூர்
அங்கமொடு அருமறை ஒலிபாடல்
அழல்நிற வண்ணர்தம் அடிபரவி
நங்கள்தம் வினைகெட மொழிய வல்ல
ஞானசம்பந்தன் தமிழ்மாலை
தங்கிய மனத்தினால் தொழுது எழுவார்
தமர் நெறி உலகுக்கு ஓர் தவநெறியே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருமறைக்காட்டிலே ஆளுடையஅரசும், ஆளுடைய பிள்ளையாரும் வேதங்கள் பூசித்தடைத்த திருக்கதவினைத் திறந்து அடைத்தும் இறைவனை வணங்கி இருக்கும் போது வாக்கின்ர் எனிமன்னர் தாம் திருக்கதவினை அரிது வேண்டித் திறந்ததையும் பிள்ளையார் எளிதில் அடைத்ததையும் எண்ணி வருந்தியிருந்தார். அப்போது திருமுறைக்காட்டு ஈசர் ஒரு சைவவேடத் தோடு அவர்முன் தோன்றி 'வாய்மூரி லிருப்போம் வா' என்றருளிப்போயினார். வாகீசரும் அவரைத் தரிசித்துக் கொண்டே பின்னே எழுந்தருளிச் சென்றும் அவரைச் சம்பித்திலராகியே சென்று கொண்டிருந்தார். அப்பமூர்த்திகள் திருவாய்மூருக் எழுந்தருளுதலைக் கேள்வியுற்றுப் பிள்ளையார் இப்போதங்கே போதற் கென்ன அடைவு என ஐயுற்றுத் தாமும் பின்னே எழுந்தருளி வந்து திருவாய்மூர்ரச் சமீபித்த போது இறைவன் இறைவியோடு தம் ஆடலை அவருக்குக் காட்டியருளினார். அதனை இரண்டு நாயன்மார்களும் கண்டு வணங்கித் திருக்கோயிலை அடைந்து வழிபட்டார்கள். இறைவன் தனது திருவோலக்கத்தைக் காட்டி அருளியபோது பிள்ளையார் 'தளிரிளவளர்' என இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.



285. திருமறைக்காடு

திருமுறை : 1/22 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

சிலைதனை நடுஇடை நிறுவி ஓர் சினம் மலி அரவுஅதுகொடு திவி
தலம் மலி சுரர் அசுரர்கள் ஒலி சலசல கடல் கடைவுழி மிகு
கொலை மலிவிடம் எழ அவர் உடல் குலைதர அது நுகர்பவன் எழில்
மலை மலி மதில் புடை தழுவிய மறைவனம் அமர்தரு பரமனே. 1

கரம் முதலிய அவயம்அவை கடுவிடஅரவுஅதுகொடு வரு
வரல்முறைஅணிதருமவன் அடல் வலி மிகு புலிஅதள் உடையினன்
இரவலர் துயர் கெடு வகை நினை இமையவர்புரம் எழில் பெறவளர்
மரம் நிகர் கொடை மனிதர்கள் பயில் மறைவனம் அமர்தரு பரமனே. 2

இழை வளர் தரும் முலை மலைமகள் இனிது உறைதரும் எழில் உருவினன்
முழையினில் மிகு துயில்உறும் அரி முசிவொடும் எழ முளரியொடு எழு
கழை நுகர்தரு கரி இரிதரு கயிலையில் மலிபவன் இருள்உறும்
மழை தவழ்தரு பொழில் நிலவிய மறைவனம் அமர்தரு பரமனே.3

நலம் மிகு திரு இதழியின் மலர் நகுதலையொடு கனகியின் முகை
பல சுரநதி படஅரவொடு மதி பொதி சடைமுடியினன் மிகு
தலம் நிலவிய மனிதர்களொடு தவம் முயல்தரும் முனிவர்கள் தம்
மலம் அறு வகை மனம் நினைதரு மறைவனம் அமர் தரு பரமனே.4

கதி மலி களிறுஅது பிளிறிட உரிசெய்த அதிகுணன் உயர் பசு
பதிஅதன்மிசை வரு பசுபதி பலகலைஅவை முறைமுறை உணர்
விதி அறிதரும் நெறி அமர் முனிகணனொடு மிகு தவம் முயல்தரும்
அதிநிபுணர்கள் வழிபட வளர் மறைவனம் அமர் தரு பரமனே. 5

கறை மலி திரிசிகை படை அடல் கனல்மழு எழுதர வெறிமறி
முறைமுறை ஒலி தமருகம் முடைதலை முகிழ் மலி கணி வடமுகம்
உறைதரு கரன் உலகினில் உயர் ஒளி பெறு வகை நினைவொடு மலர்
மறையவன் மறைவழி வழிபடு மறைவனம் அமர்தரு பரமனே. 6

இரு நிலன் அது புனல் இடை மடிதர எரி புக எரி அது மிகு
பெரு வளியினில் அவிதர வளி கெட வியன்இடை முழுவது கெட
இருவர்கள் உடல்பொறையொடு திரி எழில் உரு உடையவன் இனமலர்
மருவிய அறுபதம் இசை முரல் மறைவனம் அமர்தரு பரமனே. 7

சனம் வெருஉற வரு தசமுகன் ஒருபதுமுடி யொடும் இருபது
கனம் மருவிய புயம் நெரி வகை கழல்அடியில் ஓர்விரல் நிறுவினன்
இனம் மலி கண நிசிசரன் மகிழ்வுஉற அருள்செய்த கருணையன் என
மன மகிழ்வொடு மறைமுறை உணர் மறைவனம் அமர்தரு பரமனே. 8

அணி மலர்மகள்தலைமகன் அயன் அறிவு அரியது ஓர் பரிசினில் எரி
திணிதரு திரள் உரு வளர்தர அவர் வெருஉறலொடு துதிசெய்து
பணிவுஉற வெளிஉருவிய பரன் அவன் நுரை மலி கடல் திரள் எழும்
மணி வளர் ஒளி வெயில் மிகுதரும் மறைவனம் அமர்தரு பரமனே. 9

இயல்வு அழிதர விது செலவுஉற இனமயில் இறகு உறு தழையொடு
செயல் மருவிய சிறுகடம் முடி அடை கையர் தலை பறிசெய்து தவம்
முயல்பவர் துவர்படம் உடல் பொதிபவர் அறிவுஅரு பரன் அவன் அணி
வயலினில் வளை வளம் மருவிய மறைவனம் அமர்தரு பரமனே.10

வசை அறு மலர்மகள் நிலவிய மறைவனம் அமர் பரமனை நினை
பசையொடு மிகு கலைபல பயில் புலவர்கள் புகழ் வழி வளர்தரு
இசை அமர் கழுமலநகர் இறை தமிழ்விரகனது உரை இயல்வல
இசை மலி தமிழ்ஒருபதும் வலஅவர் உலகினில் எழில் பெறுவரே.11

திருச்சிற்றம்பலம்

286. திருமறைக்காடு

திருமுறை : 2/37 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : மறைக்காட்டீசர் இறைவியார் : யாழைப்பழித்த மொழியாள்

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தர்
இது நன்கு இறை வைத்து அருள்செய்க எனக்குஉன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே. 1

சங்கம் தரளம் அவை தான் கரைக்கு எற்றும்
வங்கக் கடல் சூழ் மறைக்காட்டு உறை மைந்தர்
மங்கைஉமை பாகமும்ஆக இது என்கொல்
கங்கை சடைமேல் அடைவித்த கருத்தே. 2

குரவம் குருக்கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா
சிரமும் மலரும் திகழ் செஞ்சடைதன்மேல்
அரவம் மதியோடு அடைவித்தல் அழகே. 3

படர் செம்பவளத்தொடு பல்மலர் முத்தம்
மடல் அம்பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா
உடலம் முமைபங் கமதா கியும் என்கொல்
கடல்நஞ்சு அமுதாஅது உண்ட கருத்தே. 4

வானோர் மறை மா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில் சூழ் மறைக்காட்டு உறை செல்வா
ஏனோர் தொழுது ஏத்த இருந்த நீ என்கொல்
கானார் கடு வேடுவன் ஆன கருத்தே. 5

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய் மா மறைக்காடா
உலகுஏழ் உடையாய் கடைதோறும் முன் என்கொல்
தலை சேர் பலி கொண்டு அதில் உண்டதுதானே. 6

வேலாவலயத்து அயலே மிளிர்வு எய்தும்
சேலார் திரு மா மறைக்காட்டு உறை செல்வா
மாலோடு அயன் இந்திரன் அஞ்ச முன் என்கொல்
காலார் சிலைக் காமனை காய்ந்த கருத்தே. 7

கலம் கொள் கடல் ஓதம் உலாவும் கரைமேல்
வலம்கொள்பவர்வாழ்த்து இசைக்கும் மறைக்காடா
இலங்கை உடையான் அடர்ப்பட்டு இடர் எய்த
அலங்கல் விரல் ஊன்றி அருள்செய்தஆறே. 8

கோன் என்று பல்கோடி உருத்திரர் போற்றும்
தேன் அம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை செல்வா
ஏனம் கழுகு ஆனவர் உன்னை முன் என்கொல்
வானம் தலம் மண்டியும் கண்டிலாஆறே. 9

வேதம்பல ஓமம் வியந்து அடி போற்ற
ஓதம் உலவும் மறைக்காட்டில் உறைவாய்
ஏதில் சமண்சாக்கியர் வாக்குஇவை என்கொல்
ஆதரொடு தாம் அலர் தூற்றியவாறே. 10

காழிந்நகரான் கலை ஞானசம்பந்தன்
வாழிம் மறைக்காடனை வாய்ந்து அறிவித்த
ஏழின் இசைமாலை ஈர் ஐந்து இவை வல்லார்
வாழி உலகோர் தொழ வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

287. திருமறைக்காடு

திருமுறை : 2/85 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு

வேய் உறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசு அறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்புஇரண்டும் உடனே
ஆசு அறும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க
எருது ஏறி ஏழைஉடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டோடு ஆறும்
உடன்ஆய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உரு வளர் பவளமேனி ஒளி நீறு அணிந்து
உமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகு அலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைஅதுஊர்தி செயமாது பூமி
திசைதெய்வம் ஆனபலவும்
அரு நெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதிஉறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சு அணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சு இருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்தஅதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம்அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதள்அது ஆடை வரி கோவணத்தர்
மடவாள்தனோடும் உடன்ஆய்
நாள்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
கோள் அரி உழுவையோடு கொலை யானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆள் அரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பு இளமுலை நல் மங்கை ஒருபாகம்ஆக
விடைஏறு செல்வன் அடைவு ஆர்
ஒப்பு இளமதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகை ஆன பித்தும்
வினை ஆன வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள் பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றைமலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ் கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடம் ஆகும் பரன் நாரிபாகன்
பசு ஏறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்து அலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணம்ஆய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

தேன் அமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதிஆய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

ஆளுடைய அரசுகளோடு ஆளுடைய பிள்ளையார் தலயாத்திரை செய்து கொண்டுவந்து திருமறைக்காட்டில் எழுந்தருளியிருக்கும் போது பாண்டி நாட்டில் மதுராபுரியிலே அக்காலத்து அரசு இயற்றிவந்த கூன் பாண்டியர் ஊழ்வினைத் திறத்தால் உண்மை நெறியாகிய சைவத்தை விட்டுச் சமண் சமயப் படுகுழியில் வீழ்ந்தாழ்ந்தார். அரசனை ஒப்ப அந்நாட்டுக் குடிகள் யாவும் அவ்வாறாயினர். இதனைப் பொறாத சைவப் பெருமக்களாய மங்கையர்க் கரசியாரும், குலச்சிறைநாயனாரும், பிள்ளையார் சிவஞானப் பாலுண்டு சிவத்தலங்கடோறுஞ் சென்று பல அற்புதங்கள் நிகழ்த்தித் திருமறைக்காட்டில் வந்திருத்தலக் கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சி கொண்டு அவரால் தம்மரசனையும் நாட்டினையும் மீண்டும் சைவ நெறியைத் தழுவுமாறு செய்ய விரும்பி அவர்பால் ஆட்களை விடுத்தனர். அதனை அறிந்த பரசமய கோளரியார் திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்கி விடைபெற்றுத் திருக்கோபுர வாயிலிலெழுந்தருளும் போது ஆண்டு வந்த சொல்வேந்தரைச் சந்தித்து இச்செய்தியை அவருக்குச் சொல்லி அருளினார். அவர் பிள்ளையாரை நோக்கிப் "பிள்ளாய்! அமணர் கொடுந்தொழிலில் வல்லர். தேவரீர் திருமேனியால் எளியர் அன்றியும் உமக்கு நாள்களும் கோள்களும் வலியிலவாதலின் ஆங்கெழுந் தருள யானிசையேன்" என்று தடுத்தருளினார். அதனைக் கேட்ட பிள்ளையார் 'அப்பரே, பாண்டி நாட்டை அடைந்து நவை நெறி நீக்கித் திருநீற்று நெறியினை வளர்த்தன்றி வேறொன்றுஞ் செய்யேன். இஃது உம்மாணை. திருவருள் நெறியிற் செல்லும் சிவனடியார்களை நாள்களும் கோள்களும் ஒன்றுஞ் செய்யா, நல்லனவுமாகும். இறைவன் திருவடித் துணையுமுண்டு' என்று இத்திருப்பதிகத்தைப் பாடி அப்ப மூர்த்தியினிடம் விடை பெற்றுப் பாண்டி நாட்டுக் கெழுந்தருளினார்.

288. திருமறைக்காடு

திருமுறை : 2/91 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு

பொங்கு வெண்மணல் கானல் பொருகடல் திரை தவழ் முத்தம்
கங்குல் ஆர் இருள் போழும் கலி மறைக்காடு அமர்ந்தார்தாம்
திங்கள் சூடினரேனும் திரிபுரம் எரித்தனரேனும்
எங்கும் எங்கள் பிரானார் புகழ்அலது இகழ் பழி இலரே.1

கூன்இளம்பிறை சூடிக் கொடுவரித் தோல்உடை ஆடை
ஆனில்அம்கிளர்ஐந்தும்ஆடுவர் பூண்பதுவும் அரவம்
கானல் அம் கழி ஓதம் கரையொடு கதிர் மணி ததும்பத்
தேன் நலம் கமழ்சோலைத் திரு மறைக்காடு அமர்ந்தாரே. 2

நுண்ணிதுஆய் வெளிதுஆகி நூல் கிடந்து இலங்கு பொன் மார்பில்
பண்ணியாழ் என முரலும் பணிமொழி உமை ஒரு பாகன்
தண்ணிது ஆய வெள்அருவி சலசல நுரை மணி ததும்பக்
கண்ணிதானும் ஓர் பிறையார் கலி மறைக்காடு அமர்ந்தாரே. 3

ஏழைவெண்குருகு அயலே இளம்பெடை தனது எனக் கருதித்
தாழை வெண்மடல் புல்கும் தண் மறைக்காடு அமர்ந்தார்தாம்
மாழை அம் கயல்ஒண்கண் மலைமகள் கணவனது அடியின்
நீழலே சரணாக நினைபவர் வினை நலிவு இலரே. 4

அரவம் வீக்கிய அரையும் அதிர்கழல் தழுவிய அடியும்
பரவ நாம் செய்த பாவம் பறைதர அருளுவர் பதிதான்
மரவம் நீடு உயர் சோலை மழலை வண்டு யாழ்செயும் மறைக்காட்டு
இரவும் எல்லி அம் பகலும் ஏத்துதல் குணம் எனல் ஆமே. 5

பல்இல்ஓடு கை ஏந்திப் பாடியும் ஆடியும் பலி தேர்
அல்லல் வாழ்க்கையரேனும் அழகியது அறிவர் எம் அடிகள்
புல்லம் ஏறுவர் பூதம் புடை செல உழிதர்வர்க்கு இடம்ஆம்
மல்கு வெண்திரை ஓதம் மா மறைக்காடு அதுதானே. 6

நாகம்தான் கயிறாக நளிர் வரை அதற்கு மத்தாகப்
பாகம் தேவரொடு அசுரர் படு கடல் அளறு எழக் கடைய
வேக நஞ்சு எழ ஆங்கே வெருவொடும் இரிந்து எங்கும் ஓட
ஆகம்தன்னில் வைத்து அமிர்தம் ஆக்குவித்தான் மறைக்காடே.7

தக்கன் வேள்வியைத் தகர்த்தோன் தனது ஒரு பெருமையை ஓரான்
மிக்கு மேல்சென்று மலையை எடுத்தலும் மலைமகள் நடுங்க
நக்கு தன் திருவிரலால் ஊன்றலும் நடுநடுத்து அரக்கன்
பக்க வாயும் விட்டு அலறப் பரிந்தவன் பதி மறைக்காடே.8

விண்ட மா மலரோனும் விளங்கு ஒளி அரவுஅணையானும்
பண்டும் காண்பு அரிதுஆய பரிசினன்அவன் உறை பதிதான்
கண்டலம் கழி ஓதம் கரையொடு கதிர் மணி ததும்ப
வண்டலம் கமழ்சோலை மா மறைக்காடு அதுதானே. 9

பெரிய ஆகிய குடையும் பீலியும்அவை வெயில் கரவாக்
கரிய மண்டை கை ஏந்திக் கல்லென உழிதரும் கழுக்கள்
அரிய ஆக உண்டு ஓதுமவர் திறம் ஒழிந்த நம் அடிகள்
பெரிய சீர் மறைக்காடே பேணுமின் மனம் உடையீரே. 10

மை உலாம் பொழில் சூழ்ந்த மா மறைக்காடு அமர்ந்தாரைக்
கையினால் தொழுது எழுவான் காழியுள் ஞானசம்பந்தன்
செய்த செந்தமிழ்பத்தும் சிந்தையுள் சேர்க்க வல்லார் போய்ப்
பொய் இல் வானவரோடும் புக வலர் கொள வலர் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

289. திருமறைக்காடு

திருமுறை : 3/76 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

கல் பொலி சுரத்தின் எரிகானின் இடை மா நடம்
அது ஆடி மடவார்
இல் பலி கொளப் புகுதும் எந்தைபெருமானது இடம்
என்பர் புவிமேல்
மல் பொலி கலிக் கடல் மலைக்குவடு எனத் திரை
கொழித்த மணியை
வில் பொலி நுதல் கொடிஇடை கணிகைமார் கவரும்
வேதவனமே. 1

பண்டு இரை பவப்புணரியில் கனகமால் வரையை
நட்டு அரவினைக்
கொண்டு கயிறின் கடைய வந்து விடம் உண்ட
குழகன் தன் இடம் ஆம்
வண்டு இரை நிழல் பொழிலின் மாதவியின்மீது அணவு
தென்றல் வெறி ஆர்
வெண்திரைகள் செம்பவளம் உந்து கடல் வந்த மொழி
வேதவனமே. 2

கார் இயல் மெல்ஓதி நதிமாதை முடி வார்சடையில்
வைத்து மலையார்
நாரி ஒருபால் மகிழும் நம்பர் உறைவு என்பர் நெடு
மாடம் மறுகில்

தேர் இயல் விழாவின் ஒலி திண் பணிலம் ஒண்படகம்
நாளும் இசையால்
வேரி மலி வார்குழல் நல் மாதர் இசை பாடல் ஒலி
வேதவனமே. 3

நீறு திருமேனியின் மிசைத்து ஒளி பெறத்தடவி
வந்து இடபமே
ஏறி உலகங்கள்தொறும் பிச்சை நுகர் இச்சையர்
இருந்த பதியாம்
ஊறு பொருள் இன்தமிழ் இயல் கிளவி தேரும்
மடமாதர் உடனார்
வேறு திசை ஆடவர்கள் கூற இசை தேரும்எழில்
வேதவனமே. 4

கத்திரிகை துத்திரி கறங்கு துடி தக்கையொடு
இடக்கை படகம்
எத்தனை உலப்பு இல் கருவித்திரள் அலம்ப இமை
யோர்கள் பரச
ஒத்து அற மிதித்து நடம்இட்ட ஒருவர்க்கு இடமது
என்பர் உலகில்
மெய்த் தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்து உகளும்
வேதவனமே. 5

மாலை மதி வாள்அரவு கொன்றைமலர் துன்று சடை
நின்று சுழலக்
காலையில் எழுந்த கதிர் தாரகை மடங்க அனல்
ஆடும் அரன் ஊர்

சோலையின் மரங்கள்தொறும் மிண்டி இனவண்டு மது
உண்டு இசைசெய
வேலை ஒலிசங்கு திரை வங்க சுறவம் கொணரும்
வேதவனமே. 6

வஞ்சக மனத்து அவுணர் வல்அரணம் அன்று அவிய
வார் சிலை வளைத்து
அஞ்சு அகம் அவித்த அமரர்க்கு அமரன் ஆதி
பெருமானது இடமாம்
கிஞ்சுகஇதழ்க்கனிகள் ஊறிய செவ்வாயவர்கள்
பாடல் பயில
விஞ்சு அக இயக்கர் முனிவக்கணம் நிறைந்து மிடை
வேதவனமே. 7

முடித் தலைகள்பத்து உடை முருட்டு உரு அரக்கனை
நெருக்கி விரலால்
அடித்தலம் முன் வைத்து அலமர கருணை வைத்தவன்
இடம் பலதுயர்
கெடுத்தலை நினைத்து அறம் இயற்றுதல் கிளர்ந்து
புலவாணர் வறுமை
விடுத்தலை மதித்து நிதி நல்குமவர் மல்கு பதி
வேதவனமே. 8

வாசமலர் மேவி உறைவானும் நெடுமாலும்
அறியாத நெறியைக்
கூசுதல்செயாத அமண் ஆதரொடு தேரர்
குறுகாத அரன்ஊர்

காசு மணி வார் கனகம் நீடுகடல் ஓடு திரை
வார் துவலை மேல்
வீசு வலைவாணர் அவை வாரி விலை பேசும் எழில்
வேதவனமே. (9–10)

மந்த முரவம் கடல் வளம் கெழுவு காழிபதி
மன்னு கவுணி
வெந்தபொடி நீறு அணியும் வேதவனம் மேவு சிவன்
இன் அருளினால்
சந்தம்இவை தண்டமிழின் இன்இசை எனப்பரவு
பாடல் உலகில்
பந்தன் உரைகொண்டு மொழிவார்கள் பயில்வார்கள் உயர்
வான்உலகமே. 11

திருச்சிற்றம்பலம்

290. திருஅகத்தியான் பள்ளி

திருமுறை : 2/76 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

வாடிய வெண்தலைமாலை சூடி வயங்கு இருள்
நீடு உயர் கொள்ளி விளக்கும் ஆக நிவந்து எரி
ஆடிய எம்பெருமான் அகத்தியான்பள்ளியைப்
பாடிய சிந்தையினார்கட்கு இல்லையாம் பாவமே. 1

துன்னம் கொண்ட உடையான் துதைந்த வெண்நீற்றினான்
மன்னும் கொன்றை மதமத்தம் சூடினான் மா நகர்
அன்னம் தங்கும் பொழில் சூழ் அகத்தியான் பள்ளியை
உன்னம்செய்த மனத்தார்கள்தம் வினை ஓடுமே. 2

உடுத்ததுவும் புலித்தோல் பலி திரிந்து உண்பதும்
கடுத்து வந்த கழல் காலன்தன்னையும் காலினால்
அடுத்ததுவும் பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
தொடுத்ததுவும் சரம் முப்புரம் துகளாகவே. 3

காய்ந்ததுவும் அன்று காமனை நெற்றிக் கண்ணினால்
பாய்ந்ததுவும் கழல் காலனைப் பண்ணின் நால்மறை
ஆய்ந்ததுவும் பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
ஏய்ந்ததுவும் இமவான்மகள் ஒரு பாகமே. 4

போர்த்ததுவும் கரியின் உரி புலித்தோல் உடை
கூர்த்தது ஓர் வெண்மழு ஏந்தி கோள் அரவம் அரைக்கு
ஆர்த்ததுவும் பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
பார்த்ததுவும் அரணம் படர்எரி மூழ்கவே. 5

தெரிந்ததுவும் கணை ஒன்று முப்புரம் சென்று உடன்
எரிந்ததுவும் முன் எழிலார் மலர்உறைவான் தலை
அரிந்ததுவும் பொழில்சூழ் அகத்தியான் பள்ளியான்
புரிந்ததுவும் உமையாள் ஓர்பாகம் புனைதலே. 6

ஓதி எல்லாம் உலகுக்கு ஓர் ஒண் பொருள் ஆகி மெய்ச்
சோதி என்று தொழுவார் அவர் துயர் தீர்த்திடும்
ஆதி எங்கள் பெருமான் அகத்தியான் பள்ளியை
நீதியால் தொழுவார் அவர் வினை நீங்குமே. 7

செறுத்ததுவும் தக்கன் வேள்வியைத் திருந்தார் புரம்
ஒறுத்ததுவும் ஒளி மா மலர்உறைவான் சிரம்
அறுத்ததுவும் பொழில் சூழ் அகத்தியான்பள்ளியான்
இறுத்ததுவும் அரக்கன்தன் தோள்கள் இருபதே. 8

சிரமும் நல்ல மதமத்தமும் திகழ் கொன்றையும்
அரவும் மல்கும் சடையான் அகத்தியான்பள்ளியைப்
பிரமனொடு திருமாலும் தேடிய பெற்றிமை
பரவ வல்லார் அவர்தங்கள் மேல்வினை பாறுமே. 9

செந்துவர் ஆடையினாரும் வெற்று அரையே திரி
புந்தியிலார்களும் பேசும் பேச்சு அவை பொய்ம்மொழி
அந்தணன் எங்கள் பிரான் அகத்தியான் பள்ளியைச்
சிந்திமின் நும் வினை ஆனவை சிதைந்து ஓடுமே.10

ஞாலம் மல்கும் தமிழ் ஞானசம்பந்தன் மா மயில்
ஆலும் சோலை புடைசூழ் அகத்தியான் பள்ளியுள்
சூலம் நல்ல படையான் அடி தொழுது ஏத்திய
மாலை வல்லார் அவர் தங்கள்மேல் வினை மாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

291. திருக்கோணமலை

திருமுறை : 3/123 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்
இறைவர் : கோணேசுவரர் இறைவியார் : மாதுமையாள்

நிரை கழல்அரவம் சிலம்புஒலி அலம்பும்
நிமலர் நீறு அணி திருமேனி
வரை கெழு மகள் ஓர்பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடி அணி விடையர்
கரை கெழு சந்தும் கார் அகில் பிளவும்
அளப்பருங்கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே. 1

கடிதுஎன வந்த கரிதனை உரித்த
அவ் உரி மேனிமேல் போர்ப்பர்
பிடி அன நடையாள் பெய் வளை மடந்தை
பிறைநுதலவளொடும் உடனாய்க்
கொடிது எனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமாமலை அமர்ந்தாரே. 2

பனித்த இளந்திங்கள் பைந்தலை நாகம்
படர்சடைமுடிஇடை வைத்தார்
கனித்து இளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்த பேர் உருவ விழித் தழல் நாகம்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்து ஓர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே. 3

பழித்த இளங் கங்கை சடைஇடை வைத்துப்
பாங்கு உடை மதனைப் பொடியா
விழித்து அவன்தேவி வேண்ட முன் கொடுத்த
விமலனார் கமலம் ஆர் பாதர்
தெழித்து முன் அரற்றும் செழுங் கடல் தரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்து வன் திரைகள் கரைஇடைச் சேர்க்கும்
கோணமாமலை அமர்ந்தாரே. 4

தாயினும் நல்ல தலைவர் என்று அடியார்
தம் அடி போற்றுஇசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்று அகலா
மாண்பினர் காண் பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடல்உடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே. 5

பரிந்து நல் மனத்தால் வழிபடும் மாணி
தன் உயிர்மேல் வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்து அவற்கு அருளும்
செம்மையார் நம்மை ஆள்உடையார்
விரிந்து உயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமாமலை அமர்ந்தாரே. (6 – 7)

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தம் ஆம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பு அறியாது அவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்தது ஓர் கருணை
தன் அருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமாமலை அமர்ந்தாரே. 8

அருவராது ஒரு கை வெண்தலை ஏந்தி
அகம்தொறும் பலி உடன் புக்க
பெருவராய் உறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல்வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள்எரிஆய்
உயர்ந்தவர் பெயர்ந்த நல் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமாமலை அமர்ந்தாரே. 9

நின்று உணும் சமணும் இருந்து உணும் தேரும்
நெறிஅலாதன புறம் கூற
வென்று நஞ்சு உண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லியலொடும் உடன் ஆகித்
துன்றும் ஒண் பௌவம் மவ்வலும் சூழ்ந்து
தாழ்ந்து உறு திரைபல மோதிக்
குன்றும் ஒண் கானல் வாசம் வந்து உலவும்
கோணமாமலை அமர்ந்தாரே. 10

குற்றம்இலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்று உணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்து உடை ஞானசம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலைஈர் ஐந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்
தோன்றுவர் வான்இடைப் பொலிந்தே. 11

திருச்சிற்றம்பலம்

292. திருக்கேதீச்சரம்

திருமுறை : 2/107 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி

இறைவர் : கேதீச்சுரர் இறைவியார் : கௌரியம்மை

விருது குன்ற மாமேரு வில் நாண் அரவா
அனல் எரி அம்பா
பொருது மூஎயில் செற்றவன் பற்றி நின்று
உறை பதி எந்நாளும்
கருதுகின்ற ஊர் கனைகடல் கடி கமழ்
பொழில் அணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரம் கைதொழக்
கடுவினை அடையாவே. 1

பாடல் வீணையர் பலபலசரிதையர்
எருது உகைத்து அருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சு
உண்டு இருள் கண்டத்தர்
ஈடம் ஆவது இருங்கடல் கரையினில்
எழில் திகழ் மாதோட்டம்
கேடு இலாத கேதீச்சரம் கைதொழ
கெடும் இடர் வினைதானே. 2

பெண் ஒர்பாகத்தர் பிறை தவழ் சடையினர்
அறை கழல் சிலம்பு ஆர்க்கச்
சுண்ணம் ஆதரித்து ஆடுவர் பாடுவர்
அகம்தொறும் இடு பிச்சைக்கு
உண்ணல்ஆவது ஓர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணு கேதீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே. 3

பொடி கொள் மேனியர் புலிஅதள் அரையினர்
விரிதரு கரத்து ஏந்தும்
வடிகொள் மூஇலைவேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித்து இருந்த கேதீச்சரம்
பரிந்த சிந்தையர் ஆகி
முடிகள் சாய்த்து அடி பேண வல்லார் தம்மேல்
மொய்த்து எழும் வினை போமே. 4

நல்லர் ஆற்றவும் ஞானம் நன்கு உடையர் தம்
அடைந்தவர்க்கு அருள் ஈய
வல்லர் பார் மிசைவான் பிறப்புஇறப்பு இலர்
மலி கடல் மாதோட்டத்து
எல்லை இல் புகழ் எந்தை கேதீச்சரம்
இராப்பகல் நினைந்து ஏத்தி
அல்லல் ஆசு அறுத்து அரன்அடிஇணை தொழும்
அன்பர்ஆம் அடியாரே. 5

பேழை வார்சடைப் பெருந் திருமகள்தனைப்
பொருந்த வைத்து ஒருபாகம்
மாழை அம் கயல்கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை அம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல்வெண்மருப்பு அணிந்த நீள் மார்பர்
கேதீச்சரம் பிரியாரே. 6

பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளிப்
பல்உலகினில் உயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடம் கைதொழக்
காதலித்து உறை கோயில்
வண்டு பண்செயும் மா மலர்ப் பொழில் மஞ்ஞை
நடம்இடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்
கேதீச்சரம் அதுதானே. 7

தென்இலங்கையர் குலபதி மலை நலிந்து
எடுத்தவன் முடி திண்தோள்
தன் நலம் கெட அடர்த்து அவற்கு அருள்செய்த
தலைவனார் கடல் வாய் அப்
பொன் இலங்கிய முத்து மா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சு
கேதீச்சரத்து உள்ளாரே. 8

பூஉளானும் அப் பொருகடல்வண்ணனும்
புவி இடந்து எழுந்து ஓடி
மேவி நாடி நுன் அடிஇணை காண்கிலா
வித்தகம் என் ஆகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்கு
மா தோட்ட நன்நகர் மன்னித்
தேவிதன்னொடும் திருந்து கேதீச்சரத்து
இருந்த எம்பெருமானே. 9

புத்தராய்ச் சில புனை துகில் உடையவர்
புறன்உரைச் சமண் ஆதர்
எத்தர் ஆகி நின்று உண்பவர் இயம்பிய
ஏழைமை கேளேன்மின்
மத்தயானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னு பாலாவியின் கரையில்
கேதீச்சரம் அடைமின்னே. 10

மாடுஎலாம் மணமுரசு எனக் கடலினது
ஒலி கவர் மாதோட்டத்து
ஆடல் ஏறு உடை அண்ணல் கேதீச்சரத்து
அடிகளை அணி காழி
நாடுஉளார்க்கு இறை ஞானசம்பந்தன் சொல்
நவின்று எழு பாமாலைப்
பாடல்ஆயின பாடுமின் பத்தர்காள்
பரகதி பெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்

293. திருஆலவாய்

திருமுறை : 1/94 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : சொக்கநாதர் இறைவியார் : அங்கையற்கண்ணி

நீலமாமிடற்று, ஆலவாயிலான்
பால்அது ஆயினார், ஞாலம் ஆள்வரே. 1

ஞாலம் ஏழுமாம், ஆலவாயிலார்
சீலமே சொலீர், காலன் வீடவே. 2

ஆலநீழலார், ஆலவாயிலார்
காலகாலனார்பால் அது ஆமினே. 3

அந்தம் இல் புகழ், எந்தை ஆலவாய்
பந்தி ஆர் கழல், சிந்தை செய்ம்மினே. 4

ஆடல் ஏற்றினான், கூடல் ஆலவாய்
பாடியே மனம், நாடி வாழ்மினே. 5

அண்ணல் ஆலவாய், நண்ணினான்தனை
எண்ணியே தொழத், திண்ணம் இன்பமே. 6

அம் பொன் ஆலவாய்நம்பனார் கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. 7

அரக்கனார் வலி நெருக்கன் ஆலவாய்
உரைக்கும் உள்ளத்தார்க்கு, இரக்கம் உண்மையே. 8

அருவன் ஆலவாய், மருவினான்தனை
இருவர் ஏத்த நின்று, உருவம் ஓங்குமே. 9

ஆரம் நாகமாம், சீரன் ஆலவாய்த்
தேர் அமண் செற்ற, வீரன் என்பரே. 10

அடிகள் ஆலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவில் இன்தமிழ், செடிகள் நீக்குமே. 11

294. திருஆலவாய்

திருமுறை : 2/66 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே 1

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 2

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே 4

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந் தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம்அது ஆவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே 5

அருத்தமதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அது ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்நீறு
திருத் தகு மாளிகை சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம்அது ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அரா அணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேல் உறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பு இடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலம்அது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே 9

குண்டிகைக் கையர்களொடு சாக்கியர் கூட்டமும்கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்திசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

பாண்டி நாட்டுத் தலைநகராகிய மதுரையிலே மங்கையர்க்கரசியார் குலச்சிறைநாயனார் என்னும் இவரது வேண்டுகோளுக்கியைந்து எழுந்தருளியிருந்த ஆளுடைய பிள்ளையார், தம்மடியார் குழுவோடு வசிக்கும் திருமடத்தில் அருகர் அரசனாணையால் தீக்கொளுவினாராக, இஃது அமணர் செயலன்று அரசன் காரியம் என்றுன்னி அத்தீயை வெப்பு நோயாகப் பையச்சென்று பாண்டியனைப் பற்றுமாறு பணித்தருளினார். தம்மரசன் அவ்வெப்பு நோயைச் சகிக்கலாற்றாது பேரிடருழக்கும் செயலைக் கண்டு மானியாரும் மந்திரியாரும் அவ்வரசனது இயைபு கொண்டு ஆளுடைய பிள்ளையாரை அரசனிடத்துக் கருணை வைத்து அதனைத் தீர்க்குமாறு வேண்டிக் கொண்டபோது ஆளுடைய பிள்ளையார் திருக்கோயிலை அடைந்து இறைவனது அருளை நாடித்தேர்ந்து அரசு இருக்கையை அடைந்து அவனது வேண்டுகோளின்படியும், சமணர்களோடு செய்த ஏற்பாட்டின்படியும், பாண்டியனது வலப்பால் வெப்பைத் திருவாலவாயண்ணலாரது திருநீறே மந்திரமும் மருந்துமாகித் திர்க்குமென்று இத்திருப்பதிகம் பாடியருளினார்.

295. திருஆலவாய்

திருமுறை : 3/32 பண் : கொல்லி இராகம் : நவரோசு
இறைவர் : ஏடகநாதர் இறைவியார் : ஏலவார்குழலி

வன்னியும் மத்தமும் மதி பொதி சடையினன்
பொன் இயல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத்து ஒருவனே. 1

கொடி நெடுமாளிகை கோபுரம் குளிர்மதி
வடிவு உற அமைதர மருவிய ஏடகத்து
அடிகளை அடி பணிந்து அரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள் போய் இல்லைஅது ஆகுமே. 2

குண்டலம் திகழ்தரு காது உடைக் குழகனை
வண்டு அலம்பும் மலர்க்கொன்றை வான்மதி அணி
செண்டு அலம்பும் விடைச் சேடன் ஊர் ஏடகம்
கண்டு கைதொழுதலும் கவலைநோய் கழலுமே. 3

ஏலம் ஆர் தரு குழல் ஏழையோடு எழில் பெறும்
கோலம் ஆர்தரு விடைக் குழகனார் உறைவுஇடம்
சாலமாதவிகளும் சந்தனம் சண்பகம்
சீலமார் ஏடகம் சேர்தலாம் செல்வமே. 4

வரி அணி நயனி நல் மலைமகள் மறுகிடக்
கரியினை உரிசெய்த கறை அணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோடு ஆண் அலி ஆகிய
எரியவன் உறைவு இடம் ஏடகக் கோயிலே. 5

பொய்கையின் பொழில் உறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடி பணிந்து அரற்றுமின் அடர்தரும்
வெய்ய வன்பிணி கெட வீடு எளிது ஆகுமே. (6–7)

தடவரை எடுத்தவன் தருக்கு இறத் தோள் அடர்
பட விரல் ஊன்றியே பரிந்து அவற்கு அருள் செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியும் மத்தமும்
இடம் உடைச் சடையினன் ஏடகத்து இறைவனே. 8

பொன்னும் மா மணிகளும் பொருதிரைச் சந்து அகில்
தன்னுள் ஆர் வைகையின் கரைதனில் சமைவுஉற
அன்னம் ஆம் அயனும் மால் அடி முடி தேடியும்
இன்னவாறு என ஒணான் ஏடகத்து ஒருவனே. 9

குண்டிகைக் கையினர் குணம் இலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டு இரைக்கும் மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டை சேர்க்கும் சடை ஏடகத்து எந்தையே. 10

கோடு சந்தனம் அகில் கொண்டு இழி வைகை நீர்
ஏடு சென்று அணைதரும் ஏடகத்து ஒருவனை
நாடு தென்புகலியுள் ஞானசம்பந்தன
பாடல் பத்து இவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திரு ஆலவாயில் சமணர்களோடு செய்த புனல் வாதத்தில் வாழ்க அந்தணர் எனும் திருப்பாசுரத்தை எழுதிய திருஏட்டை வைகையாற்றில் தமது திருக்கரத்தால் இட்டருளினர். அத்திருவேடு தன்கண் எழுதியதே பொருளென உலகத்தவர்களுக்குக் காட்டி நீரைக் கிழித்து அதிவேகமாக எதிரேறிச் சென்றது. அப்போது அவ்வேட்டினை எடுக்கும் பொருட்டுக் காற்றினும் கடுகச் செல்லும் கடும்பரி ஏறிக்கொண்டு கோற்றொழில் திருத்தவல்ல குலச்சிறையார் அதன்பின் சென்றார். அதனை அறிந்த பிள்ளையார் அவ்வேடு தங்கும்பொருட்டு இத்திருப்பதிகத்தைப் பாடியருளப் பின்சென்ற குலச்சிறைநாயனார் திருஏடகக் கோயிலின் மாடு மிக்க நீர் நடுவுட் சென்று அதனை எடுத்துக் கொணர்ந்து பிள்ளையாருடைய திருவடிகளில் வணங்கி அவரிடத்துக் கொடுத்தருளினார். அவரும் சபையோர் எல்லாருக்குங் காட்டியருள அதனைக் கண்ட திருக்கூட்டத்தினடா எல்லாரும் கடல் ஒலியினுமிகுமாறு அரவொலி செய்தார்கள்.

296. திருஆலவாய்

திருமுறை : 3/39 பண் : கொல்லி இராகம் : நவரோசு

மானின் நேர் விழி மாதராய் வழுதிக்கு மா பெருந்தேவி கேள்
பானல் வாய் ஒரு பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவு எய்திடேல்
ஆனைமாமலை ஆதிஆய இடங்களில் பலஅல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே.1

ஆகமத்தொடு மந்திரங்கள் அமைந்த சங்கத பங்கமாப்
பாகதத்தொடு இரைத்து உரைத்த சனங்கள் வெட்குறு பக்கமா
மாகதக்கரி போல் திரிந்து புரிந்து நின்று உணும் மாசுசேர்
ஆகதர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே.2

அத் தகுபொருள் உண்டும் இல்லையும் என்று நின்றவர்க்கு அச்சமா
ஒத்து ஒவ்வாமை மொழிந்து வாதில் அழிந்து எழுந்த கவிப் பெயர்ச்
சத்திரத்தின் மடிந்து ஒடிந்து சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க்கு எளியேன்அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 3

சந்துசேனனும் இந்துசேனனும் தருமசேனனும் கருமைசேர்
கந்துசேனனும் கனகசேனனும் முதலது ஆகிய பெயர் கொளா
மந்தி போல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்தகர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 4

கூட்டினார் கிளியின் விருத்தம் உரைத்தது ஒர்ரொலி தொழில்
பாட்டு மெய் சொலிப் பக்கமே செலும் எக்கர் தங்களைப் பல்அறம்
காட்டியே வரு மாடுஎலாம் கவர் கையரைக் கசிவு ஒன்று இலாச்
சேட்டைகட்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 5

கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமண மா
சுனகநந்தியும் குனகநந்தியும் திவணநந்தியும் மொழி கொளா
அனகநந்தியர் மதுஒழிந்து அவமே தவம்புரிவோம் எனும்
சினகருக்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 6

பந்தணம் அவை ஒன்று இலம் பரிவு ஒன்று இலம் என வாசகம்
மந்தணம்பல பேசி மாசு அறு சீர்மை இன்றி அநாயமே
அந்தணம் அருகந்தணம் மதிபுத்தணம் மதிசிந்தணச்
சிந்தணர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 7

மேல் எனக்கு எதிரில்லை என்ற அரக்கனார் மிகை செற்ற தீப்
போலியைப் பணியக்கிலாது ஒரு பொய்த்தவம் கொடு குண்டிகை
பீலி கைக்கொடு பாய்இடுக்கி நடுக்கியே பிறர் பின்செலும்
சீலிகட்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 8

பூமகற்கும் அரிக்கும் ஓர்வு அரு புண்ணியன் அடி போற்றிலார்
சாம் அவத்தையினார்கள் போல் தலையைப் பறித்து ஒரு பொய்த்தவம்
வேம் அவத்தை செலுத்தி மெய்ப் பொடி அட்டி வாய்சகதிக்குநேர்
ஆம் அவர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே. 9

தங்களுக்கும் அச் சாக்கியர்க்கும் தரிப்பு ஒணாத நல் சேவடி
எங்கள்நாயகன் ஏத்து ஒழிந்து இடுக்கே மடுத்து ஒரு பொய்த் தவம்
பொங்கு நூல்வழி அன்றியே புலவோர்களைப் பழிக்கும் பொலா
அங்கதர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே.10

எக்கர் ஆம் அமண் கையருக்கு எளியேன் அலேன் திரு ஆலவாய்ச்
சொக்கன் என் உள் இருக்கவே துளங்கும் முடித் தென்னன்முன் இவை
தக்க சீர்ப் புகலிக்கு மன் தமிழ் நாதன் ஞானசம்பந்தன் வாய்
ஒக்கவே உரைசெய்த பத்தும் உரைப்பவர்க்கு இடர் இல்லையே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

சிரபுரச்செம்மலார் பாண்டியரது திருமாளிகையை அடைந்து செம்மணிப் பீடத்திருந்தபோது சமணர்கள் சீற்றங்கொண்டு காலையெழுங் கதிரவனைப் புடைசூழுங் கருமுகில்போல் பிள்ளையாரைச் சூழ்ந்து தமது சமய வாதம் பேசத் தொடங்கினார்கள். அதனைக் கண்ட மங்கையர்க்கரசியார் பிள்ளையாரது திருமேனியைக் குறித்துப் பயந்து அரசனிடத்து அதனை விண்ணப்பதித்தபோது, பிள்ளையார் அவரைநோக்கி 'மானினேர் விழியினாய், எனைப்பால னென்று அஞ்சவேண்டாம், திருஆலவாய் அரனிற்க யான் அவர்க்கு எளியனாகேன்' என்னுங் கருத்தமைந்த இத்திருப்பதிகம் பாடியருளினார்.

297. திருஆலவாய்

திருமுறை : 3/47 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

காட்டு மாஅது உரித்து உரிபோர்த்து உடல்
நாட்டம் மூன்று உடையாய் உரை செய்வன் நான்
வேட்டு வேள்வி செய்யா அமண் கையரை
ஒட்டி வாது செய்யத் திரு உள்ளமே. 1

மத்த யானையின் ஈர் உரி மூடிய
அத்தனே அணி ஆலவாயாய் பணி
பொய்த்தவன் தவவேடத்தராம் சமண்
சித்தரை அழிக்கத் திரு உள்ளமே. 2

மண்ணகத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ணகத்திரு ஆலவாயாய் அருள்
பெண்ணகத்து எழில் சாக்கியப் பேய் அமண்
தெண்ணர் கற்புஅழிக்கத் திரு உள்ளமே. 3

ஓதி ஒத்து அறியா அமண் ஆதரை
வாதில் வென்று அழிக்கத் திரு உள்ளமே
ஆதியே திரு ஆலவாய் அண்ணலே
நீதியாக நினைந்து அருள் செய்திடே. 4

வையமார் புகழாய் அடியார் தொழும்
செய்கையார் திரு ஆலவாயாய் செப்பாய்
கையில் உண்டு உழலும் அமண் கையரைப்
பைய வாது செயத் திரு வுள்ளமே. 5

நாறு சேர் வயல் தண்டலை மிண்டிய
தேறலார் திரு ஆலவாயாய் செப்பாய்
வீறிலாத் தவமோட்டு அமண் வேடரைச்
சீறி வாது செய்யத் திரு உள்ளமே. 6

பண்டு அடித்தவத்தார் பயில்வால் தொழும்
தொண்டருக்கு எளியாய் திரு ஆலவாய்
அண்டனே அமண் கையரை வாதினில்
செண்டு அடித்து உளறத் திரு உள்ளமே. 7

அரக்கன்தான் கிரி ஏற்றவன் தன்முடிச்
செருக்கினைத் தவிர்த்தாய் திரு ஆலவாய்ப்
பரக்கும் மாண்பு உடையாய் அமண் பாவரைக்
கரக்க வாதுசெயத் திரு உள்ளமே. 8

மாலும் நான்முகனும் அறியாநெறி
ஆலவாய் உறையும் அண்ணலேபணி
மேலைவீடு உணரா வெற்று அரையரைச்
சால வாதுசெயத் திரு உள்ளமே. 9

கழிக் கரைப் படு மீன் கவர்வார் அமண்
அழிப்பரை அழிக்கத் திரு உள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ் திரு ஆலவாய்
மழுப்படை உடை மைந்தனே நல்கிடே. 10

செந்து எனா முரலும் திரு ஆலவாய்
மைந்தனே அன்று வல்அமண் ஆசுஅறச்
சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ் ஞானசம்
பந்தன் சொல்பகரும் பழி நீங்கவே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

பாண்டியரது கரப்பிணியைத் தீர்க்கவும் சமணரை வாதில் வெல்லவும், பாண்டியரது திருமாளிகைக்கு எழுந்தருளும் முத்தமிழ் விரகராய பிள்ளையார் திருக்கோயிலிற்சென்று சொக்கலிங்கப் பெருமானை வணங்கி, 'காட்டுமாவதுரித்து' என்னும் இத்திருப்பதிகம் பாடி இறைவன் திருவுளத்தை அறிந்து கொண்டார்.

298. திருஆலவாய்

திருமுறை : 3/51 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்று அருள்செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே. 1

சித்தனே திரு ஆலவாய் மேவிய
அத்தனே அஞ்சல் என்று அருள்செய் எனை
எத்தராம் அமணர் கொளுவும் சுடர்
பத்தி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்து அருள் ஆலவாய்ச்
சொக்கனே அஞ்சல் என்று அருள்செய் எனை
எக்கராம் அமணர் கொளுவும் சுடர்
பக்கமே சென்று பாண்டியற்கு ஆகவே. 3

சிட்டனே திரு ஆலவாய் மேவிய
அட்டமூர்த்தியனே அஞ்சல் என்று அருள்
துட்டராம் அமணர் கொளுவும் சுடர்
பட்டி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 4

நண்ணலார் புரம்மூன்று எரி ஆலவாய்
அண்ணலேஅஞ்சல் என்று அருள் செய் எனை
எண்ணிலா அமணர் கொளுவும் சுடர்
பண்ணியல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே. 5

தஞ்சம் என்று உன் சரண் புகுந்தேனையும்
அஞ்சல் என்று அருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்து அமணர் கொளுவும் சுடர்
பஞ்சவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 6

செங்கண் வெள்விடையாய் திரு ஆலவாய்
அங்கணா அஞ்சல் என்று அருள்செய் எனைக்
கங்குலார் அமண்கையர் இடும்கனல்
பங்கமில் தென்னன்பாண்டியற்கு ஆகவே. 7

தூர்த்தன் வீரம் தொலைத்து அருள் ஆலவாய்
ஆத்தனே அஞ்சல் என்று அருள்செய் எனை
ஏத்து இலா அமணர் கொளுவும் சுடர்
பார்த்திவன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 8

தாவினான் அயன் தான் அறியாவகை
மேவினாய் திரு ஆலவாயாய் அருள்
தூவிலா அமணர் கொளுவும் சுடர்
பாவினான் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 9

எண்திசைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்டனே அஞ்சல் என்று அருள்செய் எனைக்
குண்டராம் அமணர் கொளுவும் சுடர்
பண்டி மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே. 10

அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பம் தென்னவன்மேல் உற மேதினிக்கு
ஒப்ப ஞானசம்பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதுஇலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாலவாயில் திருக்கூட்டத் தோடும் திருமடத்தில் எழுந்தருளி இருக்கும்போது சமணர் அரசனது சம்மதிபெற்று அவரிருந்த மடத்தின்மேல் மந்திர வலியாற் தீயினைச் செல்லப் பணித்தார்கள். எண்ணில்லாத சிவனடியார்கள் பிள்ளையாரோடு திருவைந்தெழுத்தை ஓதும் அம்மடத்தின்மீது அம்மந்திரவலி செல்லாமையால் அச்சமணர்கள் தீயினைக் கொணர்ந்து மடத்தின் புறத்தில் வைத்தார்கள். அதனையறிந்த பிள்ளையார் அரசரது குற்றத்தை உணர்ந்து இப்பதிகத்தைப் பாடித்திருப்பாட்டொவ்வொன்றினும் 'அமஃணர் கொளுவுஞ்சுடர் பாண்டியற்காக' வென்று பணித்தருளினார். எனினும் அவர் அதனைப் பையச் செல்லுமாறு ஏவினமையால் அத்தீ, சுர நோயாய்ப் பாண்டியரை அடைந்தது.

299. திருஆலவாய்

திருமுறை : 3/52 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

வீடுஅலால் அவாய் இல்ஆய் விழுமியார்கள் நின்கழல்
பாடல் ஆலவாய்இலாய் பரவ நின்ற பண்பனே
காடுஅலால் அவாய்இலாய் கபாலி நீள்கடிம்மதில்
கூடல் ஆலவாயிலாய் குலாயது என்ன கொள்கையே. 1

பட்டு இசைந்த அல்குலாள் பாவையாள் ஓர்பாகமா
ஒட்டு இசைந்தது அன்றியும் உச்சியாள் ஒருத்தியாக்
கொட்டு இசைந்த ஆடலாய் கூடல்ஆலவாயிலாய்
எட்டு இசைந்த மூர்த்தியா இருந்த ஆறுஇது என்னையே.2

குற்றம் நீ குணங்கள் நீ கூடல் ஆலவாயிலாய்
சுற்றம் நீ பிரானும் நீ தொடர்ந்து இலங்கு சோதி நீ
கற்ற நூல் கருத்தும் நீ அருத்தம் இன்பம் என்று இவை
முற்றும் நீ புகழ்ந்து முன் உரைப்பது என் முகம்மனே. 3

முதிரும் நீர்ச் சடைமுடி முதல்வ நீ முழங்கு அழல்
அதிர வீசி ஆடுவாய் அழகன் நீ புயங்கன் நீ
மதுரன் நீ மணாளன் நீ மதுரை ஆலவாயிலாய்
சதுரன் நீ சதுர்முகன் கபாலம் ஏந்து சம்புவே. 4

கோலம் ஆய நீள்மதில் கூடல்ஆலவாயிலாய்
பாலன் ஆய தொண்டு செய்து பண்டும் இன்றும் உன்னையே
நீலம் ஆய கண்டனே நின்னை அன்றி நித்தலும்
சீலம் ஆய சிந்தையில் தேர்வது இல்லை தேவரே. 5

பொன்தயங்கு இலங்குஒளிர் நலம்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்புஇலீ
கொன்றை அம் முடியினாய் கூடல்ஆலவாயிலாய்
நின்று இயங்கி ஆடலே நினைப்பதே நியமமே. 6

ஆதி அந்தம் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதி அந்தம் ஆயினாய் சோதியுள் ஓர் சோதியாய்
கீதம் வந்த வாய்மையால் கிளர் தருக்கினார்க்கு அலால்
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்து உரைக்கலாகுமே. 7

கறை இலங்கு கண்டனே கருத்து இலாக் கருங்கடல்
துறை இலங்கை மன்னனைத் தோள் அடர ஊன்றினாய்
மறை இலங்கு பாடலாய் மதுரை ஆல வாயிலாய்
நிறை இலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே. 8

தாவணவ் விடையினாய் தலைமை ஆக நாள்தொறும்
கோவணவ் உடையினாய் கூடல்ஆலவாயிலாய்
தீ வணம் மலர்மிசைத் திசைமுகனும் மாலும் நின்
தூ வணம் அளக்கிலார் துளக்கம் எய்துவார்களே. 9

தேற்றம் இல் வினைத்தொழில் தேரரும் சமணரும்
போற்றிஇசைத்து நின்கழல் புகழ்ந்து புண்ணியம் கொளார்
கூற்று உதைத்த தாளினாய் கூடல்ஆலவாயிலாய்
நால் திசைக்கும் மூர்த்திஆகி நின்றது என்ன நன்மையே.10

போய நீர் வளம் கொளும் பொரு புனல் புகலியான்
பாய கேள்வி ஞானசம்பந்தன் நல்ல பண்பினால்
ஆய சொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்
தீய தீர எண்ணுவார்கள் சிந்தை ஆவர் தேவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

கவுணியர் குலதீபர் திருவாலவாயிற் பாண்டியரது சுரந்தீர்த்துச் சமணரை வாதில் வென்றழித்துச் சைவத்தை நிலைநிறுத்தியதன் பின்னர், அரசரும், மாதேவியாரும், மந்திரியாரும் உடன் வரத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி இறைவன் தமக்குச் செய்தருளிய இன்னருளின் பொருட்டு இப்பதிகம் பாடி வணங்கித் துதித்தார்.

300. திருஆலவாய்

திருமுறை : 3/54 பண் : கௌசிகம் இராகம் : பைரவி

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. 1

அரிய காட்சியராய் தமது அங்கை சேர்
எரியர் ஏறு உகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடு உறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர் அறிவார் அவர் பெற்றியே. 2

வெந்தசாம்பல் விரை எனப் பூசியே
தந்தையாரொடு தாய் இலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ. 3

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவு இல்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க தக்கார். 4

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி
மா துக்கம் நீங்கல்உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள்மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழ் அல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்
நாடும் திறத்தார்க்கு அருள்அல்லது நாட்டல் ஆமே. 6

கடி சேர்ந்த போது மலர் ஆன கைக் கொண்டு நல்ல
படி சேர்ந்த பால்கொண்டு அங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடி சேர்ந்த காலை அற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடி சேர்ந்த வண்ணம் அறிவார் சொலக் கேட்டும் அன்றே.7

வேதமுதல்வன் முதல்ஆக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல்செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே. 8

பார் ஆழி வட்டம் பகையால் நலிந்து ஆட்ட ஆடிப்
பேர் ஆழியானது இடர் கண்டு அருள்செய்தல் பேணி
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சுஇடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும் புகழ் உற்றது அன்றே. 9

மாலாய் அவனும் மறைவல்லவன் நான்முகனும்
பாலாய தேவர் பகரில் அமுது ஊட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு அங்கு அமரர்க்கு அருள் செய்ததுஆமே.10

அற்று அன்றி அம் தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்று என்று தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்நீர்ப்
பற்றுஇன்றிப் பாங்கு எதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்று ஒன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே.11

நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர்உலகு ஆளவும் வல்லர் அன்றே.12

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

சிரபுரச் செம்மலார் மதுரையிற் பாண்டியரது அவைக்களத்துச் சமணர்களோடு அனல் வாதஞ் செய்து வென்றருளிய பின்னர் மீண்டும் சமணர் கருத்துக்கு இசைந்து அரசரோடும் மற்றவரோடும் வைகையாற்றை யடைந்து புனல் வாதஞ் செய்வாராயினார். சமணர்கள் தங்கள் மந்திரமாகிய அத்தி நாத்தியை எழுதிய ஏட்டை ஆற்றில் இட அது கடலை நோக்கி ஓடிற்று. உடனே பிள்ளையார் 'வாழ்க அந்தணர்' என்னுமித் திருப்பாசுரத்தைப் பாடி எழுதிய திருவேட்டைத் தமது கையால் ஆற்றிலிட அஃது எதிரேறிச் சென்று இது பொருளென யாவருமறியக் காட்டியது. அப் பாசுரத்தில் 'வேந்தனு மோங்குக' என்று அருளிச் செய்த பிள்ளையாரது வாக்கின் மேன்மையால் அரசர் கூன்நிமிர்ந்து நின்றசீர் நெடுமாற பாண்டியராயினார்.



301. திருஆலவாய்

திருமுறை : 3/108 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

வேதவேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம்இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்றுஅழிக்கத் திருஉள்ளமே
பாதி மாதுஉடன்ஆய பரமனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 1

வைதிகத்தின் வழி ஒழுகாத அக்
கைதவம் உடைக் கார்அமண்தேரரை
எய்தி வாதுசெய்யத் திருஉள்ளமே
மை திகழ்தரு மா மணிகண்டனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 2

மறை வழக்கம் இலாத மா பாவிகள்
பறி தலைக் கையர் பாய் உடுப்பார்களை
முறிய வாதுசெயத் திரு உள்ளமே
மறி உலாம் கையில் மா மழுவாளனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 3

அறுத்த அங்கம்ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்து வாழ் அமண்கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெயத் திரு உள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 4

அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெயத் திரு உள்ளமே
வெந்த நீறது அணியும் விகிர்தனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 5

வேட்டு வேள்வி செயும் பொருளை விளி
மூட்டு சிந்தை முருட்டு அமண்குண்டரை
ஓட்டி வாதுசெயத் திரு உள்ளமே
காட்டில் ஆனை உரித்த எம் கள்வனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 6

அழல்அது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல்அது என்னும் அருகர் திறத்திறம்
கழல வாதுசெயத் திரு உள்ளமே
தழல் இலங்கு திருஉருச் சைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 7

நீற்று மேனியர் ஆயினர்மேல் உற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெயத் திரு உள்ளமே
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 8

நீல மேனி அமணர் திறத்து நின்
சீலம் வாதுசெயத் திரு உள்ளமே
மாலும் நான்முகனும் காண்பு அரியதோர்
கோலம் மேனிஅது ஆகிய குன்றமே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 9

அன்று முப்புரம் செற்ற அழக நின்
துன்று பொன்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெயத் திரு உள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின் புகழேமிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே. 10

கூடல் ஆலவாய்க்கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கியவாளரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

பாண்டிமாதேவியார் குலச்சிறையார் என்னும் இவர்கள் வேண்டுதலினுக்கு இயைந்து பாண்டியர் சுரம் தீர்க்கவும், சமணரை வாதில் வெல்லவும் எழுந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்கோயிலை அடைந்து இறைவனைக் 'காட்டுமாவதுரி' என்னும் பதிகம் பாடி வேண்டி இறைவன் திருவுளத்தை அறிந்த பின்னர்ச் சமணரை வாதில் வென்றிழிக்கவும் இறைவன் புகழ் உலகெங்கும் பரவவும் இப்பதிகம் பாடித் துதித்து அருளினார்.

302. திருஆலவாய்

திருமுறை : 3/115 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

ஆலநீழல் உகந்தது இருக்கையே
ஆன பாடல் உகந்தது இருக்கையே
பாலின் நேர் மொழியாள் ஒரு பங்கனே
பாதம் ஓதலர் சேர் புர பங்கனே
கோலம் நீறு அணி மேதகு பூதனே
கோதுஇலார் மனம் மேவிய பூதனே
ஆலநஞ்சு அமுது உண்ட களத்தனே
ஆலவாய் உறை அண்டர்கள் அத்தனே. 1

பாதியாய் உடன் கொண்டது மாலையே
பம்பு தார் மலர்க்கொன்றை நல் மாலையே
கோதில் நீறுஅது பூசிடும் ஆகனே
கொண்ட நல்கையின் மானிடம் ஆகனே
நாதன் நாள்தொறும் ஆடுவது ஆனையே
நாடி அன்றுஉரி செய்ததும் ஆனையே
வேதநூல் பயில்கின்றது வாயிலே
விகிர்தன் ஊர் திரு ஆலநல்வாயிலே. 2

காடு நீடது உறப்பலகத்தனே
 காதலால் நினைவார் தம் அகத்தனே
பாடு பேயொடு பூதம் மசிக்கவே
 பல்பிணத் தசை நாடி அசிக்கவே
நீடு மாநடம் ஆடவிருப்பனே
 நின் அடித்தொழ நாளும் இருப்பனே
ஆடல் நீள்சடை மேவிய அப்பனே
 ஆல வாயினின் மேவிய அப்பனே. 3

பண்டு அயன்தலை ஒன்றும் அறுத்தியே
 பாதம் ஓதினர் பாவம் அறுத்தியே
துண்ட வெண்பிறை சென்னி இருத்தியே
 தூய வெள்எருது ஏறியிருத்தியே
கண்டு காமனை வேவ விழித்தியே
 காதல் இல் அவர் தம்மை இழித்தியே
அண்ட நாயகனே மிகு கண்டனே
 ஆல வாயினின் மேவிய அகண்டனே. 4

சென்று தாதை உகுத்தனன் பாலையே
 சீறி அன்பு செகுத்தனன் பாலையே
வென்றி சேர் மழுக்கொண்டு முன்காலையே
 வீட வெட்டிடக் கண்டு முன்காலையே
நின்ற மாணியை ஓடின கங்கையால்
 நிலவ மல்கி உதித்து அனகம் கையால்
அன்று நின் உருஆகத் தடவியே
 ஆலவாய் அரன்நாகத்து அடவியே. 5

நக்கம் ஏகுவர் நாடும் ஓர் ஊருமே
நாதன் மேனியின் மாசுணம் ஊருமே
தக்க பூ மனைச் சுற்றக் கருள்ளொடே
தாரம் உய்த்தது பாணற்கு அருளொடே
மிக்க தென்னவன்தேவிக்கு அணியையே
மெல்ல நல்கிய தொண்டர்க்கு அணியையே
அக்கினார் அமுது உண்கலன் ஓடுமே
ஆலவாய் அரனார் உமையோடுமே. 6

வெய்யவன் பல் உகுத்தது குட்டியே
வெங்கண் மாசுணம் கையது குட்டியே
ஐயனே அனல்ஆடிய மெய்யனே
அன்பினால் நினைவார்க்கு அருள் மெய்யனே
வையம் உய்ய அன்று உண்டது காளமே
வள்ளல் கையது மேவு கங்காளமே
ஐயம் ஏற்பது உரைப்பது வீண் ஐயே
ஆலவாய் அரன் கையது வீணையே. 7

தோள்கள் பத்தொடு பத்தும் அயக்கியே
தொக்க தேவர் செருக்கை மயக்கியே
வாள் அரக்கன் நிலத்துக் களித்துமே
வந்த அம்மால்வரை கண்டு உகளித்துமே
நீள்பொருப்பை எடுத்த உன்மத்தனே
நின் விரல் தலையால் மதம் மத்தனே
ஆளும் ஆதி முறித்தது மெய்கொலோ
ஆலவாய் அரன் உய்த்ததும் மெய்கொலோ. 8

பங்கயத்து உள நான்முகன் மாலொடே
    பாதம் நீள் முடி நேடிட மாலொடே
துங்க நல் தழலின் உருஆயுமே
    தூய பாடல் பயின்றது வாயுமே
செங்கயல் கண்ணினார் இடு பிச்சையே
    சென்று கொண்டு உரைசெய்வது பிச்சு ஐயே
அங்கியைத் திகழ்விப்பது இடக்கையே
    ஆலவாய் அரனாரது இடக்கையே. 9

தேரரோடு அமணர்க்கு நல்கானையே
    தேவர் நாள்தொறும் சேர்வது கானையே
கோரம் அட்டது புண்டரிகத்தையே
    கொண்ட நீள் கழல் புண்டரிகத்தையே
நேர் இல் ஊர்கள் அழித்தது நாகமே
    நீள்சடைத் திகழ்கின்றது நாகமே
ஆரமாக உகந்ததும் என்பதே
    ஆலவாய் அரனார் இடம் என்பதே. 10

ஈன ஞானிகள் தம்மொடு விரகனே
    ஏறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுள் ஞானசம்பந்தனே
    ஆலவாயினில் மேய சம்பந்தனே
ஆன வானவர் வாயின் உளத்தனே
    அன்பர் ஆனவர் வாயினுள் அத்தனே
நான் உரைத்தன செந்தமிழ்பத்துமே
    வல்லவர்க்கு இவை நற்றமிழ் பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

இருள்கெட மண்ணில்வந்த இன்தமிழ்ப் பிள்ளையார் சமணரைத் தொலைத்து மாறர் பெருமானுக்கும் மாதேவியார்க்கும் விடை கொடுத்து மாளிகைக்குச் செல்ல அனுப்பிவிட்டுத் தாம் இறைவனை வணங்கி அப்பதியில் இனிதிருக்கு நாள்களில் இத் திருவியமகத் திருப்பதிகமெடுத்துப் பாடியதில் 'தார முய்த்தது பாணற் கருளொடே' என்று திருநீலகண்டப் பாணருக்கு அருளிய திறத்தை வைத்துப் போற்றி அவரொடு அளவளாவி அருளினார்.

303. திருஆலவாய்

திருமுறை : 3/120 பண் : புறநீர்மை இராகம் : பூபாளம்

மங்கையர்க்கு அரசி வளவர்கோன் பாவை
வரி வளைக் கைம் மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள்தொறும் பரவப்
பொங்கு அழல்உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அம் கயல்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. 1

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளை நீறு அணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி ஆய
குலச்சிறை குலாவி நின்று ஏத்தும்
ஒற்றை வெள்விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழித்திட்டு
அற்றவர்க்கு அற்ற சிவன் உறைகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 2

செந்துவர்வாயாள் சேல் அன கண்ணாள்
சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்து அணை விரலாள் பாண்டிமா தேவி
பணி செயப் பாரிடை நிலவும்
சந்தம் ஆர் தரளம் பாம்பு நீர் மத்தம்
தண் எருக்கம்மலர் வன்னி
அந்தி வான்மதி சேர் சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 3

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணம்கொடு பணியும் குலச்சிறை குலாவும்
கோபுரம் சூழ்மணிக் கோயில்
மணம் கமழ் கொன்றை வாள்அரா மதியம்
வன்னி வண் கூவிள மாலை
அணங்கு வீற்றிருந்த சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 4

செய்யதாமரைமேல் அன்னமே அனைய
சேயிழை திருநுதல் செல்வி
பைஅரவுஅல்குல் பாண்டிமா தேவி
நாள்தொறும் பணிந்து இனிது ஏத்த
வெய்ய வேல் சூலம் பாசம் அங்குசம் மான்
விரி கதிர் மழுஉடன் தரித்த
ஐயனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 5

நலம் இலர் ஆக நலம் அது உண்டாக
நாடு அவர் நாடு அறிகின்ற
குலம் இலர் ஆகக் குலம்அது உண்டாகத்
தவம் பணி குலச்சிறை பரவும்
கலை மலி கரத்தன் மூஇலைவேலன்
கரிஉரி மூடிய கண்டன்
அலை மலி புனல் சேர் சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 6

முத்தின்தாழ்வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தி ஆர்கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தம் ஆர் பளிங்கின் பெருமலை உடனே
சுடர் மரகதம் அடுத்தால் போல்
அத்தனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 7

நா அணங்கு இயல்பாம் அஞ்செழுத்து ஓதி
நல்லராய் நல்இயல்பு ஆகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்
தொழுது எழு குலச்சிறை போற்ற
ஏ அணங்கு இயல்பு ஆம் இராவணன் திண்தோள்
இருபதும் நெரிதர ஊன்றி
ஆவணம் கொண்ட சடைமுடி அண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே. 8

மண்எலாம் நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச்சோழன் தன் மகளாம்
பண்ணின் நேர் மொழியாள் பாண்டிமாதேவி
பாங்கினால் பணி செய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும்
அளப்பு அரிதுஆம் வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே. 9

தொண்டராய் உள்ளார் திசைதிசைதோறும்
தொழுது தன் குணத்தினைக் குலாவக்
கண்டு நாள்தோறும் இன்புறுகின்ற
குலச்சிறை கருதி நின்று ஏத்தக்
குண்டராய் உள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின் கண் நெறியிடைவாரா
அண்டநாயகன்தான் அமர்ந்து வீற்றிருந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. 10

பல்நலம் புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறை எனும் இவர் பணியும்
அந் நலம் பெறு சீர் ஆலவாய் ஈசன்
திருவடி ஆங்குஅவை போற்றிக்
கன்னல் அம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழ்இவைகொண்டு
இன்நலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்த வீற்றிருப்பவர் இனிதே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

மதுரைவாழவந்த மங்கையர்க்கரசியாரது ஆணையை மேற்கொண்டு குலச்சிறை நாயனார் ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு வணங்கி நலம் வினாவப்பெற்று அவருடன் வரும்போது, பிள்ளையார், தமக்கு முன்னே மதுரை தோன்றுதலும் தவமுதல்வராய அவரை நோக்கி 'ஈங்கு நம்பெருமான் திருவாலவாய் எம்மருங்கிதென' வினாவியருளக் குலச்சிறையார் அவரடியினை வணங்கித் தம் கரங்களாற் சுட்டிச் 'சோலைகள் சூழ்ந்து ஆகாயமளாவி யிருக்கும் திருக்கோபுரந் தோன்றாநின்ற இஃது இறைவன் திருவாலவாய்' என்றார். அதனைக் கண்ட பிள்ளையார் தம் இருகரங்களையும் உச்சியின் மேல்குவித்து மீண்டும் நிறைந்த மண்டுபேர் அன்பால் மண்மிசைப் பணிந்து 'மங்கையர்க் கரசி' என்னு இப்பதிகமெடுத்து அதனில் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்னும் இருவர் திருப்பணிகளை யெல்லாஞ் சிறப்பித்துத் திருப்பாட்டின் இறுதிதோறும் 'அன்னவர் வழிபட நின்ற ஆலவாயாவதும் இதுவே' என்று பாடியருளினார்.

304. திருஆப்பனூர்

திருமுறை : 1/88 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : ஆப்பனூர்க்காரணர் இறைவியார் : குரவம்கமழ்குழல் அம்மை

முற்றும் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம்அது கொண்டு அரைக்கு அணிந்தான்
செற்றம் இல் சீரானைத் திரு ஆப்பனூரானைப்
பற்றும் மனம்உடையார் வினை பற்று அறுப்பாரே. 1

குரவம் கமழ் குழலாள் குடிகொண்டு நின்று விண்ணோர்
விரவும் திருமேனி விளங்கும் வளைஎயிற்றின்
அரவம் அணிந்தானை அணி ஆப்பனூரனைப்
பரவும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 2

முருகு விரி குழலார் மனம் கொள் அநங்கனை முன்
பெரிதும் முனிந்து உகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவம் அணிந்தானை அணி ஆப்பனூரானைப்
பரவும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 3

பிணியும் பிறப்பு அறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடை தாழச் சுடர் ஏந்தி ஆடுவான்
அணியும் புனலானை அணி ஆப்பனூரானைப்
பணியும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே.4

தகரம் அணி அருவித் தடமால்வரை சிலையா
நகரம்ஒருமூன்றும் நலம் குன்ற வென்று உகந்தான்
அகரமுதலானை அணி ஆப்பனூரானைப்
பகரும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 5

ஓடும் திரிபுரங்கள் உடனே உலந்து அவியக்
காடுஅது இடமாகக் கனல் கொண்டு நின்று இரவில்
ஆடும் தொழிலானை அணி ஆப்பனூரானைப்
பாடும் மனம்உடையார் வினை பற்று அறுப்பாரே. 6

இயலும் விடை ஏறி எரி கொள் மழு வீசிக்
கயலின் இணைக்கண்ணாள் ஒருபால் கலந்து ஆட
இயலும் இசையானை எழில் ஆப்பனூரானைப்
பயிலும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே.7

கருக்கும் மணிமிடறன் கதநாகக்கச்சையினான்
உருக்கும் அடியவரை ஒளிவெண்பிறைசூடி
அரக்கன் திறல் அழித்தான் அணி ஆப்பனூரானைப்
பருக்கும் மனம் உடையார் வினை பற்று அறுப்பாரே. 8

கண்ணன் கடிக்கமலமலர்மேல் இனிது உறையும்
அண்ணற்கு அளப்பு அரிதுஆய் நின்று அங்கு அடியார்மேல்
எண் இல் வினை களைவான் எழில் ஆப்பனூரானைப்
பண்ணின் இசை பகர்வார் வினை பற்று அறுப்பாரே. 9

செய்ய கலிங்கத்தார் சிறு தட்டு உடையார்கள்
பொய்யர் புறம்கூறப் புரிந்த அடியாரை
ஐயம் அகற்றுவான் அணி ஆப்பனூரானைப்
பைய நினைந்து எழுவார் வினை பற்று அறுப்பாரே. 10

அம் தண்புனல் வைகை அணி ஆப்பனூர் மேய
சந்த மலர்க்கொன்றை சடைமேல் உடையானை
நந்திஅடி பரவும் நல ஞானசம்பந்தன்
சந்தம்இவை வல்லார் தடுமாற்று அறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

305. திருப்பரங்குன்றம்

திருமுறை : 1/100 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

இறைவர் : பரங்கிரிநாதர் இறைவியார் : ஆவுடைநாயகி

நீடு அலர் சோதி வெண்பிறையோடு நிரை கொன்றை
சூடலன் அந்திச் சுடர்எரி ஏந்திச் சுடுகானில்
ஆடலன் அம் சொல் அணியிழையாளை ஒருபாகம்
பாடலன் மேய நன்நகர்போலும் பரங்குன்றே. 1

அங்கம்ஓர் ஆறும் அருமறைநான்கும் அருள்செய்து
பொங்கு வெண்நூலும் பொடி அணி மார்பில் பொலிவித்துத்
திங்களும் பாம்பும் திகழ்சடை வைத்து ஓர் தேன்மொழி
பங்கினன் மேய நன்நகர்போலும் பரங்குன்றே. 2

நீர் இடம்கொண்ட நிமிர்சடைதன்மேல் நிரை கொன்றை
சீர் இடம்கொண்ட எம் இறைபோலும் சேய்துஆய
ஓர் உடம்புள்ளே உமைஒருபாகம் உடனாகிப்
பாரிடம் பாட இனிது உறை கோயில் பரங்குன்றே. 3

வளர் பூங்கோங்கம் மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டு அறை சோலைப் பரங்குன்றம்
தளிர் போல் மேனித் தையல் நல்லாளோடு ஒருபாகம்
நளிர்பூங்கொன்றை சூடினன் மேய நகர்தானே. 4

பொன் இயல் கொன்றை பொறி கிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதி ஆகிய ஈசன் தொல்மறை
பன்னிய பாடல் ஆடலன் மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்க்கு இல்லை உறுநோயே. 5

கடை நெடுமாடக் கடிஅரண்மூன்றும் கனல் மூழ்கத்
தொடை நவில்கின்ற வில்லினன் அந்திச் சுடுகானில்
புடை நவில் பூதம் பாட நின்று ஆடும் பொரு சூலப்
படை நவில்வான்தன் நன்நகர்போலும் பரங்குன்றே. 6

அயில் உடை வேல் ஓர் அனல் புல்கு கையின் அம்பு ஒன்றால்
எயில் பட எய்த எம் இறை மேய இடம்போலும்
மயில் பெடைபுல்கி மா நடம்ஆடும் வளர் சோலைப்
பயில் பெடைவண்டு பாடல் அறாத பரங்குன்றே. 7

மைத் தகு மேனி வாள் அரக்கன்தன் மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும்செற்றான் பரங்குன்றைச்
சித்தம்அது ஒன்றிச் செய் கழல்உன்னிச் சிவன் என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே. 8

முந்தி இவ் வையம் தாவிய மாலும் மொய் ஒளி
உந்தியில் வந்து இங்கு அருமறை ஈந்த உரவோனும்
சிந்தையினாலும் தெரிவுஅரிதாகித் திகழ்சோதி
பந்து இயல்அம் கை மங்கை ஓர்பங்கன் பரங்குன்றே. 9

குண்டாய் முற்றும் திரிவார் கூறை மெய் போர்த்து
மிண்டு ஆய் மிண்டர் பேசிய பேச்சு மெய் அல்ல
பண்டு ஆல் நீழல் மேவிய ஈசன் பரங்குன்றைத்
தொண்டால் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே. 10

தட மலி பொய்கைச் சண்பை மன் ஞானசம்பந்தன்
படம் மலி நாகம் அரைக்கு அசைத்தான் தன் பரங்குன்றைத்
தொடை மலி பாடல்பத்தும் வல்லார் தம் துயர் போகி
விடம் மலி கண்டன் அருள் பெறும் தன்மை மிக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

306. திருக்கொடுங்குன்றம்

திருமுறை : 1/14 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை

இறைவர் : கொடுங்குன்றீசர் இறைவியார் : குயில்அமுதநாயகி

வானில் பொலிவு எய்தும் மழைமேகம் கிழித்து ஓடிக்
கூனல்பிறை சேரும் குளிர்சாரல் கொடுங்குன்றம்
ஆனில்பொலிஐந்தும் அமர்ந்து ஆடி உலகு ஏத்தத்
தேனின் பொலி மொழியாளொடும் மேயான் திரு நகரே. 1

மயில் புல்கு தண் பெடையோடு உடன்ஆடும் வளர் சாரல்
குயில் இன்இசை பாடும் குளிர்சோலைக் கொடுங்குன்றம்
அயில்வேல் மலி நெடு வெஞ்சுடர் அனல் ஏந்தி நின்று ஆடி
எயில் முன்பட எய்தான் அவன் மேய எழில் நகரே. 2

மிளிரும் மணி பைம்பொன்னொடு விரைமாமலர் உந்திக்
குளிரும்புனல் பாயும் குளிர்சாரல் கொடுங்குன்றம்
கிளர்கங்கையொடு இளவெண்மதி கெழுவும் சடை தன்மேல்
வளர் கொன்றையும் மதமத்தமும் வைத்தான் வளநகரே.3

பரு மா மதகரியோடு அரி இழியும் விரிசாரல்
குரு மா மணி பொன்னோடு இழி அருவிக் கொடுங்குன்றம்
பொரு மா எயில் வரைவில் தரு கணையின் பொடி செய்த
பெருமான் அவன் உமையாளொடும் மேவும்பெரு நகரே.4

மேகத்து இடி குரல் வந்து எழ வெருவி வரை இழியும்
கூகைக்குலம் ஓடித் திரி சாரல் கொடுங்குன்றம்
நாகத்தொடும் இளவெண்பிறை சூடும் நலமங்கை
பாகத்தவன் இமையோர் தொழ மேவும்பழ நகரே. 5

கைம்மாமதகரியின் இனம் இடியின் குரல் அதிரக்
கொய்ம் மா மலர்ச்சோலை புக மண்டும்கொடுங்குன்றம்
அம்மான் என உள்கித் தொழுவார்கட்கு அருள் செய்யும்
பெம்மான் அவன் இமையோர் தொழ மேவும் பெரு நகரே.6

மரவத்தொடு மணமாதவி மௌவல் அது விண்ட
குரவத்தொடு விரவும் பொழில் சூழ் தண் கொடுங்குன்றம்
அரவத்தொடும் இளவெண்பிறை விரவும் மலர்க்கொன்றை
நிரவச் சடைமுடிமேல் உடன்வைத்தான் நெடு நகரே. 7

முட்டா முது கரியின் இனம் முது வேய்களை முனிந்து
குட்டாச் சுனை அவை மண்டிநின்று ஆடும் கொடுங்குன்றம்
ஒட்டா அரக்கன்தன் முடி ஒருபஃதுஅவை உடனே
பிட்டான்அவன் உமையாளொடும் மேவும் பெரு நகரே. 8

அறையும் அரி குரல்ஓசையை அஞ்சி அடும் ஆனை
குறையும் மனம் ஆகி முழை வைகும் கொடுங்குன்றம்
மறையும் அவை உடையான் என நெடியான் என இவர்கள்
இறையும் அறிவு ஒண்ணாதவன் மேய எழில் நகரே. 9

மத்தக்களிறு ஆளிவ்வர அஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்இடை வைகும்கொடுங்குன்றம்
புத்தரொடு பொல்லா மனச் சமணர் புறம்கூறப்
பத்தர்க்கு அருள்செய்தான் அவன் மேய பழ நகரே. 10

கூனல்பிறை சடைமேல்மிக உடையான் கொடுங்குன்றக்
கானல் கழுமலமா நகர்த் தலைவன் நல கவுணி
ஞானத்து உயர் சம்பந்தன நலம் கொள் தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர் தீர்ந்து உலகு ஏத்தும் எழிலோரே. 11

திருச்சிற்றம்பலம்

307. திருப்புத்தூர்

திருமுறை : 1/26 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : திருத்தளிநாதர் இறைவியார் : சிவகாமிஅம்மை

வெங் கள் விம்மு வெறி ஆர் பொழில் சோலை
திங்களோடு திளைக்கும் திருப்புத்தூர்க்
கங்கை தங்கும் முடியார் அவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே. 1

வேனல் விம்மு வெறி ஆர் பொழில் சோலைத்
தேனும் வண்டும் திளைக்கும் திருப்புத்தூர்
ஊனம் இன்றி உறைவார்அவர்போலும்
ஏனமுள்ளும் எயிறும் புனைவாரே. 2

பாங்கு நல்ல வரிவண்டு இசை பாடத்
தேம் கொள் கொன்றை திளைக்கும் திருப்புத்தூர்
ஓங்குகோயில் உறைவார் அவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன்சடையாரே. 3

நாற விண்ட நறுமாமலர் கவ்வி
தேறல் வண்டு திளைக்கும் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை உடையார்அவர்போலும்
ஏறு கொண்ட கொடிஎம் இறையாரே. 4

இசை விளங்கும் எழில் சூழ்ந்து இயல்பாகத்
திசை விளங்கும் பொழில் சூழ் திருப்புத்தூர்
பசை விளங்கப் படித்தார் அவர்போலும்
வசை விளங்கும் வடி சேர் நுதலாரே. 5

வெண்நிறத்த விரையோடு அலர் உந்தித்
தெண்நிறத்த புனல் பாய் திருப்புத்தூர்
ஒண்நிறத்த ஒளியார் அவர்போலும்
வெண்நிறத்த விடை சேர் கொடியாரே. 6

நெய்தல் ஆம்பல் கழுநீர் மலர்ந்து எங்கும்
செய்கள் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாகம் மகிழ்ந்தார் அவர்போலும்
மையுண்நஞ்சம் மருவும் மிடற்றாரே. 7

கருக்கம்எல்லாம் கமழும் பொழில் சோலைத்
திருக் கொள் செம்மை விழவு ஆர் திருப்புத்தூர்
இருக்க வல்ல இறைவர் அவர்போலும்
அரக்கன் ஒல்க விரலால் அடர்த்தாரே. 8

மருவி எங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவுதோறும் திளைக்கும் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமான் அவன்போலும்
பிரமன்மாலும் அறியாப் பெரியோனே. 9

கூறை போர்க்கும் தொழிலார் அமண் கூறல்
தேறல் வேண்டா தெளிமின் திருப்புத்தூர்
ஆறும் நான்கும் அமர்ந்தார் அவர்போலும்
ஏறு கொண்ட கொடி எம் இறையாரே. 10

நல்ல கேள்வி ஞானசம்பந்தன்
செல்வர் சேடர் உறையும் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார்தமக்கு என்றும்
அல்லல் தீரும் அவலம் அடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

308. திருப்புனவாயில்

திருமுறை : 3/11 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்

இறைவர் : பழம்பதிநாதர் இறைவியார் : கருணைநாயகி

மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரி நூலினன்
பன்னிய நால்மறை பாடிஆடிப் பல ஊர்கள் போய்
அன்னம் அன்ன நடையாளொடும் அமரும் இடம்
புன்னை நல்மாமலர் பொன் உதிர்க்கும் புனவாயிலே. 1

விண்டவர்தம் புரம்மூன்று எரித்து விடை ஏறிப்போய்
வண்டு அமரும் குழல் மங்கையொடும் மகிழ்ந்தான் இடம்
கண்டலும் ஞாழலும் நின்று பெருங்கடல் கானல்வாய்ப்
புண்டரீகம்மலர்ப் பொய்கை சூழ்ந்த புனவாயிலே. 2

விடை உடை வெல் கொடி ஏந்தினானும் விறல் பாரிடம்
புடை பட ஆடிய வேடத்தானும் புனவாயிலில்
தொடை நவில் கொன்றை அம்தாரினானும் சுடர் வெண்மழுப்
படை வலன் ஏந்திய பால்நெய்ஆடும் பரமன் அன்றே. 3

சங்கவெண்தோடு அணி காதினானும் சடை தாழவே
அங்கை இலங்கு அழல் ஏந்தினானும்அழகாகவே
பொங்கு அரவம் அணி மார்பினானும் புனவாயிலில்
பைங்கண் வெள்ஏற்று அண்ணல்ஆகி நின்ற பரமேட்டியே.4

கலி படு தண்கடல் நஞ்சம் உண்ட கறைக்கண்டனும்
புலிஅதள் பாம்பு அரைச் சுற்றினானும் புனவாயிலில்
ஒலிதரு தண்புனலோடு எருக்கும் மதமத்தமும்
மெலிதரு வெண்பிறை சூடி நின்ற விடைஊர்தியே. 5

வார் உறு மென்முலை மங்கை பாட நடம்ஆடிப் போய்க்
கார் உறு கொன்றை வெண் திங்களானும் கனல் வாயது ஓர்
போர் உறு வெண்மழு ஏந்தினானும் புனவாயிலில்
சீர் உறு செல்வம் மல்க இருந்த சிவலோகனே. 6

பெருங்கடல்நஞ்சு அமுதுஉண்டு உகந்து பெருங்காட்டு இடைத்
திருந்து இளமென்முலைத் தேவி பாடந் நடம்ஆடிப் போய்ப்
பொருந்தலர் தம் புரம்மூன்றும் எய்து புனவாயிலில்
இருந்தவன் தன்கழல் ஏத்துவார்கட்கு இடர் இல்லையே.7

மனம் மிகு வேலன் அவ் வாள் அரக்கன் வலி ஒல்கிட
வனம் மிகு மால்வரையால் அடர்த்தான் இடம் மன்னிய
இனம் மிகு தொல்புகழ் பாடல் ஆடல் எழில் மல்கிய
புனம் மிகு கொன்றை அம் தென்றல் ஆர்ந்த புனவாயிலே.8

திரு வளர் தாமரை மேவினானும் திகழ் பாற்கடல்
கருநிறவண்ணனும் காண்பு அரிய கடவுள் இடம்
நரல் சுரிசங்கொடும் இப்பி உந்தி நலம் மல்கிய
பொருகடல் வெண்திரை வந்து எறியும் புனவாயிலே. 9

போதி எனப் பெயர் ஆயினாரும் பொறியில் சமண்
சாதி உரைப்பன கொண்டு அயர்ந்து தளர்வு எய்தன் மின்
போது அவிழ் தண்பொழில் மல்கும் அம் தண் புனவாயிலில்
வேதனை நாள்தொறும் ஏத்துவார் மேல்வினை வீடுமே.10

பொன் தொடியாள்உமை பங்கன் மேவும் புனவாயிலைக்
கற்றவர்தாம் தொழுது ஏத்த நின்ற கடல் காழியான்
நல் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் நன்மையால்
அற்றம் இல் பாடல்பத்து ஏத்த வல்லார் அருள் சேர்வரே.11

திருச்சிற்றம்பலம்

309. திரு இராமேச்சுரம்

திருமுறை : 3/10 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : இராமநாதர் இறைவியார் : மலைவளர்காதலி, பர்வதவர்தனி

அலை வளர் தண்மதியோடு அயலே அடக்கி உமை
முலை வளர் பாகம் முயங்க வல்ல முதல்வன் முனி
இலை வளர் தாழைகள் விம்மு கானல் இராமேச்சுரம்
தலை வளர் கோல நல் மாலையன்தான் இருந்து ஆட்சியே.1

தேவியை வவ்விய தென் இலங்கைத் தசமாமுகன்
பூ இயலும் முடி பொன்றுவித்த பழி போய் அற
ஏ இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்மேல் வினை வீடுமே. 2

மான் அன நோக்கியை தேவிதன்னை ஒரு மாயையால்
கான்அதில் வவ்விய கார்அரக்கன் உயிர் செற்றவன்
ஈனம் இலாப் புகழ் அண்ணல் செய்த இராமேச்சுரம்
ஞானமும் நன்பொருள் ஆகி நின்றது ஒரு நன்மையே. 3

உரை உணராதவன் காமம் என்னும் உறு வேட்கையான்
வரை பொரு தோள் இறச் செற்ற வில்லி மகிழ்ந்து ஏத்திய
விரை மருவும் கடல்ஓதம் மல்கும் இராமேச்சுரத்து
அரை அரவு ஆட நின்று ஆடல் பேணும் அம்மான் அல்லனே.4

ஊறு உடை வெண்தலை கையில் ஏந்தி பலஊர்தொறும்
வீறு உடை மங்கையர் ஐயம் பெய்ய விறல் ஆர்ந்தது ஓர்
ஏறு உடை வெல் கொடி எந்தை மேய இராமேச்சுரம்
பேறு உடையான் பெயர் ஏத்தும் மாந்தர் பிணி பேருமே.5

அணை அலை சூழ் கடல் அன்று அடைத்து வழி செய்தவன்
பணை இலங்கும் முடிபத்து இறுத்த பழி போக்கிய
இணைஇலி என்றும் இருந்த கோயில் இராமேச்சுரம்
துணைஇலி தூ மலர்ப்பாதம் ஏத்த துயர் நீங்குமே. 6

சனி புதன் ஞாயிறு வெள்ளி திங்கள் பல தீயன
முனிவது செய்து உகந்தானை வென்ற அவ் வினை மூடிட
இனி அருள் நல்கிடு என்று அண்ணல் செய்த இராமேச்சுரம்
பனிமதி சூடி நின்று ஆட வல்ல பரமேட்டியே. 7

பெருவரை அன்று எடுத்து ஏந்தினான்தன் பெயர் சாய் கெட
அரு வரையால் அடர்த்து அன்று நல்கி அயன் மால் எனும்
இருவரும் நாடி நின்று ஏத்து கோயில் இராமேச்சுரத்து
ஒருவனுமே பல ஆகி நின்றது ஒரு வண்ணமே. (8 –9)


சாக்கியர் வன் சமண்கையர் மெய்யில் தடுமாற்றத்தார்
வாக்கு இயலும் உரை பற்று விட்டு மதி ஒண்மையால்
ஏக்கு இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
ஆக்கிய செல்வனை ஏத்தி வாழ்மின் அருள் ஆகவே. 10

பகலவன் மீது இயங்காமைக் காத்த பதியோன் தனை
இகல் அழிவித்தவன் ஏத்து கோயில் இராமேச்சுரம்
புகலியுள் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் புந்தியால்
அகலிடம் எங்கும் நின்று ஏத்த வல்லார்க்கு இல்லை அல்லலே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

சந்தனப் பொதியச் செந்தமிழ் நாட்டில் நின்றசீர் நெடுமாறர், பாண்டி மாதேவியார், குலச்சிறையார் என்னும் இவர்களோடு திருநெல்வேலி முதலாகிய திருப்பதிகளை வணங்கிய சிரபுரச்செல்வர், விண்ணவரைச் செற்றுகந்தான் இலங்கைசெற்ற மிக்க பெரும் பாதகத்தை நீக்க வேண்டி, திண்ணிய பொற் சிலைத் தடக்கை இராமன் செய்த திருஇராமேச்சுரத்தை அடைந்து திருக்கோயிலிற் சென்று இறைவனை வணங்கி இப்பதிகமெடுத்துப் பல திருப்பாட்டுக்களில் சேதுவின்கண் செங்கண்மால் செய்த பூசையினைச் சிறப்பித்துப் பாடி ஆண்டெழுந்தருளி இருந்தே ஈழநாட்டின் கண் உள்ளனவாய திருக்கோணமாமலை, திருக்கேதீச்சரம் என்னுந் திருப்பதிகளைப் பாடித் திருக்கூட்டத்துடன் அளவளாவியிருந்தார்.



310. திருஇராமேச்சுரம்

திருமுறை : 3/101 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

திரிதரு மா மணி நாகம் ஆடத் திளைத்து ஒரு தீ அழல்வாய்
நரி கதிக்க எரி ஏந்தி ஆடும் நலமே தெரிந்து உணர்வார்
எரி கதிர் முத்தம் இலங்கு கானல் இராமேச்சுரம் மேய
விரி கதிர் வெண்பிறை மல்கு சென்னி விமலர் செயும்செயலே.1

பொறி கிளர் பாம்பு அரை ஆர்த்து அயலே புரிவோடு உமைபாடத்
தெறி கிளரப் பெயர்ந்து எல்லி ஆடும் திறமே தெரிந்து உணர்வார்
எறி கிளர் வெண்திரை வந்து பேரும் இராமேச்சுரம் மேய
மறி கிளர் மான் மழுப் புல்கு கை எம் மணாளர் செயும்செயலே.2

அலை வளர் தண்புனல் வார்சடைமேல் அடக்கி ஒருபாகம்
மலை வளர் காதலி பாட ஆடி மயக்கா வரு மாட்சி
இலை வளர் தாழை முகிழ் விரியும் இராமேச்சுரம் மேயார்
தலை வளர் கோல நல் மாலை சூடும் தலைவர் செயும் செயலே 3

மா தன நேர் இழை ஏர் தடங்கண் மலையான்மகள் பாடத்
தேது எரி அங்கையில் ஏந்தி ஆடும் திறமே தெரிந்து உணர்வார்
ஏதம்இலார் தொழுது ஏத்தி வாழ்த்தும் இராமேச்சுரம் மேயார்
போது வெண் திங்கள் பைங்கொன்றை சூடும் புனிதர் செயும் செயலே. 4

சூலமோடு ஒண்மழு நின்று இலங்கச் சுடுகாடு இடம்ஆகக்
கோல நல் மாது உடன் பாட ஆடும் குணமே குறித்து உணர்வார்
ஏல நறும்பொழில் வண்டு பாடும் இராமேச்சுரம் மேய
நீலம் ஆர் கண்டம் உடைய எங்கள் நிமலர் செயும் செயலே. 5

கணை பிணை வெஞ்சிலை கையில் ஏந்திக் காமனைக் காய்ந்தவர் தாம்
இணை பிணைநோக்கி நல்லாளொடு ஆடும் இயல்பினர்ஆகி நல்ல
இணைமலர்மேல் அன்னம் வைகு கானல் இராமேச்சுரம் மேயார்
அணை பிணை புல்கு கரந்தை சூடும் அடிகள் செயும் செயலே.6

நீரின் ஆர் புன்சடை பின்பு தாழ நெடு வெண்மதி சூடி
ஊரினார் துஞ்சு இருள் பாடி ஆடும் உவகை தெரிந்து உணர்வார்
ஏரின் ஆர் பைம்பொழில் வண்டு பாடும் இராமேச்சுரம் மேய
காரின் ஆர் கொன்றை வெண்திங்கள் சூடும் கடவுள் செயும் செயலே. 7

பொன் திகழ் சுண்ணவெண் நீறு பூசி புலித்தோல் உடைஆக
மின் திகழ் சோதியர் பாடல்ஆடல் மிக்கார் வரு மாட்சி
என்றும் நல்லோர்கள் பரவி ஏத்தும் இராமேச்சுரம் மேயார்
குன்றினால் அன்று அரக்கன் தடந்தோள் அடர்த்தார்கொளும் கொள்கையே. 8

கோவலன் நான்முகன் நோக்க ஒணாத குழகன் அழகாய
மேவலன் ஒள்எரி ஏந்தி ஆடும் இமையோர்இறை மெய்ம்மை
ஏவலனார் புகழ்ந்து ஏத்தி வாழ்த்தும் இராமேச்சுரம் மேய
சே வல வெல் கொடி ஏந்து கொள்கை எம்இறைவர் செயும்செயலே. 9

பின்னொடு முன் இடு தட்டைச் சாத்திப் பிரட்டே திரிவாரும்
பொன் நெடுஞ் சீவரப் போர்வையார்கள் புறம்கூறல் கேளாதே
இன் நெடுஞ் சோலை வண்டு யாழ்முரலும் இராமேச்சுரம்மேய
பல் நெடு வெண்தலை கொண்டு உழலும் பரமர் செயும்செயலே.10

தேவியை வவ்விய தென்இலங்கை அரையன் திறல் வாட்டி
ஏ இயல் வெஞ்சிலை அண்ணல்நண்ணும் இராமேச்சுரத்தாரை
நா இயல் ஞானசம்பந்தன் நல்ல மொழியால் நவின்றுஏத்தும்
பா இயல் மாலை வல்லார் அவர்தம் வினைஆயின பற்றுஅறுமே. 11

திருச்சிற்றம்பலம்

311. திரு ஆடானை

திருமுறை : 2/112 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : ஆடானைநாதர் இறைவியார் : அம்பாயிர வல்லி

மாது ஓர்கூறு உகந்து ஏறுஅது ஏறிய
ஆதியான் உறை ஆடானை
போதினால் புனைந்து ஏத்துவார் தமை
வாதியா வினை மாயுமே. 1

வாடல்வெண்தலை அங்கை ஏந்தி நின்று
ஆடலான் உறை ஆடானை
தோடு உலாம் மலர் தூவிக் கைதொழ
வீடும் நுங்கள் வினைகளே. 2

மங்கை கூறினன் மான்மறி உடை
அம் கையான் உறை ஆடானை
தம் கையால் தொழுது ஏத்த வல்லவர்
மங்கு நோய் பிணி மாயுமே. 3

சுண்ணநீறு அணி மார்பில் தோல் புனை
அண்ணலான் உறை ஆடானை
வண்ண மா மலர் தூவிக் கைதொழ
எண்ணுவார் இடர் ஏகுமே. 4

கொய் அணி மலர்க்கொன்றை சூடிய
ஐயன் மேவிய ஆடானை
கை அணி மலரால் வணங்கிட
வெய்ய வல்வினை வீடுமே. 5

வான் இளம் மதி மல்கு வார்சடை
ஆன் அஞ்சு ஆடலன் ஆடானை
தேன் அணி மலர் சேர்த்த முன் செய்த
ஊனம் உள்ள ஒழியுமே. 6

துலங்கு வெண்மழு ஏந்திச் சூழ்சடை
அலங்கலான் உறை ஆடானை
நலம் கொள் மா மலர் தூவி நாள்தொறும்
வலம்கொள்வார் வினை மாயுமே. 7

வெந்தநீறு அணி மார்பில் தோல் புனை
அந்தம் இல்லவன் ஆடானை
கந்தமாமலர் தூவிக் கைதொழும்
சிந்தையார் வினை தேயுமே. 8

மறைவலாரொடு வானவர் தொழுது
அறையும் தண்புனல் ஆடானை
உறையும் ஈசனை ஏத்தத் தீவினை
பறையும் நல்வினை பற்றுமே. 9

மாயனும் மலரானும் கைதொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மா மலர் தூவிக் கைதொழத்
தீய வல்வினை தீருமே. 10

வீடினார் மலி வெங்கடத்து நின்று
ஆடலான் உறை ஆடானை
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ்
பாட நோய் பிணி பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

312. திருக்கானப்பேர்

திருமுறை : 3/26 பண் : கொல்லி இராகம் : நவரோசு
இறைவர் : சோமேசுவரர் காளீசுவரர், சுந்தரேசுவரர்
இறைவியார் : சௌந்தரநாயகிஅம்மை சொர்ணவல்லிஅம்மை மீனாட்சிஅம்மை

பிடிஎலாம் பின் செலப் பெருங்கைமா மலர் தழீஇ
விடியலே தடம் மூழ்கி விதியினால் வழிபடும்
கடி உலாம் பூம்பொழில் கானப்பேர் அண்ணல் நின்
அடிஅலால் அடை சரண் உடையரோ அடியரே. 1

நுண்இடைப் பேர்அல்குல் நூபுரம் மெல்அடிப்
பெண்ணின்நல்லாளை ஓர்பாகமாப் பேணினான்
கண் உடை நெற்றியான் கருதிய கானப்பேர்
விண் இடை வேட்கையார் விரும்புதல் கருமமே. 2

வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டுஇனம்
காவிவாய்ப் பண்செயும் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவி வாய்ப் பெய்து நின்று ஆட்டுவார் தொண்டரே. 3

நிறை உடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறை உடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறை உடை மிடற்று அண்ணல் கருதிய கானப்பேர்
குறை உடையவர்க்கு அலால் களைகிலார் குற்றமே. 4

ஏனப் பூண் மார்பின்மேல் என்பு பூண்டு ஈறுஇலா
ஞானப் பேர் ஆயிரம்பேரினான் நண்ணிய
கானப்பேர்ஊர் தொழும் காதலார் தீது இலர்
வானப்பேர் ஊர் புகும் வண்ணமும் வல்லரே. 5

பள்ளமே படர்சடைப் பால் படப் பாய்ந்த நீர்
வெள்ளமே தாங்கினான் வெண்மதி சூடினான்
கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்கும் என் உள்ளமே. 6

மான மா மடப்பிடி வன் கையால் அலகுஇடக்
கானம் ஆர் கடகரி வழிபடும் கானப்பேர்
ஊனம் ஆம் உடம்பினில் உறு பிணி கெட எண்ணில்
ஞானம் ஆம் மலர்கொடு நணுகுதல் நன்மையே. 7

வாளினான் வேலினான் மால்வரை எடுத்த திண்
தோளினான் நெடு முடி தொலையவே ஊன்றிய
தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளும் நாள் உயர்வது ஓர் நன்மையைப் பெறுவரே. 8

சிலையினால் முப்புரம் தீ எழச் செற்றவன்
நிலை இலா இருவரை நிலைமை கண்டு ஓங்கினான்
கலையின் ஆர் புறவில் தேன் கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவம் உடையார்களே. 9

உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்து உச்சி
பறித்தலும் போர்த்தலும் பயன் இலை பாவிகாள்
மறித் தலை மடப்பிடி வளர் இனங் கொழுங் கொடி
கறித்து எழு கானப்பேர் கைதொழல் கருமமே. 10

காட்டுஅகத்து ஆடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத்து இள வரால் குதிகொளும் காழியான்
நாட்டுஅகத்து ஓங்கு சீர் ஞானசம்பந்தன
பாட்டுஅகத்து இவை வலார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

313. திருப்பூவணம்

திருமுறை : 1/64 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

அறை ஆர் புனலும் மா மலரும் ஆடுஅரவு ஆர் சடைமேல்
குறை ஆர் மதியம் சூடி மாது ஓர்கூறு உடையான் இடம்ஆம்
முறையால் முடி சேர் தென்னர் சேரர் சோழர்கள்தாம் வணங்கும்
திறை ஆர் ஒளி சேர் செம்மை ஓங்கும் தென்திருப்பூவணமே.1

மருவார் மதில்மூன்று ஒன்ற எய்து மாமலையான் மடந்தை
ஒருபால் பாகம்ஆகச் செய்த உம்பர்பிரான் அவன் ஊர்
கரு ஆர் சாலி ஆலை மல்கிக் கழல் மன்னர் காத்து அளித்த
திருவால் மலிந்த சேடர் வாழும் தென்திருப்பூவணமே. 2

போர் ஆர் மதமா உரிவை போர்த்துப் பொடி அணி மேனியனாய்க்
கார் ஆர் கடலில் நஞ்சம் உண்ட கண்ணுதல் விண்ணவன் ஊர்
பார் ஆர் வைகைப் புனல் வாய் பரப்பிப் பல்மணி பொன் கொழித்துச்
சீர் ஆர் வாரி சேர நின்ற தென்திருப்பூவணமே. 3

கடி ஆர் அலங்கல்கொன்றை சூடிக் காதில் ஓர் வார்குழையன்
கொடி ஆர் வெள்ளைஏறு உகந்த கோவணவன் இடமாம்
படியார் கூடி நீடி ஓங்கும் பல்புகழால் பரவச்
செடி ஆர் வைகை சூழ நின்ற தென்திருப்பூவணமே. 4

கூர் ஆர் வாளி சிலையில் கோத்துக் கொடிமதில் கூட்டுஅழித்த
போர் ஆர் வில்லி மெல்லியலாள் ஓர்பால் மகிழ்ந்தான் இடமாம்
ஆரா அன்பில் தென்னர்சேரர்சோழர்கள் போற்றிஇசைப்ப
தேர் ஆர் வீதி மாடம் நீடும் தென்திருப்பூவணமே. 5

நன்று தீது என்று ஒன்று இலாத நால்மறையோன் கழலே
சென்று பேணி ஏத்த நின்ற தேவர்பிரான் இடமாம்
குன்றில் ஒன்றி ஓங்க மல்கு குளிர்பொழில் சூழ் மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றில் ஆரும் தென்திருப்பூவணமே.6

பைவாய்அரவம் அரையில் சாத்திப் பாரிடம் போற்றுஇசைப்ப
மெய் வாய் மேனி நீறு பூசி ஏறு உகந்தான் இடமாம்
கை வாழ் வளையார் மைந்தரோடும் கலவியினால் நெருங்கிச்
செய்வார் தொழிலின் பாடல் ஓவாத் தென்திருப்பூவணமே. 7

மாட வீதி மன் இலங்கை மன்னனை மாண்புஅழித்துக்
கூட வென்றிவாள் கொடுத்துஆள் கொள்கையினார்க்கு இடமாம்
பாடலோடும் ஆடல் ஓங்கிப் பல்மணி பொன் கொழித்து
ஓட நீரால் வைகை சூழும் உயர்திருப்பூவணமே. 8

பொய்யா வேத நாவினானும் பூமகள்காதலனும்
கையால் தொழுது கழல்கள் போற்றக் கனல்எரிஆனவன் ஊர்
மை ஆர் பொழிலின் வண்டு பாட வைகை மணி கொழித்துச்
செய் ஆர் கமலம் தேன் அரும்பும் தென்திருப்பூவணமே.9

அலை ஆர் புனலை நீத்தவரும் தேரரும் அன்பு செய்யா
நிலையா வண்ணம் மாயம் வைத்த நின்மலன்தன் இடமாம்
மலைபோல் துன்னி வென்றி ஓங்கும் மாளிகை சூழ்ந்து அயலே
சிலை ஆர் புரிசை பரிசு பண்ணும் தென்திருப்பூவணமே.10

திண் ஆர் புரிசை மாடம் ஓங்கும் தென்திருப்பூவணத்துப்
பெண் ஆர் மேனி எம் இறையைப் பேர் இயல் இன்தமிழால்
நண்ணார் உட்கக் காழி மல்கும் ஞானசம்பந்தன் சொன்ன
பண் ஆர் பாடல்பத்தும் வல்லார் பயில்வது வான்இடையே. 11

திருச்சிற்றம்பலம்

314. திருப்பூவணம்

திருமுறை : 3/20 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : பூவணநாதர் இறைவியார் : மின்னம்மை

மாது அமர் மேனியன் ஆகி வண்டொடு
போது அமர் பொழில் அணி பூவணத்து உறை
வேதனை விரவலர் அரணம்மூன்று எய்த
நாதனை அடிதொழ நன்மை ஆகுமே. 1

வான் அணி மதி புல்கு சென்னி வண்டொடு
தேன் அணி பொழில் திருப்பூவணத்து உறை
ஆன நல் அருமறை அங்கம் ஓதிய
ஞானனை அடிதொழ நன்மை ஆகுமே. 2

வெந்துயர் உறு பிணி வினைகள் தீர்வது ஓர்
புந்தியர் தொழுது எழு பூவணத்து உறை
அந்தி வெண்பிறையினோடு ஆறு சூடிய
நந்தியை அடி தொழ நன்மை ஆகுமே. 3

வாசநல்மலர் மலி மார்பில் வெண்பொடிப்
பூசனைப் பொழில் திகழ் பூவணத்துஉறை
ஈசனை மலர் புனைந்து ஏத்துவார் வினை
நாசனை அடி தொழ நன்மை ஆகுமே. 4

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழில் திருப்பூவணத்து உறை
அருந் திறல் அவுணர்தம் அரணம்மூன்று எய்த
பெருந்தகை அடி தொழப் பீடை இல்லையே. 5

வெறி கமழ் புன்னை பொன்ஞாழல் விம்மிய
பொறிஅரவு அணி பொழில் பூவணத்துஉறை
கிறிபடும் உடையினன் கேடுஇல் கொள்கையன்
நறுமலர் அடி தொழ நன்மை ஆகுமே. 6

பறை மல்கு முழவொடு பாடல் ஆடலன்
பொறை மல்கு பொழில் அணி பூவணத்துஉறை
மறை மல்கு பாடலன் மாது ஓர் கூறினன்
அறை மல்கு கழல் தொழ அல்லல் இல்லையே. 7

வரைதனை எடுத்த வல்அரக்கன் நீள்முடி
விரல்தனில் அடர்த்தவன் வெள்ளைநீற்றினன்
பொரு புனல் புடை அணி பூவணம்தனைப்
பரவிய அடியவர்க்கு இல்லை பாவமே. 8

நீர் மல்கு மலர் உறைவானும் மாலும்ஆய்ச்
சீர் மல்கு திருந்து அடி சேரகிற்கிலர்
போர் மல்கு மழுவினன் மேய பூவணம்
ஏர் மல்கு மலர் புனைந்து ஏத்தல் இன்பமே. 9

மண்டை கொண்டு உழிதரு மதி இல் தேரரும்
குண்டரும் குணம் அல பேசும் கோலத்தர்
வண்டு அமர் வளர் பொழில் மல்கு பூவணம்
கண்டவர் அடி தொழுது ஏத்தல் கன்மமே. 10

புண்ணியர் தொழுது எழு பூவணத்து உறை
அண்ணலை அடி தொழுது அம் தண் காழியுள்
நண்ணிய அருமறை ஞானசம்பந்தன்
பண்ணிய தமிழ் சொலப் பறையும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

315. திருக்குற்றாலம்

திருமுறை : 1/99 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

இறைவர் : கூத்தர் இறைவியார் : சிவகாமிஅம்மை

வம்பு ஆர் குன்றம் நீடுஉயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பு ஆர் சோலைக் கோல வண்டு யாழ்செய் குற்றாலம்
அம் பால் நெய்யோடு ஆடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான் மேய நன்நகர் போலும் நமரங்காள். 1

பொடிகள் பூசித் தொண்டர் பின் செல்லப் புகழ் விம்மக்
கொடிகளோடும் நாள்விழ மல்கு குற்றாலம்
கடி கொள் கொன்றை கூவிள மாலை காதல்செய்
அடிகள் மேய நன்நகர்போலும் அடியீர்காள். 2

செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்று ஏறிக்
கொல்லை முல்லை மெல்அரும்பு ஈனும் குற்றாலம்
வில்லின் ஒல்க மும்மதில் எய்து வினை போக
நல்கும் நம்பான் நன்நகர் போலும் நமரங்காள். 3

பக்கம் வாழைப் பாய் கனியோடு பலவின் தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்
அக்கும் பாம்பும் ஆமையும் பூண்டோர் அனல் ஏந்தும்
நக்கன் மேய நன்நகர் போலும் நமரங்காள். 4

மலை ஆர் சாரல் மகஉடன் வந்த மடமந்தி
குலை ஆர் வாழைத் தீம்கனி மாந்தும் குற்றாலம்
இலை ஆர் சூலம் ஏந்திய கையால் எயில் எய்த
சிலையான் மேய நன்நகர்போலும் சிறுதொண்டீர். 5

மைம்மா நீலக்கண்ணியர் சாரல் மணி வாரிக்
கொய்ம் மா ஏனல் உண் கிளி ஓப்பும் குற்றாலம்
கைம்மாவேழத்து ஈர்உரி போர்த்த கடவுள் எம்
பெம்மான் மேய நன்நகர்போலும் பெரியீர்காள். 6

நீலம் நெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள் சோலைக்
கோல மஞ்ஞை பேடையொடு ஆடும் குற்றாலம்
காலன் தன்னைக் காலால் காய்ந்த கடவுள் எம்
சூலபாணி நன்நகர்போலும் தொழுவீர்காள். 7

போதும் பொன்னும் உந்தி அருவி புடை சூழக்
கூதல் மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்
மூதூர் இலங்கை முட்டிய கோனை மிறைசெய்த
நாதன் மேய நன்நகர்போலும் நமரங்காள். 8

அரவின் வாயின் முள்எயிறு ஏய்ப்ப அரும்பு ஈன்று
குரவம்பாவை முருகு அமர் சோலைக் குற்றாலம்
பிரமன்னோடு மால் அறியாத பெருமை எம்
பரமன் மேய நன்நகர்போலும் பணிவீர்காள். 9

பெருந் தண்சாரல் வாழ் சிறைவண்டு பெடை புல்கிக்
குருந்தம் ஏறிச் செவ்வழி பாடும் குற்றாலம்
இருந்து உண் தேரும் நின்று உண் சமணும் எடுத்து ஆர்ப்ப
அருந் தண் மேய நன்நகர் போலும் அடியீர்காள். 10

மாட வீதி வருபுனல் காழியார்மன்னன்
கோடல் ஈன்று கொழு முனை கூம்பும் குற்றாலம்
நாட வல்ல நல்தமிழ்ஞான சம்பந்தன்
பாடல்பத்தும் பாட நம் பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

316. திருக்குறும்பலா

திருமுறை : 2/71 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : குறும்பலாநாதர் இறைவியார் : குழல்வாய்மொழி அம்மை

திருந்த மதி சூடித் தெண்நீர்சடைக் கரந்து தேவி பாகம்
பொருந்திப் பொருந்தாத வேடத்தால் காடு உறைதல் புரிந்த செல்வர்
இருந்த் இடம் வினவில் ஏலம் கமழ் சோலை இன வண்டு யாழ்செய்
குருந்த மணம் நாறும் குன்றுஇடம் சூழ் தண்சாரல் குறும்பலாவே. 1

நாள்பலவும் சேர் மதியம் சூடிப் பொடி அணிந்த நம்பான் நம்மை
ஆள்பலவும் தான் உடைய அம்மான் இடம்போலும் அம் தண்சாரல்
கீள் பலவும் கீண்டு கிளைகிளையன் மந்தி பாய்ந்து உண்டு விண்ட
கோள் பலவின் தீம்கனியை மாக் கடுவன் உண்டு உகளும் குறும்பலாவே. 2

வாடல் தலைமாலை சூடிப் புலித்தோல் வலித்து வீக்கி
ஆடல் அரவு அசைத்த அம்மான் இடம்போலும் அம் தண்சாரல்
பாடல் பெடைவண்டு போது அலர்த்தத் தாது அவிழ்ந்து பசும்பொன் உந்திக்
கோடல் மணம் கமழும் குன்றுஇடம் சூழ் தண்சாரல் குறும்பலாவே. 3

பால்வெண்மதி சூடிப் பாகத்து ஓர் பெண் கலந்து பாடி ஆடிக்
காலன் உடல் கிழியக் காய்ந்தார் இடம்போலும் கல் சூழ் வெற்பில்
நீலமலர்க்குவளை கண்திறக்க வண்டு அரற்றும் நெடுந் தண்சாரல்
கோல மடமஞ்ஞை பேடையொடு ஆட்டு அயரும் குறும்பலாவே.4

தலை வாள்மதியம் கதிர் விரியத் தண்புனலைத் தாங்கித் தேவி
முலை பாகம் காதலித்த மூர்த்தி இடம்போலும் முது வேய் சூழ்ந்த
மலைவாய் அசும்பு பசும்பொன் கொழித்து இழியும் மல்கு சாரல்
குலைவாழைத் தீம்கனியும் மாங்கனியும் தேன் பிலிற்றும் குறும்பலாவே.5

நீற்று ஏர் துதைந்து இலங்கு வெண்நூலர் தண்மதியர் நெற்றிக்கண்ணர்
கூற்று ஏர் சிதையக் கடிந்தார் இடம்போலும் குளிர் சூழ் வெற்பில்
ஏற்றுஏனம் ஏனம் இவையோடு அவை விரவி இழி பூஞ்சாரல்
கோல் தேன் இசை முரலக் கேளா குயில் பயிலும் குறும்பலாவே. 6

பொன் றொத்த கொன்றையும் பிள்ளைமதியும் புனலும் சூடிப்
பின் றொத்த வார்சடை எம்பெம்மான் இடம்போலும் பிலயம் தாங்கி
மன்றத்து மண்முழவம் ஓங்கி மணி கொழித்து வயிரம் உந்திக்
குன்றத்து அருவி அயலே புனல் ததும்பும் குறும்பலாவே.7

ஏந்து திணி திண்தோள் இராவணனை மால்வரைக்கீழ் அடர ஊன்றிச்
சாந்தம் என நீறு அணிந்த சைவர் இடம்போலும் சாரல்சாரல்
பூந் தண் நறு வேங்கைக் கொத்து இறுத்து மத்தகத்தில் பொலிய ஏந்திக்
கூந்தல்பிடியும் களிறும் உடன் வணங்கும் குறும்பலாவே. 8

அரவின்அணையானும் நான்முகனும் காண்பு அரிய அண்ணல் சென்னி
விரிவி மதி அணிந்த விகிர்தர்க்கு இடம்போலும் விரிபூஞ்சாரல்
மரவம் இருகரையும் மல்லிகையும் சண்பகமும் மலர்ந்து மாந்தக்
குரவம் முறுவல்செய்யும் குன்றுஇடம் சூழ் தண்சாரல் குறும்பலாவே. 9

மூடிய சீவரத்தர் முன்கூறு உண்டு ஏறுதலும் பின்கூறு உண்டு
காடி தொடு சமணைக் காய்ந்தார் இடம்போலும் கல் சூழ் வெற்பில்
நீடு உயர் வேய் குனியப் பாய் கடுவன் நீள்கழைமேல் நிருத்தம் செய்யக்
கூடிய வேடுவர்கள் கூய் விளியாக் கை மறிக்கும் குறும்பலாவே.10

கொம்பு ஆர் பூஞ்சோலைக் குறும்பலா மேவிய கொல் ஏற்று அண்ணல்
நம்பான் அடிபரவும் நால்மறையான் ஞானசம்பந்தன் சொன்ன
இன்புஆய பாடல் இவைபத்தும் வல்லார் விரும்பிக் கேட்பார்
தம்பால தீ வினைகள் போய் அகலும் நல்வினைகள் தளராஅன்றே.11

திருச்சிற்றம்பலம்

317. திருநெல்வேலி

திருமுறை : 3/92 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : நெல்லையப்பர் இறைவியார் : காந்திமதிஅம்மை

மருந்து அவை மந்திரம் மறுமை நன்நெறி அவை மற்றும்எல்லாம்
அருந்துயர் கெடும் அவர் நாமமே சிந்தைசெய் நன்நெஞ்சமே
பொருந்து தண்புறவினில் கொன்றை பொன் சொரிதரத் துன்று பைம்பூஞ்
செருந்தி செம்பொன்மலர் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.1

என்றும் ஓர் இயல்பினர் என நினைவு அரியவர் ஏறுஅது ஏறிச்
சென்று தாம் செடிச்சியர் மனைதொறும் பலிகொளும் இயல்பு அதுவே
துன்று தண்பொழில் நுழைந்து எழுவிய கேதகைப்போது அளைந்து
தென்றல் வந்து உலவிய திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.2

பொறி கிளர் அரவமும் போழ்இளமதியமும் கங்கை என்னும்
நெறி படு குழலியைச் சடைமிசைச் சுலவி வெண்நீறு பூசிக்
கிறிபட நடந்து நல் கிளிமொழியவர் மனம் கவர்வர் போலும்
செறி பொழில் தழுவிய திரு நெல்வேலி உறை செல்வர்தாமே. 3

காண் தகு மலைமகள் கதிர் நிலாமுறுவல்செய்து அருளவேயும்
பூண்ட நாகம் புறங்காடு அரங்கா நடம் ஆடல்பேணி
ஈண்டு மா மாடங்கள் மாளிகை மீது எழு கொடி மதியம்
தீண்டி வந்து உலவிய திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.4

ஏனவெண்கொம்பொடும் எழில் திகழ் மத்தமும் இள அரவும்
கூனல்வெண்பிறை தவழ் சடையினர் கொல் புலித் தோல்உடையார்
ஆனின்நல்ஐந்து உகந்து ஆடுவர் பாடுவர் அருமறைகள்
தேனில் வண்டு அமர் பொழில் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.5

வெடிதருதலையினர் வேனல் வெள் ஏற்றினர் விரிசடையர்
பொடி அணி மார்பினர் புலிஅதள்ஆடையர் பொங்கு அரவர்
வடிவு உடை மங்கை ஓர்பங்கினர் மாதரை மையல் செய்வார்
செடி படு பொழில் அணி திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.6

அக்கு உலாம் அரையினர் திரை உலாம் முடியினர் அடிகள் அன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார் கதிர் கொள் செம்மை
புக்கது ஓர் புரிவினர் வரி தரு வண்டு பண் முரலும் சோலைத்
திக்கு எலாம் புகழ் உறும் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.7

முந்தி மா விலங்கல் அன்று எடுத்தவன் முடிகள் தோள் நெரிதரவே
உந்தி மா மலர் அடி ஒருவிரல்உகிர்நுதியால் அடர்த்தார்
கந்தம் ஆர் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத் திவலை
சிந்துபூந்துறை கமழ் திருநெல்வேலி உறை செல்வர்தாமே.8

பைங்கண்வாள் அரவுஅணையவனொடு பனி மலரோனும் காணா
அங்கணா அருள் என அவர்அவர் முறைமுறை இறைஞ்ச நின்றார்
சங்க நால்மறையவர் நிறைதர அரிவையர் ஆடல் பேணத்
திங்கள் நாள் விழ மல்கு திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.9

துவர் உறு விரி துகில்ஆடையர் வேடம் இல் சமணர் என்னும்
அவர் உறு சிறுசொலை அவம் என நினையும் எம் அண்ணலார்தாம்
கவர் உறு கொடி மல்கு மாளிகைச் சூளிகை மயில்கள் ஆலத்
திவர் உறு மதி தவழ் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே. 10

பெருந் தண் மா மலர்மிசை அயன்அவன் அனையவர் பேணுகல்வித்
திருந்து மா மறையவர் திரு நெல்வேலி உறை செல்வர்தம்மைப்
பொருந்து நீர்த்தடம் மல்கு புகலியுள் ஞானசம்பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடி ஆட கெடும் அருவினையே.11

திருச்சிற்றம்பலம்

318. திருநணா (பவானி)

திருமுறை : 2/72 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : சங்கமுகநாதர் இறைவியார் : வேதமங்கையம்மை

பந்து ஆர் விரல் மடவாள் பாகமா நாகம்பூண்டு ஏறுஅது ஏறி
அம் தார் அரவு அணிந்த அம்மான் இடம்போலும் அம்தண்சாரல்
வந்து ஆர் மடமந்தி கூத்துஆட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளிஒளிரத் தேமாங்கனி உதிர்க்கும் திரு நணாவே.1

நாட்டம் பொலிந்து இலங்கு நெற்றியினான் மற்றொரு கை வீணை ஏந்தி
ஈட்டும் துயர் அறுக்கும் எம்மான் இடம்போலும் இலை சூழ் கானில்
ஓட்டம் தரும்அருவி வீழும் விசை காட்ட முந்தூழ் ஓசைச்
சேட்டார் மணிகள் அணியும் திரை சேர்க்கும் திரு நணாவே. 2

நன்று ஆங்கு இசை மொழிந்து நன்னுதலாள் பாகமாய் ஞாலம்ஏத்த
மின் தாங்கு செஞ்சடை எம் விகிர்தர்க்கு இடம்போலும் விரை சூழ் வெற்பில்
குன்று ஓங்கி வன் திரைகள் மோத மயில் ஆலும் சாரல் செவ்வி
சென்று ஓங்கி வானவர்கள் ஏத்தி அடி பணியும் திரு நணாவே.3

கையில் மழு ஏந்திக் காலில் சிலம்பு அணிந்து கரித்தோல்கொண்டு
மெய்யில் முழுதுஅணிந்த விகிர்தர்க்கு இடம்போலும் மிடைந்து வானோர்
ஐய அரனே பெருமான் அருள் என்றுஎன்று ஆதரிக்கச்
செய்யகமலம் பொழில் தேன் அளித்துஇயலும் திரு நணாவே. 4

முத்து ஏர் நகையாள் இடமாகத் தம் மார்பில் வெண்நூல் பூண்டு
தொத்து ஏர் மலர் சடையில் வைத்தார் இடம்போலும் சோலை சூழ்ந்த
அத் தேன் அளி உண் களியால் இசை முரல ஆலத்தும்பி
தெத்தே என முரலக் கேட்டார் வினை கெடுக்கும் திரு நணாவே.5

வில் ஆர் வரை ஆக மா நாகம் நாண் ஆக வேடம் கொண்டு
புல்லார் புரமூன்று எரித்தார்க்கு இடம்போலும் புலியும் மானும்
அல்லாத சாதிகளும் அம் கழல்மேல் கைகூப்ப அடியார் கூடிச்
செல்லா அருநெறிக்கே செல்ல அருள் புரியும் திரு நணாவே. 6

கான் ஆர் களிற்று உரிவை மேல்மூடி ஆடுஅரவு ஒன்று அரைமேல் சாத்தி
ஊன் ஆர் தலைஓட்டில் ஊண் உகந்தான் தான் உகந்த கோயில் எங்கும்
நானாவிதத்தால் விரதிகள் நன்நாமமே ஏத்தி வாழ்த்தத்
தேன் ஆர் மலர் கொண்டு அடியார் அடி வணங்கும் திருநணாவே. 7

மன்நீர் இலங்கையர்தம்கோமான் வலி தொலைய விரலால் ஊன்றி
முந்நீர்க் கடல்நஞ்சை உண்டார்க்கு இடம்போலும் முழை சேர் சீயம்
அல் நீர்மை குன்றி அழலால் விழி குறைய வழியும் முன்றில்
செந்நீர் பரப்பச் சிறந்து கரி ஒளிக்கும் திருநணாவே. 8

மை ஆர் மணிமிடறன் மங்கை ஓர்பங்கு உடையான் மனைகள்தோறும்
கை ஆர் பலியேற்ற கள்வன் இடம்போலும் கழல்கள் நேடிப்
பொய்யா மறையானும் பூமிஅளந்தானும் போற்ற மன்னிச்
செய் ஆர் எரிஆம் உருவம்உற வணங்கும் திரு நணாவே. 9

ஆடை ஒழித்து அங்கு அமணே திரிந்து உண்பார் அல்லல் பேசி
மூடு உருவம் உகந்தார் உரை அகற்றும் மூர்த்தி கோயில்
ஓடும் நதி சேரும் நித்திலமும் மொய்த்த அகிலும் கரையில் சாரச்
சேடர் சிறந்து ஏத்தத் தோன்றி ஒளி பெருகும் திரு நணாவே. 10

பல் வித்தகத்தால் திரை சூழ் கடல் காழி கவுணி சீர் ஆர்
நல் வித்தகத்தால் இனிதுஉணரும் ஞான சம்பந்தன் எண்ணும்
சொல் வித்தகத்தால் இறைவன் திரு நணா ஏத்து பாடல்
வல் வித்தகத்தால் மொழிவார் பழி இலர் இம் மண்ணின் மேலே. 11

திருச்சிற்றம்பலம்

319. திருக் கொடிமாடச் செங்குன்றூர்

திருமுறை : 1/107 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்
இறைவர் : அர்த்தநாரீசுவரர், மாதிருக்கும்பாதியன் இறைவியார் : வேதமங்கையம்மை

வெந்த வெண்நீறு அணிந்து விரிநூல் திகழ் மார்பில் நல்ல
பந்து அணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்துஅருளிக்
கொந்து அணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே. 1

அலை மலி தண்புனலோடு அரவம் சடைக்கு அணிந்து ஆகம்
மலைமகள் கூறு உடையான் மலையார் இளவாழைக்
குலை மலி தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
தலை மகனைத் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 2

பால் அன நீறு புனை திருமார்பில் பல்வளைக்கை நல்ல
ஏலமலர்க் குழலாள் ஒருபாகம் அமர்ந்துஅருளிக்
கோல மலர்ப்பொழில் சூழ் கொடுமாடச் செங்குன்றூர் மல்கும்
நீலநல்மாமிடற்றான் கழல் ஏத்தல் நீதியே. 3

வார் உறு கொங்கை நல்ல மடவாள் திகழ் மார்பில் நண்ணும்
கார் உறு கொன்றையொடும் கதநாகம் பூண்டுஅருளிச்
சீர் உறும் அந்தணர் வாழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
நீர் உறு செஞ்சடையான் கழல் ஏத்தல் நீதியே. 4

பொன் திகழ் ஆமையொடு புரிநூல் திகழ் மார்பில் நல்ல
பன்றியின்கொம்பு அணிந்து பணைத்தோளி ஓர் பாகம் ஆக
குன்றன மாளிகை சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழல்ஏத்தல் மெய்ப்பொருளே.5

ஓங்கிய மூஇலைநல்சூலம் ஒரு கையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியம் சடைக்கு அணிந்து
கோங்கு அணவும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள் தொழுவார் வினை ஆய பற்றுஅறுமே.6

நீடு அலர்கொன்றையொடு நிமிர்புன்சடை தாழ வெள்ளை
வாடல்உடைதலையில் பலி கொள்ளும் வாழ்க்கையனாய்க்
கோடல் வளம் புறவில் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
சேடன தாள் தொழுவார் வினை ஆய தேயுமே. 7

மத்தநல் மாமலரும் மதியும்வளர் கொன்றைஉடன் துன்று
தொத்து அலர் செஞ்சடைமேல் துதைய உடன்சூடிக்
கொத்து அலர் தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
தத்துவனைத் தொழுவார் தடுமாற்று அறுப்பாரே. 8

செம்பொனின் மேனியனாம் பிரமன் திருமாலும் தேட நின்ற
அம் பவளத்திரள் போல் ஒளியாய ஆதிப்பிரான்
கொம்பு அணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேய
நம்பன தாள் தொழுவார் வினையாய நாசமே. 9

போதியர் பிண்டியர் என்று இவர்கள் புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரை கேட்டு உழல்வீர் வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
வேதியனைத் தொழ நும் வினையான வீடுமே. 10

அலை மலி தண்புனல்சூழ்ந்து அழகு ஆர் புகலிந்நகர் பேணும்
தலைமகன் ஆகி நின்ற தமிழ்ஞானசம்பந்தன்
கொலை மலி மூஇலையான் கொடிமாடச் செங்குன்றூர் ஏத்தும்
நலம் மலி பாடல் வல்லார் வினையான நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

320. திருப்பாண்டிக் கொடுமுடி

திருமுறை : 2/69 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : கொடுமுடிநாதர் இறைவியார் : பண்மொழியம்மை

பெண் அமர் மேனியினாரும் பிறைபுல்கு செஞ்சடையாரும்
கண் அமர் நெற்றியினாரும் காது அமரும் குழையாரும்
எண் அமரும்குணத் தாரும் இமையவர் ஏத்த நின்றாரும்
பண் அமர் பாடலினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 1

தனைக்கணி மாமலர் கொண்டு தாள் தொழுவார் அவர் தங்கள்
வினைப்பகை ஆயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்து எழுவார் துயர் தீர்ப்பார் நிரைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டு உரி போர்த்தார் பாண்டிக் கொடுமுடியாரே. 2

சடைஅமர் கொன்றையினாரும் சாந்த வெண்நீறு அணிந்தாரும்
புடைஅமர் பூதத்தினாரும் பொறி கிளர் பாம்பு அசைத்தாரும்
விடை அமரும் கொடியாரும் வெண்மழு மூஇலைச் சூலப்
படைஅமர் கொள்கையினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 3

நறைவளர் கொன்றையினாரும் ஞாலமெல்லாம் தொழுது ஏத்தக்
கறைவளர் மா மிடற்றாரும் காடரங்காக் கனல் ஏந்தி
மறை வளர் பாடலினோடு மண்முழவம் குழல் மொந்தை
பறைவளர் பாடலினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 4

போகமும் இன்பமும் ஆகிப் போற்றி என்பார் அவர்தங்கள்
ஆகம் உறைவிடம் ஆக அமர்ந்தவர் கொன்றையினோடும்
நாகமும் திங்களும் சூடி நன்நுதல் மங்கைதன் மேனிப்
பாகம் உகந்தவர்தாமும் பாண்டிக் கொடுமுடியாரே. 5

கடி படு கூவிளம் மத்தம் கமழ் சடைமேல் உடையாரும்
பொடிபட முப்புரம் செற்ற பொருசிலை ஒன்று உடையாரும்
வடிவு உடை மங்கைதன்னோடு மணம்படு கொள்கையினாரும்
படி படு கோலத்தினாரும் பாண்டிக் கொடு முடியாரே. 6

ஊன் அமர் வெண்தலை ஏந்தி உண் பலிக்கு என்று உழல்வாரும்
தேன்அமரும்மொழிமாது சேர் திருமேனியினாரும்
கான் அமர் மஞ்ஞைகளாலும் காவிரிக் கோலக் கரைமேல்
பால்நலநீறு அணிவாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 7

புரந்தரன் தன்னொடு வானோர் போற்றி என்று ஏத்த நின்றாரும்
பெருந்திறல் வாள் அரக்கனைப் பேர் இடர் செய்து உகந்தாரும்
கருந்திரை மா மிடற்றாரும் கார்அகில் பன்மணி உந்திப்
பரந்து இழி காவிரிப் பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடியாரே.8

திருமகள் காதலினானும் திகழ்தரு மா மலர் மேலைப்
பெருமகனும் அவர் காணாப் பேர்அழல் ஆகிய பெம்மான்
மரு மலி மென்மலர்ச் சந்து வந்து இழி காவிரிமாடே
பரு மணி நீர்த்துறை ஆரும் பாண்டிக் கொடுமுடியாரே. 9

புத்தரும் புந்திஇலாத சமணரும் பொய்ம்மொழி அல்லால்
மெய்த்தவம் பேசிட மாட்டார் வேடம்பலபலவற்றால்
சித்தரும் தேவரும் கூடிச் செழு மலர் நல்லன கொண்டு
பத்தர்கள் தாம் பணிந்து ஏத்தும் பாண்டிக் கொடுமுடியாரே. 10

கலம் மல்கு தண்கடல் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்
பலம் மல்கு வெண்தலைஏந்திப் பாண்டிக் கொடுமுடிதன்னைச்
சொலமல்கு பாடல்கள்பத்தும் சொல்லவல்லார் துயர் தீர்ந்து
நலம் மல்கு சிந்தையர் ஆகி நன்நெறி எய்துவர் தாமே.11

திருச்சிற்றம்பலம்

321. திருக்கருவூர் ஆனிலை

திருமுறை : 2/28 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : பசுபதீசுவரர் இறைவியார் : கிருபாநாயகி

தொண்டுஎலாம் மலர் தூவி ஏத்த நஞ்சு
உண்ட ஆர்உயிர் ஆய தன்மையர்
கண்டு அனார் கருவூருள் ஆன்நிலை
அண்டனார் அருள் ஈயும் அன்பரே. 1

நீதியார் நினைந்து ஆய நால்மறை
ஓதியாரொடும் கூடலார் குழைக்
காதினார் கருவூருள் ஆன்நிலை
ஆதியார் அடியார் தம் அன்பரே. 2

விண் உலாம் மதி சூடி வேதமே
பண் உளார் பரம் ஆய பண்பினர்
கண் உளார் கருவூருள் ஆன்நிலை
அண்ணலார் அடியார்க்கு நல்லரே. 3

முடியர் மும்மத யானை ஈர்உரி
பொடியர் பூங்கணை வேளைச் செற்றவர்
கடிஉளார் கருவூருள் ஆன்நிலை
அடிகள் யாவையும் ஆய ஈசரே. 4

பங்கயம் மலர்ப்பாதர் பாதி ஓர்
மங்கையர் மணி நீலகண்டர் வான்
கங்கையார் கருவூருள் ஆன்நிலை
அம் கை ஆடு அரவத்து எம் அண்ணலே. 5

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதில் எய்த வில்லியர்
காவலர் கருவூருள் ஆன்நிலை
மூவர் ஆகிய மொய்ம்பர் அல்லரே. 6

பண்ணினார் படி ஏற்றர் நீற்றர் மெய்ப்
பெண்ணினார் பிறை தாங்கு நெற்றியர்
கண்ணினார் கருவூருள் ஆன்நிலை
நண்ணினார் நமை ஆளும் நாதரே. 7

கடுத்த வாள் அரக்கன் கயிலையை
எடுத்தவன் தலை தோளும் தாளினால்
அடர்த்தவன் கருவூருள் ஆன்நிலை
கொடுத்தவன் அருள் கூத்தன் நல்லனே. 8

உழுது மா நிலத்து ஏனம் ஆகி மால்
தொழுது மா மலரோனும் காண்கிலார்
கழுதினான் கருவூருள் ஆன்நிலை
முழுதும்ஆகிய மூர்த்தி பாதமே. 9

புத்தர் புன்சமண்ஆதர் பொய்உரைப்
பித்தர் பேசிய பேச்சை விட்டு மெய்ப்
பத்தர் சேர் கருவூருள் ஆன்நிலை
அத்தர் பாதம் அடைந்து வாழ்மினே. 10

கந்தம் ஆர் பொழில் காழி ஞானசம்
பந்தன் சேர் கருவூருள் ஆன்நிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தையில் துயர்ஆய தீர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

322. திருநெல்வாயில் அரத்துறை

திருமுறை : 2/90 பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : அரத்துறைநாதர் இறைவியார் : ஆனந்தநாயகி

எந்தை ஈசன்எம் பெருமான் ஏறுஅமர் கடவுள்என்று ஏத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்றுகை கூடுவது அன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அம்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே.1

ஈர வார்சடைதன்மேல் இளம்பிறை அணிந்தஎம் பெருமான்
சீரும் செல்வமும் ஏத்தாச் சிதடர்கள் தொழச் செல்வது அன்றால்
வாரி மாமலர் உந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆரும் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.2

பிணிகலந்த புன் சடைமேல் பிறைஅணி சிவன்எனப் பேணிப்
பணிகலந்து செய்யாத பாவிகள் தொழச்செல்வது அன்றால்
மணிகலந்து பொன் உந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணிகலந்த நெல்வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே. 3

துன்ன ஆடைஒன்று உடுத்துத் தூயவெண் நீற்றின ராகி
உன்னி நைபவர்க்கு அல்லால் ஒன்றும்கை கூடுவது அன்றால்
பொன்னும் மாமணி உந்திப் பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
அன்னம் ஆரும்நெல் வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே.4

வெருகு உரிஞ்சு வெங்காட்டில் ஆடிய விமலன்என்று உள்கி
உருகி நைபவர்க்கு அல்லால் ஒன்றும்கை கூடுவது அன்றால்
முருகு உரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர் சுமந்துஇழி நிவாவந்து
அருகு உரிஞ்சுநெல் வாயில் அரத்துறை அடிகள் தம் அருளே.5

உரவு நீர்ச்சடைக் கரந்த ஒருவன்என்று உள்குளிர்ந்து ஏத்திப்
பரவி நைபவர்க்கு அல்லால் பரிந்துகை கூடுவது அன்றால்
குரவம் நீடுயர் சோலைக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அரவம் ஆரும்நெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே. 6

நீல மாமணி மிடற்று நீறுஅணி சிவன்எனப் பேணும்
சீல மாந்தர்கட்கு அல்லால் சென்றுகை கூடுவது அன்றால்
கோல மாமலர் உந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
ஆலும் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.7

செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்த ஊன்றிய விரலான் போற்றி என்பார்க்கு அல்லது அருளான்
கொழுங்கனி சுமந்து உந்திக் குளிர் புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்தும் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.8

நுணங்கு நூல்அயன் மாலும் இருவரும் நோக்க அரியானை
வணங்கி நைபவர்க்கு அல்லால் வந்துகை கூடுவது அன்றால்
மணம் கமழ்ந்து பொன்னுந்தி வருபுனல் நிவாமல்கு கரைமேல்
அணங்கும் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே. 9

சாக்கியப்படுவாரும் சமண்படுவார்களும் மற்றும்
பாக்கியப்படகில்லாப் பாவிகள் தொழச்செல்வது அன்றால்
பூக் கமழ்ந்து பொன் உந்திப் பொருபுனல் நிவாமல்கு கரைமேல்
ஆர்க்கும் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.10

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை அடிகள்தம் அருளை
முறைமையால் சொன்ன பாடல் மொழியும் மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுறவு இல்லைப் பாட்டுஇவை பத்தும் வல்லார்க்கே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருப்பெண்ணாகடத் திருத்தூங்கானைமாடம் தொழுது வணங்கிய பிள்ளையார் திருஅரத்துறையை வணங்கும்படி எழுந்தருளும் போது இதற்கு முன்னரெல்லாம் தம் தாதையாரது தோளின் மேலமர்ந்தருளும் நியமம் ஒழிந்து தந் திருவடித் தாமரைகள் நோவுறும்படி பையப்பைய நடந்து சென்றனர். சென்று மாறன்வாடி எனுமிடத்தை எய்துங்கால் அவரது திருவடித் தளர்வினைக் காணமாட்டாதவன் போல் கதிரவன் மறைய, பிள்ளையார் திருவஞ்செழுத்தோதி அன்றிரவு அப்பதியில் தங்கினார். திருவரத்துறைநாதர் பிள்ளையாரது வருத்தம் பொறாதவராய் ஏறுதற்குச் சிவிகையும், இடக்குடையும், கூறியூதக் கலவு பொற் சின்னங்களும், முத்தினாலமைத்து உதவ வுன்னி அவ்வூர் வாசிகளாய அந்தணர் கனவிற்றோன்றி "ஞானசம்பந்தன் நம்பாலணைகின்றான். அவனுக்குக் கொடுக்குமாறு முத்துச் சிவிகையும், முத்துக்குடையும், முத்துச் சின்னங்களும் நந்திருக்கோயிலில் வைத்திருக்கின்றோம். நீங்கள் அவைகளை அவன் பால் கொண்டு கொடுங்கள்" என்று பணித்தருளினார். அவர்கள் திருவருளை உன்னி வணங்கி வைகறையில் ஆலயத்தையடைந்து திருக்காப்பை நீக்கிப் பார்க்கும் போது அவைகள் அவ்வாறிருப்பக் கண்டு வியந்து அவைகளை எடுத்துக் கொண்டு பிள்ளையாரை எதிர்கொண்டு சென்றனர். பிள்ளையாரும் அன்றிரவில் தங்கனவில் தமக்கு இச்செய்தியை இறைவன் பணித் தமையைத் தலைமேற் கொண்டு திருவரத்துறைக் எழுந்தருளும்போது அவ்வூர் வாசிகள் பிள்ளையாரை எதிர்கொண்டு வந்து இறைவன் கட்டளையைத் தெரிவித்துப் பணிந்தனர். பிள்ளையாரும் அவை இறைவன் திருவருள் மயமாதலால் சோதிமுத்தின் சிவிகையை வலம்வந்து நிலமுறப் பணிந்து அச்சிவிகையினொளி வெண்ணீறு போன்றலின் அதனையுந் துதித்து அச்சிவிகை திருவருள் வடிவாதலால் திருவஞ்செழுத்தை ஓதி எல்லாவுலகமும் ஈடேற அதன் மீதெழுந்தருளினார். முத்துக்குடைகள் நிழற்றின. முத்துச்சின்னங்கள் ஒலித்தன. தொண்டர் அரவொலி செய்தனர். சுருதகள் முழங்கின. வானவர் பூமழை பொழிந்தனர். இவ்வாறு சிவிகையிலெழுந்தருளும் பிள்ளையார் திருவரத்துறையை அடைந்து தூரத்தே கீழேயிறங்கித் திருக்கோயிலை அடைந்து இறைவனை வணங்கி இப்பதிகம் பாடியருளினார்.

323. திருத்தூங்கானை மாடம்

திருமுறை : 1/59 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : சுடர்க்கொழுந்துநாதர் இறைவியார் : கடந்தைநாயகி

ஒடுங்கும் பிணிபிறவி கேடு என்றிவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் இடம்கருதி நின்றீர்எல்லாம்
அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம் வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவி எங்கும்
கெழுமனைகள் தோறும் மறையின்ஒலி
தொடங்கும் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 1

பிணிநீர சாதல் பிறத்தல்இவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோடு
அணிநீர மேல்உலகம் எய்தல் உறில்
அறிமின் குறைவில்லை ஆனேறுஉடை
மணிநீல கண்டம் உடையபிரான்
மலைமகளும் தானும் மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 2

சாம்நாளும் வாழ்நாளும் தோற்றம்இவை
சலிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
ஆமாறு அறியாது அலமந்துநீர்
அயர்ந்தும் குறைவில்லை ஆனேறுடைப்
பூமாண் அலங்கல் இலங்கு கொன்றை
புனல்பொதிந்த புன்சடையினான் உறையும்
தூமாண் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 3

ஊன்றும் பிணிபிறவி கேடு என்று இவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
மான்று மனம்கருதி நின்றீர்எல்லாம்
மனம்திரிந்து மண்ணில் மயங்காதுநீர்
மூன்று மதில்எய்த மூவாச்சிலை
முதல்வர்க்கு இடம்போலும் முகில்தோய்கொடி
தோன்றும் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 4

மயல்தீர்மை இல்லாத தோற்றம்இவை
மரணத்தொடு ஒத்தழியும் ஆறுஆதலால்
வியல்தீர மேல் உலகம் எய்தல் உறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர ஓங்கிய நாமங்களால்
ஓவாது நாளும் அடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 5

பல்நீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக்கின் கண் பவளநிற
நல்நீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன்றும் காலம் நமக்குஆதல் முன்
பொன்நீர்மை துன்றப் புறம்தோன்றுநல்
புனல்பொதிந்த புன்சடையினான் உறையும்
தொல்நீர்க் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 6

இறைஊண் துகளோடு இடுக்கண் எய்தி
இழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
நிறைஊண் நெறிகருதி நின்றீர்எல்லாம்
நீள்கழலே நாளும் நினைமின்சென்னிப்
பிறைசூழ் அலங்கல் இலங்குகொன்றை
பிணையும் பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 7

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்புஆய வாழ்க்கை ஒழியத்தவம்
இல்சூழ் இடம்கருதி நின்றீர்எல்லாம்
இறையே பிரியாது எழுந்துபோதும்
கல்சூழ் அரக்கன் கதறச்செய்தான்
காதலியும் தானும் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 8

நோயும் பிணியும் அருந்துயரமும்
நுகருடைய வாழ்க்கை ஒழியத்தவம்
வாயும் மனம்கருதி நின்றீர்எல்லாம்
மலர்மிசைய நான்முகனும் மண்ணும்விண்ணும்
தாய அடிஅளந்தான் காணமாட்டாத்
தலைவர்க்கு இடம்போலும் தண்சோலைவிண்
தோயும் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 9

பகடுஊர்பசி நலிய நோய்வருதலால்
பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
முகடுஊர் மயிர்கடிந்த செய்கையாரும்
மூடுதுவர் ஆடையரும் நாடிச் சொன்ன
திகழ்தீர்ந்த பொய்ம்மொழிகள் தேறவேண்டா
திருந்திழையும் தானும் பொருந்திவாழும்
துகள்தீர் கடந்தைத் தடம்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே. 10

மண்ணார் முழவுஅதிரும் மாடவீதி
வயல்காழி ஞானசம்பந்தன் நல்ல
பெண்ணா கடத்துப் பெரும்கோயில்சேர்
பிறைஉரிஞ்சும் தூங்கானை மாடம்மேயான்
கண்ணார் கழல்பரவு பாடல் பத்தும்
கருத்துணரக் கற்றாரும் கேட்டாரும்போய்
விண்ணோர் உலகத்து மேவிவாழும்
விதி அதுவே ஆகும் வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

324. திரு எருக்கத்தம் புலியூர்

திருமுறை : 1/89 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : திருநீலகண்டர் இறைவியார் : நீலமலர்க்கண்ணி

படையார் தரு பூதப் பகடுஆர் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனாய் இடுகங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே. 1

இலையார் தருசூலப் படை எம்பெருமானாய்
நிலையார் மதில்மூன்றும் நீறாய் விழஎய்த
சிலையான் எருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையான் அடிஏத்தக் கருதா வினைதானே. 2

விண்ணோர் பெருமானே விகிர்தா விடைஊர்தீ
பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற
அண்ணா என வல்லார்க்கு அடையா வினைதானே. 3

அரையார் தருநாகம் அணிவான் அலர்மாலை
விரையார் தருகொன்றை உடையான் விடைஏறி
வரையான் எருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திரு ஆமே. 4

வீறார் முலையாளைப் பாகம் மிகவைத்துச்
சீறா வருகாலன் சினத்தை அழிவித்தான்
ஏறான் எருக்கத்தம் புலியூர் இறையானை
வேறா நினைவாரை விரும்பா வினைதானே. 5

நகுவெண் தலைஏந்தி நானா விதம்பாடிப்
புகுவான் அயம் பெய்யப் புலித்தோல் பியற்கு இட்டுத்
தகுவான் எருக்கத்தம் புலியூர்த் தகைந்து அங்கே
தொகுவான் கழல் ஏத்தத் தொடரா வினைதானே.(6–7)

ஆவா என அரக்கன் அலற அடர்த்திட்டுத்
தேவா என அருளார் செல்வம் கொடுத்திட்ட
கோவே எருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே என அல்லல் தீர்தல் திடம்ஆமே. 8

மறையான் நெடுமால் காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ் முத்தின் தொத்தே
இறையான் எருக்கத்தம் புலியூர் இடம்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும் வினையே. 9

புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துஉறையும் சோதி உமையோடும்
நித்தன் எருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்தன் அறவன்தன் அடியே அடைவோமே. 10

ஏரார் எருக்கத்தம் புலியூர் உறைவானைச்
சீரார் திகழ்காழித் திரு ஆர் சம்பந்தன்
ஆரா அருந்தமிழ் மாலை இவைவல்லார்
பாரார் அவர்ஏத்தப் பதிவான் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

தில்லைத் திருஅம்பலம் பணிந்து புறம் போந்த பிள்ளையாரைப் போற்றிய புகழ்ப்பாணர், அடியனேன் பதி முதலாக நிவாநதிக்கரை மேய திருத்தலங்களைப் பணிந்திட வேண்டுவனென்று விண்ணப்பித்தனர். அப்படியே அப்பாணரோடும், மதங்க சூளாமணியாரோடும், மற்றும் பல அன்பரோடும் ஆளுடைய பிள்ளையார் நிவாக்கரையின் மேற்கே திருஎருக்கத்தம்புலியூரை நெருங்கப் பாணர்பெருமான், இஃது அடியனேன் பதி என்று அறிவித்த போது பெரிதும் மகிழ்ந்து ஐயரே, நீர் அவதரித்திட இப்பதி அளவின் மாதவஞ் செய்த தென்று கூறி அண்டுச் சென்று, இறைவனை இறைஞ்சிப் 'படையார் தரு பூதம்' என்னுமிப் பதிகம் எடுத்துப் பேரிசையோடு பாடியருளினார்.

325. திருச்சோபுரம்

திருமுறை : 1/51 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

இறைவர் : சோபுரநாதர் இறைவியார் : சோபுரநாயகி

வெங் கண் ஆனை ஈர்உரிவை போர்த்து விளங்கும் மொழி
மங்கை பாகம் வைத்து உகந்த மாண்பது என்னைகொலாம்
கங்கையோடு திங்கள் சூடிக் கடி கமழும் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய் சோபுரம் மேயவனே. 1

விடை அமர்ந்து வெண்மழு ஒன்று ஏந்தி விரிந்து இலங்கு
சடை ஒடுங்கத் தண்புனலைத் தாங்கியது என்னைகொலாம்
கடை உயர்ந்த மும்மதிலும் காய்ந்து அனலுள் அழுந்தத்
தொடை நெகிழ்ந்த வெஞ்சிலையாய் சோபுரம் மேயவனே. 2

தீயர் ஆய வல்அரக்கர் செந்தழலுள் அழுந்தச்
சாய எய்து வானவரைத் தாங்கியது என்னைகொலாம்
பாயும் வெள்ளைஏற்றை ஏறிப் பாய்புலித்தோல் உடுத்த
தூயவெள்ளை நீற்றினானே சோபுரம் மேயவனே. 3

பல்இல்ஓடு கையில் ஏந்திப் பல்கடையும் பலிதேர்ந்து
அல்லல் வாழ்க்கை மேலதுஆன ஆதரவு என்னைகொலாம்
வில்லை வென்ற நுண் புருவ வேல் நெடும்கண்ணியொடும்
தொல்லைஊழிஆகி நின்றாய் சோபுரம் மேயவனே. 4

நாற்றம் மிக்க கொன்றை துன்று செஞ்சடைமேல் மதியம்
ஏற்றம்ஆக வைத்து உகந்த காரணம் என்னைகொலாம்
ஊற்றம் மிக்க காலன்தன்னை ஒல்க உதைத்து அருளித்
தோற்றம் ஈறும் ஆகிநின்றாய் சோபுரம் மேயவனே. 5

கொல்நவின்ற மூஇலைவேல் கூர்மழுவாள்படையன்
பொன்னை வென்ற கொன்றைமாலை சூடும்பொற்பு என்னைகொலாம்
அன்னம் அன்ன மென்நடையாள் பாகம் அமர்ந்து அரைசேர்
துன்ன வண்ண ஆடையினாய் சோபுரம் மேயவனே. 6

குற்றம்இன்மை உண்மை நீ என்று உன் அடியார் பணிவார்
கற்றல் கேள்வி ஞானம் ஆன காரணம்என்னைகொலாம்
வற்றல்ஆமை வாள்அரவம் பூண்டு அயன்வெண் தலையில்
துற்றல் ஆன கொள்கையானே சோபுரம் மேயவனே. 7

விலங்கல்ஒன்று வெஞ்சிலையாக் கொண்டு விறல் அரக்கர்
குலங்கள் வாழும் ஊர் எரித்த கொள்கைஇது என்னைகொலாம்
இலங்கை மன்னு வாள்அவுணர்கோனை எழில் விரலால்
துலங்க ஊன்றி வைத்து உகந்தாய் சோபுரம் மேயவனே. 8

விடம் கொள்நாகம் மால்வரையைச் சுற்றி விரிதிரைநீர்
கடைந்த நஞ்சை உண்டு உகந்த காரணம் என்னைகொலாம்
இடந்து மண்ணை உண்ட மாலும் இன் மலர்மேல் அயனும்
தொடர்ந்து முன்னம் காணமாட்டாச் சோபுரம் மேயவனே. 9

புத்தரொடு புன்சமணர் பொய்உரையே உரைத்துப்
பித்தர் ஆகக் கண்டு உகந்த பெற்றிமை என்னைகொலாம்
மத்தயானை ஈர்உரிவை போர்த்து வளர்சடைமேல்
துத்திநாகம் சூடினானே சோபுரம் மேயவனே. 10

சோலைமிக்க தண் வயல்சூழ் சோபுரம் மேயவனைச்
சீலம் மிக்க தொல்புகழ் ஆர் சிரபுரக் கோன் நலத்தால்
ஞாலம் மிக்க தண்தமிழால் ஞானசம்பந்தன் சொன்ன
கோலம் மிக்க மாலை வல்லார் கூடுவர் வான் உலகே. 11

திருச்சிற்றம்பலம்

326. திருவதிகை வீரட்டானம்

திருமுறை : 1/46 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி
இறைவர் : அதிகைவீரட்டநாதர் இறைவியார் : அதிகைநாயகி

குண்டைக் குறள்பூதம் குழும அனல் ஏந்திக்
கெண்டை பிறழ் தெண்நீர்க் கெடில் வடபக்கம்
வண்டு மருள் பாட வளர் பொன்விரி கொன்றை
விண்ட தொடையலான் ஆடும் வீரட்டானத்தே. 1

அரும்பும் குரும்பையும் அலைத்த மென்கொங்கைக்
கரும்பு இன் மொழியாளொடு உடன் கை அனல் வீசிச்
சுரும்பு உண் விரிகொன்றைச் சுடர்பொன்சடை தாழ
விரும்பும் அதிகையுள் ஆடும் வீரட்டானத்தே. 2

ஆடல் அழல்நாகம் அரைக்குஇட்டு அசைத்துஆடப்
பாடல் மறை வல்லான் படுதம் பலி பெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம்பல வல்லான் ஆடும் வீரட்டானத்தே. 3

எண்ணார் எயில் எய்தான் இறைவன் அனல்ஏந்தி
மண் ஆர் முழுவு அதிர முதிரா மதி சூடிப்
பண் ஆர் மறை பாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவ நின்று ஆடும் வீரட்டானத்தே. 4

கரிபுன்புறம் ஆய கழிந்தார் இடுகாட்டில்
திருநின்று ஒரு கையால் திரு ஆம் அதிகையுள்
எரி ஏந்திய பெருமான் எரிபுன்சடை தாழ
விரியும் புனல் சூடி ஆடும் வீரட்டானத்தே. 5

துளங்கும் சுடர் அங்கைத் துதைய விளையாடி
இளங்கொம்பு அன சாயல் உமையோடு இசைபாடி
வளம் கொள் புனல் சூழ்ந்த வயலார் அதிகையுள்
விளங்கும் பிறைசூடி ஆடும் வீரட்டானத்தே. 6

பாதம் பலர் ஏத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடை சூழப் புலித்தோல் உடைஆகக்
கீதம் உமை பாட கெடில வடபக்கம்
வேதமுதல்வன் நின்று ஆடும் வீரட்டானத்தே. 7

கல் ஆர் வரை அரக்கன் தடந்தோள் கவின் வாட
ஒல்லை அடர்த்து அவனுக்கு அருள்செய்து அதிகையுள்
பல் ஆர் பகுவாய நகுவெண்தலை சூடி
வில்லால் எயில் எய்தான் ஆடும் வீரட்டானத்தே. 8

நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடிஆடு மார்பானைப் புரிநூல் உடையானைக்
கடி ஆர் கழுநீலம் மலரும் அதிகையுள்
வெடியார் தலைஏந்தி ஆடும் வீரட்டானத்தே. 9


அரையோடு அலர் பிண்டி மருவிக் குண்டிகை
சுரைஒடு உடன்ஏந்தி உடை விட்டு உழல்வார்கள்
உரையோடு உரைஒவ்வாது உமையோடு உடன்ஆகி
விரை தோய் அலர்தாரான் ஆடும் வீரட்டானத்தே. 10

ஞாழல் கமழ் காழியுள் ஞானசம்பந்தன்
வேழம் பொரு தெண்நீர் அதிகை வீரட்டானத்துச்
சூழும் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழும் துணைஆக நினைவார் வினை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருவக்கரை, திருஇரும்பைமாகாளம் முதலிய திருப்பதிகளை வணங்கிய திருஞானசம்பந்தப் பெருந்தகையார் திருக்கூட்டத்தினர் வந்து பணியத் திருவதிகை வீரட்டானத்திற்கு எழுந்தருளுகையில் 'பூதம்பாட நின்றாடுவார் திருநடம் புலப்படும்படி காட்' டியருள, 'குண்டைக்குறட் பூதம்' என்று இவ் இன்னிசைத் திருப்பதிகம் பாடிப் போற்றி யருளினர்.



327. திருமுதுகுன்றம்

திருமுறை : 1/12 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : பழமலைநாதர் இறைவியார் : பெரியநாயகி

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்து அவ்விடம் உண்ட
கொத்தார் தரு மணிநீள் முடிச் சுடர்வண்ணனது இடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்து அகில் ஒளிர் குங்குமம் கொண்டு
முத்தாறு வந்து அடிவீழ் தரு முதுகுன்று அடைவோமே.1

தழையார் வடவிய வீதனில் தவமே புரிசைவன்
இழையார் இடை மடவாளொடும் இனிதா உறை இடமாம்
மழைவான் இடை முழவு அவ்எழில் வளைவாள் உகிர் எரிகண்
முழைவாள் அரி குமிறும்உயர் முதுகுன்று அடைவோமே.2

விளையாததொர் பரிசில் வரு பசு பாசவேதனை ஒண்
தளையாயின தவிரஅவ் அருள் தலைவன் அது சார்பாம்
களையார் தருகதிர் ஆயிரம் உடைய அவனோடு
முளை மாமதி தவழும்உயர் முதுகுன்று அடைவோமே. 3

சுரர் மாதவர் தொகுகின்னரர் அவரோ தொலைவு இல்லா
நரர் ஆனபல் முனிவர் தொழ இருந்தான் இடம் நலமார்
அரசார் வர அணி பொற்கலன் அவைகொண்டு பல்நாளும்
முரசார் வரு மணமொய்ம்பு உடை முதுகுன்று அடைவோமே. 4

அறையார்கழல் அந்தன்தனை அயில்மூவிலை அழகார்
கறையார்நெடு வேலின் மிசை ஏற்றான்இடம் கருதில்
மறையாயின பலசொல்லிஒண் மலர்சாந்துஅவை கொண்டு
முறையால்மிகும் முனிவர்தொழும் முதுகுன்று அடைவோமே. 5

ஏவார்சிலை எயினன் உரு ஆகி எழில் விசயற்கு
ஓவாத இன்னருள் செய்த எம் ஒருவற்கு இடம் உலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமே மிக உடையார்
மூவாதபல் முனிவர் தொழும் முதுகுன்று அடைவோமே.6

தழல்சேர் தரு திருமேனியர் சசி சேர் சடை முடியர்
மழவால் விடை மிக ஏறிய மறையோன் உறைகோயில்
விழவோடு ஒலி மிகுமங்கையர் தகும் ஆடகசாலை
முழவோடு இசை நடம் முன்செயும் முதுகுன்று அடைவோமே.7

செதுவாய்மைகள் கருதிவ்வரை எடுத்த திறல் அரக்கன்
கதுவாய்கள் பத்து அலறியிடக் கண்டான் உறை கோயில்
மதுவாய செங்காந்தள் மலர் நிறையக் குறைவு இல்லா
முதுவேய்கள் முத்து உதிரும் பொழில் முதுகுன்று அடைவோமே. 8

இயல் ஆடிய பிரமன் அரி இருவர்க்கு அறிவு அரிய
செயல் ஆடிய தீயார் உரு ஆகி எழு செல்வன்
புயல் ஆடு வண்பொழில் சூழ் புனல் படப்பைத்தடத்து அருகே
முயல்ஓட வெண்கயல் பாய்தரு முதுகுன்று அடைவோமே. 9

அருகரொடு புத்தர் அவர் அறியா அரன் மலையான்
மருகன் வரும் இடபக் கொடி உடையான் இடம் மலரார்
கருகுகுழல் மடவார் கடிகுறிஞ்சி அது பாடி
முருகன் அது பெருமைபகர் முதுகுன்று அடைவோமே.10

முகில்சேர்தரு முதுகுன்று உடையானை மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறை ஞானசம்பந்தன் உரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைகள் இசையோடு இவை பத்தும்
பகரும் அடியவர்கட்கு இடர் பாவம் அடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

328. திருமுதுகுன்றம்

திருமுறை : 1/93 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு, என்றும் இன்பமே. 1

அத்தன் முதுகுன்றைப், பத்தி ஆகிநீர்
நித்தம் ஏத்துவீர்க்கு, உய்த்தல் செல்வமே. 2

ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வையம் உமதாமே. 3

ஈசன் முதுகுன்றை நேசம் ஆகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே. 4

மணியார் முதுகுன்றைப், பணிவார் அவர்கண்டீர்
பிணியாயின கெட்டுத் தணிவார் உலகிலே. 5

மொய்யார் முதுகுன்றில், ஐயா எனவல்லார்
பொய்யார் இரவோர்க்குச், செய்யாள் அணியாளே. 6

விடையான் முதுகுன்றை, இடையாது ஏத்துவார்
படையாயின சூழ, உடையார் உலகமே. 7

பத்துத் தலையோனைக், கத்த விரல்ஊன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. 8

இருவர் அறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. 9

தேரர் அமணரும், சேரும் வகைஇல்லான்
நேர் இல் முதுகுன்றை, நீர்நின்று உள்குமே. 10

நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்றும் உரைவல்லார், என்றும் உயர்வாரே. 11

329. திருமுதுகுன்றம்

திருமுறை : 1/53 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

தேவராயும் அசுரராயும் சித்தர் செழுமறை சேர்
நாவராயும் நண்ணு பாரும் விண் எரி கால் நீரும்
மேவர் ஆய விரைமலரோன் செங்கண்மால் ஈசன் என்னும்
மூவர் ஆய முதல்ஒருவன் மேயது முதுகுன்றே. 1

பற்றும்ஆகி வான் உளோர்க்குப் பல்கதிரோன் மதி பார்
எற்று நீர் தீ காலும் மேலைவிண் இயமானனோடு
மற்று மாது ஓர் பல்உயிர்ஆய் மால் அயனும் மறைகள்
முற்றும் ஆகி வேறும் ஆனான் மேயது முதுகுன்றே. 2

வாரி மாகம் வைகு திங்கள் வாள்அரவம் சூடி
நாரி பாகம் நயந்து பூமேல் நான்முகன்தன் தலையில்
சீரிது ஆகப் பலிகொள் செல்வன் செற்றலும் தோன்றியது ஓர்
மூரி நாகத்து உரிவை போர்த்தான் மேயது முதுகுன்றே.3

பாடுவாருக்கு அருளும் எந்தை பனி முதுபெளவ முந்நீர்
நீடுபாரும் முழுதும் ஓடி அண்டர் நிலைகெடலும்
நாடு தானும் ஊடும் ஓடி ஞாலமும் நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத்து உயர்ந்தது முதுகுன்றே.4

வழங்குதிங்கள் வன்னிமத்தம் மாசுணம் மீது அணவி
செழுங் கல்வேந்தன் செல்விகாணத் தேவர் திசை வணங்கத்
தழங்கு மொந்தை தக்கை மிக்க பேய்க்கணம் பூதம் சூழ
முழங்கு செந்தீ ஏந்தி ஆடி மேயது முதுகுன்றே. 5

சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல் அரா நல் இதழி
சழிந்த சென்னி சைவவேடம் தான் நினைந்து ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி மேயது முதுகுன்றே. (6 –7)

மயங்கும் மாயம் வல்லர் ஆகி வானினொடு நீரும்
இயங்குவோருக்கு இறைவன் ஆய இராவணன்தோள் நெரித்த
புயங்கராக மாநடத்தன் புணர்முலை மாது உமையாள்
முயங்கு மார்பன் முனிவர் ஏத்த மேயது முதுகுன்றே. 8

ஞாலம் உண்ட மாலும் மற்றை நான்முகனும் அறியாக்
கோலம் அண்டர் சிந்தைகொள்ளார் ஆயினும் கொய்மலரால்
ஏல இண்டை கட்டிநாமம் இசைய எப்போதும் ஏத்தும்
மூலம் உண்ட நீற்றர் வாயான் மேயது முதுகுன்றே. 9

உறி கொள் கையர் சீவரத்தர் உண்டு உழல்மிண்டர் சொல்லை
நெறிகள் என்ன நினைவு உறாதே நித்தலும் கை தொழுமின்
மறி கொள் கையன் வங்க முந்நீர்ப் பொங்கு விடத்தை உண்ட
முறி கொள் மேனி மங்கை பங்கன் மேயது முதுகுன்றே.10

மொய்த்து வானோர் பல்கணங்கள் வணங்கும் முதுகுன்றைப்
பித்தர் வேடம் பெருமை என்னும் பிரமபுரத் தலைவன்
....
....11

திருச்சிற்றம்பலம்

330. திருமுதுகுன்றம்

திருமுறை : 1/131 பண் : மேகராகக் குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

மெய்த்து ஆறுசுவையும் ஏழ் இசையும் எண் குணங்களும்
விரும்பு நால் வே
தத்தாலும் அறிவுஒண்ணா நடைதெளியப் பளிங்கே போல்
அரிவை பாகம்
ஒத்து ஆறு சமயங்கட்கு ஒரு தலைவன் கருதும் ஊர்
உலவு தெண் நீர்
முத்தாறு வெதிர் உதிர நித்திலம் வாரிக் கொழிக்கும்
முதுகுன்றமே. 1

வேரி மிகு குழலியொடு வேடுவனாய் வெங்கானில்
விசயன் மேவு
போரின் மிகு பொறை அளந்து பாசுபதம் புரிந்து அளித்த
புராணர் கோயில்
காரின் மலி கடிபொழில்கள் கனிகள் பல மலர் உதிர்த்துக்
கயமுயங்கி
மூரிவளம் கிளர் தென்றல் திருமுன்றில் புகுந்து உலவும்
முதுகுன்றமே. 2

தக்கனது பெருவேள்வி சந்திரன் இந்திரன் எச்சன்
அருக்கன் அங்கி
மிக்க விதா தாவினொடும் விதிவழியே தண்டித்த
விமலர் கோயில்
கொக்கு இனிய கொழும் வருக்கை கதலி கமுகு உயர்தெங்கின்
குலை கொள்சோலை
முக்கனியின் சாறு ஒழுகிச் சேறு உலரா நீள் வயல் சூழ்
முதுகுன்றமே. 3

வெம்மை மிகு புரவாணர் மிகைசெய்ய விறல் அழிந்து
விண் உளோர்கள்
செம்மலரோன் இந்திரன் மால் சென்றுஇரப்பத் தேவர்களே
தேர் அது ஆக
மைம்மருவு மேருவில்லும் மாசுணம் நாண் அரிஎரிகால்
வாளியாக
மும்மதிலும் நொடியளவில்பொடி செய்த முதல்வன் இடம்
முதுகுன்றமே. 4

இழை மேவு கலை அல்குல் ஏந்திழையாள் ஒருபாலாய்
ஒருபால் எள்காது
உழை மேவும் உரிஉடுத்த ஒருவன் இருப்பு இடம் என்பர்
உம்பர் ஓங்கு
கழை மேவு மடமந்தி மழைகண்டு மகவினொடும்
புகவொண் கல்லின்
முழை மேவு மால்யானை இரைதேரும் வளர்சாரல்
முதுகுன்றமே. 5

நகையார் வெண் தலைமாலை முடிக்கணிந்த நாதனிடம்
நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டம் கொண்டு இரண்டு கரை அருகும்
மறியமோதித்
தகை ஆரும் வரம்பு இடறிச் சாலிகழுநீர்க் குவளை
சாயப்பாய்ந்து
முகைஆர் செந்தாமரைகள் முகம் மலர வயல்தழுவு
முதுகுன்றமே. 6

அறம் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ் இருந்துஅருளி
அமரர் வேண்ட
நிறம் கிளர் செந்தாமரையோன் சிரம் ஐந்தின் ஒன்று அறுத்த
நிமலர்கோயில்
திறங்கொள் மணித்தரளங்கள் வர திரண்டு அங்கு எழில்குறவர்
சிறுமிமார்கள்
முறங்களினால் கொழித்து மணி செல விலக்கி முத்து உலைப் பெய்
முதுகுன்றமே. 7

கதிர் ஒளிய நெடுமுடி பத்து உடைய கடல் இலங்கையர்கோன்
கண்ணும் வாயும்
பிதிர் ஒளிய கனல்பிறங்கப் பெருங் கயிலைமலையை நிலை
பெயர்த்த ஞான்று
மதில் அளகைக்கு இறை முரல மலர் அடி ஒன்று ஊன்றி மறை
பாட ஆங்கே
முதிர் ஒளிய சுடர் நெடுவாள் முன் ஈந்தான் வாய்ந்த பதி
முதுகுன்றமே. 8

பூ ஆர் பொன் தவிசின்மிசை இருந்தவனும் பூந்துழாய்
புனைந்த மாலும்
ஓவாது கழுகு ஏனம்ஆய் உயர்ந்து ஆழ்ந்து உற நாடி
உண்மை காணாத்
தே ஆரும் திருவுருவன் சேரும் மலை செழு நிலத்தை
மூட வந்த
மூவாத முழங்கு ஒலிநீர் கீழ் தாழ மேல் உயர்ந்த
முதுகுன்றமே. 9

மேனியில் சீவரத்தாரும் விரி தரு தட்டுஉடையாரும்
விரவல் ஆகா
ஊனிகளாய் உள்ளார் சொல் கொள்ளாது உம் உள் உணர்ந்து அங்கு
உய்மின் தொண்டீர்
ஞானிகளாய் உள்ளார்கள் நால்மறையை முழுது உணர்ந்து ஐம்
புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்து இருந்து தவம்புரியும்
முதுகுன்றமே. 10

முழங்கு ஒலிநீர் முத்தாறு வலம்செயும் முதுகுன்றத்து
இறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்து உடைய கழுமலமே
பதியாக் கொண்டு
தழங்கு எரிமூன்று ஓம்பு தொழில் தமிழ் ஞானசம்பந்தன்
சமைத்த பாடல்
வழங்கும் இசை கூடும்வகை பாடும் அவர் நீடு உலகம்
ஆள்வார் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

331. திருமுதுகுன்றம்

திருமுறை : 2/64 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா என்று அங்கு அடியார் தங்கட்கு அருள்செய்வாய்
ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய் என்று ஏத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே. 1

எந்தை இவன் என்று இரவி முதலா இறைஞ்சுவார்
சிந்தை உள்ளே கோயில் ஆகத் திகழ்வானை
மந்தி ஏறி இனம் மாமலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே. 2

நீடும் அலரும் புனலும் கொண்டு நிரந்தரம்
தேடும் அடியார் சிந்தை உள்ளே திகழ்வானைப்
பாடும் குயிலின் அயலே கிள்ளை பயின்றுஏத்த
மூடும் சோலை முகில்தோய் கோயில் முதுகுன்றே. 3

தெரிந்த அடியார் சிவனே என்று திசைதோறும்
குருந்த மலரும் குரவின் அலரும் கொண்டுஏந்தி
இருந்தும் நின்றும் இரவும் பகலும் ஏத்தும்சீர்
முரிந்து மேகம் தவழும் சோலை முதுகுன்றே. 4

வைத்த நிதியே மணியே என்று வருந்தித்தம்
சித்தம் நைந்து சிவனே என்பார் சிந்தையார்
கொத்தார் சந்தும் குரவும் வாரிக் கொணர்ந்துஉந்தும்
முத்தாறு உடைய முதல்வர் கோயில் முதுகுன்றறே. 5

வம்பார் கொன்றை வன்னி மத்தம் மலர்தூவி
நம்பா என்ன நல்கும் பெருமான் உறைகோயில்
கொம்பார் குரவு கொகுடி முல்லை குவிந்துளங்கும்
மொய்ம்பார் சோலை வண்டு பாடும் முதுகுன்றே. (6 –7)

வாசம் கமழும் பொழில்சூழ் இலங்கை வாழ்வேந்தை
நாசம் செய்த நங்கள் பெருமான் அமர்கோயில்
பூசை செய்து அடியார் நின்று புகழ்ந்துஏத்த
மூசி வண்டு பாடும் சோலை முதுகுன்றே. 8

அல்லி மலர்மேல் அயனும் அரவின் அணையானும்
சொல்லிப் பரவித் தொடர வொண்ணாச் சோதியூர்
கொல்லை வேடர்கூடி நின்று கும்பிட
முல்லை அயலே முறுவல் செய்யும் முதுகுன்ற. 9

கருகும் உடலார் கஞ்சி உண்டு கடுவே தின்று
உருகு சிந்தை இல்லார்க்கு அயலான் உறைகோயில்
திருகல் வேய்கள் சிறிதே வளையச் சிறுமந்தி
முருகின் பணைமேல் இருந்து நடம்செய் முதுகுன்றே.10

அறையார் கடல்சூழ் அந்தண் காழிச் சம்பந்தன்
முறையால் முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றைக்
குறையாப் பனுவல் கூடிப் பாட வல்லார்கள்
பிறையார் சடைஎம் பெருமான் கழல்கள் பிரியாரே. 11

திருச்சிற்றம்பலம்

332. திருமுதுகுன்றம்

திருமுறை : 3/34 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : பழமலைநாதர் இறைவியார் : பெரிய நாயகி

வண்ண மாமலர் கொடு வானவர் வழிபட
அண்ணலார் ஆயிழையாளொடும் அமர்வு இடம்
விண்ணின் மாமழை பொழிந்து இழிய வெள் அருவி சேர்
திண்ணிலார் புறவு அணி திருமுதுகுன்றமே. 1

வெறி உலாம் கொன்றை அம் தாரினான் மேதகு
பொறி உலாம் அரவு அசைத்து ஆடி ஓர் புண்ணியன்
மறி உலாம் கையினான் மங்கையோடு அமர்வு இடம்
செறியுளார் புறவு அணி திருமுதுகுன்றமே. 2

ஏறினார் விடைமிசை இமையவர் தொழ உமை
கூறனார் கொல் புலித் தோலினார் மேனிமேல்
நீறனார் நிறைபுனல் சடையனார் நிகழ்வு இடம்
தேறலார் பொழில் அணி திருமுதுகுன்றமே. 3

உரையினார் உறுபொருள் ஆயினான் உமையொடும்
விரையினார் கொன்றைசேர் சடையினார் மேவு இடம்
உரையினார் ஒலி என ஓங்கு முத்தாறு மெய்த்
திரையினார் எரிபுனல் திருமுதுகுன்றமே. 4

கடிய ஆயின குரல் களிற்றினைப் பிளிற ஓர்
இடிய வெங்குரலினோடு ஆளி சென்றிடு நெறி
வடிய வாய் மழுவினன் மங்கையோடு அமர்வு இடம்
செடியதார் புறவு அணி திருமுதுகுன்றமே. 5

கானமார் கரியின் ஈர் உரிவையார் பெரியது ஓர்
வானமார் மதியினோடு அரவர் தாம் மருவு இடம்
ஊனம் ஆயின பிணிஅவை கெடுத்து உமையொடும்
தேனமார் பொழில் அணி திருமுதுகுன்றமே. 6

மஞ்சர்தாம் மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோடு ஆடவர் விரும்பவே
அம்சொலாள் உமையொடும் அமர்வு இடம் அணிகலைச்
செஞ் சொலார் பயில்தரும் திருமுதுகுன்றமே. 7

காரினார் அமர்தரும் கயிலை நல் மலையினை
ஏரினார் முடி இராவணன் எடுத்தான் இற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தரும் திருமுதுகுன்றமே. 8

ஆடினார் கானத்து அருமறை இன்பொருள்
பாடினார் பல புகழ்ப் பரமனார் இணையடி
ஏடினார் மலர்மிசை அயனும்மால் இருவரும்
தேடினார் அறிவொணார் திருமுதுகுன்றமே. 9

மாசுமெய் தூசுகொண்டு உழல்சமண் சாக்கியர்
பேசுமெய் உளவல்ல பேணுவீர் காணுமின்
வாசமார் தருபொழில் வண்டினம் இசைசெயத்
தேசமார் புகழ்மிகும் திருமுதுகுன்றமே. 10

திண்ணினார் புறவணி திருமுதுகுன்றரை
நண்ணினான் காழியுள் ஞானசம்பந்தன் சொல்
எண்ணினார் ஈர் ஐந்து மாலையும் இயலுமாப்
பண்ணினால் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

333. திருமுதுகுன்றம்

திருமுறை : 3/99 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : பழமலைநாதர் இறைவியார் : பெரிய நாயகி

முரசு அதிர்ந்து எழுதரு முதுகுன்றம் மேவிய
பரசு அமர் படை உடையீரே
பரசு அமர் படை உடையீர் உமைப் பரவுவார்
அரசர்கள் உலகில் ஆவாரே. 1

மொய் குழலாளொடு முதுகுன்றம் மேவிய
பையரவம் அசைத்தீரே
பையரவம் அசைத்தீர் உமைப் பாடுவார்
நைவு இலர் நாள்தொறும் நலமே. 2

முழவு அமர்பொழில் அணி முதுகுன்றம் மேவிய
மழவிடை அது உடையீரே
மழவிடை அது உடையீர் உமை வாழ்த்துவார்
பழியொடு பகையிலர் தாமே. 3

முருகு அமர் பொழில் அணி முதுகுன்றம் மேவிய
உருவமர் சடை முடியீரே
உருவமர் சடை முடியீர் உமை ஓதுவார்
திருவொடு தேசினர் தாமே. (4 – 7)

முத்தி தரும் உயர் முதுகுன்றம் மேவிய
பத்துமுடி அடர்த்தீரே
பத்துமுடி அடர்த்தீர் உமைப் பாடுவார்
சித்தம் நல்லஅவ் அடியாரே. 8

முயன்றவர் அருள்பெறு முதுகுன்றம் மேவி அன்று
இயன்றவர் அறிவு அரியீரே
இயன்றவர் அறிவு அரியீர் உமை ஏத்துவார்
பயன்தலை நிற்பவர் தாமே. 9

மொட்டு அலர் பொழில் அணி முதுகுன்றம் மேவிய
கட்டு அமண் தேரைக் காய்ந்தீரே
கட்டு அமண் தேரைக் காய்ந்தீர் உமைக் கருதுவார்
சிட்டர்கள் சீர் பெறுவாரே. 10

மூடிய சோலைசூழ் முதுகுன்றத்து ஈசனை
நாடிய ஞானசம் பந்தன்
நாடிய ஞானசம் பந்தன செந்தமிழ்
பாடிய அவர்பழி இலரே. 11

திருச்சிற்றம்பலம்

334. திருநெல்வெண்ணெய்

திருமுறை : 3/96 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி
இறைவர் : வெண்ணெயப்பர் இறைவியார் : நீலமலர்க்கண்ணி

நல்வெண்ணெய் விழுதுபெய்து ஆடுதிர் நாள்தொறும்
நெல்வெண்ணெய் மேவிய நீரே
நெல்வெண்ணெய் மேவிய நீர் உமை நாள்தொறும்
சொல்வண்ணம் இடுவது சொல்லே. 1

நிச்சலும் அடியவர் தொழுதுஎழு நெல்வெண்ணெய்க்
கச்சுஇள அரவு அசைத்தீரே
கச்சுஇள அரவசைத்தீர் உமைக் காண்பவர்
அச்சமொடு அருவினை இலரே. 2

நிரைவிரி தொல்புகழ் நெல்வெண்ணெய் மேவிய
அரைவிரி கோவணத் தீரே
அரைவிரி கோவணத்தீர் உமை அலர்கொடு
உரை விரிப்போர் உயர்ந்தோரே. 3

நீர்மல்கு தொல்புகழ் நெல்வெண்ணெய் மேவிய
ஊர்மல்கி உறைய வல்லீரே
ஊர்மல்கி உறைய வல்லீர் உமை உள்குதல்
பார்மல்கு புகழ்அவர் பண்பே. 4

நீடுஇளம் பொழிலணி நெல்வெண்ணெய் மேவிய
ஆடுஇளம் பாப்பு அசைத்தீரே
ஆடுஇளம் பாப்பு அசைத்தீர் உமை அன்பொடு
பாடுஉளம் உடையவர் பண்பே. 5

நெற்றியோர் கண்ணுடை நெல்வெண்ணெய் மேவிய
பெற்றிகொள் பிறை நுதலீரே
பெற்றிகொள் பிறை நுதலீர் உமைப் பேணுதல்
கற்றறி வோர்கள் தம் கடனே. 6

நிறையவர் தொழுதெழு நெல்வெண்ணெய் மேவிய
கறையணி மிடறு உடையீரே
கறையணி மிடறு உடையீர் உமைக் காண்பவர்
உறைவதும் உம்அடிக் கீழே. 7

நெருங்கிய பொழிலணி நெல்வெண்ணெய் மேவியன்று
அரக்கனை அசைவு செய்தீரே
அரக்கனை அசைவு செய்தீர் உமை அன்புசெய்து
இருக்க வல்லார் இடர் இலரே. 8

நிறைவிரி சடைமுடி நெல்வெண்ணெய் மேவியன்று
இருவரை இடர்கள் செய்தீரே
இருவரை இடர்கள் செய்தீர் உமை இசைவொடு
பரவ வல்லார் பழியிலரே. 9

நீக்கிய புனல்அணி நெல்வெண்ணெய் மேவிய
சாக்கியச் சமண் கெடுத்தீரே
சாக்கியச் சமண் கெடுத்தீர் உமைச் சார்வது
பாக்கியம் உடையவர் பண்பே. 10

நிலமல்கு தொல்புகழ் நெல்வெண்ணெய் ஈசனை
நலம்மல்கு ஞானசம்பந்தன்
நலம்மல்கு ஞானசம்பந்தன செந்தமிழ்
சொல மல்குவார் துயர் இலரே. 11

திருச்சிற்றம்பலம்

335. திருக்கோவலூர் வீரட்டம்

திருமுறை : 2/100 பண் : நட்டராகம் இராகம் : பந்துவராளி
இறைவர் : வீரட்டநாதர் இறைவியார் : சிவாநந்தவல்லி

படை கொள் கூற்றம் வந்து மெய்ப் பாசம் விட்ட போதின்கண்
இடைகொள்வார் எமக்கு இலை எழுக போது நெஞ்சமே
குடை கொள் வேந்தன்மூதாதை குழகன் கோவலூர்தனுள்
விடைஅது ஏறும் கொடியினான் வீரட்டானம் சேர்துமே. 1

கரவலாளர்தம் மனைக்கடைகள்தோறும் கால் நிமிர்த்து
இரவல் ஆழி நெஞ்சமே இனியது எய்த வேண்டில் நீ
குரவம் ஏறி வண்டுஇனம் குழலொடு யாழ்செய் கோவலூர்
விரவி நாறு கொன்றையான் வீரட்டானம் சேர்துமே. 2

உள்ளத்தீரே போதுமின் உறுதி ஆவது அறிதிரேல்
அள்ளல் சேற்றில் கால்இட்டு இங்கு அவலத்துள் அழுந்தாதே
கொள்ளப் பாடு கீதத்தான் குழகன் கோவலூர்தனுள்
வெள்ளம் தாங்கு சடையினான் வீரட்டானம் சேர்துமே.3

கனைகொள் இருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமும்
இனையபலவும் மூப்பினோடு எய்தி வந்து நலியாமுன்
பனைகள் உலவு பைம்பொழில் பழனம் சூழ்ந்த கோவலூர்
வினையை வென்ற வேடத்தான் வீரட்டானம் சேர்துமே.4

உளம் கொள் போகம் உய்த்திடார் உடம்பு இழந்தபோதின்கண்
துள்ங்கி நின்று நாள்தொறும் துயரல் ஆழி நெஞ்சமே
வளம் கொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விளங்கு கோவணத்தினான் வீரட்டானம் சேர்துமே. 5

கேடுமூப்புச்சாக்காடு கெழுமி வந்து நாள்தொறும்
ஆடு போல நரைகள்ஆய் யாக்கை போக்குஅது அன்றியும்
கூடி நின்று பைம்பொழில் குழகன் கோவலூர்தனுள்
வீடு காட்டும் நெறியினான் வீரட்டானம் சேர்துமே. 6

உரையும் பாட்டும் தளர்வு எய்தி உடம்பு மூத்தபோதின்கண்
நரையும் திரையும் கண்டு எள்கி நகுவர் நமர்கள் ஆதலால்
வரை கொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விரை கொள் சீர் வெண்நீற்றினான் வீராட்டானம்சேர்துமே.7

ஏதம் மிக்க மூப்பினோடு இருமல் ஈளை என்று இவை
ஊதல் ஆக்கை ஓம்புவீர் உறுதி ஆவது அறிதிரேல்
போதில் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர்தனுள்
வேதம் ஓது நெறியினான் வீராட்டானம் சேர்துமே. 8

ஆறு பட்ட புன்சடை அழகன் ஆயிழைக்கு ஒரு
கூறு பட்ட மேனியான் குழகன் கோவலூர்தனுள்
நீறு பட்ட கோலத்தான் நீலகண்டன் இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானம் சேர்துமே. 9

குறிகொள் ஆழி நெஞ்சமே கூறை துவர் இட்டார்களும்
அறிவு இலாத அமணர் சொல் அவத்தம்ஆவது அறிதிரேல்
பொறி கொள் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர்தனுள்
வெறி கொள் கங்கை தாங்கினான் வீரட்டானம் சேர்துமே. 10

கழியொடு உலவு கானல் சூழ் காழி ஞானசம்பந்தன்
பழிகள் தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆதலால்
அழிவுஇலீர் கொண்டு ஏத்துமின் அம் தண் கோவலூர்தனுள்
விழி கொள் பூதப்படையினான் வீராட்டானம் சேர்துமே.11

திருச்சிற்றம்பலம்

336. திருஅறையணிநல்லூர்

திருமுறை : 2/77 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : அறையணிநாதர் இறைவியார் : அருள்நாயகி

பீடினால் பெரியோர்களும் பேதமை கெடத் தீது இலா
வீடினால் உயர்ந்தார்களும் வீடுஇலார் இளவெண்மதி
சூடினார் மறை பாடினார் சுடலை நீறு அணிந்தார் அழல்
ஆடினார் அறையணிநல்லூர் அம் கையால் தொழுவார்களே.1

இலையின் ஆர் சூலம் ஏறு உகந்து ஏறியே இமையோர் தொழ
நிலையினால் ஒரு கால் உறச் சிலையினால் மதில் எய்தவன்
அலையின் ஆர் புனல் சூடிய அண்ணலார் அறையணி நல்லூர்
தலையினால் தொழுது ஓங்குவார் நீங்குவார் தடுமாற்றமே. 2

என்பினார் கனல் சூலத்தார் இலங்கும் மா மதி உச்சியான்
பின்பினால் பிறங்கும் சடைப் பிஞ்ஞகன் பிறப்புஇலி என்று
முன்பினார் மூவர்தாம் தொழு முக்கண் மூர்த்திதன் தாள்களுக்கு
அன்பினார் அறையணிநல்லூர் அம் கையால் தொழுவார்களே.3

விரவு நீறு பொன்மார்பினில் விளங்கப் பூசிய வேதியன்
உரவு நஞ்சு அமுதாக உண்டு உறுதி பேணுவது அன்றியும்,
அரவு நீள்சடைக் கண்ணியார் அண்ணலார் அறையணிநல்லூர்
பரவுவார் பழி நீங்கிடப் பறையும் தாம் செய்த பாவமே. 4

தீயின் ஆர் திகழ் மேனியாய் தேவர்தாம்தொழு தேவன் நீ
ஆயினாய் கொன்றையாய் அனல் அங்கையாய் அறையணிநல்லூர்
மேயினார் தம தொல்வினை வீட்டினாய் வெய்ய காலனைப்
பாயினாய் அதிர் கழலினாய் பரமனே அடி பணிவனே. 5

விரையின் ஆர் கொன்றை சூடியும் வேக நாகமும் வீக்கிய
அரையினார் அறையணிநல்லூர் அண்ணலார் அழகுஆயதுஓர்
நரையின் ஆர் விடை ஊர்தியார் நக்கனார் நறும்போது சேர்
உரையினால் உயர்ந்தார்களும் உரையினால் உயர்ந்தார்களே.6

வீரம் ஆகிய வேதியர் வேக மா களியானையின்
ஈரம் ஆகிய உரிவை போர்த்து அரிவைமேல் சென்ற எம் இறை
ஆரம் ஆகிய பாம்பினார் அண்ணலார் அறையணி நல்லூர்
வாரமாய் நினைப்பார்கள் தம் வல்வினை அவை மாயுமே.7

தக்கனார் பெருவேள்வியைத் தகர்த்து உகந்தவன் தாழ்சடை
முக்கணான் மறை பாடிய முறைமையான் முனிவர் தொழ
அக்கினோடு எழில் ஆமை பூண் அண்ணலார் அறையணிநல்லூர்
நக்கனார்அவர் சார்வுஅலால் நல்கு சார்வு இலோம் நாங்களே.8

வெய்ய நோய் இலர் தீது இலர் வெறியராய்ப் பிறர் பின் செலார்
செய்வதே அலங்காரமாம் இவைஇவை தேறி இன்புஉறில்
ஐயம் ஏற்று உணும் தொழிலர்ஆம் அண்ணலார் அறையணி நல்லூர்ச்
சைவனார்அவர் சார்வுஅலால் யாதும்சார்வு இலோம் நாங்களே.9

வாக்கியம் சொல்லி யாரொடும் வகை அலா வகை செய்யன்மின்
சாக்கியம் சமண் என்று இவை சாரேலும் அரணம் பொடி
ஆக்கியம் மழுவாள்படை அண்ணலார் அறையணிநல்லூர்ப்
பாக்கியம் குறை உடையீரேல் பறையும்ஆம் செய்த பாவமே.10

கழி உலாம் கடல் கானல் சூழ் கழுமலம் அமர் தொல்பதிப்
பழி இலா மறை ஞானசம்பந்தன் நல்லது ஓர் பண்பினார்
மொழியினால் அறையணி நல்லூர் முக்கண்மூர்த்திகள் தாள் தொழக்
கெழுவினார் அவர் தம்மொடும் கேடுஇல் வாழ் பதி பெறுவரே.11

திருச்சிற்றம்பலம்

337. திருவடுகூர்

திருமுறை : 1/87 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : வடுகூர்நாதர் இறைவியார் : வடுவகிர்க்கண்ணியம்மை

சுடு கூர் எரிமாலை அணிவர் சுடர் வேலர்
கொடுகு ஊர் மழுவாள் ஒன்று உடையார் விடை ஊர்வர்
கடுகு ஊர் பசி காமம் கவலை பிணி இல்லார்
வடுகூர் புனல் சூழ்ந்த வடுகூர் அடிகளே. 1

பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்று ஆடி
ஏலும் சுடுநீறும் என்பும் ஒளி மல்கக்
கோலம் பொழில் சோலைக் கூடி மடஅன்னம்
ஆலும் வடுகூரில் ஆடும் அடிகளே. 2

சூடும் இளந்திங்கள் சுடர்பொன் சடைதன்மேல்
ஓடும் களியானை உரி போர்த்து உமை அஞ்ச
ஏடு மலர் மோந்து அங்கு எழில் ஆர் வரிவண்டு
பாடும் வடுகூரில் ஆடும் அடிகளே. 3

துவரும் புரிசையும் துதைந்த மணி மாடம்
கவர எரியோட்டிக் கடிய மதில் எய்தார்
கவரும் அணி கொல்லைக் கடிய முலை நல்லார்
பவரும் வடுகூரில் ஆடும் அடிகளே. 4

துணி ஆர் உடைஆடை துன்னி அரைதன்மேல்
தணியா அழல்நாகம் தரியா வகைவைத்தார்
பணி ஆர் அடியார்கள் பலரும் பயின்று ஏத்த
அணி ஆர் வடுகூரில் ஆடும் அடிகளே. 5

தளரும் கொடிஅன்னாள் தன்னோடு உடனாகிக்
கிளரும் அரவு ஆர்த்துக் கிளரும் முடிமேல் ஓர்
வளரும் பிறை சூடி வரிவண்டு இசை பாட
ஒளிரும் வடுகூரில் ஆடும் அடிகளே. 6

நெடியர் சிறிதுஆய நிரம்பா மதி சூடும்
முடியார் விடை ஊர்வர் கொடியர் மொழி கொள்ளார்
கடிய தொழில் காலன் மடிய உதைகொண்ட
அடியர் வடுகூரில் ஆடும் அடிகளே. 7

பிறையும் நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பல பாடி மயானத்து உறைவாரும்
பறையும் அதிர் குழலும் போலப் பலவண்டு ஆங்கு
அறையும் வடுகூரில் ஆடும் அடிகளே. 8

சந்தம் மலர் வேய்ந்த சடையின் இடைவிம்மு
கந்தம் மிகு திங்கள் சிந்து கதிர்மாலை
வந்து நயந்து எம்மை நன்றும் அருள் செய்வார்
அம்தண் வடுகூரில் ஆடும் அடிகளே. 9

திருமால் அடிவீழத் திசை நான்முகன்ஆய
பெருமான் உணர்கில்லாப் பெருமான் நெடு முடி சேர்
செரு மால்விடைஊரும் செம்மான் திசைவில்லா
அரு மா வடுகூரில் ஆடும் அடிகளே. 10

படி நோன்பு அவை ஆவர் பழியில் புகழான
கடிநாள் நிகழ் சோலை கமழும் வடுகூரைப்
படிஆன சிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞானம் வல்லார் அடி சேர்வார்களே. 11

திருச்சிற்றம்பலம்

338. திருமாணிகுழி

திருமுறை : 3/77 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : மாணிக்கவரதர் இறைவியார் : மாணிக்கவல்லி

பொன்னியல் பொருப்பு அரையன் மங்கை ஒரு
பங்கர் புனல் தங்குசடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்தவிறல்
வித்தகர் மகிழ்ந்து உறைவிடம்
கன்னி இளவாளை குதிகொள்ள இள
வள்ளை படர் அள்ளல் வயல்வாய்
மன்னி இளமேதிகள் படிந்து மனை
சேர் உதவிமாணிகுழியே. 1

சோதி மிகு நீறுஅது மெய் பூசி ஒரு
தோல்உடை புனைந்து தெருவே
மாதர் மனைதோறும் இசை பாடிவசி
பேசும் அரனார் மகிழ்வு இடம்
தாதுமலி தாமரை மணம் கமழ
வண்டுமுரல் தண்பழனம் மிக்கு
ஓதம் மலி வேலை புடை சூழ் உலகில்
நீடு உதவிமாணிகுழியே. 2

அம்பு அனைய கண் உமை மடந்தை அவள்
அஞ்சி வெருவச் சினம்உடைக்
கம்ப மதயானை உரிசெய்த அரனார்
கருதி மேய இடமாம்
வம்பு மலி சோலை புடை சூழ மணி
மாடம்அது நீடிஅழகு ஆர்
உம்பரவர்கோன் நகரம் என்ன மிக
மன் உதவிமாணிகுழியே. 3

நித்தம் நியமத் தொழிலன் ஆகிநெடு
மால் குறளன் ஆகி மிகவும்
சித்தமது ஒருக்கி வழிபாடு செய
நின்ற சிவலோகன் இடமாம்
கொத்தலர் மலர்ப்பொழிலின் நீடுகுல
மஞ்ஞைநடம் ஆடல்அது கண்டு
ஒத்த வரிவண்டுகள் உலாவி இசை
பாடு உதவிமாணிகுழியே. 4

மாசில்மதி சூடுசடை மாமுடியர்
வல்அசுரர் தொல்நகரம் முன்
நாசம் அது செய்து நல வானவர்களுக்கு
அருள்செய் நம்பன் இடமாம்
வாசம் மலி மென்குழல் மடந்தையர்கள்
மாளிகையின் மன்னிஅழகார்
ஊசல்மிசை ஏறி இனிதாக இசைபாடு
உதவிமாணிகுழியே. 5

மந்தமலர் கொண்டு வழிபாடு செயும்
மாணி உயிர் வவ்வ மனமாய்
வந்த ஒரு காலன் உயிர் மாள உதை
செய்த மணிகண்டன் இடமாம்
சந்தினொடு கார்அகில் சுமந்து தட மா
மலர்கள் கொண்டு கெடிலம்
உந்து புனல் வந்து வயல் பாயும் மணம்
ஆர் உதவிமாணிகுழியே. 6

எண் பெரிய வானவர்கள் நின்றுதுதி
செய்ய இறையே கருணையாய்
உண்புஅரிய நஞ்சு அதனை உண்டு உலகம்
உய்ய அருள் உத்தமன் இடம்
பண் பயிலும் வண்டு பல கெண்டி மது
உண்டு நிறை பைம்பொழிலின் வாய்
ஒண்பலவின் இன்கனி சொரிந்து மணம்
நாறு உதவிமாணிகுழியே. 7

எண்ணம்அது இன்றி எழிலார் கைலை
மாமலை எடுத்த திறலார்
திண்ணிய அரக்கனை நெரித்து அருள்
புரிந்த சிவலோகன் இடமாம்
பண் அமரும் மென்மொழியின் ஆர் பணை
முலைப் பவளவாய் அழகு அது ஆர்
ஒண்ணுதல் மடந்தையர் குடைந்து புனல்
ஆடு உதவிமாணிகுழியே. 8

நேடும் அயனோடு திருமாலும் உணரா
வகை நிமிர்ந்து முடிமேல்
ஏடு உலவு திங்கள் மத மத்தம் இதழிச்
சடை எம்ஈசன் இடமாம்
மாடு உலவு மல்லிகைக் குருந்து கொடி
மாதவி செருந்தி குரவின்
ஊடு உலவு புன்னை விரை தாது மலி
சேர் உதவிமாணிகுழியே. 9

மொட்டை அமண்ஆதர் முது தேரர் மதி
இல்லிகள் முயன்றன படும்
முட்டைகள் மொழிந்த மொழி கொண்டு அருள்
செய்யாத முதல்வன் தன் இடமாம்
மட்டை மலி தாழை இளநீர் முதிய
வாழையில் விழுந்த அதரில்
ஒட்ட மலி பூகம்நிரை தாறு உதிர
ஏறு உதவிமாணிகுழியே. 10

உந்தி வரு தண்கெடிலம் ஓடுபுனல்
சூழ் உதவிமாணிகுழிமேல்
அந்திமதி சூடிய எம்மானை அடி
சேரும் அணிகாழி நகரான்
சந்தம் நிறை தண்தமிழ்தெரிந்து உணரும்
ஞானசம்பந்தன் அது சொல்
முந்தி இசைசெய்து மொழிவார்கள் உடையார்கள்
நெடுவான நிலனே. 11

திருச்சிற்றம்பலம்

339. திருப்பாதிரிப்புலியூர்

திருமுறை : 2/121 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி
இறைவர் : தோன்றாத்துணைநாதர் இறைவியார் : தோகைநாயகி

முன்னம் நின்ற முடக்கால் முயற்கு அருள்செய்து நீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப்புலியூர் உளான்
தன்னை நின்று வணங்கும்தனைத் தவம் இல்லிகள்
பின்னை நின்ற பிணி யாக்கையைப் பெறுவார்களே. 1

கொள்ளி நக்க பகுவாய பேய்கள் குழைந்து ஆடவே
முள் இலவம் முதுகாட்டு உறையும் முதல்வன் இடம்
புள்இனங்கள் பயிலும் பாதிரிப்புலியூர்தனை
உள்ள நம்மேல் வினைஆயின ஒழியுங்களே. 2

மருள் இல் நல்லார் வழிபாடு செய்யும் மழுவாளர் மேல்
பொருள் இல் நல்லார் பயில் பாதிரிப்புலியூர் உளான்
வெருளின், மானின் பிணை நோக்கல்செய்து வெறிசெய்த பின்
அருளி ஆகத்திடை வைத்ததுவும் அழகாகவே. 3

போதினாலும் புகையாலும் உய்த்தே அடியார்கள் தாம்
போதினாலே வழிபாடு செய்யப் புலியூர்தனுள்
ஆதிநாலும் அவலம் இலாத அடிகள்மறை
ஓதிநாளும் இடும்பிச்சை ஏற்றுண்டு உணப்பாலதே.4

ஆகம் நல்லார் அமுதுஆக்க உண்டான் அழல்ஐந்தலை
நாகம் நல்லார் பரவநயந்து அங்குஅரை ஆர்த்தவன்
போகம் நல்லார் பயிலும் பாதிரிப்புலியூர்தனுள்
பாகம் நல்லாளொடும் நின்ற எம் பரமேட்டியே. 5

மதியம் மொய்த்த கதிர்போல் ஒளிம் மணல் கானல்வாய்ப்
புதிய முத்தம் திகழ் பாதிரிப்புலியூர் எனும்
பதியில் வைக்கப்படும் எந்தை தன் பழம் தொண்டர்கள்
குதியும் கொள்வர் விதியும் செய்வர் குழகாகவே. 6

கொங்கு அரவப்படு வண்டு அறை குளிர்கானல்வாய்ச்
சங்கு அரவப் பறையின் ஒலி அவை சார்ந்து எழப்
பொங்கு அரவம் உயர் பாதிரிப்புலியூர்தனுள்
அங்கு அரவம் அரையில் அசைத்தானை அடைமினே. 7

வீக்கம் எழும் இலங்கைக்கு இறை விலங்கல் இடை
ஊக்கம் ஒழிந்து அலற விரலால் இறை ஊன்றினான்
பூக் கமழும் புனல் பாதிரிப்புலியூர்தனை
நோக்க மெலிந்து அணுகா வினை நுணுகுங்களே.8

அன்னம் தாவும் அணி ஆர் பொழில் மணி ஆர் புன்னை
பொன் அம்தாது சொரி பாதிரிப்புலியூர்தனுள்
முன்னம் தாவி அடிமூன்று அளந்தவன் நான்முகன்
தன்னம் தாள் உற்று உணராதது ஓர் தவ நீதியே. 9

உரிந்த கூறை உருவத்தொடு தெருவத்துஇடைத்
திரிந்து தின்னும் சிறு நோன்பரும் பெருந்தேரரும்
எரிந்து சொன்ன உரை கொள்ளாதே எடுத்து ஏத்துமின்
புரிந்த வெண்நீற்று அண்ணல் பாதிரிப்புலியூரையே. 10

அம்தண் நல்லார் அகன் காழியுள் ஞானசம்
பந்தன் நல்லார் பயில் பாதிரிப்புலியூர்தனுள்
சந்த மாலைத்தமிழ் பத்துஇவை தரித்தார்கள்மேல்
வந்து தீய அடையாமையால் வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

340. திருப்புறவார்பனங்காட்டூர்

திருமுறை : 2/53 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : பனங்காட்டீச்சுவரர் இறைவியார் : புறவம்மை

விண் அமர்ந்தன மும்மதில்களை
வீழ வெங்கணையால் எய்தாய் விரி
பண் அமர்ந்து ஒலிசேர் புறவார் பனங்காட்டூர்ப்
பெண் அமர்ந்து ஒரு பாகம்ஆகிய
பிஞ்ஞகா பிறைசேர் நுதலிடைக்
கண் அமர்ந்தவனே கலந்தார்க்கு அருளாயே. 1

நீடல் கோடல் அலர வெண்முல்லை
நீர் மலர் நிறைத் தாது அளம்செயப்
பாடல் வண்டு அறையும் புறவு ஆர் பனங்காட்டூர்த்
தோடு இலங்கிய காது அயல்மின்
துளங்க வெண்குழை துள்ள நள்இருள்
ஆடும் சங்கரனே அடைந்தார்க்கு அருளாயே. 2

வாளையும் கயலும் மிளிர் பொய்கை
வார் புனல் கரை அருகுஎலாம் வயல்
பாளை ஒண் கமுகம் புறவு ஆர் பனங்காட்டூர்ப்
பூளையும் நறுங்கொன்றையும் மத
மத்தமும் புனைவாய் கழல் இணைத்
தாளையே பரவும் தவத்தார்க்கு அருளாயே. 3

மேய்த்து இளஞ்செந்நெல் மென் கதிர் கவ்வி
மேற்படுதலில் மேதி வைகறை
பாய்ந்த தண்பழனப் புறவார் பனங்காட்டூர்
ஆய்ந்த நால்மறை பாடி ஆடும்
அடிகள் என்று என்று அரற்றி நன்மலர்
சாய்ந்து அடி பரவும் தவத்தார்க்கு அருளாயே. 4

செங்கயல்லொடு சேல்செருச் செயச்
சீறியாழ் முரல் தேன் இனத்தொடு
பங்கயம் மலரும் புறவார் பனங்காட்டூர்க்
கங்கையும் மதியும் கமழ்சடைக்
கேண்மையாளொடும் கூடி மான்மறி
அங்கை ஆடலனே அடியார்க்கு அருளாயே. 5

நீரினார் வரை கோலி மால்கடல்
நீடிய பொழில் சூழ்ந்து வைகலும்
பாரின் ஆர் பிரியாப் புறவார் பனங்காட்டூர்க்
காரின் ஆர் மலர்க்கொன்றை தாங்கு
கடவுள் என்று கைகூப்பி நாள்தொறும்
சீரினால் வணங்கும் திறத்தார்க்கு அருளாயே. 6

கை அரிவையர் மெல்விரல் அவை
காட்டி அம்மலர்க் காந்தள் அம் குறி
பைஅராவிரியும் புறவார் பனங்காட்டூர்
மெய்அரிவை ஒர்பாகம் ஆகவும்
மேவினாய் கழல் ஏத்தி நாள்தொறும்
பொய்யிலா அடிமை புரிந்தார்க்கு அருளாயே. 7

தூவி அம்சிறை மெல்நடை அனம்
மல்கி ஒல்கிய தூ மலர்ப் பொய்கைப்
பாவில் வண்டு அறையும் புறவு ஆர் பனங்காட்டூர்
மேவி அந்நிலையாய் அரக்கன்
தோள் அடர்த்து அவன் பாடல் கேட்டுஅருள்
ஏவிய பெருமான் என்பவர்க்கு அருளாயே. 8

அந்தண் மாதவி புன்னை நல்ல
அசோகமும் அரவிந்தம் மல்லிகை
பைந்தண் ஞாழல்கள் சூழ் புறவார் பனங்காட்டூர்
எந்து இளம்முகில் வண்ணன் நான்முகன்
என்று இவர்க்கு அரிதாய் நிமிர்ந்ததொர்
சந்தம் ஆயவனே தவத்தார்க்கு அருளாயே. 9

நீணம் ஆர் முருகு உண்டு வண்டுஇனம்
நீலமாமலர் கவ்வி நேரிசை
பாணி யாழ்முரலும் புறவுஆர்பனங்காட்டூர்
நாண் அழிந்து உழல்வார் சமணரும்
நண்பில் சாக்கியரும் நகத்தலை
ஊண்: உரியவனே உகப்பார்க்கு அருளாயே. 10

மையின் ஆர் மணி போல் மிடற்றனை
 மாசு இல் வெண்பொடிப் பூசு மார்பனைப்
பைய தேன் பொழில் சூழ் புறவுஆர்பனங்காட்டூர்
ஐயனைப் புகழ்ஆன காழியுள்
 ஆய்ந்த நால்மறை ஞானசம்பந்தன்
செய்யுள் பாடவல்லார் சிவலோகம் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

341. திருஆமாத்தூர்

திருமுறை : 2/44 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : அழகியநாதர் இறைவியார் : அழகியநாயகி

துன்னம் பெய் கோவணமும் தோலும் உடைஆடை
பின் அம் சடைமேல் ஓர் பிள்ளை மதிசூடி
அன்னம் சேர் தண்கானல் ஆமாத்தூர் அம்மான்தன்
பொன் அம் கழல் பரவாய் பொக்கமும் பொக்கமே. 1

கைம்மாவின்தோல் போர்த்த காபாலி வான்உலகில்
மும் மா மதில் எய்தான் முக்கணான் பேர் பாடி
அம் மா மலர்ச்சோலை ஆமாத்தூர் அம்மான் எம்
பெம்மான் என்று ஏத்தாதார் பேயரின் பேயரே. 2

பாம்பு அரைச் சாத்தி ஓர் பண்டரங்கன் விண்டதுஓர்
தேம்பல்இளமதியம் சூடிய சென்னியான்
ஆம்பல்அம்பூம் பொய்கை ஆமாத்தூர் அம்மான்தன்
சாம்பல் அகலத்தார் சார்பு அல்லால் சார்பு இலமே. 3

கோள் நாகப் பேர்அல்குல் கோல்வளைக்கை மாதராள்
பூண் ஆகம் பாகமாப் புல்கி அவளோடும்
ஆண்ஆகம் காதல்செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்எல்லாம் காணாத கண்களே. 4

பாடல் நெறி நின்றான் பைங்கொன்றைத்தண்தாரே
சூடல் நெறி நின்றான் சூலம் சேர் கையினான்
ஆடல் நெறி நின்றான் ஆமாத்தூர் அம்மான்தன்
வேடநெறி நில்லா வேடமும் வேடமே. 5

சாமவரை வில் ஆகச் சந்தித்த வெங்கணையால்
காவல் மதில் எய்தான் கண்உடை நெற்றியான்
யாவரும் சென்று ஏத்தும் ஆமாத்தூர் அம்மானைத்
தேவர் தலைவணங்கும் தேவர்க்கும் தேவனே. 6

மாறாத வெங் கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீஆடி ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாஎல்லாம் கூறாத நாக்களே. 7

தாளால் அரக்கன் தோள் சாய்த்த தலைமகன் தன்
நாள்ஆதிரை என்றே நம்பன்தன் நாமத்தால்
ஆள்ஆனார் சென்று ஏத்தும் ஆமாத்தூர் அம்மானைக்
கேளாச் செவிஎல்லாம் கேளாச் செவிகளே. 8

புள்ளும் கமலமும் கைக்கொண்டார்தாம் இருவர்
உள்ளும் அவன் பெருமை ஒப்பு அளக்கும் தன்மையதே
அள்ளல் விளைகழனி ஆமாத்தூர் அம்மான் எம்
வள்ளல் கழல் பரவா வாழ்க்கையும் வாழ்க்கையே. 9

பிச்சை பிறர் பெய்யப் பின் சாரக் கோ சாரக்
கொச்சை புலால் நாற ஈர்உரிவை போர்த்து உகந்தான்
அச்சம் தண் மா தேவிக்கு ஈந்தான்தன் ஆமாத்தூர்
நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே. 10

ஆடல் அரவு அசைத்த ஆமாத்தூர் அம்மானைக்
கோடல் இரும்புறவின் கொச்சைவயத் தலைவன்
நாடல் அரிய சீர் ஞானசம்பந்தன்தன்
பாடல்இவை வல்லார்க்கு இல்லைஆம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

342. திருஆமாத்தூர்

திருமுறை : 2/50 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

குன்ற வார்சிலை நாண் அரா அரி
வாளி கூர் எரி காற்றின் மும்மதில்
வென்றவாறு எங்ஙனே விடை ஏறும் வேதியனே
தென்றல் ஆர் மணி மாட மாளிகை
சூளிகைக்கு எதிர் நீண்ட பெண்ணைமேல்
அன்றில் வந்து அணையும் ஆமாத்தூர் அம்மானே. 1

பரவி வானவர்தானவர் பலரும்
கலங்கிட வந்த கார்விடம்
வெருவ உண்டு உகந்த அருள் என்கொல் விண்ணவனே
கரவுஇல் மா மணி பொன் கொழித்து இழி
சந்து கார்அகில் தந்து பம்பைநீர்
அருவி வந்து அலைக்கும் ஆமாத்தூர் அம்மானே. 2

நீண்ட வார்சடை தாழ நேழிழை
பாட நீறு மெய் பூசி மால்அயன்
மாண்ட வார் சுடலை நடம்ஆடும் மாண்பு அது என்
பூண்ட கேழல்மருப்பு அரா விரி
கொன்றை வார்வரி ஆமை பூண் என
ஆண்ட நாயகனே ஆமாத்தூர் அம்மானே. 3

சேலின் நேரன கண்ணி வெண்நகை
மான்விழித்து திருமாதைப் பாகம் வைத்து
ஏல மா தவம் நீ முயல்கின்ற வேடம் இது என்
பாலின் நேர்மொழி மங்கைமார் நடம்
ஆடி இன்இசை பாட நீள் ப்தி
ஆலை சூழ் கழனி ஆமாத்தூர் அம்மானே. 4

தொண்டர் வந்து வணங்கி மா மலர்
தூவி நின் கழல் ஏத்துவார் அவர்
உண்டியால் வருந்த இரங்காதது என்னை கொல்ஆம்
வண்டல் ஆர் கழனிக் கலந்து மலர்ந்த
தாமரை மாதர் வாள்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே. 5

ஓதி ஆரணம் ஆய நுண்பொருள்
அன்று நால்வர் முன் கேட்க நல்நெறி
நீதி ஆலநீழல் உரைக்கின்ற நீர்மையது என்
சோதியே சுடரே சுரும்பு அமர்
கொன்றையாய் திரு நின்றியூர் உறை
ஆதியே அரனே ஆமாத்தூர் அம்மானே. 6

மங்கை வாள்நுதல்மான் மனத்து இடை
வாடி ஊட மணம் கமழ்சடைக்
கங்கையாள் இருந்த கருத்து ஆவது என்னைகொல்ஆம்
பங்கயமது உண்டு வண்டு இசை
பாட மா மயில் ஆட விண் முழவு
அம் கையால் அதிர்க்கும் ஆமாத்தூர் அம்மானே. 7

நின்று அடர்த்திடும் ஐம்புலன் நிலையாத
வண்ணம் நினைந்து உளத்துஇடை
வென்று அடர்த்து ஒருபால் மடமாதை விரும்புதல் என்
குன்று எடுத்த நிசாசரன் திரள்
தோள் இருபதுதான் நெரிதர
அன்று அடர்த்து உகந்தாய் ஆமாத்தூர் அம்மானே. 8

செய்யதாமரைமேல் இருந்தவனோடு
மால் அடி தேட நீள் முடி
வெய்ய ஆர்அழல்ஆய் நிமிர்கின்ற வெற்றிமை என்
தையலாளொடு பிச்சைக்கு இச்சை
தயங்கு தோல் அரை ஆர்த்த வேடம் கொண்டு
ஐயம் ஏற்று உகந்தாய் ஆமாத்தூர் அம்மானே. 9

புத்தர் புன் சமண்ஆதர் பொய்ம்மொழி
நூல் பிடித்து அலர் தூற்ற நின்அடி
பத்தர் பேண நின்ற பரம்ஆய பான்மைஅது என்
முத்தை வென்ற முறுவலாள்உமை
பங்கன் என்று இமையோர் பரவிடும்
அத்தனே அரியாய் ஆமாத்தூர் அம்மானே. 10

வாடல்வெண்தலைமாலை ஆர்த்து
மயங்கு இருள் எரி ஏந்தி மா நடம்
ஆடல் மேயது என் என்று ஆமாத்தூர் அம்மானைக்
கோடல் நாகம் அரும்பு பைம்பொழில்
கொச்சையார் இறை ஞானசம்பந்தன்
பாடல்பத்தும் வல்லார் பரலோகம் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

343. திருவண்ணாமலை

திருமுறை : 1/10 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : அண்ணாமலையார் இறைவியார் : உண்ணாமுலையம்மை

உண்ணாமுலை உமையாளொடும் உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான் மலை திரு மா மணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவுஅதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.1

தேமாங்கனி கடுவன் கொள விடு கொம்பொடு தீண்டித்
தூ மா மழை துறுவல்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்
பூ மாங் கழல் புனை சேவடி நினைவார் வினை இலரே.2

பீலிம் மயில் பெடையோடு உறை பொழில் சூழ் கழை முத்தம்
சூலிம் மணி தரைமேல் நிறை சொரியும் விரி சாரல்
ஆலிம் மழை தவழும் பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன் வலி தொலை சேவடி தொழுவாரன புகழே.3

உதிரும் மயிர் இடு வெண்தலை கலனா உலகுஎல்லாம்
எதிரும் பலி உணவுஆகவும் எருது ஏறுவதுஅல்லால்
முதிரும் சடை இளவெண்பிறை முடிமேல் கொள அடிமேல்
அதிரும் கழல் அடிகட்கு இடம் அண்ணாமலை அதுவே.4

மரவம் சிலை தரளம் மிகு மணி உந்து வெள்அருவி
அரவம் செய முரவம் படும் அண்ணாமலை அண்ணல்
உரவம் சடை உலவும் புனல் உடன்ஆவதும் ஓரார்
குரவம் கமழ் நறுமென்குழல் உமை புல்குதல் குணமே. 5

பெருகும் புனல் அண்ணாமலை பிறைசேர் கடல் நஞ்சைப்
பருகும்தனை துணிவார் பொடி அணிவார் அது பருகிக்
கருகும் மிடறு உடையார் கமழ் சடையார் கழல் பரவி
உருகும் மனம் உடையார்தமக்கு உறு நோய் அடை யாவே.6

கரி காலன குடர் கொள்வன கழுது ஆடிய காட்டில்
நரி ஆடிய நகுவெண்தலை உதையுண்டவை உருள
எரிஆடிய இறைவர்க்கு இடம் இனவண்டு இசை முரல
அரி ஆடிய கண்ணாளொடும் அண்ணாமலை அதுவே.7

ஒளிறூ புலிஅதள்ஆடையன் உமை அஞ்சுதல் பொருட்டால்
பிளிறூ குரல் மதவாரணம் வதனம் பிடித்து உரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன் இராவணனை
அளறூபட அடர்த்தான் இடம் அண்ணாமலை அதுவே.8

விளவு ஆர் கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர் தாமரைமலர்மேல் உறை கேடுஇல் புகழோனும்
அளவா வணம் அழல் ஆகிய அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல் உமை தலைவன் அடி சரணே. 9


வேர் வந்துஉற மாசு ஊர்தர வெயில் நின்று உழல்வாரும்
மார்பம் புதை மலி சீவரம் மறையா வருவாரும்
ஆரம்பர்தம் உரை கொள்ளன்மின் அண்ணாமலை அண்ணல்
கூர்வெண்மழுப்படையான் நல்ல கழல் சேர்வது குணமே. 10

வெம்பு உந்திய கதிரோன் ஒளி விலகும் விரிசாரல்
அம்பு உந்தி மூஎயில் எய்தவன் அண்ணாமலை அதனைக்
கொம்பு உந்துவ குயில் ஆலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருவறையணி நல்லூர்த் திருமலையில் இறைவனை வணங்கி வழிபட்ட பரசமய கோளரியார் 'காரின்மல்கிய சோலை அண்ணாமலை அன்பர்காட்டி டக்கண்டு', அம்மலை இறைவன் திருவுருவாய்த் தோன்றுதலும், 'கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினால்', 'உண்ணாமுலையாள்' என்னும் அப்பதிகம் பாடி இப்பதியை அடைந்தார்.



344. திருவண்ணாமலை

திருமுறை : 1/69 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

இறைவர் : அண்ணாமலையார் இறைவியார் : உண்ணாமுலையம்மை

பூ ஆர் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள்செய்தார்
தூ மாமழை நின்று அதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம்பிணை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே. 1

மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும் வானோர்பெருமானார்
நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப்பொருள்போலும்
வெஞ்சொல் பேசும் வேடர்மடவார் இதணம்அதுஏறி
அம்சொல்கிளிகள் ஆயோ என்னும் அண்ணாமலையாரே. 2

ஞானத்திரள்ஆய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோடு இனமான் கரடி இழியும் இரவின்கண்
ஆனைத்திரள் வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே.3

இழைத்த இடையாள்உமையாள் பங்கர் இமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடைஒன்று ஏறித் தரியார் புரம் எய்தார்
பிழைத்த பிடியைக் காணாது ஓடிப் பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும் சாரல் அண்ணாமலையாரே.4

உருவில் திகழும் உமையாள் பங்கர் இமையோர் பெருமானார்
செரு வில் ஒரு கால் வளைய ஊன்றிச் செந்தீ எழுவித்தார்
பரு வில் குறவர் புனத்தில் குவித்த பரு மா மணி முத்தம்
அருவித்திரளோடு இழியும் சாரல் அண்ணாமலையாரே.5

எனைத்து ஓர் ஊழி அடியார் ஏத்த இமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில்
கனைத்த மேதி காணாது ஆயன் கைம்மேல் குழல் ஊத
அனைத்தும் சென்று திரளும் சாரல் அண்ணாமலையாரே. 6

வந்தித்திருக்கும் அடியார்தங்கள் வரு மேல்வினையோடு
பந்தித்திருந்த பாவம்தீர்க்கும் பரமன் உறை கோயில்
முந்தி எழுந்த முழவின் ஓசை முதுகல் வரைகள்மேல்
அந்திப்பிறை வந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே. 7

மறம்தான் கருதி வலியை நினைந்து மாறாய் எடுத்தான் தோள்
நிறம்தான் முரிய நெறிய ஊன்றி நிறைய அருள்செய்தார்
திறம்தான் காட்டி அருளாய் என்று தேவர்அவர் வேண்ட
அறந்தான் காட்டி அருளிச்செய்தார் அண்ணாமலையாரே. 8

தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
மூடி ஓங்கி முதுவேய் உகுத்த முத்தம்பல கொண்டு
கூடிக் குறவர்மடவார் குவித்துக் கொள்ள வம்மின் என்று
ஆடிப் பாடி அளக்கும் சாரல் அண்ணாமலையாரே. 9

தட்டை இடுக்கித் தலையைப் பறித்துச் சமணே நின்று உண்ணும்
பிட்டர் சொல்லுங் கொள்ள வேண்டா பேணித் தொழுமின்கள்
வட்டமுலையாள் உமையாள் பங்கர் மன்னி உறைகோயில்
அட்டம் ஆளித்திரள் வந்து அணையும் அண்ணாமலையாரே.10

அல் ஆடுஅரவம் இயங்கும் சாரல் அண்ணாமலையாரை
நல்லார் பரவப்படுவான் காழி ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடல்ஆன பத்தும்இவை கற்று
வல்லார்எல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

345. திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை : 1/133 பண் : மேகராகக்குறிஞ்சி இராகம் : நீலாம்புரி

இறைவர் : ஏகாம்பரநாதர் இறைவியார் : ஏலவார்குழலி

வெந்தவெண்பொடிப் பூசும் மார்பின் விரிநூல் ஒருபால் பொருந்தக்
கந்தம் மல்கு குழலியோடும் கடிபொழில் கச்சிதன்னுள்
அந்தல் இல் குணத்தார்அவர் போற்ற அணங்கினொடு ஆடல் புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுதுஏத்த இடர்கெடுமே. 1

வரம் திகழும் அவுணர் மா நகர் மூன்று உடன்மாய்ந்து அவியச்
சரம் துரந்து எரிசெய்த தாழ்சடைச் சங்கரன் மேய இடம்
குருந்தம் மல்லிகை கோங்கு மாதவி நல்ல குரா மரவம்
திருந்து பைம்பொழில் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே.2

வண்ண வெண்பொடிப் பூசும் மார்பில் வரிஅரவம் புனைந்து
பெண் அமர்ந்து எரிஆடல் பேணிய பிஞ்ஞகன் மேய இடம்
விண் அமர் நெடுமாடம் ஓங்கி விளங்கிய கச்சி தன்னுள்
திண்ண மாம்பொழில் சூழ்ந்த ஏகம்பம் சேர இடர் கெடுமே. 3

தோலும் நூலும் துதைந்த வரைமார்பில் சுடலை வெண்நீறு அணிந்து
காலன் மாள்உறக் காலால் காய்ந்த கடவுள் கருதும் இடம்
மாலை வெண்மதி தோயும் மா மதில் கச்சி மா நகருள்
ஏலம் நாறிய சோலை சூழ் ஏகம்பம் ஏத்த இடர் கெடுமே.4

தோடு அணி மலர்க்கொன்றை சேர் சடைத் தூ மதியம் புனைந்து
பாடல் நால்மறையாகப் பல்கணப்பேய்கள் அவை சூழ
வாடல்வெண்தலையோடு அனல் ஏந்தி மகிழ்ந்து உடன்ஆடல்புரி
சேடர் சேர் கலிக் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே. 5

சாகம் பொன்வரைஆகத் தானவர் மும்மதில் சாய எய்து
ஆகம் பெண் ஒருபாகம்ஆக அரவொடு நூல் அணிந்து
மாகம் தோய் மணி மாட மா மதில் கச்சி மா நகருள்
ஏகம்பத்து உறை ஈசன் சேவடி ஏத்த இடர் கெடுமே.(6–7)

வாணிலாமதி புல்கு செஞ்சடை வாள்அரவம் அணிந்து
நாண் இடத்தினில் வாழ்க்கை பேணி நகுதலையில் பலிதேர்ந்து
ஏண்இலா அரக்கன்தன் நீள்முடி பத்தும் இறுத்தவன் ஊர்
சேண்உலாம் பொழில் கச்சி ஏகம்பம் சேர இடர் கெடுமே.8

பிரமனும் திருமாலும் கைதொழப் பேர்அழல் ஆய பெம்மான்
அரவம் சேர் சடை அந்தணன் அணங்கினொடு அமரும் இடம்
கரவுஇல் வண்கையினார்கள் வாழ் கலிக் கச்சி மா நகருள்
மரவம் சூழ் பொழில் கச்சி ஏகம்பம் தொழ வல்வினை மாய்ந்து அறுமே.9

குண்டுபட்டு அமணஆயவரொடும் கூறை தம் மெய் போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை அவை கொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரம்மூன்றும் வெங்கணை ஒன்றினால் அவியக்
கண்டவன் கலிக் கச்சி ஏகம்பம் காண இடர்கெடுமே.10

ஏரின் ஆர் பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பம் மேயவனைக்
காரின் ஆர் மணிமாடம் ஓங்கு கழுமல நன்நகருள்
பாரின் ஆர் தமிழ் ஞானசம்பந்தன் பரவிய பத்தும் வல்லார்
சீரின் ஆர் புகழ் ஓங்கி விண்ணவரோடும் சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

346. திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை : 2/12 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

மறையானை மாசு இலாப் புன்சடை மல்கு வெண்
பிறையானைப் பெண்ணொடு ஆண்ஆகிய பெம்மானை
இறையானை ஏர் கொள் கச்சித் திரு ஏகம்பத்து
உறைவானை அல்லது உள்காது எனது உள்ளமே. 1

நொச்சியே வன்னி கொன்றை மதி கூவிளம்
உச்சியே புனைதல் வேடம் விடைஊர்தியான்
கச்சி ஏகம்பம் மேயகறைக் கண்டனை
நச்சியே தொழுமின் நும்மேல் வினை நையுமே. 2

பார் ஆரும் முழவம் மொந்தை குழல் யாழ் ஒலி
சீராலே பாடல் ஆடல் சிதைவுஇல்லதுஓர்
ஏர்ஆர் பூங் கச்சி ஏகம்பனை எம்மானைச்
சேராதார் இன்பம்ஆயந்நெறி சேராரே. 3

குன்று ஏய்க்கு நெடுவெண்மாடக் கொடி கூடிப்போய்
மின் தேய்க்கும் முகில்கள் தோயும் வியன் கச்சியுள்
மன்று ஏய்க்கும் மல்கு சீரால் மலி ஏகம்பம்
சென்று ஏய்க்கும் சிந்தையார்மேல் வினை சேராவே. 4

சடையானைத் தலை கை ஏந்திப் பலி தருவார்தம்
கடையே போய் மூன்றும் கொண்டான் கலிக் கச்சியுள்
புடையே பொன் மலரும் கம்பைக்கரை ஏகம்பம்
உடையானை அல்லது உள்காது எனது உள்ளமே. 5

மழுவாளோடு எழில்கொள் சூலப்படை வல்லார்தம்
கெழு வாளோர் இமையார் உச்சி உமையாள் கங்கை
வழுவாமே மல்கு சீரால் வளர் ஏகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாவே. 6

விண் உளார் மறைகள்வேதம் விரித்து ஓதுவார்
கண் உளார் கழலின் வெல்வார் கரி காலனை
நண்ணுவார் எழில் கொள் கச்சிநகர் ஏகம்பத்து
அண்ணலார் ஆடுகின்ற அலங்காரம்மே. 7

தூயானைத் தூயஆயம்மறை ஓதிய
வாயானை வாள் அரக்கள் வலி வாட்டிய
தீயானைத் தீது இல் கச்சித் திரு ஏகம்பம்
மேயானை மேவுவார் என் தலை மேலாரே. 8

நாகம் பூண் ஏறுஅது ஏறல் நறுங்கொன்றை தார்
பாகம் பெண் பலியும் ஏற்பர் மறை பாடுவர்
ஏகம்பம் மேவி ஆடும் இறை இருவர்க்கும்
மா கம்பம் அறியும் வண்ணத்தவன் அல்லனே. 9

போதியார் பிண்டியார் என்று இவர் பொய்ந்நூலை
வாதியா வம்மின் அம் மா எனும் கச்சியுள்
ஆதியார் மேவி ஆடும் திரு ஏகம்பம்
நீதியால் தொழுமின் நும்மேல் வினை நில்லாவே. 10

அந்தண் பூங்கச்சி ஏகம்பனை அம்மானைக்
கந்தண் பூங்காழி ஊரன் கலிக்கோவையால்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொல் பாடி ஆடக்கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

347. திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை : 3/41 பண் : கொல்லி இராகம் : நவரோசு

கரு ஆர் கச்சித், திரு ஏகம்பத்து
ஒருவா என்ன, மருவா வினையே. 1

மதி ஆர் கச்சி, நதி ஏகம்பம்
விதியால் ஏத்தப், பதி ஆவாரே. 2

கலி ஆர் கச்சி, மலி ஏகம்பம்
பலியால் போற்ற, நலியா வினையே. 3

வரம் ஆர் கச்சிப்புரம் ஏகம்பம்
பரவா ஏத்த, விரவா வினையே. 4

படம் ஆர் கச்சி, இடம் ஏகம்பத்து
உடையாய் என்ன, அடையா வினையே. 5

நலம் ஆர் கச்சி, நிலவு ஏகம்பம்
குலவா ஏத்த, கலவா வினையே. 6

கரியின்உரியன், திரு ஏகம்பன்
பெரிய புரம்மூன்று, எரிசெய்தானே. 7

இலங்கை அரசைத், துலங்க ஊன்றும்
நலம் கொள் கம்பன், இலங்கு சரணே. 8

மறையோன் அரியும், அறி'பா அனலன்
நெறி ஏகம்பம், குறியால் தொழுமே. 9

பறியாத் தேரர், நெறி இல் கச்சிச்
செறிகொள் கம்பம், குறுகுவோமே. 10

கொச்சை வேந்தன், கச்சிக் கம்பம்
மெச்சும் சொல்லை, நச்சும் புகழே. 11

348. திருக்கச்சி ஏகம்பம்

திருமுறை : 3/114 பண் : பழம்பஞ்சுரம் இராகம் : சங்கராபரணம், பைரவி

பாயும் மால்விடை மேல் ஒரு பாகனே
பாவை தன்உருமேல் ஒரு பாகனே
தூய வானவர் வேதத் துவனியே
சோதி மால் எரி வேதத்து வனியே
ஆயும் நன் பொருள் நுண்பொருள் ஆதியே
ஆலநீழல் அரும்பொருள் ஆதியே
காய வில் மதன் பட்டது கம்பமே
கண்நுதல் பரமற்கு இடம் கம்பமே. 1

சடை அணிந்ததும் வெண்தலை மாலையே
தம் உடம்பிலும் வெண்தலை மாலையே
படையில் அம் கையில் சூல் அம் அது என்பதே
பரந்து இலங்கு ஐயில் சூலம் அது என்பதே
புடை பரப்பன பூதகணங்களே
போற்றுஇசைப்பன பூதகணங்களே
கடைகள்தோறும் இரப்பது மிச்சையே
கம்பமேவி இருப்பதும் இச்சையே. 2

வெள்ளருக்கொடு தும்பை மிலைச்சியே
ஏறு முன்செலத் தும்பை மிலைச்சியே
அள்ளி நீறுஅது பூசுவ தாகமே
ஆன மாசுணம் மூசுவது ஆகமே
புள்ளி ஆடை உடுப்பது கத்துமே
போன ஊழி உடுப்பது உகத்துமே
கள் உலாம் மலர்க் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 3

முற்றல்ஆமை அணிந்த முதல்வரே
மூரி ஆமை அணிந்த முதல்வனே
பற்றி வாள்அரவு ஆட்டும் பரிசரே
பாலும் நெய் உகந்து ஆட்டும் பரிசரே
வற்றல்ஓடு கலம் பலி தேர்வதே
வானினோடு கலம் பலி தேர்வதே
கற்றிலா மனம் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 4

வேடன் ஆகி விசையற்கு அருளியே
வேலைநஞ்சம் மிசையற் கருளியே
ஆடுபாம்பு அரை ஆர்த்தது உடைஅதே
அஞ்சுபூதமும் ஆர்த்தது உடையதே
கோடு வான்மதிக் கண்ணி அழகிதே
குற்றம் இல் மதிக் கண்ணி அழகிதே
காடு வாழ் பதி ஆவதும் உம்மதே
ஏகம்பம் மா பதி ஆவதும் உம்மதே. 5

இரும் புகைக்கொடி தங்கு அழல் கையதே
இமயமாமகள் தம் கழல் கையதே
அரும்பு மொய்த்த மலர்ப் பொறை தாங்கியே
ஆழியான் தன் மலர்ப் பொறை தாங்கியே
பெரும் பகல் நடம்ஆடுதல் செய்துமே
பேதைமார் மனம் வாடுதல் செய்துமே
கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 6

முதிரம் மங்கை தவம் செய்த காலமே
முன்பும் அம் கைதவம் செய்த காலமே
வெதிர்களோடு அகில் சந்தம் உருட்டியே
வேழம் ஓடகில்சந்தம் முருட்டியே
அதிர ஆறு வரத்து அழுவத்தொடே
ஆன்ஐஆடுவரத் தழுவத்தொடே
கதிர் கொள் பூண் முலைக் கம்பம் இருப்பதே
காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே. 7

பண்டு அரக்கன் எடுத்த பலத்தையே
பாய்ந்து அரக்கன் நெடுத்த பலத்தையே
கொண்டு அரக்கியதும் கால்விரலையே
கோள் அரக்கியதும் கால்வு இரலையே
உண்டு உழன்றதும் முண்டத் தலையிலே
உடுபதிக்கு இடம் உண்டு அத் தலையிலே
கண்டம் நஞ்சம் அடக்கினை கம்பமே
கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே. 8

தூணி ஆன சுடர்விடு சோதியே
சுத்தம்ஆன சுடர்விடு சோதியே
பேணி ஓடு பிரமப் பறவையே
பித்தன் ஆன பிரமப் பறவையே
சேணினோடு கீழ் ஊழி திரிந்துமே
சித்தமோடு கீழ் ஊழி திரிந்துமே
காண நின்றனர் உற்றது கம்பமே
கடவுள் நீ இடம் உற்றது கம்பமே. 9

ஓர் உடம்பினை ஈர் உரு ஆகவே
உன் பொருள் திறம் ஈர் உரு ஆகவே
ஆரும் மெய்தன் கரிது பெரிதுமே
ஆற்ற எய்தற்கு அரிது பெரிதுமே
தேரரும் அறியாது திகைப்பரே
சித்தமும் மறியா துதி கைப்பரே
கார்நிறத்து அமணர்க்கு ஒரு கம்பமே
கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே. 10

கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே
காதல் செய்பவர் தீர்த்திடு உகு அம்பமே
புந்திசெய்வது விரும்பிப் புகலியே
பூசுரன் தன் விரும்பிப் புகலியே
அந்தம் இல் பொருள்ஆயின கொண்டுமே
அண்ணலின் பொருள்ஆயின கொண்டுமே
பந்தன் இன் இயல் பாடிய பத்துமே
பாட வல்லவர் ஆயின பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

349. திருக்கச்சி நெறிக்காரைக்காடு

திருமுறை : 3/65 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : காரைத்திருநாதர் இறைவியார் : காரார்குழலி

வார் அணவு முலை மங்கை பங்கினராய் அம் கையினில்
போர் அணவு மழு ஒன்று அங்கு ஏந்தி வெண்பொடி அணிவர்
கார் அணவு மணி மாடம் கடை நவின்ற கலிக் கச்சி
நீர் அணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக்காட்டாரே. 1

கார் ஊரும் மணிமிடற்றார் கரிகாடர் உடைதலை கொண்டு
ஊரன் பலிக்கு உழல்வார் உழைமானின்உரி அதளர்
தேர் ஊரும் நெடுவீதிச் செழுங் கச்சிமா நகர்வாய்
நீர் ஊரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக்காட்டாரே.2

கூறு அணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமேல் இளமதியோடு
ஆறு அணிந்தார் ஆடுஅரவம் பூண்டு உகந்தார் ஆன்வெள்ளை
ஏறு அணிந்தார் கொடிஅதன்மேல் என்பு அணிந்தார் வரைமார்பில்
நீறுஅணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே.3

பிறை நவின்ற செஞ்சடைகள் பின் தாழப் பூதங்கள்
மறை நவின்ற பாடலோடு ஆடலராய் மழு ஏந்திச்
சிறை நவின்ற வண்டு இனங்கள் தீம்கனிவாய்த் தேன் கதுவும்
நிறை நவின்ற கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டாரே.4

அன்று ஆலின்கீழ் இருந்து அங்கு அறம் புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையில் கோள்அரவம் நாண் கொளுவி
ஒன்றாதார் புரம்மூன்றும் ஓங்கு எரியில் வெந்து அவிய
நின்றாரும் கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 5

பன்மலர்கள் கொண்டுஅடிக்கீழ் வானோர்கள் பணிந்துஇறைஞ்ச
நன்மைஇலா வல்அவுணர் நகர்மூன்றும் ஒருநொடியில்
வில்மலையின் நாண்கொளுவி வெங்கணையால் எய்துஅழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 6

புற்றுஇடை வாள் அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்று ஒழியா அலைபுனலோடு இளமதியம் ஏந்து சடைப்
பெற்று உடையார் ஒருபாகம் பெண் உடையார் கண் அமரும்
நெற்றியினார் கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 7

ஏழ்கடல் சூழ் தென்இலங்கைக் கோமானை எழில் வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியது ஓர் தன்மையினார் நன்மையினார்
ஆழ் கிடங்கும் சூழ் வயலும் மதில்புல்கி அழகுஅமரும்
நீள்மறுகின் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 8

ஊண்தானும் ஒலிகடல்நஞ்சு உடைதலையில் பலிகொள்வர்
மாண்டார்தம் எலும்பு அணிவர் வரிஅரவோடு எழில்ஆமை
பூண்டாரும் ஓர்இருவர் அறியாமைப் பொங்குஎரியாய்
நீண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 9

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய் போர்த்து
மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய் அல்ல
வண்டு ஆரும் குழலாளை வரைஆகத்து ஒருபாகம்
கண்டாரும் கலிக்கச்சி நெறிக்காரைக்காட்டாரே. 10

கண் ஆரும் கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டு உறையும்
பெண் ஆரும் திருமேனிப் பெருமானது அடிவாழ்த்தித்
தண் ஆரும் பொழில் காழித் தமிழ் ஞானசம்பந்தன்
பண் ஆரும் தமிழ் வல்லார் பரலோகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

350. திருக்குரங்குஅணில்முட்டம்

திருமுறை : 1/31 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : வாலீச்சுவரர் இறைவியார் : இறையார்வளையம்மை

விழுநீர் மழுவாள் படை அண்ணல் விளங்கும்
கழுநீர் குவளைம்மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல் சூழ்ந்த குரங்கணில்முட்டம்
தொழும் நீர்மையர் தீதுஉறு துன்பம் இலரே. 1

விடை சேர் கொடி அண்ணல் விளங்கு உயர் மாடக்
கடை சேர் கரு மென் குளத்து ஓங்கிய காட்டில்
குடை ஆர் புனல் மல்கு குரங்கணில்முட்டம்
உடையான் எனை ஆள்உடை எந்தை பிரானே. 2

சூலப்படையான் விடையான் சுடு நீற்றான்
காலன் தனை ஆர்உயிர் வவ்விய காலன்
கோலப் பொழில் சூழ்ந்த குரங்கணில்முட்டத்து
ஏலம் கமழ் புன்சடை எந்தைபிரானே. 3

வாடா விரிகொன்றை வலத்து ஒரு காதில்
தோடுஆர் குழையான் நல பாலனம் நோக்கிக்
கூடாதன செய்த குரங்கணில்முட்டம்
ஆடா வருவார் அவர் அன்பு உடையாரே. 4

இறைஆர்வளையாளை ஓர்பாகத்து அடக்கிக்
கறை ஆர் மிடற்றான் கரி கீறிய கையான்
குறை ஆர் மதி சூடி குரங்கணில்முட்டத்து
உறைவான் எமை ஆள்உடை ஒண்சுடரானே. 5

பலவும் பயன் உள்ளன பற்றும் ஒழிந்தோம்
கலவம்மயில் காமுறு பேடையொடு ஆடிக்
குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணில்முட்டம்
நிலவும் பெருமான் அடி நித்தல் நினைந்தே. 6

மாடு ஆர் மலர்க்கொன்றை வளர்சடை வைத்துத்
தோடு ஆர் குழைதான் ஒரு காதில் இலங்கக்
கூடார் மதில் எய்து குரங்கணில்முட்டத்து
ஆடு ஆர் அரவம் அரையார்த்து அமர்வானே. 7

மை ஆர் நிற மேனி அரக்கர்தம் கோனை
உய்யா வகையால்அடர்த்து இன்அருள் செய்த
கொய் ஆர் மலர் சூடி குரங்கணில்முட்டம்
கையால் தொழுவார் வினை காண்டல் அரிதே. 8

வெறி ஆர் மலர்த்தாமரையானொடு மாலும்
அறியாது அசைந்து ஏத்த ஓர் ஆர்அழல் ஆகும்
குறியால் நிமிர்ந்தான்தன் குரங்கணில்முட்டம்
நெறியால் தொழுவார் வினை நிற்ககிலாவே. 9

கழுவார் துவர்ஆடை கலந்து மெய் போர்க்கும்
வழுவாச் சமண் சாக்கியர் வாக்குஅவை கொள்ளேல்
குழு மின்சடை அண்ணல் குரங்கணில்முட்டத்து
எழில் வெண்பிறையான் அடி சேர்வது இயல்பே. 10

கல்ஆர் மதில் காழியுள் ஞானசம்பந்தன்
கொல்ஆர் மழுஏந்தி குரங்கணில்முட்டம்
சொல் ஆர் தமிழ்மாலை செவிக்கு இனிதுஆக
வல்லார்க்கு எளிதுஆம் பிறவா வகை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

351. திருமாகறல்

திருமுறை : 3/72 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : அடைக்கலம்காத்தநாதர் இறைவியார் : புவனநாயகி

விங்கு விளை கழனி மிகு கடைசியர்கள்
பாடல் விளையாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடம் மலி
நீடு பொழில் மாகறல் உளான்
கொங்கு விரிகொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செஞ்சடையினான்
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கலையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல் கவின் எய்தி அழகு ஆர்
மலையின் நிகர் மாடம் உயர்நீள்கொடிகள்
வீசும் மலி மாகறல் உளான்
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரிபுன்சடை யினுள்
அலை கொள் புனல் ஏந்து பெருமான் அடியை
ஏத்த வினை அகலும் மிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு காமருவு சீர்
மாலை வழிபாடு செய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலை உடை பேணி அதன்மேல் ஓர் சுடர்
நாகம் அசையா அழகிதாப்
பாலை அன நீறு புனைவான் அடியை
ஏத்த வினை பறையும் உடனே. 3

இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தி எழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னு புனல்
ஆடி மகிழ் மாகறல் உளான்
கொங்குவளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக ஏத்தி வழிபாடு
நுகரா எழுமினே. 4

துஞ்சு நறுநீலம் இருள் நீங்க ஒளி
தோன்றும் மது வார் கழனிவாய்
மஞ்சு மலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆடமலி மாகறல் உளான்
வஞ்ச மதயானை உரிபோர்த்து மகிழ்
வான் ஓர்மழுவாளன் வளரும்
நஞ்சம் இருள் கண்டம் உடை நாதன்
அடியாரை நலியா வினைகளே. 5

மன்னும் மறையோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடி உடனாய்
இன்ன வகையால் இனிது இறைஞ்சி இமையோரில்
எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின்மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னும் அவர் தொல்வினைகள் ஒல்கவுயர்
வான் உலகம் ஏறல் எளிதே. 6

வெய்யவினை நெறிகள் செலவந்து அணையும்
மேல்வினைகள் வீட்டல் உறுவீர்
மை கொள் விரி கானல் மது வார் கழனி
மாகறல் உளான் எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுஉரி
தோல் உடைய மேனி அழகார்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடையா
வினைகள் அகலும் மிகவே. 7

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன்மாடம் மிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறல் உளான்
பாசுபதம் விச்சைவரி நச்சு அரவு
கச்சை உடை பேணி அழகார்
பூசுபொடி ஈசன்என ஏத்த வினை
நிற்றல்இலபோகும் உடனே. 8

தூயவிரி தாமரைகள் நெய்தல் கழு
நீர்குவளை தோன்ற மது உண்
பாய வரிவண்டு பல பண்முரலும்
ஓசை பயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றிய இராவணன்
தன்மை கெட நின்ற பெருமான்
ஆயபுகழ் ஏத்தும் அடியார்கள் வினை
ஆயினவும் அகல்வது எளிதே. 9

காலின்நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேல்உணர்வு காமுற வினார்
மாலும் மலரானும் அறியாமை எரியாகி
உயர் மாகறல் உளான்
நாலும் எரி தோலும் உரி மா மணிய
நாகமொடு கூடி உடனாய்
ஆலும் விடை ஊர்தி உடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே. 10

கடைகொள் நெடுமாடம் மிக ஓங்கு கமழ்
வீதிமலி காழி அவர் கோன்
அடையும் வகையால் பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்
மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ் பத்தும் உணர்வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

திருச்சிற்றம்பலம்

352. திருஓத்தூர்

திருமுறை : 1/54 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி
இறைவர் : வேதநாதர் இறைவியார் : இளமுலைநாயகி

பூத் தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன்அடி
ஏத்தாதார் இல்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளி மழுவாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே. 1

இடை ஈர் போகா இளமுலையாளை ஓர்
புடையீரே புள்ளிமான்உரி
உடையீரே உம்மை ஏத்துதும் ஓத்தூர்ச்
சடையீரே உம தாளே. 2

உள்வேர் போல நொடிமையினார் திறம்
கொள்வீர் அல்குல் ஓர் கோவணம்
ஒள் வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர்க்
கள்வீரே உம காதலே. 3

தோட்டீரே துத்திஐந்தலை நாகத்தை
ஆட்டீரே அடியார் வினை
ஓட்டீரே உம்மை ஏத்துதும் ஓத்தூர்
நாட்டீரே அருள் நல்குமே. 4

குழை ஆர் காதீர் கொடுமழுவாள்படை
உழை ஆள்வீர் திரு ஓத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடி நின்று ஆடுவார்
அழையாமே அருள் நல்குமே. 5

மிக்கார் வந்து விரும்பிப் பலி இடத்
தக்கார் தம் மக்களீர் என்று
உட்காதார் உளரோ திரு ஓத்தூர்
நக்கீரே அருள் நல்குமே. 6

தாது ஆர் கொன்றை தயங்கும் முடிஉடை
நாதா என்று நலம் புகழ்ந்து
ஓதாதார் உளரோ திரு ஓத்தூர்
ஆதீரே அருள் நல்குமே. 7

என்தான் இம் மலை என்ற அரக்கனை
வென்றார்போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவன் ஓத்தூர்
என்றார்மேல் வினை ஏகுமே. 8

நன்றா நால்மறையானொடு மாலுமாய்ச்
சென்றார்போலும் திசைஎலாம்
ஒன்றாய் உள் எரிஆய் மிக ஓத்தூர்
நின்றீரே உமை நேடியே. 9


கார்அமண் கலிங்கத் துவர் ஆடையர்
தேரர் சொல்அவை தேறன்மின்
ஓர் அம்பால் எயில் எய்தவன் ஓத்தூர்ச்
சீரவன் கழல் சேர்மினே. 10

குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்
விரும்புவார் வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

நடுநாட்டிலே திருவண்ணாமலையை வழிபட்டுப் புறப்பட்ட புகலியர்கோன் தொண்டை நாட்டுத் திங்கள் முடியார் இனிதமர்ந்த திருவோத்தூரை அடைந்து இறைவனைப் பணிந்து வைகுநாளில் தொண்டரொருவர் பிள்ளையாரை அடைந்து அழுது வணங்கித் தாம் இறைவனுக்காக்கும் பனைகளெல்லாம் ஆண்பனையாய்க் காயாவாயினமையைச் சமணர் கண்டு நீர் ஆக்கும் பனைகள் காய்த்தற் கடைவுண்டோ என்று நகைசெய்து இழித்துரைத்தார் என்று விண்ணப்பிக்கக் கேட்டலும் கோயிலை அடைந்து 'பூத்தேர்ந்தாயின' என்னும் இப்பதிகமெடுத்துப் பாடித் திருக்கடைக்காப்பில் "குரும்பை ஆண்பனை யீன்குலை யோத்தூர்" என்று முடிக்குமளவில் அவையாவும் பெண்பனையாய்க் குரும்பையீன்று காய்த்ததைக் கண்ட அடியாரெல்லாம் அதிசயித்து ஆரவாரித்தார். சமணரிற் சிலர் அதனைக் கண்டு தங்கையிற் குண்டிகையைத் தகர்த்துப் புரிசடையானைப் போற்றி வாழ்த்தினர். மற்றுஞ் சில தெண்ணர் அந்நாட்டினை அகன்றோடினர். இவ்வாறு பிள்ளையாரால் பாடப் பெற்ற அப்பனைகள் தங்காலங் கழித்துப் பிறவி ஒழித்துச் சிவத்தை மேவின என்றால் பிள்ளை:யாரது வாக்கின் வாய்மை இருந்தவாறென்னை!



353. திருவல்லம்

திருமுறை : 1/113 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : வல்லநாதர் இறைவியார் : வல்லாம்பிகை

எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே. 1

தாயவன் உலகுக்குத் தன் ஒப்பு இலாத்
தூயவன் தூ மதிசூடி எல்லாம்
ஆயவன் அமரர்க்கும் முனிவர்கட்கும்
சேயவன் உறைவிடம் திருவல்லமே. 2

பார்த்தவன் காமனைப் பண்பு அழியப்
போர்த்தவன் போதகத்தின்உரிவை
ஆர்த்தவன் நான்முகன் தலையை அன்று
சேர்த்தவன் உறைவிடம் திருவல்லமே. 3

கொய்த அம் மலர் அடி கூடுவார் தம்
மை தவழ் திருமகள் வணங்க வைத்துப்
பெய்தவன் பெருமழை உலகம் உய்யச்
செய்தவன் உறைவுஇடம் திரு வல்லமே. 4

சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும் வண்ணம்
நேர்ந்தவன் நேரிழையோடும் கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவு இடம் திரு வல்லமே. 5

பதைத்து எழு காலனைப் பாதம்ஒன்றால்
உதைத்து எழு மா முனிக்கு உண்மை நின்று
விகிர்த்து எழு தக்கன்தன் வேள்வி அன்று
சிதைத்தவன் உறைவிடம் திரு வல்லமே. (6–7)

இகழ்ந்து அரு வரையினை எடுக்கல்உற்று ஆங்கு
அகழ்ந்த வல்அரக்கனை அடர்த்த பாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச் செய்தே
திகழ்ந்தவன் உறைவிடம் திருவல்லமே. 8

பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவன் அருமறை அங்கம் ஆனான்
கரியவன் நான்முகன் காண ஒண்ணாத்
தெரியவன் உறைவிடம் திருவல்லமே. 9

அன்றிய அமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய அறஉரை கூறாவண்ணம்
வென்றவன் புலன்ஐந்தும் விளங்க எங்கும்
சென்றவன் உறைவிடம் திருவல்லமே. 10

கற்றவர் திரு வல்லம் கண்டு சென்று
நல் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
குற்றம் இல் செந்தமிழ் கூற வல்லார்
பற்றுவர் ஈசன் பொன்பாதங்களே. 11

திருச்சிற்றம்பலம்

354. திருமாற்பேறு

திருமுறை : 1/55 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

இறைவர் : மால்வணங்கீசர் இறைவியார் : கருணை நாயகி

ஊழியார்தரு நஞ்சினை உண்டு உமை
நீறு சேர் திருமேனியர்
சேறு சேர் வயல் தென்திருமாற்பேற்றில்
மாறு இலா மணிகண்டரே. 1

தொடை ஆர் மா மலர் கொண்டு இரு போது உம்மை
அடைவார் ஆம் அடிகள் என
மடை ஆர் நீர் மல்கு மன்னிய மாற்பேறு
உடையீரே உமை உள்கியே. 2

பை ஆரும் அரவம் கொடு ஆட்டிய
கையான் என்று வணங்குவர்
மை ஆர் நஞ்சு உண்டு மாற்பேற்று இருக்கின்ற
ஐயா நின் அடியார்களே. 3

சால மா மலர் கொண்டு சரண் என்று
மேலையார்கள் விரும்புவர்
மாலினார் வழிபாடுசெய் மாற்பேற்று
நீலம் ஆர் கண்ட நின்னையே. 4

மாறு இலா மணியே என்று வானவர்
ஏறவே மிக ஏத்துவர்
கூறனே குலவும் திரு மாற்பேற்றின்
நீறனே என்று நின்னையே. 5

உரையாதார் இல்லை ஒன்றும் நின் தன்மையைப்
பரவாதார் இல்லை நாள்களும்
திரை ஆர் பாலியின் தென்கரை மாற்பேற்று
அரையானே அருள் நல்கிடே. (6–7)

அரசு அளிக்கும் அரக்கன் அவன்தனை
உரை கெடுத்து அவன் ஒல்கிட
வரம் மிகுத்த எம் மாற்பேற்று அடிகளைப்
பரவிடக் கெடும் பாவ்மே. 8

இருவர்தேவரும் தேடித் திரிந்து இனி
ஒருவரால் அறிவு ஒண்ணிலன்
மருவு நீள்கழல் மாற்பேற்று அடிகளைப்
பரவுவார் வினை பாறுமே. 9

தூசு போர்த்து உழல்வார் கையில் துற்று உணும்
நீசர்தம் உரை கொள்ளேலும்
தேசம் மல்கிய தென் திரு மாற்பேற்றின்
ஈசன் என்று எடுத்து ஏத்துமே. 10

மன்னி மாலொடு சோமன் பணி செயும்
மன்னும் மாற்பேற்று அடிகளை
மன்னு காழியுள் ஞானசம்பந்தன் சொல்
பன்னவே வினை பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

355. திருமாற்பேறு

திருமுறை : 1/114 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : மால்வணங்கீசர் இறைவியார் : கருணைநாயகி

குருந்து அவன் குருகு அவன் கூர்மை அவன்
பெருந்தகை பெண் அவன் ஆணும் அவன்
கருந்தடமலர்க்கண்ணி காதல் செய்யும்
மருந்து அவன் வள நகர் மாற்பேறே. 1

பாறு அணி வெண்தலை கையில்ஏந்தி
வேறு அணி பலி கொளும் வேட்கையனாய்
நீறு அணிந்து உமை ஒருபாகம் வைத்த
மாறுஇலி வள நகர் மாற்பேறே. 2

கரு உடை யார் உலகங்கள் வேவச்
செரு விடை ஏறி முன் சென்று நின்று
உரு உடையாள் உமையாளும் தானும்
மருவிய வளநகர் மாற்பேறே. 3

தலையவன் தலைஅணிமாலை பூண்டு
கொலை நவில் கூற்றினைக் கொன்று உகந்தான்
கலை நவின்றான் கயிலாயம் என்னும்
மலையவன் வள நகர் மாற்பேறே. 4

துறை அவன் தொழிலவன் தொல்உயிர்க்கும்
பிறை அணி சடைமுடிப் பெண்ஓர்பாகன்
கறை அணி மிடற்று அண்ணல் காலற் செற்ற
மறையவன் வள நகர் மாற்பேறே. 5

பெண்ணின் நல்லாளை ஓர்பாகம் வைத்துக்
கண்ணினால் காமனைக் காய்ந்தவன்தன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்கும் நல் மாற்பேறே. (6-7)

தீது இலா மலை எடுத்தவ் அரக்கன்
நீதியால் வேதகீதங்கள் பாட
ஆதியான் ஆகிய அண்ணல் எங்கள்
மாதி தன் வள நகர் மாற்பேறே. 8

செய்ய தண்தாமரைக் கண்ணனொடும்
கொய் அணி நறுமலர்மேல் அயனும்
ஐயன் நன்சேவடிஅதனை உள்க
மையல் செய் வள நகர் மாற்பேறே. 9

குளித்து உணா அமணர் குண்டுஆக்கர் என்றும்
களித்து நன் கழல்அடி காணல்உறார்
முளைத்த வெண்மதியினொடு அரவம் சென்னி
வளைத்தவன் வள நகர் மாற்பேறே. 10

அந்தம் இல் ஞானசம்பந்தன் சொன்ன
செந்துஇசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தம்இன்தமிழ்கள்கொண்டு ஏத்த வல்லார்
எந்தைதன் கழல்அடி எய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

356. திருஊறல்

திருமுறை : 1/106 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்
இறைவர் : உமாபதி இறைவியார் : உமையம்மை

மாறு இல் அவுணர் அரணம் அவை மாய ஓர் வெங்கணையால் அன்று
நீறு எழ எய்த எங்கள் நிமலன் இடம் வினவில்
தேறல் இரும் பொழிலும் திகழ் செங்கயல் பாய் வயலும் சூழ்ந்த
ஊறல் அமர்ந்த பிரான் ஒலி ஆர் கழல் உள்குதுமே.1

மத்தமதக்கரியை மலையான்மகள் அஞ்ச அன்று கையால்
மெத்த உரித்த எங்கள் விமலன் விரும்பும்இடம்
தொத்து அலரும் பொழில் சூழ் வயல் சேர்ந்து ஒளிர் நீலம் நாளும் நயனம்
ஒத்து அலரும் கழனித் திரு ஊறலை உள்குதுமே. 2

ஏன மருப்பினொடும் எழில் ஆமையும் பூண்ட அழகார் நன்றும்
கான் அமர் மான்மறிக் கைக் கடவுள் கருதும் இடம்
வானமதி தடவும் வளர் சோலைகள் சூழ்ந்து அழகு ஆர் நம்மை
ஊனம் அறுத்த பிரான் திரு ஊறலை உள்குதுமே. 3

நெய் அணி மூஇலைவேல் நிறை வெண்மழுவும் அனலும் அன்று
கை அணி கொள்கையினான் கடவுள் இடம் வினவில்
மை அணி கண் மடவார்பலர் வந்து இறைஞ்ச மன்னி நம்மை
உய்யும் வகை புரிந்தான் திரு ஊறலை உள்குதுமே.4

எண் திசையோர் மகிழ எழில் மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழஅளித்தான் அவன் தாழும் இடம் வினவில்
கொண்டல்கள் தங்கு பொழில் குளிர்பொய்கைகள் சூழ்ந்து நஞ்சை
உண்டபிரான் அமரும் திரு ஊறலை உள்குதுமே. (5-7)

கறுத்த மனத்தினொடும் கடுங்காலன் வந்து எய்துதலும் கலங்கி
மறுக்குஉறும் மாணிக்கு அருள மகிழ்ந்தான் இடம் வினவில்
செறுத்து எழு வாள் அரக்கன் சிரம் தோளும் மெய்யும் நெரிய அன்று
ஒறுத்து அருள்செய்த பிரான் திரு ஊறலை உள்குதுமே. 8

நீரின்மிசைத் துயின்றோன் நிறை நான்முகனும் அறியாது அன்று
தேரும் வகை நிமிர்ந்தான் அவன் சேரும் இடம் வினவில்
பாரின்மிசை அடியார்பலர் வந்து இறைஞ்ச மகிழ்ந்து ஆகம்
ஊரும் அரவு அசைத்தான் திரு ஊறலை உள்குதுமே. 9

பொன் இயல் சீவரத்தார் புளித் தட்டையர் மோட்டு அமணர் குண்டர்
என்னும் இவர்க்கு அருளா ஈசன் இடம் வினவில்
தென்னென வண்டுஇனங்கள் செறி ஆர் பொழில் சூழ்ந்த அழகார் தன்னை
உன்ன வினை கெடுப்பான் திரு ஊறலை உள்குதுமே. 10

கோடல் இரும் புறவில் கொடி மாடக் கொச்சையர்மன் மெச்ச
ஓடுபுனல் சடைமேல் கரந்தான் திரு ஊறல்
நாடல் அரும்புகழான் மிகு ஞானசம்பந்தன் சொன்ன நல்ல
பாடல்கள்பத்தும் வல்லார் பரலோகத்து இருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

357. திருஇலம்பையங்கோட்டூர்

திருமுறை : 1/76 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

இறைவர் : சந்திரசேகரர் இறைவியார் : கோடேந்துமுலையம்மை

மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச் சீர் மறைக்காடு நெய்த்தானம்
நிலையினான் எனது உரை தனது உரைஆக
நீறு அணிந்து ஏறு உகந்து ஏறிய நிமலன்
கலையின் ஆர் மடப்பிணை துணையொடும் துயிலக்
கானல் அம் பெடை புல்கிக் கணமயில் ஆலும்
இலையின் ஆர் பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில்கொள்வது இயல்பே.1

திரு மலர்க்கொன்றையான் நின்றியூர் மேயான்
தேவர்கள் தலைமகன் திருக் கழிப்பாலை
நிருமலன் எனது உரை தனது உரைஆக
நீறு அணிந்து ஏறுஉகந்து ஏறிய நிமலன்
கருமலர்க் கமழ் சுனை நீள் மலர்க்குவளை
கதிர் முலை இளையவர் மதிமுகத்து உலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில்கொள்வது இயல்பே.2

பாலனாம் விருத்தனாம் பசுபதி தானாம்
　　பண்டு வெங்கூற்று உதைத்து அடியவர்க்கு அருளும்
காலனாம் எனது உரை தனது உரைஆகக்
　　கனல்எரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமாமலர்ச் சுனை வண்டு பண்செய்ய
　　நீர் மலர்க்குவளைகள் தாது விண்டு ஓங்கும்
ஏலம் நாறும் பொழில் இலம்பையங்கோட்டூர்
　　இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 3

உளம் கொள்வார் உச்சி ஆர் கச்சி ஏகம்பன்
　　ஒற்றியூர் உறையும் அண்ணாமலை அண்ணல்
விளம்புவான் எனது உரை தனது உரைஆக
　　வெள்ளநீர் விரிசடைத் தாங்கிய விமலன்
குளம்பு உறக் கலை துள மலைகளும் சிலம்பக்
　　கொழுங்கொடி எழுந்து எங்கும் கூவிளம் கொள்ள
இளம்பிறை தவழ் பொழில் இலம்பையங்கோட்டூர்
　　இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 4

தேனுமாய் அமுதமாய்த் தெய்வமும் தானாய்த்
　　தீயொடு நீருடன் வாயுவாம் தெரியில்
வானுமாம் எனது உரை தனது உரையாக
　　வரிஅரா அரைக்கு அசைத்து உழிதரு மைந்தன்
கானமான் வெருஉறக் கருவிரல் ஊகம்
　　கடுவனோடு உகளும் ஊர் கல்கடுஞ்சாரல்
ஏனம் ஆன் உழிதரும் இலம்பையங்கோட்டூர்
　　இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 5

மனம் உலாம் அடியவர்க்கு அருள்புரிகின்ற
வகைஅலால் பலி திரிந்து உண்பு இலான் மற்றோர்
தனமிலான் எனது உரை தனது உரையாகத்
தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்
புனம்எலாம் அருவிகள் இருவி சேர் முத்தம்
பொன்னொடு மணிகொழித்து ஈண்டி வந்து எங்கும்
இனம் எலாம் அடைகரை இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 6

நீர் உளான் தீ உளான் அந்தரத்து உள்ளான்
நினைப்பவர் மனத்து உளான் நித்தமா ஏத்தும்
ஊர் உளான் எனது உரை தனது உரையாக
ஒற்றை வெள்ஏறு உகந்து ஏறிய ஒருவன்
பார்உளார் பாடலோடு ஆடல் அறாத
பண் முரன்று அஞ்சிறைவண்டுஇனம் பாடும்
ஏர் உளார் பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 7

வேர் உலாம் ஆழ்கடல் வரு திரை இலங்கை
வேந்தன தடக்கைகள் அடர்த்தவன் உலகில்
ஆர் உலாம் எனது உரை தனது உரையாக
ஆகம் ஓர் அரவு அணிந்து உழிதரும் அண்ணல்
வார் உலாம் நல்லன மாக்களும் சார
வாரணம் உழிதரும் மல்லல் அம் கானல்
ஏர் உலாம் பொழில் அணி இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 8

கிளர் மழை தாங்கினான் நான்முகம் உடையோன்
கீழ்அடி மேல்முடி தேர்ந்து அளக்கில்லா
உளம் அழை எனது உரை தனது உரையாக
ஒள்அழல் அங்கையில் ஏந்திய ஒருவன்
வள மழை எனக் கழை வளர் துளி சோர
மாசுணம் உழிதரு மணி அணி மாலை
இளமழை தவழ் பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 9

உரிஞ்சன கூறைகள் உடம்பினர் ஆகி
உழிதரு சமணரும் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வன் எனது உரை தனது உரையாகப்
பெய் பலிக்கு என்று உழல் பெரியவர்பெருமான்
கருஞ்சுனைமுல்லை நன்பொன் அடை வேங்கை
களிமுக வண்டொடு தேன்இனம் முரலும்
இருஞ்சுனை மல்கிய இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணி என் எழில் கொள்வது இயல்பே. 10

கந்தனை மலி கனைகடல் ஒலி ஓதம்
கானல் அம் கழி வளர் கழுமலம் என்னும்
நந்தியார் உறை பதி நால்மறை நாவன்
நல் தமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன்
எந்தையார் வள நகர் இலம்பையங்கோட்டூர்
இசையொடு கூடிய பத்தும் வல்லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவரோடும்
வீடு பெற்று இம்மையின் வீடு எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

358. திருவிற்கோலம்

திருமுறை : 3/23 பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதார கௌளம்
இறைவர் : திரிபுராந்தகர் இறைவியார் : திரிபுராந்தகி

உருவின் ஆர் உமையொடும் ஒன்றி நின்றது ஓர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவி வானவர் தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவுஇடம் திரு விற்கோலமே. 1

சிற்றிடை உமை ஒரு பங்கன் அங்கையில்
உற்றது ஓர் எரியினன் ஒரு சரத்தினால்
வெற்றி கொள் அவுணர்கள் புரங்கள் வெந்து அறச்
செற்றவன் உறைவுஇடம் திரு விற்கோலமே. 2

ஐயன் நல் அதிசயன் அயன் விண்ணோர் தொழும்
மை அணி கண்டன் ஆர் வண்ண வண்ணம்வான்
பைஅரவு அல்குலாள் பாகம்ஆகவும்
செய்யவன் உறைவுஇடம் திரு விற்கோலமே. 3

விதைத்தவன் முனிவருக்கு அறம் முன் காலனை
உதைத்து அவன் உயிர் இழந்து உருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடு நகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவுஇடம் திரு விற்கோலமே. 4

முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்து உலாம் மலர்ப்பொழில் கூகம் மேவினான்
அந்தி வான்பிறையினான் அடியர்மேல் வினை
சிந்துவான் உறைவு இடம் திரு விற்கோலமே. 5

தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர் பொழில் கூகம் மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்து அறச்
செகுத்தவன் உறைவு இடம் திரு விற்கோலமே. 6

விரித்தவன் அருமறை விரிசடை வெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசு அற
எரித்தவன் இலங்கையர்கோன் இடர் படச்
சிரித்தவன் உறைவு இடம் திரு விற்கோலமே. (7–8)

திரிதரு புரம் எரிசெய்த சேவகன்
வரிஅரவொடு மதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமனது ஆற்றலால்உருத்
தெரியலன் உறைவு இடம் திரு விற்கோலமே. 9

சீர்மை இல் சமணொடு சீவரக் கையர்
நீர்மை இல் உரைகள் கொள்ளாத நேசர்க்குப்
பார் மலி பெருஞ் செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையினான் இடம் திரு விற்கோலமே. 10

கோடல் வெண்பிறையனைக் கூகம் மேவிய
சேடன செழு மதில் திரு விற்கோலத்தை
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன
பாடல் வல்லார்களுக்கு இல்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

359. திருஆலங்காடு

திருமுறை : 1/45 பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

இறைவர் : ஊர்த்துவதாண்டவர் இறைவியார் : வண்டார்குழலியம்மை

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப் போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப்பாரும் முனை நட்பு ஆய்
வஞ்சப்படுத்து ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம்அடிகளே. 1

கேடும் பிறவியும் ஆக்கினாரும் கேடு இலா
வீடுமாநெறி விளம்பினார் எம் விகிர்தனார்
காடும் சுடலையும் கைக்கொண்டு எல்லிக் கணப்பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 2

கந்தம் கமழ் கொன்றைக்கண்ணி சூடி கனல்ஆடி
வெந்தபொடி நீற்றை விளங்கப் பூசும் விகிர்தனார்
கொந்து அண்பொழில் சோலை அரவின் தோன்றிக் கோடல் பூத்த
அம் தண் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 3

பாலமதி சென்னி படரச் சூடிப் பழி ஓராக்
காலன் உயிர் செற்ற காலன்ஆய கருத்தனார்
கோலம் பொழில் சோலைப் பெடையோடு ஆடி மடமஞ்ஞை
ஆலும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 4

ஈர்க்கும் புனல்சூடி இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம் பூண்டு ஆடி வேடம் பயின்றாரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தம் ஏறிக் கருந்தேன் மொய்த்து
ஆர்க்கும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 5

பறையும் சிறுகுழலும் யாழும் பூதம் பயிற்றவே
மறையும் பல பாடி மயானத்து உறையும் மைந்தனார்
பிறையும் பெரும்புனல் சேர் சடையினாரும் பேடைவண்டு
அறையும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 6

நுணங்குமறை பாடி ஆடி வேடம் பயின்றாரும்
இணங்கும் மலைமகளோடு இரு கூறு ஒன்றுஆய் இசைந்தாரும்
வணங்கும் சிறுத்தொண்டர் வைகல் ஏத்தும் வாழ்த்தும்கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 7

கணையும் வரிசிலையும் எரியும் கூடிக் கவர்ந்து உண்ண
இணை இல் எயில்மூன்றும் எரித்திட்டார் எம் இறைவனார்
பிணையும் சிறுமறியும் கலையும் எல்லாம் கங்குல் சேர்ந்து
அணையும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 8

கவிழ மலை தளரக் கடகக் கையால் எடுத்தான் தோள்
பவழநுனைவிரலால் பைய ஊன்றிப் பரிந்தாரும்
தவழும் கொடிமுல்லை புறவம் சேர நறவம் பூத்து
அவிழும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 9

பகலும் இரவும் சேர் பண்பினாரும் நண்பு ஓராது
இகலும் இருவர்க்கும் எரிஆய்த் தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும் வழிபாடு வல்லார்க்கு என்றும் தீயபோய்
அகலும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 10


போழம்பல பேசிப் போது சாற்றித் திரிவாரும்
வேழம் வரும்அளவும் வெயிலே துற்றித் திரிவாரும்
கேழல் வினை போகக் கேட்பிப்பாரும் கேடுஇலா
ஆழ்வர் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே. 11

சாந்தம் கமழ் மறுகில் சண்பை ஞானசம்பந்தன்
ஆம் தண் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளை
வேந்தன் அருளாலே விரித்த பாடல்இவை வல்லார்
சேர்ந்த இடம்எல்லாம் தீர்த்தம் ஆகச் சேர்வாரே. 12

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

தக்கோலமென்னும் திருவூறலை வணங்கிக் கொண்டு திருக்கூட்டத்தோடு பழையனூர்த் திருவாலங்காட்டருகே வரும்போது கழுமல முதுபதிக் கவுணியர்கோன், இம்மையிலே இப்புவியிலுள்ளோர் யாருங் காணவும் ஏழுலகும் ஏத்திப் போற்றவும் காரைக்காலம்மையார் திருத்தலையால் நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம் என்று அதனை மிதிக்க அஞ்சி அதன் சார்பாகச் சென்றப்பதியின் பக்கலிலோர் திருப்பதியில் பள்ளியமர்ந்தார். அன்றிரவின் நள்ளிருள் நிறைந்த நடுப்போதில் இறைவன் அவர் கனவில் எழுந்தருளி, 'நாம் ஆலவனத் அமர்ந்தருளும்ப்பன்; நம்மைப் பாட அயர்த்தனையோ?' என்றருளத் துயில்நீங்கி எழுந்து திருவருளைப் போற்றிப் பாராட்டித் "துஞ்சவருவார்" என வெடுத்துப் பதிகத்தில் பழையனூர் வேளாளர் பெருமக்கள் உண்மை ஓம்பி எரிபுக்க செய்தியைச் சிறப்பித்துப் பாடி அருளினார். பிள்ளையார் மற்றைநாள் காலையில் இச்செய்தியெல்லாம் தம்மை அடைந்த ஊரார்க்கும் அடியார்க்கும் அறிவுறுத்தருளி இறைவனை வணங்கித் திருப்பாசூருக்கு எழுந்தருளினார்.



360. திருப்பாசூர்

திருமுறை : 2/60 பண் : காந்தாரம் இராகம் : நவரோசு

இறைவர் : பாசூர்நாதர் இறைவியார் : பசுபதிநாயகி

சிந்தை இடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும்போழ்து என் மனத்து உள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வார் ஊர்போலும்
பைந் தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே. 1

பேரும்பொழுதும் பெயரும்பொழுதும் பெம்மான் என்று
ஆரும்தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
ஊரும் அரவம் உடையார் வாழும் ஊர்போலும்
பாரின் மிசையார் பாடல் ஓவாப் பாசூரே. 2

கையால் தொழுது தலை சாய்த்து உள்ளம் கசிவார்கள்
மெய் ஆர் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்
நெய்ஆடுதல் அஞ்சு உடையார் நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே. 3

பொங்கு ஆடுஅரவும் புனலும் சடைமேல் பொலிவு எய்தக்
கொங்கு ஆர் கொன்றை சூடி என் உள்ளம் குளிர்வித்தார்
தம் காதலியும் தாமும் வாழும் ஊர்போலும்
பைங்கால் முல்லை பல்அரும்பு ஈனும் பாசூரே. 4

ஆடல் புரியும் ஐவாய்அரவு ஒன்று அரைச் சாத்தும்
சேடச் செல்வர் சிந்தையுள் என்றும் பிரியாதார்
வாடல் தலையில் பலி தேர் கையார் ஊர்போலும்
பாடல் குயில்கள் பயில் பூஞ்சோலைப் பாசூரே. 5

கால் நின்று அதிர கனல் வாய் நாகம் கச்சுஆகத்
தோல் ஒன்று உடையார் விடையார் தம்மைத் தொழுவார்கள்
மால் கொண்டு ஓட மையல் தீர்ப்பார் ஊர்போலும்
பால்வெண்மதி தோய் மாடம் சூழ்ந்த பாசூரே. 6

கண்ணின் அயலே கண் ஒன்று உடையார் கழல் உன்னி
எண்ணும்தனையும் அடியார் ஏத்த அருள்செய்வார்
உள் நின்று உருக உவகை தருவார் ஊர்போலும்
பண்ணின் மொழியார் பாடல் ஓவாப் பாசூரே. 7

தேசு குன்றாத் தெண்ணீர் இலங்கைக் கோமானைக்
கூச அடர்த்துக் கூர்வாள் கொடுப்பார் தம்மையே
பேசிப் பிதற்றப் பெருமை தருவார் ஊர்போலும்
பாசித் தடமும் வயலும் சூழ்ந்த பாசூரே. 8

நகு வாய் மலர்மேல் அயனும் நாகத்து அணையானும்
புகு வாய் அறியார் புறம் நின்று ஓரார் போற்று ஓவார்
செகு வாய் உகு பல் தலை சேர் கையார் ஊர்போலும்
பகுவாய் நாரை ஆரல் வாரும் பாசூரே. 9

தூய வெயில் நின்று உழல்வார் துவர் தோய் ஆடையார்
நாவில் வெய்ய சொல்லித் திரிவார் நயம் இல்லார்
காவல் வேவக் கணை ஒன்று எய்தார் ஊர்போலும்
பாவைக் குரவம் பயில் பூஞ்சோலைப் பாசூரே. 10

ஞானம் உணர்வான் காழி ஞானசம்பந்தன்
தேனும் வண்டும் இன்னிசை பாடும் திருப் பாசூர்க்
கானம் உறைவார் கழல் சேர் பாடல்இவை வல்லார்
ஊனம் இலராய் உம்பர்வானத்து உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

361. திருக்கள்ளில்

திருமுறை : 1/119 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்
இறைவர் : சிவானந்தேசுவரர் இறைவியார் : ஆனந்தவல்லியம்மை

முள்ளின்மேல் முது கூகை முரலும் சோலை
வெள்ளின்மேல் விடு கூறைக்கொடி விளைந்த
கள்ளில் மேய அண்ணல் கழல்கள் நாளும்
உள்ளும் மேல் உயர்வு எய்தல் ஒருதலையே. 1

ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடலால் கலன் இல்லான் உறை பதியால்
காடு அலால் கருதாத கள்ளில் மேயான்
பாடுஎலாம் பெரியார்கள் பரசுவாரே. 2

எண்ணார் மும்மதில் எய்த இமையா முக்கண்
பண் ஆர் நால்மறை பாடும் பரமயோகி
கண் ஆர் நீறு அணி மார்பன் கள்ளில் மேயான்
பெண்ஆண்ஆம்பெருமான் எம் பிஞ்ஞகனே. 3

பிறை பெற்ற சடை அண்ணல் பெடைவண்டு ஆலும்
நறை பெற்ற விரிகொன்றைத்தார் நயந்த
கறை பெற்ற மிடற்று அண்ணல் கள்ளில் மேயான்
நிறை பெற்ற அடியார்கள் நெஞ்சு உளானே. 4

விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரார் அம் மாக்
கரை ஆர் பொன் புனல் வேலிக் கள்ளில் மேயான்
அரை ஆர் வெண்கோவணத்த அண்ணல்தானே. 5

நலன் ஆய பலி கொள்கை நம்பான் நல்ல
வலன் ஆய மழுவாளும் வேலும் வல்லான்
கலன் ஆய தலைஓட்டான் கள்ளில் மேயான்
மலன்ஆய தீர்த்து எய்தும் மா தவத்தோர்க்கே. 6

பொடியார் மெய் பூசினும் புறவின் நறவம்
குடியா ஊர் திரியினும் கூப்பிடினும்
கடி ஆர் பூம்பொழில் சோலைக் கள்ளில் மேயான்
அடியார் பண்பு இகழ்வார்கள் ஆதர்களே. 7

திருநீலமலர்ஒண்கண் தேவி பாகம்
புரிநூலும் திருநீறும் புல்குமார்பில்
கருநீலமலர் விம்மு கள்ளில் என்றும்
பெரு நீலமிடற்று அண்ணல் பேணுவதே. 8

வரி ஆய மலரானும் வையம்தன்னை
உரிதுஆய அளந்தானும் உள்ளுதற்கு அங்கு
அரியானும் அரிதுஆய கள்ளில் மேயான்
பெரியான் என்று அறிவார்கள் பேசுவாரே. 9

ஆச்சியப் பேய்களோடு அமணர்குண்டர்
பேச்சுஇவை நெறி அல்ல பேணுமின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச் செய்த சடை அண்ணல் திருந்து அடியே. 10

திகை நான்கும் புகழ் காழிச் செல்வம் மல்கு
பகல் போலும் பேர்ஒளியான் பந்தன் நல்ல
முகை மேவும் முதிர்சடையான் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே. 11

திருச்சிற்றம்பலம்

362 . திருக்காளத்தி

திருமுறை : 3/36 பண் : கொல்லி இராகம் : நவரோசு

இறைவர் : காளத்திநாதர் இறைவியார் : ஞானப்பூங்கோதை

சந்தம் ஆர் அகிலொடு சாதி தேக்கம்மரம்
உந்தும் மா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தம் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி
எந்தையார் இணைஅடி என் மனத்து உள்ளவே. 1

ஆலம் மா மரவமோடு அமைந்த சீர்ச் சந்தனம்
சாலம் மா பீலியும் சண்பகம் உந்தியே
காலம் ஆர் முகலி வந்து அணைதரு காளத்தி
நீலம் ஆர் கண்டனை நினையுமா நினைவதே. 2

கோங்கமே குரவமே கொன்றை அம் பாதிரி
மூங்கில் வந்து அணைதரு முகலியின் கரையினில்
ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ
வீங்கு வெந்துயர் கெடும் வீடு எளிது ஆகுமே. 3

கரும்பு தேன் கட்டியும் கதலியின் கனிகளும்
அரும்பு நீர் முகலியின் கரையினில் அணி மதி
ஒருங்கு வார்சடையினன் காளத்தி ஒருவனை
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுலகு ஆள்வரே.4

வரை தரும் அகிலொடு மா முத்தம் உந்தியே
திரை தரு முகலியின் கரையினில் தேமலர்
விரை தரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரைதரு கழல்இணை நித்தலும் நினைமினே.(5 –7)


முத்தும் மா மணிகளும் முழுமலர்த்திரள்களும்
எத்து மா முகலியின் கரையினில் எழில்பெறக்
கத்திட அரக்களைக் கால்விரல் ஊன்றிய
அத்தன்தன் காளத்தி அணைவது கருமமே. 8

மண்ணும் மா வேங்கையும் மருதுகள் பீழ்ந்து உந்தி
நண்ணு மா முகலியின் கரையினில் நன்மை சேர்
வண்ண மா மலரவன் மால் அவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி ஆங்கு அணைந்து உய்ம்மினே. 9

வீங்கிய உடலினர் விரிதரு துவர்உடைப்
பாங்குஇலார் சொலை விடும் பரன்அடி பணியுமின்
ஓங்கு வண் காளத்தி உள்ளமோடு உணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க்கு ஒருவனே. 10

அட்டமாசித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார்சடையனை வயல் அணி காழியான்
சிட்ட நால்மறை வல ஞானசம்பந்தன் சொல்
இட்டமாப் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்



363 . திருக்காளத்தி

திருமுறை : 3/69 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : காளத்தீசுரர் இறைவியார் : ஞானப்பூங்கோதை

வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்தது ஒரு மாகடல் விடம்
தான் அமுதுசெய்து அருள்புரிந்த சிவன்
மேவும் மலைதன்னை வினவில்
ஏனம் இளமானினொடு கிள்ளை தினை
கொள்ள எழிலார்க் கவணினால்
கானவர்தம் மா மகளிர் கனக மணி
விலகு காளத்திமலையே. 1

முது சின வில் அவுணர் புரம்மூன்றும் ஒரு
நொடிவரையின் மூள எரிசெய்
சதுரர் மதி பொதி சடையர் சங்கரர்
விரும்பும் மலைதன்னை வினவில்
எதிர் எதிர வெதிர் பிணைய எழு பொறிகள்
சிதற எழில் ஏனம் உழுத
கதிர் மணியின் வளர் ஒளிகள் இருள் அகல
நிலவு காளத்திமலையே. 2

வல்லை வரு காளியை வகுத்து வலி
ஆகி மிகு தாரகனை நீ
கொல் என விடுத்து அருள்புரிந்த சிவன்
மேவும் மலை கூறி வினவில்
பல்பல இருங் கனி பருங்கி மிக
உண்டவை நெருங்கி இனம் ஆய்க்
கல் அதிர நின்று கரு மந்தி விளையாடு
காளத்திமலையே. 3

வேய் அனைய தோள் உமை ஒர்பாகம்அதுஆக
விடை ஏறி சடைமேல்
தூய மதி சூடி சுடுகாடில் நடம்ஆடி மலை
தன்னை வினவில்
வாய் கலசம் ஆக வழிபாடு செயும்
வேடன் மலர் ஆகும் நயனம்
காய்கணையினால் இடந்து ஈசன்அடி கூடு
காளத்திமலையே. 4

மலையின்மிசைதனில் முகில் போல் வருவது ஒரு
மதகரியை மழைபோல் அலறக்
கொலைசெய்து உமை அஞ்ச உரி போர்த்த சிவன்
மேவும் மலை கூறி வினவில்
அலை கொள் புனல் அருவி பலசுனைகள் வழி இழிய
அயல் நிலவு முது வேய்
கலகலென ஒளி கொள் கதிர் முத்தம்அவை
சிந்து காளத்திமலையே. 5

பார்அகம் விளங்கிய பகீரகன்
அருந்தவம் முயன்ற பணி கண்டு
ஆர் அருள் புரிந்து அலைகொள் கங்கை சடை
ஏற்ற அரன் மலையை வினவில்
வார் அதர் இருங்குறவர் சேவலில்
மடுத்து அவர் எரித்த விறகில்
கார்அகில் இரும் புகை விசும்பு கமழ்கின்ற
காளத்திமலையே. 6

ஆரும் எதிராத வலிஆகிய
சலந்தரனை ஆழிஅதனால்
ஈரும் வகை செய்து அருள்புரிந்தவன்
இருந்த மலைதன்னை வினவில்
ஊரும் அரவம் ஒளி கொள் மா மணி
உமிழ்ந்தவை உலாவி வரலால்
கார்இருள் கடிந்து கனகம் என விளங்கு
காளத்திமலையே. 7

எரி அனைய சுரிமயிர் இராவணனை
ஈடு அழிய எழில் கொள் விரலால்
பெரிய வரை ஊன்றி அருள்செய்த சிவன்
மேவும் மலை பெற்றி வினவில்
வரிய சிலை வேடுவர்கள் ஆடவர்கள்
நீடு வரைஊடு வரலால்
கரியினொடு வரிஉழுவை அரிஇனமும்
வெருவு காளத்திமலையே. 8

இனது அளவில் இவனது அடிஇணையும் முடி
அறிதும் என இகலும் இருவர்
தனது உருவம் அறிவு அரிய சகல சிவன்
மேவும் மலைதன்னை வினவில்
புனவர் புனமயில் அனைய மாதரொடு
மைந்தரும் மணம் புணரும் நாள்
கனகம் என மலர்கள் அணி வேங்கைகள்
நிலாவு காளத்திமலையே. 9

நின்று கவளம்பல கொள் கையரொடு
மெய்யில் இடு போர்வையவரும்
நன்றி அறியாத வகை நின்ற சிவன்
மேவும் மலை நாடி வினவில்
குன்றில் மலி துன்று பொழில் நின்ற குளிர்
சந்தின் முறி தின்று குலவிக்
கன்றினொடு சென்று பிடி நின்று விளையாடு
காளத்திமலையே. 10

காடுஅது இடம்ஆக நடம்ஆடு சிவன்
மேவு காளத்திமலையை
மாடமொடு மாளிகைகள் நீடுவளர்
கொச்சைவயம் மன்னு தலைவன்
நாடுபல நீடு புகழ் ஞானசம்
பந்தன் உரை நல்ல தமிழின்
பாடலொடு பாடும் இசை வல்லவர்கள்
நல்லர் பரலோகம் எளிதே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருக்காளத்தியை வணங்குமாறு திருக்கூட்டத்துடன் எழுந்தருளுகின்ற தோணிபுரத் தோன்றலார் கானவர் குலமும் ஏனையவுலகமும் உய்யுமாறு திருவவதாரஞ் செய்தருளிய கண்ணப்பநாயனாரது திருப்பபாதச் செருப்புத் தோய்ந்த வேட்டைக் காட்டையும், அங்கு நிறைந்துள்ள மரஞ்செடி கொடிகளையும், ஏனைய தேவர்போற்றும் பல இடங்களையும் வணங்கித் துதித்துத் திருக்காளத்திக்குச் சமீபமாக எழுந்தருளினார். அவ்வாறு எழுந்தருளும்போது அங்கு வசிக்கும் சைவ முனிவர்கள், காபாலிகர்கள், மாவிரதர், பைரவர், வேடர்குலத் தலைவர்கள், தவசிகன் முதலிய திருத்தொண்டர் எல்லாரும், ஞாலம் போற்றும் ஞானபோனகர் எழுந்தருளினாரென்று எதிர்கொண்டு வந்து வணங்கப் பிள்ளையாரும் அவரை வணங்கியவரோடு அளவளாவிச் சென்றருளும்போது 'திருக்காளத்தித் திருமலை யிம்மலைகளுள் யாதென்று' வினவியருளினார். அவர்கள் பிள்ளையாரை வணங்கி, 'மறைவாழ்வே, சைவ சிகாமணியே, தோன்றுமிந்த மலை காளனோடு அத்திதம்மிலிகலி வழிபாடுசெய இறைவர் மேவும், அந்தமில் சீர்க்காளத்தி மலையாம்' என்று சொல்லப் பிள்ளையார் நிலத்தின் மீது பணிந்தெழுந்து அஞ்சலிசெய்து பேரன்போடு 'வானவர்கள் தானவர்கள்' என்னும் சாதாரித் திருவிராகத் திருப்பதிகத்தை எடுத்து அதில் நான்காந் திருப்பாட்டில் கண்ணப்பரது திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடிக்கொண்டு சென்று மலையடி வாரத்தை அடைந்து, மலையைத் தொழுது மேலேயேறித் திருக்கோயிலை வலம்வந்து உட்புகுந்து இறைவனை வணங்கிப்போற்றி வீழ்ந்தெழுகின்றவர் கும்பிட்டபயன் காண்பார் போல் மெய்வேடர் பெம்மானைக் கண்டு வீழ்ந்து வணங்கிப் பல முறையும் போற்றி மீண்டும் அடிவாரத்தை அடைந்து அவ்விடத்து ஒரு திருமடத்து எழுந்தருளியிருந்து காலந்தோறும் வழிபட்டருளினார். அவ்வாறு அங்கு வசிக்கும்போது வடதிசையிலும் குடதிசையிலும் அருந்தமிழ் வழக்கு நிகழாதாகையால் பிள்ளையார் அங்கிருந்தே திருக்கயிலாயம், திருக்கேதாரம், திருஇந்திரநீலப்பருப்பதம், திருப்பருப்பதம், திருக்கோகரணம் முதலிய திருப்பதிகளை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார்.

364 . திரு ஒற்றியூர்

திருமுறை : 3/57 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : படம்பக்கநாதர் இறைவியார் : வடிவுடைஅம்மை

புற்றிடம் கொண்ட நாதர்

விடையவன் விண்ணும்மண்ணும் தொழ நின்றவன் வெண்மழுவாள்
படையவன் பாய் புலித்தோல் உடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய சங்கவெண்தோடு
உடையவன் ஊனம்இல்லி உறையும் இடம் ஒற்றியூரே. 1

பாரிடம் பாணிசெய்யப் பறைக்கண் செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடல்ஆடல் இலயம் சிதையாத கொள்கைத்
தார் இடும் போர் விடையன் தலைவன் தலையே கலனா
ஊர் இடும் பிச்சை கொள்வான் உறையும் இடம் ஒற்றியூரே. 2

விளிதரு நீரும் மண்ணும் விசும்போடு அனல் காலும்ஆகி
அளி தரு பேர் அருளான் அரன் ஆகிய ஆதிமூர்த்தி
களி தரு வண்டு பண்செய் கமழ்கொன்றையினோடு அணிந்த
ஒளி தரு வெண்பிறையான் உறையும் இடம் ஒற்றியூரே.3

அரவமே கச்சுஅதுஆக அசைத்தான் அலர்கொன்றை அம்தார்
விரவி வெண்நூல் கிடந்த விரையார் வரைமார்பன் எந்தை
பரவுவார் பாவம்எல்லாம் பறைத்துப் படர்புன்சடைமேல்
உரவுநீர் ஏற்ற பெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே. 4

விலகினார் வெய்ய பாவம் விதியால் அருள் செய்து நல்ல
பலகினார் மொந்தை தாளம் தகுணிச்சமும் பாணியாலே
அலகினால் வீசி நீர் கொண்டு அடிமேல்அலர் இட்டுமுட்டாது
உலகினார் ஏத்தநின்றான் உறையும் இடம் ஒற்றியூரே. 5

கமையொடு நின்ற சீரான் கழலும் சிலம்பும் ஒலிப்பச்
சுமையொடு மேலும் வைத்தான் விரிகொன்றையும் சோமனையும்
அமையொடு நீண்ட திண்தோள் அழகாய பொற்தோடு இலங்க
உமையொடும் கூடிநின்றான் உறையும் இடம் ஒற்றியூரே.6

நன்றியால் வாழ்வது உள்ளம் உலகுக்கு ஒரு நன்மையாலே
கன்றினார் மும்மதிலும் கருமால் வரையே சிலையாப்
பொன்றினார் வார் சுடலைப் பொடிநீறு அணிந்தார் அழல்அம்பு
ஒன்றினால் எய்தபெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே.7

பெற்றியால் பித்தன் ஒப்பான் பெருமான் கருமான் உரிதோல்
சுற்றியான் சுத்திசூலம் சுடர்க் கண்ணுதல் மேல்விளங்கத்
தெற்றியால் செற்று அரக்கன் உடலைச் செழுமால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றும்ஆள்வான் உறையும் இடம் ஒற்றியூரே. 8

திருவினார் போதினானும் திருமாலும் ஓர் தெய்வம்உன்னித்
தெரிவினால் காணமாட்டார் திகழ் சேவடி சிந்தை செய்து
பரவினார் பாவம்எல்லாம் பறையப் படர்பேர் ஒளியோடு
ஒருவனாய் நின்றபெம்மான் உறையும் இடம் ஒற்றியூரே.9

தோகையம் பீலிகொள்வார் துவர்க் கூறைகள் போர்த்து உழல்வார்
ஆகம செல்வனாரை அலர் தூற்றுதல் காரணமாக்
கூகையம் மாக்கள் சொல்லைக் குறிக் கொள்ளன் மின் ஏழ்உலகும்
ஓகைதந்து ஆளவல்லான் உறையும் இடம் ஒற்றியூரே.10

ஒண்பிறை மல்குசென்னி இறைவன் உறை ஒற்றியூரைச்
சண்பையர் தம் தலைவன் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனை பாடல் பத்தும் பரவிப்பணிந்து ஏத்த வல்லார்
விண்புனை மேல்உலகம் விருப்பு எய்துவர் வீடுஎளிதே.11

திருச்சிற்றம்பலம்

365 . திருவலிதாயம்

திருமுறை : 1/3 பண் : நட்டபாடை இராகம் : நாட்டை
இறைவர் : வலிதாயநாதர் இறைவியார் : தாயம்மை

பத்தரொடு பலரும் பொலியம் மலர் அங்கைப்புனல் தூவி
ஒத்த சொல்லி உலகத்தவர்தாம் தொழுது ஏத்த உயர் சென்னி
மத்தம் வைத்த பெருமான் பிரியாது உறைகின்ற வலிதாயம்
சித்தம்வைத்த அடியார் அவர்மேல் அடையா மற்று இடர் நோயே.1

படை இலங்கு கரம்எட்டு உடையான் படிறுஆகக் கனல் ஏந்திக்
கடை இலங்கு மனையில் பலி கொண்டு உணும் கள்வன் உறைகோயில்
மடை இலங்கு பொழிலின் நிழல்வாய் மது வீசும் வலிதாயம்
அடைய நின்ற அடியார்க்கு அடையா வினை அல்லல் துயர்தானே. 2

ஐயன் நொய்யன் அணியன் பிணிஇல்லவர் என்றும் தொழுதுஏத்தச்
செய்யன் வெய்ய படை ஏந்த வல்லான் திருமாதோடு உறைகோயில்
வையம் வந்து பணிய பிணிதீர்த்து உயர்கின்ற வலிதாயம்
உய்யும் வண்ணம் நினைமின் நினைந்தால் வினை தீரும் நலமாமே. 3

ஒற்றை ஏறுஅது உடையான் நடம்ஆடி ஓர் பூதப்படை சூழப்
புற்றில் நாகம் அரை ஆர்த்து உழல்கின்ற எம்பெம்மான் மடவாளோடு
உற்ற கோயில்உலகத்து ஒளி மல்கிட உள்கும் வலிதாயம்
பற்றி வாழும்அதுவே சரணாவது பாடும் அடியார்க்கே. 4

புந்தி ஒன்றி நினைவார் வினைஆயின தீரப் பொருள்ஆய
அந்தி அன்னது ஒரு பேர்ஒளியான் அமர் கோயில் அயல் எங்கும்
மந்தி வந்து கடுவன்னொடும் கூடிவணங்கும் வலிதாயம்
சிந்தியாத அவர் தம் அடும் வெந்துயர் தீர்தல் எளிது அன்றே. 5

ஊன் இயன்ற தலையில் பலி கொண்டு உலகத்து உள்ளவர் ஏத்தக்
கான் இயன்ற கரியின் உரி போர்த்து உழல் கள்வன் சடைதன்மேல்
வான் இயன்றபிறை வைத்த எம்ஆதி மகிழும் வலிதாயம்
தேன் இயன்ற நறுமாமலர் கொண்டு நின்று ஏத்தத் தெளவுஆமே. 6

கண் நிறைந்த விழியின் அழலால் வரு காமன் உயிர்வீட்டிப்
பெண் நிறைந்தஒருபால் மகிழ்வு எய்திய பெம்மான் உறைகோயில்
மண் நிறைந்த புகழ்கொண்டு அடியார்கள் வணங்கும் வலிதாயத்து
உள் நிறைந்த பெருமான் கழல்ஏத்த நம் உண்மைக் கதியாமே. 7

கடலில் நஞ்சம் அமுதுஉண்டு இமையோர் தொழுது ஏத்த நடம்ஆடி
அடல் இலங்கைஅரையன் வலிசெற்று அருள் அம்மான் அமர்கோயில்
மடல் இலங்கு கமுகின் பலவின் மது விம்மும் வலிதாயம்
உடல் இலங்கும் உயிர் உள்ளளவும் தொழ உள்ளத்துயர்போமே. 8

பெரிய மேருவரையே சிலையா மலைவுஉற்றார் எயில்மூன்றும்
எரிய எய்த ஒருவன் இருவர்க்கு அறிவொண்ணா வடிவுஆகும்
எரியதாகி உற ஓங்கியவன் வலிதாயம் தொழுதுஏத்த
உரியராக உடையார் பெரியார் என உள்கும் உலகோரே. 9

ஆசி ஆர மொழியார் அமண்சாக்கியர் அல்லாதவர் கூடி
ஏசி ஈரம் இலராய் மொழிசெய்தவர் சொல்லைப் பொருள்என்னேல்
வாசி தீர அடியார்க்கு அருள்செய்து வளர்ந்தான் வலிதாயம்
பேசும் ஆர்வம் உடையார் அடியார் எனப் பேணும் பெரியோரே. 10

வண்டு வைகும் மணம் மல்கிய சோலை வளரும் வலிதாயத்து
அண்டவாணன் அடி உளகுதலால்அருள்மாலைத் தமிழ்ஆகக்
கண்டல் வைகுகடல் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ்பத்தும்
கொண்டு வைகி இசை பாட வல்லார் குளிர்வானத்து உயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

366. திருவேற்காடு

திருமுறை : 1/57 பண் : பழந்தக்கராகம் இராகம் : ஆரபி, சுத்த சாவேரி

இறைவர் : வேற்காட்டுநாதர் இறைவியார் : வேற்காட்டுநாயகி

ஒள்ளிது உள்ளக் கதிக்கு ஆம் இவன் ஒளி
வெள்ளியான் உறை வேற்காடு
உள்ளியார் உயர்ந்தார் இவ்உலகினில்
தெள்ளியார் அவர் தேவரே. 1

ஆடல் நாகம் அசைத்து அளவுஇல்லது ஓர்
வேடம் கொண்டவன் வேற்காடு
பாடியும் பணிந்தார் இவ் உலகினில்
சேடர்ஆகிய செல்வரே. 2

பூதம் பாடப் புறங்காட்டுஇடை ஆடி
வேதவித்தகன் வேற்காடு
போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே. 3

ஆழ்கடல் எனக் கங்கை கரந்தவன்
வீழ்சடையினன் வேற்காடு
தாழ்வு உடை மனத்தால் பணிந்து ஏத்திடப்
பாழ்படும் அவர் பாவமே. 4

காட்டினாலும் அயர்த்திடக் காலனை
வீட்டினான் உறை வேற்காடு
பாட்டினால் பணிந்து ஏத்திட வல்லவர்
ஓட்டினார் வினை ஒல்லையே. 5

தோலினால் உடை மேவ வல்லான் சுடர்
வேலினான் உறை வேற்காடு
நூலினால் பணிந்து ஏத்திட வல்லவர்
மாலினார் வினை மாயுமே. 6

மல்லல் மும்மதில் மாய்தர எய்தது ஓர்
வில்லினான் உறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே. 7

மூரல் வெண்மதி சூடும் முடிஉடை
வீரன் மேவிய வேற்காடு
வாரம்ஆய் வழிபாடு நினைந்துஅவர்
சேர்வர் செய் கழல் திண்ணமே. 8

பரக்கினார் படுவெண்தலையில் பலி
விரக்கினான் உறை வேற்காட்டூர்
அரக்கன் ஆண்மை அடரப்பட்டான் இறை
நெருக்கினானை நினைமினே. 9

மாறுஇலா மலரானொடு மால் அவன்
வேறு அலான் உறை வேற்காடு
ஈறு இலா மொழியே மொழியா எழில்
கூறினார்க்கு இல்லை குற்றமே. 10

விண்ட மாம்பொழில் சூழ் திருவேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம்பந்தன செந்தமிழ்
கொண்டு பாடக் குணம்ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

367 . திருமயிலாப்பூர்

திருமுறை : 2/47 பண் : சீகாமரம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : கபாலீசுவரர் இறைவியார் : கற்பகவல்லி

மட்டிட்ட புன்னைஅம்கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரபல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 1

மைப் பயந்த ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பயந்த நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய். 2

வளைக்கை மடநல்லார் மா மயிலை வண் மறுகில்
துளக்கு இல் கபாலீச்சரத்தான் தொல்கார்த்திகைநாள்
தளத்து ஏந்து இளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். 3

ஊர் திரை வேலை உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல் வல்லார் கொற்றம் கொள் சேரிதனில்
கார் தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய். 4

மைப் பூசும் ஒண்கண் மடநல்லார் மா மயிலைக்
கைப் பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப் பூசும் ஒண்பு புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப் பூசம் காணாதே போதியோ பூம்பாவாய். 5

மடல் ஆர்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடல்ஆட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆன்ஏறு ஊரும் அடிகள் அடி பரவி
நடம் ஆடல் காணாதே போதியோ பூம்பாவாய். 6

மலி விழா வீதி மடநல்லார் மா மயிலைக்
கலி விழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
பலி விழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய். 7

தண் ஆர் அரக்கன் தோள் சாய்த்து உகந்த தாளினான்
கண் ஆர் மயிலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
பண் ஆர் பதினெண்கணங்கள்தம் அட்டமிநாள்
கண் ஆரக் காணாதே போதியோ பூம்பாவாய். 8

நல் தாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
முற்றாங்கு உணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொன் தாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய். 9

உரிஞ்சு ஆய வாழ்க்கை அமண் உடையைப் போர்க்கும்
இருஞ் சாக்கியர்கள் எடுத்து உரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய். 10

கான் அமர் சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
தேன் அமர் பூம்பாவைப் பாட்டுஆகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம் புகழ்ந்த பத்தும் வல்லார்
வான சம்பந்தத்தவரோடும் வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருமயிலாப்பூரிலே வணிகர் குலத்திலே சிவநேசர் என்பர் புறச் சமயங்கள் ஒழிந்து சைவந் தழையும் மனமுடையராய்ச் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்து மிக்க செல்வராய் ஒருவரிருந்தனர். அவர், ஆளுடைய பிள்ளையார் அருட்பெருஞ் செயல்களைக் கேட்டு அவர்பாற் பேரன்புடையராய்த் தாமும், பூமகளையொத்த பூம்பாவை என்னும் பெண்ணும், எல்லையில்லாத தமது செல்வமும் எல்லாம் ஆளுடைய பிள்ளையார் திருவடிக்குப் பாங்காவவெனப் பலரறியச் சொன்னார். இவ்வாறு நாட்கள் செல்லா நிற்ப, ஒரு நாள் பூம்பாவை பூங்காவில் மலர் பறிக்கும்போது பாம்புகடித்து அவ்விடம் எதனாலும் தீராது இறக்க, சிவநேசர் 'இவளை முன்னமே ஞான சம்பந்தருக்கு எனக் கொடுத்ததனால் இவளைத் தகனம் செய்து இவளது என்பையும் சாம்பரையும் அவரெய்தும் வரையில் சேமித்து வைப்பேன்' என்று உன்னி அவ்வாறே செய்தவற்றைக் குடத்திலேயிட்டுக் கன்னி மாடத்தில் வைத்துத் தீபம் தூபம் மலர் முதலியவற்றால் உபசரித்து வந்தார். வரும்போது சிரபுரச் செம்மலார் தொண்டை நாட்டை அடைந்து பல தலங்களையும் தரிசித்துத் திருவொற்றியூரிலே எழுந்தருளியிருத்தலைக் கேட்ட சிவநேசர் பேரனபுகொண்டு தம்மூரினின்றும் திருவொற்றியூர் வரையும் நடைக்காவணம், பாவாடை முதலிய இட்டுச் சிவனடியார்களோடும் சுவாமிகளை எதிர்கொண்டார். சுவாமிகளும் திருக்கூட்டத்தினருடன் வரச் சிவநேசர் நிலமுறப் பணிந்து வணங்கிப் பேரானந்தங் கொண்டார். பிள்ளையார் அவரைப் பாராட்டி அவர் செய்தியெல்லாம் அடியார் பால் தெரிந்து திருமயிலாப்பூருக்கு எழுந்தருளித் திருக்கபாலீச்சரத்து இறைவனை வணங்கி விண்ணப்பித்து வெளிவந்து சிவநேசரால் அவர் மகளது என்புக் குடத்தைத் திருக்கோயில் திருமதில் புறத்திலே திருக்குளக் கரையிற் சுவாமியினது திருமுன்னர்க் கொணர்வித்து அக்குடத்தைத் திருஅருள் நோக்கஞ் செய்து 'பூம்பாவாய்' என விளித்து, 'மண்ணுலகத்திற் பிறந்தவர் பெறும்பேறு சிவனடியார்களாகிய மாகேச்சுவரர்களை அமுது செய்வித்தலும் சிவாகம விதிப்படி செய்யப் பெறுகின்ற சிவபெருமான் திருவிழாச் சிறப்பினைக் கண்டு தொழுதலுமாகிய இவ்விரண்டுமே யாம் என்பது உண்மையாயின்

இப்போது நீ இங்கு உயிர்பெற்றெழுந்திருக்கக் கடவாய்' என்னும் திருவுள்ளக்கிடையோடு 'மட்டிட்ட புன்னை' என்னும் திருப்பதிகம் பாடினார். அத் திருப்பதிகத்தின் திருப்பாட்டின் அடைவே பூம்பாவை முதற் பாட்டில் வடிவு பெற்றும், அடுத்த எட்டுப் பாட்டில் பன்னிரண்டாண்டு அள எய்தியும், தெளிந்த பொருணிச்சயம் இல்லாத சமணரும் சாக்கியரும் இச்செய்கை ஏற்றதன்று என்று சொல்வார்கள் என்னுங் கருத்துடைய பத்தாவது பாட்டாகிய சமண்பாட்டினைச் சொன்ன மாத்திரத்தில் வளையலணிந்த சிவந்த கை வெளியே தோன்றும் படி தாமரைக் கோயிலினின்றெழும் இலக்குமியைப் போலக் குடமுடைந்து வெளியே வந்தாள். மண்ணும் விண்ணும் பாராட்டிப் போற்றிவியந்தன. சிவனடியார் செய்த அரவொலி கடலினும் மிக்கொலித்தது. பூம்பாவை தன் பிதாவுடன் பிள்ளையாரை வணங்கினாள். சிவநேசர், சுவாமிகள் அவளை மணம் புணருமாறு வேண்ட அவர் தாம் அவளை எழுப்பிப் பிதாப்போன்றலால் உரைதகாதென மறுத்தார். பூம்பாவை கன்னிமாடத்திருந்து பிள்ளையார் திருவடியை உன்னிவைகிச் சிவத்தை அடைந்தாள். ஞானசம்பந்தர் சிலநாள் அங்கிருந்து திருவான்மியூருக்கு எழுந்தருளினார்.

368 . திருவான்மியூர்

திருமுறை : 2/4 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : பால்வண்ணநாதர் இறைவியார் : சுந்தரநாயகி

கரை உலாம் கடலில் பொலி சங்கம்வெள்இப்பி வன்
திரை உலாம் கழி மீன் உகளும் திரு வான்மியூர்
உரை உலாம் பொருளாய் உலகு ஆளுடையீர் சொலீர்
வரை உலாம் மடமாது உடன்ஆகிய மாண்புஅதே. 1

சந்து உயர்ந்து எழு கார் அகில் தண்புனல் கொண்டு தம்
சிந்தைசெய்து அடியார் பரவும் திரு வான்மியூர்ச்
சுந்தரக்கழல்மேல் சிலம்பு ஆர்க்க வல்லீர் சொலீர்
அந்தியின் ஒளியின் நிறம்ஆக்கிய வண்ணமே. 2

கான் அயங்கிய தண்கழி சூழ் கடலின் புறம்
தேன் அயங்கிய பைம்பொழில் சூழ் திரு வான்மியூர்த்
தோல் நயங்கு அமர் ஆடையினீர் அடிகேள் சொலீர்
ஆனைஅங்கு அவ்உரி போர்த்து அனல் ஆட உகந்ததே. 3

மஞ்சு உலாவிய மாட மதில் பொலி மாளிகைச்
செஞ்சொலாளர்கள்தாம் பயிலும் திரு வான்மியூர்த்
துஞ்சு அஞ்சு இருள் ஆடல் உகக்க வல்லீர் சொலீர்
வஞ்ச நஞ்சு உண்டு வானவர்க்கு இன்அருள் வைத்ததே.4

மண்ணினில் புகழ் பெற்றவர் மங்கையர்தாம் பயில்
திண்ணெனப் புரிசைத் தொழில் ஆர் திரு வான்மியூர்த்
துண்ணெனத் திரியும் சரிதைத் தொழிலீர் சொலீர்
விண்ணினில் பிறை செஞ்சடை வைத்த வியப்புஅதே.5

போது உலாவிய தண்பொழில் சூழ் புரிசைப்புறம்
தீது இல் அந்தணர் ஓத்து ஒழியாத் திரு வான்மியூர்ச்
சூது உலாவிய கொங்கை ஓர்பங்கு உடையீர் சொலீர்
மூதெயில் ஒருமூன்று எரியூட்டிய மொய்ம்புஅதே. 6

வண்டு இரைத்த தடம் பொழிலின் நிழல் கானல்வாய்த்
தெண்திரைக் கடல் ஓதம் மல்கும் திரு வான்மியூர்த்
தொண்டு இரைத்து எழுந்து எத்திய தொல்கழலீர் சொலீர்
பண்டு இருக்கு ஒரு நால்வர்க்கு நீர் உரை செய்ததே.7

தக்கில் வந்த தசக்கிரிவன் தலைபத்து இறத்
திக்கில் வந்து அலற அடர்த்தீர் திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந்தீர் அருள் என்சொலீர்
பக்கமே பலபாரிடம் பேய்கள் பயின்றதே. 8

பொருது வார்கடல் எண்திசையும் தரு வாரியால்
திரிதரும் புகழ் செல்வம் மல்கும் திரு வான்மியூர்ச்
சுருதியார் இருவர்க்கும் அறிவு அரியீர் சொலீர்
எருதுமேற்கொடு உழன்று உகந்து இல்பலி ஏற்றதே. 9

மை தழைத்து எழு சோலையில் மாலை சேர் வண்டுஇனம்
செய் தவத்தொழிலார் இசை சேர் திரு வான்மியூர்
மெய் தவப் பொடி பூசிய மேனியினீர் சொலீர்
கைதவச் சமண்சாக்கியர் கட்டுரைக்கின்றதே. 10

மாது ஓர் கூறுஉடை நல் தவனைத் திரு வான்மியூர்
ஆதிஎம்பெருமான் அருள்செய்ய வினாஉரை
ஓதி அன்று எழு காழியுள் ஞானசம்பந்தன் சொல்
நீதியால் நினைவார் நெடுவான் உலகு ஆள்வரே. 11

திருச்சிற்றம்பலம்

369 . திருவான்மியூர்

திருமுறை : 3/55 பண் : கௌசிகம் இராகம் : பைரவி
இறைவர் : பால்வண்ணநாதர் இறைவியார் : சுந்தரநாயகி

விரை ஆர் கொன்றையினாய் விடம் உண்ட மிடற்றினனே
உரை ஆர் பல்புகழாய் உமைநங்கை ஓர்பங்கு உடையாய்
திரை ஆர் தெண்கடல் சூழ் திரு வான்மியூர் உறையும்
அரையா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 1

இடி ஆர் ஏறு உடையாய் இமையோர்தம் மணிமுடியாய்
கொடி ஆர் மா மதியோடு அரவம் மலர்க்கொன்றையினாய்
செடி ஆர் மாதவி சூழ் திரு வான்மியூர் உறையும்
அடிகேள் உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 2

கை ஆர் வெண்மழுவா கனல் போல் திருமேனியனே
மை ஆர் ஒண்கண் நல்லாள்உமையாள் வளர் மார்பினனே
செய் ஆர் செங்கயல் பாய் திரு வான்மியூர் உறையும்
ஐயா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 3

பொன் போலும் சடைமேல் புனல்தாங்கிய புண்ணியனே
மின் போலும் புரிநூல் விடை ஏறிய வேதியனே
தென்பால் வையம்எலாம் திகழும் திரு வான்மிதன்னில்
அன்பா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே.4

கண் ஆரும் நுதலாய் கதிர் சூழ் ஒளி மேனியின் மேல்
எண் ஆர் வெண்பொடி நீறு அணிவாய் எழில் ஆர் பொழில் சூழ்
திண் ஆர் வண் புரிசைத் திரு வான்மியூர் உறையும்
அண்ணா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே.5

நீதி நின்னை அல்லால் நெறியாதும் நினைந்து அறியேன்
ஓதீ நால்மறைகள் மறையோன் தலை ஒன்றினையும்
சேதீ சேதம் இல்லாத் திருவான்மியூர் உறையும்
ஆதீ உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே. 6

வான் ஆர் மா மதி சேர் சடையாய் வரை போல வரும்
கான் ஆர் ஆனையின் தோல் உரித்தாய் கறை மா மிடற்றாய்
தேன் ஆர் சோலைகள் சூழ் திரு வான்மியூர் உறையும்
ஆனாய் உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே.(7 –8)

பொறி வாய் நாகணையானொடு பூமிசை மேயவனும்
நெறி ஆர் நீள்கழல் மேல்முடி காண்பு அரிது ஆயவனே
செறிவு ஆர் மா மதில் சூழ் திரு வான்மியூர் உறையும்
அறிவே உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே.9

குண்டாடும் சமணர் கொடும் சாக்கியர் என்று இவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாது அவர் பேச நின்றாய்
திண் தேர் வீதிஅது ஆர் திரு வான்மியூர் உறையும்
அண்டா உன்னை அல்லால் அடையாது எனது ஆதரவே.10

கன்று ஆரும் கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்று ஆன புகழான் மிகு ஞானசம்பந்தன் உரை
சென்றார்தம் இடர் தீர் திரு வான்மியூர் அதன்மேல்
குன்றாது ஏத்த வல்லார் கொடுவல்வினை போய் அறுமே.11

திருச்சிற்றம்பலம்

370 . திருக்கழுக்குன்றம்

திருமுறை : 1/103 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : வேதகிரீசுவரர் இறைவியார் : திரிபுரசுந்தரி, பெண்ணினல்லாளம்மை

தோடு உடையான் ஒரு காதில் தூய குழை தாழ
ஏடு உடையான் தலைகலனாக இரந்து உண்ணும்
நாடு உடையான் நள்இருள் ஏமம் நடம் ஆடும்
காடு உடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 1

கேண வல்லான் கேழல்வெண்கொம்பு குறள்ஆமை
பூண வல்லான் புரிசடைமேல் ஓர் புனல் கொன்றை
பேண வல்லான் பெண்மகள் தன்னை ஒருபாகம்
காண வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 2

தேன் அகத்து ஆர் வண்டுஅது உண்ட திகழ் கொன்றை
தான் நக தார் தண்மதி சூடித் தலைமேல் ஓர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுது ஏத்தும்
கானகத்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 3

துணையல் செய்தான் தூய வண்டு யாழ்செய் சுடர்க்கொன்றை
பிணையல் செய்தான் பெண்ணின் நல்லாளை ஒருபாகம்
இணையல்செய்யா இலங்கு எயில்மூன்றும் எரிஉண்ணக்
கணையல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 4

பை உடைய பாம்பொடு நீறு பயில்கின்ற
மெய் உடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மை உடைய மா மிடற்று அண்ணல் மறி சேர்ந்த
கை உடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 5

வெள்ளம்எல்லாம் விரிசடை மேல் ஓர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குரைகழல் ஏத்தும் சிறுத்தொண்டர்
உள்ளம் எல்லாம் உள்கி நின்று ஆங்கே உடன் ஆடும்
கள்ளம் வல்லான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. (6–7)

ஆதல் செய்தான் அரக்கர்தம் கோனை அரு வரையின்
நோதல் செய்தான் நொடிவரையின்கண் விரல் ஊன்றிப்
பேர்தல் செய்தான் பெண்மகள் தன்னோடு ஒருபாகம்
காதல் செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 8

இடந்த பெம்மான் ஏனம்அதுஆயும் அனம்ஆயும்
தொடர்ந்த பெம்மான் தூ மதிசூடி வரையார்தம்
மடந்தை பெம்மான் வார்கழல் ஓச்சிக் காலனைக்
கடந்த பெம்மான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 9

தேய நின்றான் திரிபுரம் கங்கை சடைமேலே
பாய நின்றான் பலர் புகழ்ந்து ஏத்த உலகுஎல்லாம்
சாய நின்றான் வன்சமண்குண்டர் சாக்கீயர்
காய நின்றான் காதல்செய் கோயில் கழுக்குன்றே. 10

கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை
நண்ணிய சீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண் இயல்பால் பாடிய பத்தும்இவை வல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

371. திருஅச்சிறுபாக்கம்

திருமுறை : 1/77 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி
இறைவர் : பாக்கபுரேசுவரர் இறைவியார் : சுந்தரநாயகி

பொன் திரண்டன்ன புரிசடை புரளப்
பொருகடல் பவளமொடு அழல்நிறம் புரையக்
குன்றுஇரண்டு அன்ன தோள்உடை அகலம்
குலாய வெண்நூலொடு கொழும்பொடி அணிவர்
மின் திரண்டன்ன நுண்இடை அரிவை
மெல்லியலாளை ஓர் பாகமாப் பேணி
அன்று இரண்டுஉருவம் ஆயஎம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 1

தேனினும் இனியர் பால் அன நீற்றர்
தீம்கரும்பு அனையர் தம் திருவடி தொழுவார்
ஊன் நயந்து உருக உவகைகள் தருவார்
உச்சிமேல் உறைபவர் ஒன்றுஅலாது ஊரார்
வானகம் இறந்து வையகம் வணங்க
வயம்கொள நிற்பது ஓர் வடிவினை உடையார்
ஆனையின்உரிவை போர்த்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 2

கார் இருள்உருவம் மால்வரை புரையக்
களிற்றினது உரிவை கொண்டு அரிவைமேல் ஓடி
நீர்உருமகளை நிமிர்சடைத் தாங்கி
நீறு அணிந்து ஏறு உகந்து ஏறிய நிமலர்
பேர்அருளாளர் பிறவியில் சேரார்
பிணி இலர் கேடு இலர் பேய்க்கணம் சூழ
ஆர்இருள் மாலை ஆடும் எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 3

மைம்மலர்க் கோதை மார்பினர் எனவும்
மலைமகள் அவளொடு மருவினர் எனவும்
செம்மலர்ப்பிறையும் சிறை அணி புனலும்
சென்னிமேல் உடையர் எம் சென்னிமேல் உறைவார்
தம் மலர்அடி ஒன்று அடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வட சொலும் தாள்நிழல் சேர
அம் மலர்க்கொன்றை அணிந்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 4

விண்உலாம் மதியம் சூடினர் எனவும்
விரிசடை உள்ளது வெள்ளநீர் எனவும்
பண்உலாம் மறைகள் பாடினர் எனவும்
பலபுகழ்அல்லது பழிஇலர் எனவும்
எண்ணல் ஆகாத இமையவர் நாளும்
ஏத்த அரவங்களோடு எழில் பெற நின்ற
அண்ணல் ஆன்ஊர்தி ஏறும் எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 5

நீடுஇருஞ்சடை மேல் இளம்பிறை துளங்க
நிழல் திகழ் மழுவொடு நீறுமெய் பூசித்
தோடு ஒரு காதினில் பெய்து வெய்துஆய
சுடலையில் ஆடுவர் தோல்உடையாகக்
காடு அரங்காகக் கங்குலும் பகலும்
கழுதொடு பாரிடம் கைதொழுது ஏத்த
ஆடு அரவு ஆட ஆடும் எம்அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 6

ஏறும் ஒன்று ஏறி நீறுமெய் பூசி
இளங்கிளை அரிவையொடு ஒருங்கு உடன் ஆகிக்
கூறும் ஒன்று அருளிக் கொன்றைஅம்தாரும்
குளிர்இளமதியமும் கூவிள மலரும்
நாறும் மல்லிகையும் எருக்கொடு முருக்கும்
மகிழ் இளவன்னியும் இவை நலம் பகர
ஆறும் ஓர் சடைமேல் அணிந்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 7

கச்சும் ஒள்வாளும் கட்டிய உடையர்
கதிர் முடி சுடர்விடக் கவரியும் குடையும்
பிச்சமும் பிறவும் பெண் அணங்கு ஆய
பிறை நுதலவர் தமைப் பெரியவர் பேணப்
பச்சமும் வலியும் கருதிய அரக்கன்
பருவரை எடுத்த திண்தோள்களை அடர்வித்து
அச்சமும் அருளும் கொடுத்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 8

நோற்றலாரேனும் வேட்டலாரேனும்
நுகர்புகர் சாந்தமொடு ஏந்திய மாலைக்
கூற்றலாரேனும் இன்னவாறு என்றும்
எய்தல் ஆகாதது ஓர் இயல்பினை உடையார்
தோற்றலார் மாலும் நான்முகம் உடைய
தோன்றலும் அடியொடு முடி உறத் தங்கள்
ஆற்றலால் காணார்ஆய எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 9

வாதுசெய் சமணும் சாக்கியப் பேய்கள்
நல்வினை நீக்கிய வல்வினையாளர்
ஓதியும் கேட்டும் உணர்வினை இலாதார்
உள்கல் ஆகாதது ஓர் இயல்பினை உடையார்
வேதமும் வேதநெறிகளும் ஆகி
விமலவேடத்தொடு கமல மா மதி போல்
ஆதியும் ஈறும் ஆய எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே. 10

மைச் செறி குவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய்கையில் புதுமலர் கிழியப்
பச்சிறவு எறிவயல் வெறி கமழ் காழிப்
பதியவர் அதிபதி கவுணியர் பெருமான்
கைச் சிறுமறியவன் கழல்அலால் பேணாக்
கருத்து உடை ஞானசம்பந்தன தமிழ்கொண்டு
அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும்
அன்புடை அடியவர் அருவினை இலரே. 11

திருச்சிற்றம்பலம்

372 . திருவக்கரை

திருமுறை : 3/60 பண் : பஞ்சமம் இராகம் : ஆகிரி

இறைவர் : சந்திரசேகரர் இறைவியார் : வடிவாம்பிகை

கறை அணி மா மிடற்றான் கரிகாடு அரங்கா உடையான்
பிறை அணி கொன்றையினான் ஒருபாகமும் பெண் அமர்ந்தான்
மறையவன்தன் தலையில் பலி கொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள் பிரான் ஒலி ஆர் கழல் உள்குதுமே.1

பாய்ந்தவன் காலனை முன் பணைத்தோளி ஓர்பாகம்அதா
ஏய்ந்தவன் எண் இறந்தஅவ்இமையோர்கள் தொழுது இறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்கள் எரிசெய்தவன் வக்கரையில்
தேய்ந்து இளவெண் பிறைசேர் சடையான் அடி செப்புதுமே. 2

சந்திரசேகரனே அருளாய் என்று தண் விசும்பில்
இந்திரனும் முதலா இமையோர்கள் தொழுது இறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய்விழ ஓர் அம்பினால்
மந்தரமேரு வில்லா வளைத்தான் இடம் வக்கரையே. 3

நெய் அணி சூலமொடு நிறை வெண்மழுவும் அரவும்
கை அணி கொள்கையினான் கனல்மேவிய ஆடலினான்
மெய்அணி வெண்பொடியான் விரி கோவணஆடையின்மேல்
மை அணி மா மிடற்றான் உறையும் இடம் வக்கரையே.4

ஏனவெண்கொம்பினொடும் இள ஆமையும் பூண்டு உகந்து
கூன்இளவெண்பிறையும் குளிர் மத்தமும் சூடி நல்ல
மான் அன மென் விழியாளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே. 5

கார் மலி கொன்றையொடும் கதிர் மத்தமும் வாள்அரவும்
நீர் மலியும் சடைமேல் நிரம்பா மதி சூடி நல்ல
வார் மலிமென்முலையாளொடும் வக்கரை மேவியவன்
பார் மலி வெண்தலையில் பலி கொண்டு உழல் பான்மையனே.6

கான் அணவும் மறிமான் ஒரு கையது ஓர் கை மழுவாள்
தேன் அணவும் குழலாள்உமைசேர் திருமேனியினான்
வான் அணவும் பொழில் சூழ் திருவக்கரை மேவியவன்
ஊன் அணவும் தலையில் பலி கொண்டு உழல் உத்தமனே. 7

இலங்கையர்மன்னன் ஆகி எழில் பெற்ற இராவணனைக்
கலங்க ஓர்கால்விரலால் கதிர் போல் முடிபத்து அலற
நலம் கெழு சிந்தையனாய் அருள்பெற்றலும் நன்கு அளித்த
வலம் கெழு மூஇலைவேல் உடையான் இடம் வக்கரையே. 8

காமனை ஈடு அழித்திட்டு அவன் காதலி சென்று இரப்பச்
சேமமே உன்தனக்கு என்றுஅருள் செய்தவன் தேவர்பிரான்
சாமவெண் தாமரைமேல் அயனும் தரணி அளந்த
வாமனனும் அறியா வகையான் இடம் வக்கரையே. 9

மூடிய சீவரத்தர் முதிர்பிண்டியர் என்று இவர்கள்
தேடிய தேவர் தம்மால் இறைஞ்சப்படும் தேவர்பிரான்
பாடிய நால்மறையன் பலிக்கு என்று பல்வீதிதோறும்
வாடிய வெண்தலைகொண்டு உழல்வான் இடம் வக்கரையே.10

தண்புனலும் அரவும் சடைமேல் உடையான் பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்து அழகார் இறைவன் உறை வக்கரையைச்
சண்பையர் தம்தலைவன் தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன
பண்புனை பாடல்வல்லார் அவர் தம்வினை பற்றுஅறுமே.11

திருச்சிற்றம்பலம்

373 . திருஅரசிலி

திருமுறை : 2/95 பண் : பியந்தைக்காந்தாரம் இராகம் : நவரோசு
இறைவர் : அரசிலிநாதர் இறைவியார் : பெரியநாயகி

பாடல் வண்டு அறை கொன்றை பால்மதி பாய் புனல் கங்கை
கோடல் கூவிளமாலை மத்தமும் செஞ்சடைக் குலாவி
வாடல்வெண்தலைமாலை மருவிட வல்லியும் தோள்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக்கு இடம் அரசிலியே.1

ஏறு பேணி அது ஏறி இள மதக்களிற்றினை யெற்றி
வேறுசெய்து அதன் உரிவை வெண்புலால் கலக்க மெய் போர்த்த
ஊறு தேன் அவன் உம்பர்க்கு ஒருவன் நல் ஒளிகொள் ஒண் சுடர்ஆம்
ஆறு சேர்தரு சென்னி அடிகளுக்கு இடம்அரசிலியே. 2

கங்கைநீர் சடைமேலே கதம் மிகக் கதிர் இளவனமென்
கொங்கையாள் ஒருபாகம் மருவிய கொல்லை வெள்ஏற்றன்
சங்கையாய்த் திரியாமே தன் அடியார்க்கு அருள் செய்து
அங்கையால் அனல் ஏந்தும் அடிகளுக்கு இடம் அரசிலியே. 3

மிக்க காலனை வீட்டி மெய் கெடக் காமனை விழித்துப்
புக்க ஊர் இடு பிச்சை உண்பது பொன்திகழ் கொன்றை
தக்க நூல் திகழ் மார்பில் தவள வெண்நீறு அணிந்து ஆமை
அக்கின்ஆரமும் பூண்ட அடிகளுக்கு இடம் அரசிலியே.4

மான் அஞ்சும் மடநோக்கி மலைமகள் பாகமும் மருவித்
தான் அஞ்சா அரண்மூன்றும் தழல்எழச்சரம்அது துரந்து
வான் அஞ்சும் பெருவிடத்தை உண்டவன் மா மறைஓதி
ஆன்அஞ்சுஆடிய சென்னி அடிகளுக்கு இடம் அரசிலியே. 5

பரிய மாசுணம் கயிறா பருப்பதம் அதற்கு மத்தாகப்
பெரிய வேலையைக் கலங்கப் பேணிய வானவர் கடையக்
கரிய நஞ்சுஅது தோன்றக் கலங்கிய அவர்தமைக் கண்டு
அரிய ஆர்அமுது ஆக்கும் அடிகளுக்கு இடம் அரசிலியே. (6 –7)

வண்ண மால்வரைதன்னை மறித்திடல்உற்ற வல் அரக்கன்
கண்ணும் தோளும் நல்வாயும் நெரிதரக் கால்விரல் ஊன்றிப்
பண்ணின் பாடல் கைந்நரம்பால் பாடிய பாடலைக்கேட்டு
அண்ணலாய் அருள்செய்த அடிகளுக்கு இடம் அரசிலியே. 8

குறிய மாண்உரு ஆகிக் குவலயம் அளந்தவன் தானும்
வெறி கொள் தாமரைமேலே விரும்பிய மெய்த்தவத்தோனும்
செறிவு ஒணா வகை எங்கும் தேடியும் திருவடி காண
அறிவு ஒணா உருவத்து எம் அடிகளுக்கு இடம் அரசிலியே.9

குருளை எய்திய மடவார் நிற்பவே குஞ்சியைப் பறித்துத்
திரளை கையில் உண்பவரும் தேரரும் சொல்லிய தேறேல்
பொருளைப் பொய்இலி மெய் எம் நாதனைப் பொன் அடி வணங்கும்
அருளை ஆர்தர நல்கும் அடிகளுக்கு இடம் அரசிலியே.10

அல்லி நீள் வயல் சூழ்ந்த அரசிலி அடிகளைக் காழி
நல்ல ஞானசம்பந்தன் நல்தமிழ் பத்துஇவை நாளும்
சொல்ல வல்லவர் தம்மைச் சூழ்ந்து அமரர் தொழுது ஏத்த
வல்ல வான்உலகு எய்தி வைகலும் மகிழ்ந்து இருப்பாரே.11

திருச்சிற்றம்பலம்

374 . திருஇரும்பைமாகாளம்

திருமுறை : 2/117 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி

இறைவர் : மாகாளேசுவரர் இறைவியார் : குயில்மொழியம்மை

மண்டு கங்கை சடையில் கரந்தும் மதி சூடி மான்
கொண்ட கையான் புரம்மூன்று எரித்த குழகன் இடம்
எண்திசையும் புகழ் போய் விளங்கும் இரும்பைதனுள்
வண்டு கீதம் முரல் பொழில் சுலாய் நின்ற மாகாளமே. 1

வேதவித்தாய் வெள்ளைநீறு பூசி வினைஆயின
கோது வித்தா நீறு எழக் கொடி மா மதில்ஆயின
ஏத வித்துஆயின தீர்க்கும் இடம் இரும்பைதனுள்
மா தவத்தோர் மறையோர் தொழ நின்ற மாகாளமே. 2

வெந்தநீறும் எலும்பும் அணிந்த விடைஊர்தியான்
எந்தைபெம்மான் இடம் எழில் கொள் சோலை இரும்பைதனுள்
கந்தம்ஆய பலவின் கனிகள் கமழும் பொழில்
மந்தி ஏறிக் கொணர்ந்து உண்டு உகள்கின்ற மாகாளமே.3

நஞ்சு கண்டத்து அடக்கி நடுங்கும் மலையான்மகள்
அஞ்ச வேழம் உரித்த பெருமான் அமரும் இடம்
எஞ்சல் இல்லாப் புகழ் போய் விளங்கும் இரும்பைதனுள்
மஞ்சில் ஓங்கும் பொழில் சூழ்ந்து அழகாய மாகாளமே.4

பூசும் மாசு இல் பொடியான் விடையான் பொருப்பன்மகள்
கூச ஆனை உரித்த பெருமான் குறைவெண்மதி
ஈசன் எங்கள் இறைவன் இடம்போல் இரும்பைதனுள்
மாசுஇலோர் கள்மலர்கொண்டு அணிகின்ற மாகாளமே.5

குறைவது ஆய குளிர்திங்கள் சூடிக் குனித்தான் வினை
பறைவது ஆக்கும் பரமன் பகவன் பரந்த சடை
இறைவன் எங்கள் பெருமான் இடம்போல் இரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மாகாளமே.6

பொங்கு செங்கண் அரவும் மதியும் புரிபுன்சடைத்
தங்கவைத்த பெருமான் என நின்றவர் தாழ்விடம்
எங்கும் இச்சை அமர்ந்தான் இடம்போல் இரும்பைதனுள்
மங்குல் தோயும் பொழில் சூழ்ந்து அழகுஆய மாகாளமே.7

நட்டத்தோடு நரி ஆடு கானத்து எரிஆடுவான்
அட்டமூர்த்தி அழல் போல் உருவன் அழகுஆ கவே
இட்டம்ஆக இருக்கும் இடம்போல் இரும்பைதனுள்
வட்டம் சூழ்ந்து பணிவார் பிணி தீர்க்கும் மாகாளமே. 8

அட்ட காலன்தனை வவ்வினான் அவ் அரக்கன் முடி
எட்டும் மற்றும் இருபத்திரண்டும் இற ஊன்றினான்
இட்டம்ஆக இருப்பான் அவன்போல் இரும்பைதனுள்
மட்டு வார்ந்த பொழில் சூழ்ந்து எழில் ஆரும் மாகாளமே.9

அரவம் ஆர்த்து அன்று அனல் அங்கை ஏந்தி அடியும்முடி
பிரமன் மாலும் அறியாமை நின்ற பெரியோன் இடம்
குரவம் ஆரும் பொழில் குயில்கள் சேரும் இரும்பைதனுள்
மருவி வானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே.10

எந்தைபெம்மான் இடம் எழில் கொள் சோலை இரும்பைதனுள்
மந்தம் ஆய பொழில் சூழ்ந்து அழகு ஆரும் மாகாளத்தில்
அந்தம் இல்லா அனல்ஆடுவானை அணி ஞானசம்
பந்தன் சொன்ன தமிழ் பாடவல்லார் பழி போகுமே. 11

திருச்சிற்றம்பலம்

375 . திருக்கோகரணம்

திருமுறை : 3/79 . பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : மகாபலநாதர் இறைவியார் : கோகரணநாயகி

என்றும் அரியான் அயலவர்க்கு இயல்
இசைப்பொருள்கள் ஆகி எனது உள்
நன்றும் ஒளியான் ஒளிசிறந்த பொன்
முடிக்கடவுள் நண்ணும் இடமாம்
ஒன்றிய மனத்து அடியர் கூடி இமையோர்
பரவும் நீடு அரவம் ஆர்
குன்றுகள் நெருங்கி விரி தண்டலை
மிடைந்து வளர் கோகரணமே. 1

பேதைமடமங்கை ஒருபங்கு இடம்
மிகுத்து இடபம் ஏறி அமரர்
வாதைபட வண்கடல்எழுந்தவிடம்
உண்ட சிவன் வாழும்இடமாம்
மாதரொடும் ஆடவர்கள் வந்து அடி
இறைஞ்சி நிறை மா மலர்கள் தூய்க்
கோதை வரிவண்டு இசைகொள் கீதம்
முரல்கின்ற வளர் கோகரணமே. 2

முறைத்திறம் உறப்பொருள் தெரிந்து
முனிவர்க்கு அருளி ஆல நிழல்வாய்
மறைத்திறம் அறத்தொகுதி கண்டு
சமயங்களை வகுத்தவன் இடம்
துறைத்துறை மிகுத்து அருவி தூ மலர்
சுமந்து வரை உந்தி மதகைக்
குறைத்து அறையிடக் கரி புரிந்து இடறு
சாரல் மலி கோகரணமே. 3

இலைத் தலைமிகுத்த படை எண்கரம்
விளங்க எரி வீசி முடிமேல்
அலைத்தலை தொகுத்த புனல் செஞ்சடையில்
வைத்த அழகன் தன் இடமாம்
மலைத்தலை வகுத்த முழைதோறும் உழை
வாள்அரிகள் கேழல் களிறு
கொலைத்தலை மடப்பிடிகள் கூடி விளையாடி
நிகழ் கோகரணமே. 4

தொடைத்தலை மலைத்து இதழி துன்னிய
எருக்கு அலரி வன்னி முடியின்
சடைத்தலை மிலைச்சிய தபோதனன் எம்
ஆதி பயில்கின்ற பதியாம்
படைத்தலை பிடித்து மறவாளரொடு
வேடர்கள் பயின்று குழுமிக்
குடைத்து அலை நதிப் படிய நின்று பழி
தீர நல்கு கோகரணமே. 5

நீறு திருமேனிமிசை ஆடி நிறை
வார்கழல் சிலம்பு ஒலிசெய
ஏறு விளையாட விசைகொண்டு இடு
பலிக்கு வரும் ஈசன் இடமாம்
ஆறுசமயங்களும் விரும்பி அடி
பேணி அரன் ஆகமம் மிகக்
கூறு மனம் ஏறு இரதி வந்து அடியர்
கம்பம் வரு கோகரணமே. 6

கல்லவடம் மொந்தை குழல் தாளம் மலி
கொக்கரையர் அக்கு அரைமிசை
பல்ல படநாகம் விரி கோவணவர்
ஆளும் நகர் என்பர் அயலே
நல்ல மடமாதர் அரன் நாமமும்
நவிற்றிய திருத்தமும் முழுகக்
கொல்ல விடநோய் அகல்தரப் புகல் கொடுத்து
அருளு கோகரணமே. 7

வரைத்தலம் நெருக்கிய முருட்டு இருள்
நிறத்தவன வாய்கள் அலற
விரல் தலைஉகிர்ச் சிறிது வைத்த பெருமான்
இனிது மேவும் இடமாம்
புரைத் தலை கெடுத்த முனிவாணர் பொலிவாகி
வினை தீர அதன் மேல்
குரைத்து அலைகழல் பணிய ஓமம் விலகும்
புகைசெய் கோகரணமே. 8

வில்லிமையினால் விறல் அரக்கன் உயிர்
செற்றவனும் வேத முதலோன்
இல்லை உளது என்று இகலி நேடஎரி
ஆகி உயர்கின்ற பரன்ஊர்
எல்லையில் வரைத்த கடல் வட்டமும்
இறைஞ்சி நிறைவாசம் உருவக்
கொல்லையில் இளங் குறவர் தம்மயிர்
புலர்த்தி வளர் கோகரணமே. 9

நேசம் இல் மனச் சமணர் தேரர்கள்
நிரந்த மொழி பொய்கள் அகல்வித்து
ஆசை கொள் மனத்தை அடியார் அவர்
தமக்கு அருளும்அங்கணன் இடம்
பாசம்அது அறுத்து அவனியில் பெயர்கள்
பத்து உடைய மன்னன் அவனைக்
கூச வகை கண்டு பின் அவற்கு அருள்கள்
நல்க வல கோகரணமே. 10

கோடல் அரவு ஈனும் விரிசாரல் முன்
நெருங்கி வளர் கோகரணமே
ஈடம் இனிதாக உறைவான் அடிகள்
பேணி அணி காழி நகரான்
நாடிய தமிழ்க்கிளவி இன்இசைசெய்
ஞானசம்பந்தன் மொழிகள்
பாட வல பத்தர் அவர் எத்திசையும்
ஆள்வர் பரலோகம் எளிதே. 11

திருச்சிற்றம்பலம்

376 . திருப்பருப்பதம்

திருமுறை : 1/118 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்

இறைவர் : பருப்பதநாதர் இறைவியார் : பருப்பதநாயகி

சுடுமணி உமிழ்நாகம் சூழ்தர அரைக்கு அசைத்தான்
இடு மணி எழில் ஆனை ஏறலன் எருதுஏறி
விடம் அணி மிடறு உடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படு மணிவிடு சுடர் ஆர் பருப்பதம் பரவுதுமே. 1

நோய் புல்கு தோல் திரைய நரை வரு நுகர் உடம்பில்
நீ புல்கு தோற்றம் எல்லாம் நினை உள்கு மட நெஞ்சே
வாய் புல்கு தோத்திரத்தால் வலம்செய்து தலைவணங்கிப்
பாய் புலித்தோல் உடையான் பருப்பதம் பரவுதுமே. 2

துனி உறுதுயர் தீரத் தோன்றி ஓர் நல்வினையால்
இனி உறுபயன் ஆதல் இரண்டு உற மனம் வையேல்
கனி உறு மரம் ஏறிக் கருமுசுக் கழை உகளும்
பனி உறு கதிர் மதியான் பருப்பதம் பரவுதுமே. 3

கொங்கு அணி நறுங்கொன்றைத்தொங்கலன் குளிர்சடையான்
எங்கள் நோய் அகல நின்றான் என அருள் ஈசன் இடம்
ஐங்கணை வரிசிலையான் அநங்கனை அழகு அழித்த
பைங்கண் வெள்ஏறு உடையான் பருப்பதம் பரவுதுமே. 4

துறைபல சுனை மூழ்கித் தூ மலர் சுமந்துஓடி
மறைஒலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்து ஏத்தச்
சிறை ஒலி கிளி பயிலும் தேன்இனம் ஒலி ஓவாப்
பறை படு விளங்க அருவிப் பருப்பதம் பரவுதுமே. 5

சீர் கெழு சிறப்பு ஓவாச் செய்தவ நெறி வேண்டில்
ஏர் கெழு மட நெஞ்சே இரண்டு உற மனம் வையேல்
கார் கெழு நறுங்கொன்றைக் கடவுளது இடம் வகையால்
பார் கெழு புகழ் ஓவாப் பருப்பதம் பரவுதுமே. 6

புடை புல்கு படர் கமலம் புகையொடு விரை கமழத்
தொடை புல்கு நறுமாலை திருமுடிமிசை ஏற
விடை புல்கு கொடி ஏந்தி வெந்தவெண்நீறு அணிவான்
படை புல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே. 7

நினைப்பு எனும் நெடுங்கிணற்றை நின்றுநின்று அயராதே
மனத்தினை வலித்து ஒழிந்தேன் அவலம் வந்து அடையாமைக்
கனைத்து எழு திரள் கங்கை கமழ்சடைக் கரந்தான்தன்
பனைதிரள் பாய் அருவிப் பருப்பதம் பரவுதுமே. 8

மருவிய வல்வினைநோய் அவலம் வந்து அடையாமல்
திருஉரு அமர்ந்தானும் திசைமுகம் உடையானும்
இருவரும் அறியாமை எழுந்தது ஓர் எரிநடுவே
பருவரை உற நிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே. 9

சடம் கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடம் கொண்ட விரும்பியராய் மயங்கி ஓர் பேய்த்தேர்ப் பின்
குடம் கொண்டு நீர்க்குச் செல்வார் போதுமின் குஞ்சரத்தின்
படம் கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே. 10

வெண் செந்நெல் விளை கழனி விழவு ஒலி கழுமலத்தான்
பண் செலப் பலபாடல் இசை முரல் பருப்பதத்தை
நன் சொலினால் பரவும் ஞானசம்பந்தன் நல்ல
ஒண் சொலின் இவைமாலை உரு எணத் தவம் ஆமே. 11

திருச்சிற்றம்பலம்

377 . திருஇந்திரநீலப்பருப்பதம்

திருமுறை : 2/77 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா

இறைவர் : நீலாசலநாதர் இறைவியார் : நீலாம்பிகை

குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்து
இலகு மான் மழு ஏந்தும் அம் கையன்
நிலவும் இந்திரநீலப்பர்ப்பதத்து
உலவினான் அடி உள்க நல்குமே. 1

குறைவு இல் ஆர் மதி சூடி ஆடல் வண்டு
அறையும் மா மலர்க்கொன்றை சென்னி சேர்
இறைவன் இந்திர நீலப்பர்ப்பதத்து
உறைவினான்தனை ஓதி உய்ம்மினே. 2

என்பொன் என்மணி என்ன ஏத்துவார்
நம்பன் நால்மறை பாடு நாவினான்
இன்பன் இந்திர நீலப்பர்ப்பதத்து
அன்பன் பாதமே அடைந்து வாழ்மினே. 3

நாசம் ஆம் வினை நன்மைதான் வரும்
தேசம் ஆர் புகழ்ஆய செம்மை எம்
ஈசன் இந்திர நீலப்பர்ப்பதம்
கூசி வாழ்த்துதும் குணம்அது ஆகவே. 4

மருவு மான்மடமாது ஓர் பாகமாய்ப்
பரவுவார் வினை தீர்த்த பண்பினான்
இரவன் இந்திரநீலப்பர்ப்பதத்து
அருவி சூடிடும் அடிகள் வண்ணமே. 5

வெண்நிலாமதி சூடும் வேணியன்
எண்ணிலார் மதில் எய்த வில்லினன்
அண்ணல் இந்திரநீலப்பர்ப்பதத்து
உள்நிலாவுறும் ஒருவன் நல்லனே. 6

கொடி கொள் ஏற்றினர் கூற்று உதைத்தவர்
பொடி கொள் மேனியில் பூண்ட பாம்பினர்
அடிகள் இந்திரநீலப்பர்ப்பதம்
உடைய வாணர் உகந்த கொள்கையே. 7

எடுத்த வல்அரக்கன் கரம்புயம்
அடர்த்தது ஓர்விரலான் அவனை ஆட்
படுத்தன் இந்திரநீலப்பர்ப்பதம்
முடித்தலம் உற முயலும் இன்பமே. 8

பூவினானொடு மாலும் போற்றுஉறும்
தேவன் இந்திரநீலப்பர்ப்பதம்
பாவியாது எழுவாரைத் தம்வினை
கோவியா வரும் கொல்லும் கூற்றமே. 9

கட்டர்குண்டு அமண் தேரர் சீர் இலர்
விட்டர் இந்திரநீலப்பர்ப்பதம்
எள் தனை நினையாதது என்கொலோ
சிட்டுஅதுஆய் உரை ஆதி சீர்களே. 10

கந்தம் ஆர் பொழில் சூழ்ந்த காழியான்
இந்திரன் தொழுநீலப்பர்ப்பதத்து
அந்தம் இல்லியை ஏத்தும் ஞானசம்
பந்தன் பாடல் கொண்டு ஓதி வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்

378 . திருஅனேகதங்காவதம்

திருமுறை : 2/5 பண் : இந்தளம் இராகம் : நாதநாமக்கிரியா
இறைவர் : அனேகதங் காவதநாதர் இறைவியார் : மனோன்மணியம்மை

நீடல் மேவு நிமிர்புன்சடைமேல் ஓர் நிலாமுளை
சூடல் மேவு மறையின் முறையால் ஓர் சுலாவு அழல்
ஆடல் மேவுமவர் மேய அனேகதங்காவதம்
பாடல் மேவும் மனத்தார் வினை பற்றுஅறுப்பார்களே. 1

சூலம் உண்டு மழு உண்டு அவர் தொல் படை சூழ் கடல்
ஆலம் உண்ட பெருமான்தன் அனேகதங்காவதம்
நீலம் உண்ட தடங்கண் உமை பாகம் நிலாயது ஓர்
கோலம் உண்டு அளவு இல்லை குலாவிய கொள்கையே.2

செம்பின் ஆரும் மதில்மூன்று எரியச் சின வாயது ஓர்
அம்பினால் எய்துஅருள் வில்லி அனேகதங்காவதம்
கொம்பின் நேர் இடையாளொடும் கூடிக் கொல்ஏறு உடை
நம்பன் நாமம் நவிலாதன நா எனல் ஆகுமே. 3

தந்தத்திந்தத்தடம் என்று அருவித்திரள் பாய்ந்துபோய்ச்
சிந்த வெந்த கதிரொனொடு மாசுஅறு திங்கள் ஆர்
அந்தம் இல்ல அளவு இல்ல அனேகதங்காவதம்
எந்தை வெந்தபொடி நீறு அணிவார்க்கு இடம் ஆவதே.4

பிறையும் மாசு இல் கதிரோன் அறியாமைப் பெயர்ந்து போய்
உறையும் கோயில் பசும்பொன் அணியார் அசும்பார் புனல்
அறையும் ஓசை பறை போலும் அனேகதங்காவதம்
இறை எம் ஈசன் எம்மான் இடம்ஆக உகந்ததே. 5

தேனை ஏறு நறுமாமலர் கொண்டு அடி சேர்த்துவீர்
ஆனை ஏறும் அணி சாரல் அனேகதங்காவதம்
வானை ஏறும் நெறி சென்று உணரும்தனை வல்லிரேல்
ஆன்நெய் ஏறு முடியான் அருள்செய்வதும் வானையே.6

வெருவி வேழம் இரியக் கதிர் முத்தொடு வெண்பளிங்கு
உருவி வீழ வயிரம் கொழியா அகில் உந்தி வெள்
அருவி பாயும் அணி சாரல் அனேகதங்காவதம்
மருவி வாழும் பெருமான் கழல் சேர்வது வாய்மையே. 7

ஈரம் ஏதும்இலன் ஆகி எழுந்த இராவணன்
வீரம்ஏதும் இலன்ஆக விளைத்த விலங்கலான்
ஆரம் பாம்புஅது அணிவான்தன் அனேகதங்காவதம்
வாரம்ஆகி நினைவார் வினைஆயின மாயுமே. 8

கண்ணன் வண்ண மலரானொடும் கூடியோர்க்கு ஐயம்ஆய்
எண்ணும் வண்ணம்அறியாமை எழுந்தது ஓர் ஆர் அழல்
அண்ணல் நண்ணும்அணி சாரல் அனேகதங்காவதம்
நண்ணும் வண்ணம் உடையார் வினைஆயின நாசமே.9

மா பதம் அறியாதவர் சாவகர்சாக்கியர்
ஏ பதம் பட நின்று இறுமாந்து உழல்வார்கள்தாம்
ஆ பதம் அறிவீர் உளிர்ஆகில் அனேகதங்
காபதம் அமர்ந்தான் கழல் சேர்தல் கருமமே. 10

தொல்லைஊழிப் பெயர் தோன்றிய தோணிபுரத்து இறை
நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் நல்லார்கள்முன்
அல்லல் தீர உரைசெய்த அனேகதங்காவதம்
சொல்ல நல்லஅடையும் அடையா சுடுதுன்பமே. 11

திருச்சிற்றம்பலம்

379 . திருக்கேதாரம்

திருமுறை : 2/114 பண் : செவ்வழி இராகம் : எதுகுல காம்போதி
இறைவர் : கேதாரநாதர் இறைவியார் : கேதாரகௌரியம்மை

தொண்டர் அஞ்சுகளிறும் அடக்கிச் சுரும்பு ஆர் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்
வண்டு பாட மயில் ஆல மான்கன்று துள்ளவ்வரிக்
கெண்டை பாயச் சுனை நீலம் மொட்டு அலரும் கேதாரமே. 1

பாதம் விண்ணோர்பலரும் பரவிப் பணிந்து ஏத்தவே
வேதம்நான்கும் பதினெட்டொடு ஆறும் விரித்தார்க்கு இடம்
தாது விண்டம் மது உண்டு மிண்டிவரு வண்டுஇனம்
கீதம் பாட மடமந்தி கேட்டு உகளும் கேதாரமே. 2

முந்தி வந்து புரோதயம் மூழ்கி முனிகள்பலர்
எந்தைபெம்மான் என நின்று இறைஞ்சும் இடம் என்பரால்
மந்தி பாயச் சரலேச் சொரிந்தும் முரிந்து உக்க பூக்
கெந்தம் நாறக் கிளரும் சடைஎந்தை கேதாரமே. 3

உள்ளம் மிக்கார் குதிரைம்முகத்தார் ஒரு காலர்கள்
எள்கல் இல்லா இமையோர்கள் சேரும் இடம் என்பரால்
பிள்ளை துள்ளிக் கிளை பயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனல்கதிர் கொணர்ந்து வாய்ப் பெய்யும் கேதாரமே. 4

ஊழிஊழி உணர்வார்கள் வேதத்தின் ஒண் பொருள்களால்
வாழி எந்தை என வந்து இறைஞ்சும் இடம் என்பரால்
மேழி தாங்கி உழுவார்கள் போலவ்விரை தேரிய
கேழல் பூழ்தி கிளைக்க மணி சிந்தும் கேதாரமே. 5

நீறு பூசி நிலத்து உண்டு நீர் மூழ்கி நீள்வரைதன்மேல்
தேறு சிந்தை உடையார்கள் சேரும் இடம் என்பரால்
ஏறி மாவின் கனியும் பலாவின் இருஞ் சுளைகளும்
கீறி நாளும் முசுக் கிளையொடு உண்டு உகளும் கேதாரமே. 6

மடந்தை பாகத்து அடக்கிம் மறைஓதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினை தீர்க்க நின்றார்க்கு இடம் என்பரால்
உடைந்த காற்றுக்கு உயர்வேங்கை பூத்து உதிரக் கல்அறைகள்மேல்
கிடந்த வேங்கை சினமா முகம் செய்யும் கேதாரமே. 7

அரவ முந்நீர் அணி இலங்கைக் கோனை அருவரை தனால்
வெருவ ஊன்றி விரலால் அடர்த்தார்க்கு இடம்என்பரால்
குரவம் கோங்கம் குளிர் பிண்டி ஞாழல் சுரபுன்னை மேல்
கிரமம்ஆக வரிவண்டு பண்செய்யும் கேதாரமே. 8

ஆழ்ந்து காணார் உயர்ந்து எய்தகில்லார் அலமந்தவர்
தாழ்ந்து தம்தம் முடி சாய நின்றார்க்கு இடம் என்பரால்
வீழ்ந்து செற்று நிழற்கு இரங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கம் குருகு உண்ண முத்து உதிரும் கேதாரமே.9

கடுக்கள் தின்று கழி மீன் கவர்வார்கள் மாசு உடம்பினர்
இடுக்கண் உய்ப்பார் அவர் எய்த ஒண்ணா இடம் என்பரால்
அடுக்க நின்ற அவ்அறஉரைகள் கேட்டு ஆங்கு அவர் வினைகளைக்
கெடுக்க நின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே. 10

வாய்ந்த செந்நெல் விளை கழனி மல்கும் வயல் காழியான்
ஏய்ந்த நீர்க்கோட்டு இமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள்பத்தும் இசை வல்லவர்
வேந்தர் ஆகி உலகு ஆண்டு வீடுகதி பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

380 . திருக்கயிலாயம்

திருமுறை : 1/68 பண் : தக்கேசி இராகம் : காம்போதி

இறைவர் : பரமசிவன் இறைவியார் : பார்வதியம்மை

பொடி கொள் உருவர் புலியின்அதளர் புரிநூல் திகழ் மார்பில்
கடி கொள் கொன்றை கலந்த நீற்றர் கறை சேர் கண்டத்தர்
இடிய குரலால் இரியும் மடங்கல் தொடங்கு முனைச்சாரல்
கடிய விடை மேல் கொடி ஒன்று உடையார் கயிலைமலையாரே.1

புரி கொள் சடையா அடியர்க்கு எளியார் கிளி சேர் மொழி மங்கை
தெரிய உருவில் வைத்து உகந்த தேவர்பெருமானார்
பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்க இருள் கூர்ந்த
கரிய மிடற்றர் செய்யமேனிக் கயிலைமலையாரே. 2

மாவின்உரிவை மங்கை வெருவ மூடி முடிதன்மேல்
மேவும் மதியும் நதியும் வைத்த விறைவர் கழல் உன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கல் முகவன் சேர்
காவும் பொழிலும் கடுங்கல்சுனை சூழ் கயிலைமலையாரே.3

முந்நீர் சூழ்ந்த நஞ்சம் உண்ட முதல்வர் மதனன்தன்
தென் நீர் உருவம் அழியத் திருக்கண் சிவந்த நுதலினார்
மன் நீர் மடுவும் படு கல்லறையின் உழுவை சினம் கொண்டு
கல் நீல் வரைமேல் இரை முன் தேடும் கயிலைமலையாரே.4

ஒன்றும் பலவும் ஆய வேடத்து ஒருவர் கழல் சேர்வார்
நன்று நினைந்து நாடற்கு உரியார் கூடித் திரண்டு எங்கும்
தென்றி இருளில் திகைத்த கரி தண்சாரல் நெறி ஓடிக்
கன்றும் பிடியும் அடிவாரம் சேர் கயிலைமலையாரே. 5

தாது ஆர் கொன்றை தயங்கும் முடியர் முயங்கு மடவாளைப்
போது ஆர் பாகம் ஆக வைத்த புனிதர் பனி மல்கும்
மூதார் உலகில் முனிவர்உடன்ஆய் அறம்நான்கு அருள்செய்த
காதுஆர் குழையர் வேதத் திரளர் கயிலைமலையாரே. (6–7)

தொடுத்தார் புரம்மூன்று எரியச் சிலைமேல் அரிஒண்பகழியார்
எடுத்தான் திரள்தோள் முடிகள்பத்தும் இடிய விரல் வைத்தார்
கொடுத்தார் படைகள் கொண்டார் ஆளா குறுகி வரும் கூற்றைக்
கடுத்து ஆங்கு அவனைக் கழலால் உதைத்தார் கயிலைமலையாரே. 8

ஊணாப் பலி கொண்டு உலகில் ஏற்றார் இலகு மணி நாகம்
பூண் நாண் ஆரம் ஆகப் பூண்டார் புகழும் இருவர்தாம்
பேணா ஓடி நேட எங்கும் பிறங்கும் எரி ஆகிக்
காணா வண்ணம் உயர்ந்தார்போலும் கயிலைமலையாரே. 9

விருது பகரும் வெஞ்சொல் சமணர் வஞ்சச் சாக்கியர்
பொருது பகரும் மொழியைக் கொள்ளார் புகழ்வார்க்கு அணியராய்
எருது ஒன்று உகைத்து இங்கு இடுவார்தம்பால் இரந்து உண்டு இகழ்வார்கள்
கருதும் வண்ணம் உடையார்போலும் கயிலைமலையாரே. 10

போர் ஆர் கடலில் புனல் சூழ் காழிப் புகழ் ஆர் சம்பந்தன்
கார் ஆர் மேகம் குடிகொள் சாரல் கயிலைமலையார்மேல்
தேரா உரைத்த செஞ்சொல்மாலை செப்பும் அடியார்மேல்
வாரா பிணிகள் வானோர்உலகில் மருவும் மனத்தாரே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் திருக்காளத்தியில் எழுந்தருளி இருக்கும்போது, அதன் வடக்கிலும், குடக்கிலும் உள்ள நாடுகள் செந்தமிழ் வழங்காதனவாகலின், தாம் சிவப்பதிகடோறுஞ் சென்று பாடுவதுபோல் அங்கிருந்தே மங்கையுடன் வானவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்தார் வடகயிலை வணங்கி இப்பதிகம் பாடியருளினார்.

381. திருக்கயிலாயம்

திருமுறை : 3/68 பண் : சாதாரி இராகம் : பந்துவராளி

இறைவர் : பரமசிவன் இறைவியார் : பார்வதியம்மை

வாள வரி கோள புலி கீள்அது உரி
தாளின்மிசை நாளும் மகிழ்வர்
ஆளும் அவர் வேள் அநகர் போள் அயில
கோள களிறு ஆளி வர இல்
தோள் அமரர் தாளம் மதர் கூளி எழ
மீளி மிளிர் தூளி வளர் பொன்
காளமுகில் மூளும் இருள் கீள விரி தாள
கயிலாயமலையே. 1

புற்று அரவு பற்றிய கை நெற்றியது
மற்று ஒரு கண் ஒற்றை விடையன்
செற்றது எயில் உற்றதுஉமை அற்றவர்கள்
நல்துணைவன் உற்ற நகர்தான்
சுற்றும் மணி பெற்றது ஒளி செற்றமொடு
குற்றம் இலது எற்று என வினாய்க்
கற்றவர்கள் சொல் தொகையின் முற்றும்
ஒளி பெற்ற கயிலாயமலையே. 2

சிங்கஅரை மங்கையர்கள் தங்களன
செங்கை நிறை கொங்குமலர் தூய்
எங்கள் வினை சங்கைஅவை இங்கு அகல
அங்கம் மொழி எங்கும் உளஆய்த்
திங்கள் இருள் நொங்க ஒளி விங்கி மிளிர்
தொங்கலொடு தங்க வயலே
கங்கையொடு பொங்கு சடை எங்கள்
இறை தங்கு கயிலாயமலையே. 3

முடிய சடை பிடியது ஒரு வடிய மழு
உடையர் செடி உடைய தலையில்
வெடிய வினை கொடியர் கெட இடு சில்பலி
நொடிய மகிழ் அடிகள் இடமாம்
கொடிய குரல் உடைய விடை கடிய துடி
அடியினொடும் இடியின் அதிரக்
கடிய குரல் நெடிய முகில் மடிய அதர்
அடிகொள் கயிலாயமலையே. 4

குடங்கையின் நுடங்கு எரி தொடர்ந்து எழ
விடம் கிளர் படம்கொள் அரவம்
மடங்கு ஒளி படர்ந்திட நடம் தரு
விடங்கனது இடம் தண்முகில் போய்த்
தடங்கடல் தொடர்ந்து உடன் நுடங்குவ
இடம் கொள மிடைந்த குரலால்
கடுங் கலின் முடங்கு அளை நுடங்கு
அரவு ஒடுங்கு கயிலாயமலையே. 5

ஏதம் இல பூதமொடு கோதைதுணை
ஆதிமுதல் வேத விகிர்தன்
கீதமொடு நீதிபல ஓதிமற
வாது பயில் நாதன் நகர்தான்
தாது பொதி போது விட ஊது சிறை
மீது துளி கூதல் நலியக்
காதல் மிகு சோதி கிளர் மாது பயில்
கோது கயிலாயமலையே. 6

சென்று பல வென்று உலவு புன்தலையர்
துன்றலொடும் ஒன்றி உடனே
நின்று அமரர் என்றும் இறைவன்தன் அடி
சென்று பணிகின்ற நகர்தான்
துன்று மலர் பொன்திகழ்செய் கொன்றை விரை
தென்றலொடு சென்று கமழக்
கன்று பிடி துன்று களிறு என்று இவைமுன்
நின்ற கயிலாயமலையே. 7

மருப்புஇடை நெருப்பு எழு தருக்கொடு
செருச்செய்த பருத்த களிறின்
பொருப்புஇடை விருப்புஉற இருக்கையை
ஒருக்குஉடன் அரக்கன் உணராது
ஒருத்தியை வெருக்குஉற வெருட்டலும்
நெருக்கு என நிருத்த விரலால்
கருத்து இல ஒருத்தனை எருத்து இற
நெரித்த கயிலாயமலையே. 8

பரிய திரை பெரிய புனல் வரிய புலி
உரியது உடை பரிசை உடையான்
வரிய வளை அரிய கணி உருவினொடு
புரிவினவர் பிரிவில் நகர்தான்
பெரிய எரிஉருவம்அது தெரிய உரு
பரிவுதரும் அருமை அதனால்
கரியவனும் அரிய மறை புரியவனும்
மருவு கயிலாயமலையே. 9

அண்டர் தொழு சண்டி பணி கண்டு அடிமை
கொண்ட இறை துண்டமதியோடு
இண்டை புனைவுண்ட சடை முண்டதர
சண்ட இருள்கண்டர் இடம்ஆம்
குண்டுஅமண வண்டர் அவர் மண்டை கையில்
உண்டு உளறி மிண்டு சமயம்
கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டும்
அறியாத கயிலாயமலையே. 10

அம் தண் வரை வந்த புனல் தந்த திரை
சந்தனமொடு உந்தி அகிலும்
கந்தமலர் கொந்தினொடு மந்திபல
சிந்து கயிலாயமலை மேல்
எந்தை அடி வந்து அணுகு சந்தமொடு
செந்தமிழ் இசைந்த புகலிப்
பந்தன் உரை சிந்தைசெய வந்த வினை
நைந்து பரலோகம் எளிதே. 11

திருச்சிற்றம்பலம்

382 . திருநீலகண்டப்பதிகம்

திருமுறை : 1/116 பண் : வியாழக்குறிஞ்சி இராகம் : சௌராட்டிரம்
இறைவர் : பால்வண்ணநாதர் இறைவியார் : சுந்தரநாயகி

அவ் வினைக்கு இவ் வினை ஆம் என்று சொல்லும் அஃது அறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம்அன்றே
கை வினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால்
ஏ வினையால் எயில்மூன்று எரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலர்அடி போற்றுதும் நாம்அடியோம்
தீவினை வந்து எமைத் தீண்டப்பெறா திரு நீலகண்டம்.2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்று எவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டு எமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச்சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்து எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 3

விண்ணுலகு ஆள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண்இமையாதன மூன்று உடையீர் உம் கழல்அடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திரு நீலகண்டம். 4

மற்று இணை இல்லா மலைத் திரண்டு அன்ன திண்தோள் உடையீர்
கிற்று எமை ஆட்கொண்டு கேளாது ஒழிவதும் தன்மைகொல்லோ
சொல் துணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்று எமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பு இல் பெருமான் திருந்து அடிக்கீழ்ப் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்து உமை ஏத்தும் பணி அடியோம்
சிறப்புஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். (6 –7)

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்து உம் கழல் அடிக்கே
உருகி மலர்கொடுவந்து உமை ஏத்துதும் நாம்அடியோம்
செரு இல் அரக்கனைச் சீரில்அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 8

நாற்றமலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வு அரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது வணங்குதும் நாம்அடியோம்
சீற்றம்அதுஆம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.9

சாக்கியப்பட்டும் சமண்உரு ஆகி உடை ஒழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல்அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம் பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே.11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞான சம்பந்தப்பெருமானார் கொங்கு நாட்டின் பக்கங்களிலுள்ள பதிகளை வணங்கிக்கொண்டு திருக்கொடிமாடச் செங்குன்றூரிலே தங்கியிருக்கும் நாட்களில் மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம் வந்து குளிர் மிகுந்து நாயனாரது திருக்கூட்டத்தினர்

பன்னாள் அந்நாட்டிற் தங்கிய காரணத்தினால் நளிர்ச்சுரத்தினால் வருத்தமுற்று நாயனாரிடத்திலே விண்ணப்பஞ் செய்து கொண்டனர். பிள்ளையார் அதனைக் கேட்டு, இஃது இந்நாட்டிலே இயல்பு எனினும் நமக்கெய்தப் பெறாதென்றும் முன் விடத்தை உண்டு தேவர்களது இடரினைக் காத்தருளிய நீலகண்டமே எந்நாளும் அடியார் இடர் தீர்ப்பதென்றும் கருதி 'அவ்வினைக் கிவ்வினை' என்றெடுத்துச் 'செய்வினை தீண்டா திருநீலகண்டம்' என்று திருப்பாட்டிறுதிதோறும் வைத்துத் திருநீலகண்டப் பதிகத்தைப் பாடியருளினார். உடனே அந்நாடு முழுதும் பனிப்பிணி தீர்ந்தது.

383 . திருஇடைச்சுரம்

திருமுறை : 1/78 பண் : குறிஞ்சி இராகம் : சுருட்டி, எதுகுல காம்போதி

இறைவர் : இடைச்சுரநாதர் இறைவியார் : இமயமடக்கொடி

வரி வளர் அவிர்ஒளி அரவு அரை தாழ
வார்சடைமுடிமிசை வளர்மதி சூடிக்
கரி வளர்தரு கழல்கால் வலன் ஏந்திக்
கனல்எரிஆடுவர் காடு அரங்கு ஆக
விரி வளர்தரு பொழில் இளமயில் ஆல
வெண்நிறத்து அருவிகள் திண்ணென வீழும்
எரி வளர் இனமணி புனம் அணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 1

ஆற்றையும் ஏற்றது ஓர் அவிர்சடை உடையர்
அழகினை அருளுவர் குழகுஅலது அறியார்
கூற்று உயிர் செகுப்பது ஓர் கொடுமையை உடையர்
நடுஇருள் ஆடுவர் கொன்றைஅம்தாரார்
சேற்று அயல் மிளிர்வன கயல் இளவாளை
செருச் செய ஓர்ப்பன செம்முக மந்தி
ஏற்றையொடு உழிதரும் எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 2

கானமும் சுடலையும் கல் படு நிலனும்
　　காதலர் தீது இலர் கனல் மழுவாளர்
வானமும் நிலமையும் இருமையும் ஆனார்
　　வணங்கவும் இணங்கவும் வாழ்த்தவும்படுவார்
நானமும் புகைஒளி விரையொடு கமழ
　　நளிர்பொழில் இள மஞ்ஞை மன்னிய பாங்கர்
ஏனமும் பிணையலும் எழில் திகழ் சாரல்
　　இடைச்சுரம் ஏவிய இவர் வணம் என்னே. 3

கட மணி மார்பினர் கடல்தனில் உறைவார்
　　காதலர் தீதுஇலர் கனல் மழுவாளர்
விடம் அணி மிடறினர் மிளிர்வது ஓர் அரவர்
　　வேறும் ஓர் சரிதையர் வேடமும் உடையர்
வடம் உலை அயலன கருங்குருந்து ஏறி
　　வாழையின் தீம்கனி வார்ந்து தேன் அட்டும்
இடம் முலை அரிவையர் எழில் திகழ் சாரல்
　　இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 4

கார் கொண்ட கடி கமழ் விரிமலர்க் கொன்றைக்
　　கண்ணியர் வளர்மதி கதிர்விடக் கங்கை
நீர் கொண்ட சடையினர் விடை உயர் கொடியர்
　　நிழல் திகழ் மழுவினர் அழல் திகழ் நிறத்தர்
சீர் கொண்ட மென்சிறைவண்டு பண்செய்யும்
　　செழும் புனல் அனையன செங்குலை வாழை
ஏர் கொண்ட பலவினொடு எழில் திகழ் சாரல்
　　இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 5

தோடு அணி குழையினர் சுண்ணவெண்நீற்றர்
சுடலையின் ஆடுவர் தோல் உடையாகப்
பீடு உயர்செய்தது ஓர் பெருமையை உடையர்
பேய்உடன் ஆடுவர் பெரியவர் பெருமான்
கோடல்கள் ஒழுகுவ முழுகுவ தும்பி
குரவமும் அரவமும் மன்னிய பாங்கர்
ஏடு அவிழ் புதுமலர் கடிகமழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 6

கழல் மல்கு காலினர் மேலினர் நூலர்
கவர்தலை அரவொடு கண்டியும் பூண்பர்
அழல் மல்கும் எரியொடும் அணி மழு ஏந்தி
ஆடுவர் பாடுவர் ஆர் அணங்கு உடையர்
பொழில் மல்கு நீடிய அரவமும் மரவம்
மன்னிய கவட்டுஇடைப் புணர்குயில் ஆலும்
எழில் மல்கு சோலையில் வண்டு இசைபாடும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 7

தேம் கமழ்கொன்றை அம்திருமலர் புனைவார்
திகழ்தரு சடைமிசைத் திங்களும் சூடி
வீந்தவர் சுடலை வெண்நீறு மெய் பூசி
வேறும் ஓர் சரிதையர் வேடமும் உடையர்
சாந்தமும் அகிலொடு முகில் பொதிந்து அலம்பித்
தவழ் கன மணியொடு மிகு பளிங்கு இடறி
ஏந்து வெள் அருவிகள் எழில் திகழ் சாரல்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 8

பலஇலம் இடு பலி கையில் ஒன்று ஏற்பர்
பலபுகழ் அல்லது பழி இலர் தாமும்
தலை இலங்கு அவிர்ஒளி நெடுமுடி அரக்கன்
தடக்கைகள் அடர்த்தது ஓர் தன்மையை உடையர்
மலை இலங்கு அருவிகள் மணமுழவு அதிர
மழை தவழ் இள மஞ்ஞை மல்கிய சாரல்
இலை இலவங்கமும் ஏலமும் கமழும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 9

பெருமைகள் தருக்கி ஓர் பேதுஉறுகின்ற
பெருங்கடல்வண்ணனும் பிரமனும் ஓரா
அருமையர் அடிநிழல் பரவி நின்று ஏத்தும்
அன்பு உடை அடியவர்க்கு அணியவரும் ஆவர்
கருமை கொள் வடிவொடு சுனை வளர் குவளைக்
கயல்இனம் வயல் இளவாளைகள் இரிய
எருமைகள் படிதர இள அனம் ஆலும்
இடைச்சுரம் மேவிய இவர் வணம் என்னே. 10

மடைச்சுரம் மறிவன வாளையும் கயலும்
மருவிய வயல்தனில் வருபுனல் காழிச்
சடைச்சுரத்து உறைவது ஓர் பிறை உடை அண்ணல்
சரிதைகள் பரவி நின்று உருகு சம்பந்தன்
புடைச் சுரத்து அரு வரைப் பூக் கமழ் சாரல்
புணர் மடநடையவர் புடைஇடை ஆர்ந்த
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்
இவை சொல வல்லவர் பிணி இலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

திருஞானசம்பந்தப் பெருமானார் திருஇடைச் சுரத்திற்கு வந்து தொண்டர்குழாம் எதிர்கொள்ள ஊரினுள்ளே சென்று திருக்கோயிலை அடைந்து அண்டர்பிரான் திருமேனி வண்ணங்கண்டு அதிசயித்து 'வரிவன ரவிரொளி' என்னும் இப்பதிகத்தை எடுத்துத் திருப்பாட்டின் இறுதிதோறும் 'இடைச்சுரமேவிய விவர்வண மென்னே' என்றெடுத்துப் பாடி இறைவனை வணங்கினார்.

384 . திருவிடைவாய்

இறைவர் : புண்ணியகோடிநாதர் இறைவியார் : அபிராமியம்மை

மறியார் கரத்து எந்தை அம்மாது உமையோடும்
பிறியாத பெம்மான் உறையும் இடம் என்பர்
பொறிவாய் வரிவண்டு தன்பூம்பெடை புல்கி
வெறியார் மலரில் துயிலும் விடைவாயே. 1

ஒவ்வாத என்பே இழையா ஒளிமௌலிச்
செவ்வான் மதிவைத்தவர் சேர்வுஇடம் என்பர்
எவ்வாயிலும் ஏடு அலர்கோடல் அம் போது
வெவ்வாய் அரவம் மலரும் விடைவாயே. 2

கரையார் கடல்நஞ்சு அமுது உண்டவர் கங்கைத்
திரையார் சடைத் தீ வண்ணர் சேர்விடம் என்பர்
குரையார் மணியும் குளிர்சந்தமும்கொண்டு
விரையார் புனல்வந்து இழியும் விடைவாயே. 3

கூசத் தழல் போல் விழியா வருகூற்றைப்
பாசத்தொடும் வீழ உதைத்தவர் பற்றாம்
வாசக்கதிர்ச் சாலி வெண்சாமரையே போல்
வீசக் களிஅன்னம் மல்கும் விடைவாயே. 4

திரியும் புரம்மூன்றையும்செந்தழல் உண்ண
எரிஅம்பு எய்தகுன்ற வில்லி இடம்என்பர்
கிரியும் தருமாளிகைச் சூளிகை தன்மேல்
விரியும் கொடிவான் விளி செய் விடைவாயே. 5

கிள்ளை மொழியாளை இகழ்ந்தவன் முத்தீத்
தள்ளித் தலை தக்கனைக் கொண்டு அவர் சார்வாம்
வள்ளி மருங்குல் நெருங்கும் முலைச் செவ்வாய்
வெள்ளைந் நகையார் நடம்செய் விடைவாயே. 6

பாதத்து ஒலிபார் இடம்பாடநடம்செய்
நாதத்து ஒலியர் நவிலும் இடம்என்பர்
கீதத்து ஒலியும் கெழுமும் முழவோடு
வேதத்து ஒலியும் பயிலும் விடைவாயே. 7

எண்ணாத அரக்கன் உரத்தைநெரித்துப்
பண்ணார் தருபாடல் உகந்தவர் பற்றாம்
கண்ணார் விழவிற் கடிவீதிகள்தோறும்
விண்ணோர்களும் வந்து இறைஞ்சும் விடைவாயே. 8

புள்வாய் பிளந்தான் அயன் பூமுடி பாதம்
ஒள்வான் நிலம் தேடும் ஒருவர்க்கு இடமாம்
தெள்வார் புனல்செங்கழுநீர் முகைதன்னில்
விள்வாய் நறவு உண்டு வண்டுஆர் விடைவாயே. 9

உடைஏதும்இலார் துவர்ஆடை உடுப்போர்
கிடையா நெறியான் கெழுமும் இடம்என்பர்
அடையார் புரம்வேவ மூவர்க்கு அருள்செய்த
விடையார் கொடியான் அழகுஆர் விடைவாயே. 10

ஆறும் மதியும் பொதிவேணியன் ஊராம்
மாறில் பெரும்செல்வம்மலி விடைவாயை
நாறும் பொழில் காழியர் ஞானசம்பந்தன்
கூறும் தமிழ்வல்லவர்குற்றம் அற்றோரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு :

இத்திருப்பதிகம் எந்தப் பிரதிகளினும் எவரும் பதித்து இதுகாறும் வெளி வரவில்லை. முதற்கண் சிவனடியார் ஒருவர் ஒரு சிறு சுவடி உருவமாக வரலாறு ஒன்று எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார்கள். ஆயினும், அதில் ஏழாவது பாட்டு மிக்க சிதலமாக அவராற் சரிசெய்து அச்சிடப்பட்டுள்ளது. பிறகு சென்னைத் துரைத்தனக் கல்வெட்டுப் பரிசோதனை இலாகாவின் சார்பாகத் திரு ஆராவமுதையங்கார் பி.ஏ.பி.எல்., அவர்கள் மிக்க சிரமப்பட்டு ஒட்டெடுத்து அப்பட்டு இன்னும் மேற்கொண்ட பெரும் பரிசோதனைசெய்து எழுதித் தந்தார்கள். அன்றியும் அவர் தாம் எழுதிய பாடத்தைத் தாம் எடுத்த ஒட்டைக்கொண்டு ஒத்துக் காட்டினார்கள். இத்தலம் ஐயடிகள் காடவர்கோனாயனார் சேத்திர வெண்பாவில் பாடப் பட்டுள்ளது, ஆயினும், அஃது 'இடைவாய்' என்றுளது. இங்கு 'விடைவாய்' என்று காண்கிறது. இதுகாறும் இதைப் பற்றி அதிகமாக ஒன்றும் சொல்ல இயலவில்லை. இது துரைத்தனத்தார் உத்தரவின்மேல் பதிப்பிக்கப்பட்டது. (தஞ்சைக் கொரடாச்சேரிக்கு அண்மையிலுள்ள இத் திருக்கோயிலைச் சில ஆண்டுகட்கு முன் செப்பனிட்ட போது இப்பதிகம் பொறிக்கப் பெற்றிருந்த கற்கள், பதிகம் நன்கு தெரியும்படி சுற்றுச் சுவரில் இணைக்கப் பெற்றிருக்கின்றன.)

385. திருக்கிளியன்னவூர்

பண் : கௌசிகம் இராகம் : பைரவி

தார் சிறக்கும் சடைக்கு அணி வள்ளலின்
சீர் சிறக்கும் துணைப்பதம் உன்னுவோர்
பேர் சிறக்கும் ; பெரு மொழி உய் வகை
ஏர் சிறக்கும் – கிளியன்னவூரனே. 1

வன்மை செய்யும் வறுமை வந்தாலுமே,
தன்மை இல்லவர் சார்பு இருந்தாலுமே,
புன்மைக் கன்னியர் பூசல் உற்றாலுமே,
நன்மை உற்ற கிளியன்னவூரனே. 2

பன்னி நின்ற பனுவல் அகத்தியன்
உன்னி நின்று உறுத்தும் சுகத்தவன்
மன்னி நாகம் முகத்தவர் ஓதலும்,
முன்னில் நின்ற கிளியன்னவூரனே. 3

அன்பர் வேண்டுமவை அளி சோதியான்,
வன்பர் நெஞ்சில் மருவல் இல்லா முதல்,
துன்பம் தீர்த்துச் சுகம் கொடு கண்ணுதல்
இன்பம் தேக்கும் கிளியன்னவூரனே. 4

செய்யும் வண்ணம் சிரித்துப் புரம்மிசை
பெய்யும் வண்ணப் பெருந்தகைஆனது ஓர்
உய்யும் வண்ணம் இங்கு உன் அருள் நோக்கிட,
மெய்யும் வண்ணக் கிளியன்னவூரனே. 5

எண் பெறா வினைக்கு ஏது செய் நின் அருள்
நண்பு உறாப் பவம் இயற்றிடில், அந் நெறி
மண் பொறா முழுச்செல்வமும் மல்குமால்
புண் பொறாத கிளியன்னவூரனே! 6

மூவர் ஆயினும் முக்கண்ண! – நின் அருள்
மேஉறாது விலக்கிடல்பாலரோ?–
தா உறாது உனது ஐந்துஎழுத்து உன்னிட,
தேவர் ஆக்கும் கிளியன்னவூரனே! 7

திரம் மிகுத்த சடைமுடியான் வரை
உரம் மிகுத்த இராவணன் கீண்டலும்,
நிரம் மிகுத்து, நெரித்து, அவன் ஓதலால்,
வரம் மிகுத்த கிளியன்னவூரனே. 8

நீதி உற்றிடும் நான்முகன், நாரணன்,
பேதம் உற்று, பிரிந்து அழல்ஆய் நிமிர்
நாதன் உற்றன நல்மலர் பாய் இருக்–
கீதம் ஏற்ற கிளியன்னவூரனே. 9

மங்கையர்க்கு அரசோடு குலச்சிறை,
"பொங்கு அழல்சுரம் போக்கு!" என, பூழியன்
சங்கை மாற்றி, சமணரைத் தாழ்த்தவும்
இங்கு உரைத்த கிளியன்னவூரனே. 10

நிறைய வாழ் கிளியன்னவூர் ஈசனை
உறையும் ஞானசம்பந்தன் சொல் சீரினை
அறைய நின்றனபத்தும் வல்லார்க்குமே
குறை இலாது, கொடுமை தவிர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முற்றிற்று

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

இ

நீ

முு

திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முற்றிற்று

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியார் எல்லாம்


ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளால் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே

உலகெ லாம்உணர்ந்த தோதற் கறியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்க! அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க ! தண்புனல்; வேந்தனும் ஓங்குக !
ஆழ்க ! தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க ! வையகமும் துயர்தீர்கவே !

அச்சிட்டோர் : ஸ்ரீகைலாஸ் பிரிண்டர்ஸ், சென்னை – 2. போன் : 28611506

குறிப்பு ஏடு



காவாய் கனகத் திரளே போற்றி!　கயிலை மலையானே போற்றி போற்றி !!